
**Om Shanti**

# *Avyakt Vani - Year 1983 Tamil*



## இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளின் பாப்தாதாவின் ஆன்மீக உரையாடல்

இன்று பாப்தாதா விஷேசமாக இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். அனைத்துக் குழந்தைகளும் தொலை தூரத்திலிருந்து தங்களுடைய இனிமையான வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டார்கள். இங்கு அனைத்து பிராப்தியின் அனுபவம் செய்வதற்கான வரதானம் இயல்பாகவே கிடைத்து விடுகிறது. அந்த மாதிரியான வரதான பூமியில் வரமளிக்கும் வள்ளல் தந்தையை சந்திப்பதற்காக வந்திருக்கிறீர்கள். பாப்தாதாவும் ஒவ்வொரு கல்பத்தின் அதிகாரி குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். பாரதத்தில் அருகில் இருக்கும் அனேக ஆத்மாக்கள் இன்று வரை தாகமுடையவர்களாகி தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்று பாப்தாதா பார்க்கிறார். ஆனால் பௌதீக ரூபத்தில் தூரமாக இருக்கும் இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகள் தூரத்திலிருந்தே தன்னுடைய தந்தையைத் தெரிந்து கொண்டு அதிகாரத்தை அடைந்து விட்டார்கள். தூரத்தில் இருப்பவர் அருகில் வந்து விட்டார்கள். தூரத்தில் இருப்பவர்கள் தூரமாகிவிட்டனர். அந்த மாதிரிக் குழந்தைகளின் பாக்கியத்தின் அதிசயத்தைப் பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சியடைகிறார். இன்று சூட்சமவதனத்திலும் பாப்தாதா இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளின் விசேஷங்களைப் பற்றி அவர்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தார்கள். பாரதக் குழந்தைகள் மற்றும் வெளிநாட்டுக் குழந்தைகள் இருவர்களுக்கும் அவரவர்களின் விசேஷம் இருக்கிறது,. இன்று குழந்தைகளின் அதிசய காரியத்தின் மகிமை பாடிக்கொண்டிருந்தோம், தியாகம் என்ன செய்திருக்கிறார்கள், மேலும் என்ன பாக்கியம் அடைந்தார்கள், தியாகம் கூட பாக்கியம் இன்றி செய்யவில்லை என்று குழந்தைகளின் சாதுர்யத்தை பார்த்தோம். ஒப்பந்தம் செய்வதிலும் சரியான வியாபாரிகள், முதலில் பிராப்தியின் அனுபவம் ஆனது, நல்ல பிராப்தியை பார்த்து வீணான விஷயங்களை தியாகம் செய்தார்கள், அந்த மாதிரி என்ன தியாகம் செய்தார்கள் மற்றும் என்ன அடைந்தார்கள் என்ற அதன் பட்டியலை எடுத்தீர்கள் என்றால் முடிவாக என்ன வெளியாகும்? ஒன்றை விட்டார்கள் மேலும் பலமடங்கு அடைந்தார்கள், அப்படியானால் இது விட்டதாக இருந்ததா அல்லது அடைந்ததாக இருந்ததா? நாம் ஆத்மாக்கள், உலகின் அந்த மாதிரி சிரேஷ்ட ஆத்மாக்களாக ஆவோம், நேரடியாக பகவானுடன் சம்பந்தத்தில் வருபவர்களாக ஆவோம் என்று அப்படி எப்போதாவது நினைத்தது உண்டா? கிறிஸ்தவனிலிருந்து கிருஷ்ணபுரியில் வந்து விடுவேன் என்று எப்போதாவது நினைத்து உண்டா? தர்மாத்மாவைப் பின்பற்றி நடப்பவனாக இருந்தேன். தண்டிற்குப் பதிலாக கிளையில்

மாட்டிக் கொண்டிருந்தேன், மேலும் இப்போது பல வகையான கல்ப விருட்சத்தின் தண்டான ஆதிசனாதன பிராமணரிலிருந்து தேவதை தர்மத்தினராக ஆகிவிட்டேன், அஸ்திவாரம் ஆகிவிட்டேன், அந்த மாதிரி பிராப்தியைப் பார்த்து என்னென்னவற்றை விட்டிருக்கிறீர்கள்? அற்பக் காலத்தின் தூக்கத்தை வென்றீர்கள், தூக்கத்தில் சோனா (தங்கம்) ஆகிவிட்டீர்கள், இரட்டை வெளிநாட்டினர் அதிகாலையில் எழுந்து தயாராவதைப் பார்த்து பாப்தாதா புன்சிரிப்பு செய்து கொண்டே இருக்கிறார், நன்றாக ஒய்வு எடுத்து எழுபவர்கள் இப்போது எப்படி எழுகிறார்கள். தூக்கத்தைத் தியாகம் செய்தார்கள். தியாகத்திற்கு முன்பு பாக்கியத்தைப் பார்த்து, அமிர்தவேளையின் ஆன்மீக அனுபவம் செய்த பிறகு இந்த தூக்கமும் என்னவாக இருக்கிறது? உணவு பழக்கத்தை விட்டீர்களா அல்லது நோயைவிட்டீர்களா? பழைய உணவு பழக்கத்தை விடுவது என்றால் அனேக நோய்களிலிருந்து விடுபடுவது. விடுபட்டு விட்டீர்கள் இல்லையா? இன்னும் நல்ல ஹெல்த் (ஆரோக்கியம்) வெல்த் (செல்வம்) இரண்டும் கிடைத்துவிட்டது. எனவே தான் சரியான வியாபாரி ஆகி விட்டீர்கள் என்று கூறினோம். வெளிநாட்டுக் குழந்தைகளின் இன்னொரு விசேஷத்தையும் பார்த்தோம், எந்த மார்க்கத்தில் ஈடுபட்டாலும் மிக அதிவேகத்தில் அந்த மார்க்கத்தில் செல்வார்கள். அதி வேகத்தில் செல்வதினால் அனேக விதமான பிராப்தியையும் முழுமையாக செய்ய விரும்புகிறார்கள், மிக வேகமாகச் செல்லும் காரணத்தினால் எப்பொழுதாவது இந்த வாழ்க்கையில் கொஞ்சம் மாயாவின் தடை வருகிறது என்றால், மிக வேகமாகப் பயப்படவும் செய்கிறார்கள். இது என்ன நடக்கிறது. இப்படியும் நடக்குமா? என்ன! என்று ஆச்சரியப்படும் நிலைக்கு வந்து விடுவார்கள், இருந்தும் ஈடுபாடு உறுதியாக இருக்கும் காரணத்தினால் தடையைக் கடந்து விடுவார்கள். மேலும் வரும் நாட்களுக்காக உறுதியாகிக் கொண்டே இருப்பார்கள். இலக்கை சென்றடைவதில் மகாவீரராக இருக்கிறீர்கள். மென்மையானவராக இல்லை தான் இல்லையா? நீங்கள் பயப்படுபவர்களாக இல்லையே? நாடகத்தில் மாயாவை விரட்டுவதற்கான சாதனத்தையும் மிக நன்றாக உருவாக்குகிறீர்கள். இந்த எல்லையற்ற நாடகத்திலும் நடைமுறையிலும் அந்த மாதிரியான மகாவீர் பாத்திரம் ஏற்று செய்பவர்கள் தான் இல்லையா? சிநேகம் மற்றும் உழைப்பு, இந்த இரண்டில் சிநேகத்தில் இருக்கிறீர்களா அல்லது உழைப்பிலா? எப்பொழுதும் தந்தையின் நினைவில் மூழ்கி யிருக்கிறீர்களா அல்லது அடிக்கடி நினைவு செய்பவரா அல்லது நினைவு சொரூபமானவரா? எப்பொழுதும் உடன் இருக்கிறீர்களா அலல்து எப்பொழுதும் உடன் இருக்க வேண்டும் என்ற முயற்சியிலேயே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறீர்களா? தந்தைக்குச் சமமாக ஆகுபவர்கள் எப்பொழுதும் சொரூபத்தில் இருப்பார்கள், நினைவு சொரூபம், சர்வகுண சொரூபம், சர்வசக்திகளின் சொரூபம், சொரூபம் என்றாலே தன்னுடைய ரூபமே அது ஆகிவிட வேண்டும். குணம் மற்று சக்திகள் வேறு வேறு என்று தனியாக இருக்க வேண்டாம், ஆனால் ரூபத்தில் நிரம்பி

இருக்கவேண்டும். எப்படி பலஹீனமான சம்ஸ்காரம் அல்லது ஏதாவது அவகுணம் நீண்ட காலமாக உங்களுள் சொரூபமாக ஆகிவிட்டது என்றால், அதை தாரணை செய்வதற்கு ஒன்றும் முயற்சி செய்வதில்லை, ஆனால் அது இயல்பானதாக மற்றும் இயற்கையானதாகவே ஆகிவிட்டது. அதை விட விரும்புகிறீர்கள், இந்த மாதிரி நடக்கக்கூடாது என்று உணருகிறீர்கள், ஆனால் அந்த நேரத்தில் விரும்பாவிட்டாலும், மீண்டும் அந்த இயல்பு காரியத்தை செய்து விடும், ஏனென்றால் சொரூபம் ஆகிவிட்டது. அந்தமாதிரி ஒவ்வொரு குணமும், ஒவ்வொரு சக்தியும் தன்னுடைய இயற்கையான சொரூபம் ஆகிவிடவேண்டும். என்னுடைய இயல்பு மேலும் இயற்கையான குணம் தந்தைக்குச் சமமானதாக ஆகிவிடவேண்டும், அந்த மாதிரி குண சொரூபம், சக்தி சொரூபம், நினைவு சொரூபமாகிவிடுகிறது. இதைத் தான் தந்தைக்குச் சமமான நிலை என்று கூறுவது. நீங்கள் அனைவரும் உங்களை அந்த மாதிரி சொரூபம் என்று அனுபவம் செய்கிறீர்களா? இலட்சியமோ இது தான் இல்லையா! அடைய வேண்டும் என்றால் முழுமையாக அடைய வேண்டுமா அல்லது கொஞ்சத்திலேயே திருப்தி ஆகி விடுவீர்களா? சந்திரவம்ஷியாக ஆவீர்களா? (இல்லை, மாட்டோம்) சந்திரவம்ச இராஜ்யமும் குறைந்தா என்ன? சூர்யவம்சியாக எத்தனை பேர் ஆவீர்கள்? இங்கு யாரெல்லாம் அமர்ந்திருக்கிறீர்களோ, அவர்கள் சூர்யவம்சியாக ஆவீர்களா? இராமின் மகிமையும் குறைந்தது இல்லை, ஊக்கம் உறசாகம் எப்பொழுதும் சிரேஷ்டமாக இருக்கிறது. இது நல்லது.

இப்பொழுது உலகிலுள்ள ஆத்மாக்கள் உங்கள் அனைவரிடமிருந்து என்ன விரும்புகிறார்கள் என்று அதை தெரிந்திருகிறீர்களா? இப்பொழுது ஒவ்வொரு ஆத்மாவும் தன்னுடைய பூஜைக்குரிய ஆத்மாக்களை பிரத்யக்ஷ ரூபத்தில் அடைவதற்காக அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். தந்தையை மட்டும் அழைக்கவில்லை, ஆனால் தந்தையுடன் பூஜைக்குரிய ஆத்மாக்கள் உங்களையும் அழைக்கிறார்கள், ஒவ்வொருவரும் தன்னுடைய இறைதூதுவர் என்று கூறினாலும், இறை செய்தியாளர் என்று கூறினாலும், அல்லது தேவ ஆத்மா என்று கூறினாலும், அவர் வரவேண்டும், மேலும் தன்னை உடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்று நினைக்கிறார்கள், இந்த உலகின் அழைப்பை நிறைவேற்றுபவர்கள் யார்?

பூஜைக்குரிய தேவ ஆத்மாக்கள் உங்களுக்காக, என்னுடைய தேவன் வருவார், என்னை எழுப்பி உடன் அழைத்துச் செல்வார் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக என்ன ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறீர்கள்? இந்த மாநாட்டிற்குப் பிறகு தேவர்கள் பிரத்யக்ஷம் ஆவார்கள். இப்பொழுது மாநாட்டிற்கு முன்பு முதலில் தன்னை சிரேஷ்ட ஆத்மா என்று பிரத்யக்ஷம் செய்வதற்காக தனக்கு தனிப்பட்டும் மேலும் குழு ரூபத்தில் நிகழ்ச்சியை தயார் செய்யுங்கள்.

இந்த மாநாடு மூலமாக நம்பிக்கை இழந்த நிலை மாறி நம்பிக்கை உள்ள நிலை அனுபவம் ஆக வேண்டும். அந்த தீபத்தையோ துவக்கவிழா அன்று ஏற்றுவீர்கள். தேங்காயை உடைப்பீர்கள். கூடவே அனைத்து ஆத்மாக்களுக்காக நல் ஆசைகள் என்ற தீபத்தையும் ஏற்றுவோம். புகலிடம் காண்பிக்கும் செயல் நடந்து விடவேண்டும். எப்படி தேங்காயை உடைக்கிறீர்கள் இல்லையா! அப்படி வெளிநாட்டினர் மற்றும் பாரதவாசிகளும் இணைந்து அந்த மாதிரியான ஏற்பாடுகளை முன்பாகவே செய்ய வேண்டும், அப்பொழுது தான் மகாதீர்த்தத்தின் பிரத்யக்ஷம் ஆகும். பிரத்யக்ஷதின் கிரணங்கள் அப்பாவின் வீட்டிலிருந்து நாலாபுறங்களிலும் பரவட்டும், எப்படி அபு உலகிற்கான கலங்கரை விளக்கம் என்று கூறுகிறீர்கள். இதே ஓளி இருளின் நடுவே புது விழிப்புணர்வை அனுபவம் செய்விக்கட்டும், இதற்காகத் தானே அனைவரும் வந்திருக்கிறீர்கள் இல்லையா! அல்லது நீங்கள் மட்டும் புத்துணர்வு அடைந்து சென்று விடுவீர்களா?

அனைத்து பிராமணர்களின் ஒரே எண்ணம், அது தான் காரியத்தின் வெற்றிக்கான ஆதாரம். அனைவருக்கும் சகயோகம் தேவையாக இருக்கிறது. கோட்டையின் ஒரு செங்கல் கூட பலஹீனம் ஆகிறது என்றால், கோட்டையையே அசைக்க முடியும், எனவே சிறியவர்கள் பெரியவர்கள் அனைவரும் இந்த பிராமண பரிவாரத்தின் கோட்டையின் செங்கற்கள் எனவே அனைவரின் ஒரே எண்ணம் மூலம் தான் காரியத்தை வெற்றியடையச் செய்ய வேண்டும். இது என்னுடைய பொறுப்பு என்ற ஓசைதான் அனைவரின் மனதிலிருந்து வெளியாக வேண்டும், நல்லது - எவ்வளவு குழந்தைகள் நினைவு செய்கிறார்களோ அந்தளவு தந்தையும் அன்பு நினைவு கொடுக்கிறார். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் திட எண்ணம் வைக்கும், வெற்றி என்ற பிறப்புரிமையை நடைமுறையில் கொண்டு வரக்கூடிய, எப்பொழுதும் தன்னுடைய சிரேஷ்ட பாக்கியத்தை நினைவில் வைத்துக் கொண்டே சக்திசாலியாக இருக்கக்கூடிய, தன்னுடைய விசேஷத்தை எப்பொழுதும் காரியத்தில் ஈடுபடுத்தக்கூடிய, எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்திலும் தந்தையின் காரியம் என்றால் என்னுடைய காரியம் என்று அனுபவம் செய்யும், அனைத்துக் காரியத்திலும் நிலைத்திருக்கும் விசாலபுத்தியுடைய குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

### பிரேசில் பார்ட்டியுடன் சந்திப்பு

அனைத்தையும் விட தூரமான தேசம், ஆனால் உள்ளத்தால் அருகில் இருக்கும் ஆத்மாக்கள்

தான் நீங்கள் இல்லையா, தூரத்தில் அமர்ந்திருந்த போதிலும் தன்னை எப்பொழுதும் தந்தையுடன் இருப்பதாக அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா! ஆத்மா பறக்கும் பறவையாகி ஒரு நொடியில் தந்தையின் வதனத்தில், மதுபன்னில் வந்து சேர்ந்து விடுகிறது தான் இல்லையா! எப்பொழுதும் சுற்றி வலம் வருகிறீர்களா? குழந்தைகள் எவ்வளவு அன்போடு உண்மையான உள்ளத்தோடு ஸ்தூல ரூபத்தில் மதுபன் வந்து சேருவதற்கு முயற்சி செய்து வந்து சேர்ந்து விட்டார்கள், இதற்காக வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம், இன்னும் வருங்காலத்திற்காக எப்பொழுதும் வெற்றியடைபவர்களாக இருங்கள், மேலும் எப்பொழுதும் மற்றவர்களையும் வெற்றியடைபவர்களாக ஆக்குங்கள் என்ற இந்த வரதானம் தான் பாப்தாதா கொடுக்கிறார். நல்லது.

10.09.2017 காலைமுரளி ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா

ரிவைஸ் 06.01.1983 மதுபன்

## நிரந்தர சகஜ யோகி ஆவதற்கு சகஜ புத்தி

இன்று தோட்டத்து உரிமையாளர் தன்னுடைய பல வகையான நறுமணம் நிறைந்த மலர்த்தோட்டத்தை பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார். பாப்தாதா பலவகையான ஆன்மீக மலர்களின் நறுமணம் மற்றும் ரூபத்தின் அழகைப் பார்த்து ஒவ்வொருவரின் விசேஷத்தின் பாடலைப் பாடுகிறார். யாரைப் பார்த்தாலும் ஒருவர் இன்னொருவரை விட பிரியமானவராக மேலும் சிரேஷ்டமாக இருக்கிறார். வரிசைக் கிரமமாக இருந்த போதிலும் பாப்தாதாவிற்கு வரிசையில் கடைசி நம்பரில் இருப்பவரும் பிரியமானவர். ஏனென்றால். தன்னுடைய சக்திக்கு ஏற்றப்படி மாயாவை வென்றவர் ஆவதில் பலஹீனமாக இருந்தாலும் தந்தையை தெரிந்து கொண்டு உள்ளப்பூர்வமாக ஒரு தடவையாவது என்னுடைய பாபா என்று கூறினார் என்றால், இரக்கக் கடல் பாப்தாதா அந்த மாதிரி குழந்தைகளுக்கும் ஒரு தடவை பலனாக பலமடங்கு அதே ஆன்மீக, அன்போடு என்னுடைய குழந்தை விசேஷ ஆத்மா என்று பார்க்கிறார். இருந்தும் தந்தையின் குழந்தையாக ஆகியிருக்கிறார் என்ற இந்தப் பார்வையில் தான் பார்க்கிறார், பாப்தாதாவும் அந்த மாதிரிக் குழந்தைகளையும் இரக்கம் மற்றும் அன்பின் பார்வை மூலமாக முன்னேற்றிக் கொண்டே இருக்கிறார், ஏனென்றால் என்னுடைய (குழந்தை) இதே ஆன்மீக என்னுடையவர் என்பதின் நினைவு அந்த மாதிரிக் குழந்தைகளுக்காக சக்தி நிரப்பும் ஆசிர்வாதம் ஆகிவிடுகிறது. பாப்தாதாவிற்கு வாய் மூலம் ஆசிர்வாதம் கொடுப்பதற்கு

அவசியம் இருப்பதில்லை, சொல், வார்த்தைகள் இரண்டாம் நம்பர், ஆனால் அன்பு நிறைந்த எண்ணம் சக்திசாலியான தும் தான் மேலும் நம்பர் ஒன், பிராப்தியை அனுபவம் செய்விப்பதும் தான், பாப்தாதா இதே சூட்சம எண்ணத்தினால் தாய், தந்தை இரண்டு ரூபத்தினால் ஒவ்வொரு குழந்தையின் பாலனை செய்து கொண்டிருக்கிறார். எப்படி குடும்பத்தில் செல்லக் குழந்தைகளின் தாய் தந்தை மிக குப்தமாக (மறைவாக) மிக சக்தி நிறைந்த பொருட்களினால் பாலனை செய்கிறார்கள், அதைத் தான் நீங்கள் உபசரிப்பு என்று கூறுகிறீர்கள், அதே போல் பாப்தாதாவும் வதனத்தில் அமர்ந்து கொண்டு அனைத்துக் குழந்தைகளுக்கும் விசேஷ உபசரிப்பு செய்து கொண்டே இருக்கிறார்,. எப்படி மதுபன்னிற்கு வருகிறீர்கள் என்றால், விசேஷ உபசரிப்பு நடக்கிறது இல்லையா! அதேபோல் வதனத்திலும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் பரிஷ்தா ஒளிவடிவ உடல் ரூபத்தில் ஆவாஹனம் (அழைப்பு) செய்து எதிரில் அழைக்கிறார், மேலும் அதிகாரி ரூபத்தில் தனது எண்ணம் மூலமாக சூட்சம அனைத்து சக்திகளின் விசேஷபலம் நிரப்பும் உபசரிப்பு செய்கிறார். ஒன்று தன்னுடைய முயற்சி மூலம் சக்தியை பிராப்தி செய்வது. இது தாய், தந்தையின் அன்பின் பாலனையின் ரூபத்தில் விசேஷ உபசரிப்பு செய்வது. எப்படி இங்கேயும் சிலருக்கு உபசரிப்பு செய்கிறீர்கள், நியமப்படி தினசரியின் உணவு மூலம் விசேஷ பொருட்கள் மூலம் உபசரிப்பு செய்கிறீர்கள் இல்லையா! அதிகப்படியாகக் கொடுக்கிறீர்கள், அந்த மாதிரி பிரம்மா அம்மாவிற்கும், குழந்தைகள் மேல் விசேஷ அன்பு இருக்கிறது. பிரம்மா அம்மா வதனத்திலும் குழந்தைகளின் கலகலப்பு இன்றி இருக்க முடியாது. ஆன்மீக பாசம் இருக்கிறது. எனவே சூட்சம அன்பின் ஆவாஹனத்தினால் குழந்தைகளின் விசேஷ குரூப்பை எதிரில் வெளிக் கொணறுகிறார். எப்படி உடலில் இருக்கும்பொழுது ஒவ்வொரு குரூப்பிற்கும் விசேஷ அன்பின் சொரூபத்தில் தன்னுடைய கைகளினால் உணவை ஊட்டி விட்டார், மேலும் மனம் மகிழச் செய்தார், அதே அன்பின் சம்ஸ்காரம் இப்பொழுதும் நடைமுறையில் இருக்கிறது. இதில் குழந்தைகளுக்கு தந்தைக்குச் சமமாக ஒளிவடிவமான உடல் சொரூபமானவராகி மட்டும் அனுபவம் செய்ய வேண்டியதாக இருக்கும், அமிர்தவேளையில் பிரம்மா அம்மா வாருங்கள் குழந்தைகளே, வாருங்கள் குழந்தைகளே, என்று கூறி விசேஷமாக சக்திகளின் சத்துணவை குழந்தைகளுக்கு அருந்தக் கொடுக்கிறார், எப்படி இங்கு சாகாரத்தில் நெய் குடிக்கக் கொடுத்தார் கூடவே உடற்பயிற்சியும் செய்வித்தார் இல்லையா! வதனத்திலும் நெய்யும் குடிக்கக் கொடுத்தார் அதாவது சூட்சம சக்திகளின் பொருள் கொடுத்து பயிற்சியும் செய்விக்கிறார். புத்தி பலமாக மூலம் உலகைச் சுற்றி வரவும் செய்விக்கிறார். இந்த நேரம் பரம்தாமம், அடுத்த நேரம் சூட்சம வதனம், பிறகு பௌதீகஉலகின் பிராமண வாழ்க்கை அப்படி மூன்று உலகங்களின் ஒட்டப் பந்தயம் செய்விக்கிறார், அதன் மூலம் விசேஷ உபசரிப்பு வாழ்க்கையில் நிரம்பி விட வேண்டும், பிரம்மா அம்மா என்ன செய்கிறார் என்று கேட்டீர்கள்ளா?

பொதுவாக இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளிடம் விடுமுறை நாட்களில் எங்காவது தூரமான இடங்களுக்கு உல்லாச பிரயாணம் செய்யும் பழக்கம் இருக்கிறது. பாப்தாதாவும் இரட்டை வெளி நாட்டுக் குழந்தைகளுக்கு விசேஷ அழைப்பு கொடுக்கிறார், எப்பொழுதெல்லாம் ஒய்வாக இருக்கிறீர்களோ, அப்பொழுது வதனத்துக்கு வந்து விடுங்கள், கடற்கரையில் மண்ணில் செல்லாதீர்கள்,. ஞானக்கடலின் அருகில் வந்துவிடுங்கள். செலவே இல்லாமல் மிகுந்த பிராப்தி ஆகிவிடும், சூரியனின் கிரணங்களையும் எடுத்துக் கொள்ளுங்கள், சந்திரனின் குளுமையான நிலவொளியையும் எடுத்துக் கொள்ளுங்கள், பிக்னிக்கும் செய்யுங்கள், விளையாடவும் செய்யுங்கள், ஆனால் புத்தி என்ற விமானத்தில் வரவேண்டியதாக இருக்கும், அனைவரின் புத்தி என்ற விமானம் தயாராக இருக்கிறது தான் இல்லையா! எண்ணம் என்ற பொத்தானை அழுத்தினீர்கள் புறப்பட்டு வந்து சேர்ந்தீர்கள். விமானமோஅனைவரிடமும் தயாராக இருக்கிறது தான் இல்லையா அல்லது சில நேரம் புறப்படுவதில்லை, அல்லது பொட்ரோல் குறைவாக இருக்கிறது என்றால் பாதியில் திரும்பி வந்து விடுகிறீர்களா, பார்க்க போனால் ஒரு நொடியில் வந்து சேருவதற்கான விஷயம், இரட்டை சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோல் மட்டும் தேவையாக இருக்கிறது, இரட்டை சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோல் எது ? ஒன்று நான் உடலற்ற ஆத்மா, தந்தையின் குழந்தை என்ற நிச்சயம், இரண்டாவது ஸ்தூல ரூபத்தில் அனைத்து சம்பந்தங்களின் போதைதந்தை மற்றும் குழந்தையின் சம்பந்தின் போதைமட்டுமல்ல, ஆனால் இல்லற மார்க்கம் தூய்மையான பரிவாரம் எனவே தந்தையுடன் அனைத்து சம்பந்தங்களின் இரசனையின் போதை நடைமுறையில் காரியங்கள் செய்துகொண்டே அனுபவம் ஆகவேண்டும், இந்த போதைஏற்றும் குஷி நிரந்தர சகஜயோகி ஆக்கிவிடும். எனவே நிராகாரி, சாகாரி இரட்டை சுத்திகரிப்பிற்கான சாதனத்தின் அவசியம் இருக்கிறது, நல்லது.

இன்றோ பார்ட்டிகளுடன் சந்திக்க வேண்டும், எனவே பிறகு இன்னுமொருமுறை சாகாரி மற்றும் நிராகாரி போதையைப் பற்றிக் கூறுவோம், இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு, சேவையின் பிரத்யக்ஷபலனுக்காக கட்டளையை பின்பற்றி நடப்பதற்காக பாப்தாதா விசேஷமாக வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார், ஒவ்வொருவரும் நல்ல பெரிய குரூப்பை அழைத்து வந்திருக்கிறீர்கள். பாப்தாதா எதிரில் மிக நல்ல பெரிய பூச்செண்டை வழங்கியிருக்கிறீர்கள், அதற்காக அந்த மாதிரி நம்பிக்கைக்குரிய குழந்தைகளுக்கு பாப்தாதா உள்ளப்பூர்வமாக உயிருக்கும் மேலான அன்போடு எப்பொழுதும் நீடூழி வாழ்க - முன்னேறிக் கொண்டே இருங்கள், என்ற வரதானத்தைத் தான் கொடுக்கிறார். நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள அன்பான குழந்தைகளுக்கு, யார் நாலாபுறங்களிலும் நினைவு மற்றும் சேவையில் முழு மூச்சாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்களோ, அந்த மாதிரி தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு சேவையின் பலனாக அன்பு மற்றும் நினைவின் பலனாக அழியாத ஈடுபாட்டில் இருப்பவர்களுக்கு அழியாத அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்:

எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்தில் ஆன்மீக போதையைஅனுபவம் செய்யும் மற்றும் செய்விக்கும் அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள் ஆகுக.

சங்கமயுகத்தில் குழந்தைகள் நீங்கள் மிக அதிக அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள், ஏனென்றால் சுயம் பகவான் உங்களை விரும்பி விட்டார். எல்லைக்கப்பாற்பட்ட எஜமானன் ஆகிவிட்டீர்கள், பகவானின் அகராதியில் யார் இவர், என்பதில் உங்கள் பெயர் இருக்கிறது, எல்லைக்கப்பார்பட்ட தந்தை கிடைத்தார், எல்லைக்கப்பாற்பட்ட பொக்கிஷம் கிடைத்தது. இதே போதைஎப்பொழுதும் இருந்தது என்றால் அதீந்திரியசுகத்தின் அனுபவம் ஆகிக் கொண்டே இருக்கும், இது தான் எல்லைக்கப்பாற்பட்ட ஆன்மீக போதை இதன் அனுபவம் செய்து கொண்டும் மற்றும் செய்வித்துக் கொண்டும் இருங்கள், அப்பொழுது தான் அதிர்ஷ்டம் நிறைந்தவர் என்று கூறுவோம்.

சுலோகன்:

சாதனங்களை ஓய்வு விரும்பிகளாக ஆவதற்காக அன்றி சேவைக்காக உபயோகம் செய்யுங்கள்.

ஓம்சாந்தி

09.01.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

---

## இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளின் பாப்தாதாவின் ஆன்மீக உரையாடல்

இன்று பாப்தாதா அனைத்து கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளை சந்திப்பதற்காக விசேஷமாக வந்திருக்கிறார். இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகள் சந்திப்பதற்காக எப்பொழுதும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்று பாப்தாதா இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுடன் ஒவ்வொருவரின் விசேஷத்தைப் பற்றி ஆன்மீக உரையாடல் செய்ய வந்திருக்கிறார். ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் அதனதன் விசேஷம் இருக்கிறது. சில இடங்களில் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது மேலும் சில இடங்களில் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும் விலை மதிக்கமுடியாத ரத்தினம், விசேஷ ரத்தினமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கொஞ்சம் இருந்த போதிலும் தன்னுடைய பங்கை மிக நல்ல முறையில் செய்து கொண்டிருக்கிறார்கள் அந்த மாதிரி குழந்தைகளின் ஊக்கம், உற்சாகத்தைப் பார்த்து, குழந்தைகளின் சேவையைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சியடைகிறார். விசேஷ ரூபத்தில் வெளிநாட்டின் நான்கு மூலைகளிலுமே தந்தையை பிரத்யக்ஷம் செய்யும் திட்டத்தை நடைமுறையில் கொண்டு வருவதில் நல்ல வெற்றியை அடைந்து கொண்டிருக்கிறார்கள். அனைத்து மதங்களின் ஆத்மாக்களை தந்தையுடன் சந்திக்க வைப்பதற்கான முயற்சியை நன்றாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். சேவையின் ஈடுபாடு மிக நன்றாக இருக்கிறது. தன்னுடைய அலைந்து கொண்டிருந்த ஆத்மாவிற்கு புகலிடம் கிடைத்ததின் அனுபவி ஆன காரணத்தினால் மற்றவர்களுக்காகவும் இரக்கம் வருகிறது. யாரெல்லாம் தொலை தூரத்திலிருந்து வந்திருக்கிறார்களோ அவர்களுக்கு செல்ல வேண்டும் மேலும் மற்றவர்களையும் அழைத்து வர வேண்டும் என்ற ஊக்கம் இருக்கிறது. இந்த திட எண்ணம் அனைத்து குழந்தைகளுக்கும் தூரமாக இருந்த போதிலும் நெருக்கத்தை அனுபவம் செய்வித்தது. எனவே எப்பொழுதும் தன்னை பாப்தாதாவின் ஆஸ்திக்கு உரிய ஆத்மா என்று புரிந்து நடந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒருபொழுதும் ஏதாவது வீணான எண்ணத்தின் ஆதாரத்தில் தன்னை குழப்பத்தில் கொண்டு வராதீர்கள். நீங்கள் ஒவ்வொரு கல்பத்திலும் பாத்திரமானவர்கள். நல்லது - இன்றோ பார்ட்டிகளுடன் சந்திக்க வேண்டும். சந்திப்பதற்கான முதல் வாய்ப்பு அமெரிக்கா பார்ட்டிக்குக் கிடைத்திருக்கிறது. எனவே அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து

சேவையில் அனைவரையும் விட நம்பர் ஒன் அதிசயமும் செய்து காண்பிப்பீர்கள் தான் இல்லையா? இப்போது மாநாட்டிற்கு மிகப்பெரிய வி.ஐ.பி. யை யார் அழைத்து வருகிறார்கள் என்று பார்க்கலாம். நம்பர் ஒன் வி.ஐ.பி. எங்கிருந்து வருகிறார்? (அமெரிக்காவிலிருந்து). பார்க்கப்போனால் தந்தையின் குழந்தைகள் நீங்கள் அனைவரையும் விட மிகப்பெரிய வி.வி.வி.ஐ.பிக்கள். உங்களை விட பெரியவர்கள் யாருமில்லை. ஆனால் யார் இந்த உலகத்தின் வி.ஐ.பி.க்களாக இருக்கிறார்களோ அந்த ஆத்மாக்களுக்கும் செய்தி கொடுப்பதற்கான இந்த வாய்ப்பு. இவர்களுடைய பாக்கியத்தை உருவாக்குவதற்காக இந்த முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது ஏனென்றால் அவர்கள் தன்னை இந்த உலகத்தில் பெரியவர்கள் என்று நினைக்கிறார்கள் இல்லையா. எனவே சிறிய நிகழ்ச்சிகளில் வருவது தனக்கு மரியாதை இல்லை என்று நினைக்கிறார்கள். எனவே பெரிய நிகழ்ச்சியில் பெரியவர்களை அழைப்பதற்கான வாய்ப்பு. பொதுவாக பாப்தாதா குழந்தைகளை மட்டும் தான் சந்திக்கிறார். மேலும் அவர்களோடு ஆன்மீக உரையாடல் செய்கிறார். விசேஷமாக வருவதே குழந்தைகளுக்காக மட்டும் தான். பிறகு இந்த மாதிரி மனிதர்களும் எங்களுக்கு எங்களுடைய தகுதிகேற்ற அழைப்பு கிடைக்கவில்லை என்ற புகார் இருந்து விடக்கூடாது என்பதற்காக. மேலும் இந்த புகார்களை நிறைவேற்றுவதற்காக இந்த அனைத்து நிகழ்ச்சிகளும் உருவாக்கப்படுகின்றன. பாப்தாவிற்கோ குழந்தைகள் மேல் அன்பு இருக்கிறது. மேலும் குழந்தைகளுக்கு பாப்தாதா மேல் அன்பு இருக்கிறது. நல்லது.

அனைத்து இரட்டை வெளிநாட்டினரும் உடலால் மற்றும் மனதால் திருப்தியாக இருக்கிறீர்களா? கொஞ்சமாவது யாருக்காவது உடலின் மற்றும் மனதின் பிரச்சனையின் ஏதாவது எண்ணமோ இல்லையே? உடல் நோயுற்றிருக்கிறது ஆனால் உடல் நோயின் காரணமாக மனம் பாதிக்கப்பட வேண்டாம். எப்பொழுதும் குஷியில் நடனமாடிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் உடலும் சரியாகி விடும். மனதின் குஷி மூலம் உடலையும் நடத்துவீர்கள் என்றால் இரண்டு பயிறசிகளும் ஆகிவிடும். குஷி ஆசீர்வாதம் மற்றும் பயிற்சி மருந்து. அப்படி ஆசீர்வாதம் மற்றும் மருந்து இரண்டும் இருப்பதினால் சுலபமாகிவிடும். (இரவு தூக்கம் வருவதில்லை என்று ஒரு குழந்தை கூறினார்) தூங்குவதற்கு முன்பு யோகாவில் அமர்ந்தீர்கள் என்றால் பிறகு தூக்கம் வந்து விடும். யோகவில் அமரும் நேரம் பாப்தாதாவின் குணங்களின் பாடல் பாடுங்கள். குஷி ஏற்படும் காரணத்தினால் வலியும் மறந்து விடும். குஷியில்லாமல் நான் ஆத்மா, நான் ஆத்மா என்ற இந்த முயற்சி மட்டும் செய்கிறீர்கள் என்பதினால் வலியும் அனுபவம் ஆகிறது. குஷியில் இருந்தீர்கள் என்றால் வலியும் மறந்து விடும்.

ஏதாவது ஒரு விஷயத்தில் யாருக்காவது ஏதாவது கேள்வி இருக்கிறது அல்லது சின்ன விஷயத்தில் எப்போதாவது விரைவில் குழப்பம் அடைந்து விடுகிறீர்கள் என்றால் அந்த சின்ன சின்ன விஷயங்களை உடனே தெளிவு படுத்திக்கொண்டு மேலே சென்று கொண்டே இருங்கள். அதிகம் யோசிக்கும் பழக்கம் உள்ளவராக ஆகாதீர்கள். என்னென்ன யோசனைவருகிறதோ அதை அங்கேயே அழித்து விடுங்கள். ஒரு யோசனைக்கு பின்னால் அனேக யோசனைகள் ஓடுவதினால் பிறகு மன நிலை மற்றும் உடல் இரண்டின் மேலும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு யோசிக்கும் விஷயத்தில் இரட்டை கவனம் கொடுக்க வேண்டும் ஏனென்றால் தனியாக இருந்து யோசிக்கும் இயற்கையான பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறீர்கள். இந்தப் பழக்கம் இருக்கும் காரணத்தினால் இங்கேயும் சின்ன சின்ன விஷயத்தில் அதிகம் யோசிக்கிறார்கள். யோசிப்பதில் நேரம் வீணாகிறது, குஷியும் காணாமல் போய்விடுகிறது. மேலும் உடலில் அதிகமாக பாதிப்பு ஏற்படுகிறது. அதன் காரணமாக யோசனைஓடுகிறது. எனவே உடல் மற்றும் மனம் இரண்டையும் எப்பொழுதும் குஷியாக வைத்துக் கொள்வதற்கு குறைவாக யோசியுங்கள். ஒருவேளை யோசிக்க வேண்டும் என்றிருந்தால் ஞான ரத்தினங்களைப் பற்றி யோசியுங்கள். வீணான எண்ணங்களை ஒப்பிடும்போது சக்திசாலியான எண்ணம் ஒவ்வொரு விஷயத்திலும் இருக்கிறது. உதாரணமாக தனது மனநிலை மற்றும் யோகாவைப்பற்றி என்னுடைய பங்கோ அந்தளவு தென்படவில்லை, யோகா செய்ய முடிவதில்லை என்று வீணான எண்ணங்கள் ஓடுகிறது. அசரீரி ஆவது இல்லை. இது தான் வீணான எண்ணம். அதற்குப் பதிலாக சக்திசாலியான எண்ணத்தை வையுங்கள், நினைவே என்னுடைய இயற்கையான குணம். குழந்தைகளின் இயற்கையான குணமே தந்தையை நினைவு செய்வது. ஏன் நடக்காது, கண்டிப்பாக நடக்கும். நான் யோகி இல்லையென்றால், வேறு யார் யோகியாகஆவார். நான் தான் ஒவ்வொரு கல்பத்திலும் சகஜயோகி அந்த மாதிரி வீணானதிற்குப் பதிலாக சக்திசாலி எண்ணங்களை ஓட வையுங்கள். என்னுடைய உடல் செயல் பட முடியாது என்று வீணான எண்ணங்களை ஓட்டாதீர்கள். இதற்குப் பதிலாக இந்த கடைசி பிறவியில் தந்தை என்னை தன்னுடைய குழந்தை ஆக்கியிருக்கிறார். இந்தப் பழைய உடல மூலமாக பல பிறவிகளுக்கான ஆஸ்தியை அடைந்து விட்டேன். மனமுடையச் செய்யும் எண்ணத்தை வைக்காதீர்கள், ஆனால் குஷியான எண்ணத்தை வையுங்கள். ஆஹா! என்னுடைய பழைய உடலே, அது தான் என்னை பாபாவுடன் சந்திக்க வைப்பதற்குக் காரணமாக இருந்தது. ஆஹா, என்று சொல்லிக் கொண்டே இருங்கள். எப்படி குதிரையை மிக அன்போடு தட்டிக் கொடுத்து ஓட வைத்தால் நன்றாக ஓடும். ஒருவேளை குதிரையை அடிக்கடி தார் கம்பால் குத்தினீர்கள் என்றால் இன்னும் தொந்தரவு கொடுக்கும். இந்த உடலும் உங்களுடையது, இதை அடிக்கடி இது பழையது, பிரயோசனமற்ற உடல் என்று கூறாதீர்கள். இப்படி சொல்கிறீர்கள் என்றால் தார் கம்பால் குத்துவது ஆகும். குஷி

குஷியோடு இதன் பெருமையைப் பாடி இதை செய்வித்துக் கொண்டே இருங்கள். பிறகு இந்த பழைய உடல் தொந்தரவு செய்யாது. மிகுந்த சகயோகம் கொடுக்கும். (உறதிமொழி செய்தும் செல்கிறோம், இருந்தும் மாயா வந்து விடுகிறது என்று யாரோகூறினார்)

மாயாவைக் கண்டு ஏன் பயப்படுகிறீர்கள்? உங்களுக்குப் பாடம் கற்பிப்பதற்காக மாயா வருகிறது. பயப்படாதீர்கள். பாடம் கற்றுக் கொள்ளுங்கள். சில நேரம் சகித்துக் கொள்வதற்கான பாடம், சில நேரம் ஒரே சீரான நிலையில் இருப்பதற்கான பாடத்தைக் கற்பிக்கிறது. சில நேரம் அமைதி சொரூபம் ஆவதற்கான பாடத்தை உறுதியாக்குவதற்காக வருகிறது. மாயா வந்து விட்டது என்று அந்த ரூபத்தில் பார்க்காதீர்கள். அப்படிப்பார்த்தால் பயந்து விடுகிறீர்கள். ஆனால் மாயாவும் சகயோகி ஆகி, தந்தையிடம் படித்த பாடத்தை உறுதியாக்குவதற்காக வந்திருக்கிறது. மாயாவை சகயோகியின் ரூபத்தில் புரிந்து கொள்ளுங்கள், எதிரியாக அல்ல. பாடத்தை உறுதியாக்குவதற்காக சகயோகி என்றால் உங்களுடைய கவனம் முழுமையும் அந்த விஷயத்தில் சென்று விடும். பிறகு பயப்படுவது குறைந்து விடும். மேலும் தோல்வி அடைய மாட்டீர்கள். பாடத்தை உறுதி செய்து அங்கதனுக்குச் சமமாகி விடுவீர்கள். எனவே மாயாவைக் கண்டு பயப்படாதீர்கள். எப்படி சின்னக் குழந்தைகளை பயமுறுத்துவதற்காக தாய் தந்தையர் காக்கா வந்து விடும் என்று கூறுகிறார்கள். நீங்கள் அனைவரும் கூட மாயாவை காக்கா ஆக்கிவிட்டீர்கள். பார்க்கப்போனால் உங்களிடம் வருவதற்கு மாயா அதுவே மிகவும் பயப்படுகிறது. ஆனால் சுயம் நீங்கள் பலவீனமாக உள்ளீர்கள், மாயாவை வரவேற்கிறீர்கள் இல்லையென்றால் மாயா வரவே வராது. அதுவோ விடைபெறுவதற்காக நின்று கொண்டிருக்கிறது. மாயாவும் என்னுடைய கடைசி நாள் எது என்று காத்துக் கொண்டிருக்கிறது. இப்பொழுது மாயாவிற்கு விடை கொடுப்பீர்களா அல்லது பயப்படுவீர்களா?

இரட்டை வெளிநாட்டினரிடம் இந்த ஒரு விசேஷம் இருக்கிறது - பறக்கிறார்கள் என்றால் மிக வேகமாக பறக்கிறார்கள் மேலும் பிறகு பயப்படுகிறார்கள் என்றால் சின்ன ஈயைக் கண்டும் பயந்து விடுகிறார்கள். ஒரு நாள் மிகுந்த குஷியில் நடனமாடிக் கொண்டே இருப்பார்கள் மேலும் அடுத்த நாள் முகம் மாறிவிடும். இந்த இயல்பை மாற்றம் செய்யுகள். இதற்கான காணம் என்ன?

இந்த அனைத்துக் காரணங்களுக்கும் அஸ்திவாரம் - சகித்துக் கொள்ளும் சக்தியின் குறைவு. சகித்துக் கொள்ளும் சம்ஸ்காரம் தொடக்கத்திலிருந்தே இல்லை, எனவே விரைவில் பயந்து விடுகிறீர்கள். ஸ்தானத்தை மாற்றுவீர்களா அல்லது யாரால் தொந்தரவு அடைவீர்களா அவரை

மாற்றி விடுவீர்களா? தன்னை மாற்றிக்கொள்ள மாட்டீர்களா? இந்த சம்ஸ்காரம் இருக்கிறது இல்லையா? அதை மாற்ற வேண்டும். நான் என்னை மாற்ற வேண்டும். ஸ்தானத்தை அல்லது மற்றவர்களை மாற்ற வேண்டாம். ஆனால் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். இதை அதிகம் நினைவில் வையுங்கள். புரிந்ததா? இப்பொழுது வெளிநாட்டினர் சம்ஸ்காரத்தை மாற்றி சுய தேசத்து சம்ஸ்காரத்தை உருவாக்கி விடுங்கள். சகித்துக் கொள்பவரின் அவதாரம் ஆகிவிடுங்கள். இதைத்தான் நீங்கள் நாம் அனுசரித்துப் போகவேண்டும் என்று கூறுகிறீர்கள். ஒதுங்கி விடவும் கூடாது. விடவும் கூடாது.

அன்னம் மற்றும் கொக்கின் விஷயம் வேறு. அவர்களுக்கு அவர்களுக்குள் மோதல் இருக்கும். அதுவும் எவ்வளவு முடியுமோ அவருக்காக சுபபாவனையுடன் முயற்சி செய்வது நம்முடைய கடமை. அந்த மாதிரி உதாரணமும் இருக்கிறது, யார் முற்றிலும் எதிர்ப்பு செய்பவர்களாக இருந்தார்கள். ஆனால் சுபபாவனை மூலம் பொறுப்பிலிருப்பவர்களை விட முன்னுக்கு சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே சுபபாபானையின் முழு சக்தியோடு முயற்சி செய்ய வேண்டும்.

ஒருவேளை இதற்குப் பிறகும் நடக்கவில்லை என்றால் பிறகு டைரக்ஷன் பெற்று அடுத்த அடி எடுத்து வைக்க வேண்டும். ஏனென்றால், பல தடவைகள் அந்த மாதிரி ஒதுங்கி விடுவதினாலும் சில நேரங்களில் சேவைக்கு பாதகமான விஷயங்களும் நடந்து விடுகின்றன. மேலும் பல தடவைகள் அந்த மாதிரியும் ஆகிவிடுகிறது, வரக்கூடிய பிராமண ஆத்மாக்களின் குறை இருக்கும் காரணத்தினால் மற்ற ஆத்மாக்களும் பாக்கியத்தை பெறுவதிலிருந்து வஞ்சிக்கப்பட்டு விடுகிறார்கள். எனவே முதலில் நீங்கள் செய்து பாருங்கள் பிறகு ஒரு வேளை இது பெரிய பிரச்சனை என்று நினைக்கிறீர்கள் என்றால் பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்களிடம் சரி பார்த்துக் கொள்ளுங்கள். பிறகு அவரும் பிரிந்து தனியாக ஆவது தான் சரி என்று நினைக்கிறார் என்றால் அதன் பிறகு நீங்கள் பிரிந்து தனியாக சென்று விடுகிறீர்கள் என்றால் உங்கள் மேல் பொறுப்பு இருக்காது. நீங்கள் டைரக்ஷன் படி நடக்கவும். பிறகு நீங்கள் கவலையின்றி இருங்கள். பல தடவைகள் அந்த மாதிரியும் ஆகிறது - ஆவேசத்தில் விட்டு விட்டார், ஆனால் தன்னுடைய தவறின் காரணமாக விட்ட பிறகும் அந்த ஆத்மா ஈர்த்துக் கொண்டேயிருக்கிறது. புத்தி சென்று கொண்டே இருக்கிறது, இதுவும் பெரிய தடை ஆகிவிடுகிறது. உடலால் பிரிந்து விட்டார்கள் ஆனால் மனதில் கணக்கு வழக்கு இருக்கும் காரணத்தினால் ஈர்த்துக் கொண்டே இருக்கும். எனவே பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் ஏனென்றால் இதுவும் கர்மங்களின் தத்துவம். வலுக்கட்டாயமாக துண்டிப்பதினாலும் மனம் அடிக்கடி சென்று கொண்டே இருக்கும்.

கர்மத்தின் தத்துவத்தை ஞான சொரூபமாகி தெரிந்து கொள்ளுங்கள். பிறகு சரி பார்க்கச் செய்யுங்கள் பிறகு கர்ம பந்தனத்தை ஞானம் நிறைந்தவராகி அகற்றுங்கள்.

மற்றபடி பிராமண ஆத்மாக்களில் நமக்கு சமமானவர்களாக இருக்கும் காரணத்தினால் பொறாமைஉருவாகிறது. பொறாமையின் காரணமாக சம்ஸ்கார மோதல் ஏற்படுகிறது. ஆனால் யார் நம்மைப் போன்று இருப்பவர்களை பொறுப்பாளராகி ஆக்கி இருப்பது யார்? என்று விசேஷமாக இந்த விஷயத்தை யோசித்துப் பாருங்கள். இவர் இந்த சேவையில் வந்து விட்டார். இன்னார் டீச்சர் ஆகிவிட்டார், நம்பர் ஒன் சேவை செய்பவராக ஆகிவிட்டார் என்று அவரைப் பார்க்காதீர்கள். ஆனால் அந்த ஆத்மாவை பொறுப்பிலிருப்பவராக ஆக்கியது யார்? என்று இதை யோசித்துப் பாருங்கள். பொறுப்பாளராக இருக்கும் விசேஷ ஆத்மா மூலம் தான் அவருக்கு சேவை கிடைக்கிறது. ஆனால் பொறுப்பாளர் ஆகியிருக்கும் டீச்சரையும் யார் பொறுப்பாளர் ஆக்கியது? இதில் எப்பொழுது இடையில் தந்தை இருந்து விட்டார் என்றால் மாயா ஓடிவிடும், பொறாமைஓடி விடும். ஆனால் எப்படி பழமொழி இருக்கிறது இல்லையா தந்தை இருப்பார் அல்லது பாவம் இருக்கும். எப்பொழுது தந்தையை இடையிலிருந்து எடுத்து விடுகிறீர்களோ அப்பொழுது பாவம் வருகிறது. பொறாமையும் பாவக் காரியம் தான் இல்லையா. ஒருவேளை தந்தை பொறுப்பாளர் ஆக்கியிருக்கிறார் என்றால், தந்தை என்ன காரியம் செய்கிறாரோ அதில் நன்மை தான் இருக்கிறது. ஒருவேளை அவருடைய ஏதாவது விஷயம் பிடிக்கவில்லை, தவறாகவும் ஆக முடியும். ஏனென்றால் அனைவரும் முயற்சி செய்பவர்கள். ஒரு வேளை தவறு என்றாலும் தன்னுடைய சுப பாவனையுடன் மேலே கொடுத்து விட வேண்டும். பொறாமை வசப்பட்டு அல்ல ஆனால் தந்தையின் சேவை என்னுடைய சேவை என்று இந்த சுபபாவனையுடன், உயர்ந்த பொறுப்போடு விசயத்தை மேலே கொடுத்து விட வேண்டும். கொடுத்த பிறகு நீங்கள் அதைப் பற்றி கவலையற்றவராக ஆகிவிடுங்கள். இந்த விசயத்தை சொன்னேன், அதற்கு என்ன ஆச்சு என்று யோசிக்காதீர்கள். எதுவுமே ஆகவில்லை, ஆனதா அல்லது இல்லையா என்ற இந்தப் பொறுப்பு பெரியவர்களுடையதாகி விடுகிறது. நீங்கள் சுபபாவனையோடு கொடுத்து விட்டீர்கள், இப்பொழுது உங்களுடைய வேலை தன்னை காலியாக்குவது பெரியவர்களின் கவனத்தில் விசயம் வரவில்லை என்று பார்க்கிறீர்கள் என்றால், இரண்டாவது தடவை எழுதுங்கள். ஆனால் சுபபாவனையுடன் ஒரு வேளை பொறுப்பிலிருப்பவர் இந்த விசயத்தை விட்டு விடுங்கள் என்று கூறினால் என்றால் நீங்கள் எண்ணத்தையும், நேரத்தையும் வீணாக இழக்காதீர்கள் பொறாமைப்படாதீர்கள். ஆனால் யாருடைய காரியம், யார் பொறுப்பாளர் ஆக்கியிருக்கிறாரோ அவரை நினைவு செய்யுங்கள். எந்த விசேஷத்தின் காரணமாக அவரை விசேஷமானவராக ஆக்கியிருக்கிறார்கள் அந்த விசேஷத்தை தன்னில் தாரணை செய்தீர்கள் என்றால் பந்தயம் ஆகிவிடும், போட்டி ஆகாது.

புரிந்ததா.

ஒருபொழுதும் நிலை குலைந்து போகக் கூடாது. யாராவது ஏதாவது கூறினார் என்றால், நீங்கள் என்ன நோக்கத்தோடு கூறினீர்கள் என்று அவரிடமே கேட்க வேண்டும். ஒருவேளை அவர் அதை தெளிவு படுத்தவில்லை என்றால் பொறுப்பாளராகி இருப்பவரிடம் இதில் என்னுடைய தவறு என்ன என்று கேட்க வேண்டும். ஒருவேளை மேலே சோதனைசெய்து சரி பார்த்து உங்களுடைய தவறு இல்லை என்றால் நீங்கள் கவலையற்றவராக ஆகிவிடுங்கள். பிராமண ஆத்மாக்கள் மூலமாக இங்கேயே கணக்கு வழக்கை முடிக்க வேண்டும் என்ற ஒரு விசயத்தை அனைவரும் புரிந்து கெள்ள வேண்டும். தர்மராஜரிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்கு எங்காவது பிராமணர் காரணமாகி விடுகிறார். எனவே இந்த பிராமண பரிவாரத்தில் என்ன நடக்கிறது என்று பயப்படாதீர்கள். பிராமணர்களின் கணக்கு வழக்கு பிராமணர்கள் மூலமாகத்தான் முடிய வேண்டும். அது முடிவடைந்து கொண்டிருக்கிறது என்ற இந்த குஷியிலேயே இருங்கள். கணக்கு, வழக்கு முடிந்தது மேலும் முன்னேற்றமே, முன்னேற்றம் ஏற்பட்டது. சின்ன, சின்ன விசயத்தில் குழப்பமடைய மாட்டோம், பிரச்சனையாக ஆக மாட்டோம் ஆனால் பிரச்சனைக்கு தீர்வு காண்பவர்களாக ஆவோம் என்று இப்பொழுது ஒரு உறுதி மொழிகொடுங்கள். புரிந்ததா.

வரதானம் :

தன்னுடைய சக்திகள் மற்றும் குணங்கள் மூலமாக பலமற்றவரை சக்தி நிறைந்தவராக ஆக்கக் கூடிய சிரேஷ்ட வள்ளல் மற்றும் சகயோகி ஆகுக !

உயர்ந்த நிலை உள்ள உண்மையான குழந்தைகளின் அனைத்து சக்திகள் மற்றும் அனைத்து குணங்களும் நேரத்திற்கு ஏற்றார்ப்போல் எப்பொழுதும் சகயோகியாக இருக்கின். அவர்களுடைய சேவையின் விசேஷ சொரூபம் தந்தை மூலமாக கிடைத்திருக்கும் குணங்கள், சக்திகளை அஞ்ஞானி ஆத்மாக்களுக்கு தானம் செய்வது மற்றும் பிராமண ஆத்மாக்களுக்கு சகயோகம் கொடுப்பது. பலமற்றவரை சக்தி நிறைந்தவராக ஆக்குவது என்ற இது தான் சிரேஷ்ட தானம் மற்றும் சகயோகம். எப்படி வாய்மொழி மூலம், மனசக்தி மூலம் சேவை செய்கிறீர்கள் அந்த மாதிரி பிராப்தியாகியிருக்கும் குணங்கள் சக்திகளின் சகயோகத்தை மற்ற ஆத்மாக்களுக்குக் கொடுங்கள், பிராப்தி செய்யுங்கள்.

சுலோகன் :

யார் திட நிச்சயத்தோடு பாக்கியத்தை நிச்சயம் செய்து விடுகிறார்களோ அவர்கள் தான் எப்பொழுதும் கவலையின்றி இருக்கிறார்கள்.

ஓம்சாந்தி

## சக்திசாலியின் அடையாளம் - எண்ணம், சொல், செயல், சுபாவம், சம்ஸ்காரம் - தந்தைக்குச் சமமானது

இன்று ஆன்மீகத்தந்தை, திலாராமிற்கு கொடுத்திருக்கும் இதயத்தின் செய்தியை குழந்தைகளிடம் கேட்க வந்திருக்கிறார், அனைவரும் திலாரமிற்கு இதயத்தை கொடுத்திருக்கிறீர்கள் தான் இல்லையா!? எப்பொழுது ஒரு திலாராமிற்கு இதயத்தைக் கொடுத்து விட்டீர்கள் என்றால் அவரைத் தவிர வேறு யாரும் வரமுடியாது, திலாராமிற்கு இதயத்தை கொடுப்பது என்றால் இதயத்தில் அமர வைப்பது. இதைத் தான் சகஜ யோகாஎன்று கூறுவது. எங்கு இதயம் இருக்குமோ, அங்குதான் புத்தியும் செல்லும். இதயத்திலும் திலாராம் மேலும் புத்தி அதாவது நினைவிலேயும் திலாராம். வேறு எந்த நினைவு மற்றும் நபர் திலாராமின் இடையில் வரமுடியாது. அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுது இதயம் மற்றும் புத்தி அதாவது நினைவு, எண்ணம், சக்தி அனைத்தையும் தந்தைக்குக் கொடுத்து விட்டீர்கள் என்றால், வேறு மிச்சம் என்னதான் இருக்கிறது, எண்ணம், சொல், செயலால் தந்தையினுடையவர் ஆகிவிட்டீர்கள், எண்ணத்திலும் நான் தந்தையினுடையவன் என்று வைத்தீர்கள், மேலும் வார்த்தைகள் மூலமாகவும் என்னுடைய பாபா, நான் பாபாவினுடையவன் என்று கூறினீர்கள். மேலும் காரியத்திலும் என்ன சேவை தான் என்னுடைய சேவை. அந்த மாதிரி எண்ணம், சொல், செயலால் தந்தையினுடையவர் ஆகி விட்டீர்கள் இல்லையா! வேறு ஏதாவது எண்ண அளவிலாவது வருவதற்கு எங்காவது வாய்ப்பு இருக்கிறதா? ஏதாவது எண்ணம் அல்லது ஏதாவது விதமான கவர்ச்சியும் வருவதற்கு வாசல், ஜன்னல் இன்னும் இருக்கிறதா என்ன? வருவதற்கான வழியே மனம், புத்தி, சொல் மற்றும் செயல், நாலா புறங்களிலும் யாராவது வருவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள், வாய்ப்பு இருக்கிறதா? கனவும் இதே ஆதாரத்தில் வருகின்றன, எப்பொழுது தந்தையிடம் இவை அனைத்தும் உன்னுடையது என்று ஒரு தடவை கூறினீர்கள், என்றால் இன்னும் மிச்சம் என்ன இருக்கிறது? இதைத் தான் நிரந்தர நினைவு என்று கூறுவது. சொல்வதிலும் செய்வதிலும் இடைவெளியோவைத்து விடுவதில்லையே? உன்னுடையதில் என்னுடையது என்று கலப்படமோ செய்து விடுவதில்லையே? சூர்யவம்சம் என்றால் பொற்காலம், அதில் கலப்படமோ ஆகாது தான் இல்லையா! வைரமும் கறையற்றதாக இருக்கட்டும். ஏதாவது கறை இருந்து விடவில்லையே?

எந்த நேரத்திலும் ஏதாவது பலஹீனத்தை வர்ணனை செய்யும் பொழுது, அது எண்ணத்தின், வார்த்தையின் அல்லது சுபாவம் சமஸ்காரத்தின் பலஹீனமாக இருந்தாலும், என்ன வார்த்தை கூறுகிறீர்கள்? என்னுடைய சிந்தனை அந்த மாதிரி கூறுகிறது அல்லது என்னுடைய சம்ஸ்காரமே அந்த மாதிரியாவது என்ற வார்த்தையை ஒரு பொழுதும் கூற மாட்டீர்கள். என்ன செய்வது என்ற இந்த வார்த்தையே பலஹீனத்தினுடையது. சக்திசாலியின் அடையாளம் - எப்பொழுதும் தந்தைக்குச் சமமான எண்ணம், சொல், செயல், சுபாவம், சம்ஸ்காரம் இருக்க வேண்டும், தந்தையினுடையது வேறு, என்னுடையது வேறு என்று அப்படி இருக்க முடியாது. அவருடைய எண்ணத்திலும், வார்த்தையில், ஒவ்வொரு விஷயத்திலும் பாபா, பாபா, என்ற வார்த்தை இயற்கையாகவே இருக்கும், மேலும் காரியம் செய்து கொண்டிருக்கும் செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார் என்ற அனுபவம் ஆகும். எப்பொழுது அனைத்திலும் பாபா வந்து விட்டார் என்றால், தந்தையின் எதிரில் மாயா ஆகமுடியாது, தந்தை இருப்பார் அல்லது மாயா இருக்கும்? லண்டனில் இருப்பவர்கள் பாபா, பாபா என்று கூறி, நினைவில் வைத்து நிரந்தரமாக மாயாவை வென்றவர் ஆகி விட்டீர்களா? எப்பொழுது ஆஸ்தியை சதாகாலத்திற்குப் பெறுகிறீர்கள் என்றால், நினைவும் சதாகாலம் வேண்டும் இல்லையா! மாயாவை வென்றதும் சதா காலம் வேண்டும்.

லண்டன் சேவையின் அஸ்திவார ஸ்தானம், அஸ்திவார ஸ்தானத்தில் இருப்பவர்களும் அஸ்திவாரத்திற்குச் சம்மாக எப்பொழுதும் உறுதியாக இருக்கிறார்களா? என்ன செய்வது, எப்படிச் செய்வது, என்று அந்த மாதிரி எந்தப் புகாரும் இல்லைதான் இல்லையா? அதிகமாக நாடகமும் மாயாவின் நாடகம் தான் போடுகிறீர்கள். ஒவ்வொரு நாடகத்திலும் வராத மாயாவும் வந்து விடுகிறது. மாயாவின்றி நாடகம் தயாரிக்க முடியாது போல் இருக்கிறது. மாயாவினும் வித விதமான சொரூபம் காண்பிக்கிறீர்கள் தான் இல்லையா! ஒவ்வொரு விஷயத்திலும் பரிவர்த்தனை செய்பவர் சொரூபம் இருக்கட்டும். இந்த நாடகத்தை காண்பியுங்கள். மாயாவின் முக்கிய சொரூபம் எது, அதையோநல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள், ஆனால் மாயாவை வென்றவராக ஆன பிறகு அதே மாயா எப்படி மாறிவிடுகிறது என்ற இந்த நாடகத்தை காண்பியுங்கள். எப்படி தேகப் பார்வையை காமம் என்று கூறுகிறோம், அதற்குப் பதிலாக ஆத்மீக அன்பு ரூபத்தில் மாறிவிடுகிறது. அந்த மாதிரி அனைத்து விகாரங்களும் மாறிய ரூபத்தில் ஆகி விடுகின்றன. அந்த மாதிரி என்ன மாற்றம் ஆனது என்ற இதை நடைமுறையில் அனுபவம் செய்யுங்கள், மேலும் காண்பிக்கவும் செய்யுங்கள்.

லண்டனில் இருப்பவர்கள் விசேஷமாக சுய முன்னேற்றத்திற்காக மற்றும் உலக நன்மைக்காக என்ன இலட்சியம் வைத்திருக்கிறீர்கள்? நாமே தான் ஃபரிஷ்தா (ஏஞ்சல்) என்ற இதே நினைவு விசேஷமாக எப்பொழுதும் இருக்கட்டும். ஃபரிஷ்தாவின் சொரூபம் என்ன? வார்த்தைகள் என்ன?, காரியம் என்னவாக இருக்கிறது என்பதை இயல்பாகவே ஃபரிஷ்தா ரூபத்தில் நடந்து கொண்டே உணர்வீர்கள். நான் ஃபரிஷ்தா, நான் ஃபரிஷ்தா, என்ற இதே நினைவை எப்பொழுதும் வையுங்கள். எப்பொழுது தந்தையினுடையவராக ஆகிவிட்டீர்கள் மேலும் அனைத்தையும் என்னுடையதிலிருந்து உன்னுடையதாக்கி விட்டீர்கள் என்றால், என்னவாகி விட்டீர்கள். லேசாக ஃபரிஷ்தா ஆகிவிட்டீர்கள் தான் இல்லையா? இந்த இலட்சியத்தை எப்பொழுதும் நிறைவேற்றுவதற்காக அனைத்தும் தந்தையினுடையது, என்னுடையது எதுவும் இல்லை என்ற ஒரே ஒரு வார்த்தையை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். எங்கு என்னுடையது என்று வந்தால், அங்கு உன்னுடையது என்று கூறிவிடுங்கள். பிறகு எந்த சுமையும் அனுபவம் ஆகாது. ஒவ்வொரு வருடமும் அடியும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கும், மேலும் எப்பொழுதும் முன்னேறிச் கொண்டே இருப்போம், நான் பறக்கும் கலையில் செல்லும் ஃபரிஷ்தா என்ற இதுவோ உறுதியாக இருக்கிறது தான் இல்லையா! நான் மேலே, கீழே செல்பவன் அல்ல. நல்லது.

லண்டன் வாசிகளின் மஹிமையையோ அனைவரும் தெரிந்திருக்கிறார்கள். உங்களை அனைவரும் எந்தப் பார்வையில் பார்க்கிறார்கள்? எப்பொழுதும் மாயாவை வென்றவர்கள் என்று! ஏனென்றால் சக்திசாலியான இரட்டை பாலனை கிடைத்துக் கொண்டிருக்கிறது. பாப்தாதாவின் பாலனையோஇருக்கவே இருக்கிறது, ஆனால் தந்தை யாரை பொறுப்பாளர் ஆக்கியிருக்கிறாரோ, அவரிடமிருந்தும் சக்திசாலியான பாலனை கிடைத்துக் கொண்டிருக்கிறது. நிராகார் (சிவபாபா), ஆகார் (பிரம்மா பாபா) மற்றும் சாகார் (தாதி) மூவரையும் பின்பற்றி நடந்தீர்கள் என்றால், என்ன ஆகிவிடுவீர்கள்? ஃபரிஷ்தா ஆகிவிடுவீர்கள் தான் இல்லையா! லண்டன் நிவாசி என்றால் புகாரற்ற, குழப்பமற்றவர்கள், ஆன்மீக வாழ்க்கையுள்ள, சுயராஜ்யம் செய்யக்கூடிய இராஜா மற்றும் இராணிதான் நீங்கள் அனைவரும் இல்லையா! உங்களுக்கு போதைதான் இல்லையா!

## குமாரிகளுடன் சந்திப்பு

குமாரிகளோ தங்களுடைய பாக்கியத்தைப் பார்த்து எப்பொழுதும் மகிழ்ச்சியடைகிறார்கள். குமாரி உலகியல் வாழ்க்கையிலும் உயர்ந்தவர் என்று கூறப்படுகிறார்கள், மேலும்

,

ஞானத்திலோ குமாரி என்றாலே மஹான் உலகத்திலும் சிரேஷ்ட ஆத்மாக்கள் மேலும் பரலோகத்திலும் கூட சிரேஷ்ட ஆத்மாக்கள். அந்த மாதிரி தன்னை மஹான் என்று நினைக்கிறீர்களா? நீங்களே ஆம் என்று இந்த முழு உலகமே கேட்கும் அளவிற்குப் கூறுங்கள், குமாரிகளையோ பாப்தாதா யாருடைய பார்வையும் பட்டுவிடக்கூடாது என்று தனது இரும்பு பெட்டகத்தில் வைக்கிறார். அந்த மாதிரி விலை மதிக்க முடியாத இரத்தினங்கள் நீங்கள், குமாரிகள் எப்பொழுதும் படிப்பு மற்றும் சேவையிலேயே பிஸியாக இருக்கிறார்கள். குமாரி வாழ்கையில் தந்தை கிடைத்து விட்டார், வேறு என்ன வேண்டும்? அனேக சம்பந்தங்களில் அலைய வேண்டியது இல்லை, தப்பித்துக் கொண்டீர்கள். ஒருவரிடம் அனைத்து சம்பந்தங்களும் கிடைத்து விட்டது. இல்லையென்றால் எத்தனை வீணான சம்பந்தம்கள் ஆகிவிடுகின்றன என்று தெரியுமா! மாமியார், மைத்துனி, அண்ணிகள். என்று, அனைத்திலிருந்தும் பாதுகாப்பாகிவிட்டீர்கள் இல்லையா! வலையில் மாட்டிக் கொள்ளவும் இல்லை. மேலும் வலையிலந்து விடுவிப்பதற்காக நேரமும் இருக்கவில்லை. குமாரிகள் இருப்பதே டபுள் லைட்டாகத்தான். குமாரிகள் எப்பொழுதும் தந்தைக்குச் சமமான சேவாதாரிகள் மற்றும் தந்தைக்குச் சமமாக அனைத்து தாரணை சொரூபமானவர்கள். குமாரி வாழ்க்கை என்றால் தூய்மையான வாழ்க்கை. நீங்கள் தூய்மையான ஆத்மாக்கள் சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆனீர்கள் இல்லையா? பாப்தாதா குமாரிகளை மஹான் பூஜைக்குரிய ஆத்மாவின் ரூபத்தில் பார்க்கிறார். தூய்மையான ஆத்மாக்கள் அனைவருக்கும் மற்றும் தந்தைக்கும் பிரியமானவர்கள்.

தன்னுடைய பாக்கியத்தை எப்பொழுதும் எதிரில் வைத்துக் கொண்டே சக்திசாலியான ஆத்மாவாகி சேவையில் சக்தியைக் கொண்டு வந்து கொண்டே இருங்கள். இது தான் பெரிய புண்ணியம். எது தனக்கு பிராப்தி ஆகியிருக்கிறதோ அதை மற்றவர்களுக்கும் செய்வியுங்கள். பொக்கிஷங்களை வழங்குவதினால் இன்னும் அதிகரிக்கும் என்று அந்த மாதிரி சுப எண்ணம் வைக்கும் குமாரிகள் தான் நீங்கள் இல்லையா? நன்றி.

டீச்சர்களுடன் சந்திப்பு:

உலகின் காட்சிப் பெட்டகத்தில் விசேஷ காட்சிப் பொருள் நீங்கள். அனைவரின் பார்வை பொறுப்பாளராகியிருக்கும் சேவாதாரி என்று கூறினாலும் ஆசிரியர் என்று கூறினாலும் அவர் மேல் தான் இருக்கிறது. எப்பொழுதும் மேடையில் இருக்கிறீர்கள். எவ்வளவு பெரிய மேடை மேலும் பார்ப்பவர்கள் எத்தனை பேர்? அனைவரும் பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள் உங்களிடமிருந்து பிராப்தியின் பாவனை வைக்கிறார்கள். எப்பொழுதும் இது நினைவில்

இருக்கிறதா? செண்டரில் இருக்கிறீர்களா அல்லது மேடையில் இருக்கிறீர்களா? எப்பொழுதும் எல்லைக்காப்பாற்பட்ட மிகப்பெரிய மேடையில் அனேக ஆத்மாக்களின் நடுவே இருக்கிறீர்கள், எனவே வள்ளலின் குழந்தைகள் எப்பொழுதும் கொடுத்துக் கொண்டே இருங்கள், மேலும் அனைவரின் பாவனைகள் மற்றும் அனைவரின் ஆசைகளை நிறைவேற்றிக் கொண்டே இருங்கள். மஹாதானி மற்றும் வரதானி ஆகுங்கள். இது தான் உங்களுடைய சொரூபம், இந்த நினைவு மூலம் ஒவ்வொரு எண்ணம், வார்த்தை மற்றும் காரியம் கதாநாயகப் பாத்திரத்திற்குச் சமமாக இருக்கட்டும். ஏனென்றால், உலகின் ஆத்மாக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எப்பொழுதும் மேடையிலேயே இருங்கள். கீழே வராதீர்கள். பொறுப்பிலிருக்கும் சேவாதாரிகளை பாப்தாதா தன்னுடைய நண்பர்கள் என்று நினைக்கிறார், ஏனென்றால் தந்தையும் ஆசிரியர் என்றால் தந்தைக்குச் சமமாக பொறுப்பாளர் ஆகியிருப்பவர்கள். நண்பர்கள் ஆனார்கள் இல்லையா! அந்தளவு நெருக்கமான ஆத்மாக்கள் நீங்கள். அந்த மாதிரி எப்பொழுதும் தன்னை தந்தையுடன் இருப்பவராக மற்றும் நெருக்கமானவராக அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுதெல்லாம் பாபா என்று கூறுகிறீர்களோ அப்பொழுது ஆயிரம் புஜங்களுடன் தந்தை உங்களுடன் இருக்கிறார். அந்த மாதிரி அனுபவம் ஆகிறதா? யார் பொறுப்பாளர் ஆகியிருக்கிறார்களோ, அவர்களுக்குத் தான் பாப்தாதா அதிகப்படியான சகயோகம் கொடுக்கிறார். எனவே மிகவும் பெருமிதத்துடன் பாபா என்று கூறுங்கள். அழையுங்கள். பாபா ஆஜராகி விடுவார். பாப்தாதா மிகவும் கீழ்ப்படிந்து நடப்பவர் இல்லையா. நல்லது.

24.09.2017 காலை முரளி ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா

ரிவைஸ் 13.01.1983 மதுபன்

## சுயதரிஷண சக்கரதாரி தான் சக்கரவர்த்தி இராஜ்ய பாக்கியத்தின் அதிகாரி

அனைவரும் தன்னை சுயதர்ஷண சக்கரதாரி என்று நினைக்கிறீர்களா? சுயதர்ஷண சக்கரதாரிதான் எதிர்காலத்தில் சக்கரவர்த்தி இராஜ்ய பாக்கியத்தின் அதிகாரி ஆகிறார்கள். சுயதர்ஷண சக்கரதாரி என்றால் முழுச் சக்கரத்திற்குள் தன்னுடைய அனைத்து பல்வேறு வாழ்க்கை பங்கை தெரிந்தவர். நாம் அனைவரும் இந்த சக்கரத்திற்குள் காதாநாயகப் பாத்திரம் ஏற்று செய்யும் விசேஷ ஆத்மாக்கள் என்று அனைவரும் இந்த முக்கியமான விஷயத்தைத் தெரிந்து கொண்டீர்கள். இந்தக் கடைசி ஜென்மத்திற்கு சமமான வாழ்க்கையை

உருவாக்குவதினால முழுக் கல்பத்திற்குள் கதாநாயகப் பாத்திரம் செய்பவர் ஆகிவிடுகிறீர்கள். தொடக்கத்திலிருந்து இறுதி வரை என்னென்ன ஜென்மம் எடுத்திருக்கிறேன் என்ற அனைத்தும் நினைவில் இருக்கிறதா? ஏனென்றால் இந்த நேரம் ஞானம் நிறைந்தவர் ஆகிறீர்கள். இந்த நேரம் தான் தன்னுடைய அனைத்து ஜென்மத்தைத் தெரிந்து கொள்ள முடியும் என்றால் 5 ஆயிரம் வருட ஜாதகத்தையும் தெரிந்து விட்டீர்கள். யாராவது ஜாதகம் பார்த்து கூறுபவர் இருக்கிறார் என்றால், யாருக்காவது இரண்டு, நான்கு, அல்லது ஆறு ஜென்மங்களைப் பற்றி தான் கூறுவார். ஆனால் உங்கள் அனைவருக்கும் பாப்தாதா அனைத்து ஜென்மங்களின் ஜாதகத்தைக் கூறிவிட்டார். நீங்கள் அனைவரும் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் ஆகி விட்டீர்கள் இல்லையா! அனைத்து கணக்கையும் படங்களிலும் காண்பித்திருக்கிறோம், அவசியம் தெரிந்திருக்கிறீர்கள், அதனால் தான் படங்களிலும் காண்பித்திருக்கிறீர்கள் இல்லையா! தன்னுடைய ஜாதகத்தின் படத்தைப் பார்த்திருக்கிறீர்களா? அந்த படத்தை பார்த்து, இது என்னுடைய ஜாதகத்தின் படம் என்று அனுபவம் செய்கிறீர்களா அல்லது இது ஞானத்தை புரிய வைப்பதற்கான படம் என்று நினைக்கிறீர்களா? நாம் தான் விசேஷ ஆத்மாக்கள் தொடக்கத்திலிருந்து கடைசி வரை வாழ்க்கை பங்கைச் செய்பவர்கள் என்ற போதையிருக்கிறது தான் இல்லையா! பிரம்மா பாபாவுடன் சேர்ந்து உலகின் ஆதிபிதா மற்றும் ஆதி மாதாவுடன் முழுக்கல்பத்தில் வேறு, வேறு பங்கை செய்து வந்திருக்கிறீர்கள் இல்லையா! நிர்வாண நிலைக்குச் இச்சை வைத்திருப்பவர்கள் இல்லையே!! யார் தொடக்கத்தை பார்க்கவில்லையென்றால் அவர் என்ன தான் செய்திருக்கிறார். நீங்கள் அனைவரும் எத்தனை தடவைகள் படைப்பின் தொடக்கத்தின் மிக அழகான காட்சிகளைப் பார்த்திருக்கிறீர்கள். அந்த நேரம், அந்த இராஜ்யம், அந்த தன்னுடைய சொரூபம் அந்த அனைத்தும் நிறைந்த வாழ்க்கை நல்ல முறையில் நினைவு இருக்கிறதா? தன்னுடைய தொடக்கத்தின் ஜென்மம் அதாவது முதல் ஜென்மம் மற்றும் இப்பொழுதைய கடைசி ஜென்மம் இரண்டின் மகத்துவத்தை நல்ல முறையில் தெரிந்து விட்டீர்கள் தான் இல்லையா! இரண்டின் மகிமை அளவற்றது.

எப்படி ஆதிதேவ் பிரம்மா மற்றும் ஆதி ஆத்மா ஸ்ரீ கிருஷ்ணன் இருவரின் வித்தியாசத்தை சேர்ந்தே காண்பிகிறீர்கள். அதே போல் நீங்கள் அனைவரும் தன்னுடைய பிராமண சொரூபம் மற்றும் தேவதா சொரூபம் இரண்டையும் எதிரில் வைத்து நான் தொடக்கத்திலிருந்து இறுதிவரை எவ்வளவு சிரேஷ்ட ஆத்மாவாக இருந்திருக்கிறேன். என்று பாருங்கள். அப்பொழுது மிகுந்த போதை மற்றும் குஷி இருக்கும். ஆக்குபவர் மற்றும் ஆகுபவர் இருவர்களின் விசேஷம் இருக்கிறது. பாப்தாதா அனைத்துக் குழந்தைகளின் இரண்டு சொருபங்களையும் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். வரிசைக்கிரமமாக இருந்தாலும் தேவ ஆத்மாவாகவோ அனைவரும் ஆவார்கள் இல்லையா! தேவதைகளை பூஜைக்குரியவர்கள்,

சிரேஷ்ட மஹான் என்று அனைவரும் நம்புகிறார்கள். கடைசி வரிசை எண்ணில் இருக்கும் தேவ ஆதமாவாக இருந்தாலும், பூஜைக்குரிய ஆத்மாவின் பட்டியலில் இருக்கிறார். அரைக்கல்பம் இராஜ்ய பாக்கியத்தை பிராப்தி செய்திருக்கிறார்கள், மேலும் அரைக்கல்பம் மரியாதைக்குரிய மற்றும் பூஜைக்குரிய ஆத்மா ஆகியிருக்கிறார்கள். தன்னுடைய தேவ ரூபத்தின் விக்ரஹங்கள், படங்களின் பூஜை, நம்பிக்கையை சைதன்ய ரூபத்தில் பிராமண ரூபத்தில் இப்பொழுதும் பார்க்கிறீர்கள். இதை விட சிரேஷ்டமாக வேறு யாராவது இருக்க முடியுமா? எப்பொழுதும் இதே நினைவு சொரூபத்தில் நிலைத்திருங்கள். பிறகு அடிக்கடி கீழான நிலையிலிருந்து மேலே உள்ள நிலைக்குச் செல்வதற்கு கடின உழைப்பு செய்ய வேண்டியதிருக்காது.

அனைவரும் எங்கிருந்து வந்திருந்தாலும் இந்த நேரம் மதுபன் நிவாசிகள். அனைத்து மதுபன் நிவாசிகளாகிய நீங்கள் சகஜ நினைவு சொரூபம் ஆகிவிட்டீர்கள் தான் இல்லையா! மதுபன் நிவாசி ஆவது கூட பாக்கியம் நிறைந்தவரின் அடையாளமாகும். ஏனென்றால், மதுபன்னின் வாசலில் வருவது என்றால் வரதானத்தை நிரந்தரமாக அடைவது. ஸ்தானத்திற்கும் மகத்துவம் இருக்கிறது. அனைத்து மதுபன் நிவாசிகள் வரதானி சொரூபத்தில் நிலைத்திருக்கிறீர்கள் தான் இல்லையா! நிறைந்திருக்கும் நிலையை அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா? நிரம்பிய சொரூபம் என்றால் எப்பொழுதும் குஷியில் நடனமாடிக் கொண்டும், தந்தையின் குணத்தைப் பாடிக் கொண்டும் இருப்பார்கள். நீங்கள் அந்த மாதிரி குஷியில் நடனமாடிக் கொண்டே இருங்கள். உங்களைப் பார்த்து மற்றவர்களின் மனம் இயல்பாகவே ஆடிக் கொண்டும், பாடிக்கொண்டும் இருக்கட்டும், எப்படி ஸ்தூல நடனத்தை பார்த்து மற்றவர்களின் மனதிலும் நடனமாட வேண்டும்என்ற ஊக்கம் உருவாகிவிடும் தான் இல்லையா! எனவே எப்பொழுதும் அந்த மாதிரிடிக்கொண்டும், பாடிக்கொண்டே இருங்கள். நல்லது.

இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு இதுவும் விசேஷ வாய்ப்பு, ஏனென்றால் இப்பொழுது கண்டெடுககப்பட்டவர்களாக இருக்கிறீர்கள். எப்பொழுது இரட்டை வெளிநாட்டினரின் எண்ணிக்கை அதிகமாகிவிடும் பட்சத்தில் என்ன செய்வீர்கள்? எப்படி பாரதவாசிக் குழந்தைகள் இரட்டை வெளிநாட்டினருக்கு வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள் இல்லையா! அந்த மாதிரி மற்றவர்களுக்கும் வாய்ப்பு கொடுப்பீர்கள் இல்லையா! மற்றவர்களின் குஷியில் தன்னுடைய குஷியை அனுபவம் செய்ய வேண்டும். இது தான் மஹாதானி ஆவது.

வரதானம்:

பணிவுத் தன்மை மூலமாக புதுப் படைப்பை செய்யக் கூடிய நம்பிக்கையின்மை மற்றும் அபிமானத்திலிருந்து விடுபட்டவர் ஆகுக.

ஒருபொழுதும் முயற்சி செய்வதில் நம்பிக்கையிழந்தவர் ஆகாதீர்கள். செய்யத்தான் வேண்டும், நடக்கத்தான் வேண்டும், வெற்றி மாலை என்னுடைய நினைவுச் சின்னம் என்ற இந்த நினைவு மூலம் வெற்றி அடைபவர் ஆகுங்கள். ஒரு விநாடிக்கு மற்றும் ஒரு நிமிடத்திற்காகக் கூட நம்பிக்கையின்மைக்கு தன் மனதில் இடம் கொடுக்காதீர்கள். அபிமானம் மற்றும் நம்பிக்கையின்மை இந்த இரண்டும் மனா பலம் பொருந்திய வராக ஆக விடாது. அபிமானம் உள்ளவர்களுக்கு அவமானத்தின் உணர்வுகள் அதிகமாக வரும்,. எனவே இந்த இரண்டு விஷயதிலிருந்து விடுபட்டவர் ஆகி பணிவானவராக ஆகுங்கள். பிறகு புதுப் படைப்புக்காரியம் செய்து கொண்டே இருப்பீர்கள்.

சுலோகன்:

உலக சேவையின் சிம்மாசனதாரி ஆனீர்கள் என்றால், இராஜ சிம்மானதாரி ஆகி விடுவீர்கள்.

ஓம்சாந்தி

15.01.1983 காலை முரளி ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா, மதுபன்

## சகஜயோகி மற்றும் பிரயோகியின் விளக்கம்

இன்று பாப்தாதா தன்னுடைய சகஜயோகி புஜங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். எப்படி என்னுடைய சகயோகி புஜங்கள் சிரேஷ்ட காரியத்தை வெற்றியடையச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு புஜத்தின் தெய்வீக ஆன்மீகக் காரியத்தின் வேகத்தைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சியடைந்து ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருக்கிறார்கள். சில புஜங்கள் எப்பொழுதும் களைப்பற்று மேலும் ஒரே சிரேஷ்ட ஊக்கம், உற்சாகம் மேலும் அதிவேகத்தில் சகயோகியாகஇருக்கிறார்கள். ஆனால் இடை, இடையே ஊக்கம் உற்சாகத்தின் அதிவேகத்தில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. ஆனால் எப்பொழுதும் களைப்பற்று அதிவேகத்திலிருக்கும் புஜங்களின் ஊக்கம் உற்சாகத்தைப் பார்த்து பார்த்து அவர்களும் மீண்டும் அதிவேகத்தில் காரியம் செய்யத் தொடங்கி விடுகிறார்கள். ஒவ்வொருவரின் சகயோகத்தின் மூலம் வேகத்தை அதிகப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

பாப்தாதா இன்று மூன்று விதமான குழந்தைகளை பார்த்துக் கொண்டிருந்தார். ஒருவர் எப்பொழுதும் சகஜயோகி இன்னொருவர் ஒவ்வொரு விதியையும் அடிக்கடி பிரயோகம் செய்யும் பிரயோகி மூன்றாவது சகயோகி மூன்று யோகிகளும் இம் மாதிரி இருக்கிறார்கள். ஆனால் வேறு, வேறு நிலையில் இருப்பவர்கள். சகஜயோகி, நெருங்கிய சம்மந்தம் மற்றும் அனைத்து பிராப்தியின் காரணமாக எப்பொழுதும் சகஜயோகாவைஇயல்பாகவே அனுபவம் செய்கிறார். எப்பொழுதம் சக்திசாலியான சொரூபம் இருக்கும் காரணத்தினால் நான் தந்தையினுடைய வனாகத்தான் இருக்கிறேன் என்ற போதையைஎப்பொழுதும் அனுபவம் செய்கிறார். நான் ஒரு ஆத்மா, நான் தந்தையின் குழந்தை என்று நினைவூட்ட வேண்டியதாக இருக்காது. நான் அவ்வாறே இருக்கிறேன் என்ற இந்த அனுபவத்தின் போதையில் பிராப்தி சொரூபமானவன் என்று இயற்கையாக நிச்சயம் செய்கிறார். சகஜயோகிக்கு அனைத்து சக்திகளும் (வெற்றிகளும்) இயல்பாகவே அனுபவம் ஆகிறது. எனவே சகஜயோகி எப்பொழுதுமே சிரேஷ்ட ஊக்கம், உற்சாகத்தின் குஷியில் ஒரே சீரான நிலையில் இருக்கிறார். சகஜயோகி அனைத்து பிராப்திகளின் அதிகாரி சொரூபத்தில் எப்பொழுதும் சக்திசாலியான நிலையில் நிலைத்திருக்கிறார்.

பிரயோகம் செய்யும் பிரயோகி எப்பொழுதும் ஒவ்வொரு சொரூபத்தின், ஒவ்வொரு (ஞான ) பாயின்ட்டின், ஒவ்வொரு பிராப்தி சொரூபத்தை பிரயோகம் செய்து கொண்டே அந்த நிலையை அனுபவம் செய்கிறார்கள். ஆனால் சில நேரம் வெற்றியை அனுபவம் செய்கிறார்கள், சில நேரம் கஷ்டப்பட்டு முயற்சிக்கும் அனுபவம் செய்கிறார்கள். ஆனால் பிரயோகியாக இருக்கும் காரணத்தினால், புத்தி அப்பியாசம் செய்வதின் பிரயோக சாலையில் பிஸியாகயிருக்கும் காரணத்தினால் 75 சதவிகிதம் மாயாவிடமிருந்து பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்ன காரணம்? பிரயோகி ஆத்மாவிற்கு புதியதிலும் புதிய வேறு வேறு அனுபவம் செய்து பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. இதே ஆர்வத்தில் ஈடுபட்டிருக்கும் காரணத்தினால் பிரயோகசாலையில் மாயாவிடமிருந்து பாதுகாப்பாக இருக்கிறார்கள், ஆனால் ஒரே சீரான நிலையில் இருப்பதில்லை. சில நேரம் அனுபவம் ஆகும் காரணத்தினால் மிகுந்த ஊக்கம், உற்சாகத்தில் ஊஞ்சலாடிக் கொண்டே இருப்பார்கள். மேலும் சில நேரம் விதி மூலம் சித்தியின் பிராப்தி குறைவதால் ஊக்கம், உற்சாகத்தில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. ஊக்கம், உற்சாகம் குறைவதின் காரணமாக கஷ்டப்பட்டு முயற்சிக்கும் அனுபவம் ஏற்படுகிறது. எனவே, சில நேரம் சகஜயோகியாகவும் இருக்கிறார். நான் அதுவாகவே இருக்கிறேன் என்பதற்குப் பதிலாக இருக்கிறேன் இருக்கிறேன் என்பது வந்து விடுகிறது. நான் ஆத்மா நான் குழந்தை நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற இந்த நினைவு மூலம் சித்தியை அடைவதற்கு அடிக்கடி முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது. எனவே சில நேரமோ இந்த நிலையில் நிலைத்திருப்பது என்ன நினைத்தாரோ அது அனுபவம் ஆகும். சில நேரம் அடிக்கடி நினைப்பது மூலம் சொரூபத்தின் அனுபவம் செய்கிறார்கள். இதைத்தான் பிரயோகி ஆத்மா என்று கூறுவது. அதிகாரத்தின் சொரூபம் சகஜயோகி அடிக்கடி பயிற்சி செய்வதின் சொரூபம் பிரயோகி ஆத்மா. இன்று சகஜயோகியார் மற்றும் பிரயோகியார் என்று பார்த்துக் கொண்டிருந்தோம். பிரயோகியும் சில நேரம் சகஜயோகி ஆகிவிடுகிறார். ஆனால் எப்பொழுதும் அல்ல. எந்த நேரம் எந்த பதவி இருக்கிறதோ அதற்குத் தகுந்தாற்போல் ஸ்தூல முகத்தின் ரூபமும் மாறிவிடுகிறது. மனதின் நிலையையும் பார்க்கிறோம். மேலும் முகத்தின் வெளிப்பாட்டையும் பார்க்கிறோம். முழு நாளிலும் எத்தனை ரூபத்தில் மாறுகிறார்கள். தன்னுடைய வித விதமான ரூபத்தை தெரிந்திருக்கிறீர்களா? தன்னை சாட்சியாக இருந்து பார்க்கிறீர்களா? இந்த எல்லைக்கப்பாற்பட்ட காட்சிகளை பாப்தாதா எப்பொழுது விரும்புகிறாரோ அப்பொழுது பார்த்துக் கொண்டே இருக்கிறார்.

எப்படி இங்கு வெளியுலகத்தில் ஒருவரின் விதவிதமான ரூபத்தின் சிரிப்பூட்டும் விளையாட்டை அவர்களே பார்க்கிறார்கள். வெளிநாட்டில் இந்த விளையாட்டு இருக்கிறதா? இங்கு நடைமுறையில் அந்த மாதிரி விளையாட்டை விளையாடுவது இல்லை தான்

இல்லையா ! இங்கேயும் சில நேரம் சுமையின் காரணமாக குண்டாகி விடுகிறார்கள், மேலும் சில நேரம் மிக அதிகம் யோசிக்கும் சம்ஸ்காரத்தின் காரணமாக பொதுவாக இருப்பதை விட உயரமாகி விடுகிறார்கள், மேலும் சில நேரம் மன முடைந்து போகும் காரணத்தினால் தன்னை மிகவும் குள்ளமாக உணர்கிறார்கள். சில நேரம் குள்ளமாகி விடுகிறார்கள், சில நேரம் குண்டாகி விடுகிறார்கள், சில நேரம் உயரமாகி விடுகிறார்கள். இந்த மாதிரியான விளையாட்டு பிடித்திருக்கிறதா?

அனைத்து இரட்டை வெளிநாட்டினரும் சகஜயோகியாகஇன்றைய உங்களுடைய சார்ட்டில் சகஜயோகியினுடையதாக இருந்ததா? பிரயோகம் செய்யும் பிரயோகியாகமட்டும் இல்லை தானே!. இரட்டை வெளிநாட்டினர் நிரந்தரமாக சகஜயோகியாகஇருப்பதற்கான அனுபவத்தை மதுபன்னிலிருந்து எடுத்துச் சென்று கொண்டிருக்கிறீர்களா? நல்லது- சகஜயோகியும் யோகிதான் இதைப் பற்றி பின்னால் கூறுவோம்.

அனைத்து டீச்சர்களும் கீழே ஹாலில் முரளி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்

பாப்தாதாவுடன் பொறுப்பிலிருக்கும் சேவாதாரிகள் என்று கூறினாலும் சரி, பொறுப்பிலிருக்கும் ஆசிரியர் என்று கூறினாலும் சரி, இன்று உடன் இருப்பவர்களின் குரூப்பும் வந்திருக்கிறது தான் இல்லையா? சிறியவர்களோ இன்னும் அதிகம் பிரியமானவர்களாக இருக்கிறார்கள். கீழே இருந்தாலும் அனைவரும் மேலே தான் அமர்ந்திருக்கிறார்கள்,. பாப்தாதா சிறியவர்களாக இருந்தாலும் அல்லது பெரியவர்களாக இருந்தாலும், ஆனால் தைரியம் வைத்து எப்பொழுதும் சேவையின் சேத்திரத்தில் பிஸியாக வைத்திருக்கும் சேவாதாரிகளுக்கு மிகுந்த அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார், எனவே தியாகி ஆகி அனேகர்களின் பாக்கியத்தை உருவாக்குவதற்குப் பொறுப்பாளர் ஆகும் சேவாதாரிகளை தியாகத்தின் விசேஷ ஆத்மாவாகப் பார்க்கிறார். அந்த மாதிரி விசேஷ ஆத்மாக்களுக்கு விசேஷ ரூபத்தில் பாராட்டுக்களுடன் கூடவே அன்பு நினைவுகளும் உரித்தாகுக. இரட்டை அதிசயம் என்ன செய்திருக்கிறீர்கள்? ஒன்று தந்தையைத் தெரிந்து கொண்டதன் அதிசயம் செய்திருக்கிறீர்கள். தூர தேசம், மதத்தின் திரைச்சீலை, பழக்க வழக்கம் வாழ்க்கை நெறிமுறை, உணவுப் பழக்கம் என்ற திரைச் சீலைக்கு நடுவே இருந்து கொண்டும் தந்தையைத் தெரிந்து கொண்டீர்கள். எனவே இரட்டை அதிசயம் செய்திருக்கிறீர்கள். திரைச்சீலைக்குள்ளே மறைந்திருந்தீர்கள். சேவைக்காக இப்பொழுது ஜென்மம் எடுத்திருக்கிறீர்கள். சேவையின் காரணமாக நாலாபுறங்களிலும் பிரிந்து சென்று விட்டீர்கள். இல்லையென்றால் வெளி நாடுகளில் இந்தளவு சேவை எப்படி நடக்கும்?

சேவையின் காரணமாக தன்னுடைய கொஞ்ச காலத்திற்கு மட்டும் பெயரளவில் கணக்கு, வழக்கை இணைத்திருக்கிறீர்கள். எனவே இரட்டை அதிசயம் செய்து காண்பிக்கக் கூடிய, எப்பொழுதும் தந்தையின் அன்பின் தாகமுள்ள சாதகப் பறவைகளுக்கு, எப்பொழுதும் உள்ளத்தில் என்னுடைய பாபா என்ற பாடலைப் பாடக்கூடிய, தெரிந்து கொண்டேன், தெரிந்து கொண்டேன் என்ற எண்ணத்திலேயே 12 மாதங்களும் இருக்கக் கூடிய, அந்த மாதிரி தைரியம் வைத்து, தந்தையின் உதவியாளர் ஆகக் கூடிய குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

சேவாதாரி சகோதரசகோதரிகளுடன் சந்திப்பு :

மஹா யாகத்தின் மஹா சேவையின் பிரசாதத்தை அருந்தினீர்களா? பிரசாதமோஒருபொழுதும் குறையக் கூடியது அல்ல. அந்த மாதிரி அழியாத மஹாபிரசாதத்தைப் பெற்றீர்களா? எத்தனை வகை வகையான பிரசாதம் கிடைத்தது? எப்பொழுதிற்குமான குஷி, போதைஎன்று அப்படி அனைத்து விதமான அனுபவம் என்ற பிரசாதத்தை பெற்றீர்களா? பிரசாதம் அனைவருக்கும் வழங்கி அருந்தப்படும். பிரசாதத்தை கண்ணில் ஒத்திக் கொண்டு, தலையில் ஒத்திக் கொண்டு அருந்துவார்கள். அந்த மாதிரி இந்த பிரசாதமும் கண்களில் நிரம்பி விட வேண்டும். நெற்றியில் நினைவு சொரூபம் ஆகிவிட வேண்டும். அதாவது நிரம்பி விட வேண்டும். அந்த மாதிரி பிரசாதம் இந்த மஹாயாகத்தில் கிடைத்ததா? மஹா பிரசாதத்தைப் பெறுபவர்கள் எவ்வளவு மஹான் பாக்கியவானாக ஆனார்கள். இந்த மாதிரியான பாக்கியம் எத்தனை பேருக்குக் கிடைக்கிறது? மிகக் குறைந்தவர்களுக்குத்தான் கிடைக்கிறது. அந்தக் குறைந்தவர்களில் நீங்களும் இருக்கிறீர்கள். நீங்கள் மஹான் பாக்கியவான் ஆனீர்கள் இல்லையா? எப்படி இங்கு (மதுபன்) தந்தை மற்றும் சேவை இதைத் தவிர வேறு எந்த நினைவும் இருக்கவில்லை. எனவே இங்குள்ள அனுபவத்தை எப்பொழுதும் தக்கம் வைத்துக் கொள்ள வேண்டும். பொதுவாக எங்காவது செல்கிறார்கள் என்றால், விசேஷமாக அங்கிருந்து ஏதாவது நினைவை எடுத்துச் செல்வார்கள். ஆக, மதுபனின் விசேஷ நினைவாக என்ன எடுத்துச் செல்வீர்கள்? நிரந்தரமாக அனைத்து பிராப்தி சொரூபமாகி இருப்பீர்கள். அங்கே சென்ற பிறகும் இந்த மாதிரியே இருப்பீர்களா அல்லது வாயுமண்டலம் அப்படி இருந்தது, உடன் இருந்தவர்கள் அப்படி இருந்தார்கள் என்று கூறுவீர்களா? பரிவர்த்தனை பூமியிலிருந்து பரிவர்த்தனை ஆகிச் செல்லுங்கள். எப்படிப்பட்ட வாயு மண்டலமாக இருந்தாலும் ஆனால் நீங்கள் உங்களுடைய சக்தி மூலம் பரிவர்த்தனை (மாற்றம்) செய்து விடுங்கள். இந்தளவு சக்தி இருக்கிறது தான் இல்லையா? வாயு மண்டலத்தின் பிரபாவம் உங்கள் மேல் வர வேண்டாம். அனைவரும்

சம்பன்னம் ஆகிச் செல்லுங்கள். நல்லது.

மாதர்களுடன் சந்திப்பு :

மாதர்களைப் பொருத்தவரை மிகவும் குஷிக்கான விசயம் ஏனென்றால், தந்தை வந்திருப்பதே மாதர்களுக்காகத்தான். கோபாலனாகி கோமாதாக்களுக்காக வந்திருக்கிறார். இதன் நினைவைத்தான் வர்ணனை செய்திருக்கிறார்கள். உங்களை யாருமே தகுதியானவர்கள் என்று நினைக்கவில்லை. ஆனால் தகுதியானவர்கள் என்று தந்தை உங்களைத் தான் நினைத்தார். இதே குஷியில் எப்பொழுதும் பறந்து கொண்டே இருங்கள், எந்த துக்கத்தின் அலையும் வர முடியாது. ஏனென்றால் சுகக் கடலின் குழந்தையாகி விட்டீர்கள். சுகக் கடலில் மூழ்குபவர்களுக்கு ஒருபொழுதும் துக்கத்தின் அலை வர முடியாது. அந்த மாதிரி சுக சொரூபமாக இருக்கிறீர்கள்.

01.10.2017 காலை முரளி ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா, மதுபன்

ரிவைஸ் 21.01.1983

இன்று பாப்தாதா தனது வலது கரங்களுடன் கை குலுக்குவதற்காக மட்டும் வந்திருக்கிறார். கை குலுக்குவது எத்தனை பேர்களுடன் இருக்கும் ? அனைவரும் கை குலுக்கி விட்டீர்களா? இருந்தும் ஒரு திட எண்ணம் வைத்து உண்மையான பிரிய தர்ஷனின் பிரியதரிஷினியாகவோ ஆகிவிட்டீர்கள். அதனால்தான் உலக சேவைக் காரியத்தை செய்வதற்கு பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள். செய்த உறுதிமொழியில் உறுதியாக இருக்கும் காரணத்தினால் பாப்தாதாவிற்கும் கொடுத்த உறுதிமொழிப்படி நடக்க வேண்டியதாக இருக்கிறது. உறுதிமொழி நிறைவேறி விட்டதுதான் இல்லையா! மிகவும் நெருக்கமான கடவுளின் மிக நெருக்கமான நண்பர்கள், ஏனென்றால், அவருக்குச் சமமாக காரியம் செய்பவர்களாக இருக்கிறீர்கள். எப்படி தந்தை எல்லைக்கப்பாற்பட்ட சேவைக்காக இருக்கிறார், அதே போலவேபெரியவர்கள், சிறியவர்கள் நீங்கள் அனைவரும் எல்லைக்கப்பாற்பட்ட சேவாதரிகள் இன்று முக்கியமாக விசேஷமான சின்னஞ் சிறு நண்பர்களுக்காக வந்திருக்கிறோம், ஏனென்றால், சிறியவர்கள் தான்! ஆனால் பெரிய பொறுப்பை எடுத்திருக்கிறார்கள் இல்லையா? எனவே சின்ன நண்பர்கள் அதிகப் பிரியமானவர்கள். இப்பொழுது புகாரோ ஒன்றும் இல்லைதான் இல்லையா ! நல்லது (சகோதரிகள்- என்ன உறுதிமொழி கொடுத்தீர்களோ, அதை ஏற்று நடக்க வேண்டும் என்ற )

பாடலைப் பாடினார்கள்

பாப்தாதாவே எப்பொழுதும் குழந்தைகளின் சேவையிலேயேதான் மூழ்கியிருக்கிறார். இப்பொழுதும் உடன் இருக்கிறார் மேலும் எப்பொழுதுமே உடன் இருக்கிறார். இருப்பதே இணைந்து தான் என்றால், யாராவது பிரிக்க முடியுமா என்ன? இந்த ஆன்மீக ஜோடி சொரூபம் ஒரு பொழுதும் ஒருவர் இன்னொருவர் விட்டு பிரிய முடியாது. எப்படி பிரம்மா பாபா மற்றும் தாதா இணைந்திருக்கிறார்கள், அவர்களைப் பிரிக்க முடியுமா? அப்படி தந்தையைப் பின்பற்றி நடக்கும் சிரேஷ்ட பிராமணன் மற்றும் தந்தை எப்பொழுதும் இணைந்திருக்கிறார்கள். இந்த வருவது மற்றும் போவதேநாடகத்தில் நாடகம். அதே போல் அனாதி நாடக அனுசாரம் சங்கமயுகத்தில் அனாதி இணைந்த ரூபமாக ஆகியே விட்டீர்கள். எதுவரை சங்கமயுகம் இருக்கிறதோ அதுவரை தந்தை மற்றும் சிரேஷ்ட ஆத்மாக்கள் எப்பொழுதும் உடன் இருக்கிறார்கள், எனவே விளையாட்டில் விளையாடி விரும்பினால் பாட்டு பாடுங்கள், ஆடுங்கள் பாடுங்கள், சிரியுங்கள் கலகலப்பூட்டுங்கள், ஆனால் இணைந்த ரூபத்தை மறக்காதீர்கள். பாப்தாதாவோ மாஸ்டர் ஆசிரியர்களை உயர்ந்த பார்வையில் பார்க்கிறார். பொதுவாகவே அனைத்து பிராமணர்களும் உயர்ந்ததிலும் உயர்ந்தவர்கள், ஆனால் யார் மாஸ்டர் ஆசிரியராகி உள்ளப்பூர்வமாக உயிருக்கும் மேலாக மிக அன்புடன், இரவு பகலாக உண்மையான சேவகனாகி சேவை செய்கிறார்களோ அவர்கள் விசேஷத்திலும் விசேஷமானவர்கள் !. இந்தளவு தன்னுடைய சுயகௌரவத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொண்டு எண்ணம், சொல் மற்றும் செயலில் வாருங்கள். நான் கண்களின் மணியாவேன் என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். நான் நெற்றியின் மணி, கழுத்தின் வெற்றி மாலையின் மணி மற்றும் தந்தையின் உதடுகளின் புன்சிரிப்பாவேன். அந்த மாதிரி நாலாபுறங்களிலிருந்தும் வந்திருக்கும் அனைத்து சின்னஞ்சிறு மற்றும் பெரிய மிகப்பிரியமான நண்பர்களுக்கு மற்றும் வந்திருக்கும் அனைத்து குழந்தைகளும் தங்கள் தங்கள் பெயரில் நினைவை ஏற்றுக் கொள்ளுங்கள். கீழே அமர்ந்திருந்தாலும் அல்லது மேலே அமர்ந்திருந்தாலும், கீழே அமர்ந்திருப்பவர்களும் கண்களில் தான் இருக்கிறார்கள், மேலும் மேலே இருப்பவர்கள் கண்களின் எதிரில் இருக்கிறார்கள், எனவே இப்பொழுது உறுதிமொழியை நிறைவேற்றியிருக்கிறோம். இப்பொழுது அனைத்து நண்பர்களுக்கும் அனைத்து உடன் இருப்பவர்களுக்கும் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

கொஞ்சம், கொஞ்சம் சந்திப்பது நல்லது நீங்கள் அனைவரும் இந்தளவு தான் உறுதிமொழி செய்தீர்கள். (பாடல்- விட்டு விட்டு இப்பொழுது செல்லாதீர்கள், இன்னும் இதயம்

நிரம்பவில்லை) இதயம் நிரம்பக்கூடியதா என்ன எப்போதாவது? இந்த மாதிரி எவ்வளவு சந்திப்பீர்களோ அவ்வளவு இதயம் நிரம்பும். நல்லது. (தீதி அவர்களைப் பார்த்து) நன்றாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? சாகாரத்தில் இருந்தபோது தீதியிடம் உறுதிமொழி கொடுத்திருக்கிறோம். அதையும் ஏற்றுச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இதயம் நிரம்பி விட்டது என்றால் பிறகு காலி செய்ய வேண்டியதாக இருக்கும், எனவே நிரம்பிக் கொண்டே இருக்கிறது என்றால் அது சரிதான்.

தீதி அவர்களுடன் சந்திப்பு :

இவர்களுடைய எண்ணம் அதிகம் வந்து கொண்டிருந்தது. சின்னஞ்சிறு சகோதரிகள் உங்கள் மேல் தாதி மற்றும் தீதிக்கு மிகுந்த அன்பு இருக்கிறது. பொறுப்பிலிருக்கும் தாதி தீதிக்கு உங்கள் மேல் விசேஷ அன்பு இருக்கிறது. நன்றாகச் செய்தீர்கள், பாப்தாதாவும் பாராட்டுக்கள் தெரிவிக்கிறார். எந்த அன்பின் காரணமாக உங்கள் அனைவருக்கும் இந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அந்த அன்புடன் சந்திப்பும் நடந்தது. நியமப்பிரகாரம் வருவது ஒன்றும் பெரிய விசயமில்லை. இதுவும் விசேஷ அன்பின், விசேஷ சிநேகத்தின் பிரதிபலன் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே எந்த ஊக்கத்தோடு நீங்கள் அனைவரும் வந்திருக்கிறீர்கள். நாடகத்தில் உங்கள் அனைவருக்கும் மிக நல்ல பொன்னான வாய்ப்பாக இருந்தது. எனவே அனைவரும் கோல்டன் சான்ஸ்லர் ஆகிவிட்டீர்கள் இல்லையா ! அவர் வெறும் சான்ஸ்லராக மட்டும் இருப்பார்கள், நீங்கள் கோல்டன் சான்ஸ்லர். நல்லது.

வரதானம் :

அனைத்து பொக்கிஷங்களையும் விதிப்பூர்வமாக சேமிப்பு செய்து சம்பூர்ணத்தின் சித்தியை (வெற்றியை) அடையக் கூடிய சித்தி சொரூபமானவர், (வெற்றி சொரூபமானவர்) ஆகுக!

63 ஜென்மங்கள் அனைத்து பொக்கிஷங்களையும் வீணாக இழந்தீர்கள். இப்பொழுது சங்கமயுகத்தில் அனைத்து பொக்கிஷங்களையும் யதார்த்த விதிப்பூர்வமாக சேமிப்பு செய்யுங்கள். சேமிப்பு செய்வதற்கான விதி- என்னென்ன பொக்கிஷங்கள் இருக்கின்றனவோ அவற்றை தனக்காகவும் மேலும் மற்றவர்களுக்காகவும் நல்ல உள்உணர்வோடு காரியத்தில் ஈடுபடுத்துங்கள். புத்தி என்ற பாதுகாப்பு பெட்டகத்தில் மட்டும் சேமிப்பு செய்யாதீர்கள், ஆனால் பொக்கிஷங்களை காரியத்தில் ஈடுபடுத்துங்கள். அவற்றை தனக்காகவும் உபயோகப்படுத்துங்கள், இல்லையென்றால் விரயம் ஆகிவிடும். எனவே, யதார்த்த விதியோடு

சேமிப்பு செய்தீர்கள் என்றால், சம்பூர்ண நிலையின் சித்தியை அடைந்து சித்தி சொரூபம் ஆகிவிடுவீர்கள்.

சுலோகன் :

பரமாத்மா அன்பின் அனுபவம் இருக்கிறது என்றால், எந்த ஒரு தடையும் நிறுத்த முடியாது.

ஓம்சாந்தி

26.01.1983 காலை முரளி ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

### வள்ளலின் குழந்தைகள் ஆகி அனைவருக்கும் சகயோகம் கொடுங்கள்.

இன்று பாப்தாதா தன்னுடைய சேவாதாரி துணையானவர்களைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். எப்படி தந்தை உயர்ந்ததிலும் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்து கொண்டு எல்லைக்கப்பாற்பட்ட சேவைக்காக பொறுப்பாளராக இருக்கிறார், அதே போல் நீங்கள் அனைவரும் இவ்வுலகில் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்துக் கொண்டு எல்லைக்கப்பாற்பட்ட சேவைக்காக பொறுப்பாளர்களாக இருக்கிறீர்கள். அந்த ஸ்தானத்தின் பக்கம் தான் அனேக ஆத்மாக்களின் பார்வை இருக்கிறது. எப்படி தந்தையின் யதார்த்த ஸ்தானத்தை தெரிந்திருக்காவிட்டாலும் அனைவரின் பார்வை இருந்தும் மேல் பக்கம் தான் செல்கிறது, அதே போல் இவ்வுலகில் அனைத்து ஆத்மாக்களின் பார்வை இந்த மஹான் ஸ்தானத்தின் மேல் தான் சென்று கொண்டிருக்கிறது. மேலும் செல்லும் இதுவரையிலும் எங்கே இருக்கிறது? என்ற இதே தேடுதல் இருக்கிறார்கள். ஏதாவது உயர்ந்த புகடலிம் கிடைக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அதுவே இந்த இடம் என்று தெரிந்து கொள்வதற்காக நாலாபுறங்களிலும் அறிமுகம் கொடுக்கும் சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். இந்த எல்லைக்கப்பாற்பட்ட விசேஷ காரியம் தான், கிடைக்க வேண்டும் அல்லது அடைய வேண்டும் என்றால் இங்கிருந்து தான் என்று இந்த சேவையை பிரசித்தியாக்கும். இது தான் நம்முடைய சிரேஷ்ட புகடலிம்.உலகின் இந்த மூலையிலிருந்து தான் நிரந்தரமான வாழ்க்கையின் தானம் கிடைக்கும். இந்த எல்லைக்கப்பாற்பட்ட காரியம் மூலமாக இந்த விளம்பரம் விசால ரூபத்தில் ஆகும். எப்படி நிலத்திற்கடியில்புதைந்திருந்த, மறைந்திருந்த பொருள் திடீரென்று கிடைத்து விட்டால் மிகவும் குஷியோடு அனைத்து பக்கங்களிலும் பிரச்சாரம் செய்வார்கள். அதே போலவே இப்பொழுது குப்தமாக (மறைவாக) இருக்கும் ஆத்மீக பொக்கிஷங்கள் கிடைக்கும் ஸ்தானத்தை அனுபவத்தின் கண்கள் மூலமாகப் பார்த்து, இழந்த மற்றும் தொலைத்து விட்ட குப்த பொக்கிஷங்களின் ஸ்தானம் மீண்டும் கிடைத்து விட்டது என்று நினைப்பார்கள். மெது, மெதுவாக அனைவரின் மனதிலிருந்தும், வாயிலிருந்தும் இந்த மாதிரியான மூலையில் இவ்வளவு பிராப்திக்கான ஸ்தானம் இருக்கிறது என்ற வார்த்தை வெளியாகும். இதையோமிக அதிகமாக பிரசித்த ஆக்குங்கள். பிறகு விசித்திர தந்தை, விசித்திர லீலை, மற்றும் விசித்திர ஸ்தானம், இதைப் பார்த்துப் பார்த்தே மகிழ்ச்சியடைவார்கள்,. அதிசயமான விஷயம், அதிசயக்

காரியம் என்று அனைவரிடமிருந்து இதைத் தான் கேட்டுக் கொண்டே இருப்பீர்கள், அந்த மாதிரி சதாக் கால அனுபவம் செய்விப்பதற்காக என்ன என்ன தயார் செய்திருக்கிறீர்கள்?

ஹாலையோ (பெரிய அறை) தயார் செய்து கொண்டிருக்கிறீர்கள், ஹாலின் கூடவே நடைத்தையும் சரியாக இருக்கிறதா? ஹாலின் கூடவே நடத்தையும் பார்ப்பார்கள் இல்லையா! ஹாலும் மற்றும் சாலும் (நடத்தை) எல்லைக்கப்பாற்பட்ட மற்றும் விசாலமாக இருக்கிறது தான் இல்லையா! எப்படி வேலையாட்களிலிருந்து பெரிய பெரிய பொறியாளர்கள் இருவர்களின் சகயோகம் மற்றும் அனைவரும் குழுவாக இருந்து ஹாலின் அழகான ரூபத்தை தயார் செய்திருக்கிறீர்கள். ஒருவேளை வேலை செய்பவர்கள் இல்லையென்றால் பொறியாளர்களும் என்ன செய்ய முடியும்! அவர்கள் காகிதத்தில் கட்டிட வடிவத்தை வரைய முடியும். ஆனால் அதன் நடைமுறை சொரூபமோஇந்த வேலை செய்பவர்கள் இல்லாமல் ஆகாது தான் இல்லையா! எப்படி ஸ்தூல சகயோகத்தின் ஆதாரத்தில் ஒவ்வொருவரும் விரல் கொடுத்ததினால் ஹால் தயாராகி விட்டது. அந்த மாதிரி ஹாலின் கூடவே அதிசயமான நடத்தையைக் காண்பிப்பதற்காக அந்த மாதிரியான விசேஷ சொரூபத்தை பிரத்யக்ஷ ரூபத்தில் காண்பியுங்கள். புத்தியில் எண்ணத்தை மட்டும் வைத்தீர்கள் என்றிருக்க வேண்டாம். ஆனால் எப்படி பொறியாளரின் புத்தியின் உதவி மற்றும் வேலையாட்கள் செய்த வேலையின் உதவி மூலம் காரியம் நிறைவேறியது. இதே முறையில் மனதின் சிரேஷ்ட எண்ணத்தின் கூடவே ஒவ்வொரு காரியம் மூலமாகவும் விசித்திர நடவடிக்கைகளின் அனுபவம் ஆகவேண்டும். ஒவ்வொரு காரியம் மூலமாகத்தான் பிரத்யக்ஷ சொரூபம் தென்படும். எனவே அந்த மாதிரி நடப்பது மற்றும் செய்வதை எண்ணம், வார்த்தை, கை மற்றும் கால் மூலம் குழு ரூபத்தில், விசித்திர சொரூபம் மூலம் காண்பிப்பதற்காக எண்ணத்தை வைத்தீர்களா? அந்த மாதிரியான நடத்தைக்கான வரைபடத்தைத் தயார் செய்திருக்கிறீர்களா? 3 ஆயிரம் பேர் அமர்ந்திருக்கும் சபை மட்டுமல்ல, ஆனால் 3 ஆயிரத்தில் எப்பொழுதும் மும்மூர்த்திகள் தென்பட வேண்டும். இவர்கள் அனைவரும் பிரம்மாவிற்குச் சமமாக கர்மயோகி, விஷ்ணுவிற்குச் சமமாக அன்பு மற்றும் சக்தி மூலம் பாலனை செய்பவர்கள், சங்கருக்குச் சமமாக தபஸ்யாவின் வாயுமண்டலத்தை உருவாக்குபவர்கள் என்று ஒவ்வொருவர் மூலமாக அனுபவம் ஆகவேண்டும். அந்த மாதிரி தனக்குள் அனைத்து சக்திகளின் ஸ்டாக்கை(கையிருப்பை) சேமித்திருக்கிறீர்களா? இந்த பண்டாராவையும் நிரப்பியிருக்கிறீர்களா? இந்த மாதிரி பிஸியாகி விட்டீர்களா?

சேவையின் அழியாத வெற்றிக்காக தன்னுடைய விசேஷ எந்த பரிவர்த்தனையின் (மாற்றம்)

ஆஹுதி (அர்ப்பணம்) போடுவீர்கள்? அப்படி தனக்குத் தானே திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்களா? அனைத்தையும் விட மிகப்பெரிய கொடைவள்ளலின் குழந்தையாகி அனைவருக்கும் சகயோகம் கொடுப்பது. கெட்டுப் போனகாரியத்தை, கெட்டுப் போன சமஸ்காரத்தை, கெட்டுப்போன மனநிலையை, சுபபாவனை வைத்து பரிவர்த்தனை செய்வதில் எப்பொழுதும் அனைவரின் சகயோகி ஆவது என்ற இது தான் அனைத்தையும் விட மிகப்பெரிய கொடைஇவர் இதைச் சொன்னார், இதைச் செய்தார் என்பதை பார்த்தும், கேட்டும், புரிந்து கொண்ட போதிலும் தன்னுடைய சகயோகத்தின் கையிருப்பு மூலமாக பரிவர்த்தனை செய்து விடுவது. எப்படி ஏதாவது காலி இடம் இருக்கிறது என்றால் அனைத்து விதமான சேவை செய்பவர் நேரத்திற்கு தகுந்தாற் போல் இடத்தை நிரப்பி விடுவார், அந்த மாதிரி ஒரு வேளை யார் மூலமாவது ஏதாவது சக்தியின் குறை அனுபவம் ஆகிறதுஎன்றாலும் தன்னுடைய சகயோகம் மூலம் மற்றவர்களின் குறை கூட வேறு யாருக்கும் அனுபவம் ஆக வேண்டாம். இதைத் தான் வள்ளலின் குழந்தையாகி நேரத்திற்குத் தகுந்தபடி அவருக்கு சகயோகத்தின் கொடைகொடுப்பது. இவர் இதைச் செய்தார், அந்த மாதிரி செய்தார் என்று யோசிக்காதீர்கள், ஆனால் என்ன நடக்க வேண்டுமோ, அதைச் செய்து கொண்டே இருங்கள். யாருடைய குறையையும் பார்க்காதீர்கள், ஆனால் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். நல்லதிலும் நல்லதாக என்ன நடக்க முடியுமோ, அதை யோசிக்க மட்டும் கூடாது, ஆனால் செய்ய வேண்டும். இதைத் தான் விசித்திர நடவடிக்கையின் பிரத்யக்ஷ சொரூபம் என்று கூறுவது. எப்பொழுதும் மிக நல்லது நடந்து கொண்டிருக்கிறது. மேலும் எப்பொழுதும் மிக நல்லது செய்து கொண்டிருக்க வேண்டும் என்ற இந்த சக்திசாலியான எண்ணத்தைத் தான் தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டும், வர்ணனை மட்டும் செய்ய வேண்டாம். ஆனால் நிவாரணம் செய்து கொண்டே, புதுப் படைப்பின் காரியத்தின் வெற்றியை பார்த்துக் கொண்டும், காண்பித்துக் கொண்டும் இருக்க வேண்டும், அந்த மாதிரி ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கிறது தான் இல்லையா? ஏனென்றால் அனைவரின் பொறுப்பு இருந்த போதிலும் விசேஷமாக மதுபன் நிவாசிகளுக்கு பொறுப்பு இருக்கிறது. இரட்டை பொறுப்பை எடுத்திருக்கிறீர்கள் தான் இல்லையா? எப்படி ஹாலின் திறப்பு விழா ஆகிவிட்டது என்றால் (நன்) நடத்தையின் துவக்க விழாவும் ஆகிவிட்டதா? அதன் ஒத்திகையும் நடந்ததா அல்லது இல்லையா? இரண்டின் இணைதல் ஆனால் தான் வெற்றி முழக்கம் நாலா புறங்களின் வரை சென்றடையும். எவ்வளவு உயர்ந்த ஸ்தானமாக இருக்கிறதோ அந்தளவு ஒளி நாலாபுறங்களிலும் அதிகமாகப் பரவும். இதுவோ அனைத்தையும் விட உயர்ந்த ஸ்தானம். எனவே இங்கிருந்து வெளிப்படும் ஓசை நாலாபுறங்கள் வரை சென்றடைய வேண்டும். அதற்காக லைட் -மைட் ஹவுஸ் ஆக வேண்டும். நல்லது.

எப்பொழுதும் தன்னை ஒவ்வொரு குணம், ஒவ்வொரு சக்தி சம்பன்னமாக்கி சாட்சாத் தந்தை சொரூபமாகி அனைவருக்கும் சாட்சாத்காரம் செய்விக்கக் கூடிய, எப்பொழுதும் விசித்திர நிலையில் நிலைத்திருந்து சாகார சித்திரம் அதாவது ஸ்தூல உடல் மூலமாக தந்தையை பிரத்யக்ஷம் செய்யக் கூடிய, மிக உயர்ந்த நிலை மூலமாக மிக உயர்ந்த ஸ்தானத்தை, மிக உயர்ந்த பிராப்திகளின் களஞ்சியத்தை பிரத்யக்ஷம் செய்யக்கூடிய, அனைவரின் மனதிலிருந்து கிடைத்து விட்டது, அடைந்து விட்டோம் என்ற பாடல் வெளியாவதற்கான சுபபாவனை மற்றும் சுப விருப்பங்கள் வைக்கக் கூடிய, அந்த மாதிரி மிக சிரேஷ்டமான எல்லைக்கப்பாற்பட்ட சேவாதரிகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

மதுபன் நிவாசிகளுடன் சந்திப்பு:

வரதான பூமியில் இருப்பவர்களுக்கு எப்பொழுதும் திருப்தியாக இருப்பதற்கான வரதானம் கிடைத்திருக்கிறது தான் இல்லையா, யார் எந்தளவு தன்னை அனைத்து பிராப்திகளினால் நிரம்பியவராக அனுபவம் செய்வாரோ, அவர் எப்பொழுதும் திருப்தியாக இருப்பார். ஒருவேளை கொஞ்சமாவது குறைவின் உணர்வு ஏற்பட்டது என்றால், எங்கு குறை இருக்கிறதோ, அங்கு அதிருப்தி இருக்கும். உங்களுக்கு அனைத்து பிராப்திகளும் இருக்கிறது தான் இல்லையா? இருந்தாலும் எண்ணத்தின் சித்தியோ ஆகிக் கொண்டிருக்கிறது தான் இல்லையா? கொஞ்சம் கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால் நம்முடைய இராஜ்யமே இல்லையே, எந்தளவு மற்றவர்களின் எதிரில் பிரச்சனை வருகிறதோ, அந்தளவு இங்கு இல்லை, இங்கு பிரச்சனையோ ஒரு விளையாட்டாகி விட்டது. இருந்தாலும் தேவையான நேரத்தில் மிகுந்த சகயோகம் கிடைத்துக் கொண்டே இருந்தது. ஏனென்றால் தைரியம் வைத்தீர்கள். எங்கு தைரியம் இருக்கிறதோ, அங்கு சகயோகம் கிடைத்தே விடுகிறது. தன்னுடைய மனதில் எந்த சஞ்சலமும் இருக்கக் கூடாது. மனம் எப்பொழுதும் லேசாக இருப்பதினால் அனைவரிடமும் உங்களுக்காக லேசான நிலை இருக்கும். கொஞ்சம் கணக்கு வழக்கோ இருக்கத்தான் செய்யும், ஆனால் அந்த கணக்கு வழக்குகளையும் ஒன்றும் பெரிய விஷயமில்லை என்று கடந்து விடுங்கள். சின்ன விஷயத்தை பெரியதாக்காதீர்கள். சிறியதாக்குவது அல்லது பெரியதாக்குவது தன் புத்தியை பொறுத்து இருக்கிறது. இப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட சேவை செய்வதற்கான நேரம் என்றால், புத்தியையும் எல்லைக்கப்பாற்பட்டதாக வையுங்கள். சூழ்நிலையை சக்திசாலி ஆக்க வேண்டியதை ஒவ்வொரு ஆத்மாவும் தன்னுடைய பொறுப்பு என்று புரிந்து கொள்ள வேண்டும். எப்பொழுது ஒருவர் இன்னொருவரின் சுபாவம், சம்ஸ்காரத்தைத் தெரிந்து கொண்டீர்கள் என்றால், ஞானம் நிறைந்தவர் ஒரு பொழுதும் யாருடைய சுபாவம் எப்படி இது குழி, இது மலை என்று

ஒருவருக்கு தெரிகிறது என்றால் அவ்வாறு தெரிந்திருப்பவர் ஒருபோதும் அதோடு மோத மாட்டார். ஒதுங்கிச் சென்று விடுவார். அந்த மாதிரி தன்னை எப்பொழுதும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். எப்பொழுது ஒருவர் மோதவில்லை என்றால் இன்னொருவர் தானாகவே பாதுகாப்பாகி விடுவார். ஒதுங்கி விடுங்கள் என்றால், தன்னை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள் என்பதாகும். செய்ய வேண்டிய காரியத்திலிருந்து ஒதுங்கக் கூடாது. தன்னுடைய பாதுகாப்பு சக்தியினால் மற்றவர்களையும் பாதுகாக்க வேண்டும், இது தான் ஒதுங்கி விடுவது. அந்த மாதிரி சக்தியோ வந்து விட்டது தான் இல்லையா?

சாகார ரூபத்தில் பின்பற்றி நடப்பதின் கணக்குப்படி அனைவருக்கும் மதுபன் தான் தென்படுகிறது, ஏனென்றால் உயர்ந்த ஸ்தானம். மதுபன்னை சேர்ந்தவர்களோ எப்பொழுதும் ஊஞ்சலில் ஆடிக்கொண்டே இருக்கிறார்கள். இங்கேயோ அனைத்தும் ஊஞ்சல், ஸ்தூல பிராப்தியும் அதிகம், எப்பொழுதும் ஊஞ்சலில் இருந்தீர்கள் என்றால் தவறுகள் நடக்காது. பிராப்தி என்ற ஊஞ்சலிருந்து இறங்கினீர்கள் என்றால் தன்னுடைய மேலும் மற்றவர்களின் தவறும் தென்படும். ஊஞ்சலில் அமருவதினால் பூமியை விட வேண்டியதாக இருக்கும். மதுபனைச் சேர்ந்தவர்களோ, அனைத்து பிராப்திகள் என்ற ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருக்கிறார்கள். பிராப்தியின் ஆதாரத்தில் மட்டும் வாழ்க்கை இருக்க வேண்டாம். பிராப்தி உங்கள் எதிரில் வந்தாலும் நீங்கள் பிராப்தியை ஏற்றுக் கொள்ளாதீர்கள். ஒரு வேளை இச்சை வைத்தீர்கள் என்றால், அனைத்து பிராப்திகளும் இருந்த போதிலும் குறைவின் உணர்வும் ஏற்படும். தன்னை எப்பொழுதும் காலியாக இருப்பதாக நினைப்பார்கள். உழைக்காமல் பிராப்தி அதுவாக தானாகவே வருகிறது. அந்த மாதிரி பாக்கியம் இருக்கிறது. எனவே இந்த பாக்கியத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். எந்தளவு நீங்கள் சுய நலமற்றவராக ஆவீர்களோ அந்தளவு பிராப்தி உங்கள் எதிரில் தானாகவே வரும். நல்லது.

சேவாதாரிகளுடன் சந்திப்பு :

சேவாதாரியின் அர்த்தமே பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை அருந்துபவர். சேவை செய்தீர்கள், குஷியின் அனுபவம் ஆனது என்றால், இந்த பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை சாப்பிட்டீர்கள் இல்லையா! சேவாதாரி ஆவது என்றால் இதுவோ மிகப்பெரிய பாக்கியத்தின் அடையாளம். பல ஜென்மங்களுக்கு தன்னை இராஜ்ய அதிகாரி ஆக்குவதற்கான சாதனம். எனவே சேவை செய்வது என்றால் பாக்கிய நட்சத்திரம் மின்னுவது. அந்த மாதிரி புரிந்து கொண்டு சேவை செய்கிறீர்கள் தான் இல்லையா. சேவை என்று படுகிறதா அல்லது பிராப்தி என்று படுகிறதா? பெயர் சேவை ஆனால் இது சேவை செய்வதில்லை, கிடைப்பது எவ்வளவு கிடைக்கிறது?

செய்வது ஒன்றும் இல்லை, ஆனால் கிடைப்பது அனைத்தும். செய்வதில் அனைத்து சுகத்தின் சாதனம் கிடைக்கிறது. ஏதாவது கஷ்டப்பட்டு செய்ய வேண்டியதில்லை. எவ்வளவு தான் கடின வேலையாக இருந்தாலும், வசதிகளும் கூடவே கிடைக்கிறது, எனவே அது கடின வேலையாகப் படுவதில்லை, விளையாட்டு மாதிரி இருக்கிறது, எனவே சேவாதாரி ஆவது என்றால் பிராப்திகளின் அதிபதி ஆவது. முழு நாளில் எவ்வளவு பிராப்தி செய்கிறீர்கள்? ஒவ்வொரு நாளின், ஒவ்வொரு மணி நேரத்தின் பிராப்தியை ஒரு வேளை கணக்கு போட்டுப் பார்த்தீர்கள் என்றால், எண்ணிலடங்காததாக இருக்கும், எனவே சேவாதாரி ஆவது பாக்கியத்தின் அடையாளம். சேவைக்கான வாய்ப்பு கிடைத்தது என்றால், பிராப்தியின் களஞ்சியம் நிரம்பி விட்டது. ஸ்தூல பிராப்தியும் இருக்கிறது. சூட்சம பிராப்தியும் இருக்கிறது. எங்கேயாவது ஏதாவது சேவை செய்தீர்கள் என்றால் எவ்வளவு ஸ்தூல சாதனம் மதுபன்னில் கிடைக்கின்றனவோ, அந்த அளவு மற்ற இடங்களில் கிடைப்பதில்லை, இங்கு சேவையின் கூடவே முதலிலோ தன்னுடைய ஆத்மாவிற்கு, உடலுக்கு பாலனை கிடைக்கிறது, இரட்டை பாலனை கிடைக்கிறது. அதனால் சேவை செய்து குஷி ஏற்படுகிறதா அல்லது களைப்பு ஏற்படுகிறதா? சேவை செய்து கொண்டிருக்கும் பொழுது நான் இரட்டை சேவை செய்து கொண்டிருக்கிறோனா என்று சோதனைசெய்யுங்கள். மனசக்தி மூலமாக வாயு மணடலத்தை சிரேஷ்டமாக்குவதற்கு மற்றும் காரியங்கள் மூலமாக ஸ்தூல சேவை செய்ய வேண்டும்,. ஒரு சேவை மட்டும் செய்யக் கூடாது. ஒரே நேரத்தில் இரட்டை சேவாதாரி ஆகி தன்னுடைய இரட்டை வருமானத்திற்கான வாய்ப்பை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அனைவரும் திருப்தியாக இருக்கிறீர்களா? அனைவரும் அவரவர்களின் காரியத்தில் தடையற்று நல்ல முறையில் இருக்கிறீர்களா? எந்தக் காரியத்திலும் எந்தப் பிரச்சனையும் இல்லையே? நீங்கள் உங்களுக்குள் எந்தப் பிரச்சனையும் செய்வதில்லையே? எப்போதாவது என்னுடையது, உன்னுடையது, நான் செய்தேன், நீ செய்தாய், என்ற இந்த மாதிரி எண்ணங்கள் வருவதில்லையே? ஏனென்றால் ஒரு வேளை, செய்தீர்கள் மேலும் நான் செய்தேன் என்பது எண்ணத்தில் வந்தது என்றால் கூட அனைத்தும் முடிவடைந்து விட்டது. நான், எனது என்று வருவது என்றால் செய்த அனைத்துக் காரியத்திலும் தண்ணீர் ஊற்றி விடுவது. அந்த மாதிரி செய்வதில்லையே? சேவாதாரி என்றால் செய்விப்பவர் தந்தை கருவியாக்கி செய்வித்துக் கொண்டிருக்கிறார். செய்விப்பவரை மறக்காதீர்கள். எங்கு நான், எனது என்பது வருகிறது என்றால் மாயாவும் வந்தது. கருவியாக இருக்கிறேன். பணிவாக இருக்கிறேன் என்றால் மாயா வரமுடியாது. எண்ணத்திலும், கனவிலும் மாயா வருகிறது என்றால் எங்கேயோ நான், எனது என்ற வாசல் திறந்திருக்கிறது. நான், எனது என்ற வாசல் மூடி இருந்தது என்றால் மாயா வர முடியாது. நல்லது.

வரதானம்:

தன்னுடைய லேசாக இருக்கும் நிலை மூலமாக ஒவ்வொரு காரியத்தையும் லேசாக ஆக்கக்கூடிய தந்தைக்குச் சமமாக விலகி இருந்து, அன்பாக இருப்பவர் ஆகுக !

ஆத்மாவின் சூட்சம சக்திகளான மனம், புத்தி, சம்ஸ்காரத்தில் லேசான நிலையை அனுபவம் செய்வது தான் தந்தைக்குச் சமமாக விலகியிருபவர் மற்றும் அன்பானவராக ஆவது ! ஏனென்றால், நேரத்திற்குத் தகுந்தாற்போல் வெளியுலகின் மிகத்தாழ்ந்த சூழ்நிலை மனித ஆத்மாக்களின் உள் உணர்வில் சுமை இருக்கும், எந்தளவு வெளியுலக சூழ்நிலை சுமையானதாக இருக்குமோ அந்தளவு குழந்தைகளின் மனோ நிலை லேசானதாக ஆகிக் கொண்டேஇருக்கும், மேலும் லேசான நிலை காரணமாக அனைத்துக் காரியங்களும் லேசாக நடந்து கொண்டே இருக்கும். காரிய விவஹாரங்களின் பிரபாவம் உங்கள் மேல் ஏற்படாது. இந்த நிலைதான் தந்தைக்குச் சமமான நிலை என்று கூறப்படுகிறது.

சுலோகன்:

ஆஹா நான் என்ற இந்த ஆன்மீக போதையிலேயேஇருந்தீர்கள் என்றால் மனம் மற்றும் உடல் இயற்கையாகவே நடனம் நடந்து கொண்டே இருக்கும்.

ஓம்சாந்தி

15.02.1983 காலை முரளி ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

---

உலக அமைதி மாநாட்டின் நிறைவு விழாவில்

அவ்யக்த பாப்தாதாவின் விலை மதிப்பில்லா மகாவாக்கியம்

இன்று எல்லைக்கப்பாற்பட்ட தந்தை சேவைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் சேவாதாரி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். எந்தக் குழந்தையைப் பார்த்தாலும் ஒவ்வொருவரும் இன்னொருவரை விட சிரேஷ்ட ஆத்மாவாக இருக்கிறார். பாப்தாதா ஒவ்வொரு சிரேஷ்ட ஆத்மாவின், சேவாதாரி ஆத்மாவின் விசேஷத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையும் இந்த உலக மாற்றக் காரியத்தில் ஆதாரமானவர்களாக, முன்னேற்றம் செய்பவர்களாக இருக்கிறார்கள் என்று பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அனைத்துக் குழந்தைகளும் பாப்தாதாவின் காரியத்தில் எப்பொழுதும் சகயோகி ஆத்மாக்கள். அந்த மாதிரி சகயோகி, சகஜயோகி சிரேஷ்ட, விசேஷ ஆத்மாக்களை மற்றும் சேவைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா பெரிய மலர்களால் குழந்தைகளின் வரவேற்பு மற்றும் பாராட்டு விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையையும் பாப்தாதா நெற்றியின் மணி, திருப்தி மணி, இதய மணி என்று மன்னிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறார். பாப்தாதாவும் எப்பொழுதும் ஒரு பாடலைப் பாடிக் கொண்டிருக்கிறார். எந்தப் பாடலைப் பாடிக் கொண்டிருக்கிறார். எந்தப் பாடல் பாடுகிறார் என்று அதைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? ஆஹா, என்னுடைய குழந்தைகளே!, ஆஹா மிக அன்பான குழந்தைகளே! ஆஹா, ஆஹா சிரேஷ்ட ஆத்மாக்களே! ஆகா என்ற இந்தப் பாடலைத் தான் பாடுகிறோம். அந்த மாதிரியே நிச்சயம் மற்றும் போதை எப்பொழுதும் இருக்கிறது தான் இல்லையா! பகவான் குழந்தைகளே மகிமை செய்து பாடல் பாடுவது என்ற அந்த மாதிரி பாக்கியத்தை முழுக் கல்பத்திலும் அடைய முடியாது. பக்தர்கள் பகவானின் மகிமை செய்து அதிகம் பாடல் பாடுகிறார்கள். நீங்கள் அனைவரும் கூட மிக அதிகமாகப் பாடல்களைப் பாடினீர்கள். ஆனால் பகவானும் என்னை மகிமை செய்து பாடல் பாடுவார் என்று எப்பொழுதாவது நினைத்திருந்தீர்களா? எதை நினைத்தே பார்க்கவில்லையோ அதை நடை முறையில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உலக அமைதி மாநாட்டை நடத்தி விட்டீர்கள். அனைத்துக் குழந்தைகளும் பேசும் போது மிக நல்ல நல்ல விஷயங்களைக்

கூறினார்கள் மேலும் மனதால் அனைத்து ஆத்மாக்களுக்காக சுபபாவனை மற்றும் சிரேஷ்ட விருப்பங்களின் நல்எண்ணங்களின் வைப்ரேஷனையும் (எண்ண அலை களையும்) ஞான சூரியனாகி நாலாபுறங்களிலும் பரப்பினீர்கள். ஆனால் பாப்தாதா சொற்பொழிவு நிகழ்த்தியவர்கள் கூறிய விஷயத்தின் சாரத்தைக் கூறிக் கொண்டிருக்கிறார். நீங்களோ நான்கு நாட்கள் சொற்பொழிவு நிகழ்த்தினீர்கள். மேலும் பாப்தாதா ஒரு நொடி நேரத்தில் சொற்பொழிவு நிகழ்த்துகிறார். அந்த இரண்டு வார்த்தைகள் ரியலைசேஷன் (உணருதல்) மற்றும் சொலுயூஷன் (தீர்வுகானல்) என்னவெல்லாம் நீங்கள் அனைவரும் கூறினீர்களோ அதனுடைய சாரம் ரியலைசேஷன் தான். ஆத்மாவைப் புரிந்து கொள்ளா விட்டாலும் மனிதனின் மதிப்பை தெரிந்தார்கள் என்றாலும் அமைதி வந்து விடும். மனிதன் விசேஷ சக்திசாலியான சொரூபம். ஒருவேளை இதையும் உணர்ந்து விட்டார் என்றால் மனிதன் என்ற கணக்குப்படி மனித தர்மம் அன்பே அன்றி சண்டை சச்சரவு அல்ல. இதற்கும் மேலே செல்லுங்கள். மனித வாழ்க்கையின் மற்றும் மனித தன்மையின் ஆதாரம் ஆத்மா மீது இருக்கிறது. நான் எந்த ஆத்மா, என்னவாக இருக்கிறேன், என்ற இதை உணர்ந்து விட்டால் கூட இயற்கையான குணமான அமைதி வந்து விடும். இன்னும் மேலே செல்லுங்கள் - நான் சிரேஷ்ட ஆத்மா, சர்வ சக்திவானின் குழந்தை என்ற இந்த உணருதல் பலமற்ற நிலையிலிருந்து சக்தி சொரூபம் ஆக்கிவிடும். சக்தி சொரூப ஆத்மா மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மா என்ன விரும்புகிறாரோ, எப்படி விரும்புகிறாரோ அதை நடைமுறையில் செய்ய முடியும். எனவே தான் அனைத்து சொற்பொழிவுகளின் சாரம் ஒன்றே ஒன்று தான் ரியலைசேஷன் (உணருதர்) பாப்தாதாவும் அனைத்து சொற்பொழிவுகளையும் கேட்டிருக்கிறார் இல்லையா? பாப்தாதா எப்பொழுதும் குழந்தைகள் கூடவே தான் இருக்கிறார். நல்லது.

சேவையில் சமர்ப்பணம் ஆகியிருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும், அனைத்து மண்டலங்களிலிருந்து வந்திருக்கும் குழந்தைகளுக்கும், ஒவ்வொருவரும் பாப்தாதா எனக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார், ஒவ்வொருவருடன் பேசிக் கொண்டிருக்கின்றார் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அனைத்துக் குழந்தை களுக்கும் வெளிப்படையாக நிரூபணம் காண்பித்திருக்கிறார்கள், அதற்குப் பலனாக பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் அவருடைய பெயரையும் சேர்த்து, ரூபத்தையோ பார்த்துக் கொண்டிருக்கிறோம், பெயரையும் சேர்த்து வாழ்த்துக்கள் கொடுக்கிறோம். இப்பொழுதோ நேரத்தின் மாற்றத்தின் அறிவிப்பை நீங்கள் எப்பொழுதும் கொடுத்துக் கொண்டேயிருக்கிறீர்கள் என்றால் பாப்தாதாவை சந்திக்கும் விஷயத்திலும் பரிவர்த்தனை ஆகும் இல்லையா? நமது பரிவாரம் பெரியதாக வளர வேண்டும் என்று உங்கள் அனைவரின் எண்ணம் இருக்கிறது என்றால் பழையவர்களுக்கு தியாகம் செய்ய வேண்டியதாக இருக்கும். ஆனால் இந்த தியாகம் தான் பாக்கியம். மற்றவர்களை முன்னே

வைப்பது தான் தன்னை முன்னேற்றுவது. பாப்தாதாவிற்கு வெளிநாட்டுக் குழந்தைகள் பிரியமானவர்கள், பாரதத்தைச் சேர்ந்தவர்கள் பிரியமானவர்கள் இல்லை அல்லது ஏதாவது விசேஷக் குழந்தை பிரியமானவர் என்று அப்படி நினைக்காதீர்கள். பாப்தாதாவிற்கோ ஒவ்வொரு குழந்தையும் இதயத்தின் ஆதாரம், நெற்றியின் கிரீடத்தின் மணி எனவே பாப்தாதா முதன் முதலில் தனது வலது கரமான சகயோகி குழந்தை களை உள்ளப்பூர்வமாக, உயிருக்கும் மேலாக மிகவும் அன்புடன் நினைவு செய்கிறார். தூரத்திலிருந்து வருபவர்களை தொடர்பில் வருபவர்களை சம்பந்தத்தில் கொண்டு வருவதற்காக நீங்கள் அனைவரும் மிகவும் குஷியோடு அவர்களை முன்னுக்கு வைக்கிறீர்கள். மேலும் வைத்துக் கொண்டே இருப்பீர்கள்.

இந்த நேரம் நிங்கள் அனைவரும் சேவைக்காக வந்திருக்கிறீர்கள். எனவே இதுவும் சேவை ஆகிவிட்டது. ஒவ்வொரு மண்டலத்தின் பெயரைச் சொல்லவா என்ன? ஒருவேளை பெயரைக் கூறி, யாருடைய பெயராவது சொல்லப்படாமல் விட்டுப் போய்விட்டது என்றால்? எனவே அனைத்து மண்டலத்தைச் சேர்ந்தவர்களும், பாப்தாதா என்னை முதல் நம்பரில் வைக்கிறார் என்று புரிந்து கொள்ளுங்கள். அனைத்து பாரதத்தின் மற்றும் வெளிநாட்டின், இப்பொழுதோ அனைவரும் மதுபன் நிவாசிகள், எனவே விஷ்வ சாந்தி ஹாலில் இருக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும். ஓம் சாந்தி பவன வாசி குழந்தைகளுக்கும், எப்பொழுதும் நினைவில் இருங்கள், நினைவூட்டிக் கொண்டே இருங்கள், ஒவ்வொரு அடியிலும் நினைவுச் சின்ன சரித்திரத்தை உருவாக்கிக் கொண்டே இருங்கள். ஒவ்வொரு விநாடியும் தன்னுடைய நடைமுறை வாழ்க்கையின் கண்ணாடி மூலமாக அனைத்து ஆத்மாக்களுக்கும் தனது தந்தையின் சாட்சாத்காரத்தை செய்வித்துக் கொண்டேயிருங்கள். அந்த மாதிரி வரதானி, மகாதானி எப்பொழுதும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

ராபர்ட் முல்லர் (ஐ.நா. சபையின் துணை பொதுச் செயலாளர்) அவர்களுக்காக மகா வாக்கியம்:

நீங்கள் சேவையில் உயர்ந்ததிலும் உயர்ந்த பங்கு ஏற்றுச் செய்யும் ஆத்மா. எந்தக் காரியத்திற்குப் பொறுப்பாளர் ஆகியிருக்கிறேனோ அதைச் செய்தே காண்பிப்பேன் என்ற உயர்ந்த எண்ணத்தை மனதில் வைத்திருக்கிறீர்கள். இந்த எண்ணம் பாப்தாதா மற்றும் முழு பிராமண பரிவாரத்தின் சகயோகம் மூலம் நடைமுறையில் வந்து கொண்டேயிருக்கும். மிக நல்ல எண்ணம் வைத்திருக்கிறீர்கள். மிக நல்ல நல்ல திட்டத்தையும் யோசிக்கிறீர்கள். இப்பொழுது இதே திட்டத்தின் நடுவில் ஆன்மீக சக்தி சேர்ந்து விட்டது என்றால் இந்த திட்டம்

நடைமுறை ரூபத்தை எடுத்துக் கொண்டே இருக்கும் குழந்தை களின் அனைத்து ஊக்கங்களும் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து கொண்டே இருக்கின்றன. எப்பொழுதும் உறுதியாக இருக்க வேண்டும். தைரியம் உள்ளவராகி முன்னேறிச் சென்று கொண்டே இருக்க வேண்டும். உலக அமைதிக்கான கொடி உலகின் நாலாபுறங்களிலும் பறக்கும், அந்த நாளும் இந்தக் கண்களுக்குத் தென்படும். எனவே முன்னேறிச் சென்றுக் கொண்டேயிருங்கள். உலகத்தினர் உங்களை மனமுடைந்து போகுபவராக ஆக்குவார்கள். ஆனால் நீங்கள் ஆகாதீர்கள். ஒரு பலம், ஒருவர் மேல் உள்ள நம்பிக்கை என்ற இந்த நிச்சயத்தில் சென்று கொண்டேயிருங்கள். எந்த நேரம் ஏதாவது சூழ்நிலை வருகிறது, என்றால் தந்தையை துணைவனாக ஆக்கிவிடுங்கள், பிறகு நான் தனியாக இல்லை என்னுடன் விசேஷ சக்தி இருக்கிறது என்று அனுபவம் செய்வீர்கள். கனவு நனவாகி விடும். எங்கு தந்தை இருக்கிறாரோ அங்கு எவ்வளவு தான் புயல் இருந்தாலும்அது பரிசாக ஆகிவிடும். நிச்சயபுத்தி உடையவர் வெற்றி அடைவார் - நான் நிச்சயபுத்தியுள்ள வெற்றியடையும் இரத்தினம் என்ற இந்தப் பட்டத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நல்லது.

ஸ்டீவ் நாராயண் (கயானா நாட்டின் துணை ஜனாதிபதி)க்கான மகாவாக்கியம்:

தன்னை தந்தையின் இதய சிம்மாசனதாரி நெருக்கமான இரத்தினம் என்று அனுபவம் செய்கிறீர்களா? தூர தேசத்திலிருந்தாலும் உள்ளத்தால் தூரமாக இருக்கவில்லை. சேவையில் குழந்தைகளின் ஊக்கம், உற்சாகத்தைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சியடைகிறார். மேலும் நம்பர் ஒன் கொடுக்கிறார். எப்பொழுதும் பறக்கும் கலையில் இருக்கும் பாப்தாதாவின் கண்ணின் மணியாக இருக்கிறீர்கள் எனவே பாப்தாதா வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார்.

(ஆண்ட்டியின் மகள் காயித்திரியுடன்):

புது பிறவி எடுத்த உடனேயே நீங்கள் சேவைக்குத் தகுதியானவர், அனுபவம் நிறைந்தவர் என்ற ஆசீர்வாதம் கிடைத்திருக்கிறது. காயானவில் இருந்த போதிலும் உலக சேவைக்காக பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள். மேலும் இருப்பீர் கள். நினைவு மூலம் தந்தையின் சகயோகம் மற்றும் வரதானங்கள் அனுபவம் ஆகிறது தான் இல்லையா? உங்களுடைய நினைவு தந்தையிடம் வந்து சேர்ந்து கொண்டே இருக்கிறது. அனைத்து எண்ணங்களும் நிறைவேறிக் கொண்டே இருக்கிறது தான் இல்லையா? சிரேஷ்ட ஆத்மாவான உங்களுடைய ஒரே ஒரு சிரேஷ்ட எண்ணத்தினால் முழு பரிவாரமும் உயர்ந்த பதவியை அடைந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் பலகோடி மடங்கு பாக்கியம் நிறைந்தவர்.

உலக அமைதி மாநாட்டில் பங்கேற்கவிருக்கும் சகோதரசகோதரிகளுக்காக

அவ்யக்த பாப்தாதாவின் இனிமையான செய்தி (குல்ஜார் தாதி மூலமாக)

எப்பொழுதும் போல் இன்று வதனத்தை நான் வந்து சேர்ந்த உடன் பாப்தாதா மிக இனிமையான பார்வையால் திருஷ்டி மூலமாக அனைத்துக் குழந்தைகளுக்கும் அன்பு நினைவுகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார். பாபாவின் திருஷ்டி மூலம் இன்று மிகுந்த அமைதி, சக்தி, அன்பு மற்றும் ஆனந்தத்தின் கிரணங்கள் வந்து கொண்டிருக்கின்றன, அந்த மாதிரி ஆன்மீக திருஷ்டி மூலம் நான்கு விஷயங்களின் பிராப்தி ஆகிக் கொண்டிருந்தன. மிக அதிகமாக அடைந்து கொண்டிருக்கிறோம் என்பது போல் அனுபவம் ஆனது. அந்த மாதிரி குழந்தைகள் நம் அனைவரையும் பாப்தாதா வரவேற்றார். மேலும் குழந்தையே அனைவரின் நினைவையும் கொண்டு வந்தாயா என்று கேட்டார். நினைவையோ கொண்டு வந்திருக்கிறேன் ஆனால் அனைவரின் ஆவாஹனத்தின் (உங்களை வரவழைப்பதின்) எண்ணத்தையும் கொண்டு வந்திருக்கிறேன் என்று நான் கூறினேன். அதற்காக பாபா கூறினார்: இந்த நேரமோஎன்னுடைய இவ்வளவு அன்பான குழந்தைகள் யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ, தெரிந்து கொள்வதற்காக வந்திருக்கிறார்கள், பிறகு சந்திப்பதற்காக வருவார்கள் என்று அந்த மாதிரியான நாளும் வரும். பாப்தாதாவோ அனைத்துக் குழந்தை களின் காட்சியையோ வதனத்தில் இருந்து கொண்டே எப்பொழுதும் பார்த்துக் கொண்டே இருக்கிறார். அந்த மாதிரி கூறிக்கொண்டே பாப்தாதா ஒரு காட்சியை காண்பித்தார். எப்படி பாரத தேசத்தில் பக்தர்கள் அகோயில்களில் சிவலிங்க விக்ரகத்தை உருவாக்குகிறார்களோ அதே போல் வதனத்திலும் ஒரு லிங்கத்தைப் பார்க்க முடிந்தது. ஆனால் அந்த லிங்கத்தின் உருவம் ஒளிவடிவமாக இருந்தது. மேலும் அந்த ஒளி வடிவமான லிங்கத்தின் நாலா புறங்களிலும் மின்னிக் கொண்டிருக்கும் வைரங்களில் நான்கு விதமான வண்ணங்கள் தென்பட்டன. ஒன்று வெள்ளை, இன்னொன்று பச்சை, மூன்றாவது மெல்லிய நீலம், நான்காவது பொன்னிறம். கொஞ்ச நேரத்தில் அந்த ஒளி வார்த்தைகளால் மாறிவிட்டன. வெண்ணிற ஒளியில் அமைதி என்று எழுதப்பட்டிருந்தது. இன்னொன்றில் ஊக்கம், மூன்றாவதில் உற்சாகம் மேலும் நாலாவது ஒளியில் சேவை,

அனைத்துக் குழந்தைகளும் மிகுந்த ஊக்கம், உற்சாகம் மற்றும் அமைதியின் எண்ணம் மூலமாக உலகின் சேவை செய்தீர்கள் என்று பாபா கூறினார். குழு ரூபத்தில் ஒவ்வொரு

ஆத்மாவும் எவ்வளவு மின்னிக் கொண்டிருக்கிறது பிறகு பாபா கூறினார் என்னுடைய குழந்தைகள் அவரவர்களின் சக்திக்கேற்றபடி தெரிந்து கொள்ள முடிந்தது, இருந்தாலும் கூட என்னுடைய குழந்தைகள். என்னுடைய அனைத்து மிக இனிமையான குழந்தை களுக்கு அன்பு நினைவுகள் கொடுங்கள். வந்திருக்கும் அனைத்து குழந்தைகளின் வாயிலிருந்தும் நான் என்னுடைய வீட்டிற்கு வந்திருக்கிறேன் என்ற வார்த்தை வெளியாகிறது. குழந்தைகளின் இந்த வார்த்தையைக் கேட்டு பாப்தாதா புன்சிரிப்பு செய்துக் கொண்டே இருக்கிறார். எப்பொழுது குழந்தைகள் வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள் என்றால் முழு அதிகாரத்தையும் பெற வந்திருக்கிறீர்களா? அல்லது கொஞ்சம் பெறவா? பாபா கூறினார்: கடலின் கரைக்கு வந்து சிறிய பாத்திரத்தை நிரப்பிச் செல்லாதீர்கள். ஆனால் மாஸ்டர் கடலாகிச் செல்லுங்கள். சுரங்கத்திற்கு வந்து இரண்டு கைப்பிடி மட்டும் நிரப்பிச் செல்லாதீர்கள்.பிறகு பாப்தாதா மூன்று விதமான குழந்தைகளுக்கு மூன்று விதமான பரிசுகளைக் கொடுத்தார்.

1) பாபா கூறினார்: என்னுடைய பேனா பிடித்து எழுதும் குழந்தைகள் (அச்சகத்து சேவாதாரிகள்) யார் வந்திருககிறார்களோ அவர்களுக்கு தாமரை மலரின் பரிசு அளிக்கிறோம். என்னுடைய கலம் தாரி (பேனா பிடித்து எழுதுபவர்கள்) குழந்தைகளிடம் கூறுங்கள் எப்பொழுதும் கமல் ஆசன்தாரி (தாமரை மலரில் அமர்ந்திருப்போர்) ஆகி முழு உலகின் தாழ்ந்த வைப்ரேஷனலிருந்து விலகி, தந்தைக்கு பிரியமானவர்களாக ஆகட்டும். ஒருவேளை அந்த நிலையில் நிலைத்திருந்து பேனா பிடித்து எழுதினீர்கள் என்றால், உங்களுடைய காரியங்கள் வெற்றியடைந்து விடும். மேலும் பரமாத்மா காரியமும் வெற்றி அடைந்து விடும்.

2) வி.ஐ.பி. குழந்தைகள் யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ அவர்களுக்கு பாபா வெறும் சிம்மாசனம் இல்லை ஆனால் ஹன்ஸ் (அன்னப்பறவை) ஆசனம் கொடுத்தார். யாரெல்லாம் வி.ஐ.பி. குழந்தைகள் வந்திருக்கிறார்களோ அவர்கள் சொல்லில் சக்தி இருக்கிறது. இவர்களுக்கு நான் ஹன்ஸ் ஆசனம் கொடுக்கிறேன். அந்த ஆசனத்தில் அமர்ந்து பிறகு ஏதாவது காரியம் செய்யுங்கள். ஹன்ஸ் அசனத்தில் அமருவதினால் உங்களுடைய நிர்ணய சக்தி உயர்ந்ததாக இருக்கும். மேலும் என்ன காரியம் செய்தாலும் அதில் விசேஷம் இருக்கும். எப்படி நாற்காலியில் அமர்ந்து காரியம் செய்றீர்கள் அதேபோல் புத்தி இந்த ஹன்ஸ் ஆசனத்தில் இருந்தது என்றால், உலகியல் காரியத்திலிருந்தும் ஆத்மாக்களுக்கு அன்பு மற்றும் சக்தி கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

3) சமர்ப்பணமான சேவாதாரி குழந்தைகளுக்கு பாப்தாதா ஒரு மிக நல்ல ஒளி வடிவமான

மலர்களால் கட்டப்பட்ட மாலை கொடுத்தார். ஒவ்வொரு ஒளியிலும் ஏதாவது தெய்வீக குணம் எழுதப்பட்டிருந்தது. பாபா கூறினார் - இந்த என்னுடைய குழந்தைகள் அனைத்து குழந்தைகளும் தாரணை செய்யக்கூடிய குணம் நிறைந்த குழந்தைகள். அனைத்து குழந்தைகளும் ஒரு பலம், ஒரு வழியில் நடந்து இந்த எல்லைக்கப்பாற்பட்ட சேவை செய்திருக்கிறார்கள். அதற்குப் பலனாக பாப்தாதா இந்த தெய்வீக குணங்களின் மாலையை அனைத்துக் குழந்தைகளுக்கும் பரிசாகக் கொடுக்கிறோம் என்றார். மேலும் கடைசியில் கூறினார், அனைத்துக் குழந்தைகளுக்கும் எப்பொழுதும் குஷியாக இருங்கள், குஷி நிறைந்தவர் ஆக வேண்டும் மேலும் அனைவரையும் குஷியின் வரதானங்களினால், பொக்கிஷங்களினால் நிரம்பியவர் ஆக்கிக் கொண்டே இருங்கள் என்ற இந்த பாப்தாதாவின் மகா வாக்கியத்தைத் தான் கூற வேண்டும். அந்த மாதிரி இனிமையான மகாவாக்கியத்தைக் கேட்டுக் கொண்டே, அன்பு நினைவுகளைக் கொடுத்துக் கொண்டே மற்றும் பெற்றுக் கொண்டே சாகார வதனத்திற்கு வந்து சேர்ந்து விட்டேன்.

வரதானம்:

தந்தை மூலமாக கிடைத்திருக்கும் அனைத்துப் பொக்கிஷங்களை காரியத்தில் ஈடுபடுத்தி அதிகரிக்கக்கூடிய ஞானி, யோகி ஆத்மா ஆகுக.

பாப்தாதா குழந்தைகளை அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பியவர்கள் ஆக்கியிருக் கிறார். ஆனால் தேவையான நேரத்தில் பொக்கிஷங்களை காரியத்தில் யார் ஈடுபடுத்து கிறார்களோ அவர்களுடைய பொக்கிஷம் எப்பொழுதும் அதிகரித்துக் கொணடேயிருக்கிறது.அவர்கள் ஒரு பொழுதும் விரும்பவோ இல்லை. ஆனால் ஆகிவிட்டது என்று கூறமாட்டார்கள். பொக்கிஷங்களினால் நிரம்பிய ஞானி, யோகி ஆத்மாக்கள் முதலில் யோசிப்பார்கள், பிறகு செய்வார்கள். அவர்களுக்கு அந்த நேரம் புத்தியில் டச் (தூண்டுதல்) ஆகும். அவர்கள் அதைப் பிடித்து நடைமுறையில் கொண்டு வருகிறார்கள். ஒரு விநாடியாவது செய்த பிறகு யோசித்தார் என்றால் ஞானம் நிறைந்த ஆத்மா என்று கூற மாட்டோம்.

சுலோகன்:

சுபாவம் மற்றும் கருத்துக்களில் வேற்றுமை இருந்த போதிலும் அன்பில் வித்தியாசம் இருக்கக்கூடாது.

ஓம்சாந்தி

18.02.1983 ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்தில் இருப்பதற்கான யுக்திகள்

இன்று அனைத்து குழந்தைகளின் திலாராம் (இதயத்திருக்கும் ராம்) தந்தை, குழந்தைகளின் இதய ஓசைக்கு, இதயத்தின் மிக இனிமையான விஷயங்களுக்கு பதில் கொடுப்பதற்காக குழந்தைகளின் நடுவே வந்திருக்கிறார். அமிர்தவேளையில் தொடங்கி நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளின் விதவிதமான இரகசியம் நிரம்பிய இசையை பாப்தாதா கேட்டுக் கொண்டே இருக்கிறார். ஒவ்வொரு குழந்தைக்கும் அந்த அந்த நேரத்திற்கு வித விதமான இசை இருக்கிறது. மிக அதிகமாக இயற்கையான இசையை யார் கேட்கிறார்? இயற்கையான பொருள் எப்பொழுதும் பிரியமானதாக இருக்கும். அனைத்துக் குழந்தைகளின் வித விதமான இசையைக் கேட்டுக் கொண்டே பாப்தாதா குழந்தைகளுக்கு சாரமாக முக்கியமான விஷயங்களைக் கூறுகிறார்.

அனைத்து குழந்தைகளும் அவரவர்களின் சக்திக்கேற்றபடி முழு ஈடுபாட்டில் மூழ்கியிருக்கும் நிலையில் நிலைத்திருப்பதற்காக மேலும், முழு ஈடுபாட்டின் சொரூபத்தின் அனுபவம் நிறைந்தவராக ஆவதற்காக மிக நன்றாகக் கவனத்துடன் நடந்து கொண்டிருக்கிறார்கள். அனைத்துக் குழந்தைகளின் இதயத்தில் நான் தந்தைக்கு சமமான நெருக்கமான இரத்தினமாகி உண்மையான குழந்தை என்பதை நிரூபிக்க வேண்டும் என்ற ஒரே ஊக்கம், உற்சாகம் தான் இருக்கிறது. இந்த ஊக்கம், உற்சாகம் அனைவரின் பறக்கும் கலைக்கான ஆதாரம். இந்த ஊக்கமானது வரக்கூடிய அனேக விதமான தடைகளையும் அகற்றி சம்பன்னம் ஆவதில் மிகுந்த சகயோகம் கொடுக்கிறது. இந்த ஊக்கத்தின் சுத்தமான மற்றும் திட எண்ணம் வெற்றியாளர் ஆக்குவதில் விசேஷமாக சக்திசாலியான ஆயுதம் ஆகிவிடுகிறது, எனவே எப்பொழுதும் இதயத்தில் ஊக்கம், உற்சாகத்தை மற்றும் இந்த பறக்கும் கலைக்கான சாதனத்தைப் பாதுகாத்து வைத்துக் கொள்ளுங்கள். ஒருபொழுதும் ஊக்கம், உற்சாகத்தைக் குறைக்காதீர்கள். நான் தந்தைக்குச் சமமாக அனைத்து சக்திகள், அனைத்து குணங்கள், அனைத்து ஞானத்தின் பொக்கிஷங்களினால் கண்டிப்பாக சம்பன்னம் ஆக வேண்டும் என்ற ஊக்கம் இருக்கிறது. ஏனென்றால், நான் சென்ற கல்பத்திலும் சிரேஷ்ட ஆத்மாவாக ஆகியிருந்தேன். ஒரு கல்பத்தின் அதிர்ஷ்டம் இல்லை, ஆனால், அனேக தடவைகளின் அதிர்ஷ்டத்தின் ரேகை பாக்கியத்தை

உருவாக்குபவர் மூலம் போடப்பட்டிருக்கிறது. இதே ஊக்கத்தின் ஆதாரத்தில் உற்சாகம் இயல்பாகவே ஏற்படும். உற்சாகம் என்ன ஏற்கிறது? ஆஹா என்னுடைய பாக்கியம். பாப்தாதா என்ன என்னனன்ன பட்டங்கள் கொடுத்திருக்கிறாரோ, அதே நினைவின் சொரூபத்தில் இருப்பதினால் உற்சாகம் அதாவது குஷி இயல்பாகவும் மேலும் நிரந்தரமாகவும் இருக்கிறது. மிகப்பெரிய உற்சாகத்திற்கான விஷயம், நீக்கள் அனேக ஜென்மங்கள் தந்தையைத் தேடினீர்கள். ஆனால், இந்த நேரம் பாப்தாதா உங்களை தேடிக் கண்டுபிடித்து விட்டார். வேறு வேறு திரைச்சீலைகளின் பின்னால் மறைந்து இருந்தீர்கள். அந்த திரைச்சீலைகளின் உள்ளேயும் தேடி விட்டோம் இல்லையா? பிரிந்து எவ்வளவு தூரம் சென்று விட்டீர்கள். பாரத தேசத்தை விட்டு விட்டு எங்கே சென்று விட்டீர்கள்? தர்மம், காரியம், தேசம், பழக்க வழக்கம் அப்படி எத்தனை திரைச்சீலைகளுக்குள் வந்து விட்டீர்கள். எப்பொழுதும் இதே குஷி மற்றும் உற்சாகத்தில் இருக்கிறீர்கள் தான் இல்லையா! தந்தை உங்களை தன்னுடையவர் ஆக்கினாரா அல்லது நீங்கள் தந்தையை உங்களுடையவர் ஆக்கினீர்களா? முதலில் தந்தை தான் செய்தி அனுப்பினார் இல்லையா! தெரிந்து கொள்வதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நேரத்தை எடுத்துக் கொண்டார்கள். எப்பொழுதும் ஊக்கம், உற்சாகத்தில் இருக்கும் ஆத்மாக்களுக்கு, ஒரு பலம் ஒருவர் மேல் நம்பிக்கை என்றிருக்கும் குழந்தைகளுக்கு, தைரியம் உள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவி எப்பொழுதும் அனுபவம் ஆகிக் கொண்டே இருக்கிறது. கண்டிப்பாக நடக்க வேண்டும் என்றிருப்பது தைரியம். இதே தைரியம் காரணமாக தந்தையின் உதவிக்கு இயல்பாகவே பாத்திரம் ஆகி விடுகிறார்கள். மேலும் இதே தைரியத்தின் எண்ணத்தின் எதிரில் மாயா தைரியமற்றவராகிப் போய்விடுகிறது. நடக்குமா அல்லது நடக்காதா என்று தெரியவில்லை, என்னால் செய்ய முடியுமா அல்லது இல்லையா என்ற மாதிரி எண்ணத்தை வைப்பது என்றால், மாயாவை வரவழைப்பது, எப்பொழுது வரவழைத்தீர்கள் என்றால் ஏன் மாயா வராது. இந்த எண்ணம் வருவது என்றால் மாயாவிற்கு வழி கொடுப்பது. எப்பொழுது நீங்கள் பாதையையே திறந்து விட்டீர்கள் என்றால் மாயா ஏன் வராது. அரைக்கல்பம் அன்பு வைத்திருப்பது வழி கிடைத்தவுடன் எப்படி வராமல் இருக்கும், எனவே எப்பொழுதும் ஊக்கம், உற்சாகத்தில் இருக்கும் தைரியமுள்ள ஆத்மா ஆகுங்கள். உருவாக்குபவர் மற்றும் வரமளிப்பவர் தந்தையின் சம்பந்தத்தில் குழந்தையாக இருப்பவரிலிருந்து எஜமானன் ஆகி விட்டீர்கள். எந்த கஜனாவில் இல்லையென்ற பொருளே இல்லையோ, அந்த அனைத்து கஜானக்களின் எஜமானன் ஆகிவிட்டீர்கள். அந்த மாதிரியான எஜமானன் ஊக்கம், உற்சாகத்தில் இல்லையென்றால், வேறு யார் இருப்பார்கள். நானே தான் இருந்தேன், நானே இருக்கிறேன், மேலும் நானே தான் இருபேன். என்ற இந்த சுலோகன் எப்பொழுதும் புத்தியின் நினைவில் இருக்க வேண்டும். நினைவு இருக்கிறது தான் இல்லையா! இந்த நினைவுதான் உங்களை இங்கு வரை கொண்டு வந்திருக்கிறது. எப்பொழுது,ம் இந்த

நினைவு இருப்பதாக ஆகுக. நல்லது.

இன்றோ அனைத்தையும் விட தொலைதூர தேசத்தில் வசிக்கும். தொலைதூரத்திலிருந்து வந்திருக்கும் இரட்டை வெளி நாட்டுக் குழந்தைகளை விசேஷமாக சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். பார்க்கப்போனால் பாரதத்தின் குழந்தைகளும் எப்பொழுதும் அதிகாரிகள் தான். இருந்தாலும் வாய்ப்பளிப்பவராகி வாய்ப்பு கொடுக்கிறீர்கள். எனவே, இன்று வரையிலும் பாரதத்திலும் பெரும் வள்ளலாகும் பழக்க வழக்கம் இருக்கிறது. அனைவரும் அவரவர்களின் ரூபத்தில் உலக சேவையின் மஹா யாகத்தில் சகயோகம் கொடுத்தீர்கள். ஒவ்வொருவரும் மிகவும் ஈடுபாட்டுடன் மிக நல்ல பங்கைச் செய்தீர்கள். அனைவரின் ஒரு எண்ணம் மூலமாக உலகின் அனேக ஆத்மாக்களுக்கு தந்தையின் அருகில் வருவதற்கான செய்தி கிடைத்தது. இப்பொழுது இதே செய்தி மூலம் எரியத் தொடங்கியிருக்கும் ஜோதி அனேகர்களின் (ஆத்மா) ஜோதியைஎரிய வைத்துக் கொண்டே இருக்கும். இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகள் தங்களுடைய திட எண்ணத்தை நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறார்கள். பாரதவாசி குழந்தைகளும் கூட அனேக, பெயரை பரப்பக் கூடிய, செய்தியை அனைவருக்கும் சென்றடையச் செய்யும் விசேஷ ஆத்மாக்களை அருகில் கொண்டு வந்திருக்கிறார்கள். எழுத்தாளர் களையும் அன்பு மற்றும் தொடர்பில் அருகில் கொண்டு வந்திருக்கிறீர்கள். பேனாவின் (எழுத்து) சக்தி மற்றும் வாயின் (வார்த்தை) சக்தி இரண்டும் சேர்ந்து செய்தியின் ஜோதியைஎரிய வைத்துச் கொண்டே இருப்பீர்கள். இதற்காக இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு மேலும் பாரதத்தில் நெருக்கத்தில் இருக்கும் குழந்தைகளுக்கு, இருவர்களுக்குமே வாழ்த்துக்கள்! இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகள் செய்தியை பரப்பும் சக்திசாயான விசேஷ ஆத்மாக்களை அழைத்து வந்தார்கள். அதற்காகவும் அவர்களுக்கு விசேஷமான வாழ்த்துக்கள். தந்தையோ எப்பொழுதும் குழந்தைகளின் சேவாதாரி, முதலில் குழந்தைகள்,. தந்தையோ முதுகெலும்பாக இருக்கிறார் இல்லையா! எதிரில் மைதானத்திலோ குழந்தைகள் தான் வருக்கிறார்கள். உழைப்பு குழந்தைகளினுடையது, அன்பு தந்தையினுடையது. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் ஊக்கம், உற்சாகத்தில் இருக்கக் கூடிய, எப்பொழுதும் பாப்தாதாவின் உதவிக்குப் பாத்திரமான தைரியமுள்ள குழந்தைகளுக்கு, எப்பொழுதும் சேவையின் முழு ஈடுபாட்டில் மூழ்கியிருக்கக் கூடிய, எப்பொழுதும் பாப்தாதாவின் உதவிக்குப் பாத்திரமான தைரியமுள்ள குழந்தைகளுக்கு, எப்பொழுதும் சேவையின் முழு ஈடுபாட்டில் மூழ்கியிருக்கக்கூடிய, எப்பொழுதும் தனக்கு பிராப்தி ஆகியிருக்கும் சக்திகள் மூலமாக

அனைத்து ஆத்மாக்களுக்கும் சக்திகளின் பிராப்தியை செய்விக்கக் கூடிய, அந்த மாதிரி தந்தையின், எப்பொழுதும் அதிகாரி மற்றும் குழந்தையாக இருப்பவரிலிருந்து எஜமானன் ஆகும் குழந்தைகளுக்குத் பாப்தாதாவின் விசேஷமான சிநேகம் நிரம்பிய அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

ஜானகி தாதியுடன் சந்திப்பு

நீங்கள் தந்தைக்குச் சமமானவர் ஆகுக என்ற வரம் பெற்றவர் தான் இல்லையா! நீங்கள் இரட்டை சேவை செய்கிறீர்கள். குழந்தையின் மன சேவையின் வெற்றி மிக நன்றாகத் தென்படுகிறது. நீங்கள் வெற்றி சொரூபத்தின் பிரத்யக்ஷ சொரூபம். அனைவரும் தந்தையுடன் குழந்தையின் மஹிமையும் பாடுகிறார்கள். தந்தையுடன் சேர்ந்து சுற்றி வருகிறீர்கள் தான் இல்லையா! நீங்கள் சக்கரவர்த்தி இராஜா. இயற்கையை வென்றதின் பங்கை மிக நன்றாகவே செய்து கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது எண்ணத்தின் மூலமாகவும் சேவையின் பங்கு மிக நன்றாகவே நடந்து கொண்டிருக்கிறது. நடைமுறை நிரூபணம் நன்றாக இருக்கிறது. இப்பொழுதோ பெரியவர்கள் அதிகமாக வருவார்கள். வெளிநாட்டிலிருந்து செய்தி பாரதவாசிகள் வரை வந்தடையும். அனைத்து வெளிநாட்டுக் குழந்தைகளும் சேவையின் ஊக்கம், உற்சாகத்தை மிக நன்றாகவே நடைமுறையில் நிரூபித்துக் காண்பித்திருக்கிறார்கள். எனவே அனைவரின் தரப்பிலிருந்தும் உங்களுக்கு மிகுந்த வாழ்த்துக்கள். நல்ல மைக்கை அழைத்து வந்திருக்கிறீர்கள், நினைவு சொரூபமாகி சேவை செய்தீர்கள், எனவே வெற்றி கிடைத்திருக் கிறது. நல்ல பூந்தோட்டத்தை தயார் செய்திருக்கிறீர்கள். அல்லா தன்னுடைய பூந்தோட்டத்தை பார்த்துக்கொண்டிருக்கிறார்.

ஜெயந்தி சகோதரியுடன் சந்திப்பு

பிறந்ததிலிருந்தே லக்கி (அதிர்ஷ்டசாலி) மற்றும் லவ்லி(அன்பானவர்) ஆகவே இருக்கிறீர்கள். ஜென்மமே அதிர்ஷ்டத்தினால் ஏற்பட்டது. எங்கு நீங்கள் சென்றாலும் அந்த ஸ்தானமும் அதிர்ஷ்டம் நிறைந்ததாக ஆகிவிடும். பாருங்கள், லண்டன் பூமி அதிர்ஷ்டம் நிறைந்ததாக ஆகி விட்டது இல்லையா! எங்கே சுற்றி வந்தாலும் என்ன பரிசைக் கொடுத்து வருகிறீர்கள்? பாக்கியத்தை உருவாக்குபவரிடமிருந்து என்ன பாக்கியம் கிடைத்திருக்கிறதோ, அந்த பாக்கியத்தை அனைவருக்கும் கொடுத்து வருகிறீர்கள் தான் இல்லையா! அனைவரும் உங்களை எந்தப் பார்வையில் பார்க்கிறார்கள் என்று தெரியுமா? நீங்கள் பாக்கியத்தின் நட்சத்திரம், எங்கு நட்சத்திரம் மின்னிக் கொண்டிருக்கிறதோ, அங்கு பிரகாஷமாகிவிடும். அந்த

மாதிரி அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா! அடியெடுத்து வைப்பது குழந்தை மற்றும் உதவி செய்வது தந்தை, தந்தையைப் பின்பற்றி நடப்பவராகவோ இருக்கவே இருக்கிறீர்கள், ஆனால் உடன் இருப்பவரையும் (தாதி ஜானகியையும்) நன்றாகப் பின்பற்றிச் செய்திருக்கிறீர்கள். இதுவும் சமமாக ஆவதற்கான பந்தயத்தை நன்றாக செய்து கொண்டிருக்கிறீர்கள். நல்லது.

காயத்ரி சகோதரி (நீயூயார்க்) உடன் சந்திப்பு

காயத்ரியும் குறைந்தவர்கள் அல்ல. மிக நல்ல சேவைக்கான வழிமுறையைக் கடைப்பிடித்திருக்கிறார். யாரெல்லாம் கருவியாகி ஆத்மாக்களை மதுபன் வரை அழைத்து வந்திருக்கிறார்களோ, அவர்களுக்கும் பாப்தாதா மற்றும் பரிவாரத்தின் நல்ல சிநேகத்தின் புஷ்பங்களின் மழை பொழிந்து கொண்டே இருக்கிறது. எந்தளவு நல்ல ஆத்மாவாக இருக்கிறாரோ, அந்த அளவே வந்திருக்கும் இந்தக் குழந்தையும் (ராபர்ட் முல்லர்) சேவை கேந்திரத்தில் நல்ல சகயோகி ஆத்மா. உண்மையான உள்ளத்தில் தந்தை திருப்தியாக இருக்கிறார். சுத்தமான உள்ளம் உள்ளவர் எனவே தந்தையின் அன்பை, தந்தையின் சக்தியை சுலபமாகப் பிடித்துக் கொள்ள முடிந்தது. ஊக்கம், உற்சாகம் மற்றும் எண்ணம் மிக நன்றாக இருக்கிறது. சேவையில் நன்றாக உயரம் தாண்டுதல் செய்வார்கள் பாப்தாதாவும் பொறுப்பாளர் (கருவி) ஆகியிருக்கும் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். அவர்களிடம் நீங்கள் சேவையில் பறக்கும் கலையுள்ள ஃப்ரிஷ்தா சொரூபமாக இருக்கிறீர்கள், மேலும் அந்த மாதிரியே அனுபவம் செய்து கொண்டே இருங்கள் என்று சொல்லுங்கள். நல்லது. - அனைவரின் சகயோகம் மூலம் வெற்றி மதுபன் வரை தென் படுகிறது. குறிப்பிட்டு யாருடைய பெயரையும் கூறவில்லை. ஆனால் அனைவரும் பாபா என்னைத்தான் கூறிக்கொண்டிருகிறார் என்று புரிந்து கொள்ளுங்கள். யாரும் குறைந்தவர்கள் அல்ல. முதலில் நான் சேவையில் முன்னுக்கு இருக்கிறேன் என்று புரிந்து கொள்ளுங்கள். சிறியவர்கள் பெரியவர்கள் அனைவரும் உடல், மனம், பணம், நேரம், எண்ணம் அனைத்தையும் சேவையில் ஈடுபடுத்தினார்கள்.

சகோதரர் முரளி மற்றும் சகோதரி இரஜனியுடன் சந்திப்பு : (ஜெயந்தி சகோதரியின் பெற்றோர்)

பாப்தாதாவின் அன்பின் கயிறு இழுத்துக் கொண்டு வந்தது தான் இல்லையா! எப்பொழுதும் இந்த நேரம் என்ன நினைவு இருக்கிறது? எப்பொழுதும் உள்ளத்திலிருந்து பாபா தான் வெளியாகிறது இல்லையா! மனதின் குஷி, நினைவின் அனுபம் மூலமாக அனுபவம்

செய்தீர்கள். இப்பொழுது ஒருமுகப்பட்டு என்ன நினைப்பீர்களோ, அவை அனைத்தும் முன்னேறிச் செல்வதற்கான சாதனமாகி விடும். ஒரு பலம் ஒருவர் மேல் நம்பிக்கையில் இருந்து மட்டும் ஒருமுகத்தோடு யோசியுங்கள். ஒருவேளை நிச்சயத்தில் ஒரு பலம் மற்றும் ஒருவர் மேல் நம்பிக்கை இருக்கிறது என்றால், என்னவெல்லாம் நடக்குமோ, அது நல்லதாகவே நடக்கும்,. பாப்தாதா எப்பொழுதும் உடன் இருக்கிறார் மேலும் எப்பொழுதும் உடன் இருப்பார். நீங்கள் தைரியம் நிறைந்தவர்கள் தான் இல்லையா! பாப்தாதா குழந்தைகளின் நிச்சயம் மற்றும் தைரியத்தைப் பார்த்து நிச்சயம் மற்றும் தைரியத்திற்காக வாழ்த்துக்களைக் கூறுகிறார். கவலையற்ற மஹாராஜாவின் குழந்தைகள் நீங்களும் மகாராஜா தான் இல்லையா! நாடகத்திலிருந்த காரணத்தினால் நெருக்கமான இரத்தினமாக ஆக்கியேவிட்டது. துணையும் மிக நல்லதாக கிடைத்திருக்கிறது. சாகாரத்திருக்கும் துணையும் சக்திசாலியான வர்தான். ஆத்மாவின் துணையாகவோ தந்தை சிவபாபா இருக்கவே இருக்கிறார். இரட்டை லி஻ப்ட் இருக்கிறது. எனவே கவலையற்ற மஹாராஜா, தேவையான நேரத்தில் புண்ணிய ஆத்மாவாகி புண்ணியக் காரியம் செய்திருக்கிறீர்கள். எனவே பாப்தாதாவின் சகயோகத்திற்கு எப்பொழுதும் பாத்திரமானவர் நீங்கள். எவ்வளவு புண்ணியத்தின் அதிகாரி ஆகியிருக்கிறீர்கள். புண்ணிய ஸ்தானத்தின் பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள். ஏதாவது ஒரு வழியில் குழந்தை களின் பாக்கியத்தை உருவாக்கியே விட்டீர்கள் தான் இல்லையா! புண்ணியத்தின் முதலீடு ஒன்றாகச் சேர்ந்திருக்கிறது.. முரளீதரனின் முரளி, மாஸ்டர் முரளி தந்தையின் கை எப்பொழுதும் உங்கள் கை மேல் இருக்கிறது. எப்பொழுதும் நினைவு செய்து கொண்டும், சக்தியை எடுத்துக் கொண்டும் இருங்கள். தந்தையின் பொக்கிஷம் என்பது உங்களுடைய பொக்கிஷம். அதிகாரி என்று புரிந்து நடந்து கொள்ளுங்கள். பாப்தாதாவோ வீட்டின் குழந்தையாக இருப்பவரிலிருந்து வீட்டின் எஜமானன் ஆகுபவர் என்று நினைக்கிறார். கூடவே சேர்ந்தே இருக்கட்டும். உலகியல் விவஹாரங்களிலும் தந்தையின் கூடவே இருங்கள். நல்லது.

யு.கே.குரூப்புடன் சந்திப்பு::

நீங்கள் அனைவரும் தங்களை சுயராஜ்ய அதிகாரியாக இருப்பவரிலிருந்து உலக இராஜ்ய அதிகாரி என்று நினைக்கிறீர்களா? லண்டனும் தலை நகரம் தான் இல்லையா? எனவே தலை நகரில் வசிப்பவர்களுக்கு தன்னுடைய இராஜ்யம் எப்பொழுதும் நினைவு இருக்கிறது தான் இல்லையா? இராணியின் மாளிகையைப் பார்த்து தன்னுடைய மாளிகை நி௹வு வருகிறது. உங்களுடைய மாளிகை எவ்வளவு அழகாக இருக்கும் என்று தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? உங்களுடைய இராஜ்யம் அந்த மாதிரியானது. அந்த மாதிரி வேறு எந்த இராஜ்யமும் இருந்ததும் இல்லை, இருக்கவும் முடியாது. அந்த மாதிரி போதைஇருக்கிறதா?

இப்பொழுதோ அனைத்தும் விநாசம் ஆகிவிடும். ஆனால் நீங்களோ பாரதத்திற்கு வந்து விடுவீர்கள் தான் இல்லையா? இதுவோ உறுதி தான் இல்லையா? எங்கெல்லாம் பிராமணர்கள் இவ்வளவு சேவை செய்திருக்கிறார்களோ அவை அனைத்தும் பொழுதுபோக்கு ஸ்தானம் ஆகிவிடும். மக்கள் தொகைகுறைந்து விடும். இவ்வளவு விஸ்தாரமான இடத்திற்கு அவசியம் இருக்காது. நல்லது. தன்னுடைய வீடு, தன்னுடைய கடமை, இவை அனைத்தும் நினைவு இருக்கட்டும்.

கேள்வி:

எப்பொழுதும் முன்னேறிச் செல்வதற்கான வழி என்ன?

பதில்:

ஞானம் மற்றும் சேவை,. எந்தக் குழந்தைகள் ஞானத்தை நல்ல முறையில் தாரணை செய்கிறார்களோ மேலும் சேவை செய்வதற்கான ஆர்வம் இருந்து கொண்டே இருக்கிறது என்றால் முன்னேறிச் சென்று கொண்டேயிருப்பார்கள். ஆயிரம் புஜங்கள் உள்ள தந்தை உங்கள் துணையாக இருக்கிறார். எனவே துணைவனை எப்பொழுதும் துணையாக வைத்து முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள்.

கேள்வி:

குடும்ப வாழ்க்கையில் யார் எப்பொழுதும் சமர்ப்பணம் ஆகி இருக்கிறார்களோ, அவர்கள் மூலமாக எந்த சேவை இயல்பாகவே நடந்து விடுகிறது?

பதில்:

அந்த மாதிரி ஆத்மாக்களின் சிரேஷ்ட சகயோகம் மூலம் சேவை என்ற மரம் மிகப் பசுமையாக வளர்ந்து விடுகிறது. அனைவரின் சகயோகம் தான் மரத்திற்கு தண்ணீர் ஆகிவிடுகிறது. எப்படி மரத்திற்கு தண்ணீர் கிடைக்கிறது என்றால் மரத்திலிருந்து எவ்வளவு நல்ல பழம் உருவாகிறது. அந்த மாதிரி சிரேஷ்ட சகயோகி ஆத்மாக்களின் சகயோகத்தினால் மரம் நன்றாக பசுமையாக வளர்ந்து பூத்துக் குலுங்குகிறது. அந்த மாதிரி பாப்தாதாவின் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும், சேவையின் ஆர்வத்திலேயே எப்பொழுதும் இருக்கும் குழந்தைகள், குடும்ப

வாழ்க்கையிலும் சமர்ப்பணம் ஆகி இருக்கும் குழந்தைகள் தான் இல்லையா? நல்லது.

வரதானம்:

யதார்த்த விதி மூலமாக வீணானவைகளை முடிவு கட்டி நம்பர் ஒன் வரிசை எண்ணைப் பெறக்கூடிய பரமாத்ம சித்தி சொரூபமானவர் ஆகுக

எப்படி வெளிச்சம் மூலம் இருள் தானாகவே அகன்று விடுகிறது. அதேபோல் நேரம், எண்ணம், மூச்சை பயனுள்ளதாக ஆக்குவதினால் வீணானது தானாகவே அகன்று விடுகிறது, ஏனென்றால் பயனுள்ளதாக ஆக்குவதின் அர்த்தம் உன்னத காரியங்களில் ஈடுபடுத்துவது. உயர்ந்த சேவையில் ஈடுபடுத்துபவர்கள் வீணானதின் மேல் வெற்றியடைந்து முதல் வரிசை எண்ணை பெற்றுவிடுகிறார்கள். அவர்களுக்கு வீணானதை நிறுத்துவதற்கான சித்தி (பலன்) பிராப்தி ஆகிவிடுகிறது. இது தான் பரமாத்ம சித்தி. அந்த ரித்தி, சித்தி (மாய மந்திரம்) செய்பவர் கள் அற்பகால அதிசயம் செய்து காண்பிப்பார்கள் மேலும் நீங்கள் யதார்த்த விதி மூலம் பரமாத்ம சித்தியை பிராப்தி செய்கிறீர்கள்.

சுலோகன்:

அபகாரம் செய்பவர்களுக்கும் உபகாரம் செய்பவர் தான் ஞான சொரூப ஆத்மா.

ஓம்சாந்தி

24.02.1983 ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா, மதுபன்

## அமைதியின் சக்தி

இன்று பாப்தாதா அமிர்தவேளையில் நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளிடம் சுற்றி வலம் வரச் சென்றிருந்தார். சுற்றி வந்து தன்னுடைய சக்தி சேனை மற்றும் பாண்டவ சேனை அனைவரும் எந்தளவு தயாராகியிருக்கிறார்கள் என்பதை இன்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். சேனை சக்திசாலியாகி ஆயுதம் தரித்து எவரெடியாக ஆகியிருக்கிறார்களா மேலும் நேரத்திற்காக காத்திருக்கிறார்களா, அவர்கள் எப்பொழுதுமே சம்பன்னமாக இருப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்களா என்பதையும் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த மாதிரி இன்று பாப்தாதா சேனாதிபதி ரூபத்தில் சேனையை பார்ப்பதற்காகச் சென்றார், விசேஷமான விஷயம், அறிவியல் சக்தி மீது அமைதியின் சக்தியின் வெற்றி, அமைதி சக்தியை குழு ரூபத்தில் மேலும் தனிப்பட்ட ரூபத்திலும் எந்தளவு பிராப்தி செய்திருக்கிறார்கள் என்பதையும் பார்த்துக் கொண்டிருந்தோம். அமைதியின் சக்தி மூலமாக பிரத்யக்ஷ பலன் ரூபத்தில் சுபபரிவர்த்தனை (மாற்றம்) வாயுமண்டலத்தின் பரிவர்த்தனை, உள் உணர்வின் பரிவர்த்தனை, சம்ஸ்கார பரிவர்த்தனையை எந்தளவு செய்ய முடியும் அல்லது செய்திருக்கிறீர்களா? இன்று சேனையின் ஒவ்வொரு சேனை வீரனின் அமைதியின் சக்தியின் ஆய்வுக் கூடத்தை, எந்தளவு காரியத்தில் பயன்படுத்த முடியும் என்று சோதனைசெய்தோம்.

நினைவில் இருக்க வேண்டும், வர்ணனை செய்ய வேண்டும், அதுவும் அவசியம் தான், ஆனால் தற்சமயத்திற்கேற்றாற்போல் அனைத்து ஆத்மாக்களும் பிரத்யக்ஷ பலனை பார்க்க விரும்புகிறார்கள். பிரத்யகஷ பலன் என்றால் நடைமுறையான ஆதாரத்தைப் பார்க்க விரும்புகிறார்கள். உடலின் மேல் அமைதியின் சக்தியை பிரயோகம் செய்கிறார்கள். அதே போலமேனதின் மேல், காரியத்தில், உறவு தொடர்பில் வருவதினால் உறவு தொடர்பில் என்ன பிரயோகம் ஆகிறது. எத்தனை சதவிகிதத்தில் ஆகிறது என்பதை உலக ஆத்மாக்களும் பார்க்க விரும்புகிறார்கள். ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் பிரத்யக்ஷ நிரூபணத்தின் ரூபத்தில் தனக்குள் எப்பொழுதும் விசேஷத்திலும் விசேஷ அனுபவம் செய்ய விரும்புகிறார். இதன் முடிவாக அமைதியின் சக்திக்கு எந்தளவு மகத்துவம் இருக்கிறதோ, அந்தளவு அதை விதிப்பூர்வமாக பிரயோகத்தில் கொண்டு வருவதில் குறை இருக்கிறது. விருப்பம் அதிகமாக

இருக்கிறது. ஞானமும் இருக்கிறது, ஆனால் பிரயோகம் செய்து அமைதி சக்தியின் பிராப்தியின் நுண்ணியத்தை அனுபவம் செய்து கொண்டே தனக்காகவும், பிற ஆத்மாக்களுக்காகவும் காரியத்தில் ஈடுபடுத்துவதில் இப்பொழுது இன்னும் விசேஷ கவனம் வேண்டும், உலகின் ஆத்மாக்களுக்கும் மற்றும் உறவு தொடர்பில் வரும் ஆத்மாக்களுக்கு, சாந்தியின் கிரணங்கள் இந்த விசேஷ ஆத்மாக்களின் மூலமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்று அனுபவம் ஆக வேண்டும். உங்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் நடைமுறையில் காரியங்களை செய்து கொண்டே அமைதியின் குண்டமாக அனுபவம் ஆக வேண்டும். எப்படி உங்கள் படைப்பில் ஒரு சின்ன மின்மினிப் பூச்சி தூரத்திலிருந்தே தன்னுடைய மினுமினுப்பை அனுபவம் செய்விக்கிறது. தூரத்திலிருந்தே பார்த்து மின்மினி பூச்சி வருகிறது. போகிறது என்று சொல்லமுடியும்.. அதே போல் இந்த அமைதியின் அவதார ஆத்மாக்கள் அமைதியை கொடுப்பதற்காக வந்து விட்டார்கள் என்று புத்தி மூலமாக அவர்கள் அனுபவம் செய்ய வேண்டும். நாலாபுறங்களிலும் உள்ள அமைதியற்ற ஆத்மாக்கள் அமைதியின் கிரணங்களின் ஆதாரத்தில் சாந்தி குண்டத்தின் பக்கம் இழுக்கப் பட்டு வந்துவிட வேண்டும். எப்படி தாகமுள்ளவர் இயல்பாகவே தண்ணீரின் பக்கம் இழுக்கப்பட்டு செல்கிறார். அதே மாதிரி சாந்தியின் அவதார ஆத்மாக்களாகிய உங்கள் பக்கம் ஈர்க்கப்பட்டு வர வேண்டும், இதே சாந்தியின் சக்தியை இப்பொழுது இன்னும் அதிகம் பிரயோகம் செய்யுங்கள். அமைதியின் சக்தி நீங்கள் எந்த ஆத்மாவின் வைக்கும் எண்ணத்தை மின்கம்பியில்லாத அறிவியல் சாதனங்களை விட மிக வேகமாக சென்றடையச் செய்து விடும். எப்படி அறிவியல் சக்தி மாற்றத்தையும் செய்து விடுகிறது. வளர்ச்சியையும் செய்து விடுகிறது, விநாசமும் செய்து விடுகிறது, படைப்புக் காரியத்தையும் செய்து விடுகிறது, குழப்பத்தையும் ஏற்படுத்தி விடுகிறது, சௌகரியமான ஓய்வையும் தந்து விடுகிறது, ஆனால் அமைதியின் சக்திக்கான விசேஷ இயந்திரம் – நல்எண்ணம் இந்த எண்ணத்தின் இயந்திரம் மூலமாக என்ன விரும்புகிறீர்களோ, அதை சித்தி சொரூபத்தில் பார்க்க முடியும், முதலில் தனக்காக பிரயோகம் செய்து பாருங்கள். அமைதியின் சக்தி மூலமாக கர்மபந்தனத்தின் ரூபம் இனிமையான சம்பந்தத்தின் ரூபமாக மாறிவிடும். பந்தனம் எப்பொழுதும் கசப்பாக இருக்கும். சம்பந்தம் இனிமை யானதாக இருக்கும். இந்த கர்மவினை கர்மத்தின் கடுமையான பந்தனம் அமைதியின் சக்தி மூலம் தண்ணீரில் கிழித்த கோடு மாதிரி அனுபவம் ஆகும். அனுபவிப்பவராக இன்றி, செய்த பாவத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன், என்றில்லாமல், சாட்சி பார்வையுடைவராகி, இந்த கணக்கு வழக்கின் காட்சியையும் பார்த்துக் கொண்டே இருப்பார், எனவே உடலின் கூடவே மனதின் பலஹீனம் என்று அப்படி இரண்டு நோய்களும் இருக்கும் காரணத்தினால் கடுமையை அனுபவிப்பது ரூபத்தில் தென்படுகிறது., ஆனால் அவர் மிகவும் விலகியிருப்பவராகவும், அதே சமயம் தந்தைக்குப் பிரியமானவராக இருக்கும் காரணத்தினால்,

இரட்டை சக்தி அனுபவம் ஆவதினால் கர்மத்தை அனுபவிக்கும் கணக்கிற்கு மேல் இந்த இரட்டை சக்தி வெற்றியடைந்து விடுகிறது. நோய் எவ்வளவு தான் பெரியதாக இருந்தாலும், ஆனால் துக்கம் மற்றும் வலியை அனுபவம் செய்ய மாட்டார். அதைத் தான் நீங்கள் வேறு வார்த்தையில் ஈட்டியிலிருந்து சிறிய முள்ளுக்குச் சமமாக அனுபவம் ஆகும் என்கிறார்கள், அந்த மாதிரி நேரத்தில் பிரயோகம் செய்து பாருங்கள். அனேக குழந்தைகள் செய்யவும் செய்கிறார்கள். இந்த விதமாக உடலில், மனதில், சம்ஸ்காரத்தில் அனுபவம் செய்து கொண்டே இருங்கள், மேலும் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். இந்த ஆராய்ச்சி செய்யுங்கள், இதில் மற்றவர்களைப் பார்க்காதீர்கள், ஒப்பிடாதீர்கள். இவர் என்ன செய்கிறார்? இவர் எங்கே செய்தார்? பெரியவர்கள் செய்கிறார்களா இல்லையா! பெரியவர்கள் செய்யவில்லை, ஆனால் சிறியவர்கள் இதைப் பார்க்காதீர்கள். முதலில் நான் இந்த அனுபவத்தில் முன்னேறிச் செல்ல வேண்டும், ஏனென்றால் நான் தன்னுடைய தனிப்பட்ட முயற்சி செய்வதின் விஷயம். எப்பொழுது இந்த மாதிரி தனிப்பட்ட ரூபத்தில் இதே பிரயோகத்தில் ஈடுபட்டு, வளர்ச்சியை அடைந்து கொண்டே இருந்தீர்கள் என்றால், ஒவ்வொருவரின் அமைதியின் சக்தியின் பிரபாவம் குழு ரூபத்தில் (ஒட்டு மொத்தமாக) உலகின் எதிரில் தென்படும். இப்பொழுது முதல் அடியாக உலக அமைதிக்கான மாநாடு நடத்தி அழைப்பு கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் சாந்தியின் சக்தியின் சக்தி எப்பொழுது அனைவரின் குழு ரூபத்தில் வெளியாகுமோ, அப்பொழுது ஹே! சக்தியின், அமைதியின் அவதாரமே! இந்த அமைதியற்ற இடத்திற்கு வந்து, அமைதியைக் கொடுங்கள் என்று அழைப்பு வரும். எப்படி இப்பொழுது கூட அமைதியற்றதின் நிகழ்வுகள் (மரணம்) ஏற்படுகிறது என்றால், உங்களை வாருங்கள், வந்து அமைதி கொடுங்கள் என்று அழைக்கிறார்கள். மேலும் பிரம்மா குமாரிகள் தான் அமைதி கொடுக்க முடியும் என்று மெது மெதுவாக பிரசித்தம் ஆகிக் கொண்டே இருக்கிறது. அந்த மாதிரி ஒவ்வொரு அமைதியற்ற நிகழ்வுகளிலும் உங்களுக்கு அழைப்பு வரும். எப்படி நோயுற்ற நேரத்தில் மருத்துவரைத் தவிர வேறு யாருடைய நினைவும் வருவதில்லை, அதே போல் அமைதியில்லாத எந்தவொரு விஷயத்திலும் அமைதியின் அவதாரங்களான உங்களைத் தவிர வேறு யாரும் தென்பட மாட்டார்கள். எனவே சக்தி சேனை, பாண்டவ சேனை இப்பொழுது விசேஷமாக அமைதி சக்தியை பிரயோகம் செய்யுங்கள். பிரயோகம் செய்து காண்பியுங்கள். சாந்தியின் சக்தியின் கேந்திரத்தை பிரத்யக்ஷம் செய்யுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்தா?

இப்பொழுதெல்லாம் இரட்டை வெளிநாட்டுக் குழந்கைள் காரணமாக அனைத்து குழந்தைகளுக்கும் பொக்கிஷம் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. எங்கிருந்தெல்லாம் குழந்தைகள் வந்திருக்கிறார்களோ, அனைத்து பக்கங்களிலிருந்தும் வந்திருக்கும்

குழந்தைகளின் ஈடுபாட்டைப் பார்த்து பாப்தாதா குஷியடைகிறார். ஐந்து கண்டங்களில் வேறு வேறு தேசங்களிலிருந்து வந்திருக்கும் குழந்தைகளை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைவரும் அதிசயக் காரியம் செய்திருக்கிறீர்கள். அனைவரும் என்ன இலட்சியம் வைத்திருந்தீர்களோ அதன் பிரகாரம் நடைமுறையில் முயற்சி செய்யும் ரூபத்தையும் கொண்டு வந்திருக்கிறீர்கள். வெளிநாட்லிருந்து மொத்தம் எத்தனை வி.ஐபி.ககள் வந்திருக்கிறார்கள் (75) மேலும் பாரதத்தின் எத்தனை வி.ஐ.பி.ககள் வந்திருக்கிறார்கள் (700) பாரதத்தின் ஊடகத்தை சேர்ந்தவர்ளின் விசேஷம் நன்றாக இருக்கிறது. மேலும் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் 75 பேர்களும் ஒன்றும் குறைந்தவர்கள் அல்.ல அதிகம் வந்திருக்கிறார்களை. அடுத்த வருடம் இன்னும் அதிகம் வருவார்கள். இப்பொழுதோ வருவதற்கான கதவேதிறந்து விட்டது இல்லையா? முன்போ வெளிநாட்டிலிருக்கும் டீச்சர்கள் வி.ஐ.பி.ககளை அழைத்து வருவது மிகக் கடினம் என்று கூறினார்கள். அந்த மாதிரி ஒன்றும் தென்படவில்லை என்று கூறினார்கள். இப்பொழுது தென்பட்டு விட்டது இல்லையா? தடைகளோ ஏற்பட்டது தான். பிராமணர்களின் காரியத்தில் தடை ஏற்படவில்லை என்றால் ஈடுபாடும் ஏற்படமுடியாது. அலட்சியமாகி விடுவார்கள். எனவே நாடகத்தின் அனுசாரம் ஆர்வத்தை அதிகரிப்பதற்காக தடை ஏற்படுகிறது. இப்பொழுது ஒவ்வொருவரிடமிருந்து செய்தி கேட்டு பிறகு சிநேகர்களில் ஊக்கம் வரும்.

குழந்தைகள் நல்ல அதிசயக் காரியம் செய்திருக்கிறீர்கள். சேவையில் நல்ல ஆதார அடையாளத்தைக் காணபித்திருக்கிறீர்கள். சேவைக்கான வாய்ப்பு கொடுப்பதற்கான பொறுப்பாளராகவோ ஆகிவிட்டீர்கள் இல்லையா? ஒருவர் மூலமாக சுலபமாகவே அனேகர்களுக்கு செய்தி பரவியது தான் இல்லையா? அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் மிக நன்றாக உழைத்திருக்கிறார்கள். நல்ல தைரியம் வைத்திருந்தார்கள். அதிகத்திலும் அதிகமாக செய்தியைப் பரப்புவதற்கு பொறுப்பாளர் ஆத்மாக்களை நாடகத்தின் அனுசாரம் வெளிநாட்டினர் தான் அழைத்து வந்தார்கள் இல்லையா.? பாரத வாசிக் குழந்தைகளும் மிக நன்றாக உழைத்திருக்கிறார்கள். அந்த உழைப்பின பலனாக நல்ல எண்ணிக்கையில் வந்திருக்கிறார்கள். இப்பொழுது பாரதத்தின் விசேஷ ஆத்மாக்களும் வருவார்கள். நல்லது.

அந்த மாதிரி வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும், மேலும் பாரதத்தின் நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு, யார் உலகின் மூலை மூலையில் தந்தை வந்து விட்டார் என்ற கொடியை பறக்க விடுவோம் என்ற ஒரே விசேஷ சுத்த எண்ணத்திலிருக்கும், அந்த மாதிரி நல்ல எண்ணத்தை வைத்திருக்கும் , உலகை மாற்றம் செய்

உலகிற்கு நன்மை புரியும் மிக உயர்ந்த ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:

1) வரதான பூமியில் வந்து வரதானத்தைப் பெற்றீர்களா? அனைத்தையும் விட மிகப்பெரிய வரதானம் தந்தை மூலமாக தந்தையின் துணையை அனுபவம் செய்வது. எப்பொழுதும் தந்தையின் நினைவில் அதாவது, எப்பொழுதும் தந்தையின் துணையில் இருக்க வேண்டும். அதனால் எப்பொழுதுமே குஷியாக இருப்பீர்கள், எப்போதாவது, ஏதாவது விஷயம் எண்ணத்தில் வருகிறது என்றால், தந்தையின் துணையில் அனைத்தும் முடிந்துவிடும். மேலும் மற்றவர்களுக்கும் சொல்லிக் கொண்டே இருங்கள். மற்றவர்களுக்கும் குஷியில் இருப்பதற்கான சாதனம் கொடுங்கள். பிறகு அனைத்து ஆத்மாக்களும் உங்களை குஷியின் தேவதை என்று நம்புவார்கள். ஏனென்றால், இப்பொழுது உலகில் குஷியின் மிகுந்த அவசியம் இருக்கிறது. அதை நீங்கள கொடுத்துக் கொண்டே இருங்கள். நான் குஷியின் தேவதை என்ற பட்டத்தை நினைவில் வையுங்கள்.

நினைவு மற்றும் சேவை என்ற இந்த இரண்டின் சமநிலை வைப்பது மூலமாக தந்தையின் ஆசீர்வாதம் கிடைத்துக் கொண்டே இருக்கும். சமநிலை மிகப் பெரிய கலை. ஒவ்வொரு விஷயத்திலும் சமநிலை இருக்கிறது என்றால் சுலபமாகவே நம்பர்ஒன் ஆகிவிடுவீர்கள். சமநிலை தான் அனேக ஆத்மாக்களின் எதிரில் ஆனந்தம் நிறைந்த வாழ்க்கையின் சாட்சாத்காரம் செய்விக்கும். சமநிலையை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொண்டே, அனைத்து பிராப்திகளை அனுபவம் செய்து கொண்டே நீங்களும் முன்னேறிச் செல்லுங்கள். மேலும் மற்றவர்களையும் முன்னேற்றுங்கள்.

தந்தையைத் தெரிந்து கொள்கின்ற, தந்தையை அடைபவர்கள் கோடியில் சிலர் என்று வர்ணிக்கப்பட்ட ஆத்மா நான் தான் என்ற இந்த நினைவிலேயே எப்பொழுதும் இருங்கள். இந்தக் குஷியிலேயே இருந்தீர்கள் என்றால், உங்கள் முகம் நடமாடும் சேவை நிலையம் ஆகிவிடும். எப்படி சேவை நிலையத்தில் வந்து தந்தையின் அறிமுகம் பெறுகிறார்கள், அதேபோல் உங்களுடைய மகிழ்ச்சி நிறைந்த முகம் தந்தையின் அறிமுகம் கிடைத்துக் கொண்டே இருக்கும். ஒவ்வொரு குழந்தையும் அந்த மாதிரி தகுதியானவர் என்று தான் பாப்தாதா நினைக்கிறார். அனைவரும் இத்தனை சேவை நிலையங்களில் அமர்ந்திருக்கிறீர்கள்.

எனவே எப்பொழுதும் சென்றாலும், வந்தாலும், சாப்பிட்டாலும், குடித்தாலும் என்னுடைய முகம் மற்றும் நடத்தை மூலம் தந்தையின சேவை செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்கள் என்றால் சுலபமாகவே நிரந்தர யோகி ஆகிவிடுவீர்கள். எந்தக் குழந்தைகள் தொடக்கத்திலிருந்தே சேவையின் ஊக்கம் உற்சாகத்தின் சகயோகத்தை கொடுத்துக் கொண்டே இருக்கிறார்களோ, அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவும் சகயோகம் கொடுத்து 21 பிறவிகள் சௌகரியமாக வைத்துக் கொள்வார். கடும் உழைப்பு செய்ய வேண்டியது இருக்காது. சாப்பிடுங்கள், அருந்துங்கள் மேலும் சொர்க்கத்தின் இராஜ்ய பாக்கியத்தை அனுபவியுங்கள் அரைக்கல்பம் கடினஉழைப்பு என்ற வார்த்தையே இராது. அம்மாதிரி எதிர்காலத்தை உருவாக்க வந்திருக்கிறீர்கள்.

குமாரர்களுடன் சந்திப்பு:

குமாரர் வாழ்க்கையில் சக்தி அதிகம் இருக்கும். குமாரர்கள் என்ன விரும்பினாலும் அதைச் செய்ய முடியும். எனவே குமாரர்களைப் பார்த்து இவர்கள் தங்களுடைய சக்தியை அழிவுக் காரியத்திற்குப் பதிலாக ஆக்கப்பூர்வகாரியத்தில் ஈடுபடுத்தியிருக்கிறார்கள் என்று பாப்தாதா விசேஷமாக குஷியடைகிறார். ஒவ்வொரு குமாரரும் உலகை புதியதாக்குவதில் சக்தியை ஈடுபடுத்திக் கொண்டு இருக்கிறார்கள். எவ்வளவு உயர்ந்த காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு குமாரர் 10 பேர்களின் காரியத்தைச் செய்ய முடியும். எனவே குமாரர்கள் மேல் பாப்தாதாவிற்குப் பெருமிதம் உள்ளது.. குமாரர் வாழ்க்கையில் தன்னுடைய வாழ்க்கையை பயனுள்ளதாக ஆக்கிவிட்டீர்கள். நீங்கள அந்த மாதிரி விசேஷ ஆத்மா தான் இல்லையா. சரியான நேரத்தில் உங்கள் வாழ்க்கையின் மிக நல்ல முடிவு எடுத்திருக்கிறீர்கள். முடிவை எடுத்ததில் ஒன்றும் தவறு செய்யவில்லை தான் இல்லையா. உறுதியாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? யாராவது தவறாகக் கூறி இழுத்தார்கள் என்றால்? உலகிலுள்ள அத்தனை கோடி ஆத்மாக்களும் ஒரு பக்கம், நீங்கள் ஒரு பக்கம் தனியாக ஆகிவிட்டீர்கள் என்றால், என்னவாகும்?. நான் தனியாக இல்லை தந்தை என்னுடன் இருக்கிறார் என்று கூறுங்கள். தன்னுடைய வாழ்க்கையையும் உருவாக்கியிருக்கிறீர்கள், மேலும் அனேகருடைய வாழ்:ககையை உருவாக்குவதற்கும் பொறுப்பாளர் ஆகியருக்கிறீர்கள். எனவே பாப்தாதா குஷியடைகிறார். நல்லது.

கடிதங்களுக்குப் பதில் கொடுத்துக் கொண்டே பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்காகவும் ஒலி நாடாவில் அன்பு நினைவுகளை பதிவு செய்தார்.

நாலாபுறங்களிலும் உள்ள அருமையான, அன்பிற்குரிய, சகயோகி, சேவைக்கு தகுதியான குழந்தைகளின் கடிதம் என்ன, அதை விட மேலாக ஆனால் இதயத்தின் மிக இனிமையான இசை நிரம்பிய பாடலை பாப்தாதா கேட்டார். எந்தளவு குழந்தைகள் உள்ளப்பூர்வமாக நினைவு செய்கிறார்களோ அதைவிட பலமடங்கு அதிகமாக பாப்தாதாவும் குழந்தைகளை நினைவு செய்கிறார், அன்பு வைக்கிறார். மேலும் எதிரில் வெளிப்படுத்தி டோலி சாப்பிடக்கொடுக்கிறார். இப்பொழுது கூட எதிரில் டோலிவைக்கப்பட்டிருக்கிறது. அனைத்து குழந்தைகளும் தந்தையின் எதிரில் இருக்கிறார்கள். கேக் வெட்டுகிறோம் மேலும் அனைத்துக் குழந்தைகளும் சாப்படுகிறார்கள். எந்தெந்த குழந்தைகள் தன்னுடைய நிலையைப் பற்றி மற்றும் சேவையைப் பற்றிய செய்திகள் எழுதியிருக்கிறார்களோ அவை அனைத்தையும் பாப்தாதா கேட்டார். சேவைக்கான ஊக்கம், உற்சாகம் மிக நன்றாக இருக்கிறது. இப்பொழுது மாயாவின் கொஞ்சம், கொஞ்சம் தடைகளைப் பார்க்கிறீர்கள், அவையும் ஒன்றும் புதிதல்ல. மாயா சோதிப்பதற்காக மட்டும் வருகிறது. மாயாவிடம் பயப்படாதீர்கள். பொம்மை என்று புரிந்து விளையாடினீர்கள் என்றால், மாயா தாக்குதல் செய்யாது. ஆனால் சௌகரியமாக விடை பெற்றால் தான் செல்லும். எனவே என்ன இப்படி ஆகிவிட்டது என்று அதிகமாக யோசிக்காதீர்கள். என்ன நடந்து விட்டதோ அதற்கு முற்றுப்புள்ளி வையுங்கள். மேலும் வரும் நாட்களில் இன்னும் மிச்சம் என்ன இருக்கிறதோ அதை நிரப்பி விடுங்கள். வளர்ந்து கொண்டே இருங்கள். மேலும் வளர்ந்து கொண்டேயிருங்கள். பாப்தாதா உடன் இருக்கிறார். எனவே பயப்படாதீர்கள். குஷியில் ஆடுங்கள், பாடுங்கள், இப்பொழுதோ நம்முடைய இராஜ்யம் வந்தே விட்டது. ஹே, சுய ராஜ்ய அதிகாரியே! உலக இராஜ்ய பாக்கியம் உங்களுகக்காக காத்துக் கொண்டிருக்கிறது.

அனைவருக்கும் மிகுந்த அன்பின் நினைவுகள் மேலும் தடையற்றவர் ஆகுக என்ற வரதானத்தையும் பாப்தாதா கொடுக்கிறார். எந்தக் குழந்தைகள் ஸ்தூல பணத்தின் குறைவு காரணமாக வந்து சேர முடியவில்லையோ அவர் களுக்கும் பாப்தாதா அன்பை வழங்குகிறார். பணம் குறைவாக இருந்தால் கூட மகாராஜா. ஏனென்றால் தற்சமயத்து இராஜாக்களிடம் என்ன இல்லையோ அது இவர்களிடம் அழியாததாக மற்றும் பல பிறவிகளுக்காக சேமிப்பாகியிருக்கிறது. அந்த மாதிரி தற்சமயத்து துக்கமற்ற ஊரின் மகாராஜா மற்றும் எதிர்காலத்து உலகத்தின் மகாராஜாக்களுக்கு மிகுந்த அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். அந்த மாதிரி குழந்தைகள் உள்ளத்தால் இங்கு இருக்கிறார்கள். மேலும் உடலால் அங்கு இருக்கிறார்கள். எனவே குழந்தைகளை பாப்தாதா நேர் எதிரில் பார்த்து, நேர் எதிரில் அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். நல்லது.

வரதானம்:

சம்பூர்ணத்தின் நிலை மூலமாக இயற்கைக்கு ஆணையிடக்கூடிய உலகை மாற்றுபவர் ஆகுக

எப்பொழுது உலகத்தை மாற்றும் ஆத்மாக்கள் நீங்கள் ஒரே குழுவாக சம்பன்னம், சம்பூர்ண நிலை மூலம் உலக மாற்றத்திற்கான எண்ணம் வைப்பீர்களோ அப்பொழுது இந்த இயற்கை முழுமையான குழப்பத்தின் நடனத்தை ஆடத் தொடங்கும். காற்று, நிலம், கடல், நீர், இவைகளின் சீற்றம் தான் சுத்தம் செய்யும். ஆனால் இந்த இயற்கை எப்பொழுது உங்களுடைய ஆணையை ஏற்று நடக்குமென்றால், எப்பொழுது முதலில் உங்களுடைய சகயோகி கர்ம இந்திரியங்கள், மனம்-புத்தி=சம்ஸ்காரம் உங்களுடைய ஆணையை ஏற்று நடக்குமோ அப்பொழுது தான் கூடவே அந்தளவு சக்திசாலியான தபஸ்யாவின் உயர்ந்த நிலை இருக்க வேண்டும். அதாவது உங்கள் அனைவருக்கும் ஒரே நேரத்தில் பரிவர்த்தனை என்ற ஒரே எண்ணம் இருக்க வேணடும் பிறகு இயற்கை ஆஜராகிவிடும்.

சுலோகன்:

தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தின் மூலமாக, அனைவரது பாக்கியத்தை உருவாக்கி, எப்பொழுதும் பகவா஁ நினைவூட்டிக் கொண்ட இருங்கள்.

ஓம்சாந்தி

24.02.1983 காலை முரளி ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## திலாராம் (இதயத்திற்கு ஒய்வளிக்கும்) தந்தையின்

## தில்ரூபா (உள்ளம் கவர்ந்த) குழந்தைகளுடன் சந்திப்பு

இன்று விசேஷமாக எப்பொழுதும் ஊக்கம், உற்சாகத்திருக்கும் குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். சந்திக்க வேண்டும் என்ற எண்ணம் தான் இரவு பகலாக இருந்தது. ஆகார ரூபத்தில் (சூட்சம ரூபத்தில்) சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள், இருந்தாலும் சாகார ரூபத்தில் அதாவது நேரெதிரில் சந்திக்க வேண்டும் என்ற நல்ல விருப்பம் எப்பொழுதுமே இருக்கிறது, இன்று நாம் சந்திக்க வேண்டும் என்று நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தையின் இந்த எண்ணம் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து கொண்டே இருக்கிறது, மேலும் பாப்தாதாவும் இதற்குப் பதிலாக குழந்தைகளை நினைவு செய்து கொண்டே இருக்கிறார், எனவே இன்று முரளி கூறுவதற்காக வரவில்லை, ஆனால் சந்திக்க வேண்டும் என்ற எண்ணத்தை நிறைவேறு வதற்காக வந்திருக்கிறோம், சில சில குழந்தை ஆழ்ந்த இதயத்திலிருந்து எங்களை மஹாவாக்கியங்கள் கூறி சந்திக்கவில்லை என்ற புகாரும் கொடுக்கிறார்கள். பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தையையும் இதயத்தை நிரப்பி சந்திக்க விரும்புகிறார். ஆனால் நேரம் மற்றும் கருவியை (தாதியின் உடல்) பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஆகாரி ரூபத்திலோ, ஒரே நேரத்தில் எத்தனை பேர் விரும்பினாலும், எவ்வளவு நேரம் விரும்பினாலும் அவ்வளவு நேரமும் மேலும் அந்த அத்தனை பேரும் சந்திக்க முடியும். அதற்காக இந்த சந்திப்பு வாய்ப்பில் தான் வரவேண்டும் என்ற விஷயம் இல்லை, ஆனால் எப்பொழுது இந்த பௌதீக உலகில், பௌதீக உடல் மூலம் சந்திப்பு நடக்கிறது என்றால், பௌதீக உலகம் மேலும் பௌதீக உடலின் கணக்கையும் பார்க்க வேண்டிய தாக இருக்கிறது. சூட்சம உலகத்தில் இந்த குரூப் இந்த நாளில் சந்திப்பார்கள் அல்லது ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, அரை மணி நேரத்திற்குப் பிறகு சந்திக்க வாருங்கள் என்று நிர்ணயம் செய்யப்படுமா என்ன? இந்த பந்தனம் உங்களுடைய மற்றும் தந்தையின் சூட்சம உலகத்தில் சந்திப்பு செய்யும் அனுபவிகள் தான் நீங்கள் இல்லையா? அங்கேயோ முழுநாளும் உட்கார்ந்து விட்டாலும் யாரும் எழுப்ப மாட்டார்கள். இங்கேயோ கொஞ்சம் பின்னால போங்க... கொஞ்சம் முன்னால் போங்க... என்று கூறுவார்கள். இருந்தாலும் இரண்டு சந்திப்பும் இனிமையானது, இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகள் நீங்கள் மேலும் பாரதத்தில் இருக்கும் குழந்தைகள் யார்

நாடகத்தின் அனுசாரம் சாகார ரூபத்தில் பாலனை மற்றும் நடைமுறை சொரூபத்தைப் பார்க்க முடியவில்லையோ, நீண்ட காலமாக தேடிய பிறகு, மீண்டும் வந்து சந்திக்கும் அந்த மாதிரி குழந்தைகளை பிரம்மா பாபா மிகவும் நினைவு செய்கிறார். பிரம்மா பாபா அந்த மாதிரி கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளை தாமதமாக வந்திருந்தாலும், ஆகார ரூபம் மூலமாக சாகார ரூபத்தின் அனுபவம் செய்கிறார்கள் என்று மகிமை செய்கிறார், அனுபவத்தின் ஆதாரத்தில் சாகார ரூபத்தை நாங்கள் பார்ககவில்லை என்று கூறுகிறார்கள். சாகாரத்தில் பாலனை பெற்றிருக்கிறோம், மேலும் இப்பொழுதும் பெற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த மாதிரி ஆகார ரூபத்தில் சாகாரத்தை அனுபவம் செய்வது புத்தியின் ஈடுபாட்டின், அன்பின் பிரத்யக்ஷ சொரூபமாகும். ஆகாரத்திலும் சாகார பாபாவைப் பார்க்கிறார்கள். நீங்கள் அந்த மாதிரி செய்கிறீர்கள் தான் இல்லையா? இது குழந்தைகளின் புத்தியின் அதிசயத்தின் அடையாளம். மேலும் திலாராம் தந்தையின் நெருக்கமான இதயப்பூர்வமான அன்பிற்குரிய குழந்தைகள் என்பதின் அடையாளமான இதயத்தின் அன்பிற்குரிய, அப்படிப்பட்ட குழந்தைகள் தான் நீங்கள் இல்லையா! இந்தக் குழந்தைகளின் இதயத்தில் என்ன பாடல் ஒலிக்கிறது? அஹா பாபா! ஆஹா என்னுடைய பாபா!

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் நினைவு செய்கிறார். இவரை நினைவு செய்தார், என்னை நினைவு செய்தாரா அல்லது இல்லையா என்று அப்படி நினைக்காதீர்கள். இவர் மேல் அதிக அன்பு இருக்கிறது, என் மேல் குறைவான அன்பு இருக்கிறது என்று அப்படி அல்ல. நீங்களே யோசித்துப் பாருங்கள். 5 ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு பிரிந்து சென்ற குழந்தைகள் கிடைத்திருக்கிறார்கள் என்றால் 5 ஆயிரம் வருடங்களின் அன்பு ஒன்றாகச் சேர்ந்து, ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்கும் இல்லையா! எனவே 5 ஆயிரம் வருடங்களின் அன்பை 5-6 வருடத்தில் அல்லது 10-12 வருடத்தில் கொடுக்க வேண்டும். கொஞ்ச காலத்தின் எவ்வளவு இருப்பைக் கொடுப்பார்கள், அதிகத்திலும் அதிகம் கொடுத்தால் தானே முழுமையாகும்/ ஒவ்வொரு குழந்தைக் காகவும் தந்தையிடம் அந்தளவு கையிருப்பு இருக்கிறது. அன்பு குறைய முடியாது.

இன்னொரு விஷயம், பாப்தாதா எப்பொழுதும் குழந்தைகளின் விசேஷத்தைப் பார்க்கிறார், குழந்தைகள் சில நேரம் மாயாவின் பிரபாவத்தின் காரணமாக கொஞ்சம் ஆடி அசையும் விளையாட்டை செய்தாலும் கூட பாப்தாதா அந்த நேரத்திலும் இந்தக் குழந்தை வந்திருக்கும் தடையை முழு ஈடுபாட்டுடன் கடந்து வந்து, விசேஷ ஆத்மாவாகி விசேஷ காரியம் செய்யக் கூடியவர் என்ற அந்தப் பார்வையோடுதான் பார்க்கிறார்.தடையிலும் கூடமுழு ஈடுபாட்டின் ரூபத்தைத் தான் பார்க்கிறார் என்றால், அன்பு எப்படி குறைய முடியும்? ஒவ்வொரு குழந்தை

மீதும் எப்பொழுதும் மிக அதிக அன்பு இருக்கிறது, மேலும் ஒவ்வொரு குழந்தையும் எப்பொழுதுமே சிரேஷ்டமானவர் தான். புரிந்ததா?

பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: (நியுயார்க்:)

தந்தையின் குழந்தை ஆவது என்றால் விசேஷ ஆத்மா ஆவது. எப்பொழுதிலிருந்து தந்தையின் குழந்தையாக ஆனீர்களோ, அந்த வேளையிலிருந்தே உலகத்தில் அனைவரையும் விட உயர்ந்த மகிமைக்குரிய மற்றும் பூஜைக்குரிய ஆத்மாவாக ஆனீர்கள். தன்னுடைய மதிப்பை, தன்னுடைய பூஜையை மீண்டும் சைதன்ய ரூபத்தில் பார்க்கவும் செய்கிறீர்கள், மேலும் கேட்டுக் கொண்டும் இருக்கிறீர்கள். அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? பாரதம் எங்கே இருக்கிறது? மேலும் அமெரிக்கா எங்கே இருக்கிறது? ஆனால் தந்தை ஒவ்வொரு மூலையிலிருந்தும் தேர்ந்தெடுத்து ஒரே தோட்டத்தில் கொண்டு வந்திருக்கிறார், இப்பொழுது நீங்கள் அனைவரும் யார்? அல்லாவின் தோட்டத்தின் ரோஜா மலர்கள். இந்த தேசத்தைச் சேர்ந்தவர்கள், இவர் இந்த தேசத்தைச் சேர்ந்தவர் என்று பெயரை கூற வேண்டியதாகத் தான் இருக்கிறது, ஆனால் நீங்கள் அனைவரும் ஒரே தோட்டத்தைச் சேர்ந்த ஒரே தந்தையின் வளர்ப்பில் வரக்கூடிய ஆன்மீக ரோஜாமலர்கள். இப்பொழுது நாம் அனைவரும் அந்த ஒருவரின் குழந்தைகள் என்ற உணர்வு ஏற்படுகிறது தான் இல்லையா? மேலும் நாம் அனைவரும் ஒரு பாதையில், ஒரு இலட்சியத்தை சென்றடைபவர்கள். தந்தையும் ஒவ்வொருவரையும் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். அனைவரின் சுபபாவனை, அனைவரின் சேவையின் களைப்பற்ற ஈடுபாடு, திட எண்ணம் பிரத்யக்ஷமாக நன்கு தென்படுகிறது, நாலாபுறங்களின் ஊக்கம், உற்சாகத்தின் சகயோகம் நல்ல ரிஸல்ட்டைக் காண்பித்திருக்கிறது. வெளியிலிருந்து வரும் செய்திகள் பாரதத்திலுள்ள சேர்ந்தவர்களை எழுப்பிவிடும், எனவே பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார்.

பார்படாஸ்:

குழந்தைகள் நம்பர் ஒன் ஆவதற்கான வழியை பாப்தாதா எப்பொழுதும் கூறுகிறார். ஒருவர் எவ்வளவு தான் பிற்காலத்தில் வந்திருந்தாலும் முன்னுக்குச் சென்று நம்பர் ஒன்னைப் பெற முடியும். என்னுடைய உயர்ந்த பங்கு இருக்குமா அல்லது இல்லையா? நான் எப்படி முன்னுக்குச் செல்வேன் என்று தெரியவில்லையே என்று அப்படி யோசிக்கவில்லையே? பாப்தாதாவிடம் பிற்காலத்தில் வருபவர்களானாலும், எந்த தேசத்தைச் சேர்ந்தவராக

இருந்தாலும், எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த நம்பிக்கையுள்ளவராக இருந்தாலும், ஆனால் அனைவருக்கும் முழு அதிகாரம் இருக்கிறது. தந்தை ஒருவர் என்றால் உரிமையும் ஒரே மாதிரி தான். தைரியம் மற்றும் ஈடுபாட்டின் விஷயம் மட்டும் தான். ஒருபொழுதும் தைரியமற்றவர்களாக ஆகாதீர்கள். யார் எவ்வளவு தான் மனமுடையச் செய்தாலும், உங்களுக்கு என்னவாகிவிட்டது என்று தெரியவில்லை, எங்கே சென்று விட்டீர்கள் என்று கூறினாலும் நீங்கள் அவர்கள் கூறும் விஷயத்தின் பாதிப்பில் வராதீர்கள், நன்றாகத் தெரிந்து, புரிந்து உறுதியான ஒப்பந்தம் செய்தீர்கள் இல்லையா! நான் தந்தையினுடையவன், தந்தைஎன்னுடையவர் என்று உறுதி செய்தீர்கள் இல்லையா! தந்தை ஒவ்வொரு குழந்தையையும் அதிகாரி ஆத்மா என்று நினைக்கிறார். யார் எவ்வளவு பெற்றுக் கொள்வதற்கும் எந்த தடையும் இல்லை, இப்பொழுது எந்த சீட்டும் (இருக்கை/பதவி) பதிவு செய்யப்படவில்லை, இப்பொழுது அனைத்து சீட்டும் காலியாக இருக்கிறது. வீசில் ஊதப்படவே இல்லை எனவே தைரியம் வைத்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் தந்தையும் பல மடங்கு உதவியை வழங்கிக் கொண்டே இருப்பார்.

கனடா:

எப்பொழுதும் பறக்கும் கலையில் செல்வதற்கான ஆதாரம் என்ன? டபுள் லைட், அந்த மாதிரி நீங்கள் எப்பொழுதும் பறக்கும் பறவை தான் இல்லையா! பறக்கும் பறவை ஒருபொழுதும் எந்த பந்தனத்திலும் வராது. கீழே வந்தீர்கள் என்றால், பந்தனத்தில் கட்டப்பட்டு விடுவீர்கள். எனவே எப்பொழுதும் மேலே பறந்து கொண்டே இருங்கள். பறக்கும் பறவை என்றால் அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்டவர், வாழ்க்கையில் பந்தனமற்றவர். கனடாவில் அறிவியலும் பறக்கும் கலையைக் கற்றுக் கொடுக்கிறது தான் இல்லையா! எனவே கனடாவில் இருப்பவர்கள் எப்பொழுதுமே பறக்கும் பறவைகள்.

சான்பிரான்ஸிஸ்கோ:

அனைவரும் தன்னை உலகில் விசேஷ பங்கைச் செய்யும் கதாநாயக நடிகர் என்று புரிந்து தன் பங்கைச் செய்கிறீர்களா? (சில நேரம்) குழந்தைகளின், சில நேரம் என்ற வார்த்தையை கேட்டு பாப்தாதாவிற்கு ஆச்சர்யம் ஏற்படுகிறது. தந்தையின் துணை எப்பொழுதுமே இருக்கிறது என்றால், எப்பொழுதும் அவருடைய நினைவு இருக்கும் இல்லையா! தந்தையைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? அவரை நினைவு செய்கிறீர்கள். மற்றவர்களை நினைவு செய்து செய்து என்ன அடைந்தீர்கள், மேலும் எங்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள், இதன் அனுபவமும் இருக்கிறது,

எப்பொழுது இதையும் அனுபவம் செய்து விட்டீர்கள் என்றால், இப்பொழுது தந்தையைத்தவிர வேறு நினைவு எப்படி வர முடியும். அனைத்து சம்பந்தங்களையும் ஒரு தந்தையிடம் அனுபவத்தை செய்தீர்களா அல்லது ஏதாவது மிச்சம் இருக்கிறதா? எப்பொழுது ஒருவர் மூலமாக அனைத்து சம்பந்தங்களின் அனுபவம் செய்ய முடியும் என்றால், அனேக பக்கங்கள் செல்வதற்கு அவசியம் என்ன இருக்கிறது? இதைத் தான் ஒரு பலம், ஒருவர் மீது நம்பிக்கை என்று கூறுவது. நல்லது.

அனைவரும் நல்ல முயற்சி செய்து விசேஷ ஆத்மாக்களைத் தொடர்பில் கொண்டு வந்திருக்கிறீர்கள். யாரெல்லாம் சேவையில் சகயோகம் கொடுத்தார்களோ, அந்த சகயோகத்திற்குப் பலனாக அனேக ஜென்மங்கள் வரை சகயோகம் பிராப்தி ஆகிக் கொண்டே இருக்கும். ஒரு ஜென்மத்தில் செய்த உழைப்பின் காரணமாக அனேக ஜென்மங்கள் உழைக்க வேண்டும் என்பதிலிருந்து விடுபட்டு விட்டீர்கள். சத்யுகத்தில் எந்த உழைப்பும் செய்ய மாட்டீர்கள். பாப்தாதா குழந்தைகளின் தைரியம் மற்றும் கருவியாகும். பாவனையைப் பார்த்து குஷியடைகிறார். ஒருவேளை கருவி என்ற உணர்வில் செய்யவில்லை என்றால், ரிஸல்ட்டும் கிடைப்பதில்லை. நல்லது.

05.11.2017 காலை முரளி ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா

ரிவைஸ் 27.02.1983 மதுபன்

இன்று தந்தை மற்றும் குழந்தைகள் சந்திப்பின் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். திருவிழாவில் மிகவும் வகை வகையான மற்றும் அழகழகான பொருட்கள், மிக அழகான அலங்கரிப்பு மற்றும் ஒவ்வொருவரையும் சந்திப்பது இவை அனைத்தும் இருக்கும். பாப்தாதா இந்த இனிமையான சந்திப்பில் என்ன பார்த்துக் கொண்டிருக்கிறார் என்றால், இந்த மாதிரி ஆன்மீகமாக அலங்கரிக்கப்பட்ட சந்திப்பு, சங்கமயுகத்தைத் தவிர வேறு எந்த நேரத்திலும் கொண்டாட முடியாது. ஒவ்வொருவரும், ஒருவர் இன்னொருவரை விட விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட விலைமதிக்க முடியாத இரத்தினம். தன்னுடைய அலங்காரத்தைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா! அனைவரின் தலையில் எவ்வளவு அழகான ஒளியின் கீரிடம் மின்னிக் கொண்டிருக்கிறது. இதே ஒளிக் கீரீடத்தின் நடுவில் ஆத்மாவின் அடையாளம் எவ்வளவு மின்னிக் கொண்டிருக்கும் மணி

மாதிரி பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. தன்னுடைய கிரீடம் அணிந்த சொரூபத்தைப் பார்க்கிறீர்களா? ஒவ்வொருவரும் தெய்வீக குணங்களின் அலங்காரத்தினால் எவ்வளவு அலங்கரிக்கப்பட்ட அழகான மூர்த்திகளாக இருக்கிறீர்கள்! அந்த மாதிரி அழகான அலங்காரம், அதன் மூலம் உலகின் அனைத்து ஆத்மாக்களும் விரும்பாவிட்டாலும், உங்கள் பக்கம் இயல்பாகவே கவர்ந்திழுக்கப்படுகிறார்கள். அந்த மாதிரி உயர்ந்த அழியாத அலங்காரம் செய்திருக்கிறீர்களா? இந்த நேரத்தின் உங்களுடைய அலங்காரத்தின் நினைவாக உங்களுடைய ஜட விக்ரஹங்களையும் பக்தர்கள் மிக அழகாக அலங்கரித்துக் கொண்டே இருப்பார்கள். இந்த நேரத்தின் அலங்காரம் அரைக் கல்பம் சைதன்ய தேவ ஆத்மாவின் ரூபத்தில் அலங்கரிக்கப் படுவீர்கள், மேலும் அரைக்கல்பம் ஜட விக்ரஹங்கள் ரூபத்தில் அலங்கரிக்கப்படுவீர்கள். அந்த மாதிரியான அலங்காரம் பாப்தாதா மூலமாக அனைத்து குழந்தைகளுக்கும் ஆகிவிட்டது. பாப்தாதா இன்று குழந்தைகளின் மூன்று சொரூபத்தையும், தற்சமயத்தின் மேலும் தன்னுடைய இராஜ்யத்தின் தேவ ஆத்மாவின் மற்றும் பக்தி மார்க்கத்தின் நினைவு சின்ன விக்ரஹம் என்று ஒவ்வொரு குழந்தையின் மூன்று சொரூபத்தையும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். நீங்கள் அனைவரும் கூட தன்னுடைய மூன்று ரூபங்களைத் தெரிந்து கொண்டீர்கள் தான் இல்லையா! தன்னுடைய மூன்று ரூபத்தையும் ஞானக் கண் மூலம் பார்த்திருக்கிறீர்கள் இல்லையா!

இன்றோ பாப்தாதா சந்திக்க வேண்டும் என்ற முறையீட்டை பூர்த்தி செய்வதற்காக வந்திருக்கிறார். இந்த அதிசய செயல் குழந்தைகளினுடையது தான். பந்தனமற்றவரையும் பந்தனத்தில் கட்டிப் போட்டு விடுகிறார்கள்,.பாப்தாதாவிற்கும் இந்தக் கணக்குப்படி சந்தியுங்கள் என்று கணக்கை கற்றுக் கொடுக்கிறார்கள். அப்படியானால் மந்திரவாதியாக குழந்தைகள் ஆனார்கள் அல்லது தந்தையா? அந்த மாதிரி அன்பின் மந்திரம் செய்யும் குழந்தைகள், அந்த மாதிரி இருக்கிறார்கள், தந்தைக்குக் குழந்தைகளைத் தவிர வேறு எதுவுமே பிடிப்பதில்லை. குழந்தைகளை நிரந்தரமாக நினைவு செய்கிறார். நீங்களும் உணவு அருந்துகிறீர்கள் என்றால் கூட அந்த ஒருவரைத் தான் ஆவாஹனம் செய்கிறீர்கள். அப்படி எத்தனை குழந்தைகளுடன் உணவு அருந்த வேண்டியதாக இருக்கிறது. உணவு அருந்துவதற்கு எத்தனை தடவை அழைக்கிறீர்கள். சாப்பிடுகிறோம், செல்கிறோம், செல்கிறீர்கள் என்றாலும் கையோடு கை கோர்த்து செல்கிறீர்கள், தூங்குகிறீர்கள் என்றாலும், தந்தையுடன் தூங்குகிறீர்கள், எனவே இவ்வளவு அனேக குழந்தைகளுடன் சாப்பிடுகிறோம், தூங்குகிறோம், செல்கிறோம் என்றால், பிறகு என்ன நேரம் இருக்கும், ஏதாவது காரியம் அதாவது வேலை செய்கிறீர்கள் என்றாலும், வேலை உங்களுடையது, நாங்கள் ஒரு கருவி என்று தான் கூறுகிறீர்கள். நீங்கள் செய்யுங்கள், செய்வியுங்கள், நாங்கள் ஒரு கருவியாகி கையை ஈடுபடுத்துகிறோம். எனவே அதையும் செய்ய வேண்டியதானது இல்லையா! மேலும் பிறகு எந்த நேரம் ஏதாவது கொஞ்சம் புயல்

வந்தாலும், நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ, அது உங்களுக்குத் தான் தெரியும். புயல்களை அகற்றும் காரியத்தையும் தந்தையிடமே கொடுக்கிறார்கள். செய்யும் காரியத்தின் சுமையையும் தந்தையிடம் கொடுக்கிறார்கள். தன் கூடவே எப்பொழுதும் வைத்துக் கொள்கிறார்கள், அப்படியானால் பெரிய மந்திரவாதியாக யார் ஆகிறார்கள்? புஜங்களின் சகயோகமின்றி எதுவும் நடக்க முடியாது, எனவே தான் மாலையை ஜெபிக்கிறார்கள் இல்லையா! நல்லது.

ஆஸ்டிரேலியாவைச் சேர்ந்த குழந்தைகள் மிக நல்ல தியாகம் செய்திருக்கிறார்கள், மேலும் ஒவ்வொரு தடவையும் செய்கிறார்கள், எப்பொழுதுமே கடைசியில் வந்தவர்களும் வேகமாகச் சென்று மேலும் முதலில் வருகிறார்கள். எவ்வளவு அவர்கள் தியாகம் செய்கிறார்களோ, மற்றவர்களை முன்னுக்கு வைக்கிறார்களோ, அந்த அளவே எத்தனை பேர் சந்தித்துக் கொண்டிருக்கிறார்களோ, அந்த அனைவரின் கொஞ்சம் கொஞ்சம் பங்கு ஆஸ்டிரேலியாவைச் சேர்ந்தவர்களுக்கும் கிடைத்து விடுகிறது. அப்படியானால் தியாகம் செய்தார்களா அல்லது பாக்கியத்தைப் பெற்றார்களா? மேலும் கூடவே யு.கே வினுடையதும் மிகப்பெரிய குரூப். இவை இரண்டுமே முதன் முதலில் பொறுப்பேற்ற சென்டர்கள் மேலும் விசாலமான செண்டர்கள். ஒன்றிலிருந்து அனேக இடங்களில் தந்தையைப் பிரத்யக்ஷம் செய்யக் கூடிய குழந்தைகள், எனவே இருவர்களுமே (ஆஸ்டிரேலியா,யூ.கே) பெரியவர்களை, மற்றவர்களை முன்னுக்கு வைக்க வேண்டியதாக இருக்கும், மற்றவர்களின் குஷியில் நீங்கள் அனைவரும் குஷியாக இருக்கிறீர்கள் தான் இல்லையா! பார்த்தளவில் இரண்டு இடங்களின் சேவாதாரி, சகயோகி, அன்பான குழந்தைகள் அனைத்து விஷயத்திலும் கூட சகயோகி ஆவதில் மஹாதானி குழந்தைகள். பாப்தாதாவிற்கு அனைத்து குழந்தைகளும் நினைவில் இருக்கிறார்கள். அனைவரையும் சந்திப்போம். எவ்வளவு தொலைதூரத்திலிருந்து குழந்தைகள் சந்திக்க வேண்டும் என்ற ஊக்கத்தோடு தங்களுடைய இனிமையான இல்லத்திற்கு வந்து சேர்ந்து விட்டார்கள் என்று பாப்தாதாவிற்கும் குஷி ஏற்படுகிறது. பறந்து பறந்து வந்து சேர்ந்து விடுகிறீர்கள். ஸ்தூலமாக எந்த தேசத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், ஆனால் அனைவருமே ஒரு தேசத்தை சேர்ந்தவர்கள் தான். அனைத்துமே ஒன்று தான். ஒரு தேசம், ஒரு வழி மற்றும் ஒரே சீரான நிலையில் நிலைத்திருப்பவர். இந்த காரணமாக தேசத்தின் பெயரைச் சொல்கொஞ்ச நேரம் சந்திப்பதற்காக கூறப்படுகிறது. நீங்கள் அனைவருமே ஒரு தேசத்தைச் சேர்ந்தவர்கள் தான். சாகாரத்தின் கணக்குப்படியும் இந்த நேரம் அனைவரும் மதுபன் நிவாசிகள், மதுபன் நிவாசி என்று தன்னை நினைப்பது பிடித்திருக்கிறது தான் இல்லையா!

புதிய இடங்களில் சேவையின் வெற்றிக்கான ஆதாரம்

ஏதாவது புதிய ஸ்தானத்தில் சேவையை தொடங்குகிறீர்கள் என்றால், ஒரே நேரத்தில் அனைத்து விதமான சேவைகளையும் செய்யுங்கள். மனதில் சுப பாவனை, வார்த்தையில் தந்தையோடு சம்பந்தத்தை இணைப்பது மேலும் சுப விருப்பத்தின் உயர்ந்த வார்த்தைகள் மேலும் சம்பந்தம் நெருக்கத்தில் வருவதினால், அன்பு மற்றும் அமைதியின் சொரூபத்தினால் கவர்ந்து இழுங்கள். அப்படி அனைத்து விதமான சேவையினால் வெற்றியை அடைவீர்கள். வார்த்தைகளால் மட்டுமின்றி, ஆனால் ஒரே நேரத்தில் சேர்ந்தே சேவை இருக்கட்டும், அந்த மாதிரி திட்டத்தை உருவாக்குங்கள், ஏனென்றால், யாருக்காவது சேவை செய்வதற்கக விசேஷமாக தன்னை அந்த நிலையில் நிலைத்திருக்கச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. சேவையின் ரிஸல்ட் என்னவாக இருந்தாலும் சரி, ஆனால் சேவையின் ஒவ்வொரு அடியிலும் நன்மை அடங்கியிருக்கிறது. ஒருவர் இங்கு வரை வந்து சேர்ந்து விட்டாலும் கூட இதிலேயும் வெற்றி நிரம்பியே இருக்கிறது. அனேக ஆத்மாக்களின் பாக்ய ரேகையைப் போடுவதற்கு பொறுப்பானவராக இருக்கிறீர்கள். அந்த மாதிரி விசேஷ ஆத்மா என்று புரிந்து சேவை செய்து கொண்டே இருங்கள். நல்லது.

வரதானம்:

பரமாத்மா அன்பின் சக்தி மூலம் அசம்பவத்தையும் சம்பவமாக்கக் கூடிய பதமாபதம் பாக்கியவான் ஆகுக.

பதமாபதம் (பல மடங்கு) பாக்கியம் நிறைந்த குழந்தைகள் எப்பொழுதும் பரமாத்மாவின் அன்பில் முழ்கி இருப்பார்கள். பரமாத்ம அன்பின் சக்தி எந்த ஒரு சூழ்நிலையையும் உயர்ந்த நிலையில் மாற்றி விடுகிறது. அசம்பவ காரியம் கூட சம்பவமாகி விடுகிறது. கடினம் சுலபமாகி விடுகிறது, ஏனென்றால் ஒவ்வொரு பிரச்சனையையும் கடந்து செல்வதில் அன்பிற்குரியவர் மேல் அந்த உறவின் முறை வைத்து கடமையைச் செய்வோம் என்ற உறுதிமொழி இருக்கிறது. ஆனால் எப்போதாவது அன்பு வைத்திருப்பவர்கள் ஆகாதீர்கள். எப்பொழுதுமே அன்பு வைத்து நடந்து கொள்வர்களாக ஆகுங்கள்.

சுலோகன்

தன்னுடைய சிரேஷ்ட காரியம் மற்றும் சிரேஷ்ட நடத்தை மூலமாக ஆசீர்வாதங்களை சேமித்து விட்டீர்கள் என்றால், மலை போன்ற விஷயமும் கடுகிற்குச் சமமாக அனுபவம் ஆகும்

ஓம்சாந்தி

01.03.1983 ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## உலகின் ஒவ்வொரு இடத்திற்கும் ஆன்மீக ஒளி மற்றும் ஞான நீரைக் கொண்டு செல்லுங்கள்

இன்று பாப்தாதா சூட்சமவதனத்தில் ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தார்கள். கூடவே குழந்தைகளின் சாரலையும் பார்த்துக் கொண்டிருந்தோம். தற்சமயம் மதுபன் வரதான பூமியில் எப்படி குழந்தைகளின் சாரல் தூவுதல் நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்தோம். மதுபன் பவர் ஹவுஸிலிருந்து எத்தனை ஆன்மீக மின் தொடர்பு சென்றிருக்கின்றன என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். எப்படி ஸ்தூல பவர்ஹவுஸிலிருந்து (மின் உற்பத்தி நிலையத்திலிருந்து) அனேக இடங்களுக்கு மின் இணைப்பு செய்யப்படுகிறது. அதே போல் இந்த பவர் ஹவுஸிலிருந்து எத்தனை பக்கங்களுக்கு இணைப்பு சென்றிருக்கிறது, மேலும் எத்தனை இடங்களுக்கு இணைப்பு செல்லவில்லை. எப்படி இன்றைய நாட்களில் அரசாங்கமும் தங்களுடைய தேசத்தில் அனைத்து இடங்களிலும், அனைத்து கிராமங்களிலும் நாலா புறங்களிலும் மின்சாரம் மற்றும் தண்ணீர் கிடைப்பதற்காக ஏற்பாடு செய்வதற்கு முயற்சி செய்கிறார்கள். பாண்டவ அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது? ஞான கங்கைகள் நாலாபுறங்களிலும் செல்கின்றனவா? மின் உற்பத்தி நிலையத்திலிருந்து நாலாபுறங்களிலும் மின் இணைப்பு செல்கிறதா? எப்படி மேலே இருந்து எந்த ஒரு நகரத்தை அல்லது கிராமத்தைப் பார்த்தீர்கள் என்றால், சில இடங்களில் வெளிச்சம், அருகிலிருக்கும் வெளிச்சமா அல்லது தூரமாக தென்படும் வெளிச்சமா என்ற அந்தக் காட்சி தெளிவாகத் தென்படும். பாப்தாதாவும் சூட்சம வதனத்திலிருந்து எத்தனை பக்கங்களில் வெளிச்சம் இருக்கிறது. மேலும் எத்தனை இடங்களுக்கு வெளிச்சம் இன்னும் சென்றடையவில்லை என்ற காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பாரதம் மற்றும் வெளிநாடுகளில் இன்னும் பல இடங்களுக்கு இணைப்பை கொடுக்க வேண்டியதிருக்கிறது என்ற ரிஸல்ட்டை நீங்களும் தெரிந்திருக்கிறீர்கள். எப்படி மின்சாரம் மற்றும் தண்ணீர் இல்லாத இடத்திற்கு எந்த மதிப்பும் இருப்பதில்லை. அதே போல் எங்கு ஆன்மீக மின்சாரம் மற்றும் ஞான நீருக்கான தேவை நிறைவேறவில்லையோ அங்குள்ள சைதன்ய ஆத்மாக்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள்? இருளில், தாகத்தில் அலைந்து கொண்டிருக்கிறார்கள், துடித்துக் கொண்டிருக்கிறார்கள், அந்த மாதிரி ஆத்மாக்களின் மதிப்பு எப்படி இருக்கிறது என்று கூறுகிறீர்கள்? சோழிக்குச் சமமானது, மேலும் வைரத்திற்குச் சமமானது என்ற படத்தை வரைகிறீர்கள் தான் இல்லையா! மின்சாரம் மற்றும் ஞான நீர் கிடைப்பதால் சோழியிலிருந்து வைரமாகி விடுகிறார்கள். அப்படி மதிப்பு அதிகரித்து விடுகிறது தான் இல்லையா! பாரதம்

மற்றும் வெளிநாடுகளிலிருந்து வந்திருக்கும் குழந்தைகள் பவர்ஹவுஸிலிருந்து விசேஷமாக பவரை எடுத்துக் கொண்டு அவரவர்கள் ஸ்தானத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரு பக்கமோ, குழந்தைகள் மேல் உள்ள அன்பில் மதுபன் அதாவது பாப்தாதாவின் வீட்டின் அலங்காரம் சென்று கொண்டிருக்கிறது என்று பாப்தாதா நினைக்கிறார். மதுபன்னில் அழகு அல்லது இனிமையான இல்லத்தின் ஜொலிப்பு என்னவாகி விடுகிறது. குழந்தைகளும் மதுபன்னின் அழகு அதிகரிக்கும் எங்களுடைய அன்பிற்குரிய துணைவர்கள் வந்திருக்கிறார்கள் என்று உணருகிறார்கள். எப்படி நீங்கள் உங்களுடைய ஊரில் நினைவு செய்கிறார்கள், போனாலும் வந்தாலும், அமர்ந்தாலும் எழுந்தாலும், மதுபனின் நினைவு எப்பொழுதும் பசுமையாக இருக்கிறதோ, அதே போல் பாப்தாதா மற்றும் மதுபன் நிவாசிகள் உங்கள் அனைவரையும் நினைவு செய்கிறார்கள். அன்பின் கூடவே சேவையும் ஒரு முக்கியமான பாடம், எனவே அன்பின் காரணமாக இங்கேயே அமர்ந்து விடுவோம் என்று நினைக்கிறார்கள். ஆனால் சேவையின் காரணமாக நாலாபுறங்களிலும் செல்லத்தான் வேண்டியதிருக்கிறது, ஆம்! அந்த மாதிரியான நேரமும் வரும், எங்கும் செல்ல வேண்டியதாக இருக்காது, ஆனால் ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டே நாலாபுறங்களிலும் உள்ள, விட்டில் பூச்சிகள் தானாகவே ஒளியை நோக்கி வருவார்கள். இதுவோ ஒரு சின்ன மாதிரியைப் பார்த்தீர்கள், அபு எங்களுடைய ஊர்தான் என்ற உதாரண மாதிரியைப் பார்த்தீர்கள். இப்பொழுதோ வாடகைக்கு வீடு எடுக்க வேண்டியதாக இருக்கிறது. நாலா புறங்களிலும் ஃப்ரிஷ்தா தென்படும் மாதிரியான காலமும் வரும். இப்பொழுது வாய் மூலம் சேவையின் பங்கு நடந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கிறது. எனவே தூர இடங்களுக்கு செல்ல வேண்டியதிருக்கிறது. இப்பொழுது ஏற்கனவே கூறியது போல் சிரேஷ்ட எண்ணத்தின் சக்திசாலியான சேவை, இறுதியில் அந்த சேவையின் சொரூபம் தான் தெளிவாகத் தென்படும், என்னை யாரோஅழைக்கிறார்கள் ஏதோதிவ்ய புத்தி மூலமாக, சுப எண்ணத்தின் அழைப்பு வந்து கொண்டிருக்கிறது என்று அனுபவம் செய்வார்கள். சிலர் திவ்ய திருஷ்டி மூலமாக தந்தை மற்றும் ஸ்தானத்தை பார்ப்பார்கள், இரண்டு விதமான அனுபவங்கள் மூலமாக மிக அதி வேகத்தில் தமது உயர்ந்த புகலிடத்திற்கு வந்து சேர்ந்து விடுவார்கள், இந்த வருடம் என்ன செய்வீர்கள்?

முயற்சி நன்றாகச் செய்திருக்கிறீர்கள். இந்த வருடம் மீதமிருக்கும் இடங்களுக்கு ஒளியோ கண்டிப்பாக கொடுப்பீர்கள், ஆனால் ஒவ்வொரு இடத்திற்கும் விசேஷம் இருக்கிறது. இந்த

வருடம் ஒவ்வொரு சேவை நிலையங்களில் அதிலேயும் முக்கியமாக என்ன என்ன பெரிய சேவை நிலையங்கள் இருக்கின்றனவோ, அதில் எப்படி எப்போதாவது மத மாநாடு வைத்தீர்கள் என்றால், அனைத்து மதத் தலைவர்களையும் அழைத்து செய்கிறீர்கள், அரசியலைச் சேர்ந்தவர்களை அழைக்கிறீர்கள், விசேஷமாக அறிவியலைச் சேர்ந்தவர்களையும் அழைக்கிறீர்கள், வேறு வேறு விதமான அன்பு சந்திப்பை செய்கிறீர்கள், எனவே இந்த வருடம் ஒவ்வொரு இடத்தில் அனைத்து விதமான விசேஷ தொழில் செய்பவர்களை, சம்பந்தத்தில் வருபவர்களை தயார் செய்யுங்கள். எப்படி இப்பொழுது இங்கு கருப்பாக இருப்பவர்கள், வெள்ளையாக இருப்பவர்கள் அப்படி அனைத்து வகை யானவர்களும் இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். தேசத்தைச் சேர்ந்தவர்கள், மதத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள், அதே போல் இங்கு அனைத்து தொழில் செய்பவர்களும் இங்கு இருக்கிறார்கள் என்று கூற வேண்டும், விசேஷ ஆத்மாக்கள் ஒரே பூச்செண்டில் இருக்கும் பல விதமான மலர்கள் மாதிரி தென்பட வேண்டும். ஒவ்வொரு செண்ட்டரிலும் ஒவ்வொரு தொழில் புரியும் விசேஷ ஆத்மாக்களின் குழு இருக்க வேண்டும். அதன் மூலம் ஒரு தந்தையின் ஒரே சத்திய ஞானம் அனைத்து தொழில் புரிபவர்களுக்கும் எவ்வளவு சகஜமாக மற்றும் சரளமாக இருக்கிறது என்ற செய்தி உலகில் மிக வலுவான ஓசையில் பரவ வேண்டும். அதாவது ஒவ்வொரு சேவை நிலையத்தின் மேடையிலும் அனைத்து தொழில் செய்வர்களும் ஒன்றாகச் சேர்ந்து தென்பட வேண்டும். எந்த ஒரு தொழில் செய்பவரும் தங்கிப் போய் விடக்கூடாது. ஏழை யிருந்துசெல்வந்தர் வரை, கிராம மக்களிலிருந்து பெரிய நகரத்தில் வசிப்பவர் வரை, வேலையாட்களிலிருந்து பெரிய தொழிலதிபர்கள் வரை அனைத்து விதமான விசேஷ ஆத்மாக்களின் ஆன்மீகக் கூட்டம் தென்பட வேண்டும். அதன் மூலம் இந்த ஈஸ்வரிய ஞானம் இவர்களுக்காக மட்டும் தானா என்று யாரும் கூறக்கூடாது அனைவரின் தந்தை அனைவருக்காக இருக்கிறார். குழந்தைகளிலிருந்து மிகவும் வயது முதிர்ந்தவர் வரை விசேஷமாக எனக்காக இந்த ஞானம் என்று அனைவரும் அனுபவம் செய்ய வேண்டும். எப்படி அனைத்து பிராமணர்களும் உங்கள் மனதிலிருந்து, இதயத்திலிருந்து என்னுடைய பாபா என்ற வார்த்தை வெளியாகிறது. அதே போல் உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் உலகின் ஒவ்வொரு தொழில் செய்யும் ஆத்மாவும், எனக்காக தந்தை வந்திருக்கிறார், எனக்காகத்தான் இந்த ஞான ஆதாரம் என்று உள்ளப் பூர்வமாக சொல்ல வேண்டும். ஞான வள்ளல் மற்றும் ஞானம், இரண்டிற்காகவும் அனைத்து பக்கங்களிலிருந்தும் அனைத்து விதமான ஆத்மாக்களிடமிருந்தும் இந்த வார்த்தை தான் வெளியாக வேண்டும், பொதுவாக அனைத்து துறையைச் சேர்ந்தவர்களின் சேவையை செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள், ஆனால் ஒவ்வொரு ஸ்தானத்திலும் அனைத்து வகையினரும் இருக்க வேண்டும். மேலும் பிறகு அந்த மாதிரி பல வகையான தொழில் புரிபவர்களின் பூச்செண்டை பாப்தாதாவிடம் கொண்டு

வாருங்கள். பிறகு ஒவ்வொரு சேவை நிலையமும் உலகின் அனைத்து ஆத்மாக்களின் குழுவின் ஒரு விசேஷ சைத்தன்ய கண்காட்சியகம் ஆகிவிடும். புரிந்தா? யாரெல்லாம் தொடர்பில் இருக்கிறார்களோ, அவர்களை சம்பந்தத்தில் கொண்டு வந்து சேவையின் மேடையில் கொண்டு வாருங்கள். அவ்வப்போது யாரெல்லாம் வி.ஐ.பி மற்றும் ஊடகத்துறையைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறார்களோ, அவர்களை சேவையின் மேடையில் கொண்டு வந்து கொண்டே இருங்கள். அதனால் வாயினால் பேசுவதையும் விட அந்த வாயினால் கூறப்பட்ட வார்த்தைகள் அந்த ஆத்மாக்களை ஈஸ்வரிய பந்தனத்தில் கட்டிப் போடுவதற்கான சாதனம் ஆகிவிடும். மிக நன்றாக இருக்கிறது என்று ஒரு தடவை கூறினார், பிறகு சம்பந்தத்திலிருந்து தூரமாகி விட்டார் என்றால், மறந்து போய் விடுகிறார்கள், ஆனால் அடிக்கடி மிக நன்றாக இருக்கிறது. மிக நன்றாக இருக்கிறது என்று அனேகர்களின் எதிரில் கூறிக் கொண்டே இருந்தார்கள் என்றால், அவர்களுக்கு நன்றாக ஆக வேண்டும் என்ற உற்சாகத்தை அதிகரிக்கிறது, மேலும் எத்தனை பேர்கள் மேல் பிரபாவம் ஏற்படுகிறதோ, அந்த ஆத்மாக்களின் பங்கு அவர்களுக்கும் கிடைத்து விடுகிறது, அதாவது அவர்களின் கணக்கில் புண்ணியத்தின் மூலதனம் சேமிப்பாகி விடுகிறது என்ற சூட்சம நியமும் இருக்கிறது. மேலும் அதே புண்ணியத்தின் மூலதனம் அதாவது புண்ணியத்தின் சிரேஷ்ட காரியம் சிரேஷ்டமாவதற்கான, அவர்களை இழுத்துக் கொண்டே இருக்கும். எனவே யாரெல்லாம் தந்தையின் பூமியிலிருந்து நேரடியாக ஏதாவது கொஞ்சம் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அது கொஞ்சமாக் இருந்தாலும் அல்லது அதிகமாக இருந்தாலும், அவர்கள் மூலம் தானம் செய்வியுங்கள் அதாவது சேவை செய்வியுங்கள். எப்படி ஸ்தூல செல்வத்தின் பலனாக அற்பக் கால இராஜ்யம் கிடைக்கிறது. அதே போல் இந்த ஞானச் செல்வம் மற்றும் அனுபவத்தின் செல்வத்தை தானம் செய்வதினால் கூட புது இராஜ்யத்தில் வருவதற்குப் பாத்திரமானவராக ஆக்கி விடும். மிக நன்றாக பிரபாவிக்கப் பட்டிருக்கிறார்கள், இப்பொழுது அந்த பிரபாவித்த ஆத்மாக்கள் மூலமாக சேவை செய்வித்து அந்த ஆத்மாக்களையும் சேவையின் பலம் மூலமாக முன்னேற்றுங்கள், மேலும் அனேகர்களுக்காக பொறுப்பாளர் ஆக்குங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? சேவையேவளர்ச்சி அடைந்து கொண்டே தான் இருக்கிறது. மேலும் அடைந்து கொண்டே இருக்கும். ஆனால் இப்பொழுது வகுப்பு மாணவர்களில் பலவகையினரை உருவாக்குங்கள். இப்பொழுதோ வெளிநாட்டினரின் சாகார ரூபத்தில் சந்திப்பதின் சீசனின் பங்கு இந்த வருடத்திற்காக முடிவடைகிறது. ஆனால் பாரதத்தைச் சேர்ந்தவர்களின் வரத்து நடந்து கொண்டிருக்கிறது. சாகார உலகித்தில் நேரத்தின் நியமம் உருவாக்க வேண்டியதாக இருக்கிறது. மேலும் சூட்சம வதனத்தில் இந்த பந்தனத்திலிருந்து விடுபட்டிருக்கிறீர்கள். நல்லது,.

நாலாபுறங்களிலும் உள்ள ஊக்கம் நிறைந்த சேவாதாரி குழந்தைகளுக்கு எப்பொழுதும் தந்தையின் கூடவே அனுபவம் செய்யும் நெருக்கமான ஆத்மா குழந்தைகளுக்கு, எப்பொழுதும் ஒருவர் நினைவிலேயே ஒரே சீராக இருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

12.11.2017 **காலை முரளி ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா ரிவைஸ்** 21.03.1983 **மதுபன்**

இன்று பரம ஆத்மா தன்னுடைய மகான் ஆத்மாக்களோடு சந்திப்பதற்காக வந்திருக்கிறார், பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் மகான் ஆத்மாக்களாக பார்க்கிறார். உலகத்தினர் எந்த ஆத்மாக்களை மகாத்மா என்று கூறுகிறார்களோ, அந்த மாதிரி மகாத்மாக்களும், மகான் ஆத்மாக்கள் உங்கள் எதிரில் என்னவாகத் தென்படுவார்கள்? அனைத்தையும் விட பெரிய மகான் தன்மை, அதன் மூலம் நீங்கள் மகான் ஆகியிருக்கிறீர்கள், அது என்னவென்று தெரியுமா?

எந்த ஆத்மாக்களை அதிலேயும் முக்கியமாக தாய்மார்களை தகுதியற்றவர்களாக ஆக்கிவிட்டது, அந்த மாதிரி தகுதியற்ற ஆத்மாக்களை தகுதியானவர்களாக ஆக்கி விட்டது. யாரை கால்களின் செருப்பு என்று நினைத்தார்களோ, அவர்களை தந்தை கண்களின் மணி ஆக்கி விட்டார். எப்படி கண்மணி அதாவது கண் பார்வை இல்லையென்றால் உலகமில்லை என்ற பழமொழி இருக்கிறதோ, அதே போலவோரத மாதா சக்தி அவதாரம் இல்லை என்றால் பாரதத்திற்கு மேன்மை இல்லை என்று பாப்தாதாவும் உலகிற்குக் காண்பிக்கிறார். அந்த மாதிரி தகுதியற்ற ஆத்மாக்களிலிருந்து தகுதியான ஆத்மா ஆக்கி விட்டார். எனவே மகான் ஆத்மாக்களாக ஆகிவிட்டீர்கள் இல்லையா! யாரெல்லாம் தந்தையைத் தெரிந்து கொண்டார்கள். மேலும் தெரிந்து தன்னுடையவராக ஆக்கினாரோ, அவர் மகான். பாண்டவர்களும் தெரிந்து கொண்டார்கள். மேலும் தன்னுடையவராக ஆக்கினார்களா அல்லது தெரிந்து மட்டும் இருக்கிறார்களா? நீங்கள் தந்தையை தன்னுடையவராக ஆக்கியவர்கள் தான் இல்லையா! தெரிந்தவர்களின் பட்டியலிலோ அனைவரும் இருக்கிறீர்கள். தன்னுடையவர் ஆக்குவதில் நம்பர் ஒன் ஆகி விடுகிறார்கள்.

தன்னுடையவராகி ஆக்குவது என்றால், தன்னுடைய அதிகாரம் அனுபவம் ஆவது, மேலும் அதிகாரம் அனுபவம் ஆவது என்றால், அனைத்து விதமான அடிமைத்தனங்களுக்கு

முடிவடைவது. அடிமைத்தனம் அனேக விதமானவை. ஒன்று தன்னைப் பற்றி தன்னுடைய அடிமைத்தனம். இரண்டாவது அனைவரின் சம்பந்தத்தில் வருவதினால், அது ஞான ஆத்மாக்களாக இருந்தாலும் இருவர்களின் உறவு தொடர்பு மூலம் அடிமைத்தன்மை. மூன்றாவது இயற்கை மற்றும் சூழ்நிலைகள் மூலமாக கிடைத்திருக்கும் அடிமைத்தன்மை. மூன்றிலிருந்து ஏதாவது அடிமைத்தனத்தின் வசமாகியிருக்கிறார் என்றால், அனைத்து அதிகாரம் உடையவர் இல்லை என்று நிரூபணம் ஆகிறது.

தன்னுடையவர் ஆக்குவது என்றால் அதிகாரி ஆவதின் அனுபவம் எப்பொழுதும் மற்றும் அனைத்திலும் இருக்கும். இது இருக்கிறதா என்று தன்னைப் பாருங்கள். மேலும் சில நேரம் எந்த விஷயத்தில் ஆகிறது. எந்த விஷயத்தில் ஆவதில்லை என்று பாருங்கள். குழந்தைகளின் உயர்ந்த எதிர்காலத்தைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சியும் அடைகிறார். ஏனென்றால் உலகத்தின் அனேக விதமான தீயிலிருந்து தப்பித்துக் கொண்டார்கள். இன்றைய மனிதன் அனேக விதமான தீயில் எரிந்து கொண்டிருக்கிறான். மேலும் குழந்தைகள் நீங்கள் சீதளமான கடலின் கரையில் அமர்ந்திருக்கிறீர்கள். அங்கு கடலின் சீதளமான அலைகளில், அதி இந்திரிய சுகத்தின் அமைதியின் பிராப்தியில் மூழ்கியிருக்கிறீர்கள். அணு குண்டுகள் அல்லது அனேக விதமான குண்டுகளின் அக்னி ஜூவாலையை கண்டு மனிதர்கள் மிக அதிகம் பயப்படுகிறார்கள். ஆனால் அதுவோ விநாடிகள் மற்றும் நிமிடங்களின் விஷயம். ஆனால் இன்றைய நாட்களின் அனேக விதமான துக்கம், கவலைகள், பிரச்சனைகளின் வித விதமான காயங்கள். ஆத்மாவில் ஏற்படுகிறது. இந்த அக்னி உயிரோடு இருந்து கொண்டும் எரிக்கும் அனுபவத்தை செய்விக்கிறது. உயிரோடும் இல்லை, இறக்கவும் இல்லை, விடவும் முடியாது. உருவாக்கவும் முடியாது. நீங்கள் அந்த மாதிரி வாழ்க்கையிலிருந்து விடுபட்டு சிரேஷ்ட வாழ்க்கையில் வந்து விட்டீர்கள். எனவே அனைவரின் மேலும் இரக்கம் வருகிறது. இல்லையா? எனவே தான் ஒவ்வொரு வீட்டையும் சேவை நிலையம் ஆக்கியிருக்கிறீர்கள். மிக நல்ல சேவையின் இலட்சியத்தை வைத்திருக்கிறீர்கள். இப்பொழுதோ கிராமங்களில் மக்கள் வசிக்கும் பகுதியில் இருக்கிறது. ஆனால் இப்பொழுது ஒவ்வொரு தெருவிலும் ஞான ஸ்தானம் இருக்க வேண்டும். பக்தியில் தேவ ஸ்தானத்தை உருவாக்குகிறார்கள். ஆனால் இங்கு ஒவ்வொரு வீட்டிலும் பிராமண ஆத்மாக்கள் இருக்கிறீர்கள். எப்படி ஒவ்வொரு வீட்டிலும் வேறு எதுவும் இல்லையின்றாலும் தேவதைகளின் படங்கள் கட்டாயம் இருக்கும். அதே மாதிரி ஒவ்வொரு வீட்டிலும் சைதன்ய பிராமண ஆத்மா இருக்க வேண்டும், ஒவ்வொரு தெருவிலும் ஞான ஸ்தானம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஒவ்வொரு தெருவிலும் பிரத்யக்ஷத்தின் கொடி பறக்கும். இப்பொழுதோ இன்னும் சேவை அதிகம் செய்ய வேண்டியது இருக்கிறது. இருந்தும் குழந்தைகள் தைரியம் வைத்து எவ்வளவு சேவை

செய்திருக்கிறார்களோ அந்த மாதிரி தைரியமுள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார், மேலும் எப்பொழுதும் உதவியைப் பெற்றுக் கொண்டு முன்னேறிச் செல்வதற்கு நல் ஆசீர்வாதமும் கொடுக்கிறார்,. மேலும் பிறகு எப்பொழுது ஒவ்வொரு வீட்டிலும் தீபத்தை ஏற்றி தீபாவளி கொண்டாடி விட்டு வந்தீர்கள் என்றால் பரிசும் கொடுப்போம்.

மகான் ஆத்மாக்களுக்கும் சவால் விட்டு தூய்மையான இல்லறத்தை நிரூபித்துக் காண்பிக்கக் கூடிய, எல்லைக்குட்பட்ட குடும்பத்தின் வீட்டை தந்தையின் சேவை ஸ்தானமாக ஆக்கக் கூடிய, உண்மையான குழந்தைகளின் பிரத்யக்ஷ பங்கை செய்து கொண்டிருக்கிறார்கள், எனவே அந்த மாதிரி சேவாதாரி குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கிறார், இதிலேயும் தாய்மார்களின் எண்ணிக்கை அதிகம், ஒருவேளை பாண்டவர்கள் ஏதாவது விஷயத்தில் முன்னுக்குச் செல்கிறார்கள் என்றால், சக்திகளுக்கு எப்பொழுதும் குஷி ஏற்படுகிறது, பாப்தாதாவும் பாண்டவர்களை முன்னுக்கு வைக்கிறார், சக்திகளை முன்னுக்கு வைப்பது அவசியம் என்று பாண்டவர்களும் நினைக்கிறார்கள். முதல் முயற்சி என்ன செய்கிறீர்கள்? முரளி யார் படிப்பது? இதில் கூட பிரம்மா பாபாவைப் பின்பற்றுகிறீர்கள். சிவ தந்தை பிரம்மா தாயை முன்னுக்கு வைத்தார், மேலும் பிரம்மா பாபா சரஸ்வதி தாயை முன்னுக்கு வைத்தார்,. அப்படி தாய் தந்தையைப் பின்பற்றி நடப்பதாக ஆகிவிட்டது இல்லையா! முன்னேற வைப்பதில் முன்னேறுவது அடங்கியிருக்கிறது என்று எப்பொழுதும் நினைவில் வையுங்கள். எப்பொழுதிலிருந்து பாப்தாதா தாய்மார்களை மேல் பார்வையை வைத்தாரோ, அப்பொழுதிலிருந்து உலகத்தினரும் முதலில் பெண்கள் என்ற கோஷத்தை எழுப்பினார்கள். கோஷமிடுகிறார்கள் இல்லையா! பாரதத்தின் அரசியல் கூட பாருங்கள், ஆண்களும் பெண்களுக்காக மகிமையோபாடுகிறார்கள் இல்லையா! அந்த மாதிரி ஏதோஒரு வகையில் பாண்டவர்களும் பெண்களே தான்! ஆத்மா பெண் மேலும் பரமாத்மா ஆண். அப்படியானால் என்ன ஆனது. ஆத்மா கூறுகிறாள் என்று கூறப்படுவது, மாறாக ஆத்மா கூறுகிறான் என்ற அல்ல. என்னவாக வேண்டுமானாலும் ஆகிக் கொள்ளுங்கள், ஆனால் நீங்கள் பெண்கள், பரமாத்மாவின் எதிரிலோ ஆத்மா பெண்தான். நீங்கள் பிரியதர்ஷினிகள் தான் இல்லையா? அனைத்து உறவுகளையும் ஒரு தந்தையுடன் வைத்து நடந்து கொள்பவர்கள், இதுவோ நீங்கள் செய்த உறுதிமொழி இல்லையா! இது பாப்தாதா குழந்தைகளுடன் ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருக்கிறார், அனைவரும் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள், எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இதே ஆனுபவத்தில் எப்பொழுதும் இருப்பவர். அந்த மாதிரி குழந்தைகள் தான் தந்தைக்குச் சமமான சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆகிறார்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் சேவையின் ஊக்கம், உற்சாகத்தில் இருக்கக் கூடிய, எப்பொழுதும் அனைத்து ஆத்மாக்களுக்காக உயர்ந்த நன்மை பயக்கும் பாவனை வைக்கக்கூடிய, உயர்ந்த தைரியம் மூலமாக தந்தையின் உதவிக்கு பாத்திரமான ஆத்மாக்களுக்கு, அந்த மாதிரி சேவை ஸ்தானத்திற்கு பொறுப்பாளாராகியிருக்கும் மகான் ஆத்மாக்களுக்கு, பரமாத்மாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்:

பொறுப்பின் நினைவு மூலமாக எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்கக் கூடிய சுப பாவணை, சுப விருப்பங்கள் நிரம்பியவர் ஆகுக.

நீங்கள் குழந்தைகள் இயற்கை மற்றும் மனித ஆத்மாக்களின் உள் உணர்வை மாற்றம் செய்வதற்கு பொறுப்பாளராக இருக்கிறீர்கள். ஆனால் எப்பொழுது உங்களுடைய உள் உணர்வு சுப பாவணை, சுப விருப்பங்களினால் நிரம்பி சதோபிரதானமாகசக்திசாலியாக இருக்குமோ, அப்பொழுது தான் அந்த பொறுப்பை ஏற்று செய்ய முடியும், பொறுப்பின் நினைவு எப்பொழுதும் ஜாக்கிரதையாக இருக்க வைத்துவிடும். ஒவ்வொரு ஆத்மாவையும் முக்தி, ஜீவன் முக்தி பெறவைப்பது, ஆஸ்தியின் அதிகாரி ஆக்குவது என்பது மிகப்பெரிய பொறுப்பு. எனவே ஒரு பொழுதும் அலட்சியம், கவனக்குறைவு வர வேண்டாம், உள் உணர்வு, சாதாரணமானதாக இருக்க வேண்டாம்.

சுலோகன்:

தன்னுடைய ஒவ்வொரு காரியம் மூலமாக ஆதரவளிக்கும் வள்ளல் தந்தையை பிரத்யக்ஷம் செய்தீர்கள் என்றால், அனேக ஆத்மாக்களுக்கு ஆதாரம் கிடைத்து விடும்.

ஓம்சாந்தி

27.03.1983 ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## குமாரிகளின் பட்டியில் உயிருக்கும் மேலான அவ்யக்த பாப்தாதாவின் இனிமையான மகாவாக்கியம்

இன்று பாப்தாதா அனைத்துக் குழந்தைகளையும் எங்கே சந்தித்துக் கொண்டிருக்கிறார்? கடல் மற்றும் நதிகள் சந்திக்கும் இடத்தில் சந்தித்துக் கொண்டிருக்கிறார். கடற்கரை விருப்பமான இடம் தானே? கடல் மட்டும் இல்லை, ஆனால் அனேக நதிகள் கடலுடன் கலக்கும் இடம் எவ்வளவு சிரேஷ்டமானதாக இருக்கும்! கடலுக்கும் நதிகளோடு சந்திப்பது எவ்வளவு பிரியமானதாக் இருக்கிறது. இந்த மாதிரியான சந்திப்பு கொண்டாட்டம் வேறு எந்த யுகத்திலாவது இருக்குமா? இந்த யுகத்தின் சந்திப்பு முழுகல்பமும் வேறு வேறு ரூபத்தில் மற்றும் கொண்டாடப்படும். அந்த மாதிரி சந்திப்பைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள் இல்லையா! எனவே அங்கு, இங்கிருந்து ஓடி வந்திருக்கிறீர்கள் இல்லையா! கடலில் மூழ்கி மாஸ்டர் ஞானக்கடலாகி விடுகிறீர்கள். அதாவது தந்தைக்குச் சமமாக எல்லைக்கப்பாற்பட்ட சொரூபத்தில் நிலைத்து இருந்து விடுகிறீர்கள். அந்த மாதிரி எல்லைக்கப்பாற்பட்ட அனுபவம் செய்கிறீர்களா? எல்லைக்கப்பாற்பட்ட உள் உணர்வு என்றால் அனைத்து ஆத்மாக்களுக்காக நன்மை செய்பவர். தன்னுடைய மற்றும் தன்னுடைய பொறுப்பிருக்கும் எல்லைக்குட்பட்ட ஆத்மாக்களின் நன்மைக்காக மட்டுமல்ல,, ஆனால் அனைவருக்கும் நன்மை ஏற்பட வேண்டும். நானோ பிரம்மா குமாரி ஆகி விட்டேன். தூய்மையான ஆத்மா ஆகி விட்டேன். தூய்மையான ஆத்மா ஆகி விட்டேன்.. என்னுடைய முன்னேற்றத்தில், என்னுடைய பிராப்தியில், நான் திருப்தியாக இருப்பதில் திருப்தியடைந்து சென்று கொண்டிருக்கிறேன் என்று நினைப்பது தந்தைக்குச் சமமாக எல்லைக்கப்பாற்பட்ட உள் உணர்வு வைத்திருக்கும் நிலை இல்லை. எல்லைக்குட்பட்ட உள் உணர்வு மட்டும் தான். இந்த அளவு மட்டும் தான் இருக்க வேண்டுமா? அல்லது முன்னேற வேண்டுமா? அனேக குழந்தைகள் எல்லைக்கப்பாற்பட்ட பிராப்தியின் நேரத்தில், தந்தைக்குச் சமமாக ஆவதற்கான பொன்னான வாய்ப்பை மற்றும் தங்கப் பதக்கம் பெறுவதற்குப் பதிலாக, நான் நன்றாக நடந்து கொண்டிருக்கிறேன், ஒரு தவறும் செய்வதில்லை, வெளியுலக மற்றும் ஆன்மீக வாழ்க்கை இரண்டிலும் நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எந்தப் பிரச்சனையும் இல்லை, குழுவில் சம்ஸ்காரத்தின் மோதல் எதுவுமில்லை என்று நினைத்து வெள்ளிப் பதக்கத்திலேயே திருப்தியடைந்து விடுகிறார்கள். தந்தைக்குச் சமமான எல்லைக்கப்பாற்பட்ட உள் உணர்வோ இருக்கவில்லை தான் இல்லையா!

தந்தை உலகிற்கு நன்மை செய்பவர் மற்றும் குழந்தைகள் தனக்கு நன்மை செய்பவர்கள் என்றால் அந்த மாதிரி ஜோடி நன்றாக இருக்குமா? கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. மேலும் எப்பொழுது அவ்வாறு நடந்து கொள்கிறீர்களோ, அப்பொழுது நன்றாக இருக்குமா? அனைத்து பொக்கிஷங்களின் அதிருப்தியின் குழந்தைகள் பொக்கிஷங்களின் மகாதானி (பெரும் வள்ளல்) ஆகவில்லை என்றால் அவரை என்னவென்று கூறுவது? தந்தையின் அனைத்து பொக்கிஷங்களின் ஆஸ்திக்கு நீங்கள் அதிகாரியா என்று யாரிடமாவது கேட்டால் என்ன பதில் கூறுவார்? அனைவரும் ஆம் என்று கூறுவார்கள் இல்லையா! பொக்கிஷம் எதற்காக கிடைத்திருக்கிறது? தான் மட்டும் சாப்பிட வேண்டும், மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் கிடைத்திருக்கிறதா? அனைவரும் கொடுங்கள் மற்றும் அதிகரியுங்கள் என்ற இந்த டைரக்ஷன் (வழிகாட்டுதல்) தான் கிடைத்திருக்கிறது. அப்படியானால் எப்படி அனைவருக்கும் கொடுப்பீர்கள்? கீதாபாடசாலை திறந்துவிட்டோம் மற்றும் எப்பொழுது வாய்ப்பு கிடைக்கிறதோ, அப்பொழுது கொடுத்து விட்டோம் என்ற இதிலேயே திருப்தியாக இருக்கிறீர்களா? எல்லைக்கப்பாற்பட்ட தந்தையிடமிருந்து எல்லைக்கப்பாற்பட்ட பிராப்தி மேலும் எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் ஊக்கம், உற்சாகத்தில் இருக்க வேண்டும், குமாரி வாழ்க்கை சங்கமயுகத்தில் மிக உயர்ந்த வரம் பெற்ற வாழ்க்கை. நாடகப்படி அந்த மாதிரி வரம் பெற்ற வாழ்க்கை, விசேஷ ஆத்மாக்கள் உங்களுக்கு இயல்பாகவே கிடைத்திருக்கிறது. அந்த மாதிரி வரம் பெற்ற வாழ்க்கையை அனைவருக்கும் வரதானம், மகாதானம் கொடுப்பதில் ஈடுபடுத்துகிறீர்களா? தானாக கிடைத்திருக்கும் வரதானத்தின் ரேகையை சிரேஷ் காரியம் என்ற எழுதுகோல் மூலமாக எவ்வளவு பெரியதாக போடவிரும்புகிறீர்களோ, அந்த அளவு போட முடியும். இதுவும் இந்த நேரத்திற்கு வரதானம் ஆகும். நேரமும் வரமளிப்பது, குமாரி வாழ்க்கையும் வரமளிப்பது, தந்தையும் வரமளிக்கும் வள்ளல், காரியமும் வரதானம் கொடுப்பதானது. இதன் முழுமையான லாபத்தை எடுத்திருக்கிறீர்களா? 21 ஜென்மங்களுக்காக நீளமான ரேகை போடுவதற்கான வாய்ப்பு, 21 தலைமுறையினர் எப்பொழுதும் நிரம்பியவர் ஆவதற்கான வாய்ப்பு என்ன கிடைத்திருகிறதோ, அதைப் பெற்று விட்டீர்களா? குமாரி வாழ்க்கையில் எவ்வளவு விரும்புகிறீர்களோ, அதைச் செய்ய முடியும். சுதந்திர ஆதமாவின் பாக்கியம் கிடைத்திருக்கிறது. சுதந்திரமாக இருக்கிறேனா அல்லது மற்றது/மற்றவர்களுக்கு அடிமையாக இருக்கிறேனா என்று தன்னிடம் கேளுங்கள். மற்றதின் / மற்றவர்களின் அடிமைத்தனத்தின் பந்தனம் தன்னுடைய மனதின் வீணான எண்ணங்களின் வலை. அதே பின்னப்பட்ட வலையில் தனனை அடிமையாகவோ ஆக்கிக் கொண்டிருக்கவில்லையே? கேள்வியின் வலை இருக்கிறதா? நீங்கள் என்ன வலையை பின்னுகிறீர்களோ, அதன் பழத்தை எடுத்தீர்கள் என்றால், கேள்வின் ரூபம் தான் இருக்கும். என்ன கேள்வி எழுகிறது. அதன் அனுபவியாகவோ இருக்கிறீர்கள் இல்லையா என்னவாகும், எப்படியாகும், அந்த மாதிரியோ

ஆகிவிடாதே, இது தான் வலை, சங்கமயுக பிராமணர்களுக்கு என்ன நடக்குமோ அது நன்மை பயப்பதாகத்தான் நடக்கும், என்ன நடக்குமோ, அது சிரேஷ்டமாக இருக்கும் மிக நல்லதாக இருக்கும் என்ற ஒரே ஒரு சக்திசாயான எண்ணம்தான் இருக்கிறது. இந்த எண்ணம்தான் வலையை அகற்றக் கூடியது. எப்பொழுது தீய நாட்கள் நன்மையில்லாத நாட்கள் முடிவடைந்து விட்டது, என்றால் சங்கமயுகத்தின் ஒவ்வொரு நாளும் பண்டிகை நாள், கெட்ட நாள் இல்லை. ஒவ்வொரு நாளும் உங்களுக்கு உற்சவம் தான் இல்லையா! ஒவ்வொரு நாளும் கொண்டாடுவதற்கானது.. இந்த சக்திசாலியான எண்ணத்தினால் வீணான எண்ணங்களின் வலையை அழித்து விடுங்கள்.

குமாரிகளோ பாப்தாதாவின், பிராமண குலத்தின் கௌரவமாகும். முதல் வாய்ப்பு குமாரிகளுக்கு கிடைக்கிறது. சின்ன சின்ன குமாரிகள் டீச்சர் ஆகிவிடுகிறார்கள். அந்த அளவு வாய்ப்பு கிடைக்கிறது. இருந்தும் வாய்ப்பை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் என்னவென்று கூறுவது! என்ன கூறுகிறீர்கள் என்று தெரியுமா? சகயோகியாகஇருப்பேன், ஆனால் சமர்ப்பணம் ஆக மாட்டேன். யார் சமர்ப்பணம் ஆகவில்லையோ, அவர் எப்படி சமமாக ஆக முடியும்? தந்தை என்ன செய்தார்? அனைத்தையும் சமர்ப்பணம் செய்தார் இல்லையா! அல்லது சகயோகியாக மட்டும் ஆனாரா? பிரம்மா பாபா என்ன செய்தார்? சமர்ப்பணம் செய்தாரா அல்லது சகயோகியாக மட்டும் தான் இருந்தாரா? ஜகதம்பா என்ன செய்தார்? அவர்களும் கன்யாவாகத்தான் இருந்தார்கள் இல்லையா! தாய் தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டுமா அல்லது ஒரு சில சகோதரிகளைப் பின்பற்றி நடக்கிறீர்களா? இவருடைய வாழ்க்கையை பார்த்து எனக்கும் இது தான் பிடித்திருக்கிறது என்றால், சகோதரியை பின்பற்றி நடப்பது ஆகிவிட்டது இல்லையா! இப்பொழுது என்ன செய்வீர்கள்? பயம் தன்னுடைய பலஹீனத்தின் காரணமாகத் தான் இருக்கிறதே அன்றி வேறு எந்தக் காரணத்தினாலும் இருப்பதில்லை, இப்பொழுது எதைப் பெறுவீர்கள். தங்கப் பதக்கத்தை பெறுவீர்களா அல்லது வெள்ளிப் பதக்கத்தை திருப்தியாகக் பெறுவீர்களா? பலஹீனங்களைப் பார்க்காதீர்கள். அதைப் பார்த்தீர்கள் என்றால் பயப்படுவீர்கள். நீங்களும் பலஹீனம் ஆகாதீர்கள் மேலும் மற்றவர்களின் பலஹீனத்தையும் பார்க்காதீர்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா?

பாப்தாதாவிற்கோ குமாரிகளைப் பார்த்து குஷி ஏற்படுகிறது. மக்களிடம் குமாரி வந்தது என்றால் துக்கம் ஏற்படும், மேலும் பாப்தாதாவிடமோ எவ்வளவு குமாரிகள் வருகிறார்களோ, அந்தளவு மிக அதிகமாக குஷியில் கொண்டாடுவார்கள். ஏனென்றால், ஒவ்வொரு குமாரியும் உலகிற்கு நன்மை செய்பவர், மகாதானி, வரதானி என்று பாப்தாதா

தெரிந்திருக்கிறார். குமாரி வாழ்க்கையில் மகத்துவம் எவ்வளவு என்று புரிந்து கொண்டீர்கள். இன்று விசேஷமாக குமாரிகளின் நாள் இல்லையா! பாரதத்தில் அஷ்டமி அன்று பிரத்யேகமாக குமாரிகளை அழைப்பார்கள். எனவே பாப்தாதாவும் அஷ்டமியைக் கொண்டாடுகிறார். ஒவ்வொரு கன்யாவும் அஷ்டசக்தி சொரூபமானவர். நல்லது.

அந்த மாதிரி மிக உயர்ந்த வரம் பெற்ற வாழ்க்கைக்குரிய, பொன்னான வாய்ப்பின் அதிகாரிகளும், 21 தலைமுறையில் உயர்ந்த எதிர்காலத்தின் ரேகையைப் போடுவதற்கான அதிகாரம் உள்ள, சுதந்திர ஆத்மாவின் வரதானி அதிகாரிகளுக்கு, அந்த மாதிரி சிவவம்ஷி பிரம்மா குமாரிகளுக்கு, சிரேஷ்ட குமாரிகளுக்கு விசேஷ ரூபத்தில் மேலும் கூடவே அனைத்து சந்திப்பையும் செய்யும் பல மடங்கு பாக்கியவான் ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

கர்மபோகத்தின் மேல் கர்மயோகத்தின் வெற்றி

நீங்கள் கர்மபோகத்தின் (செய்த கர்மத்தின் விளைவுகளை அனுபவிப்பதின்) மேல் வெற்றியடையும் வெற்றி இரத்தினங்கள் தான் இல்லையா! அவர்கள் கர்மத்தின் விளைவுகளை அனுபவிப்பவர்களாக இருப்பார்கள் மேலும் நீங்கள் கர்மயோகிகள். நீங்கள் அனுபவிப்பவர்கள் இல்லை, ஆனால் நிரந்தரமாக பஸ்மம் செய்பவர்கள். நீங்கள் 21 ஜென்மங்கள் கர்மத்தின் விளைவுகளை அனுபவிப்பதின் பெயர், அடையாளமே இல்லாத அளவிற்கு அந்த மாதிரி பஸ்மம் செய்து விடுகிறீர்கள். வந்தது என்றால் தானே பஸ்மம் செய்வீர்கள். கண்டிப்பாக வரும் ஆனால் பஸ்மம் ஆவதற்காக வருகிறதே அன்றி அனுபவிப்பதற்காக இல்லை. விடைபெறுவதற்காக வருகிறது ஏனென்றால் நான் இப்பொழுது தான் வரமுடியும் என்று கர்மபோகிற்கும் தெரியும், பிறகு வரமுடியாது, எனவே இடை இடையே வாய்ப்பை எடுத்துக் கொள்கிறது. எப்பொழுது இங்கோ பருப்பு வேகாது என்று பார்க்கிறது என்றால், திரும்பிச் சென்று விடுகிறது.

தாதி தீதியைப் பார்த்து பாப்தாதா கூறினார்.

இத்தனை ஹேண்ட்ஸை (உதவிகரங்களை) பார்த்து குஷி ஏற்படுகிறது தான் இல்லையா! என்ன

கனவு கண்டு கொண்டிருந்தீர்களோ, அது நடைமுறையில் நடந்து விட்டது தான் இல்லையா! இத்தனை ஹேண்ட்ஸ் வேண்டும், இத்தனை செண்டர் அதிகரிக்க வேண்டும் என்ற இந்தக் கனவைக் கண்டு கொண்டிருந்தீர்கள், ஏனென்றால் தாதி, தீதிக்கு ஹேண்ட்ஸ் வேண்டும் என்ற ஆசை மிக அதிகமாக இருக்கும். அதனால் ஏற்கனவே தயாரான இத்தனை ஹேண்ட்ஸைப் பார்த்து குஷி ஏற்படும் இல்லையா! பாரதத்தின் குமாரிகளுக்கும் வெளிநாட்டுக் குமாரிகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது, இவர்கள் சம்பாதிக்க வேண்டும் என்று என்ன அவசியம் இருக்கிறது? (பட்டம் வாங்க வேண்டும்) எதுவரை பட்டத்திற்கும் ஒன்றும் மதிப்பு கிடையாது. பட்டத்தின் மதிப்பு சேவையுடன் இருக்கிறது. படிப்பைப் படித்து விட்டு அதைக் காரியத்தில் ஈடுபடுத்தவில்லை, படித்த பிறகு குடும்பஸ்தனாகவே இருந்தார் என்றால் உலகத்தில் கூட படிப்பினால் என்ன லாபம் கிடைத்தது என்று கூறுவார்கள். படிக்காதவர்களும் குழந்தைகளை வளர்க்கிறார்கள், கவனித்துக் கொள்கிறார்கள் என்றால் என்ன வித்தியாசம் ஆனது, அதே போலவேஇவர்களும் படித்துவிட்டு மேடையில் வந்துவிட்டார்கள் என்றால், படித்த படித்திற்கு மதிப்பும் இருக்கும், ஒருவேளை இங்கே வாய்ப்பு கிடைக்கிறது என்றால் பட்டம் தானாகவே கிடைத்துவிடும். இந்தப் பட்டம் குறைந்ததா என்ன? ஜகதம்பா சரஸ்வதிக்கு எவ்வளவு பெரிய பட்டம் கிடைத்திருக்கிறது. இங்கே உள்ள பட்டத்தைப் பற்றி கிடைத்திருக்கிறது. இங்கே உள்ள பட்டத்தைப் பற்றி வார்த்தைகளால் வர்ணனையும் செய்ய முடியாது, மாஸ்டர் ஞானக்கடல், மாஸ்டர் சர்வ சக்திவான் என்று எத்தனை மற்றும் எவ்வளவு பெரிய பட்டம் கிடைத்திருக்கிறது. இதில் எம்.ஏ., பி.ஏ., அனைத்தும் வந்துவிடுகிறது. நல்லது.

### குமாரிகளின் தனித் தனி குரூப்புடன் பாப்தாதாவின் சந்திப்பு :

வரம்பெற்ற குமாரிகள் தான் இல்லையா! நீங்கள் மெது மெதுவாக செல்பவர்களா அல்லது பறப்பவர்களா? பறப்பவர் என்றால், எல்லைக்குட்பட்ட தரையை விடுபவர், எப்பொழுது தரையை விட்டால் தானே பறப்பீர்கள் இல்லையா! கீழேயே பறக்க முடியாது. கீழே இருப்பவர்களை வேட்டைக்காரன் பிடித்து விடுவார்கள். கீழே வந்தீர்கள், கூண்டில் மாட்டிக் கொண்டீர்கள். பறப்பவர்கள் கூண்டிற்குள் வரமாட்டார்கள். நீங்கள் கூண்டை விட்டு விட்டீர்களா? இப்பொழுது என்ன செய்வீர்கள்? வேலை செய்வீர்களா? கிரீடம் அணிவீர்களா அல்லது கூடையை சுமப்பீர்களா? எங்கு கிரீடம் இருக்குமோ, அங்கு கூடை வரமுடியாது, கிரீடத்தைக் கழட்டினால் தான் கூடையை வைக்க முடியும். கூடை வைத்தீர்கள் என்றால் கிரீடம் விழுந்து விடும். எனவே கிரீடம் அணிந்தவர் ஆக வேண்டுமா? அல்லது கூடை தூக்குபவர் ஆக வேண்மா? இப்பொழுது உலக சேவையின் பொறுப்பு கிரீடம் மேலும்

எதிர்காலத்தில் இரத்தினம் பதித்த கிரீடம். இப்பொழுது உலக சேவையின் கிரீடம் அணிந்தீர்கள் என்றால், உலகம் உங்களை புண்ணிய ஆத்மா, மகான் ஆத்மா என்று நம்புவார்கள். இவ்வளவு பெரிய கிரீடம் அணிபவர் கூடையை என்ன தூக்குவார்கள். 63 ஜென்மமோ கூடையை தூக்கிக் கொண்டே இருந்தீர்கள், இப்பொழுது கிரீடம் கிடைக்கிறது என்றால் கிரீடம் அணிய வேண்டும் இல்லையா! என்ன நினைக்கிறீர்கள்? விருப்பம் இல்லை, ஆனால் செய்ய வேண்டியதாக இருக்கிறதா? குடும்பத்தினரை திருப்தி படுத்திக் கொண்டே மெது மெதுவாக தன்னை பந்தனமற்றவர் ஆக்க முடியும். பந்தனமற்றவர் ஆவதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் இலட்சியம் வைத்தீர்கள் என்றால் எல்லைக்குட்பட்ட பந்தனம் தானாகவே அகன்று விடும். இலட்சியம் இரண்டு பக்கத்திற்கும் இருக்கிறது வெற்றி பெற முடியாது. இலட்சியம் தெளிவாக இருக்கிறது என்றால், குடும்பத்திலும் உதவி கிடைக்கும். ஒரு காரணத்திற்காக மட்டும் குடும்பம், மற்றபடி புத்தியில் ஆன்மீக சேவை மட்டுமே இருக்கிறது என்றால், வலுக்கட்டாயம் கூட அன்பாக மாறி விடுகிறது.

2. அனைத்து குமாரிகளும் தன்னுடைய எதிர்காலத்தை பற்றி முடிவு செய்து விட்டீர்களா அல்லது செய்ய வேண்டுமா? எவ்வளவு காலம் தன்னுடைய வாழ்க்கையின் முடிவை எடுப்பதில் எடுத்துக் கொள்கிறீர்களோ, அவ்வளவு பிராப்தி செய்யும் காலம் சென்று விடுகிறது, எனவே முடிவு எடுப்பதில் நேரத்தை இழக்கக் கூடாது. நினைத்தீர்கள் உடனே செய்தீர்கள்! இதைத் தான் நம்பர் ஒன் முடிவு எடுப்பவர் என்று கூறுவது. ஒரு நொடியில் முடிவு எடுப்பவர் தங்கப் பதக்கத்தைப் பெறுகிறார். யோசித்து யோசித்து முடிவு எடுப்பவர் வெள்ளிப் பதக்கம் பெறுகிறார், மேலும் யோசித்த பிறகும் முடிவு எடுக்க முடியாதவர்கள் செம்பு பதக்கம் பெறுபவர்கள் ஆகி விடுகிறார்கள். நீங்கள் அனைவருமே தங்கப் பதக்கம் பெறுபவர்கள் தான் இல்லையா! எப்பொழுது பொற்காலத்தில் செல்ல வேண்டும் என்றால் தங்கப் பதக்கம் வேண்டும் இல்லையா! இராம், சீதை ஆவதில் யாரும் கை தூக்குவது இல்லை., லட்சுமி நாராயணனோபொற்காலத்தை சேர்ந்தவர்கள் இல்லையா! எனவே அனைவரும் தன்னுடைய எதிர்காலத்தின் ரேகையை அந்த மாதிரி போட்டு விட்டீர்களா அல்லது தைரியம் இருப்பதில்லையா! எப்பொழுதும் ஊக்கம், உற்சாகத்தில் பறப்பவர்கள், என்ன ஆனாலும் சரி, தன்னுடைய தைரியத்தை விடாதீர்கள். மற்றவர்களின் பலஹீனத்தைப் பார்த்து நீங்கள் மனமுடைந்து போகாதீர்கள். தெரியவில்லை எனக்கும் அப்படி ஆகிவிடாதே, ஒருவேளை யாராவது ஒருவர் குழியில் விழுகிறார் என்றால், மற்றவர் என்ன செய்வார்? அவரும் விழுவாரா அல்லது அவரைக் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்வாரா? எனவே ஒருபொழுதும் மனமுடைந்து போகாதீர்கள். எப்பொழுதும் ஊக்கம், உற்சாகம் என்ற இறக்கைகளால் பறந்து கொண்டே இருங்கள். எந்த ஒரு ஈர்ப்பிலும் வராதீர்கள். வேட்டைக்காரன் பிடிக்க முயலும் போது

நல்ல நல்ல தானியங்களைப் போட்டு விடுவான். மாயாவும் சில நேரம் அந்த மாதிரி செய்கிறது, எனவே எப்பொழுதும் பறக்கும் கலையில் இருந்தீர்கள் என்றால், பாதுகாப்பாக இருப்பீர்கள், கடந்த விஷயத்தை நினைப்பது, பலஹீனமான விஷயத்தை யோசிப்பது, பின்னால் பார்ப்பது, பின்னால் பார்ப்பது என்றால், இராவணன் வருவது.

3. நீங்கள் சக்தி சேனை தான் இல்லையா! அனைவரின் கையில் வெற்றிக் கொடி இருக்கிறது உலகின் மேல் வெற்றிக் கொடி இருக்கிறதா அல்லது மாநிலத்தின் மேல் இருக்கிறதா? உலகின் அதிகாரி ஆகுபவர்கள் உலக சேவாதாரியாக இருப்பார்கல். எல்லைக்குட்பட்ட சேவாதாரி இல்லை, எல்லைக்கு அப்பாற்பட்ட சேவாதாரி, எங்கு சென்றாலும் அங்கு சேவை செய்வார். அந்த மாதிரி எல்லைக்கப்பாற்பட்ட சேவைக்காக தயாராகி இருக்கிறீர்களா? உலகின் சக்திகளாக இருக்கிறீர்கள் என்றால், நீங்களாகவே முன்னுக்கு வந்து சமர்ப்பியுங்கள். 2 மாதம், 6 மாதம், விடுமுறை எடுத்து முயற்சி செய்து பாருங்கள். ஒரு அடி எடுத்து வைத்தீர்கள் என்றால், பத்து அடி தானாக வைக்கப்பட்டு விடும், ஒரிரு மாதம் எடுத்து அனுபவம் செய்யுங்கள். எப்பொழுது ஏதாவது நல்ல பொருள் மேல் மனை ஈடுபட்டு விட்டது என்றால் தரமற்ற உதவாப் பொருள் தானாக விடுபட்டு விடும். அந்த மாதிரி முயற்சி செய்து பாருங்கள். சங்கமயுகம் முன்னேறிச் செல்வதற்கான காலம். பிரம்மா குமாரி ஆகி விட்டீர்கள், ஞான சொரூபம் ஆகி விட்டீர்கள், அதுவோ நீண்ட காலமாகிவிட்டது. இப்பொழுது முன்னேறிச் செல்லுங்கள், கொஞ்சமாவது முன்னுக்கு அடியெடுத்து வையுங்கள், அங்கேயே நிற்காதீர்கள், பலஹீனமானவரைப் பார்க்காதீர்கள். சக்திகளைப் பாருங்கள். செம்பறி ஆடுகளை ஏன் பார்க்கிறீர்கள்? செம்பறி ஆடுகளைப் பார்ப்பதினால் தன்னுடைய தலையும் குனிந்து விடுகிறது, தெரியவில்லை என்ன ஆகும் என்று பயம் ஏற்படுகிறது. பலஹீனமானவரை பார்ப்பதினால் பயப்படுகிறீர்கள், எனவே அவர்களைப் பார்க்காதீர்கள், சக்திகளைப் பார்த்தீர்கள் என்றால் பயம் அகன்று விடும்.

வரதானம்:

எப்பொழுதும் தலைவன் ஆஜராக இருக்கிறார் என்று புரிந்து துணையை அனுபவம் செய்யக் கூடிய இணைந்த ரூபமுடையவர் ஆகுக.

குழந்தைகள் எப்பொழுதெல்லாம் அன்போடு தந்தையை நினைவு செய்கிறார்கள் என்றால் நெருக்கம் மற்றும் துணையின் அனுபவம் செய்கிறார்கள். உள்ளப் பூர்வமாக பாபா என்று

கூறினார், மேலும் திலாராம் ஆஜராகி விடுகிறார், எனவே எஜமானன் ஆஜராக இருக்கிறார் என்று கூறுகிறார்கள். அன்பின் விதி மூலம் ஒவ்வொரு ஸ்தானத்திலும் ஒவ்வொருவரிடம் எஜமானன் ஆஜராகி விடுகிறார். அனுபவிதான் இந்த அனுபவத்தை தெரிந்திருக்கிறார்கள். செய்பவர் செய்விப்பவர் என்று வர்ணனை செய்கிறார்கள் என்றால் செய்பவர் மற்றும் செய்விப்பவர் இணைந்து இருப்பவர்களாக ஆகி விட்டார்கள். அந்த மாதிரி இணைந்த ரூபமுடையவர் எப்பொழுதும் துணையை அனுபவம் செய்கிறார்கள்.

சுலோகன்:

மனதை எப்பொழுதும் ஆன்மீக மகிழ்ச்சியில் வைப்பது தான் வாழ்க்கை வாழ்வதற்கான கலை.

ஓம்சாந்தி

30.03.1983 ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சகயோகி ஆவதற்கான வழி - அனுபவங்களின் அதிகாரத்தின் ஆசனம்

(குமாரிகளின் சந்திப்பு)

இன்று எல்லைக்கப்பாற்பட்ட நாடகத்தின் படைப்பாளர் தந்தை, எல்லைக்கப்பாற்பட்ட நாடகத்தின் அதிசயமான சங்கமயுகத்தின் தெய்வீக காட்சிகளுக்குள் மதுபன்னில் விசேஷ காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். மதுபன் என்ற மேடையில் ஒவ்வொரு நேரமும் எவ்வளவு மனதிற்கு விருப்பமான இரமணீகரமான காட்சிகள் நடக்கின்றன. அதை பாப்தாதா தூரத்தில் அமர்ந்திருந்தாலும் அருகாமையில் பார்த்துக் கொண்டே இருக்கிறார். இந்த நேரத்தில் மேடையின் கதாநாயக நடிகன் யார்? இரட்டை தூய்மையான ஆத்மாக்கள், சிரேஷ்ட ஆத்மாக்கள். உலகியல் வாழ்க்கையிலும் தூய்மை மேலும் ஆத்மாவும் தூய்மை. விசேஷமான இரட்டை தூய்மையான ஆத்மாக்களின் கதாநாயக பாத்திரம் மதுபன் மேடையில் நடப்பதை பார்த்து பாப்தாதாவும் மிகவும் மகிழ்ச்சி யடைகிறார். என்ன என்ன திட்டத்தை உருவாக்குகிறீர்கள், என்ன என்ன எண்ணம் வைக்கிறீர்கள், எந்தக் குழப்பத்தில் வருகிறீர்கள், இந்த தைரியம் மற்றும் குழப்பம் இந்த இரண்டு காட்சிகளையுமே பார்த்துக் கொண்டிருக்கின்றனர். தைரியத்தையும் மிக நன்றாக வைக்கிறீர்கள். ஊக்கம், உற்சாகமும் அதிகம் வருகிறது, ஆனால் கூடவே கொஞ்சம் ஆம் மற்றும் இல்லை என்பது கலந்த எண்ணமும் இருக்கிறது. பாப்தாதா சிரிப்பூட்டும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம். விருப்பமோ நான் செய்து காண்பிப்பேன் என்று சிரேஷ்டமாக இருக்கிறது, ஆனால் மனதின் ஊக்கத்தின் விருப்பம் மற்றும் எண்ணம் ஜொலிப்பின் ரூபத்தில் முகத்தில் தென்படுவது இல்லை. சுத்த எண்ணத்தின் மினு மினுப்பு முகத்தில் மின்னிக் கொண்டிருப்பதாக தென்பட வேண்டும், ஆனால் அது குறைந்த அளவில் இருப்பதாக பார்த்தோம், இது ஏன்? இதற்கான காரணம்? நல்ல எண்ணம் இருக்கிறது, ஆனால் எண்ணத்தில் சக்தி குறைந்த அளவில் இருக்கிறது. எண்ணம் என்ற விதையோஇருக்கிறது, ஆனால் சக்திசாலியான விதை பிரத்யக்ஷ ரூபத்தில் மிகுந்த ஜொலிப்பு தென்பட வேண்டும். அது இப்பொழுது இன்னும் தேவையாக இருக்கிறது.

மிக அதிகமாக முகத்தில் ஊக்க, உற்சாகத்தின் பிரகாஷம் வருவதற்கான வழி - ஒவ்வொரு

குணம், ஒவ்வொரு சக்தி, ஒவ்வொரு ஞானத்தின் பாய்ண்ட்டுகளின் அனுபவங்களின் நிரம்பிய நிலை. அனுபவம் மிகப் பெரிய அதிகாரம், அதிகாரத்தின் பொலிவு முகத்தில் மற்றும் நடத்தையில் இயல்பாகவே வரும். தற்சமயம் கதாநாயகப் பாத்திரம் ஏற்று செய்பவர்களைப் பார்த்து பாப்தாதா புன்முறுவலித்துக் கொண்டிருந்தார். குஷியில் நடனமாடிக் கொண்டும் இருக்கிறார்கள். ஆனால் சிலர் நடனமாடுகிறார்கள் என்றால் முழு வாயுமணடலத்தையும் ஆட வைத்து விடுகிறார்கள். அவருடைய நடிப்பில் துடிப்பு தென்படும். அதைத் தான் நடனமாடி ஆடி அனைவரையும் ஆட வைத்து விட்டார் என்று நீங்கள் கூறுகிறீர்கள். அந்த மாதிரி பிரகாசமான ஜொலிப்பை இப்பொழுது இன்னும் காண்பிக்க வேண்டும். அதனுடைய ஆதாரத்தை கேட்டு விட்டீர்கள். கேட்பவர்கள், சொல்பவர்களாகவோ ஆகியே விட்டீர்கள். கூடவே அனுபவம் நிறைந்தவர் ஆவதற்கான விசேஷ பங்கை செய்யுங்கள். அனுபவத்தின் அதிகாரம் நிறைந்தவர் ஒருபொழுதும் எந்த விதமான மாயாவின் வித விதமான இராயல் ரூபங்களில் ஏமாற்றம் அடைய மாட்டார்கள். அனுபவத்தின் அதிகாரம் நிறைந்த ஆத்மா எப்பொழுதும் தன்னை நிறைந்த ஆத்மாவாக அனுபவம் செய்வார். அவர் நிர்ணய சக்தி, சகித்துக் கொள்ளும் சக்தி அல்லது வேறு எந்த சக்தியாலும் காலியாக இருக்க மாட்டார்கள். எப்படி விதை நிரம்பியிருக்கும் அதேபோல் ஞானம், குணம், சக்திகள் அனைத்திலும் நிரம்பியிருப்பார். இவரைத் தான் மாஸ்டர் ஆல்மைட்டி அதாரிட்டி அதாவது மாஸ்டர் அனைத்து சக்திகளின் அதிகாரம் நிறைந்தவர் என்று கூறுவது. அந்த மாதிரியானவர் எதிரில் மாயா தலைவணங்குமேன்றி, தலைவணங்க வைப்பது. எப்படி எல்லைக்குட்பட்ட அதிகாரம் உள்ள விசேஷ நபர்கள் எதிரில் அனைவரும் தலை வணங்குவார்கள், ஏனென்றால் அதிகாரத்தின் மகான் நிலை அனைவரையும் இயல்பாகவே தலை வணங்க வைக்கும், அந்த மாதிரி விசேஷமாக என்ன பார்த்தோம்? அனுபவங்களின் அதிகாரத்தின் இருக்கையில் இப்பொழுது அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். பேச்சாளர்களின் இருக்கையையோ எடுத்துக் கொண்டார்கள். ஆனால் அனைத்து அனுபவங்களின் அதிகாரத்தின் ஆசனத்தை இப்பொழுது எடுக்க வேண்டும். உலகத்தினருடையது சிம்மாசனம் மேலும் உங்கள் அனைவரிடனுடையது அதிகாரத்தின் ஆசனம் என்று கூறியிருந்தோம் இல்லையா! இதே ஆசனத்தில் எப்பொழுதும் அமர்ந்திருங்கள். பின்போ சகஜயோகி, நிரந்தர யோகி, இயல்பான யோகியாகவேயிருப்பீர்கள்.

இப்பொழுதோ அமிர்தவேளையின் காட்சி கூட சிரிப்பதற்கும், சிரிப்பூட்டுவதுமாக இருக்கிறது. சிலர் இலக்கை வைத்து வைத்து களைப்படைந்து விடுகிறார்கள். சிலர் இரட்டை ஊஞ்சலில் ஆடுகிறார்கள். சிலர் ஹடயோகி ஆகி அமருகிறார்கள். சிலரோநியமப்படி நடப்பவராக மட்டும் ஆகி அமருகிறார்கள். சிலர் அன்பின் ஈடுபாட்டில் மூழ்கியும் இருக்கிறார்கள். நினைவு என்ற வார்த்தையின் அர்த்த சொரூபம் ஆவதில் இப்பொழுது விசேஷ கவனம் வையுங்கள். யோகி

ஆத்மாவின் பொலிவு முகம் மூலம் அனுபவம் ஆக வேண்டும். எது மனதில் இருக்குமோ, அதன் வெளிப்பாடு நெற்றியில் அவசியம் இருக்கும், மனதிலோ எனக்கு மிக அதிகமாக இருக்கிறது என்று அப்படி நினைக்காதீர்கள். மனதின் சக்தியின் கண்ணாடி முகம், நான் குஷியில் ஆடிக் கொண்டிருக்கிறேன் என்று நீங்கள் எவ்வளவு தான் கூறினாலும், ஆனால் சோர்வான முகத்தை பார்த்து யாரும் நம்ப மாட்டார்கள். எதையோஇழந்தது மாதிரி இருக்கும் முகத்திற்கும், அடைந்திருக்கும் முகத்தின் வித்தியாசத்தையோ தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா! அடைந்து விட்டேன் என்ற இந்த குஷியின் ஜொலிப்பு முகத்தில் தென்பட வேண்டும், வாடிய முகமாக தென்படக் கூடாது. குஷியான முகமாகத் தென்பட வேண்டும். கதாநாயகப் பாத்திரம் செய்யும் குழந்தைகளின் மகிமையையும் பாப்தாதா பாடுகிறார். இருந்தும் இன்றைய நாகரீகமான உலகத்திலிருந்து, மனதிலிருந்து, உடலிலிருந்து விலகி தந்தையை ஆதாரமாகவேஆக்கி விட்டீர்கள். இந்த திட எண்ணத்திற்கு மிகுந்த வாழ்த்துக்கள், எப்பொழுதும் இதே எண்ணத்தில் வாழ்ந்து கொண்டிருங்கள். பாப்தாதா இந்த வரதானம் கொடுக்கிறார். இதே சிரேஷ்ட பாக்கியத்தின் குஷியில் அன்பின் மலரையும் தூவுகிறார். கூடவே ஒவ்வொரு குழந்தையும் சம்பன்னமான தந்தைக்குச் சமமான அதிகாரம் உள்ளவராக இருக்க வேண்டும். இந்த சுத்த எண்ணத்திற்கு விதி கூறுகிறார். பாராட்டுக்களும் கொடுக்கிறார், மேலும் விதியும் கூறுகிறார். அனைவரும் விழாவையோ கொண்டாடி விட்டீர்கள் இல்லையா! அனைவரும் விழாவைக் கொண்டாடி சம்பன்னம் ஆக வேண்டும் என்ற இலட்சியத்தை எடுத்துச் சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா! முதலில் வந்த பழையவர்களோ, பழைய்வர்களாகவே இருக்கிறார்கள், ஆனால் நீங்கள் அல்லாவின் அதிசயக் குழந்தைகள் ஆகி விடுங்கள். அனைவரின் புகைப்படத்தையோ எடுத்திருக்கிறீர்கள் தான் இல்லையா! புகைப்படமோ இங்கு நினைவுச் சின்னமாக ஆகிவிட்டது இல்லையா! இப்பொழுது அதிகாரத்தின் ஆசனத்தில் யார் யார் எந்தளவு நிலைத்திருந்தார்கள் என்று தீதி, தாதியும் பார்ப்பார்கள். சென்டரில் இருப்பது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை, ஆனால் விசேஷ பாத்திரமேற்று, பங்கை செய்வது தான் அதிசயம். இந்த குரூப்பின் ஒவ்வொரு ஆத்மாவும் தந்தைக்குச் சமமாக சம்பன்ன சொரூபத்தில் இருக்கிறார்கள் என்று அனைவரும் கூற வேண்டும். காலியாக இருப்பவர்களாக ஆகாதீர்கள். காலியாக இருக்கும் பொருளில் ஆட்டம் இருக்கும். புத்திசாலி ஆகுங்கள் என்றால் நிரம்பியவர் ஆகுங்கள். இதை குமாரிகளுக்கு மட்டுமின்றி அனைவருக்காகவும் கூறுகிறோம். சம்பன்னமாகவோ அனைவரும் ஆக வேண்டும் இல்லையா! யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ, நீங்கள் அனைவரும் மதுபன்னின் விசேஷ பரிசு அனைத்து அனுபவங்களின் அதிகாரத்தின் ஆசனத்தை உடன் எடுத்துச் செல்லுங்கள். இந்தப் பரிசை ஒருபொழுதும் தன்னிடம் இருந்து பிரித்து வைக்காதீர்கள். பரிசு அனைவருக்கும் இருக்கிறது தானே அல்லது குமாரிகளுக்கு மட்டும் தானா? மதுபன்

நிவாசிகளுக்கும் இன்று இந்தப் பரிசு நீங்கள் எங்கே அமர்ந்திருந்தாலும், ஆனால் தந்தையின் எதிரில் இருக்கிறீர்கள்.

வந்திருக்கும் அனைத்து தாமரை மலருக்குச் சமமான குழந்தைகளுக்கு, மதுபன் நிவாசிகளுக்கு, நாலாபுறங்களிலும் உள்ள பாரத மற்றும் வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு, தற்சமயம் மேடையின் கதாநாயகப் பாத்திரம் ஏற்று செய்யும் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, அனைவருக்கும் அனுபவி ஆகுக என்ற வரதானத்துடன் வரமளிக்கும் வள்ளல் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

குமாரிகள் விசேஷ எண்ணம் வைத்தார்கள் விசே எண்ணம் மூலமாக விசேஷ ஆத்மாக்களாக ஆகியிருக்கிறீர்களா? விசேஷமாக என்ன எண்ணம் வைத்தீர்கள்? எப்பொழுதும் மகாவீராங்கனை ஆகி வெற்றி யாளராக இருப்பேன், இதே எண்ணத்தை வைத்தீர்கள் இல்லையா! எப்பொழுதும் வெற்றியாளர், எப்பொழுதும் மகாவீராங்கனையாகினீர்களா? அல்லது கொஞ்சம் காலத்திற்காக வைத்தீர்களா? இதற்கு பிறகு ஒருபொழுதும் எந்த விதமான மாயா வராது இல்லையா! அரைக்கல்பத்திற்காக அழிந்து விட்டது, ஒருபொழுதும் எண்ணங்களின் மோதல் வராதல்லவா!. எப்பொழுதாவது வீணான எண்ணங்களின் புயலே வராதா? ஒருவேளை அடிக்கடி மாயாவின் தாக்குதலில் தோல்வி அடைகிறீர்கள் என்றால், பலஹீனமாகி விடுகிறீர்கள். எப்படி யாராவது அடிக்கடி தள்ளி விடப்படுகிறார் என்றால் அவருடைய எலும்பு பலஹீனமாகி விடுகிறது இல்லையா! பிறகு பிளாஸ்டர் போடவேண்டியது இருக்கும். எனவே ஒருபொழுதும் பலஹீனமானவராகி தோல்வி அடையக் கூடாது. மஹாவீராங்கனை என்றால், எண்ணத்தை வைத்தீர்கள் மற்றும் சொரூபம் ஆகி விட்டீர்கள். அங்கே சென்ற பிறகு பார்க்கலாம் என்று அப்படியில்லை, இந்த லாம் லாம் என்று சொல்பவர்களாக ஆகாதீர்கள். எந்த எண்ணத்தை வைத்தீர்களோ, அதில் உறுதியாக இருந்தீர்கள் என்றால், வெற்றிக் கொடி பறந்துவிடும். இந்தளவு திட எண்ணம் உள்ளவர்கள் அவரவர்கள் ஸ்தானத்திற்குச் சென்றீர்கள் என்றால், வெற்றி முழக்கம் ஏற்பட்டு விடும். எண்ணத்தினால் அனைத்தும் சுலபமாகி விடுகிறது. என்ன எண்ணம் வைத்தீர்களோ, அதற்கு தண்ணீர் விட்டுக் கொண்டே இருங்கள். ஒவ்வொரு மாதமும் தன்னுடைய ரிஸல்ட்டை எழுதுங்கள். ஒரு பொழுதும் பலஹீனமான எண்ணத்தை வைக்காதீர்கள். இந்த சம்ஸ்காரத்தை இங்கேயே அழித்து விட்டுச் செல்லுங்கள். நான் முன்னேறிச் செல்வேன், வெற்றியாளர் ஆவேன் என்ற திட எண்ணத்தை எடுத்துச் செல்லுங்கள். நல்லது.

அனைவர்களின் விருப்பங்களும் நிறைவேறி விட்டனவா? குமாரிகளின் விருப்பங்கள் நிறைவேறி விட்டன என்றால், தாய்மார்களின் விருப்பங்களோ, நிறைவேறியே இருக்கின்றன. இப்பொழுது நீங்கள் கொஞ்ச பேர் வந்திருக்கிறீர்கள். எனவே நல்ல வாய்ப்பு கிடைத்து விட்டது. இந்த தடவை அனைத்து குமாரிகளின் முறையீடுகளும் நிறைவேறி விட்டன. ஒரு புகாரும் இல்லை, அனைவரும் முழுமையாகி சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா! நதிகள் எங்கே பாய்கின்றன என்று இப்பொழுது பார்க்கலாம். குளம் ஆகிறதா, பெரிய நதி ஆகின்றனவா, சிறிய நதி ஆகின்றனவா? அல்லது கிணறு ஆகிறதா, குளத்தை விட கிணறு சின்னதாக இருக்கும் இல்லையா! அந்த மாதிரி என்ன ஆகிறார்கள் என்று பார்க்கலாம். அந்த ரிஸல்ட வரும் இல்லையா! குமாரிகளைப் பார்த்து இத்தனை ஹேண்ட்ஸ் உருவாகியிருக்கிறார்கள் என்று கூறுவோம், தாய்மார்களைப் பார்த்து இவர்கள் உருவாவது கொஞ்சம் கடினம் என்றே கூறுவோம். இப்பொழுது தடையற்ற ஹேண்ட்ஸ் ஆக வேண்டும். மாறாக நீங்களே தடை ரூபமாகி தாதி, தீதியின் எதிரில் வந்து கொண்டு இருக்கிறீர்கள் என்று அந்த மாதிரி இருக்கக் கூடாது. உதவி செய்யும் ஹேண்ட ஆக வேண்டும். நீங்களே மற்றவர்களிடம் சேவை வாங்கக் கூடாது. எனவே எப்பொழுதும் தடையற்று இருப்போம். மேலும் சேவையைத் தடையின்றி வளர்ச்சியடையச் செய்வோம் என்ற உறுதியான எண்ணத்தை வைத்துச் செல்லுங்கள். நல்லது.

### குமாரிகளின் குரூப்புடன் சந்திப்பு:

நீங்கள் அனைத்து குமாரிகளும் தன்னை விசேஷ ஆத்மா என்று நினைக்கிறீர்கள் இல்லையா! விசேஷ ஆத்மா என்றால் விசேஷ காரியத்திற்குப் பொறுப்பானவர், நீங்கள் ஒவ்வொருவரும் விசேஷ காரியத்திற்கு பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள். ஒவ்வொரு குமாரியும் 21 குலத்திற்கு நன்மை செய்பவர். எப்பொழுதாவது எங்கேயாவது கட்டளை கிடைத்தது என்றால் ஆஜராகுபவர். அந்த மாதிரி தடையற்ற சேவாதாரிகள் தான் நீங்கள் இல்லையா! எந்த நேரமும் எந்த சேவை கிடைத்தாலும் ஆஜராகுபவர், சேவை செய்வது என்றால் பிரத்யக்ஷ பழம் அருந்துவது. எப்பொழுது பிரத்யக்ஷ பழம் கிடைத்து விடுகிறது என்றால் பழம் அருந்துவதினால் சக்தி வருகிறது. பிரத்யக்ஷ பழத்தை அருந்துவதினால் ஆத்மா சக்திசாலி ஆகி விடுகிறது. எப்பொழுது அந்த மாதிரி பிராப்தி ஆகிறது என்றால், செய்ய வேண்டும் இல்லையா! உலகத்திலோ ஒரு மாதம் வேலை செய்வீர்கள் அதற்குப் பிறகு சம்பளம் கிடைக்கும், இங்கேயோ பிரத்யக்ஷ பழம் கிடைக்கிறது. எதிர்காலத்திற்கு சேமிப்போ ஆகிறது, ஆனால் தற்சமயத்திலும் கிடைக்கிறது. அந்த மாதிரி இரண்டு பலன்கள் கிடைக்கும் காரியத்தை முதலில் செய்ய வேண்டும் இல்லையா! அனேகர்களுக்கு பாப்தாதா தாதி, தீதி சேவை செய்யுங்கள் என்று டைரக்ஷன் கொடுக்கிறார்கள். ஸ்ரீமத்படி செய்வதினால் அதற்கான

பொறுப்பிற்குரியவராக நீங்கள் ஆவதில்லை, தன்னுடைய மனதின் ஈடுபாட்டினால், பலஹீனத்தினால் செய்கிறீர்கள் என்றால் சிரேஷ்டம் ஆக முடியாது, ட்ரையல் (சோதனைக்குள்ளாகும் காலத்தில்) தானும் திருப்தியாக இருந்து மற்றவர்களையும் திருப்திபடுத்தினீர்கள் என்றால் சர்டிபிகேட் (சான்றிதழ்) கிடைத்து விடும். அனைவருடனும் இணைந்து நடந்து கொள்ள வேண்டும் என்ற இலட்சியம் வையுங்கள். நான் மாறவேண்டும். தன்னை மாற்றுவதற்கான பாவனை உள்ளவர்கள் அனைத்து விஷயங்களிலும் வெற்றி அடைபவர் ஆகி விடுகிறார், மற்றவர்கள் மாற வேண்டும் என்று பார்ப்பவர்கள் ஏமாற்றம் அடைந்து விடுவார்கள், எனவே எப்பொழுதும் நான் மாற வேண்டும், நான் செய்ய வேண்டும், முதலில் ஒவ்வொரு விஷயத்திலும் தன்னை முன்னுக்கு வைக்க வேண்டும், அபிமானத்தில் இல்லை -செய்வதில் முன்னுக்கு வைத்தீர்கள் என்றால் வெற்றியே வெற்றிதான்.

## பார்டிகளுடன் சந்திப்பு

பாப்தாதா குழந்தைகளின் விசேஷத்தின் மகிமையையோ கூறியே விட்டார். யார் பாப்தாதாவிற்குச் சமமான சேவாதாரிகளோ, அந்தக் குழந்தைகளை பாப்தாதா எங்கே வைக்கிறார்? (கண்களில்) கண் முழு உடலிலும் சூட்சமமானது, மேலும் கண்களிலும் மணி இருக்கிறது, அது எவ்வளவு சூட்சமமானது, புள்ளியாக இருக்கிறது இல்லையா! தந்தையின் கண்களில் நிரம்புவர் அதாவது மிகவும் சூட்சமமானவர், மிகவும் விலகியிருப்பவர் மற்றும் தந்தையின் அன்பிற்குரியவர். அந்த மாதிரியே அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா! நாடகத்தின் அனுசாரம் நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஏன் நல்லது என்று கூறுகிறோம்? ஏனென்றால் எவ்வளவு பிஸியாக இருப்பீர்களோ, அந்த அளவே மாயாவை வென்றவர்கள் ஆகி விடுவீர்கள். பிஸியாக இருப்பதற்காக நல்ல சாதனம் கிடைத்திருக்கிறது இல்லையா! சேவை பிஸியாக இருப்பதற்கான சாதனம். எந்த நேரமும் மாயாவின் தடை வந்திருக்கிறது, என்றாலும் ஆனால் யாருக்கு சேவை செய்ய வேண்டுமோ, அவர்கள் எதிரில் வந்தார் என்றால், தன்னை சரிசெய்து கொண்டு அவரின் சேவை செய்வார்கள். என்ன நடந்தாலும், தயார் ஆகிவிட்டுத்தான் முரளி படிப்பார்கள் இல்லையா! மேலும் சொல்லி, சொல்லி தனக்கும் சொல்லிக் கொள்வார்கள். மற்றவர்களுக்கும் சேவை செய்வதினால் தனக்கும் உதவி கிடைத்து விடுகிறது. எனவே மிக மிக சிரேஷ்ட சாதனம் கிடைத்திருக்கிறது. ஒன்று தன்னுடைய முயற்சி செய்வது, இன்னொன்று மற்றவர்களின் சகயோகத்தின் சாதனம் அப்படி இரண்டு ஆகிவிட்டது இல்லையா! இதுவோ வழியில் சென்று கொண்டிருக்கும் பொழுதே இறைவன் நண்பன் மூலமாக இராஜபதவி கிடைத்து விட்டது. இரட்டை பிராப்தி, இரட்டை பொறுப்பு, ஆனால் இரட்டை பொறுப்பு இருந்த போதிலும் டபுள் லைட் என்று புரிந்து கொள்வதினால்

ஒருபொழுதும் குடும்ப பொறுப்பு களைப்படையச் செய்யாது, ஏனென்றால் நீங்கள் டிரஸ்டியாக இருக்கிறீர்கள் இல்லையா! டிரஸ்டிக்கு என்ன களைப்பு இருக்க முடியும். தன்னுடைய குடும்பம், தன்னுடைய பொறுப்பு என்று நினைத்தீர்கள் என்றால் சுமை இருக்கும். தன்னுடையதே இல்லையென்றால் சுமை எந்த விஷயத்தில் இருக்கும். பாண்டவர்களுக்கு எப்பொழுதாவது உலகியல் விவஹாரம், உலகியல் வாயுமண்டலத்தில் சுமையோ அனுபவம் ஆவதில்லையே? முற்றிலும் விலகியிருப்பவர் மற்றும் அன்பானவர், குழந்தையாக இருப்பவர் எஜமானன் ஆகுபவர் என்று அந்த மாதிரி போதைஇருக்கிறதா? எஜமானத்தன்மையின் போதை எல்லைக்கப்பாற்பட்டது. எல்லைக்கப்பாற்பட்ட போதைஎல்லைக்கப்பாற்பட்டு செல்லும் மேலும் எல்லைக்குட்பட்ட போதைஎல்லைக்குள் இருக்கும். தந்தை என்ன என்ன கொடுத்தார் என்ற இந்த எல்லைக்கப்பாற்பட்ட போதைநினைவில் கொண்டு வாருங்கள், அந்த கொடுக்கப்பட்ட பொக்கிஷங்களை எதிரில் கொண்டு வந்து கொண்டே, அனைத்து பொக்கிஷங்களினால் சம்பன்னம் ஆகியிருக்கிறேனா என்று தன்னைப் பாருங்கள். ஒருவேளை இல்லையென்றால் எந்தப் பொக்கிஷம் மேலும் ஏன் தாரணை ஆகவில்லை என்று அதன் பிரகாரம் பாருங்கள், மேலும் தாரணை செய்யுங்கள். நேரம் எந்த மாதிரியானது? தந்தையும் சிரேஷ்டமானவர், பிராப்தியும் சிரேஷ்டமானது, மேலும் தானும் சிரேஷ்டமானவர். எங்கு சிரேஷ்ட நிலை இருக்குமோ, அங்கு பிராப்தி அவசியம் இருக்கும். சாதாரண நிலை இருக்கிறது என்றால் பிராப்தியும் சாதாரணமானது. நல்லது.

கேள்வி:

தந்தைக்கு எந்தக் குழந்தைகள் மேல் மீது பெருமிதம் இருக்கிறது?

பதில்:

எந்தக் குழந்தைகள் வருமானம் செய்பவர்களாக இருக்கிறார்களோ, அந்த மாதிரி வருமானம் செய்யும் குழந்தைகள் மேல் தந்தைக்கும் மிகுந்த பெருமிதம் இருக்கிறது. ஒவ்வொரு விநாடியும் பல கோடி மடங்கை விட அதிக வருமானத்தை சேமிப்பு செய்ய முடியும். எப்படி ஒன்றின் அருகில் பூஜ்யத்தை போட்டீர்கள் என்றால், 10 ஆகி விடுகிறது, பிறகு ஒரு பூஜ்யத்தை போட்டீர்கள் என்றால் 100 ஆகி விடுகிறது. அப்படி ஒரு விநாடி தந்தையை நினைவு செய்தீர்கள், ஒரு நொடி கடந்து சென்றது மேலும் பூஜ்யம் போடப்பட்டது. இவ்வளவு பெரிய வருமானத்தை இப்பொழுது தான் செய்ய முடியும். பிறகு அனேக ஜெனமங்கள் வரை சாப்பிட்டுக் கொண்டே இருப்பீர்கள்.

வரதானம்:

ஒருமுனைப்படுத்தும் பயிற்சி மூலமாக மனம், புத்தியை அனுபவங்களின் ஆசனத்தில் அமர வைக்கக் கூடிய தடையற்றவர் ஆகுக.

ஒருமுகப் படுத்தும் சக்தி சுலமாகவே தடையற்றவர் ஆக்கி விடும். இதற்காக மனம் மற்றும் புத்தியை ஏதாவது அனுபவத்தின் ஆசனத்தில் அமர வைத்து விடுங்கள். ஒருமுனைப்படுத்தும் சக்தி இயல்பாகவே ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற அனுபவம் செய்விக்கிறது. இதன் மூலம் சுலபமாகவே ஒரே சீரான நிலை உருவாகி விடுகிறது. அனைவருக்காக நன்மை பயக்கும் உள் உணர்வு இருக்கிறது. ஒருமுனைப்படுத்தும் பயிற்சி மூலம் சகோதரன், சகோதரன் என்ற பார்வை இருக்கிறது. அதன் காரணமாக அவரை ஒருபொழுதும் பலஹீனமான சம்ஸ்காரம், ஏதாவது ஆத்மா மற்றும் இயற்கை எந்த விதமான இராயல் மாயாவும் நிலைகுலையச் செய்ய முடியாது.

சுலோகன்:

ஒரு நொடியில் விஸ்தாரத்தை சாரத்தில் உள்ளடக்கும் பயிற்சி தான் இறுதி சான்றிதழைப் பெறவைக்கும்.

ஓம்சாந்தி

03.04.1983 காலை முரளி ஓம்சாந்த அவ்யக்த பாப்தாதா மதுபன்

## முதல் மற்றும் கடைசி (முயற்சி) புருஷார்த்தம்

இன்று எல்லைக்கப்பாற்பட்ட தந்தை, எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் நிலைத்திருக்கும், எல்லைக்கப்பாற்பட்ட பார்வை, எல்லைக்கப்பாற்பட்ட உள் உணர்வு, எல்லைக்கப்பாற்பட்ட சேவதாரி, அந்த மாதிரியான சிரேஷ்ட குழந்தைகளுடன் சாகார (உடல்) சொரூபத்தில், சாகார உலகத்தில், எல்லைக்கப்பாற்பட்ட ஸ்தானத்தில் சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். முழு ஞானத்தின் மேலும் இந்தப் படிப்பின் நான்கு பாடங்களின் மூல சாரமே இந்த எல்லைக்கப்பாற்பட்ட என்ற ஒரு வார்த்தை தான். எல்லைக்கப்பாற்பட்ட வார்த்தையின் சொரூபத்தில் நிலைத்திருப்பது, இது தான் முதலில் மற்றும் கடைசியின் முயற்சி, முதலில் தந்தையின் குழந்தை ஆவது என்றால், உடலிலிருந்து இறந்து மறுபிறவியில் வாழ்வது. இதற்கான ஆதாரமும் உடலின் எல்லைக்குட்பட்டதிலிருந்து எல்லைக்கப்பாற்பட்ட உடலற்ற சொரூபத்தில் நிலைத்து விடுவது. மேலும் இறுதியில் ஃபரிஸ்தா சொரூபம் ஆகிவிடுவது. இதற்கும் அர்த்தம் இருக்கிறது. அனைத்து எல்லைக்குட்பட்ட உறவுகளிலிருந்தும் விலகி ஃபரிஸ்தா ஆவது. எனவே முதல் மற்றும் இறுதி முயற்சி மற்றும் பிராப்தி, இலட்சணம் மற்றும் இலட்சியம் நினைவு மற்றும் சக்திசாலி அந்த மாதிரி இரண்டு சொரூபங்களிலுமே என்ன இருந்தது? எல்லைக்கப் பாற்பட்ட நிலை தொடக்கத்திலிருந்து இறுதிவரை எந்த எந்த விதமான எல்லையைக் கடந்து விட்டிருக்கிறீர்கள், மேலும் கடக்க வேண்டும். இந்தப் பட்டியலையோ நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா! எப்பொழுது அனைத்து எல்லைக்குட்பட்டவைகளையும் கடந்து எல்லைக்கப்பாற்பட்ட சொரூபத்தில் எல்லைக்கப்பாற்பட்ட வீடு, எல்லைக்கப்பாற்பட்ட சேவாதாரி, அனைத்து எல்லைக்குட்பட்டவைகளின் மேல் வெற்றியை அடையக் கூடிய வெற்றி இரத்தினம் ஆகிவிடுவீர்களோ, அப்பொழுது தான் கர்மாதீத் நிலையின் அனுபவ சொரூபம் ஆவீர்கள்.

எல்லைக்குட்பட்டவை அனேகம் இருக்கின்றன, மேலும் எல்லைக்கப்பாற்பட்டது ஒன்றே ஒன்று, அனேக விதமான எல்லைக்குட்பட்டவை என்றால், அனேக விதமான எனது, என்னுடைய என்பவை என்னுடைய ஒரு பாபா வேறு யாரும் இல்லை என்ற இந்த

எல்லைக்கப்பாற்பட்ட என்னுடையதில் அனேக விதமான என்னுடையது மூழ்கி விடுகிறது. விஸ்தாரம் சார சொரூபமாகி விடுகிறது. விஸ்தாரம் கடினமாக இருக்குமானால் தொடக்கம் மற்றும் முடிவின் பாடமாக என்ன ஆனது? எல்லைக்கப்பாற்பட்டது. இதே இறுதி இலட்சியத்தின் எவ்வளவு அருகில் வந்திருக்கிறீர்கள் என்பதை சோதனைசெய்யுக்கள். எல்லைக்குட்பட்ட பட்டியலை, எதிரில் வைத்து எதுவரை கடந்து வந்திருக்கிறேன் என்று பாருங்கள். பட்டியலை வர்ணனை செய்வதற்கோ அவசியம் இல்லை. எத்தனையோ தடவைகள் கேட்கப்பட்ட இந்தப் பட்டியில் அனைவரின் அதிகத்திலும் அதிகமான சரக்காக இந்த குறிப்பேடுகள் மற்றும் டைரிகள் தான் இருக்கும். அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள், மிக நன்றாக வர்ணனையும் செய்ய முடியும். தெரிந்தும் இருக்கிறீர்கள், அதைக் கூறவும் செய்கிறீர்கள். மீதம் என்ன இருக்கிறது? பாப்தாதாவும் அனைத்து டீச்சர்கள் மற்றும் மாணவர்களின் சொற்பொழிவைக் கேட்கிறார். பாப்தாதா விடம் வீடியோ இல்லையா என்ன? உங்களுடைய உலகிலோ இப்பொழுது தான் உருவாகியிருக்கிறது. பாப்தாதாவோ தொடக்கத்திலிருந்தே சூட்சம வதனத்தில் பார்த்துக் கொண்டே இருக்கிறார். கேட்டுக் கொண்டே இருக்கிறார் வர்ணனை செய்வதின் சிரேஷ்ட ரூபத்தைப் பார்த்து பாப்தாதா வாழ்த்துக்களும் தெரிவிக்கிறார், ஏனென்றால், பாப்தாதாவின் ஒரு பாயிண்ட்டை விதவிதமான இரமணீகர ரூபத்தில் கூறுகிறீர்கள். தந்தையோ தந்தை தான் என்று கூறப்படுகிறது. ஆனால் குழந்தைகள் தந்தைக்கும் தலையிலுள்ள கிரீடமாக இருக்கிறார்கள். அந்த மாதிரி வர்ணிப்பதில் தந்தையை விட தலை கிரீடமாக உயர்ந்த நிலையில் இருக்கிறீர்கள். மற்றபடி என்ன பின்பற்ற வேண்டும்? மூன்றாவது நிலை கடந்து செல்பவர், இதில் ஏதாவது எல்லைக்குட்பட்ட சுவரைத் தாண்டுவதில், சிலர் அந்த எல்லைக்குள் தொங்கி விடுகிறார்கள், சிலர் மாட்டிக் கொள்கிறார்கள். கடந்து செல்லும் சிலர் இலட்சியத்தின் அருகில் தென்படுகிறார்கள். ஏதாவது எல்லைக்குட்பட்டதை கடந்து சென்றதின் அடையாளம் என்னவாக இருக்கும்? அல்லது அனுபவம் ஏற்படும் ! கடந்து செல்வதின் அடையாளம் கடந்து சென்றீர்கள். விலகியவர் ஆனீர்கள். அந்த மாதிரி விலகியவர் ஆவது தான் கடந்து வந்ததின் அடையாளமாகும். விலகியிருக்கும் நிலை என்றால் பறக்கும் கலையின் அடையாளம். பறக்கும் பறவையாகி காரியத்தின் இந்த கல்ப விருட்சத்தின் கிளையில் வருவார். பறக்கும் கலையின் எல்லைக்கப்பாற்பட்ட சக்திசாலியான சொரூபத்தில் காரியம் செய்தார் மற்றும் பறந்தார். காரியம் என்ற கிளையின் பந்தனத்தில் மாட்டிக் கொள்ளமாட்டார். கர்மபந்தனத்தில் மாட்டிக்கொண்டார் என்றால், எல்லைக்குட்பட்ட, கூண்டில் மாட்டிக் கொண்டார். சுதந்திரமாக இருந்ததிலிருந்து அடிமை ஆனார். கூண்டுப் பறவையை பறக்கும் பறவை என்று கூறமாட்டோம் இல்லையா! அந்த மாதிரி கல்ப விருக்ஷத்தின் விதவிதமான காரியத்தின் கிளையில், தந்தையின் பறக்கும் பறவை உயர்ந்த ஆத்மாக்கள் எப்பொழுதாவது பலஹீனங்கள்

என்ற பிடியில், கிளைகளின் பந்தனத்தில் வந்து விடுகிறார்கள், பிறகு என்ன செய்கிறார்கள்? கதை கேட்டீர்கள் தான் இல்லையா! இதைத் தான் எல்லைக்குட்பட்டதைக் கடந்து செல்வதின் சக்தி குறைவாக இருக்கிறது என்று கூறுவது. இந்த கல்ப விருட்சத்திற்குள் நான்கு விதமான கிளைகள் இருக்கின்றன. ஆனால் ஐந்தாவது கிளை அதிகம் கவரக்கூடியது. தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு மற்றும் சங்கமயுகம் வைரத்தின் கிளை, பின்பு ஹீரோ(கதாநாயகன்) ஆவதற்குப் பதிலாக வைரத்தின் கிளையில் மாட்டிக் கொள்கிறார்கள். மிக உயர்ந்த காரியம் சங்கமயுகத்தில் தான் நடக்கும் இல்லையா! இந்த சிரேஷ்ட காரியம் தான் வைரத்தின் கிளையாகும் சங்கமயுகத்தின் எப்படிப்பட்ட சிரேஷ்ட காரியமாக இருந்தாலும், ஆனால் அந்த சிரேஷ்ட காரியத்தின் பந்தனத்தை வேறு வார்த்தைகளில் தங்கச் சங்கலி என்று கூறுகிறீர்கள். சிரேஷ்ட காரியத்திலும் எல்லைக்குட்பட்ட ஏதேனும் விருப்பம் கொள்வதுதான் தங்கச் சங்கிலியாகும். கிளை வைரத்தினாலானது என்றாலும், தங்கத்தினாலானது என்றாலும், பந்தனம் பந்தனம் தான் இல்லையா! பாப்தாதா அனைத்து பறக்கும் பறவைகளுக்கும் அனைத்து பந்தனங்கள் அதாவது எல்லைக்குட்பட்டவைகளை கடந்து செல்பவர்களாக இருக்கிறீர்களா என்ற நினைவூட்டுகிறார்.

இன்றைய இந்த விசேஷ குழு (பசு பாலனை செய்பவரின்) கோபாலரின் தாய்மார்களினுடையது. இவ்வளவு பெரிய கூட்டத்தை பார்த்து கோபாலரும் குஷி அடைந்து கொண்டிருக்கிறார். பாப்தாதாவும் மிக இனிமையான தாய்மார்களை வந்தே மாதரம் என்று கூறுகிறார், ஏனென்றால் புது உலக ஸ்தாபனையின் காரியத்தில் பிரம்மா பாபாவும் மாதா குருவிடம் அனைத்தையும் சமர்ப்பணம் செய்தார். இந்த ஈஸ்வரிய ஞானத்தின் விசேஷம் மற்றும் புதுமையே சக்தி அவதாரத்தை முன்னுக்கு வைப்பது, மாதா குருவின் நிர்வாகத்தை ஸ்தாபனை செய்வது தான் புதுமை, இதன் நினைவுச் சின்னமாக கவுமுக்-ன் மகிமை மற்றும் பூஜை இருக்கிறது. அப்படி நீங்கள் எல்லைக்குட்பட்ட தாய்மார்கள் இல்லை. எல்லைக்கப்பாற்பட்ட ஜகத்மாதா. போதைஇருக்கிறது தான் இல்லையா! நீங்கள் ஜகத்திற்கு அதாவது உலகிற்கு நன்மை செய்பவர். ஜகத் கல்யாணகாரி என்றால், உலகத்திற்கு நன்மை செய்பவர். நீங்கள் வீட்டிற்கு நன்மை செய்பவராக மட்டும் இல்லைதான் இல்லையா! எப்போதாவது வீட்டிற்கு நன்மை செய்பவரின் பாடலைக் கேட்டிருக்கிறீர்களா என்ன? உலகிற்கு நன்மை செய்பவரின் பாடலை கேட்டிருக்கிறீர்கள். அந்த மாதிரி எல்லைக்கப்பாற்பட்ட தாய்மார்களின் கூட்டம், சிரேஷ்ட கூட்டம் ஆனது தான் இல்லையா! குமாரிகளுக்கு ஏமாற்றம் அடைவதிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு பயிற்சி கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. தாய்மார்கள் அனுபவியாக இருக்கும் காரணத்தினால் எல்லைக்குட்பட்ட ஏமாற்றத்தில் வருபவர்கள் இல்லைதான் இல்லையா! பெரும்பான்மையோர் புதியவர்கள். புதிய சிறு

குழந்தைகள் மேல் அதிகமாகவே அன்பு இருக்கும். பாப்தாதாவும் அனைத்து தாய்மார்களையும் வருக வருக! என்று கூறி வரவேற்கிறார். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் நிலைத்திருக்குக் கூடிய, எப்பொழுதும் பறக்கும் பறவை, பறக்கும் கலையில் பறக்கக் கூடிய, எப்பொழுதும் இறுதி ஃபரிஸ்தா சொரூபத்தை அனுபவம் செய்யக் கூடிய, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக கர்மபந்தனத்திலிருந்து விடுபட்டு கர்மாதீத் நிலையில் இருக்கும், இலட்சியத்தின் அருகில் இருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

சேவாதாரிகளுக்கான பாப்தாதாவின் மகா வாக்கியங்கள்:

பாப்தாதா அனைத்து பொறுப்பிலிருக்கும் சேவாதாரி குழந்தைகளை எந்த ரூபத்தில் பார்க்கிறார்? பொறுப்பிலிருக்கும் சேவாதாரி என்றால், தந்தையைர் பின்பற்றி நடப்பவர். தந்தையும் சேவாதாரி ஆகித்தான் வருகிறார் இல்லையா! என்னென்ன வித விதமான ரூபம் இருக்கிறது. அவை அனைத்தும் சேவைக்காகத் தான் இல்லையா! அப்படி தந்தையின் விசேஷ ரூபமும் சேவைக்கானது. அந்த வகையில் பொறுப்பிலிருக்கும் சேவாதாரி என்றால், தந்தையைப் பின்பற்றி நடப்பவர், ஒவ்வொரு குழந்தையையும் பாப்தாதா இதே பார்வையில் தான் பார்க்கிறார். நீங்கள் பாப்தாதாவின் சேவைக்காரியத்தில் ஆதி இரத்தினம் தான் இல்லையா! பிறந்ததுமே பரிசாக பாப்தாதா என்ன கொடுத்தார்? சேவைதான் கொடுத்தார் இல்லையா! சேவையின் பரிசின் ஆதி இரத்தினம் நீங்கள். பாப்தாதா அனைவரின் விசேஷங்களைத் தெரிந்திருக்கிறார். பிறந்த உடனேயே வரதானம் கிடைப்பது என்பதும் நாடகத்தில் கதாநாயகப் பாத்திரம் தான். பொதுவாக அனைவரும் சேவாதாரிகள், ஆனால் பிறந்த உடனேயே சேவையின் வரதானம் கிடைப்பது, மேலும் தேவையான நேரத்தில் பொறுப்பாளர் ஆவதும் சிலருடைய விசேஷம். யார் தேவையான நேரத்தில் சேவையின் துணைவர்களாக ஆகிறார்களோ, அந்த மாதிரி ஆத்மாக்களின் தேவை எப்பொழுதுமே இருக்கும். நல்லது. அனைவரிடமும் அவரவர்களின் விசேஷம் இருக்கிறது. ஒருவேளை ஒவ்வொருவர்களின் விசேஷத்தை வர்ணனை செய்கிறோம் என்றால், எவ்வளவு நேரம் தேவையாக இருக்கும். ஆனால் பாப்தாதாவிடம் ஒவ்வொருவரின் விசேஷம் எப்பொழுதும் எதிரில் இருக்கிறது. ஒவ்வொருவரிலும் எவ்வளவு விசேஷங்கள் இருக்கின்றன. எப்போதாவது தன்னைத் தானே பார்த்திருக்கிறீர்களா? அவரவர்களின்ம் விசேஷம் அனைவரிலும் இருக்கிறது. ஆனால் விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதா ஒரே ஒரு விஷயத்தை அடிக்கடி

நினைவூட்டுகிறார். அது எது? எப்பொழுதெல்லாம் ஏதாவது சேவை சேத்திரத்தில் வருகிறீர்களோ, திட்டத்தை உருவாக்குகிறீர்களோ மற்றும் நடைமுறையில் வருகிறீர்களோ, அப்பொழுது தந்தைக்குச் சமமான நிலையில் நிலைத்திருந்து ஏதாவது திட்டத்தை உருவாக்குங்கள் மற்றும் நடைமுறையில் வாருங்கள். எப்படி தந்தை அனைவரினுடையவர், இவர் இன்னாரின் தந்தை என்று யாரும் கூற மாட்டார்கள். இன்னாரினுடையவர் அல்ல, அனைவரும் என்னுடைய பாபா (தந்தை) என்று கூறுவார்கள். அதே போல் யார் பொறுபிலிருக்கும் சேவாதாரிகளோ, அவர்களுடைய விசேஷமே, ஒவ்வொருவரும் இவர் என்னுடையவர் என்று உணர வேண்டும், பேர்களினுடையவர் மட்டுமே என்று அப்படி அல்ல, என்னுடையவர், இந்த வார்த்தை ஒரு வேளை வாயிலிருந்து வெளியாகாவிட்டாலும் எண்ணத்தில் இவர் என்னுடையவர் என்று வெளிப்படையாக இருக்க வேண்டும். இதைத் தான் தந்தையைப் பின்பற்றி நடப்பது என்ற உணர்வு வர வேண்டும். இது தான் தந்தையின் முதலில் அடி இது தான் தந்தையின் விசேஷம் இல்லையா! ஒவ்வொருவருவரின் மனதிலிருந்து என்னுடைய பாபா என்று வெளியாகிறது. உன்னுடைய பாபா என்று யாராவது கூறுகிறார்களா? அந்த மாதிரி இவர் என்னுடையவர் எல்லைக்கப்பாற்பட்ட சகோதரன், சகோதரி, தீதி மற்றும் தாதி என்று அனைவரின் மனதிலிருந்து இந்த நல் ஆசீர்வாதம் தான் வெளியாக வேண்டும், இவர் என்னுடையவர் ஏனென்றால் நீங்கள் எங்கே இருந்தாலும், ஆனால் விசேஷ ஆத்மாக்களே, எல்லைக்கப்பாற்பட்டவர்கள் தான் இல்லையா! சேவையின் பொறுப்பிற்காக எங்கே இருந்தாலும் சரி, ஆனால் நீங்கள் எல்லைக்கப்பாற்பட்ட சேவைக்கு பொறுப்பாளர் தான் இல்லையா! திட்டத்தையும் எல்லைக்கப்பாற்பட்டதாக தயாரிக்கிறீர்களா அல்லது ஒவ்வொருவரும் அவரவர்களின் ஸ்தானத்திற்காக தயாரிக்கிறீர்களா? அப்படி செய்வதில்லை தான் இல்லையா! எல்லைக்கப்பாற்பட்ட திட்டத்தை, பாரதம் மற்றும் வெளிநாடுகள் அனைவருக்காகவும் தயாரிக்கிறீர்கள் இல்லையா! அந்த மாதிரி எல்லைக்கப்பாற்பட்ட பாவனை, எல்லைக்கப்பாற்பட்ட விருப்பங்கள் வைப்பது தான் தந்தையைப் பின்பற்றி நடப்பது. இப்பொழுது இதை நடைமுறையில் அனுபவம் செய்யுங்கள். இப்பொழுது அனைவரும் வயது முதிர்ந்தவர்கள். வயது முதிர்ந்தவர்களின் அர்த்தமே அனுபவிகள். நீங்கள் அனேக விசயங்களின் அனுபவி தான் இல்லையா! எத்தனை அனுபவங்கள் இருக்கின்றன. ஒன்றோ தன்னுடைய அனுபவம், இரண்டாவது அனேகர்களின் அனுபவங்களினால் அனுபவி, அனுபவி ஆத்மா என்றால் வயது முதிர்ந்த ஆத்மா பொதுவாக யாராவது வயதானவராக இருக்கிறார் என்றால், உலகீய கணக்குப்படி கூட அவரை அப்பா, மாமா என்று கூறுவார்கள். அந்த மாதிரி எல்லைக்கப்பாற்பட்ட அனுபவி என்றால், அனைவருக்கும் தன்னுடையவர் என்று உணர்வு ஏற்பட வேண்டும்.

சகயோகி ஆத்மாக்களுக்கு, சகயோகத்தின் பிரதிபலனாக பாப்தாதா எப்பொழுதுமே அன்பு கொடுக்கிறார். சகயோகியாக இருக்கிறீர்கள் என்றால், எப்பொழுதும் அன்பிற்கு பாத்திரமானவர்கள், எனவே என்ன கொடுப்போம், இவர் அன்பின் களஞ்சியமாக இருக்கிறார் என்று அனைவருக்கும் உணர்வு வரவேண்டும். ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு பார்வையிலும் அன்பு அனுபவம் ஆக வேண்டும். இது தான் விசேஷம் இல்லையா! நாம் என்ன செய்ய வேண்டும் என்று அந்த மாதிரி ஏதாவது திட்டத்தை உருவாக்குங்கள், விசேஷ ஆத்மாக்களின் விசேஷ கடமை என்ன? விசேஷ காரியம் என்ன? அது சாதாரணதிலிருந்து வேறுபட்டதாக இருக்க வேண்டும், பாவனையையோ நிரம்பிய நிலைக்குத் தான் வைக்க வேண்டும். ஆனால் இவர்கள் விசேஷ ஆத்மாக்கள் என்று தென்பட வேண்டும். ஒவ்வொரு அடியிலும் விசேஷத்தன்மை அனுபவம் ஆக வேண்டும். அப்பொழுது தான் இவர்கள் விசேஷ ஆத்மாக்கள் என்றால் விசேஷ காரியம் செய்பவர்கள். சொல்பவர்கள் அல்ல, ஆனால் செய்பவர்கள். நல்லது

மகாவீர் குழந்தைகள் எப்பொழுதும் ஆரோக்கியமாக இருக்கிறார்கள், ஏனென்றால் மனம் ஆரோக்கியமாக இருக்கிறது, உடலோ நடிப்பைச் செய்கிறது. மனதின் ஏதாவது நோய் இருக்கிறது என்றால் நோயாளி என்று கூறுவோம். ஒருவேளை மனம் நோயற்றது என்றால், எப்பொழுதும் ஆரோக்கியமாக இருக்கிறார். பாம்பு படுக்கையில் விஷ்ணுவிற்குச் சமமாக ஞானத்தை சிந்தித்துக் கொண்டு மகிழ்ச்சியாக இருப்பது. இது தான் விளையாட்டு. எப்படி பிரம்மா பாபா விஷ்ணுவிற்கு சமமாக கால் மேல் கால் போட்டு விளையாடுவார் இல்லையா! அந்த மாதிரி ஏதாவது நடந்தால் கூட ஏதோகாரணமாக இந்தக் காட்சி நடக்கிறது. சிந்தித்து சிந்தனை சக்தி மூலமாக இன்னும் கடலின் ஆழத்தில் செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. எப்பொழுது கடலில் செல்வீர்களோ, அப்பொழுது வெளியில் இருக்க மாட்டீர்கள் இல்லையா! அப்படி அறைக்குள் இருக்கவில்லை, கடலின் ஆழத்தில் இருக்கிறீர்கள். புதுப்புது இரத்தினங்களை எடுப்பதற்காக ஆழத்தில் சென்றிருக்கிறீரக்ள்.

கர்ம விளைவுகளின் அனுபவங்களின் மீது மேல் வெற்றியடைந்து கர்மயோகி நிலையில் இருப்பதைத் தான் வெற்றி இரத்தினம் என்று கூறுவது. இது அனுபவிப்பது அல்ல, ஆனால் புது உலகத்திற்கான திட்டம் என்ற இந்த நினைவு தான் இருக்கிறது. ஓய்வு நேரம் கிடைக்கிறது இல்லையா! அந்த நேரத்தில் என்ன வேலை இருக்கிறது? புதுத் திட்டத்தை உருவாக்குவது, கட்டிலும் திட்டம் தீட்டும் இடமாகி விடுகிறது.

தாய்மார்களின் குரூப்புடன் சந்திப்பு:

என்னுடைய அதிர்ஷ்ட நட்சத்திரம் மின்னிக் கொண்டிருக்கிறது என்று அனைவரும் அனுபவம் செய்கிறீர்களா? மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களைப் பார்த்து மற்ற ஆத்மாக்களும் நானும் இந்த மாதிரி ஆக வேண்டும் என்ற பிரேரணை எடுத்துக் கொள்ளும் மாதிரியான நட்சத்திரங்கள் தான் நீங்கள் இல்லையா! எப்போதாவது நட்சத்திரத்தின் மின்மினுப்பு குறைந்து போவதில்லை தான் இலையா! நீங்கள் அழியாத தந்தையின் அழியாத நட்சத்திரங்கள் தான் இல்லையா! எப்பொழுதும் ஒரே சீரான நிலையில் இருக்கிறீர்களா அல்லது சில நேரம் பறக்கும் கலை மேலும் சில நேரம் நிற்கும் கலையில் இருக்கிறீர்களா! இது எப்பொழுதும் பறக்கும் கலைக்கான யுகம், பறக்கும் கலையின் நேரத்தில் யாராவது ஏறும் கலையை செய்தாலும் நன்றாக இருக்காது. விமானத்தில் பயணம் செய்ய வாய்ப்பு கிடைக்கிறது என்றால் மற்ற பயணம் நன்றாக இருக்குமா? எனவே பறக்கும் கலையின் நேரத்தில் இருப்பவர்கள் கீழே வராதீர்கள். எப்பொழுதும் மேலே இருங்கள். கூண்டுப் பறவை அல்ல, கூண்டு உடைந்து விட்டதா அல்லது 2-4 கம்பிகள் இன்னும் இருக்கின்றனவா?

ஒருவேளை கம்பியும் தங்கி இருந்து விட்டால், அது தன் பக்கம் இழுக்கும். 10 கயிறுகளை அறுத்து விட்டீர்கள், ஒரு கயிறு மட்டும் இருந்துவிட்டால் கூட அது தன் பக்கம் இழுக்கும். அனைத்து கயிறுகளையும் அறுப்பவர், அனைத்து எல்லைக்குட்பட்டவைகளையும் கடந்து செல்பவர், அந்த மாதிரி பறக்கும் பறவை எல்லைக்குட்பட்டத்தில் மாட்டிக் கொள்ள முடியாது. 63 ஜெனமங்கள் மாட்டிக் கொண்டே வந்திருக்கிறீர்கள். இப்பொழுது ஒரு ஜென்மம் எல்லைக்குட்பட்டதிலிருந்து விடுபடுங்கள். இந்த ஒரு ஜென்மம் இருப்பதே எல்லைக்குட்படதிலிருந்து விடுபடுவதற்கானது என்றால் எப்படி நேரமோ அப்படி வேலை செய்ய வேண்டும் இல்லையா! நேரம் எழுவதற்கானது மேலும் யாராவது தூங்கிக் கொண்டிருந்தால் நன்றாக இருக்குமா! எனவே எப்பொழுதும் எல்லைக்குட்படதிலிருந்து விடுபட்டு எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் இருங்கள். தாய்மார்களுக்கு அழியாத மாங்கல்யத்தின் திலகமோ இடப்பட்டிருக்கிறது தான் இல்லையா! எப்படி உலகத்தில் மாங்கல்யத்தின் அடையாளம் திலகம் அதேபோல் அழியாத மாங்கல்யம் என்றால் எப்பொழுதும் நினைவு திலகம் இடப்ப்ட்டிருப்பது. அந்த மாதிரி சுமங்கலி எப்பொழுதும் பாக்கியம் நிறைந்தவர். நீங்கள் ஒவ்வொரு கல்பத்திலும் பாக்கியம் நிறைந்த ஆத்மாக்கள். அந்த மாதிரி பாக்கியம். அதை யாரும் உங்களிடமிருந்து பறிக்க முடியாது. நீங்கள் எப்பொழுதும் அதிகாரி ஆத்மாக்கள், உலகத்தின் அதிபதி, உலக இராஜ்யமே உங்களுடையதாகி விட்டது. இராஜ்யம் தன்னுடயது, பாக்கியம் தன்னுடையது, பகவான் தன்னுடையவர், இவரைத் தான்

அதிகாரி ஆத்மா என்று கூறுவது. அதிகாரியாக இருக்கிறீர்கள் என்றால் அடிமைத்தனம் இல்லை.

கேள்வி:

குழந்தைகள் உங்களுடைய வருமானம் குறைவற்றது மற்றும் அழிவற்றது எப்படி?

பதில்:

நீங்கள் அந்த மாதிரி வருமானம் செய்கிறீர்கள், அதை ஒருபொழுதும் யாரும் உங்களிடமிருந்து பறிக்க முடியாது. எந்தப் பிரச்சனையும் ஆக முடியாது. மற்ற வருமானத்திலோ பயமிருக்கும், இந்த வருமானத்தை ஒருவேளை யாராவது பறிக்க விரும்பினால் கூட உங்களுக்கு குஷி ஏற்படும், ஏனென்றால் அவரும் வருமானம் செய்தவர் ஆகி விடுவார். யாராவது கொள்ளையடிக்க வந்தார் என்றால், இன்னும் குஷி ஏற்படும், இந்தா எடுத்துக்கொள் என்று கூறுவீர்கள். அப்படி இதன் மூலம் வருமானம் செய்யும் சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள். நல்லது. ஓம்சாந்தி

வரதானம்:

சேவையின் பிரத்யக்ஷ பழத்தை அருந்தி நிரந்தர ஆரோக்கியமானவராக, செல்வந்தனாக மேலும் சந்தோஷமாக இருக்கும் எப்பொழுதும் குஷி நிறைந்தவர் ஆகுக.

எப்படி இந்த உலகத்தில் கூட இப்பொழுது பறித்த பழத்தை அருந்தினீர்கள் என்றால், ஆரோக்கியமாக இருப்பீர்கள் என்று கூறுகிறார்கள். ஆரோக்கியமாக இருப்பதற்காக பழம் சாப்பிடுங்கள் என்று கூறுகிறார்கள். மேலும் குழந்தைகளாகிய நீங்களோ, ஒவ்வொரு விநாடியும் பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை அருந்துபவர்கள் எனவே யாராவது உங்களிடம் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? என்று கேட்டால், நாங்கள் மிகவும் குஷியாக இருக்கிறோம்,. மேலும் ஃபரிஸ்தாக்கள் மாதிரி நடந்து கொள்கிறோம். நாங்கள் ஆரோக்கியமாகவும், செல்வம் நிறைந்தவர்களாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறோம் என்று பதில் கூறுங்கள். பிராமணன் ஒருபொழுதும் சோர்வடைய முடியாது.

சுலோகன்:

தூய்மையான ஆத்மாதான் சுத்தம் மற்றும் தூய்மையின் கண்ணாடி.

ஓம்சாந்தி

05.04.1983 ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## அனைத்து வரதானங்களும் உங்களுடைய பிறப்புரிமை

பாப்தாதா தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். துவாபர்யுகத்திலிருந்து விசேஷ ரூபத்தில் என்ன என்ன திருவிழாக்கள் நடக்கின்றனவோ, அவைகள் ஏதாவது நதிக்கரையில் நடக்கும் மற்றும் ஏதாவது தேவி அல்லது தேவதையின் விக்ரஹத்தின் எதிரில் நடக்கும். ஒரே ஒரு சிவராத்திரிப் பண்டிகையை மட்டும் தந்தையின் நினைவாகக் கொண்டாடுகிறார்கள், ஆனால் அறிமுகம் கிடையாது, துவாபர் யுகத்தின் விழாக்கள் பக்தர்கள் மற்றும் தேவிகள், தேவதைகளுக்கு நடக்கும், ஆனால் இந்த சந்திப்பு விழா மகாநதி மற்றும் கடலின் கரையில் தந்தை மற்றும் குழந்தைகளினுடையது நடைபெறுகிறது.. இந்த மாதிரியான விழா முழுக் கல்பத்திலும் இருக்க முடியாது. மதுபன்னில் இரண்டு மேளா (சந்திப்பை) பார்க்கிறீர்கள். ஒன்று தந்தை மற்றும் தாதா (பிரம்மா) மகாநதி மற்றும் கடலின் மேளா பார்க்கிறீர்கள். கூடவே பாப்தாதா மற்றும் குழந்தைகளின் மேளாவை பார்க்கிறீர்கள், சந்திப்பையோ கொண்டாடிவிட்டீர்கள் அல்லவா! இந்த விழா வளர்ச்சியை அடைந்து கொண்டே இருக்கும். வளர்ச்சியடைய வேண்டும் என்று ஒரு பக்கம் சேவை செய்து கொண்டே இருக்கிறீர்கள், கண்டிப்பாக வளர்ச்சியை அடைய வேண்டும் மற்றும் விழாவையும் கொண்டாடியே தீர வேண்டும்.

பாப்தாதா அவர்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தார்கள். பிராமணர்களின் வளர்ச்சியோ யக்ஞத்தின் இறுதிவரை இருக்கும் என்று பிரம்மா கூறுகிறார், ஆனால் சாகார (பௌதீக உலகத்தில் சாகார ரூபத்தில் சந்திப்பதற்கான விதியில் வளர்ச்சியின் கூடவே பரிவர்த்தனையோ ஆகும் இல்லையா! கடனாக பெற்ற ஒரு பொருளுக்கும், மேலும் தன்னுடைய பொருளுக்கும் வித்தியாசம் இருக்கும் இல்லையா! தன்னுடைய பொருளை எப்படி விரும்புகிறாரோ, அப்படி காரியத்தில் ஈடுபடுத்தப்படுகிறது. மேலும் கடனாகப் பெற்ற பௌதீக உடலும் கடைசி ஜென்மத்தின் உடல், கடனாக பெற்ற பழைய பொருளை பயன் படுத்துவதற்கான விதியையும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது இல்லையா! அதற்கு சிவபாபா புன்சிரித்துக் கொண்டே மூன்று உறவுகளின் மூன்று வழி முறைகளின் விதி, வளர்ச்சிக்கேற்றபடி மாற்றமோ ஆகியே தீரும் என்று கூறினார், அது என்ன ஆகும்?

தந்தை ரூபத்தில் விசேஷ அதிகாரம் சந்திப்பு என்ற விசேசமான டோலி மற்றும் ஆசிரியர் ரூபத்தில் முரளி. சத்குருவின் ரூபத்தில் பார்வையாலேயே திருப்தி படுத்துவது அதாவது அவ்யக்த சந்திப்பின் ஆன்மீக அன்பின் திருஷ்டி, இதே விதியின் படி வளர்ச்சியை அடையும் குழந்தைகளின் வரவேற்பு மற்றும் சந்திப்பு விழா நடந்து கொண்டே இருக்கிறது. எனக்கு ஏதாவது வரதானம் கிடைக்க வேண்டும் என்று அனைவருக்கும் எண்ணம் இருக்கிறது. எப்பொழுது நீங்கள் வரமளிக்கும் வள்ளலின் குழந்தைகளாகவே இருக்கிறீர்கள் என்றால் அனைத்து வரதானமே உங்களுடைய பிறப்புரிமை என்று பாப்தாதா கூறுகிறார். இப்பொழுது என்ன பாப்தாதா கூறுகிறார். இப்பொழுது என்ன ஆனால் பிறந்த உடனேயே வரமளிக்கும் வள்ளல் வரதானம் கொடுத்து விட்டார். உருவாக்குபவரோ, பாக்கியத்தின் அழியாத ரேகை ஜாகத்தில் ஏற்கனவே இருந்தது. உலகத்தில் கூட ஜாதகத்தை, பெயர் சூட்டுவதற்கு முன்பாகவே எழுதி விடுவார்கள். பாக்கியத்தின் உருவாக்கும் தந்தை, வரமளிக்கும் வள்ளல் தந்தை, பிரம்மா தாய் பிறந்த உடனேயே பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரி என்று பெயர் சூட்டுவதற்கு முன்பே அனைத்து வரதானங்கள் மற்றும் அழியாத பாக்கியத்தின் ரேகையை, தாங்களே வரைந்துவிட்டனர், ஜாதகத்தை எழுதி விட்டார்கள். அதனால் நிரந்தர வரம் பெற்றவராகவோ இருக்கிறீர்கள். நினைவு சொரூப குழந்தைகளுக்கோ, எப்பொழுதும் அனைத்து வரதானங்களும் பிராப்தி ஆகியே இருக்கிறது. நீங்கள் பிராப்தி சொரூப குழந்தைகள். அடைய வேண்டும் என்ற ஒன்று இருக்கிறதா என்ன அடைவதற்கு! அந்த மாதிரி இன்று பாப்தாதாவின் ஆன்மீக உரையாடல் இருந்தது. இந்த ஹாலை கட்டியதே எதற்காக? மூவாயிரம், நாலாயிரம் பிராமணர்கள் வரவேண்டும் என்பதற்காக, சந்திப்பு விழா பெரிய அளவில் வளர வேண்டும் என்பதற்காக. அதனால் மிக அதிகமாக வளர்ச்சி அடைந்து கொண்டே இருங்கள். முரளி கூறவேண்டாமா என்ன? ஆம். பார்வை பட வேண்டும். இந்த அனைத்து விஷயங்களோ நிறைவேறியே தீரும்.

இப்பொழுதோ அபு வரை வரிசையில் நிற்க வேண்டும் இல்லையா! இந்த அளவு வளர்ச்சியையோ அடைய வேண்டும் இல்லையா! அல்லது நாம் குறைவான நபர்கள் இருப்பதே நல்லது என்று நினைக்கிறீர்களா? சேவாதாரிகள் எப்பொழுதும் தன்னுடையதைத் தியாகம் செய்து மற்றவர்களின் சேவையில் மகிழ்ச்சியடைவார்கள். தாய்மார்களோ சேவையின் அனுபவிகள் தான் இல்லையா! தன்னுடைய தூக்கத்தையும் தியாகம் செய்வார்கள், குழந்தைகளை மடி என்ற ஊஞ்சலில் ஆட்டுவார்கள். உங்கள் மூலமாக யார் வளர்ச்சியை அடைவார்களோ, அவர்களுக்கும் அவர்களுடைய பங்கைக் கொடுப்பீர்கள் அல்லவா! நல்லது,.

இந்த தடவையோ பாப்தாதாவும் பாரதத்தின் அனைத்து குழந்தைகளின் முறையீடுகளை அகற்றிவிட்டார். எதுவரை கடனாக பெற்ற உடல் நிமித்தமாக முடியுமோ, அதுவரை இந்த தடவையோமுறையீடுகளை நிவர்த்தி செய்து கொண்டுதான் இருக்கிறார். நல்லது,.

ஆன்மீக அன்பை ஆன்மீக சந்திப்பை அனுபவம் செய்யக் கூடிய அனைவருக்கும், பிறந்ததிருந்தே அனைத்து வரதானத்தால் நிரம்பிய அழியாத சிரேஷ்ட பாக்கியவானுக்கு, அந்த மாதிரி எப்பொழுதும் மகா தியாகி, தியாகம் மூலம் பாக்கியத்தை அடையும் அந்த மாதிரி பலகோடி மடங்கு பாக்கிய நிறைந்த குழந்தைகளுக்கு, நாலா புறங்களிலும் உள்ள அன்பின் சாதகப்பறவைகள் மாதிரி இருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்,

10.12.2017 காலை முரளி ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா

ரிவைஸ் 07.04.1983 மதுபன்.

## தாய்மார்களுக்காக அவ்யக்த பாப்தாதாவின் மகாவாக்கியம்

இன்று விசேஷமாக பொறுப்பாளராகியிருக்கும் இரட்டை சேவாதாரி, பாப்தாதாவின் அன்பிற்குரிய தாய்மார்களுக்கு விசேஷமாக இரண்டு வார்த்தைகள் கூறிக்கொண்டே இருக்கிறோம். தந்தையின் இந்த அறிவுரை என்ற பரிசை எப்பொழுதும் உடன் வைத்து கொள்ளுங்கள்.

ஒன்று உலகத்தில், குடும்பத்தில் இருந்து கொண்டே எப்பொழுதும் ஆன்மீக நினைவு, எப்பொழுதும் சேவதாரியின் நினைவு, எப்பொழுதும் டிரஸ்டி என்ற நினைவு. அனைவருக்காக ஆத்மீக உணர்வுடன் நன்மை பயக்கும் பாவனை. எப்படி மற்ற ஆத்மாக்களை சேவையின் பாவனையோடு பார்க்கிறீரகள், கூறுகிறீர்கள், அதேபோல் நிமித்தமாகியிருக்கும் லௌகீக குடும்பத்து ஆத்மாக்களையும் அதே விதமாக நடத்திக் கொண்டிருங்கள். எல்லைக்குட்பட்டத்தில் வராதீர்கள். என்னுடைய மகன், என்னுடைய கணவன் என்பதில்

. .

வராதீர்கள் அனைவருக்கும் நன்மை ஏற்படட்டும் ஒருவேளை என்னுடையது என்பது இருக்கிறது என்றால் ஆத்மீக பார்வை, நன்மை பயக்கும் பார்வை வைக்க முடியாது. பெரும்பான்மையோர் பாப்தாதாவின் முன்னால், குழந்தைகள் மாறி விட வேண்டும், கணவன் ஒத்துழைக்க வேண்டும். வீட்டிருப்பவர்கள் எனக்குத் துணையாக இருக்க வேண்டும் என்ற இந்த தன்னுடைய விருப்பத்தை தான் வைக்கிறார்கள். ஆனால் அந்த ஆத்மாக்களை மட்டும் தன்னுடையவர்கள் என்று நினைத்து ஏன் அந்த விருப்பத்தை வைக்கிறீர்கள்! இந்த எல்லைக்குட்பட்ட சுவரின் காரணமாக உங்களுடைய சுபபாவனை, நன்மை ஏற்பட வேண்டும் என்ற நல் ஆசைகள் அந்த ஆத்மாக்கள் வரை சென்றடைவது இல்லை. எனவே எண்ணம் நல்லதாக இருந்தும், ஆனால் சாதனம் யதார்த்தமாக இல்லையென்றால், ரிஸல்ட் எப்படி வெளிப்படும்? எனவே இந்தப் புகார் இருந்து கொண்டே இருக்கிறது. எனவே எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட ஆத்மீக பார்வை, சகோதரன், சகோதரன் என்ற சம்பந்ததின் உள் உணர்வினால், எந்த ஆத்மாவிற்காகவும் சுப பாவனை வைப்பதின் பலன் அவசியம் பிராப்தி ஆகிறது. அதனால் முயற்சி செய்வதில் களைப்படையாதீர்கள். மிகுந்த முயற்சி செய்திருக்கிறோம். ஆனால் இவரோமாறுவதோ இல்லை என்று அந்தமாதிரி மனமுடைந்து போகுபவராகவும் ஆகாதீர்கள். நிச்சய புத்தி உடையவராகி, என்னுடையவர் என்ற சம்பந்தத்திலிருந்து விலகியவராகி நடந்து கொண்டே இருங்கள். சில சில ஆத்மாக்களுக்கு ஈஸ்வரிய ஆஸ்தியை பெறுவதற்காக பக்தியின் கணக்கு முடிவடைவதில் கொஞ்சம் காலம் எடுக்கும், எனவே பொறுமையாக இருந்து சாட்சி என்ற நிலையில் நிலைத்திருங்கள். நம்பிக்கை இழக்காதீர்கள். சாந்தி மற்றும் சக்தியின் சகயோகத்தை ஆத்மாக்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருங்கள். அந்த மாதிரி நிலையில் நிலைத்திருந்து குடும்பத்தில் ஆன்மீக பாவனை வைக்கக் கூடிய, இரட்டை சேவாதாரி டிரஸ்டி குழந்தைகளின் மகத்துவம் மிக உயர்ந்தது. தன்னுடைய மகத்துவத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். அப்படியானால் இரண்டு வார்த்தைகள் என்ன நினைவு வைத்துக் கொள்வீர்கள்?

பற்றுதலை வென்றவர், எல்லைக்கப்பாற்பட்ட சம்பந்தத்தின் நினைவு சொரூபம். மேலும் இரண்டாவது நான் தந்தையின் குழந்தை, தந்தை எப்பொழுதும் என்னுடன் இருக்கிறார், தந்தையுடன் அனைத்து உறவுகளையும் வைத்து கொள்ள முடியும் இல்லையா! இந்த இரண்டு விஷயங்களை விசேஷமாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பாப்தாதா ஒவ்வொரு சக்தி மற்றும் பாண்டவருடன் தனிப்பட்ட முறையில் பேசிக் கொண்டிருக்கிறார் என்று அனைவரும் யோசிக்கிறீர்கள் தான் இல்லையா! சபையில் இருந்த போதிலும் அனைத்து குடும்பத்திலிருப்பவர்களுடன் பாப்தாதா விசேஷமாக தனிப்பட்ட முறையில் பேசிக் கொண்டிருக்கிறார். பொது இடத்திலும் தனிப்பட்ட முறையில் பேசிக்கொண்டிருக்கிறார்.

புரிந்ததா!. ஒவ்வொரு குழந்தைக்கும் மற்ற ஒவ்வொருவரையும் விட அதிக அன்பு கொடுத்துக் கொண்டிருக்கிறோம், எனவே தான் வருகிறீர்கள் இல்லையா! அன்பு கிடைக்கிறது, ஈஸ்வரிய நினைவு பரிசு கிடைக்கிறது, இதனால் தான் புத்துணர்வு அடைகிறீர்கள் அல்லவா! அன்புக்கடலில் ஒவ்வொரு அன்பிற்குரிய ஆத்மாவிற்கும் அன்பின் சுரங்கத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறார், அது ஒருபோதும் குறைவடையாது. வேறு ஏதாவது மிச்சம் இருக்கிறதா என்ன? சந்திப்பது, பேசுவது மற்றும் பெறுவது, இதைத் தான் விரும்புகிறீர்கள் இல்லையா! நல்லது.

அந்த மாதிரி அனைத்து எல்லைக்குட்பட்ட சம்பந்தத்திலிருந்து விலகி இருக்கும், எப்பொழுதும் பிரபுவின் அன்பிற்கு பாத்திரமான, பற்றுதலை வென்ற, உலகிற்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நினைவு சொரூப, எப்பொழுதும் நிச்சய புத்தியடைய வெற்றியடையும், குழப்பத்திலிருந்து விடுபட்டு உறுதியாக இருக்கக் கூடிய, சிரேஷ்ட ஆத்மாக்களுக்காக பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் தனித் தனி குரூப்புடன் சந்திப்பு:

1. எப்பொழுதும் தன்னை தந்தையின் துணைவனாக அனுபவம் செய்கிறீர்களா? யாருடைய துணைவனாக சர்வசக்திவான் இருக்கிறார் என்றால், அவருக்கு எப்பொழுதுமே அனைத்து பிராப்திகள் இருக்கின்றன. அவர்கள் முன்பு ஒருபோதும் எந்த விதமான மாயா வரமுடியாது. மாயாவிற்கு விடை கொடுத்து விட்டீர்களா? எப்போதாவது மாயாவிற்கு விருந்து உபசாரமோ செய்வதில்லையே? யார் மாயாவிற்கு விடை கொடுப்பவர்களோ, அவர்களுக்கு பாப்தாதா மூலமாக ஒவ்வொரு அடியிலும் ஆசிர்வாதம் கிடைக்கிறது, ஒருவேளை இதுவரையிலும் விடை கொடுக்கவில்லை என்றால் என்ன செய்வது, எப்படி செய்வது என்று அடிக்கடி கதற வேண்டியதாக இருக்கும். எனவே நிரந்தரமாக விடை கொடுப்பவராக, மேலும் வாழ்த்துக்கள் பெறுபவராக ஆகுங்கள். அந்த மாதிரி அதிர்ஷ்டம் நிறைந்த ஆத்மாக்கள் நீங்கள். ஒவ்வொரு அடியிலும் தந்தை உடன் இருக்கிறார் என்றால் வாழ்த்துக்களும் கூடவே இருக்கிறது. சுயம் பகவான் ஆத்மாக்கள் எங்களுக்கு வாழ்த்துக்கள் கொடுக்கிறார் என்ற இதே நினைவில் எப்பொழுதும் இருங்கள். எதை நினைக்கவே இல்லையோ, அதை அடைந்து விட்டோம். தந்தையை அடைந்தோம், அனைத்தையும் அடைந்தோம். அனைத்து பிராப்தி சொரூபம் ஆகி விட்டீர்கள். எப்பொழுதும் இதே பாக்கியத்தை நினைவு செய்யுங்கள்.

2. அனைவரும் ஒரு தந்தையின் அன்பில் மூழ்கி இருக்கிறீர்களா? எப்படி கடலில் மூழ்கி விடுகிறார்கள், அதேபோல் தந்தையின் அன்பில் எப்பொழுதும் மூழ்கியிருப்பது. யார் எப்பொழுதும் அன்பில் மூழ்கி இருக்கிறார்களோ, அவர்களுக்கு உலகத்தின் எந்த விஷயத்தின் பாதிப்பும் இருப்பதில்லை. அன்பில் மூழ்கியிருக்கும் காரணத்தினால் அனைத்து விஷயங்களிலிருந்து சுலபமாகவே விடுபட்டு விடுகிறார்கள், கடின உழைப்பு உழைக்க வேண்டியது இருக்காது. பக்தர்களுக்காக, இவரோதன்னையே மறந்த நிலையில் இருக்கிறார் என்று கூறுவார்கள், ஆனால் குழந்தைகளோ, எப்பொழுதும் அன்பில் முழ்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு உலகின் நினைவு இருப்பதில்லை. என்னுடைய வீடு, என்னுடைய குழந்தை, இது என்னுடையது, அந்த மாதிரி இந்த என்னுடையது, என்னுடையது என்ற அனைத்தும் முடிந்த நிலை, என்னுடையவர் ஒரு தந்தை அவ்வளவு தான்! மற்றும் மற்ற அனைத்து என்னுடையதும் முடிந்தது. மேலும் என்னுடையது என்பது அழுக்காக்கி விடுகிறது, என்னுடையது ஒரு தந்தை என்றால் அழுக்கு அகன்று விடுகிறது.

3. தந்தைக்கு ஒவ்வொரு குழந்தையும் மிக அன்பிற்குரியவர், நீங்கள் அனைவரும் சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமானவர்கள், ஏழையாக இருந்தாலும், செல்வந்தராக இருந்தாலும், படித்தவராக இருந்தாலும், படிக்காதவராக இருந்தாலும், அனைவரும் ஒருவர் இன்னொருவரை விட அதிக அன்பிற்குரியவர். தந்தையைப் பொருத்தவரை அனைவருமே விசேஷ ஆத்மாக்கள். அனைவரிலும் என்ன விசேஷம் இருக்கிறது? தந்தையை தெரிந்து கொண்டதின் விசேஷம் இருக்கிறது. யாரை பெரிய பெரிய ரிஷிகள், முனிகள் தெரிந்த கொள்ள முடியவில்லையோ, அவரை நீங்கள் தெரிந்து கொண்டீர்கள், அடைந்து விட்டீர்கள். பாவம் அவர்களோ தெரியாது, தெரியாது என்று கூறிச் சென்று விட்டார்கள்! நீங்கள் அனைத்தையும் தெரிந்து கொண்டீர்கள். அதனால் பாப்தாதா அந்த மாதிரி விசேஷ ஆத்மாக்களுக்கு தினமும் அன்பு நினைவிகளைக் கொடுக்கிறார், தினமும் சந்திக்கிறார், அமிர்தவேளையின் நேரம் குறிப்பாக குழந்தைகளுக்கானது. பக்தர்களின் வரிசை பின்னர் குழந்தைகள் தான் முன்னர், யார் விசேஷ ஆத்மாக்களாக இருப்பார்களோ, அவர்களை சந்திக்கும் நேரமும் அவசியம் விசே'மாக இருக்கும் இல்லையா! எனவே தன்னை எப்பொழுதும் அந்த மாதிரியான விசேஷ ஆத்மா என்று புரிந்து கொள்ளுக்கள், மேலும் எப்பொழுதும் குஷியில் பறந்து கொண்டே இருங்கள்.

4. பிராமணக் குழந்தைகள் தங்களுடைய நோய்க்கான மருத்துவத்தை, அவர்களே செய்ய முடியும், குஷி என்ற டானிக் ஒரு நொடியில் பலன் கொடுக்கும் மருந்து. எப்படி அவர்கள் சக்தி நிறைந்த இன்ஜக்ஷன் போட்டு விடுகிறார்கள் என்றால் மாறி விடுக்கிறார்கள். அந்த மாதிரி

பிராமணர்கள் தனக்குத் தானே குஷியின் மாத்திரை கொடுத்து விடுகிறார்கள் மற்றும் குஷியின் இன்ஜக்ஷன் போட்டு விடுகிறார்கள். இந்த ஸ்டாக்கோ (கையிருப்பு) அனைவரிடமும் இருக்கிறது தான் இல்லையா! ஞானத்தின் ஆதாரத்தில் சரீரத்தை நடத்த வேண்டும், ஞானத்தின் ஆதாரத்தின் லைட் (ஒளி) மற்றும் மைட் (சக்தி) மிகவும் உதவி கொடுக்கிறது. ஏதாவது நோய் வருகிறது என்றால் இதுவும் புத்திக்கு ஓய்வு கொடுப்பதற்கான சாதனம். சூட்சமவதனத்தில் அவ்யக்த பாப்தாதாவுடன் இரண்டு நாட்கள் அழைப்பின் அஷ்ட லீலை விளையாடுவதற்காக வந்து சேருங்கள், பிறகு எந்த டாக்டருகான அவசியம் இருக்காது. எப்படி ஆரம்ப காலத்தில் செய்தி கொண்டு வரும் சகோதரிகள் சென்றார்கள், ஒரு நாள், இரண்டு நாள் சூட்சம வதனத்திலேயே இருந்தார்கள். அதேபோலஷேதாவது ஆகி விட்டால் வதனத்திற்கு வந்து விடுங்கள். பாப்தாதா வதனத்தில் சுற்றி வர அழைத்துச் செல்வார். பக்தர்களிடமும் அழைத்துச் செல்வார், லண்டன், அமெரிக்காவை சுற்றிப் பார்க்க அழைத்துச் செல்வார். உலகைச் சுற்றி காட்டுவார். எனவே எப்போதாவது ஏதாவது நோய் வந்தது என்றால் சூட்சமவதனத்திலிருந்து அழைப்பு வந்திருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். நோய் வரவில்லை, அழைப்பு வந்திருக்கிறது.

கேள்வி:

சகஜயோகிவாழ்க்கையின் சிறப்பு என்ன?

பதில்:

யோகி வாழ்க்கை என்றால் எப்பொழுதும் சுகம் நிறைந்த வாழ்க்கை, யார் சகஜயோகி இருக்கிறாரோ,அவர் எப்பொழுதும் சுகம் என்ற ஊஞ்சலில் ஆடுபவராக இருப்பார். எப்பொழுது சுக வள்ளல் தந்தையே தன்னுடையவராகி விட்டார் என்றால் சுகமே சுகம் ஆகிவிட்டது தான் இல்லையா! எனவே சுகத்தின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருங்கள். சுகவள்ளல் தந்தை கிடைத்து விட்டார், சுகமான வாழ்க்கை ஆகிவிட்டது, சுகமான உலகம் கிடைத்து விட்டது, இது தான் யோகிவாழ்க்கையின் சிறப்பு, அதில் துக்கத்தின் பெயர் அடையாளமே இல்லை.

கேள்வி:

வயதானவர்கள் மற்றும் படிக்காதவர்கள் எந்த ஆதாரத்தில் சேவை செய்ய வேண்டும்?

பதில்:

தன்னுடைய அனுபவத்தின் ஆதாரத்தில் சேவை செய்ய வேண்டும். அனுபவத்தின் கதையை அனைவருக்கும் கூறுங்கள். எப்படி வீட்டில் பாட்டி-தாத்தா குழந்தைகளுக்கு கதைகள் கூறுகின்றனரோ, அது போல நீங்களும் அனுபவத்தின் கதையைக் கூறுங்கள். என்ன கிடைத்தது. என்ன அடைந்தோம்.. இதைத் தான் கூற வேண்டும். இது மிகப் பெரிய சேவை, இதை ஒவ்வொருவரும் செய்ய முடியும். நினைவு மற்றும் சேவையிலேயே எப்பொழுதும் ஆர்வத்துடன் இருங்கள். இது தான் தந்தைக்குச் சமமான கடமை.

வரதானம்:

பிராமண ஜென்மத்தின் விசேஷத்தை இயற்கையான இயல்பாக ஆக்கக் கூடிய சகஜ (எளிய) முயற்சியாளர் ஆகுக

எப்படி யாருடைய ஜென்மமாவது இராஜ குடும்பத்தில் ஏற்பட்டிருக்கிறது என்றால், நான் இராஜகுமார், அல்லது இராஜகுமாரி என்று அடிக்கடி நினைவில் கொண்டு வருவார்கள், செய்யும் காரியம் ஆர்வத்தின் காரணமாக சாதாரணமாக இருந்தால் கூட, தனது ஜென்மத்தின் விசேஷத்தை மறக்க மாட்டார்கள். அந்த மாதிரி பிராமண ஜென்மம் தான் விசேஷ ஜென்மம், எனவே ஜென்மமும் சிரேஷ்டம், தர்மமும் (தாரணை) சிரேஷ்டம், மேலும் கர்மமும் சிரேஷ்டம். இதே சிரேஷ்ட தன்மை அதாவது சிறப்பான வாழ்க்கை நினைவில் இயற்கையாக இருந்தது என்றால் சகஜ முயற்சியாளர் ஆகி விடுவார். விசேஷ வாழ்க்கையுள்ள ஆத்மாக்கள் ஒரு பொழுதும் சாதாரண காரியம் செய்ய முடியாது.

சுலோகன்:

டபுள் லைட் - ஆக இருக்க வேண்டும் என்றால், விக்ன விநாஷக் (தடைகளை அழிப்பவர்) ஆகுங்கள்.

ஓம்சாந்தி

11.04.1983 ஒம்சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சகஜ முயற்சியாளரின் இலட்சணம்

பாப்தாதா தன்னுடைய அன்பான, சகயோகி குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். அன்பு மற்றும் சந்திக்க வேண்டும் என்ற பாவனை, இந்த இரண்டு சக்திகளின் ஆதாரத்தில் நிராகார (உடலற்ற) மற்றும் ஆகார (ஒளிவடிவ உடலுள்ள) தந்தையை, தனக்குச் சமமாக பௌதீக உலகத்தில் அழைத்து வருவதற்கு பொறுப்பாளர் ஆகி விடுகிறீர்கள். தந்தையையும் குழந்தைகள் அன்பு மற்றும் பாவனையின் பந்தனத்தில் கட்டிப் போட்டு விடுகிறார்கள். இப்பொழுது கூட பெரும்பான்மையோர் தாய்மார்கள், பகவானை கட்டிப் போட்டதாக தாய்மார்களின் சரித்திரத்திலும் மற்றும் சித்திரங்களிலும் காண்பித்திருக்கிறார்கள். எந்த மரத்தில் கட்டிப் போட்டார்கள்? இந்த எல்லைக்கப்பாற்பட்ட கல்ப விருக்ஷத்தில் அன்பு மற்றும் பாவனை என்ற கயிறினால் சென்ற கல்பத்திலும் கட்டினார்கள், மேலும் இப்பொழுதும் அது மீண்டும் நடந்து கொண்டிருக்கிறது. அன்பிற்குப் பலனாக எந்தக் கயிறினால் தந்தையைக் கட்டுகிறீர்களோ, அந்த அன்பு மற்றும் பாவனை என்ற இரண்டு கயிறுகளால் இதய சிம்மாசனம் என்ற இருக்கை கொடுத்து ஊஞ்சலாக்கி, குழந்தைகளுக்குக் கொடுத்து விடுகிறார். இந்த கல்ப விருக்ஷத்திற்குள் பங்கை செய்பவர்கள் இதே ஊஞ்சலில் எப்பொழுதும் ஆடிக்கொண்டே இருங்கள். அனைவருக்கும் ஊஞ்சல் கிடைத்திருக்கிறது தான் இல்லையா! இருக்கையிலிருந்து வழுக்கி விடுவதில்லையே? அன்பு மற்றும் பாவனை என்ற கயிறுகள் எப்பொழுதும் உறுதியாக இருக்கின்றன தான் இல்லையா! சமநிலையின்றி ஏற்ற இறக்கமாகவோ இருப்பதில்லையே, ஊஞ்சல் ஆடவும் செய்யும், மேலே உயரே கொண்டு செல்லவும் செய்யும், ஒருவேளை கொஞ்சமாவது ஏற்றம் இறக்கமானது என்றால், மேலே இருந்து கீழே விழவும் செய்து விடும். ஊஞ்சலையோ அனைவருக்கும் பாப்தாதா கொடுத்திருக்கிறார். அப்படியானால் எப்பொழுதும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கிறீர்களா? தாய்மார்களுக்கு ஊஞ்சலில் ஆடும் அனுபவம் இருக்கும் இல்லையா! எந்த விஷயத்தின் அனுபவியாக இருக்கிறீர்களோ, அந்த விஷயமோ இல்லைதான் இல்லையா! அனுபவம் செய்யப்பட்ட விஷயங்கள் சுலபமாக இருக்குமா, கடினமாக இருக்குமா?

இன்றைய இது எந்த சபை? அனைவரும் சகஜயோகி, சகஜ முயற்சி செய்பவர்களாக, சகஜ பிராப்தி சொரூபமாக இருக்கிறீர்களா? அல்லது சில நேரம் சகஜ மற்றும் சில நேரம் கடின யோகியாகஇருக்கிறீர்களா? சகஜ முயற்சி செய்பவர் என்றால் வந்திருக்கும் இமயமலை போன்ற

பிரச்சனையையும் பறக்கும் கலையின் ஆதாரத்தில் ஒரு நொடியில் கடந்து செல்பவர். கடந்து செல்வதின் அர்த்தமே ஏதாவது ஒன்று இருந்தால்தானே அதைக் கடந்து செல்வீர்கள். அப்படி பறந்து கொண்டு சகஜமாக கடந்து செல்கிறீர்களா? அல்லது சில நேரம் மலையிலும், சில நேரம் காட்டிலும் இறங்கி விடுகிறீர்கள் அப்படியா? பிறகு என்ன கூறுகிறார்கள்? விடுவியுங்கள், காப்பாற்றுங்கள் என்று கூறுகிறார்கள்.. நீங்கள் அந்த மாதிரி செய்பவர்கள் இல்லைதானே? இப்பொழுதும் தாய்மார்கள் ஒவ்வொரு விஷயத்திலும் அதே மாதிரி கூவி அழைப்பதை செய்து கொண்டிருக்கவில்லையே? பக்தியின் சம்ஸ்காரமோ முடிந்து விட்டது தான் இல்லையா! திரௌபதியின் கூக்குரலிடுவது முடிந்து விட்டதா அல்லது இப்பொழுதும் இருக்கிறதா? இப்பொழுதோ அதிகாரி ஆகிவிட்டீர்கள் தான் இல்லையா? கூக்குரலிடும் நேரம் முடிவடைந்து விட்டது. சங்கமயுகம் பிராப்தி செய்வதற்கான நேரமேயன்றி கூக்குரலிடுவதற்கான நேரம் அல்ல. சகஜ முயற்சியாளர் என்றால், அனைத்தையும் கடந்து அனைத்தையும் சகஜ பிராப்தி செய்பவர். சகஜ முயற்சியாளர் எப்பொழுதும் தற்சமயம் மற்றும் எதிர்கால பிராப்தி அடைவதற்கான அனுபவியாக இருப்பார். ஸ்தூல கண்கள் மூலமாக ஸ்துல பொருட்கள் தெளிவாகத் தென்படுவது போல் பிராப்தி அந்த மாதிரி எப்பொழுதும் தெளிவாகத் தென்படும். அந்த மாதிரி புத்தியின் அனுபவத்தின் கண் மூலமாக பிராப்தி தென்படும். சகஜ முயற்சியாளர் ஒவ்வொரு அடியிலும் பலகோடி மடங்கையும் விட அதிக வருமானத்தை அனுபவம் செய்வார். அந்த மாதிரி தன்னை எப்பொழுதும் சங்கமயுகத்தின் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பிய ஆத்மாவாக அனுபவம் செய்வார்கள். எந்த ஒரு சக்தியிலிருந்தும், எந்த ஒரு குணத்தின் பொக்கிஷத்திலிருந்தும், ஞானத்தின் எந்த ஒரு பாயிண்டின் (துளியின்) பொக்கிஷத்திலிருந்தும் குஷியிலிருந்தும், போதையிலிருந்தும் ஒரு பொழுதும் காலியாக இருக்க மாட்டார்கள். காலியாவது என்றால், கீழே இறங்குவதற்கான சாதனம் குழி ஆகிவிடுகிறது இல்லையா! அந்த மாதிரி குழியில் விழுந்து விடுகிறார்கள். கொஞ்சமாவது காயம் ஏற்பட்டு விட்டது என்றால், நொந்து போவார்கள் இல்லையா! இதுவும் புத்தியில் காயம் பட்டு விடுகிறது. எண்ணம் கோணலாகி விடுகிறது. சக்தியானது பலஹீனமாகி மேலும் காலியாகி விடுகிறார்கள். அப்படி எண்ணத்தின் காயம் ஏற்பட்டு விட்டது தான் இல்லையா! அப்படி என்ன செய்கிறீர்கள்? பிறகு பாதை கோணலானது என்று கூறுகிறீர்கள். நீங்கள் கோணலாக இல்லையா! வளைந்து கோணலானதை நேராக ஆக்கியிருக்கிறீர்கள் தான் இல்லையா! சக்தி அவதாரமாக ஏன் இருக்கிறீர்கள்? கோணலாக இருப்பதை நேராக ஆக்குவதற்காகத் தான். என்ன ஒப்பந்தம் எடுத்திருக்கிறீர்கள்? எப்படி இந்த ஹால் கோணலாகவளைந்து இருந்ததை நேராக ஆக்கினீர்கள், அதனால் தான் இங்கு சௌகரிகமாக அமர்ந்திருக்கிறீர்கள். இந்த ஹாலை கட்டிய காண்ட்ராக்டரிடம் கேளுங்கள். இது வளைந்து இருக்கிறது அடிபடும் என்று நினைத்தாரா? நேராக ஆக்கினாரா அல்லது வளைந்து இருப்பதையே யோசித்துக் கொண்டிருந்தாரா? சில இடங்களில் கல்லை உடைத்தார், சில இடங்களில் கல்லை நிரப்பினார், உழைத்தார் இல்லையா! உங்கள் அனைவருக்கும் சொர்க்கத்தை உருவாக்குவதற்கான காண்ட்ராக்ட்

கிடைத்துள்ளது தான் இல்லையா? அந்த மாதிரி காண்ட்ராக்ட் எடுப்பவர்கள் பாதை வளைந்து இருக்கிறது என்று சொல்ல முடியாது. திடீரென்று விழுவது, இதுவும் கவனக் குறைவு தான். சாகார பாபா காலத்தின் நினைவு இருக்கிறது தான் இல்லையா! யாராவது கீழே விழுந்தால் என்ன செய்தார். அவருக்கு டோலி கொடுக்காமல் நிறுத்தி விடுவார். ஏன்? வருங்காலத்தில் கவனம் வைக்க வேண்டும் என்பதற்காக, டோலி கொடுப்பது ஒன்றும் பெரிய விசயம் இல்லை. டோலி இருப்பதே குழந்தைகளுக்காகத் தான். ஆனால் இதுவும் அன்பு தான். டோலி கொடுப்பதும் அன்பு தான், பிறகு என்ன யோசித்தீர்கள்? திடீரென்று விழுந்து விடுகிறீர்கள், அல்லது பாதை வளைந்திருக்கிறது, இதைக் கூறுவீர்களா? தற்போது இவ்வாறு முயற்சி செய்யும் மார்க்கத்தில் அவ்வளவு கூட்டம் எங்கே ஆகியிருக்கிறது? இப்பொழுதோ 9 இலட்சம் பிரஜைகள் கூட உருவாகவில்லை. இப்பொழுதோ ஒரு இலட்சத்திலேயே குஷியடைந்து கொண்டிருக்கிறீர்கள் (83-ல் ஒரு இலட்சத்தின் எண்ணிக்கை இருந்தது). இந்த முயற்சி செய்யும் மார்க்கம் எல்லைக்கப்பாற்பட்ட மார்க்கம். அப்படி சகஜ முயற்சி செய்வது என்றால் என்ன என்று புரிந்து கொண்டீர்களா? ஒருவர் காணும் அடிபடாமல், பிறருக்கும் அவரே வழிகாட்டியாகி சுலபமாக பாதையைக் கடக்க வைக்க வேண்டும். சகஜ முயற்சி செய்பவர் அன்பில் மட்டும் இருப்பவர் அல்ல. ஆனால் அன்பில் மூழ்கியிருப்பவர். அந்த மாதிரி அன்பில் மூழ்கியிருக்கும், ஆத்மா சுலபமாகவே நாலாபுறங்களிலுமுள்ள அதிர்வலைகளிலிருந்து, வாயுமண்டலத்திலிருந்து தூரமாக இருக்கிறார். ஏன்னென்றால், மூழ்கியிருப்பது என்றால் தந்தைக்குச் சமமாக சக்திசாலியாக அனைத்து விஷயங்களிலிருந்தும் பாதுகாப்பாக இருப்பது. எனவே சமநிலை மிகப்பெரிய பாதுகாப்பு. மாயாவால் தாக்க முடியாத பாதுகாப்பு தான். சகஜ முயற்சி செய்வது என்றால் என்ன என்று புரிந்து கொண்டீர்களா? சகஜ முயற்சி என்றால் அலட்சியம் இல்லை. சிலர் அலட்சியமாக இருப்பதையே சகஜ முயற்சி செய்வது என்று நினைத்து நடந்து கொள்கிறார்கள். அவர்கள் எப்பொழுதும் அனைத்தும் நிறைந்தவர்களாக இருக்க மாட்டார்கள். அலட்சியமான முயற்சியாளர்களின் மிகப் பெரிய விசேஷம், உள்ளுக்குளே மனம் உறுத்திக் கொண்டே இருக்கும், மேலும் வெளிமுகமாக பாடிக் கொண்டே இருப்பார். என்ன பாடிக் கொண்டே இருப்பார்? தன்னுடைய மகிமையின் பாடலைப் பாடிக் கொண்டே இருப்பார். மேலும் சகஜ முயற்சியாளர் எப்பொழுதும் ஒவ்வொரு நேரத்திலும் தந்தையின் துணையை அனுபவம் செய்வார். நீங்களே அந்த மாதிரி சகஜ முயற்சியாளரா? சகஜ முயற்சி செய்பவர் சகஜ யோகி வாழ்க்கையை அனுபவம் செய்ய முடியும். அப்படியானால் உங்களுக்கு எது விருப்பம்? சகஜ முயற்சியா அல்லது கடினமானதா? சகஜ முயற்சி தான் விருப்பம் இல்லையா! மனதிற்கு விருப்பமான ஒன்றை தந்தை கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்றால், ஏன் எடுத்துக் கொள்வதில்லை. விரும்பாவிட்டாலும் நடந்து விடுகிறது என்ற இந்த வார்த்தைகள் மாஸ்டர் சர்வசக்திவான்னுடையது அல்ல. விரும்புவது ஒன்று செய்வது இன்னொன்று என்றால் அவரை சிவசக்தி என்று கூறுவோமா?

சிவசக்தி என்றால் அதிகாரி, அடிமை அல்ல. அப்படியானால் இந்த வார்த்தை கூட பிராமண மொழி இல்லை தான் இல்லையா! தன்னுடைய பிராமண மொழியைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா! சங்கமயுகத்தின் அதாவது சகஜ பிராப்தியின் நீண்ட காலம் சென்று விட்டது. இன்னும் மிச்சம் கொஞ்சக் காலம் இருக்கிறது. இதில் கூட சமயத்தின் வரதானம், தந்தையின் வரதானத்தை பிராப்தி செய்து தன்னை சகஜ முயற்சியாளராக ஆக்க முடியும். பிராமணன் என்றாலே கடினமானதை சுலபமாக்குபவர், பிராமணரின் காரியம் மற்றும் தர்மம் அனைத்தும் இது தான். எனவே ஜென்மத்தினால், செய்யும் காரியத்தினால் பிராமண ஆத்மாக்கள் என்றால் சகஜ யோகி, சகஜ முயற்சியாளர். இப்பொழுது என்னவாகிவிட்டு செல்வீர்கள்?

மதுபனை பரிவர்த்தனை பூமி மாற்றும் என்று கூறுகிறீர்கள் தான் இல்லையா! கடினம் என்ற வார்த்தை தபோபூமியில் (யோகஅக்னி பூமியில்) பஸ்மம் ஆக்கி விட்டுச் செல்லுங்கள். மேலும் சகஜ முயற்சியின் வரதானத்தைப் பெற்றுச் செல்லுங்கள். பரிவர்த்தனைக்கு பாத்திரமான அதாவது திட எண்ணம் என்ற பாத்திரத்தை தாரணை செய்து விட்டு செல்லுங்கள். அப்பொழுது தான் வரதானத்தை தாரணை செய்ய முடியும். இல்லையென்றால், வரதானத்தையோ பாபா கொடுத்தார், ஆனால் அபுவிலேயே இருந்து விட்டது என்று சிலர் கூறுகிறார்கள். அங்கே அவர்களிடத்திற்குச் சென்ற பிறகு வரதானமோ தன்னுடன் வரவில்லை. என்று பார்க்கிறார்கள். வரமளிக்கும் வள்ளலின் வரதானத்தை தகுதியான பாத்திரத்தில் வாங்கினீர்களா? ஒருவேளை பெறவே இல்லையென்றால் எங்கிருந்து இருக்கும், யார் கொடுத்தாரோ அவரிடமே இருந்து விடும் இல்லையா! அந்த மாதிரி செய்யாதீர்கள் சிலர் மிக (அதிக) மெத்த புத்திசாலி ஆகி விடுகிறார்கள். தன்னுடைய தவறு என்று புரிந்து கொள்ள மாட்டார்கள். பாபா ஏன் அந்த மாதிரி செய்தார் என்று தெரியவில்லை என்று கூறுவார்கள். தன்னுடைய பலஹீனங்கள் அனைத்தையும் தந்தை மீது போட்டு விடுவார்கள். விரும்பினால் பாபா செய்ய முடியும், ஆனால் செய்ய வேண்டியது இல்லை. தந்தை கொடுப்பவரா அல்லது வாங்குபவரா? கொடுப்பவர் என்றால் கொடுக்கிறார், ஆனால் பெற்றுக் கொள்பவர்களும் பெற வேண்டும் இல்லையா! அல்லது கொடுப்பதும் தந்தை, பெறுவதும் தந்தையா? தந்தை எடுத்துக் கொள்கிறார் என்றால் நீங்கள் எப்படி நிரம்பியவர் ஆவீர்கள். எனவே எப்படி பெறுவது என்பதையும் கற்றுக் கொள்ளுங்களேன். நல்லது. - சந்திப்பதோ ஆகிவிட்டது தான் இல்லையா! அனைவருடன் சிரித்தோம், கலகலப்பானோம், அனைவரின் முகத்தையும் பார்த்தோம். இந்த நேரமோ மிக நல்ல மலர்ந்த முகம். அனைவரும் குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படியானால் இது சந்திப்பதாக ஆகவில்லையா? சந்திப்பது என்றால் முகத்தை பார்ப்பது மற்றும் காண்பிப்பது. பார்த்தீர்கள் இல்லையா! பாத்திரமும் கிடைத்தது, வரதானமும் கிடைத்தது. இன்னும் வேறு என்ன இருக்கிறது? டோலியேதீதி, தாதியிடம் வாங்கி சாப்பிட்டு விட்டீர்கள், எப்பொழுது ஸ்துல ரூபத்தில் பொறுப்பாளரை நியமித்திருக்கிறோம்

என்றால் அவ்யக்தமானவரை ஏன் வியக்த்தமாக ஆக்குகிறீர்கள் தீதி தாதியும் தந்தைக்குச் சமமாக இருக்கிறார்கள் தான் இல்லையா! எப்பொழுதெல்லாம் தீதி, தாதியிடமிருந்து டோலியை வாங்குகிறீர்கள் என்றால், என்ன நினைத்து வாங்குகிறீர்கள், பாப்தாதா டோலி கொடுக்கிறார் என்று தானே! ஒருவேளை தீதி, தாதி கொடுக்கிறார் என்று நினைத்தீர்கள் என்றால், அதுவும் தவறாகிவிடும். நல்லது டோலி வேண்டும் என்ற ஆசை இன்னும் இருக்கிறதா? டோலி சாப்பிடுவோம் என்று நினைத்தீர்கள் என்றால் மிகவும் முன்னுக்கு வருவீர்கள் இல்லையா! அப்படியானால் இன்றே அனைவரையும் வரிசையில் நிற்கச் சொல்லுங்கள், மேலும் டோலி சாப்பிடுங்கள், மனமோ ஒருபோதும் திருப்தியாகாது. மனம் நிரம்பிக் கொண்டே இருக்க வேண்டும். நிரம்பிவிடக் கூடாது. கொஞ்சம் நிரம்ப வேண்டியது இருப்பது சரிதான். அப்பொழுது தான் நினைவு செய்து கொண்டே இருப்பீர்கள், நிரப்பிக் கொண்டே இருப்பீர்கள். நிரம்பி விட்டது என்றால், நிரம்பி விட்டது சாப்பிடுங்கள். குடியுங்கள் மகிழ்ச்சியாக இருங்கள் என்று கூறுவீர்கள். நல்லது.

அனைத்து நிரந்தர சகஜயோகி, சகஜ முயற்சியாளர், எப்பொழுதும் அனைவரின் கடினங்களை சுலபமாக்கக் கூடிய, அந்த மாதிரி தந்தைக்குச் சமமான மாஸ்டர் சர்வசக்திவான், எப்பொழுதும் அனைத்தும் நிறைந்த, அனைத்து பொக்கிஷங்களினால் தனக்கும் சேர்த்து உலகிற்கு சேவை செய்யக் கூடிய அந்த மாதிரி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் (தாய்மார்கள்) சந்திப்பு:

1. அனைவரும் தனது சென்ற கல்பத்தின் படத்தை பார்க்கிறீர்களா? அந்த மாதிரி எந்தப்படம் இருக்கிறது அதில் தந்தையின் துணையையும், சேவையையும் காண்பித்திருக்கிறார்கள்? கோவர்த்தன மலையைத் தூக்குகின்ற இந்தப் படத்தில் தந்தையுடன் குழந்தைகளும் இருக்கிறார்கள், மேலும் இருவர்களுமே சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். மலையை விரலால் தூக்குவது சேவை ஆனது தான் இல்லையா! சகயோகி ஆவதின் நினைவுச் சின்னமும் உருவாகிவிட்டது என்று மனதில் ஊக்கம் வருகிறது தான் இல்லையா! ஜென்மமே எதற்காக எடுத்திருக்கிறீர்கள்? சகயோகி ஆவதற்காகத்தான், எனவே நான் பிறந்ததிலிருந்து சகயோகி ஆத்மா என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். எப்படி உடல், மனம், பொருள், பணத்தை முதலில் தெரியாது எனவே பக்தியில் ஈடுபடுத்தினோம், மேலும் இப்பொழுது என்ன மிச்சம் இருக்கிறதோ, அதை உண்மையான சேவையில் தந்தையின் சகயோகியாகஈடுபடுத்திக் கொண்டிருக்கிறீர்கள். 99 சதவிகிதத்தையோ இழந்து விட்டீர்கள். பாக்கி 1 சதவிகிதம் மிச்சம் இருக்கிறது. ஒருவேளை அதையும் சகயோகத்தில் ஈடுபடுத்தவில்லை என்றால், எங்கே

,

ஈடுபடுத்துவீர்கள் பாருங்கள் எங்கே சத்யுகத்தின் இராஜா மேலும் இன்று என்னவாக இருக்கிறீர்கள்? உடலிலும் சக்தி எங்கே இருக்கிறது, இன்றைய இளைஞன் வயதானவர்கள்., எந்தளவு வயதானவர்கள் வேலை செய்ய முடியுமோ அந்தளவு இன்றைய இளைஞர்கள் செய்ய முடியாது. பெயரளவில் இளைஞர்கள். மேலும் செல்வத்தையும் இழந்து விட்டீர்கள். தேவதையிலிருந்து வியாபாரி வைஷ்யனாகி விட்டீர்கள், மேலும் மனதில் அமைதியும் எங்கே இருக்கிறது அலைந்து கொண்டிருக்கிறீர்கள். அந்த மாதிரி மனதின் அமைதியை, உடலில், செல்வம் அனைத்தையும் இழந்து விட்டீர்கள், இன்னும் என்ன இருக்கிறது, இருந்தும் நன்றி கூறுங்கள். 1 சதவிகிதம் மிச்சமிருக்கும் உடல், மனம், செல்வதை ஈஸ்வரிய காரியத்தில் பயன்படுத்துவதினால் 21 ஜென்மங்கள், 2500 ஆண்டுகளுக்காக சேமிப்பாகி விடுகிறது. அந்த மாதிரி சகயோகி குழந்தைகளுக்கு தந்தையும் எப்பொழுதும் அன்பை கொடுக்கிறார். உதவி அளிக்கிறார். மேலும் இதே சகயோகத்தின் படத்தை இப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறீரகள். பொதுவாக இறந்த பிறகு தன்னுடைய படத்தை யாரும் பார்ப்பதில்லை. நீங்கள் சைதன்யமாக சென்றா கல்பத்தின் படத்தைப் பார்க்கிறீர்கள், முன்பு தன்னுடைய படத்தின் / விக்ரஹத்தின் பூஜை செய்தீரகள். ஒருவேளை தெரிந்திருந்தது என்றால், மகிமை பாடியிருக்க மாட்டீர்கள். அனைவரும் அந்த மாதிரியான சகயோகி தான் இல்லையா! எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்திலும் சகயோகம் கொடுப்பதற்கான சுபஎண்ணம், எப்பொழுதும் எந்த விதமான சூழ்நிலையையும் சக்திசாலி ஆக்குவதில் சகயோகி, சூழ்நிலையையும் மேலே, கீழே செல்ல விடக்கூடாது. சகயோகி ஆவதற்குப் பதிலாக ஒரு பொழுதும் குழப்பம் செய்பவர்கள் ஆகிவிடாதீர்கள், எப்பொழுதும் சகயோகி என்றால் எப்பொழுதும் திருப்தியானவர். ஒரு பாபாவைத் தவிர வேறு யாருமில்லை என்று போய்க் கொண்டே இருங்கள். பறந்து கொண்டே இருங்கள். ஏதாவது எண்ணம் வந்தாலும் மேலே கொடுத்து விட்டு நீங்கள் எந்த எண்ணமும் இன்றி போய்க் கொண்டே இருங்கள். கருத்து கொடுப்பது, சமிக்ஜை கொடுப்பது அது வேறு விஷயம், குழப்பத்தில் வருவது வேறு விஷயம், எனவே எப்பொழுதும் ஒரே சீரான மனநிலையில் இருக்க வேண்டும். எண்ணத்தைக் கொடுத்தீர்கள், மேலும் எந்த எண்ணமும் அற்றவர் ஆனீர்கள். எப்பொழுதும் சுயமுன்னேற்றம் மற்றும் சேவையின் முன்னேற்றத்தில் பிஸியாக இருங்கள், மேலும் அனைவருக்காகவும் சுபபாவனை வையுங்கள். எந்த சுபபாவனையோடு என்ன எண்ணம் வைக்கிறீர்களோ, அவை அனைத்தும் நிறைவேறி விடுகிறது, நல் எண்ணம் நிறைவேறுவதற்கான சுபசிந்தனையாளர், இதன் மூலமாகவே அனைத்து விஷயங்களும் நிறைவேறி விடும். நாலாபுறங்களிலும் உள்ள சூழ்நிலையை சக்திசாலி ஆக்குவது தான் சக்திசாலி சிரேஷ்ட ஆத்மாக்களின் கடமை. நல்லது.

வரதானம்:

அவ்யக்த பாலனை மூலமாக சக்திசாலியாகி கடைசியில் வந்தாலும் வேகமாக செல்லக்கூடிய முதல் வரிசை எண்ணின் அதிகாரி ஆகுக

அவ்யக்த பாகத்தில் வரக்கூடிய ஆத்மாக்களுக்கு முயற்சி செய்வதில் அதிவேகத்தின் பாக்கியம் சுலபமாக கிடைத்து இருக்கிறது. இந்த அவ்யக்த பாலனை சுலபாகவே சக்திசாலி ஆக்கக்கூடியது, எனவே யார் எந்த அளவு முன்னேற விரும்புகிறாரோ, அந்த அளவு முன்னேற முடியும். இந்த நேரம் கடைசியில் வந்திருந்தாலும் வேகமாக முன்னேறிச் சென்று முதல் நம்பரில் வருவதற்கான வரதானம் பிராப்தி ஆகியிருக்கிறது. எனவே இந்த வரதானத்தை காரியத்தில் ஈடுபடுத்துங்கள் (அதாவது நேரத்திற்கு ஏற்றபடி வரதானத்தை சொரூபத்தில் கொண்டு வாருங்கள். என்ன கிடைத்திருக்கிறதோ அதை உபயோகித்தீர்கள் என்றால் முதல் நம்பரில் வருவதற்கான அதிகாரம் பிராப்தி ஆகிவிடும்.

சுலோகன்:

சுயமரியாதை என்ற இருக்கையில் சதா அமர்ந்திருந்தீர்கள் என்றால், அனைவரது மரியாதையும் தானாக கிடைக்கும்.

ஓம்சாந்தி

13.04.1983 ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பரசிந்தன் (மற்றவர்கள்/மற்றவைகளின் சிந்தனை) மற்றும் பரதர்ஷணில் (மற்றவர்களை/மற்றவற்றை பார்ப்பது) - னால் ஏற்படும் நஷ்டங்கள்

அனைத்து சிரேஷ்ட ஆத்மாக்கள் சங்கமயுகத்தின் வைரத்திற்கு சமமான சிரேஷ்ட மேளாவைக் (சந்திப்பை) கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள், அதாவது வைரத்திற்கு சமமான விலைமதிக்க முடியாத வாழ்க்கையை நிரந்தரமாக அனுபவம் செய்வதற்கான விசேஷ சாதனம் மீண்டும் நினைவு சொரூபம் மற்றும் சக்திசாலியான சொரூபம் எப்பொழுதும் இருக்க வேண்டும் என்பதற்காக தந்தையிடமிருந்து அல்லது தன்னுடைய பரிவாரத்திலிருந்து அல்லது வரதான பூமியிலிருந்து அனுபவம் பெறுவதற்காக வந்திருக்கிறீர்கள். வைரத்திற்கு சமமான வாழ்க்கை பிறந்ததிலிருந்தே கிடைத்திருக்கிறது. ஆனால் வைரம் எப்பொழுதும் மின்னிக் கொண்டிருக்க வேண்டும், எந்த விதமான தூசியும் கறையும் படிந்து விடக்கூடாது, அதற்காக மீண்டும், மீண்டும் பாஷ் செய்வதற்காக வருகிறார்கள், அதற்காகத்தான் வருகிறீர்கள் இல்லையா? பாப்தாதா தன்னுடைய வைரத்திற்கு சமமான குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியும் அடைகிறார், மேலும் எந்தக் குழந்தைகளுக்கு தூசியின் பாதிப்பு வந்து விடுகிறது, மேலும் தொடர்பின் பாதிப்பில் வருவதினால் சிலருக்கு சிறிய மற்றும் பெரிய கறையும் பதிந்து விடுகிறது என்பதை சோதனையும் செய்கிறார், எந்த தொடர்பு கறை ஏற்படுத்துகிறது. அதற்கான மூல காரணக்கள் இரண்டு மற்றும் முக்கியமான விஷயக்கள் இரண்டு.

ஒன்று - பரசிந்தனை, இன்னொன்று - பரதர்ஷன், பரசிந்தனையில் வீணான சிந்தனையும் வந்து விடுகிறது, இந்த இரண்டு விஷயங்கள் தான் தீய சேர்க்கையின் பாதிப்பில் சுத்தமான வைரத்தை கறையுள்ளதாக ஆக்கிவிடுகிறது. இதே பரதர்ஷண், பரசிந்தனையின் விஷயங்களை வைத்து சென்ற கல்பத்தின் நினைவுச் சின்னமாக இராமாயண கதை உருவாக்கப் பட்டிருக்கிறது. கீதா ஞானம் மறந்து விடுகிறது. கீதா ஞானம் என்றால் சயசிந்தனை, சுயதர்ஷண சக்ரதாரி ஆவது, கீதா ஞானத்தின் சாரத்தை மறந்து நடைமுறையில் இராமாயணக் கதையை கொண்டு வருகிறார்கள். யார் மரியாதை என்ற கோட்டிற்கு வெளியில் சென்று விடுகிறார் களோஅவர்கள் தான் சீதையாகவும் ஆகிறார்கள்.அது ஒன்று முறையிடுவது, மற்றொன்று நினைவு செய்வது. சீதையை இரண்டு ரூபத்தில் காண்பித்திருக்கிறார்கள். ஒன்று எப்பொழுதும் உடன் இருப்பவர்

மற்றும் இன்னொன்று சோகவனத்தில் இருப்பவர். தீய சேர்க்கையில் வந்து சோகவனத்து சீதை ஆகிவிடுகிறார்கள். அது ஒன்று முறையீடு செய்யும் ரூபத்தில் வந்து விடுகிறார்களோ, அப்பொழுது முதல் நிலையிலிருந்து இரண்டாம் நிலைக்கு வந்து விடுகிறார்கள், எனவே எப்பொழுதும் கறையற்ற உண்மையான வைரமாக, மின்னிக் கொண்டிருக்கும் வைரமாக, விலை மதிக்க முடியாத வைரம் ஆகுங்கள், இந்த இரண்டு விஷயங்களிலிருந்து எப்பொழுதும் விலகியிருந்தீர்கள் என்றால், தூசி மற்றும் கறை பட முடியாது, விரும்புவதில்லை, ஆனால் செய்து விடுகிறார்கள், புதுப் புது இரமணிகரமான பெரிய விஷயத்தை கூறினோம் என்றால், மிகப்பெரிய சாஸ்திரம் ஆகிவிடும், ஆனால் காரணம் என்ன? தன்னுடைய பலஹீனம், ஆனால் தன்னுடைய பலஹீனத்தின் மேல் வெள்ளை அடித்து விடுகிறீர்கள், மேலும் மறைப்பதற்காக மற்றவர்களின் காரணங்களின் கதைகளை நீளமாக்கி விடுகிறீர்கள், இதன் மூலமாகத் தான் பரதர்ஷணம், பரசிந்தனை தொடங்கி விடுகிறது எனவே இந்த விசேஷ மூல ஆதாரத்தை, மூல விதையை அழியுங்கள், அந்த மாதிரி விடைபெற்றுச் சென்றதின் பாராட்டு விழாவை கொண்டாடுங்கள்,மேளாவில் விழா கொண்டாடுகிறீர்கள் தான் இல்லையா! இந்த விழாவைக் கொண்டாடுவதைதத் தான் தந்தைக்கு சமமாக ஆவது என்று கூறப்படுகிறது. தன்னுடைய மகிமையையோ மிக அதிகம் கேட்டிருக்கிறீர்கள், மகிமையில் கூட எந்தக் குறையும் இருக்கவில்லை, ஏனென்றால் எது தந்தையின் மகிமையோ அதுதான் குழந்தைகளின்மகிமை. ஒவ்வொரு குழந்தையும் தந்தைக்கு சமமாக சம்பன்னம் ஆகி விட வேண்டும் என்ற இந்த விசேஷ அன்புதான் பாப்தாதாவிடம் இருக்கிறது. நேரத்திற்கு முன்பு நம்பர்ஒன் வைரம் ஆகிவிட வேண்டும் இப்பொழுது ரிஸல்ட் வெளியாகவில்லை. என்ன ஆக விரும்புகிறீர்களோ, இப்பொழுது வர வாய்ப்பு இருக்கிறது, எனவே பறக்கும் கலைக்கான முயற்சி செய்யுங்கள். கறையற்ற மின்னிக் கொண்டிருக்கும் நம்பர் ஒன் வைரம் ஆகிவிடுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? மதுபன் சென்று வந்திருக்கிறோம், மிகுந்த கொண்டாட்டங்களை கொண்டாடி வந்திருக்கிறோம் என்று இதை மட்டும் அங்கு சென்று கூறாதீர்கள், ஆனால் ஆகி வந்திருக்கிறோம் என்று கூற வேண்டும். எப்பொழுது எண்ணிக்கையில் வளர்ச்சி ஆகிக் கொண்டிருக்கிறது என்றால் முயற்சி செய்யும் விதியிலும் வளர்ச்சி அடையுங்கள். நல்லது.

அந்த மாதிரி அனைத்து பறக்கும் கலையின் முயற்சியாளர்களுக்கு, அனைத்து பௌதீக தொடர்பிலிருந்து விலகியிருக்கக் கூடிய, ஒரே ஒரு சம்பூர்ண நிலையில் வண்ணமாக்கப்பட்ட ஆத்மாக்களுக்கு, நேரத்திற்கு முன்பு தன்னை சம்பன்னம் ஆக்கக் கூடியவர்களுக்கு, பிராப்தி சொரூப ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் சந்திப்பு

1. அனைத்து உறவுகளினால் தந்தையை தன்னுடையவர் ஆக்கி விட்டீர்களா? எந்த உறவிலும் இப்பொழுது பற்றுதல் இல்லையே? ஏனென்றால் ஏதாவது ஒரு உறவைக் கூட தந்தையோடு இணைக்கவில்லை என்றால், பற்றுதலை வென்று நினைவு சொரூபமாக ஆக முடியாது, புத்தி அலைந்து கொண்டே இருக்கும், தந்தையை நினைவு செய்வதற்காக அமருவார்கள், ஆனால் பேரன், பேத்தியின் நினைவு வரும்.. யார் மீது பற்றுதல் இருக்குமோ, அவர் நினைவு தான் வரும். பற்றுதல் சிலருக்கு பணத்தின் மேல் இருக்கும், சிலருக்கு நகை மீது இருக்கும், சிலருக்கு ஏதாவது உறவின் மேல் இருக்கும், எங்கேயிருந்தாலும் அங்கு புத்தி செல்லும். ஒருவேளை அடிக்கடி புத்தி அங்கு செல்கிறது என்றால் ஒரே இரசனையில், ஒருவரின் இரசனையில் இருக்க முடியாது, அரைக்கல்பம் அலைந்து, அலைந்து என்ன நிலைமை ஆகிவிட்டது என்று அதையும் பார்த்து விட்டீர்கள் தான் இல்லையா! அனைத்தையும் இழந்து விட்டீர்கள். உடலும் (உடலின் ஆரோக்கியம்) சென்று விட்டது, செல்வமும் சென்று விட்டது, சத்யுகத்தில் எவ்வளவு செல்வம் இருந்தது, தங்க மாளிகைகளில் வாழ்ந்தீர்கள்.,இப்பொழுது செங்கல் வீடுகளில், கல் வீடுகளில் வசிக்கிறீர்கள், அந்த மாதிரி அனைத்தையும் இழந்து விட்டீர்கள் இல்லையா! எனவே இப்பொழுது அலைவது முடிவடைந்து. ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இந்த பாடலைத் தான் மனதால் பாடுங்கள். ஒருபொழுதும், இவரோ மாறுவதில்லை, இதுவோ நடப்பதில்லை, எப்படி நடந்து கொள்வது, நான் என்ன செய்வது என்று கூறாதீர்கள். இந்த சுமையிலிருந்தும் பளுவற்றராக இருங்கள். இது நடந்து விட வேண்டும், இவருடைய நோய் அகன்று விட வேண்டும் என்ற பாவனையோ நல்லது தான், ஆனால் இப்படி சொல்வதினால் நடக்காது இல்லையா! இதைச் சொல்வதற்கு பதிலாக நீங்களே சுமையற்றவராகி பறக்கும் கலையின் அனுபவத்தில் இருந்தீர்கள் என்றால், அதற்கும் சக்தி கிடைக்கும்,. மற்றபடி இதை யோசிப்பது மற்றும் கூறுவது வீணானது. தாய்மார்கள் என்னுடைய கணவன் சரியாகிவிட வேண்டும், தொழில் சரியாகி விட வேண்டும் என்ற இந்த விஷயங்களைத் தான் யோசிக்கிறீர்கள் மற்றும் கூறுகிறீர்கள். ஆனால் இந்த விருப்பம் எப்பொழுது நிறைவேறும் என்றால் எப்பொழுது நீங்கள் சுமையற்றவராகி தந்தையிடமிருந்து சக்தி பெறுவீர்களோ, அப்பொழுது தான் இதற்காக புத்தி என்ற பாத்திரம் காலியாக இருக்க வேண்டும், என்ன நடக்கும், எப்பொழுது நடக்கும், இப்பொழுதோ இன்னும் நடக்கவில்லை என்ற இவற்றிலிருந்து காலியாகி விடுங்கள், அனைவருக்கும் நன்மை நடக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்றால் சுயம் நீங்கள் சக்தி ரூபம் ஆகி சர்வசக்திவானின் துணைவனாகி சுபபாவனை வைத்து நடந்து கொண்டே இருங்கள். சிந்தனை மற்றும் கவலை வைக்காதீர்கள்.

.

பந்தனத்தில் மாட்டாதீர்கள் ஒருவேளை பந்தனம் இருக்கிறது என்றால் அதை அகற்றுவதற்கான முறை நினைவு, சொல்வதினால் விடுபடாது, உங்களை விடுவித்துக் கொண்டீர்கள் என்றால், விடுபட்டு விடுவீர்கள்.

2. சங்கமயுகத்தின் அனைத்து பொக்கிஷங்களும் பிராப்தி ஆகிவிட்டதா? ஒருபொழுதும் தன்னை ஏதாவது பொக்கிஷத்தினால் காலியாகி இருக்கின்றேன் என்று நினைக்க வில்லையே? ஏனென்றால் காலியாகும் நேரம் இப்பொழுது கடந்து சென்றுவிட்டது, இப்பொழுது நிரப்புவதற்கான நேரம், பொக்கிஷம் கிடைத்திருக்கிறது என்பதின் அனுபவமும் இப்பொழுது ஆகுகிறது. பிராப்தியின்மையிலிருந்து பிராப்தி ஆகி விட்டது என்றால், அதன் போதையிருக்கும். எனவே நிரம்பிய ஆத்மாக்களாக ஆகியிருக்கிறீர்களா? அனைத்து சக்திகளும் இருக்கின்றன, ஆனால் சகித்துக் கொள்ளும் சக்தி இல்லை, அமைதியின் சக்தி இல்லை என்று அப்படியோ கூறுவதில்லையே? கொஞ்சம் கோபம் அல்லது ஆவேசம் வந்து விடுகிறது. நிரம்பிய ஒன்றில் இன்னொரு பொருள் வரமுடியாது. மாயாவின் குழப்பம் இருக்கிறது என்றால் காலியாக இருக்கிறது, எவ்வளவு நிரம்பியிருக்குமோ, அவ்வளவு குழப்பம் இல்லை, கோபம், மோகம். அனைத்திற்கும் விடை கொடுத்து விட்டீர்களா? அல்லது எதிரியையும் விருந்தினர் ஆக்கி விட்டீர்களா? எப்பொழுது கவனக்குறைவு இருக்கிறதோ, அப்பொழுது தான் வலுக்கட்டாயமாக உள்ளே வந்து விடுகிறான், ஒருவேளை பூட்டு உறுதியாக இருக்கிறது என்றால் எதிரி வரமுடியாது, இன்றைய நாட்களிலும் பாதுகாப்பாக இருப்பதற்காக மறைவான பூட்டு வைத்திருக்கிறார்கள். இங்கேயும் இரட்டைப்பூட்டு இருக்கிறது. நினைவு மற்றும் சேவை இது தான் இரட்டைப்பூட்டு, இதன் மூலமாகத்தான் பாதுகாப்பாக இருப்பீர்கள். இரட்டைப்பூட்டு என்றால் இரட்டை பிஸி. பிஸியாக இருப்பது என்றால் பாதுகாப்பாக இருப்பது. அடிக்கடி நினைவில் இருப்பது, இது தான் பூட்டை பூட்டுவது. நானோ பாபாவின் குழந்தையாகவே தானிருக்கிறேன் என்று அப்படி நினைக்காதீர்கள், ஆனால் அடிக்கடி நினைவு சொரூபமாக ஆகுங்கள். ஒருவேளை பாபாவின் குழந்தையாகத் தான் இருக்கிறேன் என்றால் நினைவு சொரூபம் இருக்க வேண்டும். அந்த குஷி இருக்க வேண்டும். இருக்கிறேன் என்றால் ஆஸ்தி பிராப்தி ஆக வேண்டும். நான் இருக்கவே இருக்கிறேன் என்ற அலட்சியத்தில் இல்லை, ஆனால் ஒவ்வொரு வினாடியும் தன்னை நிறைந்த சக்தி நிறைந்தவர் என்று அனுபவம் செய்யுங்கள். இதைத் தான் நினைவு சொரூபத்திலிருந்து சக்தி சொரூபம் ஆவது என்று கூறுவது. மாயா தாக்குவதற்காக வரக்கூடாது, ஆனால் நமஸ்காரம் செய்ய வர வேண்டும்.

3. அனைவரும் தன்னை பூஜைக்குரிய ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா?

பூஜாரியிலிருந்து பூஜைக்குரியவர் ஆகிவிட்டீர்கள் இல்லையா! பூஜைக்குரியவரை உயர்ந்த ஸ்தானத்தில் வைப்பார்கள். எந்த ஒரு ஜைக்குரிய விக்ரஹத்தை கீழே தரையில் வைக்க மாட்டார்கள். பூஜைக்குரிய ஆத்மாக்களுக்கு எவ்வளவு மரியாதை வைக்கிறார்கள். எப்பொழுது ஜட விக்ரஹங்களுக்கு இவ்வளவு மரியாதை இருக்கிறது என்றால் உங்களுக்கு எவ்வளவு இருக்கும்! உங்களுடைய மரியாதையை நீங்களே தெரிந்திருக்கிறீர்களா? ஏனென்றால் யார் எந்தளவு தன்னுடைய மரியாதையை தெரிந்திருக்கிறாரோ, அந்தளவு மற்றவர்களும் அவருக்கு மரியாதை கொடுப்பார்கள். தன்மீது மரியாதை வைப்பது என்றால் தன்னை எப்பொழுதும் மகான் சிரேஷ்ட ஆத்மா அனுபவம் செய்வது. எப்போதாவது மகான் ஆத்மாவிலிருந்து சாதாரண ஆத்மாவாகவோ ஆகி விடுவதில்லையே! பூஜைக்குரியவரோ நிரந்தரமாக பூஜைக்குரியவராக இருப்பார் இல்லையா! இன்று பூஜைக்குரியவர், நாளை பூஜைக்குரியவர் இல்லை என்று அப்படியோ இல்லை தான் இல்லையா! எப்பொழுதும் பூஜைக்குரியவர் என்றால் எப்பொழுதும் மகான். எப்பொழுதும் விசேஷமானவர். சிலர் நானோ முன்னேறிக் கொண்டிருக்கிறேன், ஆனால் மற்றவர்கள் நான் முன்னேறுவதற்கு மரியாதை கொடுப்பதில்லை என்று நினைக்கிறார்கள் இதற்கு என்ன காரணம்? யார் சுய மரியாதையில் இருக்கிறாரோ, அவர் மரியாதையை கேட்பதில்லை தானாகவே கிடைக்கும். யார் எப்பொழுதும் பூஜைக்குரியவராக இல்லையோ, அவருக்கு எப்பொழுதும் மரியாதை கிடைக்க முடியாது. ஒருவேளை விக்ரஹம் தன்னுடைய ஆசனத்தை விட்டு விடுகிறது அல்லது அதைத் தரையில் வைத்து விட்டார்கள் என்றால், அதற்கு என்ன மதிப்பு இருக்கும். விக்ரஹத்தை கோயிலில் வைத்தார்கள் என்றால் அனைவரும் மகான் ரூபத்தில் பார்ப்பார்கள். எனவே எப்பொழுதும் மகான் ஸ்தானத்தில் அதாவது உயர்ந்த நிலையில் இருங்கள், கீழே வராதீர்கள், இன்றைய நாட்களில் உலகத்தில் எந்த விசேஷத்தைக் காண்பிக்கிறார்கள்? சாகுங்கள் மற்றும் கொல்லுங்கள் இந்த விசேஷத்தைத் தான் காண்பிக்கிறார்கள் இல்லையா! அப்படி இங்கேயும் ஒரு நொடியில் இறப்பவர். மெது மெதுவாக இறப்பவர் அல்ல. இன்று மோகத்தை விட்டேன், ஒரு மாதத்திற்கு பிறகு கோபத்தை விடுவேன், ஒரு வருடத்திற்கு பிறகு அகம்பாவத்தை விடுவேன்.. என்று அப்படியல்ல. ஒரே வெட்டில் இரண்டு துண்டு ஆபவர்கள், எனவே அனைவரும் இறந்து மறுபிறவி எடுத்ததில் ஒரே வெட்டில் இரண்டு துண்டு ஆகி விட்டீர்களா? அல்லது சில நேரம் உயிரோடும், சில நேரம் இறந்தும் இருக்கிறீர்களா? சிதையிலிருந்து எழுந்து செல்பவர்களும் இருக்கிறார்கள். விழித்து விடுவார்கள், நீங்கள் அனைவரும் ஒரே வெட்டில் இறந்து மறுபிறவி எடுத்தவர்கள் ஆகிவிட்டீர்கள் இல்லையா! எப்படி வெளி உலகத்தில் கூட வெளியுலக மனிதர்கள் தன்னுடைய சிறப்புகளை காண்பிக்கிறார்கள், அதேபோல், ஆன்மீக உலகத்திலும் நீங்கள் உங்கள் சிறப்புகளை காண்பியுங்கள். சதா சிரேஷ்ட, சதா பூஜைக்குரிய, ஒவ்வொரு காரியம், ஒவ்வொரு குணத்தின் கீர்த்தனையை அனைத்து மனிதர்களும் பாடிக்

கொண்டே இருக்க வேண்டும். எப்பொழுது ஏதாவது ஒரு இடத்தில் குழப்பம் ஏற்படுகிறது என்றால், அந்த சண்டை சச்சரவான நேரத்தில் அமைதி சக்தியின் அதிசயம் காண்பியுங்கள். இங்கேயோ அமைதிக் குண்டம் இருக்கிறது என்று அனைவரின் புத்தியில் வரவேண்டும். அமைதிக் குண்டமாகி அமைதியின் சக்தியை பரப்புங்கள். எப்படி நாலாபுறங்களிலும் நெருப்பு எரிந்து கொண்டிருக்கிறது, மேலும் ஒரு மூலையாவது சீதள குண்டமாக இருக்கிறது என்றால் அனைவரும் அந்தப் பக்கம் ஓட்டமாகச் செல்வார்கள். அந்த மாதிரி சாந்தி சொரூபமாகி சாந்திக் குண்டத்தின் அனுபவம் செய்வியுங்கள். அந்த நேரம் வாய்மொழி சேவை செய்ய முடியாது, ஆனால் மனசக்தி மூலம் சாந்திக் குண்டத்தின் பிரத்யக்ஷத்தை செய்ய முடியும், எங்கெல்லாம் சாந்திக் கடலின் குழந்தைகள் இருக்கிறார்களோ, அந்த ஸ்தானம் சாந்திக்குண்டமாக இருக்கட்டும், எப்போது அந்த அழியும் யாகக்குண்டம் தன் பக்கம் ஈர்க்கிறது, என்றால் இந்த சாந்திக்குண்டம் தன்பக்கம் ஈர்க்கவில்லை என்பது இருக்க முடியாது, இங்கிருந்து தான் அமைதி கிடைக்கும், அனைவருக்கும் வைப்ரேஷன் வரவேண்டும், அந்த மாதிரி வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். சகோதரி அவர்களே! அமைதி கொடுங்கள் என்று அனைவரும் யாசிக்க வருவார்கள். அந்த மாதிரி சேவை செய்யுங்கள்.

### சேவாதாரி டீச்சர் சகோதரிகளுடன் சந்திப்பு

டீச்சர்கள் என்றால் சேவாதாரி, சேவாதாரி என்றால் தியாக மூர்த்தி மற்றும் தபஸ்யா மூர்த்தி, எங்கு தியாகம், தபஸ்யா இல்லையோ, அங்கு வெற்றி இல்லை, தியாகம் மற்றும் தபஸ்யா இரண்டின் சகயோகத்தினால் சேவையில் எப்பொழுதும் வெற்றி கிடைக்கிறது, தபஸ்யா என்றாலே ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை, இது தான் நிரந்தரமான தபஸ்யா. எனவே யார் வந்தாலும் உங்களை குமாரி என்று பார்க்கக் கூடாது, ஆனால் தபஸ்வி குமாரி என்று பார்க்க வேண்டும். எந்த இடத்தில் இருக்கிறீர்களோ, அது தபஸ்யா குண்டமாக அனுபவம் ஆக வேண்டும். நல்ல இடம், தூய்மையான இடம் என்பது சரி தான், ஆனால் தபஸ்யா குண்டமாக அனுபவம் ஆக வேண்டும், தபஸ்யா குண்டத்தில் யாரெல்லாம் வருவாரோ, அவரே தபஸ்வி ஆகிவிடுவார். எனவே தபஸ்யாவின் நடைமுறை சொரூபத்தில் செல்லுங்கள், அப்பொழுது தான் வெற்றி முழக்கம் ஏற்படும், தபஸ்யாவின் எதிரில் அனைவரும் தலை வணங்குவார்கள், பி.கு-வின் எதிரில் மகிமை செய்வார்கள், மேலும் தபஸ்வி குமார்/குமாரிக்கு எதிரில் தலை வணங்குவார்கள், தபஸ்யா குண்டமாக ஆக்குங்கள், பிறகு எத்தனை விட்டில் பூச்சிகள் அவர்களாகவே வருகிறார்கள் என்று பாருங்கள்! தபஸ்யாவும் ஜோதி, ஜோதி மேல் விட்டில் பூச்சிகள் அவர்களாகவே வருகிறார்கள். சேவாதாரி ஆவதற்கான பாக்கியம் உருவாகி விட்டது, இப்பொழுது தபஸ்வி குமாரி ஆவதற்கான எண்ணைர்

பெறுங்கள். எப்பொழுதும் சாந்தியின் தானம் செய்யும் மகாதானி ஆத்மா ஆகுங்கள். தற்சமயம் மனசேவையின் மேல் பாப்தாதா விசேஷ கவனம் கொண்டு வருகிறார், வாய்மொழி சேவை மூலம் இத்தனை சக்திசாலியான ஆத்மாக்கள் பிரத்யக்ஷம் ஆவார்கள் வாய்மொழி சேவையோ நடந்து கொண்டே இருக்கிறது, இப்பொழுது சுத்த எண்ணத்தின் சேவையையும் சேர்த்துக் கொள்வது அவசியம். எனவே சொரூபமாகி, சொரூபமாக ஆக்கும் சேவை செய்யுங்கள். இப்பொழுது இதற்குத் தான் அவசியமாக இருக்கிறது, இப்பொழுது அனைவரின் கவனம் இந்த விஷயத்தின் மேல் இருக்கட்டும், இதன் மூலம் தான் பெயர் புகழடையும். அனுபவம் நிறைந்தவர்கள் அனுபவம் செய்விக்க முடியும், இதன் மேலேயே விசேஷ கவனம் கொடுத்துக் கொண்டே இருங்கள். இதன் மூலமாகத்தான் உழைப்பு குறைவு, வெற்றி அதிகம் ஏற்படும். மனசக்தி பூமியை பரிவர்த்தனை செய்து விடும். எப்பொழுதும் இதே விதமாக வளர்ச்சி செய்து கொண்டே இருங்கள். இப்பொழுது வளர்ச்சியடைவதற்கான விதி இது தான். நல்லது.

12 மணி நேரம் குழந்தைகளை சந்தித்த பிறகு காலை 6 மணிக்கு பாப்தாதா சத்குருவார் தினத்திற்கான அன்பு நினைவுகளை அனைத்து குழந்தைகளுக்கும் கொடுத்தார்.

அனைத்து குரு திசையிலுள்ள, உயர்ந்த பாக்கிய ரேகை உள்ள சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, பாப்தாதா இன்று பிரஹஸ்பதி நாளுக்கான அன்பு நினைவுகள் கொடுக்கிறார். விருட்சபதி தந்தை அனைத்துக் குழந்தைகளின் உயர்ந்த எதிர்காலத்தை அழியாததாக ஆக்கிவிட்டார். இதே அழியாத அதிர்ஷ்டம் மூலம் நீங்களும் சம்பன்னமாக இருப்பீர்கள், மேலும் மற்றவர்களையும் சம்பன்னமாக்கிக் கொண்டே இருப்பீர்கள். விருக்ஷபதி நாள் அனைத்துக் குழந்தைகளும் கல்வியில் சம்பன்னம் ஆனதின் விசேஷ நினைவு நாளாகும். இதே கல்வியின் நினைவு தினத்தன்று ஆசிரிய ரூபத்தில் பாப்தாதா அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒவ்வொரு பாடத்திலும் எப்பொழுதும் முழுமையாக தேர்ச்சியடைய வேண்டும் என்ற இலட்சியத்தை வைத்துக் கொண்டே மதிப்புடன் தேர்ச்சி பெறுவதற்கான மேலும் மற்றவர்களையும் அந்த மாதிரி ஊக்கம் உறசாகத்தில் கொண்டு வருவதற்கு, ஆசிரியரின் ரூபத்தில் எப்பொழுதும் சம்பன்னம் ஆவதற்கான அன்பு நினைவுகள் கொடுக்கிறார். மேலும் பிரஹஸ்பதியின் அதிர்ஷ்ட ரேகையை போடக்கூடிய பாக்கியத்தை உருவாக்கும் தந்தையின் ரூபத்தில் எப்பொழுதும் உயர்ந்த பாக்கியத்திற்காக வாழ்த்துக்கள் கொடுக்கிறார். நல்லது. அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

கேள்வி:

எந்த நினைவு எப்பொழுதும் இருக்கிறது என்றால் வாழ்க்கையில் ஒருபொழுதும் மனமுடைந்து போகுபவர் ஆக முடியாது?

பதில்:

நான் சாதாரண ஆத்மா அல்ல. நான் சிவ சக்தி, தந்தை என்னுடையவர், மேலும் நான் தந்தையினுடையவர் என்ற இதே நினைவில் இருந்தீர்கள் என்றால் ஒருபொழுதும் தனிமை அனுபவம் ஆகாது. ஒருபொழுதும் மனமுடைந்து போகமாட்டீர்கள். எப்பொழுதும் ஊக்கம், உற்சாகம் இருக்கும், சிவசக்தியின் அர்த்தமே சிவன் மற்றும் சக்தி இணைந்திருக்கிறார்கள். எங்கு சர்வசக்திவான், ஆயிரம் புஜங்கள் உள்ள தந்தை இருக்கிறாரோ, அங்கு எப்பொழுதுமே ஊக்கம், உற்சாகம் உடன் இருக்கும்.

வரதானம்:

சுயமரியாதையில் நிலைத்திருந்து தேக உணர்வை அகற்றக் கூடிய அழியாத ஆசனதாரி, அழியாதவர் ஆகுக.

சங்கமயுகத்தில் தந்தை மூலமாக அனேக சுயமரியாதைகள் பிராப்தியாகியிருக்கின்றன. தினமும் ஒரு சுய மரியாதையை நினைவில் வைத்தீர்கள் என்றால், சுயமரியாதையின் எதிரில் தேக உணர்வானது வெளிச்சத்தின் எதிரில் இருள் எப்படி ஓடி விடுகிறதோ, அதே போல் ஓடிவிடும். நேரமும் எடுப்பதில்லை, கடின உழைப்பும் அவசியமில்லை, உங்களிடம் நேரடியாக பரமாத்மா என்ற மின்சாரத்தின் இணைப்பு இருக்கிறது. நேரடி இணைப்போடு நினைவு என்ற பொத்தானை (பட்டன்) மட்டும் செயல்படுத்தி விட்டீர்கள் என்றால் அந்த அளவு ஒளி வந்து விடும், அதன் மூலம் நீங்களும் ஒளியில் இருப்பீர்கள், ஆனால் மற்றவர்களுக்காகவும் லைட் ஹவுஸ் ஆகி விடுவீர்கள், யார் அந்த மாதிரி சுயமரியாதையில் இருக்கிறார்களோ, அவர்களைத் தான் அழியாத ஆசனத்தில் அமர்ந்திருப்பவர், அழியாதவர் என்று கூறப்படுகிறது.

சுலோகன்:

தன்னுடைய நிலையை உயர்ந்ததாக ஆக்கினீர்கள் என்றால் சூழ்நிலைகள் சிறியதாக ஆகிவிடும்.

14.04.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## " சம்பன்ன (நிரம்பிய) ஆத்மா எப்பொழுதும் தன் மீதும் மற்றும் சேவையிலும் திருப்தியாக இருப்பார் "

இன்று தூர தேசத்தைச் சேர்ந்தவர் குழந்தைகளைச் சந்திப்பதற்காக குழந்தைகளின் பௌதீக உலகத்தில் பௌதீகஉடலின் ஆதாரம் எடுத்து குழந்தைகளையும் இந்த பழைய பௌதீக உலகத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். பழைய உலகம் என்றால் குழப்பம் நிறைந்த உலகம். பாப்தாதா குழப்பமான உலகத்தின் நடவடிக்கைகளைப் பார்த்து குழந்தைகளின் ஆடாத நிலையையும் பார்த்துக் கொண்டிருந்தார். இவர்கள் அனைவரும் குழப்பமான காட்சிகளை சாட்சியாளராகிப் பார்க்கிறார்கள். நாடகத்தில் வரும் இந்தக் காட்சிகள் இன்னும் அதிகமாக தன்னுடைய உறுதியான, இனிமையான வீடு மற்றும் தன்னுடைய தடையற்ற இனிமையான ராஜ்ஜியத்தை நினைவூட்டுகின்றன. நம்முடைய வீடு, நம்முடைய இராஜ்ஜியம் என்னவாக இருந்தது. மேலும் இப்பொழுதும் எந்த இராஜ்ஜியம் வரபோகிறது, மேலும் நான் வீடு செல்பவன் என்று நினைவு வருகிறது. இன்று பாப்தாதா இந்தக் காட்சியைப் பார்த்து ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தார். இவர்கள் அனைவரும் குழப்பம் நிறைத உலகத்தில் இருந்து கொண்டே இந்தக் காட்சிகளை எதுவரை பார்த்துக் கொண்டிருப்பது? குழந்தைகளின் இந்த கொஞ்சம் சகித்துக் கொள்வதற்கான காட்சியைப் பார்த்து இப்பொழுதே அனைவரையும் சூட்சும வதனத்திற்கு அழைத்து விடலாமா என்று பிரம்மா பாபாவின் மனதில் எண்ணம் ஏற்படுகிறது. இந்த விஷயம் பிடித்திருக்கிறதா? பறக்க முடியுமா? ஏதாவது கயிறுகள் ஆகியவை கட்டிப்போட வில்லையே? எந்த விதமான பற்றுதல் காரணமாக இறக்கைகள் பலஹீனமானதாக இல்லையே? பற்றுதல் காரணமாக இறக்கை எங்காவது ஒட்டிக் கொண்டிருக்கவில்லையே? இப்பொழுது அந்த மாதிரி ஏற்பாடுகள் செய்து விட்டீர்களா? பாப்தாதாவோ ஒரு நொடியில் பறந்து செல்வார். மேலும் நீங்கள் தயாராகிக் கொண்டே தங்கிப் போய்விட்டீர்கள் என்றால்! தயாராக இருக்கிறீர்கள் தான் இல்லையா? முதலோ இரண்டு விஷயங்கள் தன்னிடம் கேட்க வேண்டியதாக இருக்கிறது –

1) ஒன்றோ நான் சம்பூர்ண சுதந்திர ஆத்மாவா? தன்னுடைய முயற்சியின் வேகத்தின் மேல், தானே தன் மீது திருப்தியாக இருக்கிறேனா? தன்னுடைய திருப்தியின் கூடவே, அனைத்து

தொடர்பில் வரும் ஆத்மாக்களிடமிருந்து தனது உயர்ந்த நிலை மேல் அவர்களுக்கு திருப்தி இருக்கிறதா?

2) இன்னொரு விஷயம் சேவையில் தன் மீது திருப்தியாக இருக்கிறீர்களா? யதார்த்த சக்திசாலியான விதியின் பலனாக வெற்றி கிடைத்துக் கொண்டிருக்கிறதா? தன்னுடைய இராஜ்யத்தின் அனேக விதமான ஆத்மாக்களை, எப்படி இராஜ்ய அதிகாரி இராஜ குடும்பத்தின் அதிகாரி, இராயல் பிரஜையின் அதிகாரி, சாதாரண பிரஜையின் அதிகாரி இம் மாதிரி அனைத்து விதமான ஆத்மாக்களை எண்ணிக்கை பிரகாரம் தயார் செய்திருக்கிறீர்களா? செய்விப்பவர் தந்தை தான் ஆனால் கருவியாக செய்பவராக குழந்தைகளைத் தான் ஆக்குகிறார், ஏனென்றால் செய்த காரியத்தின் பலன் கிடைக்கிறது. எனவே காரியங்களை குழந்தைகள் தான் கருவியாகி செய்ய வேண்டும். சம்மந்தத்தில் பிரம்மா பாபாவுடன் குழந்தைகள் வர வேண்டும். தந்தையோ (சிவபாபாவோ) விலகியிருப்பவராகவும், அன்பானவராகவும் தான் இருப்பார். எனவே அந்த மாதிரி சோதனை செய்து தயாராகி விட்டீர்களா என்று பிறகு கூறுங்கள். காரியத்தை பாதியிலேயே விட முடியாது தான் இல்லையா. மேலும் சம்பன்னம் ஆகாமல் ஆத்மா கர்மாதீத் நிலை அடைந்து தந்தையுடன் செல்ல முடியாது. சமமானவர்கள் தான் உடன் செல்வார்கள். உடன் தான் செல்ல வேண்டுமா அல்லது பின்னாலேயே வர வேண்டுமா? சிவனின் கல்யாண ஊர்வலத்திலோ வருவதில்லை தானே! தயாராகி விட்டீர்களா என்று இப்பொழுது கூறுங்கள்? அல்லது சூ மந்திரம் மூலம் ஏதாவது நடந்து விட வேண்டும் என்று யோசிக்கிறீர்களா? சிவ மந்திரம் தான் சூ மந்திரம். அதுவோ கிடைத்திருக்கிறது தான் இல்லையா? குழந்தைகளுக்கு எந்தக் கஷ்டமும் ஏற்பட்டிருக்கக் கூடாது என்று பிரம்மா பாபாவிற்கு மிகுந்த கவலை இருந்தது. கஷ்டமாக இருந்ததா அல்லது மனமகிழ்ச்சி அடையும் கேளிக்கையாக இருந்ததா? (இன்று மிகுந்த மழை பெய்ததின் காரணமாக போடப்பட்ட கூடாரங்கள் கீழே விழுந்து விட்டன). கூடாரம் ஆடியதா அல்லது இதயமும் ஆடியதா? இதயமோ உறுதியாக இருக்கிறது தான் இல்லையா? என்னவாகும், எப்படியாகும் என்ற இந்த மனக்குழப்பம் இல்லையே? ஏதாவது புதியதையும் பாருங்களேன். அபுவின் மழைக்காலத்தையோ நீங்கள் ஒருபொழுதும் பார்ப்பதே இல்லை. இதுவும் கொஞ்சம் அனுபவம் ஆகிக்கொண்டிருக்கிறது. மலைகளில் பெய்யும் மழையையும் பார்க்க வேண்டும் இல்லையா? இதுவும் ஒரு ரமணீகரமான காட்சியைப் பார்த்தீர்கள். விரைவில் ஓட வேண்டும் என்ற எண்ணமோ வரவில்லை தானே? இதுவும் நல்லது, கடைசி நாளில் சூறாவளி வந்தது. அங்கு சென்று என்ன என்ன பார்த்தோம் என்று ஏதாவது புதிய செய்தியை சொல்ல வேண்டும் இல்லையா?. சொல்லப் போகும் செய்தியில் ரமணீகரம் வரும் இல்லையா. பொதுவாகவே அனைவரும் உறுதியானவர்கள். இப்பொழுதோ இன்னும் அதிகம் நடக்கப்போகிறது. இதுவோ ஒன்றுமே இல்லை. இதுவும் தத்துவங்களின்

பரிவர்த்தனையின் அடையாளங்கள். இதைப் பார்த்து தத்துவங்களின் வேகம் அதிகத்தில் சென்று கொண்டிருக்கிறது என்று புரிந்து அதே போல் தன்னுடைய சுயமாற்றத்தின் வேகமும் தீவிரமாக இருக்கட்டும். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் சுயமாற்றத்தில் அதிவேகமாகச் செல்லக்கூடிய, சுயத்தின் சம்பூர்ண நிலை மூலம் சேவையின் காரியத்தை சம்பன்னம் ஆக்கக்கூடிய, எப்பொழுதும் சாட்சி என்ற நிலையில் நிலைத்திலிருந்து குழப்பமான பங்கையும் ரமணீகரமான பங்கு என்று புரிந்து உறுதியானவராகி பார்க்கக்கூடிய சக்திசாலியான சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு

1) எப்பொழுதும் சாட்சியாகி இருக்கும் நிலையில் நிலைத்திருந்து கொண்டே நாடகத்தின் ஒவ்வொரு காட்சியையும் பார்க்கிறீர்களா? சாட்சியாக இருக்கும் நிலை எப்பொழுதும் நாடகத்தில் கதாநாயக பாத்திரம் ஏற்றுச் செய்வதில் சகயோகியாகஇருக்கும். ஒருவேளை சாட்சி நிலை இல்லை என்றால் கதாநாயக பாத்திரத்தை ஏற்றுச் செய்ய முடியாது. கதாநாயக பாத்திரத்தில் இருந்து சாதாரண பாத்திரம் ஏற்றுச் செய்பவராக ஆகிவிடுகிறார். சாட்சி நிலை எப்பொழுதுமே இரட்டை கதாநாயகனாக ஆக்கிவிடும். ஒன்று வைரத்திற்குச் சமமாக ஆக்குகிறது மற்றும் இன்னொன்று கதாநாயக பாத்திரமாக ஆக்குகிறது. சாட்சி நிலை என்றால் உடலிலிருந்து விலகிய ஆத்மா எஜமான நிலையில் நிலைத்திருப்பது. தேகத்திலிருந்தும் சாட்சியாக எஜமானனாக இருப்பது. இந்த தேகம் மூலமாக காரியம் செய்விப்பவர், காரியம் செய்பவர் அல்ல. அந்த மாதிரி சாட்சி நிலை எப்பொழுதும் இருக்கிறதா? சாட்சி நிலை சுலபமாக முயற்சி செய்வதை அனுபவம் செய்விக்கிறதா? ஏனென்றால் சாட்சியாக இருக்கும் நிலையில் எந்த விதமான தடை அல்லது கடினம் வர முடியாது. இது தான் முக்கியமான பயிற்சி. இது தான் சாட்சி நிலையின் முதல் மற்றும் கடைசி பாடம். ஏனென்றால் கடைசியில் எப்பொழுது நாலாபுறங்களிலும் குழப்பமாக இருக்குமோ அந்த நேரம் சாட்சி நிலை மூலமாகத் தான் வெற்றி அடைவார். எனவே இந்த பாடத்தை உறுதி செய்யுங்கள். நல்லது.

2) எப்பொழுதும் தன்னை சங்கமயுகத்தின் சிரேஷ்ட ஆத்மா என்று நினைக்கிறீர்களா? சங்கமயுகம் சிரேஷ்ட யுகம், பரிவர்த்தனை யுகம், ஆத்மா மற்றும் பரமாத்மாவின் சந்திப்பு நடப்பதற்கான யுகம். அந்த மாதிரி சங்கமயுகத்தின் விசேஷங்களை யோசித்தீர்கள் என்றால்

எத்தனை இருக்கிறது. இதே விசேஷங்களின் நினைவில் இருந்து சக்திசாலி ஆகுங்கள். எப்படி நினைவோஅப்படி சொரூபம் இயல்பாக ஆகிவிடும். எனவே எப்பொழுதும் ஞானத்தை சிந்தனை செய்து கொண்டே இருங்கள். சிந்தனை செய்வதினால் சக்தி நிரம்புகிறது. ஒருவேளை சிந்தனை செய்வதில்லை, கேட்பவர், சொல்பவராக மட்டுமாக இருக்கிறீர்கள் என்றால் சக்தி சொரூபம் இருப்பதில்லை. ஆனால் மற்றவர்களுக்குக் கூறக்கூடிய பேச்சாளர் ஆவீர்கள். குழந்தைகள் உங்களின் சிந்தனையை சித்தரிக்கும் படத்தை பக்தி மார்க்கத்திலும் காண்பித்திருக்கிறார்கள். எப்படி சிந்தனை செய்வது, அந்த படம் நினைவு இருக்கிறதா? விஷ்ணுவின் படத்தை பார்த்திருக்கவில்லையா? மிகவும் ஓய்வாகப் படுத்திருக்கிறார். மேலும் சிந்தனை செய்து கொண்டிருக்கிறார், நினைவு செய்து கொண்டிருக்கிறார். நினைவு செய்து சிந்தனை செய்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். இது யாருடைய படம்? படுக்கையைப் பாருங்கள் எப்படிப்பட்டது? பாம்பைப் படுக்கையாக்கி விட்டார் அதாவது விகாரங்கள் அடிமையாகிவிட்டன. அதன் மேல் தூங்குகிறார். கீழே இருப்பது அடிமையாக இருக்கும். மேலே எஜமானன் இருப்பார். மாயாவை வென்றவர் ஆகிவிட்டீர்கள் என்றால் கவலையற்ற நிலை. மாயாவிடம் தோல்வி அடைவதற்கு, யுத்தம் செய்வதற்கு எந்த கவலையும் இல்லை. எனவே கவலையின்றி சிந்தனை செய்து கொண்டே மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். அந்த மாதிரி நான் மாயாவை வென்றவன் ஆகியிருக்கிறேனா என்று தன்னைப் பாருங்கள். எந்தவொரு விகாரமும் தாக்குதல் செய்ய வேண்டாம். தினசரி புதுப்புது ஞானத் துளிகளை நினைவில் வைத்து சிந்தனை செய்தீர்கள் என்றால் மிகுந்த மகிழ்ச்சி வரும், கவலையின்றி இருப்பீர்கள். ஏனென்றால் தந்தையால் கொடுக்கப்பட்ட பொக்கிஷத்தைக் கடைந்தெடுப்பதினால் தன்னுடையது என்று அனுபவம் ஆகும். எப்படி முதலில் உணவு தனியாக இருக்கும், உணவை அருந்துபவரும் வேறாக இருப்பார். ஆனால் எப்பொழுது ஜீரணம் செய்து விடுகிறார் என்றால் அதே உணவு இரத்தமாகி சக்தியின் ரூபத்தில் தன்னுடையது ஆகிவிடுகிறது. அதே போல் ஞானத்தையும் சிந்தனை செய்து கடைந்தெடுப்பதினால் தன்னுடையதாக ஆகிவிடுகிறது, தன்னுடைய பொக்கிஷம் என்ற உணருதல் வரும்.

3) அனைவரும் தன்னை சிரேஷ்ட ஆத்மா என்று எப்பொழுதும் நினைக்கிறீர்களா? சிரேஷ்ட ஆத்மா என்றால் ஒவ்வொரு எண்ணம், வார்த்தை மற்றும் காரியம் எப்பொழுதுமே சிரேஷ்டமாக இருக்க வேண்டும். ஏனென்றால் சாதாரண வாழ்க்கையிலிருந்து விடுபட்டு சிரேஷ்ட வாழ்க்கையில் வந்து விட்டீர்கள். கலியுகத்திலிருந்து விடுபட்டு சங்கமயுகத்தில் வந்து விட்டீர்கள். எப்பொழுது யுகம் மாறிவிட்டது, வாழ்க்கை மாறி விட்டது என்றால் வாழ்க்கை மாறியது என்றால் அனைத்தும் மாறிவிட்டது. அந்த மாதிரி மாற்றத்தை தன்னுடைய வாழ்க்கையில் பார்க்கிறீர்களா? எந்தவொரு காரியமும், நடத்தையும் சாதாரண

மனிதர்களுடையது மாதிரி இருக்க வேண்டாம். அவர்கள் உலகியல் மனிதர்கள், மேலும் நீங்கள் ஆன்மீகமானவர்கள். எனவே ஆன்மீக வாழ்க்கை உள்ளவர்கள் உலகத்து ஆத்மாக்களை விட வேறுபட்டு இருப்பார்கள். எண்ணமும் சாதாரண மானதாக இருக்கிறதா அல்லது ஆன்மீகமானதாக இருக்கிறதா என்று சோதனைசெய்யுங்கள். சாதாரமாணதாக இருக்கிறது என்றால் சாதாரணத்தை சோதனைசெய்து மாற்றிவிடுங்கள். எப்படி ஏதாவது ஒரு பொருள் உங்கள் எதிரில் வருகிறது என்றால் இது சாப்பிடுவதற்கு தகுதியானதா, வாங்குவதற்கு தகுதியானதா என்று சோதனைசெய்கிறீர்கள், ஒருவேளை தகுதியற்றது என்றால் வாங்குவதும் இல்லை, மேலும் அதை விட்டு விடுகிறீர்கள் தான் இல்லையா? அதேபோல் காரியம் செய்வதற்கு முன்பு காரியத்தை சோதனைசெய்யுங்கள். சாதாரண காரியம் செய்து செய்து சாதாரண வாழ்க்கையாக ஆகிவிட்டது என்றால் எப்படி உலகத்தினரோ அப்படி நீங்களும் அவர்களோடு கலந்து விடுவீர்கள். வேறுபட்டவர்களாக தென்பட மாட்டீர்கள். ஒருவேளை விலகி யிருக்கும் நிலை இல்லை என்றால், தந்தையின் அன்பிற்குரியவராகவும் இல்லை. ஒருவேளை எனக்கு தந்தையின் அன்பு அனுபவம் ஆவதில்லை என்று எப்பொழுதாவது நினைக்கிறீர்கள் என்றால், அப்பொழுது எங்கோ நான் விலகியிருக்கும் நிலையில் குறை இருக்கிறது, எங்கோ எனக்கு பற்றுதல் இருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். விலகியராக ஆகவில்லை அதனால் தான் தந்தையின் அன்பு அனுபவம் ஆகவில்லை. அது தன்னுடைய உடல் மீது இருக்கலாம், சம்மந்தத்தின் மீது இருக்கலாம் அல்லது ஏதாவது ஒரு பொருள் மீது இருக்கலாம். ஸ்தூல பொருள் மேல் உள்ள பற்றுதலும் யோகாவை துண்டிப்பதற்குக் காரணமாகிவிடும். சம்மந்ததில் இருக்காது ஆனால் சாப்பிடும் பொருள் மீது, அணியும் ஆடை மீது பற்றுதல் இருக்கும், ஏதாவது ஒரு சிறிய பொருள் கூட மிகப்பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தி விடும். எனவே எப்பொழுதும் விலகியிருக்கும் நிலை அதாவது ஆன்மீக வாழ்க்கையில் இருக்க வேண்டும். எப்படி அந்த மனிதர்கள் பேசுகிறார்கள், நடந்து கொள்கிறார்கள், குடும்பத்தில் இருந்து கொண்டே நீங்களும் அவர்கள் மாதிரி இருந்தீர்கள் என்றால், அவர்களுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்! மருமகள் அல்ல, ஆனால் அவரும் ஒரு ஆத்மா. ஆத்மா என்று பார்ப்பதினால் ஒன்றோ குஷி ஏற்படு அல்லது இரக்கம் வரும். இந்த ஆத்மா பாவம் மற்றவர்களின் வசமாகி இருக்கிறார், அஞ்ஞானத்தில் இருக்கிறார், ஒன்றும் தெரியாமல் இருக்கிறார். நான் ஞானம் நிறைந்த ஆத்மா ஆவேன். எனவே அந்த ஒன்றும் தெரியாத ஆத்மா மேல் இரக்கம் வைத்து என்னுடைய சுபபாவனை மூலம் மாற்றிக் காண்பிப்பேன். தன்னுடைய உள்உணர்வில், பார்வையில் மாற்றம் வேண்டும். இல்லை என்றால் ஈஸ்வர்ய குடும்பத்தில் பிரபாவம் ஏற்படாது. அந்த மாதிரி உள்உணர்வு மற்றும் பார்வையை மாற்றுவது தான் ஆன்மீக வாழ்க்கை. எந்தக் காரியத்தை அஞ்ஞானிகள் செய்கிறார்களோ அதை நீங்கள் செய்ய முடியாது. அவர்களுடைய பாதிப்பு உங்கள் மீது ஏற்பட்டு விட வேண்டாம். நான் ஞானி ஆத்மா

என்னுடைய பிரபாவம் அஞ்ஞானி மேல் ஏற்படுகிறதா என்று தன்னைத் தானே பாருங்கள். ஒருவேளை ஏற்படவில்லை என்றால் உங்களிடம் சுபபாவனை இல்லை என்பதாகும். பேசுவதினால் பிரபாவம் ஏற்படாது ஆனால் சூட்சும பாவனையாக என்ன இருக்குமோ அதனுடைய பலன் கிடைக்கும். நல்லது.

4) ஒவ்வொரு அடியிலும் சர்வ சக்திவான் தந்தை என்னுடன் இருக்கிறார் என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா? எங்கு சர்வ சக்திவான் தந்தை இருக்கிறாரோ அங்கு அனைத்து பிராப்திகளும் இயல்பாகவே இருக்கும். எப்படி விதை இருக்கிறது என்றால், அதில் மரம் நிரம்பியிருகிறது. அதே போல் சர்வ சக்திவான் தந்தையின் துணை இருக்கிறது என்றால் எப்பொழுதும் அனைத்தும் நிறைந்தவராக, எப்பொழுதும் திருப்தியான வராக, எப்பொழுதும் சம்பன்னமானவராக இருப்பார். ஒருபொழுதும் எந்த விஷயத்திலும் பலஹீனமானவராக இருக்க மாட்டார். ஒருபொழுதும் எந்த புகாரும் செய்ய மாட்டார். எப்பொழுதும் முழுமையானவராக இருப்பார். என்ன செய்வது, எப்படி செய்வது.... இந்த புகார் இருக்காது. தந்தை உடன் இருக்கிறார் என்றால் எப்பொழுதும் வெற்றி. தந்தையைப் பிரித்து விடுகிறீர்கள் என்றால் மிக நீளமான க்யூ (வரிசை) வந்து விடுகிறது. ஒன்று ஏன் என்ற க்யூ உருவாகிவிடுகிறது. ஒருபொழுதும் ஏன் என்ற க்யூ ஏற்பட வேண்டாம். பக்தர்களின் பிரஜைகளின் க்யூ ஏற்பட்டாலும் பரவாயில்லை, ஏன் என்ற க்யூ ஏற்பட வேண்டாம். அந்த மாதிரி எப்பொழுதும் உடன் இருப்பவர்கள், செல்வதும் உடன் செல்வார்கள். எப்பொழுதும் உங்களுடன் இருப்போம், உங்களுடைய துணை இருக்கும், மேலும் உங்களுடன் செல்வோம் என்ற இது தான் உங்களுடைய திடமான உறுதிமொழி தான் இல்லையா. நீண்டகாலத்து குறை இறுதியில் ஏமாற்றம் கொடுத்து விடும். ஒருவேளை ஏதாவது குறையின் கயிறு கட்டப்பட்டு இருந்து விட்டது என்றால், மேலே பறக்க முடியாது. எனவே அனைத்து கயிறுகளையும் சோதனைசெய்யுங்கள். அழைப்பு வந்தது, நேரத்தின் விசில் ஊதப்பட்டது, உடனே சென்று விட்டோம்! தைரியமுள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவி இருக்கிறது. எங்கு தந்தையின் உதவி இருக்கிறதோ அங்கு எந்தவொரு கடினமான காரியமும் இருக்காது. அது ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது.

5) தன்னை எப்பொழுதும் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று அனுபவம் செய்கிறீர்களா? இந்த சொரூபத்தின் நினைவில் இருப்பதினால் ஒவ்வொரு சூழ்நிலையிலும் / பிரச்சனையிலும் இது சூழ்நிலை / பிரச்சனை அல்ல, ஆனால் ஒரு பக்கத்து (சாலை ஓரக் காட்சி) என்று அந்த மாதிரி அனுபவம் ஆகும். பிரச்சனை என்று புரிந்து கொள்வதினால் பயந்து விடுகிறீர்கள். ஆனால்

பக்கத்து காட்சி அதாவது செல்லும் வழியில் தென்படும் காட்சி கள் என்றால் சுலபமாகவே கடந்து சென்று விடுகிறீர்கள். ஏனென்றால் காட்சிகளைப் பார்த்து குஷி ஏற்படும், பயப்படுவதில்லை. அந்த மாதிரி தடை, தடையில்லை, ஆனால் தடை முன்னேறிச் செல்வதற்கான சாதனம். பரீட்சை ஒரு வகுப்பிலிருந்து மேல் வகுப்பிற்குச் செல்ல வைக்கிறது. அந்த மாதிரி இந்த தடை, பிரச்சனை, பரீட்சை முன்னேறிச் செல்வதற்காக வருகின்றன என்று அந்த மாதிரி நினைக்கிறீர்கள் தான் இல்லையா? எப்பொழுதாவது ஏதாவது விஷயத்தை - இது என்ன ஆனது, ஏன் ஆனது? என்று யோசிக்கிறீர்கள் என்றால் யோசிப்பதிலும் நேரம் செல்கிறது. யோசிப்பது என்றால் நிற்பது. மாஸ்டர் சர்வ சக்திவான் ஒருபொழுதும் நிற்பதில்லை. எப்பொழுதும் தன்னுடைய வாழ்க்கையில் பறக்கும் கலையை அனுபவம் செய்வார்கள்.

6) வரமளிக்கும் வள்ளல் தந்தை மூலமாக அனைத்து வரதானங்களும் பிராப்தி ஆகியிருக்கின்றனவா? தந்தை மூலமாக அனைத்தையும் விட முக்கிய வரதானமாக என்ன கிடைத்திருக்கின்றது? ஒன்றோ நிரந்தர யோகி ஆகுக ! மற்றும் இன்னொன்று தூய்மை ஆகுக! இந்த இரண்டு விசேஷ வரதானங்களை எப்பொழுதும் வாழ்க்கையில் அனுபவம் செய்கிறீர்களா? யோகி வாழ்க்கையாக ஆக்கி விட்டீர்களா? அல்லது யோகாசெய்யும் யோகியா? யோகாசெய்யும் யோகி இரண்டு, நான்கு மணி நேரம் யோகாசெய்வார். பிறகு முடிந்தது. ஆனால் யோகிவாழ்க்கை என்றால் நிரந்தரமானது. எனவே நிரந்தரமான யோகிவாழ்க்கை. அதே போலவே தூய்மை ஆகுக என்ற வரதானமும் கிடைத்திருக்கிறது. தூய்மை ஆகுக என்ற வரதானத்தின் மூலம் பூஜைக்குரிய ஆத்மா ஆகிவிட்டீர்கள். யோகி ஆகுக என்ற வரதானம் மூலம் எப்பொழுதும் சக்தி சொரூபம் ஆகிவிட்டீர்கள். அந்த மாதிரி சக்தி சொரூபம் மற்றும் தூய்மையான பூஜைக்குரிய சொரூபம் இரண்டுமாக ஆகிவிட்டீர்கள் தான் இல்லையா. எப்பொழுதும் தூய்மையாக இருக்கிறீர்களா? சில நேரம் மட்டும் இல்லை தானே? ஏனென்றால் யாராவது ஒரு நாள் கூட தூய்மையற்றவர் ஆனார் என்றால் தூய்மையற்றவரின் பட்டியலில் வந்து விடுவார். நீங்கள் தூய்மையின் பட்டியலில் இருக்கிறீர்களா? எப்பொழுதாவது கோபமோ வருவதில்லையே? கோபம் அல்லது மோகம் (பற்றுதல்) வருவதை தூய்மை என்று கூறுவோமா? மோகம் தூய்மையின்மை இல்லையா என்ன? ஒருவேளை மோகத்தை வென்றவர் ஆகவில்லை என்றால் நினைவு சொரூபமாகவோ ஆக முடியாது. எந்தவொரு விகாரத்தையும் வர விடாதீர்கள். எப்பொழுது எந்தவொரு விகாரத்தையும் வர விடுவதில்லையோ அப்பொழுது தான் தூய்மையானவராக மேலும் யோகி ஆகுக! என்று கூறுவோம். பாப்தாதா அனைத்து குழந்தைகளின் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறார். ஒவ்வொரு குழந்தையும் நான் வீணானதை நினைக்க மாட்டேன், வீணானதை செய்ய மாட்டேன், வீணானவை என்ற நோயைநிரந்தரமாக அழித்து விடுவேன் என்று திட எண்ணம்

வைக்க வேண்டும். இந்த ஒரு திட எண்ணம் தான் நிரந்தரமாக வெற்றி அடைபவர் ஆக்கிவிடும். எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றால் வீணானதை அழிக்க வேண்டும். நல்லது - ஓம் சாந்தி.

வரதானம் :

திவ்ய புத்தி மூலமாக திவ்ய சித்திகளை (வெற்றிகளை) அடையக்கூடிய சித்தி சொரூபம் ஆகுக.

நேரத்திற்கேற்ற விதி மூலம் திவ்ய புத்தியை உபயோகப்படுத்தினீர்கள் என்றால், அனைத்து சித்திகளும் உங்கள் கை மேல் இருக்கும். சித்தி ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. திவ்ய புத்தியின் வெளிப்பாடு தான் அது. எப்படி இன்றைய நாட்களில் மந்திரவாதிகள் கைகள் மூலம் திறமைகளை வெளிப்படுத்துகிறார்கள். இந்த திவ்ய புத்தியின் திறமை அனைத்து சித்திகளையும் உள்ளங்கை மேல் கொண்டு வந்து விடுகிறது. பிராமண ஆத்மாக்கள் நீங்கள் அனைத்து திவ்ய சித்திகளையும் பிராப்தி அடைந்து இருக்கிறீர்கள். எனவே உங்களுடைய மூர்த்திகள் மூலமாக இன்று வரையிலும் பக்தர்கள் சித்தியை பிராப்தி செய்வதற்காக செல்கிறார்கள்.

சுலோகன்:

யாரிடம் சர்வ சக்திவான் தந்தையின் சர்வ சக்திகளும் இருக்கின்றனவோ அவருக்கு ஒருபொழுதும் தோல்வி ஏற்பட முடியாது.

ஓம்சாந்தி

17.04.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## கர்மாதீத் நிலையை அடைவதற்காக ஒருங்கிணைக்கும் சக்தி மற்றும் உள்ளடக்கும் சக்தி அவசியமாகும் !

சப்தத்திலிருந்து விலகிய தன்னுடைய சிரேஷ்ட நிலையை அனுபவம் செய்கிறீர்களா? அந்த சிரேஷ்டநிலை அனைத்து பௌதீகஈர்ப்பிலிருந்தும் விலகிய சக்திசாலியான, விலகியிருக்கும் மற்றும் அன்பான நிலை. ஒரு நொடியில் இந்த சிரேஷ்ட நிலையில் நிலைத்திருந்து விட்டீர்கள் என்றால் அதன் பிரபாவம் முழு நாளும் காரியங்கள் செய்து கொண்டே தனக்குள் விசேஷமாக அமைதியின் சக்தியை அனுபவம் செய்வீர்கள். இந்த நிலையை கர்மாதீத் நிலை, தந்தைக்குச் சமமான சம்பூர்ண நிலை என்று கூறுவது. இதே நிலை மூலமாக ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியை அனுபவம் செய்ய முடியும். அந்த மாதிரி சக்திசாலி நிலையை அனுபவம் செய்திருக்கிறீர்களா? பிராமண வாழ்க்கையின் இலட்சியம் கர்மாதீத் நிலையை அடைவது. எனவே இலட்சியத்தை அடைவதற்கு முன்பாக இப்பொழுதிலிருந்தே இந்தப் பயிற்சியில் இருந்தீர்கள் என்றால் தான் இலட்சியத்தை அடைய முடியும். இந்த இலட்சியத்தை அடைவதற்காக விசேஷ ரூபத்தில் தனக்குள் சாரத்தில் கொண்டு வரும் சக்தி, உள்ளடக்கும் சக்தி ஆகியவை அவசியமாகும். ஏனென்றால், விகார வாழ்க்கையில் மற்றும் பக்தி வாழ்க்கையில் இரண்டிலும் பல ஜென்மங்கள் புத்தியானது விஸ்தாரத்தில் அலையும் சம்ஸ்காரத்தில் (பழக்கத்தில்) மிகவும் உறுதியாக விட்டது. எனவே அந்த மாதிரி விஸ்தாரத்தில் அலையும் புத்தியை சார ரூபத்தில் (ஒருங்கிணைக்கும்) நிலைக்கச் செய்வதற்காக இந்த இரண்டு சக்திகளின் அவசியம் இருக்கிறது. தொடக்கத்திலிருந்து பாருங்கள் - தன்னுடைய தேகத்தின் உணர்வின் எத்தனை விதமான விஸ்தாரம் இருக்கிறது. அதைத் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? நான் குழந்தை, நான் வாலிபன், நான் வயதானவன். நான் இந்தப் பதவி வகிப்பவன். இதே விதமாக தேகத்தின் நினைவின் விஸ்தாரம் எத்தனை இருக்கிறது. பிறகு சம்மந்தத்தில் வந்தீர்கள் என்றால் எவ்வளவு விஸ்தாரம் இருக்கிறது. யாருக்கு குழந்தையாக இருக்கிறேன், யாருக்கு தந்தையாக இருக்கிறேன் என்று அப்படி எத்தனை விஸ்தாரத்தின் சம்மந்தம்.அதனை வர்ணனை செய்வதற்கு அவசியமில்லை, ஏனென்றால் தெரிந்திருக்கிறீர்கள், இதே விதமாக தேகத்தின் பதார்த்தங்களிலும் எவ்வளவு விஸ்தாரம் இருக்கிறது. பக்தியில் அனேக தேவதைகளை திருப்தி படுத்துவதற்காக எவ்வளவு

விஸ்தாரம் இருக்கிறது. இலட்சியம் ஒருவரை அடைவதற்கானது, ஆனால் அலைவதின் சாதனம் அனேகம் இருக்கிறது. இத்தனை அனைத்து விதமான விஸ்தாரத்தை சார ரூபத்தில் கொண்டு வருவதற்காக உள்ளடக்கும் மற்றும் சாரத்தில் கொண்டு வரும் சக்தி அவசியமாக இருக்கிறது. அனைத்து விஸ்தாரத்தை ஒரு வார்த்தை மூலம் உள்ளடக்கி விட வேண்டும். அது என்ன? பிந்து (புள்ளி). நானும் பிந்து, தந்தையும் பிந்து. ஒரு தந்தை பிந்துவில் முழு உலகமும் அடங்கி இருக்கிறது. உலகில் ஒன்று சம்பந்தம், இன்னொன்று செல்வம். இதிலேநீங்கள் நல்ல முறையில் அனுபவிகள் தான் இல்லையா? இரண்டு விசேஷங்களும் பிந்து ரூபமான தந்தையிடம் நிரம்பியிருக்கிறது. அனைத்து சம்பந்தங்களையும் ஒருவர் மூலமாக அனுபவம் செய்திருக்கிறீர்களா? அனைத்து செல்வங்களின் பிராப்தியாகிய சுகம், சாந்தி, குஷி இதையும் அனுபவம் செய்து விட்டீர்களா அல்லது இனி தான் செய்ய வேண்டுமா? அப்படியானால் என்ன ஆனது? விஸ்தாரம் சாரத்தில் உள்ளடங்கி விட்டது இல்லையா? அனேக பக்கம் விஸ்தாரத்தில் அலையும் புத்தி சாரத்தில் கொண்டு வரும் சக்தியின் ஆதாரத்தில் ஒருவரில் ஒருமுகப்பட்டு நிலைத்து விட்டதா என்று உங்களை நீங்களே கேளுங்கள். அல்லது இப்பொழுது கூட எங்காவது விஸ்தாரத்தில் அலைகிறதா? சாரத்தில் கொண்டு வரும் சக்தியை மேலும் உள்ளடக்கும் சக்தியை நடைமுறையில் பயன் படுத்தியிருக்கிறீர்களா? அல்லது ஞானம் மட்டும் இருக்கிறதா? ஒருவேளை இந்த இரண்டு சக்திகளையும் பயன்படுத்தத் தெரியும் என்றால், அதனுடைய அடையாளமாக புத்தி ஒரு நொடியில் எங்கே விரும்புகிறதோ, எப்பொழுது விரும்புகிறதோ அதே நிலையில் நிலைத்து விடும். எப்படி ஸ்தூல வாகனத்தில் சக்திசாலியான பிரேக் இருக்கிறது என்றால், அதை எப்பொழுது விரும்பினாலும் எங்கே விரும்பினாலும் அங்கே நிறுத்த முடியும். எங்கே விரும்பினாலும் வண்டியை அந்த திசையில் கொண்டு செல்ல முடியும். அந்த மாதிரி நீங்களும் இந்த சக்தியை அனுபவம் செய்கிறீர்களா அல்லது ஒருமித்த நிலை ஏற்படுவதற்கு நேரம் எடுக்கிறதா? மேலும் வீணானதிலிருந்து சக்திசாலியான நிலையில் செல்வதற்கு கடின உழைப்பு செய்ய வேண்டியதிருக்கிறது என்றால், இந்த இரண்டு சக்திகளின் குறை இருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். சங்கமயுக பிராமண வாழ்க்கையின் விசேஷமே சார ரூபத்தில் நிலைத்திருந்து எப்பொழுதும் சுகம், சாந்தியின், குஷியின், ஞானத்தின், ஆனந்தத்தின் ஊஞ்சலில் ஆடுவது. அனைத்து பிராப்தியின் சம்பன்ன சொரூபத்தின் அழியாத போதையில் நிலைத்து இருங்கள். எப்பொழுதும் முகத்தில் பிராப்தியே பிராப்தி என்ற அந்த சம்பன்ன நிலையின் பொலிவு மற்றும் ஜொலிப்பு தென்பட வேண்டும். எப்பொழுது ஸ்தூல செல்வத்தினால் மட்டும் நிரம்பிய அழியக் கூடிய இராஜபதவி அடையும் இராஜாக்களின் முகத்தில் கூட துவாபர்யுக தொடக்க காலத்தில் அந்த ஜொலிப்பு இருந்தது. இங்கேயோ அழியாத பிராப்தி. அப்படியானால் எந்தளவு ஆன்மீக ஜொலிப்பு மற்றும் பொலிவு முகத்தில் தென்பட வேண்டும்! அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? அல்லது அனுபவத்தை

கேட்டு மட்டும் குஷியடைந்து விடுகிறீர்களா? பாண்டவ சேனை விசேஷமானது இல்லையா? பாண்டவ சேனையைப் பார்த்து அவசியம் மகிழ்ச்சியடைவார்கள். ஆனால் பாண்டவர்களின் விசேஷமாக எப்பொழுதும் வீரம் நிறைந்தவர் களாக காண்பிப்பார்கள், பலஹீனமானவராக அல்ல. உங்களுடைய நினைவுச் சின்ன சித்திரத்தை பார்த்திருக்கிறீர்கள் இல்லையா? சித்திரங்களிலும் மாவீரர்களாகக் காண்பிப்பார்கள். பாப்தாதாவும் அனைத்து பாண்டவர்களுக்கு விசேஷ ரூபத்தில் எப்பொழுதும் வெற்றி அடைபவர், எப்பொழுதும் தந்தையின் துணைவர்கள் அதாவது பாண்டவ பதியின் துணைவர்கள், தந்தைக்குச் சமமான மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற நிலையில் எப்பொழுதுமே இருங்கள் என்ற இந்த விசேஷ நினைவின் வரதானம் கொடுக்கிறார். புதியவர்களும் வந்திருந்தாலும் கூட ஆனால் அவர்களும் சென்ற கல்பத்தின் அதிகாரி ஆத்மாக்கள், எனவே எப்பொழுதும் தன்னுடைய சம்பூர்ண அதிகாரத்தை கண்டிப்பாக அடைய வேண்டும் என்ற இந்த போதைமற்றும் நிச்சயத்தில் எப்பொழுதும் இருக்க வேண்டும். புரிந்ததா? நல்லது.

எப்பொழுதும் ஒரு நொடியில் புத்தியை ஒருநிலைப்படுத்தி அனைத்து பிராப்திகளையும் அனுபவம் செய்து, எப்பொழுதும் அனைத்து சக்திகளையும் நேரத்திற்குத் தகுந்தாற் போல் நடைமுறை உபயோகத்தில் கொண்டு வந்து எப்பொழுதும் ஒரு தந்தையில் முழு உலகத்தையும் அனுபவம் செய்யக்கூடிய, அந்த மாதிரி சம்பன்னமான மற்றும் சமமான சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் சந்திப்பு -

1) அதர்குமாரர்களுடன் (குடும்ப வாழ்க்கையில் இருக்கும் சகோதரர்களுடன்) - தனக்கு இந்த மாதிரி சிரேஷ்ட பாக்கியம் இருக்கும் என்று எப்பொழுதாவது யோசித்திருந்தீர்களா? எனக்கு இந்தளவு சிரேஷ்ட பாக்கியம் பிராப்தி ஆக முடியும் என்று ஒருபொழுதும் நம்பிக்கையே இருந்ததில்லை. ஆனால் நம்பிக்கையற்ற ஆத்மாக்களை தந்தை வந்து நம்பிக்கைக்குரியவர்கள் ஆக்கிவிட்டார். நம்பிக்கையற்ற காலம் இப்பொழுது முடிவடைந்து விட்டது. இப்பொழுது ஒவ்வொரு அடியிலும் எனக்கு கண்டிப்பாக வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. என்ன ஆகுமோ என்று தெரியவில்லை அல்லது ஆகாதா என்ற இந்த எண்ணமோ வருவதில்லையே? எந்தவொரு காரியத்திலும் அது சுயத்தின் முயற்சி செய்வதாகட்டும் அல்லது சேவையாகட்டும் இரண்டிலுமே நம்பிக்கை அற்ற சம்ஸ்காரம் முடிவடைந்து விட வேண்டும். எந்தவொரு சம்ஸ்காரமோ அது காமமாக இருந்தாலும், பேராசையாக இருந்தாலும் அல்லது அகங்காரமாக இருந்தாலும் அதை மாற்றுவதில்

நம்பிக்கையற்றவராக ஆகாதீர்கள். நானோமாறவே முடியாது, இது மாறுவது மிகக் கடினம் என்று அப்படி இருக்க வேண்டாம். அந்த மாதிரி எண்ணமும் வரக்கூடாது. ஏனென்றால் ஒருவேளை இப்பொழுது அகற்றவில்லை என்றால் பிறகு எப்பொழுது அகற்றுவீர்கள்? இப்பொழுது தசரா நடக்கிறது இல்லையா? சத்யுகத்திலேயோ தீபாவளி ஆகிவிடும். இராவணனை அழிக்கும் தசரா இப்பொழுது நடக்கிறது. இதில் எப்பொழுதும் வெற்றி அடைவதற்கான ஊக்கம் மற்றும் உற்சாகம் இருக்க வேண்டும். நம்பிக்கையின்மையின் சம்ஸ்காரம் இருக்க வேண்டாம். எந்தவொரு கடினமான காரியமும் அந்த அளவு இதுவொன்றும் பெரிய விஷயம் இல்லை, ஏனென்றால் அனேக தடவைகள் காரியங்கள் செய்து முடித்திருக்கிறீர்கள் என்று அனுபவம் ஆக வேண்டும். எந்த புது விஷயத்தையும் செய்து கொண்டிருக்கவில்லை. அனேக தடவைகள் செய்ததை மீண்டும் செய்கிறீர்கள். எனவே எப்பொழுதும் நம்பிக்கை வைத்திருப்பவர். நம்பிக்கையின்மையின் பெயர் அடையாளமோ இருக்கவே கூடாது. ஒருபொழுதும் இது மாறுமா அல்லது மாறாதா தெரியவில்லை என்று அந்த மாதிரி சுபாவம், சம்ஸ்காரத்தின் அடிப்படையில் எண்ணம் வர வேண்டாம். எப்பொழுதும் வெற்றி அடைபவர், சில நேரம் அல்ல. ஒருவேளை ஏதாவது கனவில் கூட குறை இருக்கிறது என்றால் அதை சதா காலத்திற்காக அழித்து விடுங்கள். நம்பிக்கை யின்மையை நிரந்தரமாக நம்பிக்கையாக மாற்றி விடுங்கள். நிச்சயம் உறுதியாக இருக்கிறது என்றால் வெற்றியும் எப்பொழுதும் இருக்கும். நிச்சயத்தில் எப்பொழுது ஏன், என்ன என்பது வருகிறதோ அப்பொழுது வெற்றியில் அதாவது பிராப்தியில் ஏதாவது கொஞ்சம் குறை இருந்து விடும். எனவே எப்பொழுதும் நம்பிக்கை வைத்திருப்பவர் மற்றும் வெற்றி அடைபவர். நம்பிக்கையின்மையை நிரந்தரமாக நம்பிக்கையில் மாற்றக்கூடியவர்கள்.

2) எப்பொழுதும் தன்னை சங்கமயுகத்தின் சிரேஷ்ட ஆத்மா, புருஷோத்தம ஆத்மா மற்றும் பிராமணன் உச்சிகுடுமி, மகான் ஆத்மா என்று நினைக்கிறீர்களா? இப்பொழுதிலிருந்தே புருஷோத்தமன் ஆகிவிட்டீர்கள் இல்லையா? உலகத்தில் இன்னும் மனிதர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களிடமிருந்து நீங்கள் விலகியவராகவும் மற்றும் தந்தையின் பிரியமானவராகவும் ஆகிவிட்டீர்கள். எனவே புருஷோத்தம் ஆகிவிட்டீர்கள். மற்றவர்களின் மத்தியில் தன்னை ஆன்மீகமானவர் என்று நினைக்கிறீர்கள் இல்லையா! தொடர்பில் உலகத்து ஆத்மாக்கள் வந்தாலும் ஆனால் அவர்களின் நடுவில் இருந்து கொண்டே ஆன்மீகமானவர், விலகியிருப்பவர் என்ற இதை ஒருபொழுதும் மறக்கக்கூடாது இல்லையா? ஏனென்றால் நீங்கள் அன்னப்பறவை ஆகிவிட்டீர்கள், ஞான முத்துக்களைப் பொறுக்கும் புனித அன்னப்பறவைகள் நீங்கள். அவர்களோ அசுத்தத்தை அருந்தும் கொக்குகள். அவர்கள் அசுத்தம் தான் அருந்துவார்கள், அசுத்தத்தைத் தான் பேசுவார்கள். . . . அப்படி கொக்குகளின் மத்தியில்

இருந்து கொண்டே தன்னுடைய புனித அன்னப்பறவையின் வாழ்க்கை ஒருபொழுதும் மறந்து விடுவதில்லையே! எப்பொழுதாவது அவர்களுடைய பிரபாவமோஏற்பட்டு விடுவதில்லையே? பார்க்கப்போனால் உங்களுடைய பிரபாவம் அவர்கள் மேல் ஏற்பட வேண்டும். அவர்களுடைய பிரபாவம் உங்கள் மேல் ஏற்படக் கூடாது. எனவே எப்பொழுதும் தன்னை புனித அன்னப்பறவை என்று நினைக்கிறீர்களா? புனித அன்னப்பறவை புத்தி மூலமாக ஒருபொழுதும் ஞானத்தின் முத்துக்களைத் தவிர வேறு எதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. பிராமண ஆத்மாக்கள் யார் உயர்ந்தவர்கள், உச்சிகுடுமியாக இருக்கிறார்களோ அவர்கள் ஒருபொழுதும் கீழான விஷயங்களை ஏற்றுக் கொள்ள முடியாது. கொக்கில் இருந்து புனித அன்னப்பறவையாக ஆகிவிட்டீர்கள். புனித அன்னப்பறவை என்றால் எப்பொழுதும் சுத்தமாக, எப்பொழுதும் தூய்மையாக இருப்பது. தூய்மை தான் சுத்தம். அன்னப்பறவை எப்பொழுதும் சுத்தமாக இருக்கும். எப்பொழுதும் மிக வெண்மையாக இருக்கும். வெண்மையும் சுத்தம் மற்றும் தூய்மையின் அடையாளம். உங்களுடைய ஆடையும் வெண்மை நிறம். இது தூய்மையின் அடையாளம். ஏதாவது விதமான தூய்மையின்மை இருக்கிறது என்றால் புனித அன்னப்பறவை இல்லை. புனித அன்னப்பறவை அசுத்த எண்ணத்தைக் கூட செய்ய முடியாது. எண்ணமும் புத்தியின் போஜனம். ஒருவேளை அசுத்த மற்றும் வீணான உணவு அருந்தினீர்கள் என்றால் எப்பொழுதும் ஆரோக்கியமானவராக இருக்க முடியாது. வீணான பொருள்கள் வீசப்படும், ஒன்றாக சேர்த்து வைக்கப்படாது. எனவே வீணான எண்ணங்களையும் முடிவு கட்டுங்கள், இதைத் தான் புனித அன்னப்பறவை என்று கூறுவது. நல்லது.

பாண்டவர்களுடன் சந்திப்பு -

பாண்டவர்கள் என்றால் கனவு மற்றும் எண்ணத்தில் கூட தோல்வி அடையாதவர்கள். பாண்டவர் என்றால் எப்பொழுதும் வெற்றி அடைபவர் என்ற இந்த சுலோகனை விசேஷமாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கனவும் வெற்றி அடைவதாக வர வேண்டும். இந்த அளவு பரிவர்த்தனை (மாற்றம்) செய்ய வேண்டும். அமர்ந்திருக்கும் அனைவரும் வெற்றி அடையும் பாண்டவர்கள். அங்கே உங்கள் இடத்திற்குச் சென்ற பிறகு தோல்வி அடைந்து விட்டேன் என்ற கடிதம் எழுத மாட்டீர்கள். மாயா அதுவாக வருவதில்லை. ஆனால் நீங்களே அதை அழைக்கிறீர்கள். பலஹீனமானவர் ஆவது என்றால் மாயாவை அழைப்பது. அப்படி எந்தவிதமான பலஹீனமும் மாயாவை அழைக்கும். எனவே பாண்டவர்கள் என்ன பிராப்தி அடைந்திருக்கிறார்கள்? எப்பொழுதுமே வெற்றி அடைபவராக இருப்பார்கள். தோல்வி அடைந்த பிறகு மறைக்கிறார்கள். ஆனால் எப்பொழுதும் வெற்றி அடைபவராக இருங்கள். அந்த மாதிரி உறுதிமொழி செய்பவர்களுக்கு பாப்தாதாவின் வாழ்த்துக்கள் எப்பொழுதும் கிடைத்துக்

கொண்டே இருக்கிறது. அந்த மாதிரி குழந்தைகளுக்காக தந்தை எப்பொழுதும் ஆஹா! ஆஹா! என்ற பாடலை பாடிக் கொண்டே இருக்கிறார். அனைவரும் ஆஹா! ஆஹா! என்ற பாடல் கேட்பீர்கள் இல்லையா? தோல்வி ஏற்பட்டது என்றால் ஐயோ ஐயோ என்று அலறுவீர்கள், வெற்றி ஏற்பட்டது என்றால் ஆஹா ஆஹா என்று கூறுவீர்கள். அனைவருமே வெற்றி அடைபவர்கள், முழு குரூப்பிலும் ஒருவர் கூட தோல்வி அடைபவர் இல்லை. நல்லது. ஓம் சாந்தி.

மாஸ்டர் வள்ளல் ஆகுங்கள் (அவ்யக்த மகாவாக்கியம்)

பாப்தாதா இப்பொழுது குழந்தைகளிடமிருந்து, ஒவ்வொரு குழந்தையும் மாஸ்டர் வள்ளல் ஆக வேண்டும் என்பதைத் தான் விரும்புகிறார். எதை தந்தையிடமிருந்து பெற்றிருக்கிறீர்களோ அதை மற்றவர்களுக்குக் கொடுங்கள். ஆத்மாக்களிடமிருந்து பெற வேண்டும் என்ற பாவனை வைக்காதீர்கள். இரக்க மனம் உடையவராகி தன்னுடைய குணங்களின், சக்திகளின் சகயோகத்தை அனைவருக்கும் கொடுங்கள், இதில் பரந்த மனம் உடையவர் ஆகுங்கள். எந்த அளவு மற்றவர்களுக்கு கொடுத்துக் கொண்டே இருப்பீர்களோ அந்த அளவு அதிகரித்துக் கொண்டே இருக்கும். அழியும் பொக்கிஷத்தை கொடுப்பதினால் குறையும் மேலும் அழியாத பொக்கிஷத்தை கொடுப்பதினால் அதிகரிக்கும் - ஒன்றை கொடுங்கள், ஆயிரத்தை அடையுங்கள்.

மாஸ்டர் வள்ளல் என்றால் எப்பொழுதும் நிரம்பியவர், சம்பன்னமானவர். யார் அனுபவங்களின் பொக்கிஷத்தினால் சம்பன்னமாக இருப்பாரோ, அந்த சம்பன்ன மூர்த்திகள் இயல்பாகவே மாஸ்டர் வள்ளல் ஆகிவிடுகிறார்கள். வள்ளல் என்றால் சேவாதாரி. வள்ளல் கொடுக்காமல் இருக்க முடியாது. அவர்கள் தன்னுடைய இரக்க மனம் என்ற குணம் மூலமாக யாருக்காவது தைரியம் கொடுக்கிறார்கள் என்றால் சில பலமற்ற ஆத்மாக்களுக்கு பலம் கொடுப்பார்கள். அவர் மாஸ்டர் சுகம் கொடுக்கும் வள்ளலாக இருப்பார். நான் சுக வள்ளலின் குழந்தை மாஸ்டர் சுக வள்ளல் என்று எப்பொழுதுமே நினைவில் இருக்க வேண்டும். யார் வள்ளலாக இருப்பாரோ அவரிடம் இருக்கிறது, அப்பொழுது தான் கொடுப்பார். ஒருவேளை யாரிடமாவது தான் சாப்பிடுவதற்கே ஒன்றும் இல்லை என்றால் அவர் வள்ளலாக எப்படி ஆக முடியும்? எனவே எப்படி தந்தையோ அப்படி குழந்தைகள்! தந்தையை கடல் என்று கூறுகிறார்கள். கடல் என்றால் அளவற்றது, குறைவது இல்லை. அதே போல் நீங்களும் மாஸ்டர் கடல், நதியோஓடையோ இல்லை. எனவே தந்தைக்குச் சமமாக சுயநலமற்ற பாவனையோடு கொடுத்துக் கொண்டே இருங்கள். அசாந்தியின் நேரத்தில் மாஸ்டர் சாந்தியின் வள்ளலாகி மற்றவர்களுக்கும் சாந்தி

கொடுங்கள், பயப்படாதீர்கள், ஏனென்றால் என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அதுவும் நல்லது, மேலும் என்ன நடக்கப்போகிறதோ அது இன்னும் மிக நல்லது என்று தெரிந்திருக்கிறீர்கள். விகாரங்களின் வசமான மனிதர்களோ சண்டையிட்டுக் கொண்டே தான் இருப்பார்கள். அவர்களுடைய வேலையே இது தான். ஆனால் உங்களுடைய வேலை - அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு அமைதி கொடுப்பது, ஏனென்றால் நீங்கள் உலகிற்கு நன்மை செய்பவர்கள். உலகிற்கு நன்மை செய்யும் ஆத்மாக்கள் எப்பொழுதும் மாஸ்டர் வள்ளல் ஆகி, கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். ஒவ்வொருவருக்கும் சகயோகம், அன்பு, இரக்கம் கொடுப்பது தான் பெறுவது ஆகும்.

தற்சமயம் அனைவருக்கும் அழியாத குஷியின் அவசியம் இருக்கிறது, அனைவரும் குஷியின் பிச்சைக்காரர்கள். மேலும் நீங்கள் வள்ளலின் குழந்தைகள். வள்ளலின் குழந்தைகளின் வேலை கொடுப்பது. யாரெல்லாம் உறவு தொடர்பில் வருகிறார்களோ அவர்களுக்கு குஷியைக் கொடுத்துக் கொண்டே இருங்கள். யாரும் காலியாகச் செல்ல வேண்டாம், அந்த அளவு நிரம்பியவர் ஆகுங்கள். இப்பொழுது முழு உலகத்தின் ஆத்மாக்கள் சுகம், சாந்தியின் பிச்சை கேட்பதற்காக உங்களின் எதிரில் வரப்போகிறார்கள். வள்ளலின் குழந்தைகள் நீங்கள் மாஸ்டர் வள்ளல் ஆகி அனைவரையும் அனைத்தும் நிரம்பியவர்களாக ஆக்குவீர்கள். எனவே முன்பாகவே தன்னுடைய பெட்டகத்தை அனைத்து பொக்கிஷங்களால் நிரப்பி கொண்டே இருங்கள். சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள். சங்கமயுகத்தில் குறைவற்ற மற்றும் இடைவிடாத பெரும் வள்ளல் ஆகுங்கள். நான் வள்ளலின் குழந்தை இடைவிடாது கொடுக்கும் பெரும் வள்ளல் ஆத்மா என்பதை நிரந்தரமாக நினைவில் வையுங்கள். எந்தவொரு ஆத்மா உங்கள் எதிரில் வந்தாலும் அவர் அஞ்ஞானியாக இருந்தாலும் அல்லது பிராமணனாக இருந்தாலும், நீங்கள் அனைவருக்கும் ஏதாவது கொடுங்கள். இராஜாவின் அர்த்தமே கொடுப்பவர். எனவே ஒரு விநாடி கூட தானம் செய்யாமல் இருக்க முடியாது. பிராமண ஆத்மாக்களிடம் ஞானமோ ஏற்கனவே இருக்கிறது. ஆனால் அவர்களுக்காக இரண்டு விதத்தில் வள்ளல் ஆகுங்கள் - 1) எந்த ஆத்மாவிற்கு எந்த சக்தியின் அவசியம் இருக்கிறதோ அந்த ஆத்மாவிற்கு மனசக்தி மூலமாக அதாவது சுத்த உள்உணர்வு, வைப்ரேஷன் (எண்ண அலைகள்) மூலமாக சக்திகளின் தானம் அதாவது சகயோகம் கொடுங்கள். 2) காரியம் மூலமாக எப்பொழுதும் நீங்கள் வாழ்க்கையில் குணம் நிறைந்தவராகி, வெளிப்படையான எடுத்துக்காட்டாகி மற்றவர்களுக்கு சகஜமாக குணத்தைக் கடைபிடிப்பதற்கான சகயோகம் கொடுங்கள். தானத்தின் அர்த்தம் சகயோகம் கொடுப்பது.

தற்சமயம் உங்களுக்குள் விசேஷமாகச் செய்யும் காரியம் மூலமாக குணம் கொடுக்கும் வள்ளல் ஆவதற்கான அவசியம் இருக்கிறது. எனவே நான் எப்பொழுதும் குணம் நிறைந்தவர் ஆகி அனைவரையும் குணம் நிறைந்தவராக ஆக்கும் விசேஷ காரியத்தைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை வையுங்கள். ஞானமேஅதிகம் இருக்கிறது, இப்பொழுது குணங்களை வெளிப்படுத்துங்கள், அனைத்து குணங்கள் நிரம்பியவர் ஆவதில் மற்றும் ஆக்குவதில் உதாரணம் ஆகுங்கள். நீங்கள் வள்ளலின் குழந்தைகள் எனவே யாருக்கு என்ன வேண்டுமோ அதை கொடுத்துக் கொண்டே இருங்கள். யாரும் வெறும் கையோடு செல்ல வேண்டாம். அளவற்ற பொக்கிஷம் இருக்கிறது. யாருக்காவது குஷி வேண்டும், அன்பு வேண்டும், சக்தி வேண்டும் என்றால் கொடுத்துக் கொண்டே இருங்கள். இப்பொழுது குழந்தைகள் உங்கள் மனதில் நான் வள்ளலின் குழந்தையாகி அனைத்து ஆத்மாக்களுக்கு ஆஸ்தியை பெற வைப்பதற்கு பொறுப்பாளர் ஆக வேண்டும். யாரும் வஞ்சிக்கப்பட்டு இருந்து விடக்கூடாது என்ற நல்ல எண்ணத்தை வெளிப்படுத்துங்கள். யார் எப்படிப்பட்டவராக இருந்தாலும் கூட, அவரும் தந்தையின் குழந்தை தானே! நீங்கள் வள்ளலின் குழந்தையாக இருக்கிறீர்கள் என்றால் பரந்த மனமுடன் வழங்கிக் கொண்டே இருங்கள். யார் அமைதியின்றி துக்கத்தில் அலைந்து கொண்டிருக்கிறார்களோ அவர்கள் உங்களுடைய பரிவாரத்தைச் சேர்ந்தவர்கள். பரிவாரத்திற்கு சகயோகம் கொடுக்கப்படும். எனவே தற்சமயம் பெரும் வள்ளல் ஆவதற்காக விசேஷமாக இரக்க மனத்தின் குணத்தை வெளிக்கொணருங்கள். யாரிடமிருந்தும் பெற வேண்டும் என்ற இச்சையை வைக்காதீர்கள். அவர் நல்லதை சொன்னார் மற்றும் நல்லது என்று ஏற்றுக் கொண்டார் என்றால் கொடுப்பேன் என்று அப்படி இருக்க வேண்டாம். மாஸ்டர் வள்ளல் ஆகி உள்உணர்வு மூலமாக வைப்ரேஷன் மூலமாக, வாய்மொழி மூலமாக கொடுத்துக் கொண்டே இருங்கள். எல்லைக்கப்பாற்பட்ட வள்ளல் ஆகி உலக உருண்டையில் நின்று கொண்டு எல்லைக்கப்பாற்பட்ட சேவையில் வைப்ரேஷனை (அதிர்வலைகளை) பரப்புங்கள். மகான் வள்ளல் ஆகுங்கள். எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் சென்றீர்கள் என்றால் எல்லைக்குட்பட்ட விஷயங்கள் தானாகவே முடிவடைந்து விடும். நல்லது.

வரதானம் :

தூய்மையின் விசேஷ தாரணை மூலமாக அதீந்திரிய சுகத்தை அனுபவம் செய்யக்கூடிய பிரம்மாச்சாரி ஆகுக.

பிராமண வாழ்க்கையின் விசேஷ தாரணை தூய்மை. இது தான் நிரந்தர அதீந்திரிய சுகம் மற்றும் இனிமையான அமைதிக்கான விசேஷ ஆதாரம். தூய்மை பிரம்மச்சர்யம் மட்டும்

அல்ல. ஆனால் பிரம்மச்சாரி மற்றும் எப்பொழுதும் பிரம்மாச்சாரி அதாவது பிரம்மா பாபாவின் வழிப்படி ஒவ்வொரு அடியிலும் செல்பவர். எண்ணம், சொல் மற்றும் செயல் என்ற அடி பிரம்மா பாபாவின் காலடி மீது வைத்ததாக இருக்க வேண்டும். அந்த மாதிரி யார் பிரம்மாச்சாரியோ அவருடைய முகம் மற்றும் நடத்தை எப்பொழுதுமே உள்நோக்கு முகமுடையவராகவும் மேலும் அதீந்திரிய சுகத்தை அனுபவம் செய்விக்கும்.

சுலோகன்:

சேவையில் திரிகாலதரிசியின் (சென்ஸ்) ஞானம் மற்றும் ஆன்மீகத்தின் (எசன்ஸ்) நறுமணத்தை நிரப்புபவர் தான் சேவைக்குத் தகுதியானவர்.

ஓம்சாந்தி

19.04.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## "சங்கமயுகத்தின் பிரபு பலன் என்ற பழத்தை அருந்துவதினால் அனைத்து பிராப்திகள் ஆகின்றன "

இன்று பாப்தாதா தனது அனைத்து அன்பிற்குரிய குழந்தைகளுக்கு அன்பிற்கான பலனைக் கொடுப்பதற்காக, சந்திப்பு செய்வதற்காக, அன்பின் பிரத்யக்ஷ பலன், அன்பின் பாவனையின் சிரேஷ்ட பலனைக் கொடுப்பதற்காக குழந்தைகளின் சபையில் வந்திருக்கிறோம். பக்தியில் கூட அன்பு மற்றும் பாவனை பக்த ஆத்மாவின் ரூபத்தில் இருந்தது. அந்த மாதிரி பக்தன் ரூபத்தில் பக்தி இருந்தது. ஆனால் சக்தி இருக்கவில்லை. அன்பு இருந்தது, ஆனால் அறிமுகம் மற்றும் சம்மந்தம் உயர்ந்ததாக இருக்கவில்லை. பாவனை இருந்தது, ஆனால் அற்ப காலத்தின் விருப்பங்கள் நிரம்பிய பாவனையாக இருந்தது. இப்பொழுது கூட அன்பு மற்றும் பாவனை இருக்கிறது. ஆனால் நெருக்கமான சம்மந்தத்தின் ஆதாரத்தில் அன்பு இருக்கிறது. அதிகாரத்தன்மையின், சக்தியின், அனுபவத்தின் அதிகாரத்தின் சிரேஷ்ட பாவனை இருக்கிறது. யாசிக்கும் பாவனை மாறி, சம்மந்தம் மாறி அதிகாரத்தன்மையின் நிச்சயம் மற்றும் போதை ஏறிவிட்டது. அந்த மாதிரி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் பிரத்யக்ஷ பலன் பிராப்தி ஆகியிருக்கிறது. நீங்கள் அனைவரும் பிரத்யக்ஷ பலனின் அனுபவம் நிறைந்த ஆத்மாக்களாக இருக்கிறீர்களா? பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை அருந்திப் பார்த்திருக்கிறீர்களா? மற்ற பழங்களோ சத்யுகத்திலும் கிடைக்கும். மேலும் இப்பொழுது கலியுகத்திலும் அதிக பழங்கள் அருந்தியிருக்கிறீர்கள், ஆனால் சங்கமயுகத்தின் பிரபுவின் பழத்தை, பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை ஒருவேளை இப்பொழுது அருந்தவில்லை என்றால் முழு கல்பத்திலும் அருந்த முடியாது. பாப்தாதா அனைத்து குழந்தைகளிடம் பிரபு பழம், அழியாத பழம், அனைத்து சக்திகள், அனைத்து குணங்கள், அனைத்து சம்மந்தத்தின் அன்பின் சாறு நிரம்பிய பழத்தை அருந்தியிருக்கிறீர்களா? என்று கேட்கிறார். அனைவருமே அருந்தியிருக்கிறீர்களா அல்லது யாராவது அருந்தாமல் இருக்கிறார்களா? இது ஈஸ்வரிய மந்திரம் நிரம்பிய பழம் இந்தப் பழத்தை அருந்துவதினால் இரும்பிலிருந்து தங்கத்தையும் விட அதிக மதிப்புள்ள வைரமாக ஆகிவிடுகிறீர்கள். இந்த பழத்தின் மூலம் என்ன எண்ணம் வைப்பீர்களோ அதை அடைய முடியும். அழியாத பழம், அழியாத பிராப்தி. அந்த மாதிரி பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை அருந்துபவர் எப்பொழுதுமே மாயாவின் நோயினால் பாதிக்கப்படாமல் ஆரோக்கியமாக

. , ,

இருக்கிறார் துக்கம் அமைதியின்மையிலிருந்து அனைத்து தடைகளிருந்தும் எப்பொழுதுமே தூரமாக இருப்பதற்கான அமர பழம் கிடைத்து விட்டது. தந்தையின் குழந்தை ஆவது என்றால் அந்த மாதிரி சிரேஷ்ட பழம் கிடைப்பது.

இன்று பாப்தாதா வந்திருக்கும் விசேஷமான பாண்டவ சேனையைப் பார்த்து மகிழ்ச்சியோ அடைந்து கொண்டு தான் இருக்கிறார். கூடவே பிரம்மா பாபாவின் இனத்தவருடன் எப்பொழுதும் விருந்து செய்யப்படுகிறது, பிக்னிக் கொண்டாடப்படுகிறது. அப்படி இன்று இந்த பிரபு பழத்தின் பிக்னிக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். லட்சுமி நாராயணன் கூட இந்த மாதிரி பிக்னிக் செய்ய மாட்டார். பிரம்மா பாபா மற்றும் பிராமணர்களின் இது ஆன்மீக பிக்னிக். பிரம்மா பாபா தன் இனத்தவரைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். ஆனால் நம் இனத்தவராகத் தான் ஆக வேண்டும். ஒவ்வொரு அடியிலும் தந்தையைப் பின்பற்றி நடப்பவர், சமமாக இருக்கும் துணைவர்கள் என்றால் நம் இனத்தவர். அந்த மாதிரி நம் இனத்தவர் தான் இல்லையா அல்லது என்ன செய்வது, எப்படி செய்வது என்று இப்பொழுது யோசிக்கிறீர்களா? யோசிப்பவர்களா அல்லது சமமாக ஆகுபவர்களா? ஒரு நொடியில் ஒப்பந்தம் செய்பவர்களா அல்லது இப்பொழுது கூட யோசிப்பதற்காக நேரம் வேண்டுமா? ஒப்பந்தம் செய்து விட்டு வந்திருக்கிறீர்களா அல்லது ஒப்பந்தம் செய்வதற்காக வந்திருக்கிறீர்களா? அனுமதி யாருக்குக் கிடைத்திருக்கிறது, அனைவருமே படிவத்தை நிரப்பி இருக்கிறீர்களா? அல்லது சிறிய பிராமணிகளிடம் விஷயத்தைக் கூறிவிட்டு வந்து விட்டீர்களா? அந்த மாதிரி மிக இனிமையான விஷயங்கள் கூறுகிறார்கள். பாப்தாதாவிடம் அனைவரின் மனதின் விஷயங்கள் மற்றும் சாதுர்யத்தின் விஷயங்கள் இரண்டுமே வந்து சேர்கிறது. நியமப்பிரகாரம் ஒப்பந்தம் செய்து விட்டு வர வேண்டும். ஆனால் மதுபன்னில் சில ஒப்பந்தம் செய்பவர்களும் வந்து விடுகிறார்கள். செய்து விட்டு வருவதற்குப் பதிலாக இங்கு வந்து ஒப்பந்தம் செய்கிறார்கள். எனவே பாப்தாதா எண்ணிக்கையில் தரத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார். எண்ணிக்கையின் விசேஷம் அதனுடையது, தரத்தின் விசேஷம் அதனுடையது. இரண்டுமே வேண்டும் தான். பூச்செண்டு பல விதமான வண்ணம் நிறைந்த மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருக்கிறது. இலைகளும் இல்லை என்றால் பூச்செண்டு பார்க்க அழகாக இருக்காது. அப்படி நீங்கள் அனைவருமே பாப்தாதாவின் வீட்டின் அலங்காரமாக இருக்கிறீர்கள், அனைவரின் வாயிலிருந்தும் பாபா என்ற வார்த்தையோ வெளியாகத் தான் செய்கிறது. குழந்தைகள் வீட்டின் அலங்காரமாக இருக்கிறார்கள். இப்பொழுது கூட பாருங்கள் இந்த ஓம் சாந்தி பவன் என்ற ஹால் நீங்கள் அனைவரும் வந்ததினால் அலங்கரிக்கப்பட்டது தான் இல்லையா? அப்படி வீட்டின் அலங்காரம், தந்தையின் அலங்காரம் நீங்கள் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டே இருங்கள். எண்ணிக்கையிலிருந்து தரத்தில் பரிவர்த்தனை ஆகிவிடுங்கள். புரிந்ததா? இன்றோ

சந்திப்பதற்கான நாளாக மட்டும் இருந்தது. இருந்தும் பிரம்மா பாபாவிற்குத் தன் இனத்தினர் மேல் விருப்பம் வந்தது. எனவே பிக்னிக் செய்தோம். நல்லது.

எப்பொழுதும் பிரபு பழத்தை அருந்துவதற்கு உரியவர், எப்பொழுதும் பிரம்மா பாபாவிற்குச் சமமாக ஒரு நொடியில் ஒப்பந்தம் செய்யக்கூடிய, ஒவ்வொரு காரியத்திலும் கர்மயோகி, பிரம்மா பாபாவைப் பின்பற்றக் கூடிய, அந்த மாதிரி தந்தைக்குச் சமமான விசேஷ ஆத்மாக்களுக்கு, நாலாபுறங்களிலும் உள்ள தரமாக மற்றும் அதிக எண்ணிக்கையில் இருக்கும் குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு (அதர்குமாரர்களுடன்)

1) எப்பொழுதும் தன்னை இந்த உலகில் கோடியில் ஒருவரானவன் நான் என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுதெல்லாம் கோடியில் சிலர் அந்த சிலரிலும் சிலர் என்ற விஷயத்தை கேட்கிறீர்களோ அப்பொழுது அது நான் தான் என்று தன்னை நினைக்கிறீர்களா? எப்பொழுது மீண்டும் அதே மாதிரி நடக்கிறது என்றால் அந்த மீண்டும் நடக்கும் பங்கில் ஒவ்வொரு கல்பமும் நீங்கள் தான் விசேஷமாக இருப்பீர்கள் இல்லையா? அந்த மாதிரி அசைக்க முடியாத நம்பிக்கை இருக்க வேண்டும். நிச்சயபுத்தி உடையவர்கள் எப்பொழுதும் அனைத்து விஷயங்களிலும் கவலையின்றி இருப்பார்கள். நிச்சயத்தின் அடையாளம் கவலையற்ற நிலை. கவலைகள் அனைத்தும் அகன்று விட்டன. தந்தை கவலைகளின் சிதையிலிருந்து பாதுகாத்து விட்டார் இல்லையா? கவலைகளின் சிதையிலிருந்து தூக்கி இதயசிம்மாசனத்தில் அமர்த்தி விட்டார். தந்தை மீது அன்பு ஏற்பட்டது மேலும் அந்த அன்பின் ஆதாரத்தில் அன்பு நினைவின் அக்னியில் கவலைகள் அனைத்துமே ஒன்றுமே இருக்கவில்லை என்பது போல் அழிந்து விட்டன. ஒரு விநாடியில் அழிந்து விட்டன தான் இல்லையா? அந்த மாதிரி தன்னை நற்சிந்தனையுள்ள ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுதாவது கவலை வரவில்லையே? உடலின் கவலையும் இல்லை, மனதில் எந்த வீணான கவலையும் இல்லை, மேலும் பணத்தின் கவலையும் இல்லை ஏனென்றால், சாதாரண உணவு தான் அருந்த வேண்டும் மேலும் தந்தையின் மகிமை பாட வேண்டும். சாதாரண உணவோகண்டிப்பாக கிடைக்கும். அந்த மாதிரி பணத்தின் கவலையும் இல்லை, மனதின் வேதனையும் இல்லை மற்றும் கர்மத்தின் விளைவுகளை அனுபவிக்கும் உடல் சம்மந்தப்பட்ட கவலைகளும் இல்லை. ஏனென்றால் இது இறுதிப் பிறவி. மேலும் இறுதி நேரம் இதில் அனைத்தும் முடிவடைய வேண்டும் என்று தெரிந்திருக்கிறீர்கள். எனவே எப்பொழுதுமே நல்லதையே நினைப்பவர்களாக இருக்கிறீர்கள். என்ன ஆகும் என்று எந்தக் கவலையும்

இல்லை. ஞானத்தின் சக்தி மூலம் அனைத்தையும் தெரிந்து கொண்டீர்கள். எப்பொழுது அனைத்தையும் தெரிந்து கொண்டீர்களோ அப்பொழுது என்ன ஆகும் என்ற இந்தக் கேள்வி அகன்று விட்டது - ஏனென்றால், என்ன ஆகுமோ அது மிக நல்லதாகத் தான் ஆகும் என்ற ஞானம் இருக்கிறது. எனவே எப்பொழுதுமே நற்சிந்தனையாளர், எப்பொழுதும் கவலைகளிலிருந்து விலகிய நிச்சயபுத்தி உடைய கவலையற்ற ஆத்மாக்கள், இது தானே வாழ்க்கை. ஒருவேளை வாழ்க்கையில் கவலையின்மை இல்லை என்றால் அது என்ன தான் வாழ்க்கை. அந்த மாதிரி சிரேஷ்ட வாழ்க்கையை அனுபவம் செய்கிறீர்களா? குடும்பத்தின் கவலையோஇல்லை தானே? ஒவ்வொரு ஆத்மாவும் தன்னுடைய கணக்கு வழக்கை முடித்துக் கொண்டும் இருக்கிறார். மேலும் உருவாக்கிக் கொண்டும் இருக்கிறார், இதில் என்ன கவலைப்பட வேண்டிய திருக்கிறது. எந்தக் கவலையும் இல்லை. முன்பு சிதையில் எரிந்து கொண்டிருந்தீர்கள், இப்பொழுது தந்தை அமிர்தம் ஊற்றி எரியும் சிதையிலிருந்து இறந்து மறுபிறவி எடுத்தவராக ஆக்கிவிட்டார். உயிருள்ளவராக ஆக்கிவிட்டார். எப்படி இறந்தவரை உயிருள்ளவராக ஆக்கினார் என்று கூறுகிறார்கள் இல்லையா? தந்தை அமிர்தத்தை குடிக்கக் கொடுத்தார். மேலும் அமரர் ஆக்கிவிட்டார். இறந்த பிணத்திற்குச் சமமாக இருந்தேன். மேலும் இப்பொழுது பாருங்கள் என்ன ஆகி விட்டேன். பிணமாக இருந்தவனிலிருந்து மகான் ஆகிவிட்டேன். முன்பு எந்த ஞானமும் இருந்ததில்லை, எனவே பிணத்திற்கு சமம் என்று தான் கூறுவோம் இல்லையா? மொழியும் என்ன கூறுனீர்கள், அஞ்ஞானி மனிதர்கள் பேசும்பொழுது என்ன வார்த்தை கூறுவார்கள் – செத்து தொலையேன் என்று தான் கூறுவார்கள் அல்லது நான் செத்து விட்டேன் என்றால் மிக நல்லது என்று கூறுவார்கள். இப்பொழுதோ இறந்து மறுபிறவி எடுத்தவர் ஆகிவிட்டீர்கள். விசேஷ ஆத்மாக்கள் ஆகிவிட்டீர்கள். இது தான் குஷி இல்லையா? எரிந்து கொண்டிருக்கும் பிணத்திலிருந்து அமரன் ஆகிவிட்டீர்கள் – இது ஒன்றும் சாதாரண விஷயம் இல்லை. பகவான் செத்த பிணத்திற்கும் உயிர் கொடுக்கிறார் என்று கேள்வி பட்டிருந்தோம். ஆனால் எப்படி செய்கிறார் என்ற இதை புரிந்து கொள்ளவில்லை. இப்பொழுதோ நானே உயிருள்ளவனாக ஆகிவிட்டேன் என்றால் எப்பொழுதும் குஷி மற்றும் போதையில் இருங்கள்.

டீச்சர்களுடன் சந்திப்பு –

சேவாதாரிகளின் விசேஷம் என்ன? சேவாதாரி என்றால் (அதிகாலையில்) கண்கள் திறந்தன மற்றும் எப்பொழுதும் தந்தையின் துணை, தந்தைக்குச் சமமான நிலையை அனுபவம் செய்வது. அமிர்தவேளையின் மகத்துவத்தை தெரிந்திருக்கும் விசேஷ சேவாதாரி. விசேஷ சேவாதாரியின் மகிமையே யார் விசேஷ வரதானத்தின் நேரத்தை தெரிந்திருக்கிறார் மற்றும்

விசேஷ வரதானங்களை அனுபவம் செய்கிறார். ஒருவேளை அனுபவம் இல்லை என்றால் சாதாரண சேவாதாரியாக ஆனார், விசேஷமானவர் இல்லை. விசேஷ சேவாதாரி ஆக வேண்டும் என்றால், இந்த விசேஷ அதிகாரத்தை எடுத்து விசேஷமானவர் ஆக முடியும். யாருக்கு அமிர்தவேளையின், எண்ணத்தின், நேரத்தின் மற்றும் சேவையின் மகத்துவம் இருக்கிறதோ அந்த மாதிரி அனைத்து மகத்துவங்களைத் தெரிந்திருப்பவர் விசேஷ சேவாதாரியாக இருப்பார். எனவே இந்த மகத்துவத்தைத் தெரிந்து மகான் ஆக வேண்டும். இதே மகத்துவத்தை தெரிந்து நீங்களும் மகான் ஆகுங்கள். மேலும் மற்றவர்களையும், மகத்துவத்தைக் கூறி, அனுபவம் செய்வித்து மகான் ஆக்குங்கள். நல்லது – ஓம் சாந்தி.

## அவ்யக்த மகாவாக்கியங்கள் குழுவினருக்கு தனியாகக் கூறியது : பயன்படுத்துங்கள் மற்றும் வெற்றி அடைபவராக ஆகுங்கள்

எப்படி பிரம்மா பாபா நிச்சயத்தின் ஆதாரத்தில், ஆன்மீக போதையின் ஆதாரத்தில் கண்டிப்பாக நடக்கும் என்று ஞானம் தெரிந்தவராகி அனைத்தையும் பயனுள்ளதாக ஆக்கினார், தனக்காக எதையும் வைத்துக் கொள்ளவில்லை, அனைத்தையும் பயன்படுத்தினார். அதற்கான நடைமுறை எடுத்துக்காட்டாக இறுதி நாள் வரை உடல் மூலம் கடிதங்கள் எழுதி அதன் மூலம் சேவை செய்தார், வாய் மூலம் மகாவாக்கியங்களை உச்சரித்தார் என்பதையும் பார்த்தீர்கள். இறுதி நாளிலும் நேரம், எண்ணம், உடலையும் பயன்படுத்தினார். அந்த மாதிரி பயன்படுத்துவது என்பதின் அர்த்தமே உயர்ந்த காரியங்களுக்கு ஈடுபடுத்துவது என்பதாகும். அந்த மாதிரி யார் பயன்படுத்துகிறார்களோ அவர்களுக்கு வெற்றி இயல்பாகவே பிராப்தி ஆகிறது. வெற்றி அடைவதற்கான விசேஷ ஆதாரமுமே ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு மூச்சு, ஒவ்வொரு பொக்கிஷத்தையும் பயனுள்ளதாக ஆக்குவது. எண்ணம், சொல், காரியம், சம்மந்தம், தொடர்பு இந்த எதிலேயும் வெற்றியை அனுபவம் செய்ய விரும்புகிறீர்கள் என்றால், தனக்காகவும் மேலும் மற்ற ஆத்மாக்களுக்காகவும் பயன்படுத்திக் கொண்டே இருங்கள். வீணாகச் செல்ல விடாதீர்கள், பிறகு தானாகவே வெற்றியின் குஷியின் அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள். ஏனென்றால் பயனுள்ளதாக ஆக்குவது என்றால் தற்சமயத்திற்காக வெற்றி அடைபவர் ஆவது மேலும் எதிர்காலத்திற்காக சேமிப்பு செய்வது.

சேவையில் வெற்றியை அடைவதற்காக சமர்ப்பண உணர்வு மேலும் கவலையற்ற நிலை வேண்டும். சேவையில் என்னுடையது என்ற உணர்வு கலந்து விடக் கூடாது. எந்தவொரு

விஷயத்தின் கவலையும் இருக்க வேண்டாம். ஏனென்றால், கவலைப்படுபவர் சக்தியையும், வீணாக இழக்கிறார், மேலும் செய்ய வேண்டிய வேலையையும் இழந்து விடுகிறார். அவர் எந்த வேலைக்காக கவலைப்படுகிறாரோ அந்த வேலையும் கெட்டுப் போய் விடும். இரண்டாவது எப்பொழுது வெற்றி அடைபவராக ஆவதற்கான வழி ஒரு பலம் மற்றும் ஒருவர் மேல் உள்ள நம்பிக்கை. நிச்சயம் எப்பொழுதுமே கவலையற்றவர் ஆக்குகிறது. மேலும் கவலையற்ற நிலை உள்ளவர் என்னென்ன காரியம் செய்வாரோ அது அவசியம் வெற்றி அடையும். எப்படி பிரம்மா பாபா திட எண்ணம் மூலம் ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியை அடைந்தார், திடத்தன்மை வெற்றியின் ஆதாரமாக இருந்தது. அந்த மாதிரி தந்தையைப் பின்பற்றி செய்யுங்கள். ஒவ்வொரு பொக்கிஷத்தையும், குணங்களையும், சக்திகளையும் காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால், அதிகரித்துக் கொண்டே இருக்கும். மிச்சப்படுத்தும் விதி, சேமிக்கும் விதியைக் கடைபிடித்தீர்கள் என்றால் வீணானதின் கணக்கு இயல்பாகவே பரிவர்த்தனை ஆகி பயனுள்ளதாக ஆகிவிடும். தந்தை மூலமாக என்னென்ன பொக்கிஷங்கள் கிடைத்திருக்கின்றனவோ அவற்றை தானம் செய்யுங்கள், ஒருபொழுதும் கனவில் கூட தவறுதலாக பிரபு கொடுத்ததை தன்னுடையது என்று நினைக்காதீர்கள். என்னுடைய இந்த குணம், என்னுடைய சக்தி என்ற இந்த என்னுடையது வருவது என்றால் பொக்கிஷங்களை இழப்பது. தன்னுடைய ஈஸ்வரிய சம்ஸ்காரங்களையும் பயன்படுத்தினீர்கள் என்றால் வீணான சம்ஸ்காரம் தானாகவே சென்றுவிடும். ஈஸ்வரிய சம்ஸ்காரங்களை புத்தி என்ற பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்காதீர்கள். காரியத்தில் ஈடுபடுத்துங்கள். பயன்படுத்துங்கள். பயன்படுத்துவது என்றால் சேமிப்பது அல்லது அதிகரிப்பது. மனதின் எண்ணம் மூலம் பயன்படுத்துங்கள், வாய்மொழி மூலம் பயன்படுத்துங்கள், உறவு தொடர்பு மூலம், காரியம் மூலம், தன்னுடைய சிரேஷ்ட பழக்கத்தின் மூலம், தன்னுடைய மிக சக்திசாலியான உள்உணர்வு மூலம் பயனுள்ளதாக ஆக்குங்கள். பயன்படுத்துவது தான் வெற்றிக்கான சாவி. உங்களிடம் நேரம் மற்றும் எண்ணம் என்ற சிரேஷ்ட பொக்கிஷங்கள் என்ன இருக்கின்றனவோ அவற்றை 'குறைந்த செலவில் மிகுந்த பலன்' என்ற விதி மூலமாக பயனுள்ளதாக ஆக்குங்கள். எண்ணத்தின் செலவு குறைவாக இருக்க வேண்டும். ஆனால் பிராப்தி அதிகமாக இருக்க வேண்டும். ஒரு சாதாரண நபர் இரண்டு, நான்கு நிமிடங்கள் எண்ணத்தை ஓட வைத்த பிறகு, யோசித்த பிறகு வெற்றி மற்றும் பிராப்தி என்ன செய்ய முடியமோ அதை நீங்கள் ஓரிரு விநாடியில் செய்ய முடியும். அந்த மாதிரியே பேச்சு மற்றும் செயலைக் குறைவாகச் செலவழித்து வெற்றி அதிகமாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் அதிசயம் என்று மகிமை செய்யப்படும். எனவே உங்களிடம் என்னென்ன செல்வங்கள் இருக்கின்றன, நேரம், எண்ணம், மூச்சு, உடல், மனம், பணம் அனைத்தையும் பயனுள்ளதாக ஆக்குங்கள். வீணாக இழக்காதீர்கள், பிற்கால தேவைக்காக பாதுகாத்தும் வைக்காதீர்கள். ஞானம் மற்றும் சக்திகளின் செல்வத்தை

ஒவ்வொரு நேரமும் என்னுடையது என்பதிலிருந்து விலகியவராகிப் பயன்படுத்தினீர்கள் என்றால் சேமிப்பாகிக் கொண்டே இருக்கும். பயன்படுத்துவது என்றால், பலமடங்கு வெற்றியை அனுபவம் செய்வது.

யார் நேரத்தை பயனுள்ளதாக ஆக்குகிறாரோ அவர் நேரத்தின் பயன்படுத்தியதின் பலன் சொரூபமாக இராஜ்ய பாக்கியத்தின் முழு காலமும் இராஜ்ய அதிகாரி ஆகிறார்கள்.

யார் மூச்சை பயனுள்ளதாக ஆக்குகிறாரோ, அவர்கள் அனேக ஜென்மங்கள் நிரந்தரமாக ஆரோக்கியமாக இருப்பார்கள். ஒருபொழுதும் திடீரென்று மூச்சு நின்று விடாது, மாரடைப்பு ஏற்படாது.

யார் ஞான பொக்கிஷத்தை பயனுள்ளதாக ஆக்குகிறாரோ அவர் எதிர்காலத்தில் அனேக மந்திரிகளிடம் ஆலோசனைகேட்க வேண்டாத அளவிற்கு புத்திசாலி ஆகி விடுகிறார், அவரே புத்திசாலி ஆகி இராஜ்யத்தை நடத்துவிக்கிறார்.

யார் அனைத்து சக்திகளின் பொக்கிஷத்தைப் பயனுள்ளதாக ஆக்குகிறாரோ அதாவது அவற்றை காரியத்தில் ஈடுபடுத்துகிறாரோ அவர் அனைத்து சக்திகள் நிரம்பியவர் ஆகிவிடுகிறார். அவருடைய எதிர்கால இராஜ்யத்தில் எந்த சக்தியின் குறை இருக்காது. அனைத்து சக்திகளும் இயல்பாகவே இடைவிடாது, உறுதியாக, தடையற்று காரியத்தின் வெற்றியை அனுபவம் செய்விக்கும்.

யார் அனைத்து குணங்களின் பொக்கிஷத்தைப் பயனுள்ளதாக ஆக்குகிறாரோ அவர் அந்த மாதிரி குணம் நிறைந்தவர் ஆகிவிடுகிறார். அதன் பலனாக இந்தக் கடைசி ஜென்மத்திலும் அவருடைய ஜட விக்ரகத்திற்கு 'அனைத்து குணங்கள் நிரம்பிய தேவதையே' என்ற ரூபத்தில் மகிமை பாடப்படுகிறது.

யார் ஸ்தூல பணம், செல்வத்தின் பொக்கிஷத்தைப் பயனுள்ளதாக ஆக்குகிறாரோ அவர் 21 ஜென்மங்களுக்காக அனைத்து செல்வங்களும் நிறைந்தவராக இருப்பார். எனவே (சேவையில்)

பயன்படுத்துங்கள் மேலும் வெற்றி அடைபவர் ஆகுங்கள். நல்லது.

வரதானம்:

என்னுடையதை உன்னுடையதில் பரிவர்த்தனை (மாற்றம்) செய்து எப்பொழுதும் லேசாக இருக்கக்கூடிய டபுள் லைட் ஃபரிஷ்தா ஆகுக.

நடைமுறை காரியங்கள் செய்து கொண்டே எப்பொழுதும் நான் ஃபரிஷ்தாவே தான் என்ற இதே நினைவு இருக்க வேண்டும். ஃபரிஷ்தாக்களின் சொரூபம் என்ன, பேச்சு என்ன, காரியம் என்ன . . . அது எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும். ஏனென்றால் எப்பொழுது தந்தையின் குழந்தை ஆகிவிட்டீர்கள், அனைத்தையும் என்னுடையதாக இருப்பதை உன்னுடையதாக ஆக்கிவிட்டீர்கள் என்றால் சுமையற்றவர் (ஃபரிஷ்தா) ஆகிவிட்டீர்கள். இந்த நிச்சயத்தை நிறைவேற்றுவதற்காக எப்பொழுதும் ஒரே ஒரு வார்த்தை நினைவில் இருக்க வேண்டும் - அனைத்தும் தந்தையினுடையது, என்னுடையது எதுவும் இல்லை. எங்கு என்னுடையது என்று வருகிறதோ அங்கு உன்னுடையது என்று கூறிவிடுங்கள், பிறகு எந்த சுமையும் அனுபவம் ஆகாது, எப்பொழுதும் பறக்கும் கலையில் பறந்து கொண்டே இருப்பீர்கள்.

சுலோகன் :

தந்தை மேல் பலி ஆவதற்கான மாலையை அணிந்து கொண்டீர்கள் என்றால், மாயாவிடம் தோல்வி ஏற்படாது.

ஓம்சாந்தி

21.04.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## " சங்கமயுகத்தின் மரியாதைகளின்படி (விதிமுறை) நடப்பது தான் புருஷோத்தமன் ஆவது "

இன்று பாப்தாதா அனைத்து மரியாதை புருஷோத்தம குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சங்கமயுகத்தின் மரியாதைகள் தான் புருஷோத்தமம் ஆக்குகிறது. எனவே மரியாதை புருஷோத்தமம் என்று கூறுவது. இந்த தாழ்ந்த மனித ஆத்மாக்கள் மற்றும் தாழ்ந்த இயற்கையின் வாயுமண்டலம், வைப்ரேஷன் (எண்ண அலைகள்)லிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான சுலபமான வழி இந்த மரியாதைகள். மரியாதைகளுக்குள்ளே இருப்பவர் எப்பொழுதும் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு இருக்கிறார். எப்பொழுது மரியாதைகளின் கோட்டிலிருந்து எண்ணம், சொல் மற்றும் காரியத்தின் மூலம் வெளியே சென்று விடுகிறாரோ அப்பொழுது கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஒவ்வொரு அடிக்காக பாப்தாதா மூலம் மரியாதைகள் கிடைத்திருக்கின்றன - அதன் பிரகாரமே ஒவ்வொரு அடியும் எடுத்து வைப்பதினால் இயல்பாகவே மரியாதை புருஷோத்தமர் ஆகிவிடுகிறார். அமிர்தவேளையில் தொடங்கி இரவு வரையான விதிமுறைகளை, மரியாதைப் பூர்வம் நிறைந்த வாழ்க்கையை நீங்கள் நன்றாகத் தெரிந்திருக்கிறீர்கள். அதன் பிரகாரம் நடக்க வேண்டும். இது தான் புருஷோத்தமன் ஆவது. எப்பொழுது பெயரே புருஷோத்தமர் என்றால், அனைத்து சாதாரண புருஷர்களிலிருந்தும் (ஆத்மாக்களிலிருந்து) உத்தமமானவர். சிரேஷ்ட ஆத்மா என்னுடைய முதல் முக்கியமான விஷயம் நினைவு, உத்தமமாக இருக்கிறதா? என்று இதை சோதனைசெய்யுங்கள். நினைவு உத்தமமாக இருக்கிறது என்றால், உள்உணர்வு மற்றும் பார்வை, மனநிலை இயல்பாகவே சிரேஷ்டமாக இருக்கும். நினைவின் மரியாதைக் கோட்டை தெரிந்திருக்கிறீர்களா? நானும் சிரேஷ்ட ஆத்மா மேலும் அனைவரும் ஒரு சிரேஷ்ட தந்தையின் ஆத்மாக்கள். விதவிதமான ஆத்மாக்கள், விதவிதமான பங்கைச் செய்பவர்கள். இந்த முதல் பாடம் இயற்கையான ரூபத்தில் நினைவு சொரூபத்தில் இருக்க வேண்டும். தேகத்தைப் பார்த்துக் கொண்டும் ஆத்மாவைப் பார்க்க வேண்டும். இந்த சக்திசாலியான நினைவு ஒவ்வொரு விநாடியும் சொரூபத்தில் வர வேண்டும், நினைவு சொரூபம் ஆகிவிட வேண்டும். நானும் ஆத்மா, இவரும் ஆத்மா என்று நினைவில் மட்டும் இருந்தால் போதாது. ஆனால் நானும் ஆத்மாவே தான், இவரும் ஆத்மாவே தான். இந்த முதல் நினைவின் மரியாதை

தன்னை எப்பொழுதும் தடையற்றவராக ஆக்குகிறது மேலும் மற்றவர்களுக்கும் இந்த சிரேஷ்ட நினைவின் சக்தி நிறைந்த வைப்ரேஷனைப் பரப்புவதற்கு பொறுப்பாளர் ஆகிவிடுகிறேன், அதன் மூலம் மற்றவர்களும் தடையற்றவர் ஆகிவிடுகிறார்கள்.

பாண்டவ சேனை சந்திப்பை செய்வதற்கோ வந்திருக்கிறார்கள். ஆனால் சந்திப்பின் கூடவே முதலில் மரியாதையின் கோட்டின் அஸ்திவாரமாகிய 'நினைவில் இருப்பவராக ஆகுக' என்ற வரதானத்தையும் எப்பொழுதும் உடன் எடுத்துச் செல்லுங்கள். 'நினைவில் இருப்பவராக ஆகுக' என்பது தான் சக்திசாலி ஆகுக என்பதாகும். என்னென்ன கேட்டிருக்கிறீர்களோ அதன் சாரமாக என்ன எடுத்துச் செல்வீர்கள்? சாரம் நினைவிருப்பவராக ஆகுக. இதே வரதானத்தை எப்பொழுதும் அமிர்தவேளையில் மீண்டும் மீண்டும் நினைவு செய்யுங்கள். ஒவ்வொரு காரியம் செய்வதற்கு முன்பும் இந்த வரதானத்தின் சக்திசாலியான நிலையின் ஆசனத்தில் அமர்ந்து இது வீணானதா அல்லது பயனுள்ளதா என்று நிர்ணயம் செய்து பிறகு காரியத்தில் வர வேண்டும். காரியம் செய்த பிறகும், செய்த காரியத்தின் தொடக்க நேரத்திலிருந்து இறுதி நேரம் வரை சக்திசாலியாக இருந்ததா என்று சோதனைசெய்யுங்கள். இல்லை என்றால் அனேக குழந்தைகள் காரியத்தின் தொடக்க நேரத்தில் சக்திசாலியான சொரூபத்தோடு தொடங்குகிறார்கள். ஆனால் இடையில் சக்தியின் நடுவே வீணானது மற்றும் சாதாரண காரியமாக எப்படி ஆகிவிட்டது. சக்திசாலிக்குப் பதிலாக வீணானதின் வரிசையில் எப்படி மற்றும் எந்த நேரம் சென்றேன் என்ற இது தெரிவதில்லை. பிறகு இறுதியில் எப்படி செய்ய வேண்டியதாக இருந்ததோ அப்படி செய்யவில்லை என்று யோசிக்கிறார்கள். ஆனால் முடிவாக என்ன ஆனது. செய்த பிறகு யோசிப்பது திரிகாலதரிசி ஆத்மாக்களின் லட்சணம் இல்லை. எனவே மூன்று காலங்களின் நினைவில் இருப்பவராக ஆகுக மற்றும் சக்திசாலியாக ஆகுக. என்ன எடுத்துச் செல்ல வேண்டும் என்று புரிந்ததா? சக்திசாலியான நிலையின் ஆசனத்தையும் ஒருபொழுதும் விடக்கூடாது. இந்த ஆசனம் தான் ஹன்ஸ் ஆசனம் அதாவது அன்னப் பறவையின் ஆசனம். அன்னப்பறவையிடம் நிர்ணய சக்தியின் விசேஷம் இருக்கிறது. நிர்ணய சக்தி மூலமாக எப்பொழுதுமே மரியாதா புருஷோத்தமன் நிலையில் முன்னேறிச் சென்று கொண்டே இருப்பீர்கள். இந்த 'ஆசனம்' மற்றும் இந்த 'மரியாதா புருஷோத்தமன்' என்ற ஈஸ்வரிய பட்டம் எப்பொழுதுமே உங்கள் கூடவே இருக்கட்டும். நல்லது - இன்றோ வாழ்த்துக்கள் மட்டும் தெரிவிப்பதற்கான நாள். சேவைக்காக சென்று கொண்டிருக்கிறீர்கள் என்றால் வாழ்த்துக்கள் கூறுவதற்கான நாள் தான் இல்லையா? குடும்பத்து வீட்டிற்குச் சென்று கொண்டிருக்கவில்லை. ஆனால் சேவை ஸ்தானத்திற்குச் சென்று கொண்டிருக்கிறீர்கள். கொக்குகளின் மத்தியில் சென்று கொண்டிருக்கிறீர்கள். ஆனால் சேவைக்காகச் சென்று கொண்டிருக்கிறீர்கள். கர்ம பந்தனம் என்று நினைத்து செல்லாதீர்கள். ஆனால் சேவைக்கான

சம்மந்தம். கர்ம பந்தனத்தை முடிப்பதற்காக அமர்ந்து கொண்டிருக்கவில்லை. ஆனால் சேவையின் சம்மந்தத்தை வைத்து நடந்து கொள்வதற்காக அமர்ந்திருக்கிறீர்கள். இது கர்ம பந்தனம் இல்லை. ஆனால் சேவைக்கான பந்தனம். நல்லது.

எப்பொழுதும் வீணானதை முடிவுகட்டி சக்தசாலி நிலையின் ஹன்ஸ் ஆசனத்தின் நிலையில் இருக்கக்கூடிய, ஒவ்வொரு காரியத்தையும் மூன்று காலங்களையும் தெரிந்த சக்தி மூலம், மூன்று காலங்களையும் சக்திசாலியாக ஆக்கக்கூடிய, எப்பொழுதும் இயல்பாக ஆத்மீக நிலையில் நிலைத்திருக்கக்கூடிய அந்த மாதிரி மரியாதா புருஷோத்தம சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

### பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு

1) எப்பொழுதும் தன்னை சிரேஷ்ட பாக்கியவான் என்று அனுபவம் செய்கிறீர்களா? யாருடைய தந்தையே பாக்கியத்தை உருவாக்குபவராக இருக்கிறார் என்றால் அவர் எவ்வளவு பாக்கியவானாக இருப்பார். பாக்கியத்தை உருவாக்குபவர் தந்தை என்றால் அவர் ஆஸ்தியில் என்ன கொடுப்பார்? அவசியம் சிரேஷ்ட பாக்கியம் தான் கொடுப்பார் இல்லையா? எப்பொழுதும் பாக்கியத்தை உருவாக்கும் தந்தை மற்றும் பாக்கியம் இரண்டுமே நினைவில் இருக்க வேண்டும். எப்பொழுது தன்னுடைய சிரேஷ்ட பாக்கியம் நினைவில் இருக்குமோ அப்பொழுது மற்றவர்களையும் பாக்கியவானாக ஆக்குவதற்கான ஊக்கம் உற்சாகம் இருக்கும். ஏனென்றால் நீங்கள் வள்ளலின் குழந்தைகள். பாக்கியத்தை உருவாக்கும் தந்தை பிரம்மா மூலமாக அனைவருக்கும் பாக்கியத்தை வழங்கினார் என்றால், நீங்கள் பிராமணர்களும் என்ன செய்வீர்கள். எது பிரம்மாவின் காரியமோ அதுவே பிராமணர்களின் காரியம். அந்த மாதிரி நீங்கள் அனைவருக்கும் பாக்கியத்தை வழங்குபவர்கள். வெளி உலக மனிதர்கள் துணிகள் வழங்குவார்கள், உணவு பொருட்கள் வழங்குவார்கள், தண்ணீர் வழங்குவார்கள். ஆனால் சிரேஷ்ட பாக்கியத்தையோ பாக்கியத்தை உருவாக்குபவரின் குழந்தைகள் தான் வழங்க முடியும். அந்த மாதிரி நீங்கள் பாக்கியத்தை வழங்கக்கூடிய சிரேஷ்ட பாக்கியவான் ஆத்மாக்கள் யாருக்கு பாக்கியம் கிடைத்திருக்கிறதோ அவருக்கு அனைத்தும் பிராப்தி ஆகியிருக்கிறது. பொதுவாக ஒருவேளை இன்று யாருக்காவது துணி வழங்கினீர்கள் என்றால், நாளை உணவு பொருட்களும் குறைவாக ஆகிவிடும், நாளை உணவு பொருட்கள் கொடுத்தீர்கள் என்றால், குடிக்கும் தண்ணீரும் குறைவாக ஆகிவிடும். இவ்வாறு ஒவ்வொரு பொருளையும் எதுவரை கொடுத்துக் கொண்டே இருப்பீர்கள். அதன் மூலம் திருப்தியாக முடியாது. ஆனால் ஒருவேளை பாக்கியத்தை வழங்கினீர்கள் என்றால் எங்கு பாக்கியம் இருக்கிறதோ அங்கு

அனைத்தும் இருக்கிறது. பொதுவாக யாருக்காவது ஏதாவது பிராப்தி ஆகிவிடுகிறது என்றால் ஆஹா! என்னுடைய பாக்கியமே! என்று கூறுவார்கள். எங்கு பாக்கியம் இருக்கிறதோ அங்கு அனைத்து பிராப்தியும் இருக்கிறது. அப்படி நீங்கள் அனைவரும் சிரேஷ்ட பாக்கியத்தை தானம் செய்பவர்கள். நீங்கள் அந்த மாதிரி சிரேஷ்ட பெரும் வள்ளல்கள், சிரேஷ்ட பாக்கியவான்கள். இதே நினைவு எப்பொழுதும் பறக்கும் கலையில் எடுத்துச் செல்லும். எங்கு சிரேஷ்ட பாக்கியத்தின் நினைவு இருக்குமோ அங்கு அனைத்து பிராப்தியின் நினைவு இருக்கும். இந்த பாக்கியத்தை வழங்குவதில் பரந்த மனம் உடையவர் ஆகுங்கள். இங்கோ அனைத்தும் அளவற்றது உள்ளது. எப்பொழுது குறைவாக இருக்குமோ அப்போது கஞ்சத்தனம் வர முடியும். ஆனால் இதுவோ குறைவற்றது. எனவே வழங்கிக் கொண்டே இருங்கள். எப்பொழுதும் கொடுத்துக் கொண்டே இருங்கள், ஒரு நாள் கூட தானம் செய்யாமல் இருக்காதீர்கள். நிரந்தரமான வள்ளல் எந்த நேரமும் தன்னுடைய கஜானாவை திறந்து வைத்திருப்பார்கள். ஒரு மணி நேரம் கூட தானம் செய்வதை நிறுத்துவதில்லை. பிராமணர்களின் வேலையே எப்பொழுதும் வித்யா (கல்வி) பெறுவது மற்றும் வித்யாவை தானம் செய்வது. எனவே இதே காரியத்தில் எப்பொழுதும் முழுமையாக ஈடுபட்டு இருங்கள்.

2) எப்பொழுதும் தன்னை சங்கமயுகத்தின் வைரத்திற்குச் சமமான ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்கிறீர்களா? நீங்கள் அனைவரும் உண்மையான வைரங்கள் தான் இல்லையா? வைரத்திற்கு மிகுந்த மதிப்பு இருக்கும். உங்களுடைய பிராமண வாழ்க்கைக்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது! எனவே பிராமணர்களை எப்பொழுதும் உச்சங்குடுமி வைத்திருப்பதாக காண்பித்திருப்பார்கள். குடுமி என்றால் உயர்ந்த ஸ்தானம். பார்க்கப் போனால் தேவதைகள் தான் உயர்ந்தவர்கள். ஆனால் தேவதைகளையும் விட நீங்கள் பிராமணர்கள் உயர்ந்தவர் கள். அந்த மாதிரி போதை இருக்கிறதா? நான் தந்தையினுடையவன், தந்தை என்னுடையவர் என்ற இது தான் ஞானம் இல்லையா? இந்த ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். 'என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டேன்' என்ற இந்த பாடல் மனதில் எப்பொழுதும் ஒத்துக் கொண்டே இருக்கட்டும். வாய்மூலம் பாடும் பாடலை ஒரு மணி நேரம் பாடினால் கூட களைப்படைந்து விடுவீர்கள். ஆனால் இந்தப் பாடல் பாடுவதில் களைப்பு ஏற்படாது. தந்தையின் குழந்தை ஆவதினால் அனைத்துமாக ஆகிவிடுகிறீர்கள், நடனம் ஆடுபவராகவும், பாடல் பாடுபவராகவும், ஓவியராகவும் ஆகிவிடுகிறீர்கள். நடைமுறையில் தன்னுடைய ஃபரிஷ்தாவின் சித்திரத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். புத்தியின் நினைவு மூலமாக எவ்வளவு நல்ல சித்திரத்தை உருவாக்கி விடுகிறீர்கள்! அப்படி நீங்கள் என்ன கூறுகிறீர்களோ அவை அனைத்தும் நடக்கட்டும். மிகப்பெரிய வியாபாரியாகவும் இருக்கிறீர்கள். பல ஆலைகளுக்கு உரிமையாளர்களாகவும் இருக்கிறீர்கள். எனவே எப்பொழுதும் தன்னுடைய

இந்த பதவியையும் நினைவில் வையுங்கள். சில நேரம் சுரங்கத்தின் எஜமானன் ஆகிவிடுகிறீர்கள் என்றால் சில நேரம் ஓவியர் ஆகிவிடுங்கள், சில நேரம் நடனம் ஆடுபவர் ஆகிவிடுங்கள்... மிக ரமணீகரமான ஞானம், வரண்டது அல்ல. சிலர் என்ன தினசரி அதே ஆத்மா பரமாத்மாவின் ஞானத்தையே கேட்டுக் கொண்டே இருக்க வேண்டுமா என்று கூறுகிறார்கள், ஆனால் இந்த ஆத்மா, பரமாத்மாவின் ஞானம் வரண்ட ஞானம் அல்ல. மிகவும் ரமணீகரமான ஞானம், தினசரி தன்னுடைய புதுப்புது பட்டங்களை மட்டும் நினைவில் வையுங்கள். நான் ஆத்மா தான், ஆனால் எந்த மாதிரியான ஆத்மா? சில நேரம் ஓவியன் என்ற ஆத்மா, சில நேரம் வியாபாரி என்ற ஆத்மா.... அந்த மாதிரி இரமணீகரத்தோடு முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். தந்தையும் இரமணீகரமானவர் தான் இல்லையா? பாருங்கள். சில நேரம் வண்ணான் ஆகிவிடுகிறார் என்றால், சில நேரம் உலகத்தைப் படைப்பவர் ஆகிவிடுகிறார். சில நேரம் பணிவான சேவகன் ஆகிவிடுகிறார்..... எப்படி தந்தை இருக்கிறாரோ அதே மாதிரி குழந்தைகள் நீங்களும் இருங்கள்.... அந்த மாதிரியே இந்த இரமணீகரமான ஞானத்தை சிந்தனை செய்து மகிழ்ச்சியாக இருங்கள்.

தற்சமயத்திற்கு ஏற்றபடி தனது மற்றும் சேவை இரண்டின் வேகத்தில் சமநிலை வேண்டும். எவ்வளவு சேவையை பெற்றிருக்கிறேனோ அதற்கான பிரதிபலனை கொடுக்கிறேனா என்று ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டும். இப்பொழுது சேவை செய்வதற்கான நேரம். எவ்வளவு முன்னேறிச் செல்வீர்களோ அந்த அளவு சேவைக்குத் தகுதியான நேரமாக ஆகிக் கொண்டே இருக்கும். ஆனால் அந்த நேரம் அனேக பிரச்சனைகளும் இருக்கும். அந்த பிரச்சனைகளில் சேவை செய்வதற்காக இப்பொழுதிலிருந்தே சேவைக்கான பயிற்சி வேண்டும். அந்த நேரம் வந்து போவது கூட கடினமாக இருக்கும். மனசக்தி மூலமாகத் தான் முன்னேற்றம் அடைய வைக்கும் சேவை செய்ய வேண்டியதாக இருக்கும். அது கொடுப்பதற்கான நேரமாக இருக்கும். தனக்குள் நிரப்புவதற்கான நேரமாக இருக்காது. எனவே முன்பாகவே அனைத்து சக்திகளின் கையிருப்பை நிரப்பி வைத்து விட்டேனா என்று தன்னுடைய கையிருப்பை சோதனை செய்யுங்கள். அனைத்து சக்திகள், அனைத்து குணங்கள், அனைத்து ஞானத்தின் பொக்கிஷங்கள், நினைவின் சக்திகளால் நிரம்பியிருக்க வேண்டும். எந்தவொரு பொருளின் குறை இருக்கக்கூடாது.

28-ம் தேதி அமிர்தவேளையில் பாப்தாதா சத்குருவார் (வியாழன்) தினத்திற்கான வாழ்த்துக்களை வழங்கினார் விருட்சபதி நாளுக்காக வாழ்த்துக்கள். விருட்சபதி நாள் அன்று நிரந்தரமாக பிரகஸ்பதியின் திசை நிலைத்திருக்க வேண்டும், எப்பொழுதும் இதே நினைவு

சொரூபமாக இருக்க வேண்டும். இப்பொழுதோ அனைவருமே திடமான உறுதிமொழி எடுத்திருக்கிறீர்கள் இல்லையா? குமார் குரூப் தயார் ஆகிவிட்டது என்றால், அந்த செய்தி நாலாபுறங்களிலும் நன்றாக பரவி விடும். அரசாங்கம் வரை சென்றடைந்து விடும். ஆனால் அழியாதவர்களாக இருந்தீர்கள் என்றால் தான்! ஏதாவது தலைகீழான காரியங்களைச் செய்யாதீர்கள். ஊக்கம், உற்சாகம், தைரியம் நன்றாக இருக்கிறது. எங்கு தைரியம் இருக்கிறதோ அங்கு உதவியோ இருக்கவே இருக்கிறது. சக்திகள் என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள். சக்திகள் இன்றியோ சிவனும் இல்லை. சிவன் இல்லை என்றால் சக்திகள் இல்லை, சக்திகள் இல்லை என்றால் சிவனும் இல்லை. தந்தையும் புஜங்கள் இன்றி என்ன செய்ய முடியும். அப்படியானால் முதல் புஜங்கள் யார்? ஆஹா நான் தான். நல்லது.

## பரமாத்மா அன்பில் எப்பொழுதும் ஐக்கியமாகி இருங்கள்

(அவ்யக்த மகாவாக்கியம் - தனிப்பட்டது)

பரமாத்மா அன்பின் அனுபவியாக ஆனீர்கள் என்றால், இதே அனுபவத்தின் மூலம் சகஜயோகி ஆகி, பறந்து கொண்டே இருப்பீர்கள். பரமாத்மாவின் அன்பு பறக்க வைப்பதற்கான சாதனம். மேலே பறப்பவர் ஒருபொழுதும் பூமியின் ஈர்ப்பில் வர முடியாது. எவ்வளவு தான் மாயாவின் ஈர்ப்பு இருந்தாலும், அந்த ஈர்ப்பு பறக்கும் கலையில் இருப்பவர்கள் வரை சென்றடைய முடியாது. இந்த பரமாத்மாவின் அன்பின் கயிறு மிக தொலைதூரத்தில் இருப்பவர்களையும் இழுத்து கொண்டு வந்து விடுகிறது. இது அந்த மாதிரி சுகம் நிறைந்த அன்பு. யார் இந்த அன்பில் ஒரு விநாடி மூழ்கிவிட்டால் கூட அவருடைய அனேக துக்கம் மறந்து விடும். மேலும் நிரந்தரமாக சுகத்தின் ஊஞ்சலில் ஆடத் தொடங்கிவிடுவார்கள். வாழ்க்கையில் என்ன வேண்டுமோ, ஒருவேளை அதை யாராவது கொடுத்து விட்டார் என்றால், அது தான் அன்பின் அடையாளமாக இருக்கும். தந்தைக்கு குழந்தைகள் உங்கள் மேல் அந்த அளவு அன்பு இருக்கிறது. அதன் காரணமாக வாழ்க்கையின் சுகம், சாந்தியின் அனைத்து மன விருப்பங்களை நிறைவேற்றி விடுகிறார். தந்தை சுகம் தான் கொடுக்கிறார் என்றல்ல, ஆனால் சுகக் களஞ்சியத்தின் அதிபதி ஆக்கிவிடுகிறார். கூடவே சிரேஷ்ட பாக்கியத்தின் ரேகையை போடுவதற்கான எழுதுகோலையும் கொடுக்கிறார். எவ்வளவு விரும்பிகிறீர்களோ அந்த அளவு உங்களுடைய பாக்கியத்தை நீங்கள் உருவாக்க முடியும். இது தான் பரமாத்மாவின் அன்பு. எந்தக் குழந்தைகள் பரமாத்மாவின் அன்பில் எப்பொழுதுமே ஐக்கியமாகி இருக்கிறார்களோ, அதிலேயே மூழ்கியிருக்கிறார்களோ, அவர்களுடைய பொலிவு மற்றும் ஜொலிப்பு, அனுபவங்களின் கிரணங்கள் அந்த அளவு சக்திசாலியாக இருக்கும். எந்தவொரு

பிரச்சனையும் அருகில் வருவது என்ன கண்ணெடுத்து பார்க்கக் முடியாது. அவர்களுக்கு ஒருபொழுதும் எந்தவிதமான கடின உழைப்பு இருக்க முடியாது. தந்தைக்கு குழந்தைகள் மீது அந்தளவு அன்பு இருக்கிறது. அதன் காரணமாக அமிர்தவேளையிலிருந்தே குழந்தைகளை பாலனை செய்கிறார். நாளின் தொடக்கமே எவ்வளவு சிரேஷ்டமானதாக இருக்கிறது. சுயம் பகவான் சந்திப்பதற்காக அழைக்கிறார். ஆன்மீக உரையாடல் செய்கிறார், சக்திகளை நிரப்புகிறார். தந்தையின் அன்பு நிறைந்த பாடல் உங்களை எழுப்புகிறது. எவ்வளவு அன்புடன் அழைக்கிறார், எழுப்பிவிடுகிறார் - இனிமையான குழந்தைகளே, அன்பான குழந்தைகளே வாருங்கள் . . . என்று. அந்த மாதிரி இந்த அன்பின் பாலனையின் நடைமுறை சொரூபம் 'சகஜயோகி வாழ்க்கை'. யார் மீது அன்பு ஏற்படுகிறதோ அவருக்கு என்ன பிடிக்குமோ அதைத் தான் செய்வார்கள். தந்தைக்கு குழந்தைகள் நிலைகுலைந்து போவது பிடிக்கவில்லை. எனவே ஒருபொழுதும் என்ன செய்வது, விஷயமே அப்படிப்பட்டது எனவே நிலைகுலைந்து போய் விட்டேன் என்று கூறாதீர்கள். ஒருவேளை நிலைகுலையச் செய்யக் கூடியது, வருகிறது என்றாலும், நீங்கள் நிலைகுலைந்த நிலைக்கு வராதீர்கள். பாப்தாதாவிற்கு குழந்தைகள் மீது அந்த அளவிற்கு அன்பு இருக்கிறது. எனவே ஒவ்வொரு குழந்தையும் தன்னை விட முன்னுக்குச் செல்ல வேண்டும் என்றே அவர் நினைக்கிறார். உலகத்தில் கூட யார் மீது அதிக அன்பு இருக்குமோ அவரை தன்னையும் விட அதிகம் முன்னேறச் செய்வார்கள். இது தான் அன்பின் அடையாளம். அந்த மாதிரி பாப்தாதாவும் என்னுடைய குழந்தைகளிடம் இப்பொழுது எந்தக் குறையும் இருக்கலாகாது. அனைவரும் சம்பூர்ணமாக, சம்பன்னமாக மற்றும் சமமாக ஆகிவிட வேண்டும் என்று கூறுகிறார்.

பரமாத்மாவின் அன்பு ஆனந்தம் நிறைந்த ஊஞ்சல். இந்த சுகம் நிறைந்த ஊஞ்சலில் ஆடிக் கொண்டே எப்பொழுதும் பரமாத்மாவின் அன்பிலேயே ஐக்கியமாகி இருந்தீர்கள் என்றால், ஒருபொழுதும் ஏதாவது சூழ்நிலையின் மற்றும் மாயாவின் குழப்பமும் வர முடியாது. பரமாத்மாவின் அன்பு குறைவற்றது, துண்டிக்கப்படாத உறுதியானது, அந்த அளவு இருக்கிறது அதை அனைவரும் பிராப்தி செய்ய முடியும். ஆனால் பரமாத்மாவின் அன்பை பிராப்தி செய்வதற்கான விதி விலகியிருப்பவராக ஆவது. யார் எந்த அளவு விலகியிருக்கிறாரோ அந்த அளவு அவர் பரமாத்மா அன்பிற்கு உரியவர் ஆகிறார். பரமாத்மாவின் அன்பில் மூழ்கியிருக்கும் ஆத்மாக்கள் ஒருபொழுதும் எல்லைக்குட்பட்ட பிரபாவத்தில் வர முடியாது. எப்பொழுதும் அளவற்ற பிராப்திகளில் மூழ்கியிருப்பார்கள். அவரிடம் இருந்து எப்பொழுதும் ஆன்மீக நறுமணம் எப்பொழுதும் வரும். அன்பின் அடையாளம் - யார் மீது அன்பு ஏற்படுகிறதோ அவர் மீது அனைத்தையும் பலியாக்கி விடு வார்கள். தந்தைக்கு குழந்தைகள் மீது அந்தளவு அன்பு

இருக்கிறது அதனால் அந்த அன்பிற்கு பதிலாக தினசரி இவ்வளவு பெரிய கடிதம் எழுதுகிறார் அன்பு நினைவு கூறுகிறார் மற்றும் துணைவனாகி எப்பொழுது துணையைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். எனவே இந்த அன்பில் அனைத்து பலஹீனங்களை பலியாக்கி விடுங்கள். குழந்தைகள் மீது தந்தைக்கு அன்பு இருக்கிறது, எனவே தான் குழந்தைகள் என்னவாக இருக்கிறார்கள் மற்றும் எப்படி இருக்கிறார்கள் அப்படியே அவர்கள் என்னுடைய குழந்தைகள் என்று கூறுகிறார். அதே போல் நீங்களும் எப்பொழுதும் அன்பில் ஐக்கியமாகி இருந்து பாபா நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ, அனைத்துமே நீங்கள் தான் என்று உள்ளப்பூர்வமாகக் கூறுங்கள். ஒருபொழுதும் அசத்திய இராஜ்யத்தின் பிரபாவத்தில் வராதீர்கள். யார் அன்பிற்குரியவரோ அவரை நினைவு செய்வதில்லை, அவருடைய நினைவு இயல்பாகவே இருக்கும். அன்பு உள்ளத்தின் அன்பாக இருக்க வேண்டும், உண்மையானதாக மற்றும் சுயநலமற்றதாக இருக்க வேண்டும். எப்பொழுது என்னுடைய பாபா, அன்பான பாபா என்று கூறுகிறீர்களோ அப்பொழுது அன்பிற்குரியவர்களை ஒருபொழுதும் மறக்க முடியாது. மேலும் சுயநலமற்ற அன்பு தந்தையைத் தவிர வேறு எந்த ஆத்மாவிடமிருந்து கிடைக்க முடியாது. எனவே ஒருபொழுதும் எந்தவொரு தேவைக்காக நினைவு செய்யாதீர்கள். சுயநலமற்ற அன்பில் மூழ்கிவிடுங்கள்.

தொடக்க நேரம், அமிர்தவேளையில் தன்னுடைய இதயத்தில் பரமாத்மாவின் அன்பை சம்பூர்ண ரூபத்தில் நிரப்பி விடுங்கள். ஒருவேளை இதயத்தில் பரமாத்மாவின் அன்பு, பரமாத்மா சக்திகள், பரமாத்மாவின் ஞானம் முழுமையாக இருக்கிறது என்றால், ஒருபொழுதும் வேறு எந்தப் பக்கமும் பற்றுதலோ அல்லது அன்போ செல்ல முடியாது. இந்த பரமாத்மாவின் அன்பு இந்த ஒரு ஜென்மத்தில் மட்டும் தான் பிராப்தி ஆகிறது. 83 ஜென்மங்கள் தேவ ஆத்மாக்கள் மற்றும் சாதாரண ஆத்மாக்கள் மூலமாக அன்பு கிடைத்தது, இப்பொழுது தான் பரமாத்மாவின் அன்பு கிடைக்கிறது. அந்த ஆத்மாவின் அன்பு இராஜ்ய பாக்கியத்தை இழக்க வைத்து விடுகிறது. மேலும் பரமாத்மாவின் அன்பு இராஜ்ய பாக்கியத்தைக் கொடுக்கிறது. எனவே இந்த அன்பின் அனுபவங்களில் மூழ்கியிருங்கள். தந்தை மீது உண்மையான அன்பு இருக்கிறது என்றால் அந்த அன்பின் அடையாளம் - சமமானவராக, கர்மாதீத் ஆக ஆகுங்கள். 'செய்விப்பவர்' ஆகி காரியங்கள் செய்யுங்கள் மற்றும் செய்வியுங்கள். கர்ம இந்திரியங்கள் உங்களை செய்விக்கக்கூடாது. ஆனால் நீங்கள் கர்ம இந்திரியங்கள் மூலமாக செய்வியுங்கள். ஒருபொழுதும் மனம், புத்தி மற்றும் சம்ஸ்காரத்தின் வசமாகி, எந்தவொரு காரியத்தையும் செய்யாதீர்கள். நல்லது.

வரதானம் :

செய்விப்பவரின் நினைவு மூலம் மிகப்பெரிய காரியத்தை மிகச் சுலபமாகச் செய்யக்கூடிய கருவியாகி செய்பவர் ஆகுக.

பாப்தாதா ஸ்தாபனையின் மிகப்பெரிய காரியத்தை தானே செய்விப்பவர் ஆகி கருவியாக இருக்கும். செய்பவர்கள் குழந்தைகள் மூலமாக செய்வித்துக் கொண்டிருக்கிறார். செய்பவர் - செய்விப்பவர் என்ற வார்த்தையில் தந்தை மற்றும் குழந்தைகள் இருவருமே இணைந்து இருக்கிறார்கள். கைகள் குழந்தைகளுடைது மற்றும் செய்யும் காரியம் தந்தையினுடையது. உதவிக்கரம் நீட்டுவதற்கான பொன்னான வாய்ப்பு குழந்தைகளுக்கு மட்டும் தான் கிடைக்கிறது. ஆனால் செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார், மேலும் நாங்கள் கருவியாகி செய்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு காரியத்திலும் செய்விப்பவரின் ரூபத்தில் பாபா துணைவனாக இருக்கிறார்.

சுலோகன் :

ஞானம் நிறைந்த ஆத்மா யார் என்றால், முறையீடு செய்வதற்குப் பதிலாக திருப்தியாக இருக்கிறாரோ அவர் தான்.

ஓம்சாந்தி

## " ஆன்மீக பெர்சனாலிட்டி (தனி குணாதிசயம்) "

இன்று பாப்தாதா உலகிலுள்ள அனைத்து ஆத்மாக்களுக்கும் பிரத்யக்ஷ (வெளிப்படை) வாழ்க்கையின் எடுத்துக்காட்டாக விளங்கும் கொடுக்கக்கூடிய குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். குமாரராக இருந்தவர்கள், பிரம்மா குமார், தபஸ்வி குமார், இராஜரிஷி குமார், அனைத்து தியாகங்களினாலும் பாக்கியத்தை அடையக்கூடிய குமாராக ஆகியிருக்கும் அந்த மாதிரி சிரேஷ்ட ஆத்மாக்களின் விசேஷ சபை இன்று கூடி இருக்கிறது. குமாரர்களின் வாழ்க்கை சக்திசாலியான வாழ்க்கை என்று வர்ணிக்கப்படுகிறது. ஆனால் பிரம்மா குமார் இரட்டை சக்திசாலியான குமார். ஒன்றோ உடலின் சக்தி, இன்னொன்று ஆத்மீக சக்தி. சாதாரண குமார் உடல் சக்தி மற்றும் அழியக்கூடிய பதவியின் சக்தி உள்ளவர்களாக இருப்பார்கள். பிரம்மா குமார் அழியாத, உயர்ந்ததிலும் உயர்ந்த மாஸ்டர் சர்வசக்திவானின் பதவியின் சக்தி நிறைந்தவர். ஆத்மா தூய்மையின் சக்தி மூலம் என்ன விரும்புகிறதோ அதைச் செய்ய முடியும். பிரம்மா குமாரர்களின் சபை உலகத்தை மாற்றம் செய்பவரின் சபை. நீங்கள் அனைவரும் உங்களை அந்த மாதிரி சக்திசாலியானவர் என்று நினைக்கிறீர்களா? தன்னை தூய்மையின் பிறப்புரிமை அதிகாரத்தை பிராப்தியாக அடைந்திருக்கும் அதிகாரி ஆத்மா என்று நினைக்கிறீர்களா? பிரம்மா குமாரின் அர்த்தமே தூய்மையான குமார். பிரம்மா பாபா தெய்வீக ஜென்மத்தை கொடுத்து 'தூய்மை ஆகுக, யோகி ஆகுக' என்ற இந்த வரதானத்தைத் தான் கொடுத்தார். பிரம்மா பாபா பிறந்தவுடனேயே பெரிய அம்மாவின் ரூபத்தில் தூய்மையின் அன்பு மூலம் பாலனை செய்தார். அம்மாவின் ரூபத்தில் எப்பொழுதும் தூய்மை ஆகுங்கள், யோகி ஆகுங்கள், சிரேஷ்டம் ஆகுங்கள், தந்தைக்குச் சமமாக ஆகுங்கள், விசேஷ ஆத்மா ஆகுங்கள், அனைத்து குணங்களும் நிரம்பியவர் ஆகுங்கள், ஞான மூர்த்தியாக ஆகுங்கள்! சுகம், சாந்தி, சொரூபம் ஆகுங்கள் என்ற இந்த தாலாட்டை தான் ஒவ்வொரு நாளும் பாடினார், தந்தையின் நினைவு என்ற மடியில் பாலனைச் செய்தார். எப்பொழுதும் குஷிகளின் ஊஞ்சலில் ஆட்டினார். அந்த மாதிரி தாய் தந்தையின் சிரேஷ்ட குழந்தைகள் பிரம்மா குமாரர்கள் மற்றும் குமாரிகள். அந்த மாதிரி நினைவின் சக்திசாலியான போதைஇருக்கிறதா? பிரம்மா குமாரின் விசேஷ வாழ்க்கையின் மகத்துவத்தை எப்பொழுதும் நினைவில் வைத்திருக்கிறீர்களா? பெயர் அளவிற்கான பிரம்மா குமாராக மட்டும் நீங்கள் இல்லையே? தன்னைத் தானே சிரேஷ்ட வாழ்க்கை வாழும் பிரம்மா குமார் என்று

நினைக்கிறீர்களா? நான் உலகம் என்ற விசால மேடையில் என்னுடைய வாழ்க்கை பங்கைச் செய்யும் விசேஷ நடிகன் என்பது எப்பொழுதும் நினைவிருக்கிறதா? அல்லது வீட்டில் மட்டும் அல்லது சேவை நிலையத்தில் மட்டும் அல்லது அலுவலகத்தில் மட்டும் தன் பங்கை செய்பவரா? ஒவ்வொரு காரியம் செய்து கொண்டே உலகிலுள்ள அனைத்து ஆத்மாக்களும் என்னை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற நினைவு இருக்கிறதா? உலகிலுள்ள ஆத்மாக்கள் இவர்கள் தான் விசேஷமான பாத்திரம் ஏற்று செய்பவர்கள் அதாவது கதாநாயக பாத்திரம் செய்பவர்கள் என்று உங்களை பார்க்கின்றனர் என்றால், அதே பிரகாரம் ஒவ்வொரு காரியம் செய்து கொண்டே இருக்கிறீர்களா? அல்லது சாதாரண ரூபத்தில் எங்களுக்குள் பேசிக் கொண்டிருக்கிறோம், நடந்து கொண்டிருக்கிறோம் என்ற நினைவு இருக்கிறதா? பிரம்மா குமாரின் அர்த்தமே எப்பொழுதும் தூய்மையின் தனித்தன்மை மற்றும் ராயல்தன்மையில் இருப்பது. இதே தூய்மையின் தனித்தன்மை தான் உலகின் ஆத்மாக்களை தூய்மையின் பக்கம் கவர்ந்திழுக்கும். மேலும் இதே தூய்மையின் ராயல்தன்மை தான் தர்மராஜ்புரியில் கப்பம் கட்டுவதிலிருந்து விடுவிக்கும். ராயல்டி என்ற வார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. இதே ராயல்டியின் அனுசாரம் எதிர்காலத்து ராயல் குடும்பத்தில் வர முடியும். எனவே அந்த மாதிரி ராயல்டியை மற்றும் பெர்சனாலிட்டியை, வாழ்க்கையில் கடைபிடித்திருக்கிறேனா? இளைஞர்களின் குரூப் தன்னுடைய பெர்சனாலிட்டியை அதிகம் உருவாக்கும் இல்லையா? அப்படியானால் தன்னுடைய ஆன்மீக பெர்சனாலிட்டியை அழியாத பெர்சனாலிட்டியை வாழ்க்கையில் கடைபிடித்திருக்கிறீர்களா? யாரெல்லாம் பார்க்கிறார்களோ அவர்கள் ஒவ்வொரு பிரம்மா குமார் மற்றும் குமாரியிடம் இருந்து இந்த தனித்தன்மையை அனுபவம் செய்ய வேண்டும். உடலின் பெர்சனாலிட்டியோ ஆத்மாக்களை தேக உணர்வில் கொண்டு வருகிறது. மேலும் தூய்மையின் பெர்சனாலிட்டி ஆத்ம அபிமானியாக ஆக்கி தந்தையின் அருகில் கொண்டு வருகிறது. எனவே குமாரர்கள் குரூப்பிற்கு இப்பொழுது விசேஷமாக என்ன சேவை செய்ய வேண்டும்? முதலில் தன்னுடைய வாழ்க்கையின் மாற்றம் மூலமாக ஆத்மாக்களின் சேவை, மற்றும் அவர்களுக்கு வாழ்க்கை தானம் செய்வது. சுயமாற்றத்தின் மூலமாக பிறரையும் மாற்றம் செய்வது. பிரம்மா குமார் என்றால், உள்உணர்வு, பார்வை, காரியம் மற்றும் பேச்சு மாறிவிட்டது என்ற அனுபவத்தை செய்வியுங்கள். கூடவே தூய்மையின் பெர்சனாலிட்டியை, ஆன்மீக பெர்சனாலிட்டியையும் அனுபவம் செய்வியுங்கள். வந்ததுமே, சந்தித்ததுமே இந்த பெர்சனாலிட்டியின் பக்கம் ஈர்க்கப்பட வேண்டும். எப்பொழுதும் தந்தையின் அறிமுகம் கொடுக்கக்கூடிய மற்றும் தந்தையின் சாட்சாத்காரம் செய்விக்கக்கூடிய ஆன்மீகக் கண்ணாடி ஆகி விடுங்கள். அந்த சித்திரம் மற்றும் சரித்திரம் மூலம் அனைவருக்கும் தந்தை தான் தென்பட வேண்டும். யார் இப்படி ஆக்கினார்? ஆக்குபவர் தான் பாபா எப்பொழுதும் தென்பட வேண்டும். எப்பொழுதெல்லாம் ஏதாவது அதிசயமான பொருளை பார்க்கிறார்கள்

மற்றும் அதிசயமான மாற்றத்தைப் பார்க்கிறார்கள் என்றால், அனைவரின் மனதிலிருந்தும், வாயிலிருந்தும் யார் இப்படி ஆக்கியது? அல்லது இந்த மாற்றம் எப்படி ஆனது? என்ற இந்த வார்த்தைகள் தான் வெளியாகிறது. இதைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா! இவ்வளவு பெரிய மாற்றம் அதாவது ஒன்றுமே மதிப்பில்லாதவர் வைரத்திற்குச் சமமான மதிப்புள்ளவர் ஆகிவிட்டார் என்றால் அனைவரின் மனதில் அந்த மாதிரி மாற்றுபவரின் நினைவு இயல்பாக வரும். குமாரர்கள் குரூப் மிகவும் ஓடியாடி சேவை அதிகம் செய்வார்கள். ஆனால் சேவையின் நேரங்களில் அங்கிங்கு ஓடுவதின் கூடவே மனதின் சமநிலையையும் வைக்கிறீர்களா? சுயசேவை மேலும் மற்றவர்களின் சேவை இரண்டின் சமநிலை எப்பொழுதும் இருக்கிறதா? சமநிலை இல்லை என்றால், சேவையின் ஓட்டத்தில் மாயாவும் புத்தியை அங்கிங்கு ஓட வைத்து விடும்.

சமநிலை மூலம் அதிசயம் நடக்கும். சமநிலை வைப்பவர்களின் விளைவாக சேவையிலும் அதிசயம் நடக்கும். இல்லை என்றால் வெளிமுகமாக இருக்கும் காரணத்தினால், அதிசயத்திற்குப் பதிலாக தன்னுடைய மற்றும் மற்றவர்களின் சுபாவத்தின் மோதலில் வந்து விடுகிறீர்கள். எனவே எப்பொழுதும் அனைவரின் சேவையின் கூடவே முதலில் சுயசேவை அவசியம் ஆகும். இந்த சமநிலை எப்பொழுதும் சுயத்திலும் சேவையிலும் முன்னேற்றத்தை பிராப்தி செய்வித்துக் கொண்டே இருக்கும். குமாரர்களோ மிகுந்த அதிசயம் செய்ய முடியும். குமாரர்கள் வாழ்க்கையின் மாற்றத்தின் பிரபாவம் எந்த அளவு உலகில் உள்ளவர்கள் மேல் ஏற்படுமோ அந்த அளவு பெரியவர்களின் மாற்றத்தில் ஏற்படாது. குமாரர்கள் குரூப் அரசாங்கத்திற்கும் தங்களுடைய பரிவர்த்தனை மூலமாக பிரபுவின் அறிமுகத்தைக் கொடுக்க முடியும். அரசாங்கத்தையும் நீங்கள் எழுப்பி விட முடியும், ஆனால் அவர்கள் உங்களுக்கு பல சோதனைகள் வைப்பார்கள். அப்படியே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அந்த மாதிரி குமாரர்கள் தயாராக இருக்கிறார்களா? குப்தமாகவே (மறைவாகவே) சி.ஐ.டி இவர்கள் எந்த அளவு விகாரங்கள் மேல் வெற்றி அடைந்தவர்களாக ஆகியிருக்கிறார்கள் என்று சோதனைசெய்வார்கள். உங்கள் அனைவரின் பெயரை அரசாங்கத்திற்கு அனுப்பலாமா? 500 குமாரர்கள் ஒன்றும் குறைவானவர்கள் அல்ல. நீங்கள் அனைவரும் பதிவேட்டில் தங்களுடைய பெயர் மற்றும் விலாசத்தை நிரப்பியிருக்கிறீர்கள் தான் இல்லையா? உங்களுடைய பட்டியலை அனுப்பலாமா? அனைவரும் எந்த சி.ஐ.டி நம்மிடம் வருவார் என்று யோசிக்கிறார்கள்.அவர்கள் வேண்டுமென்றே உங்களுக்கு கோபமூட்டுவார்கள். நடைமுறையிலும் சோதிப்பார்கள் இல்லையா! நடைமுறையில் சோதிக்கப்படுவதற்குத் தயாராக இருக்கிறீர்களா? பாப்தாதாவிடம் ஆம் அல்லது இல்லை என்பது சினிமா ஃபிலிமில் பதிவது போலபதிந்து விடுகிறது. அந்த மாதிரி ஆத்மீக சக்திசாலி இளைஞர்களின் குரூப்பை தயார் செய்வோம்

என்று லட்சியம் வையுங்கள். மேலும் அந்த குரூப் ஆன்மீக இளைஞர்களின் குரூப் ஆகிய நாங்கள் உலக அமைதியின் ஸ்தாபனை காரியத்தில் எப்பொழுதும் சகயோகிகள் என்று முழு உலகத்தினருக்கும் சவால் விட வேண்டும். மேலும் இதே சகயோகம் மூலமாக உலக மாற்ற காரியத்தையும் செய்து காண்பிப்போம். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? நீங்கள் அந்த மாதிரி உறுதியான குரூப் தான் இல்லையா? இன்று சவால் விட்டீர்கள், மேலும் நாளை நீங்களே மாறி விடுகிறீர்கள் என்று அந்த மாதிரி இருக்க வேண்டாம். சமநிலையின் அதிசயத்தின் மூலம் உலகிற்கு அதிசயம் செய்து காண்பியுங்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் சுயமாற்றம் மூலமாக அனைவரையும் மாற்றம் செய்யக்கூடிய, தன்னுடைய பிறப்பு உரிமை வரதானம் மற்றும் அதிகாரம் 'யோகி ஆகுக, தூய்மை ஆகுக' என்பதை எப்பொழுதும் வாழ்க்கையில் அனுபவம் செய்விக்கக் கூடிய, எப்பொழுதும் தூய்மையின் தனித்தன்மை மூலமாக மற்ற ஆத்மாக்களை தந்தையின் பக்கம் கவர்ந்திழுக்கக்கூடிய, அழியாத பதவியின் போதையில் இருக்கக்கூடிய, தாய் தந்தையின் சிரேஷ்ட பாலனையின் பரிவர்த்தனை மூலமாக பிரதிபலனைக் கொடுக்கக்கூடிய அந்த மாதிரி ஆன்மீக இராயலான விசேஷ ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

### பார்ட்டிகளுடன் சந்திப்பு

1) எப்பொழுதும் தன்னை டபுள் லைட் அதாவது அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்டு லேசானவர் என்று நினைக்கிறீர்களா? லேசான தன்மையின் அடையாளம் என்ன? லேசாக இருப்பவர் எப்பொழுதும் பறந்து கொண்டே இருப்பார். சுமை கீழே கொண்டு வந்து விடுகிறது. எப்பொழுதும் தன்னை தந்தையிடம் ஒப்படைத்தவர்கள், எப்பொழுதும் லேசாக இருப்பார்கள். தன்னுடைய பொறுப்புகளை தந்தையிடம் கொடுத்து விடுங்கள் அதாவது சுமையை தந்தையிடம் கொடுத்து விட்டீர்கள் என்றால் நீங்கள் லேசானவர் ஆகிவிடுவீர்கள். புத்தியால் சமர்ப்பணம் ஆகிவிடுங்கள். ஒருவேளை புத்தியால் சமர்ப்பணம் ஆகிவிட்டீர்கள் என்றால் வேறு எந்த விஷயமும் புத்தியில் வராது. அனைத்தும் தந்தையினுடையது, அனைத்தும் தந்தையிடம் இருக்கிறது என்றால் வேறு எதுவுமே இல்லவே இல்லை. எப்பொழுது ஒன்றுமே இல்லை என்றால் புத்தி எங்கே செல்லும். அனைத்தும் தந்தையினுடையது, அனைத்தும் தந்தையிடம் இருக்கிறது என்றால் வேறு பாக்கி எதுவுமே இல்லை. எப்பொழுது இல்லவே இல்லை என்றால், புத்தி எங்கே செல்லும் ஏதாவது பழைய சந்து, பழைய பாதையோஇன்னும் மிச்சம் இருக்கவில்லையே? ஒரு தந்தை, அந்த ஒருவரின் நினைவின் பாதை மூலம்

லட்சியத்தை சென்றடைந்து விடுவீர்கள்.

2) எப்பொழுதும் நீங்கள் குஷி என்ற ஊஞ்சலில் ஆடுபவர்கள் தான் இல்லையா? எவ்வளவு நல்ல ஊஞ்சல் பாப்தாதாவிடமிருந்து கிடைத்திருக்கிறது. இந்த ஊஞ்சல் எப்பொழுதாவது உடைந்து போவதில்லை தான் இல்லையா? நினைவு மற்றும் சேவையின் இரண்டு கயிறுகள் இருக்கமாக இருக்கிறது என்றால், ஊஞ்சல் எப்பொழுதுமே ஒரே சீரானதாக இருக்கும். இல்லை என்றால் ஒரு கயிறு தொய்வாகவும், ஒன்று இறுக்கமாகவும் இருக்கிறது என்றால் ஊஞ்சல் நிலை தடுமாறி ஆடிக்கொண்டே இருக்கும். ஊஞ்சல் நிலை தடுமாறி ஆடுகிறது என்றால், ஊஞ்சலில் ஆடுபவரும் கீழே விழுவார். ஒருவேளை இரண்டு கயிறுகளுமே உறுதியாக இருக்கிறது என்றால், ஊஞ்சல் ஆடுவதில் மனமகிழ்ச்சி ஏற்படும். ஒருவேளை விழுந்து விட்டீர்கள் என்றால் மனமகிழ்ச்சிக்கு பதிலாக துக்கம் ஏற்பட்டு விடும். எனவே நினைவு மற்றும் சேவை என்ற இரண்டு கயிறுகளும் சமமாக இருக்கட்டும். பிறகு பாருங்கள், பிராமண வாழ்க்கையில் எவ்வளவு ஆனந்தத்தை அனுபவம் செய்கிறீர்கள் என்று. சர்வ சக்திவான் தந்தையின் துணை இருக்கிறது. குஷிகளின் ஊஞ்சல் இருக்கிறது. மேலும் வேறு என்ன தான் வேண்டும்!

3) எப்பொழுதும் தந்தை மற்றும் சேவை இரண்டையுமே நினைவில் வைக்கிறீர்கள் தான் இல்லையா?. நினைவு மற்றும் சேவை இரண்டின் சமநிலையை எப்பொழுதும் வைக்கிறீர்களா? ஏனென்றால் நினைவின்றி சேவை வெற்றி அடையாது. மேலும் சேவையின்றி மாயாவை வென்றவர் ஆக முடியாது. ஏனென்றால், சேவையில் பிஸியாக இருப்பதினால், இந்த ஞானத்தை சிந்தனை செய்வதினால் மாயா சுலபமாகவே விலகி ஒதுங்கிவிடும். நினைவின்றி சேவை செய்தீர்கள் என்றால் வெற்றி குறைவாகவும் மேலும் உழைப்பு அதிகமாகவும் இருக்கும். மேலும் நினைவிலிருந்து சேவை செய்தீர்கள் என்றால் வெற்றி அதிகமாகவும் மேலும் உழைப்பு குறைவாகவும் இருக்கும். எனவே இரண்டின் சமநிலை இருக்கிறதா? சமநிலை வைப்பவர்களுக்கு இயல்பாகவே ஆசீர்வாதம் கிடைத்துக் கொண்டே இருக்கும். கேட்க வேண்டியது இருக்காது. எந்த ஆத்மாக்களின் சேவை செய்கிறீர்களோ, அந்த ஆத்மாக்களின் மனதிலிருந்து ஆஹா இந்த ஞானத்தை சொல்லும் சிரேஷ்ட ஆத்மா ஆஹா, ஆஹா! என்னுடைய வாழ்க்கையை மாற்றி விட்டார். . . . இந்த ஆஹா, ஆஹா தான் ஆசீர்வாதம் ஆகிவிடுகிறது. அந்த மாதிரி ஆசீர்வாதத்தை அனுபவம் செய்கிறீர்களா? எந்த நாள் நினைவிலிருந்து சேவை செய்தீர்களோ அந்த நாளில் கடின உழைப்பின்றி இயற்கையான குஷி இருக்கிறது என்று அனுபவம் செய்வீர்கள். அந்த மாதிரி குஷியின் அனுபவம் இருக்கிறது

இல்லையா? இதே ஆதாரத்தில் நீங்கள் அனைவரும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு நேரமும் நம்முடைய சுய முன்னேற்றம் மற்றும் உலக முன்னேற்றம் ஆகிக் கொண்டிருக்கிறது என்று நினைக்கிறீர்களா? ஒருவேளை சுயமுன்னேற்றம் இல்லை என்றால் உலக முன்னேற்றத்திற்கும் பொறுப்பாளர் ஆக முடியாது. சுயமுன்னேற்றத்திற்கான சாதனம் நினைவு, மேலும் உலக முன்னேற்றத்திற்கான சாதனம் சேவை. எப்பொழுதும் இதிலேயே முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். சங்கமயுகத்தில் தந்தை அனைத்தையும் விட உயர்ந்த பொக்கிஷமாக என்ன கொடுத்திருக்கிறார்? குஷியின் பொக்கிஷம். எத்தனை விதமான குஷியின் பொக்கிஷம் கிடைத்திருக்கிறது. ஒருவேளை குஷியின் விதவிதமான பாய்ன்ட்டுகளை எடுத்தீர்கள் என்றால் எத்தனை விதமானதாக இருக்கும். சங்கமயுகத்தில் மிகப்பெரிய பரிசு, பொக்கிஷம், பிக்னிக்கிற்கான சாமான். . . அனைத்தும் குஷி தான். தினசரி அமிர்தவேளையில் குஷிக்கான ஒரு விஷயத்தை யோசியுங்கள். . . பிறகு முழு நாளும் குஷியில் இருப்பீர்கள். சில குழந்தைகள் முரளியிலோ தினசரி அதே பாய்ன்ட் தான் வருகிறது என்று கூறுகிறார்கள், ஆனால் எந்த பாய்ன்ட் உறுதியாகவில்லையோ அதை உறுதியாக்குவதற்காக தினசரி கூற வேண்டியதாக இருக்கிறது. எப்படி பள்ளியில் மாணவர்கள் ஏதாவது ஒரு விஷயத்தை உறுதியாக நினைவில் வைக்க முடியவில்லை என்றால், அதாவது மனப்பாடம் செய்ய முடியவில்லை என்றால் 50 தடவைகள் அதே விஷயத்தை எழுதுவார்கள். பாப்தாதாவும் குழந்தைகளே உங்களை ஆத்மா என்று புரிந்து என்னை நினைவு செய்யுங்கள் என்று தினசரி கூறுகிறார். ஏனென்றால், இந்த விஷயம் இதுவரையிலும் உறுதியாகவில்லை. எனவே தினசரி குஷிக்கான புதுப்புது பாய்ன்ட்களை புத்தியில் வையுங்கள். மேலும் முழு நாளும் குஷியில் இருந்து கொண்டே மற்றவர்களுக்கும் குஷியின் தானம் செய்து கொண்டே இருங்கள். இது தான் அனைத்தையும் விட மிகப் பெரிய தானம். உலகத்தில் அனேக சாதனங்கள் இருந்த போதிலும் மனதில் உண்மையான அழியாத குஷி இல்லை. உங்களிடம் அந்த குஷி தான் இருக்கிறது என்றால் குஷியின் தானம் செய்து கொண்டே இருங்கள்.

4) எப்பொழுதும் தன்னை தாமரை மலருக்குச் சமமாக பழைய உலகத்தின் சூழ்நிலையில் இருந்து விலகிய மற்றும் ஒரு தந்தைக்குப் பிரியமானவராக அனுபவம் செய்கிறீர்களா? யார் விலகியிருக்கிறாரோ அவர் தான் அன்பானவர், மேலும் யார் அன்பாக இருக்கிறாரோ அவர் தான் விலகியிருக்கிறார். எனவே தாமரை மலருக்குச் சமமாக இருக்கிறீர்களா அல்லது சூழ்நிலையில் இருந்து கொண்டு அதன் பிரபாவத்தில் வந்து விடுகிறீர்களா? எங்கிருந்தாலும் எந்த பங்கை செய்து கொண்டிருந்தாலும் அந்த பங்கை செய்து கொண்டே அதிலிருந்து விலகியிருக்கிறீர்களா அல்லது அந்த பங்கின் பிரியமானவர் ஆகிவிடுகிறீர்களா, என்ன

நடக்கிறது. சில நேரம் யோகாசெய்ய முடிகிறது, சில நேரம் யோகாசெய்ய முடிவதில்லை, இதற்கும் என்ன காரணம்? விலகியிருக்கும் நிலையில் குறை இருக்கிறது. விலகியில்லாத காரணத்தினால் அன்பின் அனுபவம் ஆவதில்லை. எங்கு அன்பு இல்லையோ அங்கு நினைவு எப்படி வரும்? எவ்வளவு அதிக அன்பு இருக்கிறதோ அவ்வளவு அதிக நினைவு இருக்கும். தந்தையின் அன்பிற்குரியவருக்குப் பதிலாக மற்றவர்களின் அன்பிற்குரியவர்களாக ஆகிவிடுகிறீர்கள் என்றால், தந்தையை மறந்து விடுகிறீர்கள். செய்யும் பங்கிலிருந்து விலகியிருப்பவராக மற்றும் தந்தையின் பிரியமானவராக ஆகுங்கள். இதே லட்சியமாகவும் நடைமுறை வாழ்க்கையாகவும் இருக்கட்டும். உலகியல் வாழ்க்கையில் தன்னுடைய வாழ்க்கை பங்கை செய்து கொண்டே அன்பானவர்கள் ஆகினீர்கள் என்றால், அன்பின் பிரதிபலனாக என்ன கிடைத்தது? முட்களின் படுக்கை தான் கிடைத்தது. தந்தையின் அன்பில் இருப்பதினால் ஒரு நொடியில் என்ன கிடைக்கிறது? அனேக ஜென்மங்களின் அதிகாரம் கிடைத்து விடுகிறது. எனவே எப்பொழுதும் தனது பங்கை செய்து கொண்டே விலகியிருப்பவராக ஆகுங்கள். சேவையின் காரணமாக பங்கை செய்து கொண்டிருக்கிறீர்கள். சம்மந்தத்தின் ஆதாரத்தில் பங்கு இல்லை, சேவையின் சம்மந்தத்தினால் பங்கு இருக்கிறது. தேகத்தின் சம்மந்தத்தில் இருப்பதினால் நஷ்டம் ஏற்படுகிறது, சேவையின் பங்கு என்று புரிந்து செய்து கொண்டிருந்தீர்கள் என்றால் விலகியிருப்பவராக இருப்பீர்கள். ஒருவேளை அன்பு இரண்டு பக்கமும் இருக்கிறது என்றால் ஒரே சீரான நிலையின் அனுபவம் ஆக முடியாது.

வரதானம் :

அப்பியாசத்தின் பயிற்சி மூலமாக சூட்சும சக்திகளை வாழ்க்கையில் நிரப்பக்கூடிய சக்தி நிரம்பியவர் ஆகுக.

பிரம்மா தாய்க்கு குழந்தைகள் மேல் ஆன்மீக பாசம் இருக்கிறது, எனவே சூட்சும அன்பின் ஆவஹானம் மூலம் குழந்தைகளின் விசேஷ குரூப்பை சூட்சும வதனத்தில் எமர்ஜ் செய்து(வெளிப்படுத்தி) சக்திகளின் டானிக்கை அருந்தக் கொடுக்கிறார். எப்படி இங்கேயும் நெய் குடிக்கக் கொடுத்தார், மேலும் கூடவே உடற்பயிற்சியும் செய்வித்தார். அதே போல் சூட்சும வதனத்திலும் நெய் குடிக்க வைத்து அதாவது சூட்சும சக்திகளின் பொருட்களைக் கொடுத்து அப்பியாசத்தின் பயிற்சியையும் செய்விக்கிறார். மூன்று உலகங்களின் ஓட்டப் பந்தயமும் செய்விக்கிறார். அதன் மூலம் விசேஷ உபசரிப்பு வாழ்க்கையில் நிரம்பி அனைத்து குழந்தைகளும் சக்தி நிரம்பியவர் ஆகிவிட வேண்டும்.

சுலோகன் –

சுயமரியாதையில் நிலைத்திருக்கும் ஆத்மா மற்றவர்களுக்கும் மரியாதை கொடுத்து முன்னேறச் செய்விக்கும்.

ஓம்சாந்தி

27.04.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" திருஷ்டி (பார்வை) விருத்தியை (உள்உணர்வை) மாற்றம் செய்வதற்கான வழிகள் "

இன்று பாப்தாதா அனைத்து முயற்சி செய்பவர்களின் (புருஷாரத்திகள்) சபையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். முயற்சி செய்பவர் (புருஷாரத்தி) என்ற இதே வார்த்தையில் முழு ஞானமும் அடங்கி இருக்கிறது. புருஷாரத்தி என்றால் புருஷ் மற்றும் ரத்தி. எதன் ரத்தி? எதன் புருஷ்? இந்த இயற்கையின் (உடலின்) எஜமானன் அதாவது ரதத்தின் ரத்தி. இந்த ஒரு வார்த்தையின் அர்த்தத்தின் சொரூபத்தில் நிலைத்திலிருந்து விட்டீர்கள் என்றால் என்னவாகும்? அனைத்து பலஹீனங்களையும் சுலபமாகக் கடந்து வந்து விடுவீர்கள். புருஷ் (ஆத்மா) இயற்கையின் (உடலின்) அதிகாரிதானேயன்றி அடிமை அல்ல. ரத்தி (சாரதி) ரதத்தை ஓட்டுபவர், ரதத்தின் அடிமையாகி நடந்து கொள்பவர் இல்லை. அதிகாரி எப்பொழுதும் சர்வ சக்திவான் தந்தையின் அனைத்து சக்திகளின் அதிகாரி அதாவது ஆஸ்தியின் அதிகாரி அல்லது உரிமையுள்ளவர். அனைத்து சக்திகளும் தந்தையின் சொத்து, அந்த சொத்திற்கு உரிமையுள்ளவர்கள் ஒவ்வொரு குழந்தையும். இந்த அனைத்து சக்திகளின் இராஜ்ய பாக்கியத்தை பாப்தாதா அனைவருக்கும் பிறப்புரிமையின் ரூபத்தில் கொடுக்கிறார். பிறந்தவுடனேயே இந்த சுயராஜ்யத்தின் அனைத்து சக்திகளின், அதிகாரி சொரூபத்தின் நினைவின் திலகம் மற்றும் தந்தையின் அன்பில் மூழ்கியிருக்கும் சொரூபத்தின் ரூபத்தில் இதயசிம்மாசனத்தை அனைவருக்கும் பிறந்தவுடனேயே கொடுத்திருக்கிறோம். பிறந்தவுடனேயே உலக நன்மை செய்வதற்கான சேவையின் கிரீடத்தை ஒவ்வொரு குழந்தைக்கும் கொடுத்திருக்கிறோம். அந்த மாதிரி பிறப்பின் அதிகாரத்தின் ஆசனம், திலகம், கிரீடம் மற்றும் இராஜ்யம், அனைவருக்கும் கிடைத்திருக்கிறது தான் இல்லையா? அந்த மாதிரி நான்கு பிராப்திகளின் பிராப்தி சொரூப ஆத்மாக்கள் பலஹீனமாக ஆக முடியுமா? இந்த நான்கு பிராப்திகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியாதா என்ன? சில நேரம் திலகம் அழிந்து விடுகிறது, சில நேரம் ஆசனம் அகன்று விடுகிறது, சில நேரம் கிரீடத்திற்கு பதிலாக சுமையை தூக்கி விடுகிறார்கள். வீணானவை என்ற குப்பையின் கூடையைத் தூக்கி விடுகிறீர்கள். பெயர் சுயராஜ்யம், ஆனால் சுயம் அவரே இராஜாவிற்குப் பதிலாக அடிமையான பிரஜை ஆகிவிடுகிறார். அந்த மாதிரி விளையாட்டை ஏன் விளையாடுகிறீர்கள்? ஒருவேளை அந்த மாதிரியே விளையாடிக் கொண்டே இருந்தீர்கள் என்றால நிரந்தரமான இராஜ்ய பாக்கியத்தின் சம்ஸ்காரம் அழியாததாக எப்பொழுது ஆகும். ஒருவேளை இந்த மாதிரி விளையாடிக்

கொண்டே இருந்தீர்கள் என்றால் என்ன பிராப்தி ஆகும். யார் தன்னுடைய தொடக்க காலத்து சம்ஸ்காரத்தை அழியாததாக ஆக்க முடியவில்லையோ அவர் தொடக்க காலத்தின் இராஜ்ய அதிகாரியாக எப்படி ஆவார்? ஒருவேளை வெகுகாலத்தின் யுத்தம் செய்வதின் சம்ஸ்காரமே இருக்கிறது, அதாவது யுத்தம் செய்து செய்தே காலத்தை கடத்தினால் அதாவது இன்று வெற்றி நாளை தோல்வி, இப்பொழுது வெற்றி அடுத்த நேரம் தோல்வி. நிரந்தரமான வெற்றி அடைவதின் சம்ஸ்காரம் இல்லை என்றால், அவரை சத்திரியன் என்று கூறுவோமா அல்லது பிராமணன் என்றா? பிராமணனாக இருப்பவரே தேவதை ஆகிறார். சத்திரியனோ பிறகு அங்கு சென்று சத்திரியனாகவே தான் ஆவார். தேவதையின் அடையாளம் மற்றும் சத்திரியனின் அடையாளத்தில் வித்தியாசம் என்ன என்று பாருங்கள். நினைவு சின்ன படங்களிலும் அவருக்கு வில், அம்பு கொடுத்திருக்கிறார்கள், இவருக்கு முரளி (புல்லாங்குழல்) கொடுத்திருக்கிறார்கள். முரளி வைத்திருப்பவர் அதாவது மாஸ்டர் முரளிதர் ஆகி விகாரங்கள் என்ற பாம்பை விஷம் நிறைந்ததாக ஆக்குவதற்குப் பதிலாக விஷத்தை அகற்றி படுக்கை ஆக்கிவிட்டார். விஷம் நிறைந்த பாம்பு எங்கே மேலும் படுக்கை எங்கே! இந்த அளவு மாற்றத்தை எதன் மூலம் செய்தார்? முரளி மூலம். அந்த மாதிரி பரிவரித்தனை செய்பவரைத் தான் வெற்றி அடைந்த பிராமணன் என்று கூறுவது. எனவே நான் யார் என்று உங்களை நீங்களே கேளுங்கள்.

அனைவரும் அவரவர்களின் பலஹீனங்களை உண்மையாகத் தெரிவித்திருக்கிறீர்கள். அந்த உண்மைக்கான மதிப்பெண்களோ கிடைத்து விடும். ஆனால் இதுவரையிலும் தன்னுடைய சம்ஸ்காரங்களை பரிவர்த்தனை செய்வதற்கான சக்தி வரவில்லை என்றால், இவர்கள் உலகத்தை மாற்றம் செய்பவர்களாக எப்பொழுது ஆவார்கள் என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். இப்பொழுது பார்வையில் மாற்றம், உள்உணர்வில் மாற்றம், இவை இரண்டும் அழியாததாக எப்பொழுது ஆகும். நீங்கள் கண் பார்வை உள்ளவர்கள். திருஷ்டி மூலமாக பார்க்கக்கூடிய கண் பார்வை உள்ளவர்கள் என்றால், உங்களுடைய பார்வையை ஏன் விபரீதமாக ஆக்குகிறீர்கள்? தெய்வீகக் கண்களால் பார்க்கிறீர்களா அல்லது இந்த தோலால் ஆன கண்களால் பார்க்கிறீர்களா? தெய்வீக கண்கள் மூலம் எப்பொழுதும் இயல்பாகவே தெய்வீக சொரூபம் தான் தென்படும். தோலால் ஆன கண்கள், தோலைத் தான் பார்க்கும். தோலைப் பார்ப்பது, தோலைப் பற்றி யோசிப்பது, இது யார் செய்யும் வேலை. ஃபரிஷ்தாக்களினுடையதா? பிராமணர்களினுடையதா? சுயராஜ்ய அதிகாரிகளினுடையதா? நீங்கள் பிராமணர்களா அல்லது வேறு யாருமா? யார் நீங்கள்? பெயர் கூறுங்கள்.

எப்பொழுதும் ஒவ்வொரு பெண்ணையும் அவர்களுடைய உடலில் இருக்கும் ஆத்மாவை சக்தி ரூபத்தில், ஜகத்மாதாவின் ரூபத்தில், தேவியின் ரூபத்தில் பார்ப்பது என்பது தெய்வீக கண்களால் பார்ப்பது. குமாரி இருக்கிறார், மாதர்கள் இருக்கிறார்கள், சகோதரிகள் இருக்கிறார்கள், பொறுப்பாளராக இருக்கும் ஆசிரியர் சேவாதாரி கள் இருக்கிறார்கள், ஆனால் இவர்கள் யார்? சக்தி ரூபம். சகோதரன், சகோதரியின் சம்மந்தத்தில் கூட சில நேரம் உள்உணர்வு மற்றும் பார்வை சஞ்சலமாகி விடுகிறது. எனவே எப்பொழுதும் சக்தி ரூபம், சிவ சக்திகள். சக்தியின் எதிரில் ஒருவேளை யாராவது அசுர உள்உணர்வோடு வருகிறார் என்றால், அவரது நிலைமை என்ன ஆகிவிடுகிறது என்ற இதைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? நம்முடைய டீச்சர் இல்லை சிவசக்தி. ஈஸ்வரிய சகோதரி, இதையும் விட மேலாக சிவசக்தி ரூபத்தில் பாருங்கள். மாதர்களும் மற்றும் சகோதரிகளிடம் கூட எப்பொழுதும் தன்னுடைய சிவசக்தி சொரூபத்தில் நிலைத்திருக்க வேண்டும். என்னுடைய விசேஷமான சகோதரன், விசேஷமானவன் என்று அப்படி இருக்க வேண்டாம். அவர்கள் சிவசக்திகள் மேலும் இவர்கள் மகாவீரர்கள். இலங்கையை எரிக்கக்கூடியவர்கள் முதலில் தனக்குள் இருக்கும் இராவணனின் வம்சத்தை எரிக்க வேண்டும். மகாவீரரின் (அனுமன்) விசேஷமாக என்ன காண்பிக்கிறார்கள்? அவர் எப்பொழுதும் தன்னுடைய இதயத்தில் என்ன காண்பிக்கிறார்? ஒரு இராமைத் தவிர வேறு யாரும் இல்லை. படத்தை பார்த்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அப்படி ஒவ்வொரு சகோதரனும் அனுமன், ஒவ்வொரு சகோதரியும் சக்தி. அனுமனும் இராமினுடையவர், சக்தியும் சிவனினுடையவர்கள். எந்தவொரு தேகதாரியையும் பார்க்கும்போது எப்பொழுதும் நெற்றியின் பக்கம் ஆத்மாவைப் பாருங்கள். பேசுவது ஆத்மாவுடன் செய்ய வேண்டுமா அல்லது உடலோடா? காரிய விவகாரத்தில் ஆத்மா காரியம் செய்கிறதா அல்லது உடலா? எப்பொழுதும் ஒவ்வொரு விநாடியும் உடலில் ஆத்மாவைப் பாருங்கள். பார்வையே நெற்றியின் மணி மேல் தான் செல்ல வேண்டும். அதனால் என்ன ஆகும்? ஆத்மா, ஆத்மாவைப் பார்த்து இயல்பாகவே ஆத்ம அபிமானி ஆகிவிடுவார்கள். இதுவோ முதல் பாடம் தான் இல்லைய?. முதல் பாடத்தையே உறுதியாக்கவில்லை, அப்பா யார் என்று உறுதியாக்கவில்லை என்றால், அவரிடமிருந்து கிடைக்கும் பிராப்தி இராஜ்ஜிய பாக்கியம் எப்படி கிடைக்கும்? ஒரு விஷயத்திற்கான எச்சரிக்கையை மட்டும் எப்பொழுதும் வையுங்கள். என்ன செய்ய வேண்டுமோ அது சிரேஷ்ட கர்மமாக இருக்கட்டும். சிரேஷ்டம் ஆக வேண்டும். எனவே ஒவ்வொரு விஷயத்திலும் திட எண்ணம் உள்ளவர்களாக ஆகுங்கள். எதையாவது சகித்துக் கொள்ள வேண்டியதாக இருந்தாலும், எதிர்நோக்க வேண்டியதாக இருந்தாலும் சிரேஷ்ட காரியம் மற்றும் சிரேஷ்ட பரிவர்த்தனையை கண்டிப்பாக செய்யத் தான் வேண்டும். இந்த விஷயத்தில் முயற்சி செய்பவர் (புருஷார்த்தி) என்ற வார்த்தையை அலட்சியத்தின் ரூபத்தில் உபயோகிக்காதீர்கள். முயற்சி செய்பவர் இந்த வாழ்க்கையில் இருந்து கொண்டிருக்கிறோம்,

செய்து கொண்டிருக்கிறோம், செய்யவோ வேண்டும் இவை அனைத்தும் அலட்சியத்தின் சொற்கள். அந்த நேரத்தில் முயற்சி செய்பவர் என்ற வார்த்தையை அலட்சியத்தின் ரூபத்தில் உபயோகப்படுத்தாதீர்கள். அந்த நேரம் முயற்சி செய்பவர் என்ற வார்த்தையின் அர்த்த சொரூபத்தில் நிலைத்திருந்து விடுங்கள். நான் புருஷ் அதாவது ஆத்மா, என்னை இயற்கை ஏமாற்றம் செய்ய முடியாது. இந்த அனைத்து விதமான பலஹீனங்கள் அலட்சியத்தின் அடையாளங்கள். மகாவீரோ மலையையே உள்ளங்கையில் வைத்து ஒரு நொடியில் மேலே பறந்து செல்பவர் அதாவது மலையையும் தண்ணீருக்குச் சமமாக லேசாக ஆக்குபவர். சின்ன சின்ன பிரச்சனைகள் என்ன பெரிய விஷயம். பிறகோ அந்த மாதிரி மகாவீரரை எறும்பைக் கண்டு பயப்படுபவர் என்று தான் கூறுவோம். என்ன செய்வது, அந்த மாதிரி நடந்து விடுகிறது. இது மகாவீரரின் வாயிலிருந்து வரும் வார்த்தைகளா? அறிவுள்ளவர் என்ன செய்வது, திருடன் வந்து விடுகிறான் என்று கூற மாட்டார். அறிவுள்ளவர் அடிக்கடி ஏமாற்றம் அடையமாட்டார். அலட்சியமாக இருப்பவர் அடிக்கடி ஏமாற்றம் அடைவார். பாதுகாப்பிற்கான சாதனம் இருந்த போதிலும் ஒருவேளை அதை காரியத்தில் ஈடுபடுத்தவில்லை என்றால் அவரை என்னவென்று கூறுவது? இது நடக்கக் கூடாது என்று நான் தெரிந்திருக்கிறேன் ஆனால் இது நடந்து கொண்டிருக்கிறது என்றால், இதை எந்த புத்திசாலித்தனம் என்று கூறுவோம்.

திட எண்ணம் உள்ளவராக ஆகுங்கள். பரிவர்த்தனை (மாற்றம்) கண்டிப்பாக செய்ய வேண்டும், நாளை கூட இல்லை, இன்றே செய்ய வேண்டும். இன்று கூட இல்லை, இப்பொழுதே செய்ய வேண்டும். இவரைத் தான் மகாவீர் மற்றும் இராமரின் கட்டளைப்படி நடப்பவர் என்று கூறுவது. இன்றோ சந்திப்பதற்கான தினமாக இருந்தது. இருந்தாலும் குழந்தைகள் கடுமையாக உழைத்திருக்கிறார்கள் என்றால் உழைப்பின் பலனாக பதில் கூற வேண்டியதாக இருக்கிறது. ஆனால் இந்த பலஹீனங்களை உடன் கொண்டு செல்ல வேண்டுமா? கொடுக்கப்பட்ட பொருளை பிறகு மீண்டும் திருப்பியோ எடுக்கக்கூடாது தான் இல்லையா? வலுக்கட்டாயமாக வந்து விட்டால் கூட வர விடாதீர்கள். எதிரியை வர விடப்படுமா என்ன? கவனம், சோதனை இது இரட்டைப் பூட்டு, நினைவு மற்றும் சேவை - இது இன்னொரு இரட்டை பூட்டு, இவை இரண்டும் அனைவரிடமும் இருக்கிறது தான் இல்லையா? எனவே எப்பொழுதும் இந்த இரட்டை பூட்டு போடப்பட்டு இருக்கட்டும். இரண்டு பக்கமும் பூட்டு போடவேண்டும் புரிந்ததா? ஒரு பக்கம் பூட்டக்கூடாது. ஸ்தூலமான மற்றும் சூட்சுமமான உபசரிப்போ மிகவும் கிடைத்தது. இரட்டை உபசரிப்பு ஆனது தான் இல்லையா? எப்படி தீதி, தாதி மற்றும் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள் உள்ளப்பூர்வமாக உபசரித்தார்கள் என்றால், அதன் பிரதிபலனின் பலனாக அனைவரும் தீதி, தாதியிடம் நாங்கள் இப்பொழுதிலிருந்தே நிரந்தரமாக வெற்றி அடைபவராக இருப்போம் என்ற உபசரிப்பை கொடுத்து விட்டுச் செல்ல வேண்டும். வாயினால் மட்டும்

சொல்லாதீர்கள், ஆனால் மனதால் சொல்ல வேண்டும். பிறகு ஒரு மாதம் கழித்து இந்த புகைப்படத்தில் இருப்பவர்களை என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்ப்போம். யாரிடமிருந்து மறைத்தாலும் கூட ஆனால் தந்தையிடமோ மறைக்க முடியாது. நல்லது.

எப்பொழுதும் திட எண்ணம் மூலமாக நினைத்தார் மற்றும் செய்தார் என்ற இந்த இரண்டையும் சமமாக ஆக்கக்கூடிய, எப்பொழுதும் தெய்வீக கண் மூலம் ஆத்மீக ரூபத்தைப் பார்க்கக் கூடிய, எங்கு பார்த்தாலும் அங்கு ஆத்மாவே ஆத்மாவைப் பார்க்க வேண்டும், அந்த மாதிரி அர்த்த சொரூப முயற்சி செய்யும் ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

அவ்யக்த மகாவாக்கியங்கள் :

தந்தைக்குச் சமமாக நிராகாரி, நிர்அகங்காரி மற்றும் நிர்விகாரி ஆகுங்கள்

பிரம்மா பாபாவின் கடைசி இந்த மூன்று வார்த்தைகளை நினைவில் வையுங்கள் - நிராகாரி, நிர்அகங்காரி மற்றும் நிர்விகாரி. எண்ணத்தில் எப்பொழுதும் நிராகாரி, அனைவரிடமிருந்தும் விலகியவர் மற்றும் தந்தைக்கு பிரியமானவர், வார்த்தைகளில் எப்பொழுது நிர்அகங்காரி அதாவது எப்பொழுதும் ஆன்மீக இனிமை மற்றும் பணிவு நிரம்பியவர். மேலும் காரியத்தில் ஒவ்வொரு கர்ம இந்திரியம் மூலம் நிர்விகாரி அதாவது தூய்மையின் தனித்தன்மை உள்ளவர் ஆகுங்கள். நான் நிராகார ஆத்மா இந்த உடலின் ஆதாரத்தினால் பேசிக் கொண்டிருக்கிறேன் என்று பயிற்சி செய்யுங்கள். உடலில் இருந்தபோதும் உடலற்ற அதாவது நிராகார நிலையின் நினைவு இருக்க வேண்டும். இதைத் தான் நிராகாரமாக இருப்பவர், உடல் மூலமாக வார்த்தைகள் மற்றும் காரியத்தில் வருவது. உண்மையான சொரூபம் நிராகாரம், சாகாரம் அதாவது உடல் ஆதாரம். இந்த 'நிராகாரமாக இருப்பவனிலிருந்து சாகாரம்' என்ற இரட்டை நினைவு சக்திசாலியான நிலை. தன்னுடைய உண்மையான நிராகார சொரூபத்தை நினைவில் வைத்தீர்கள் என்றால், அந்த சொரூபத்தின் உண்மையான குணம் மற்றும் சக்திகள் தானாகவே வெளிப்படும். சங்கமயுகத்தில் நிராகார தந்தைக்குச் சமமாக கர்மாதீத், நிராகார நிலையை அனுபவம் செய்யுங்கள். பிறகு எதிர்காலத்தில் 21 பிறவி பிரம்மா பாபாவிற்குச் சமமாக அனைத்து குணங்களும் நிரம்பிய முற்றிலும் விகாரமற்ற சிரேஷ்ட வாழ்க்கைக்கு சமமாக அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள். குழந்தையாக இருப்பவன் நாளை எஜமானன் ஆவேன்' இந்த நினைவு எப்பொழுது நிர்அகங்காரி, நிராகாரி நிலையின் அனுபவம்

செய்விக்கிறது. குழந்தை ஆவது என்றால், எல்லைக்குட்பட்ட வாழ்க்கையின் மாற்றம் அடைவது.. எப்பொழுது பிராமணன் ஆகியிருக்கிறீர்கள் என்றால் பிராமண தன்மையின் வாழ்க்கையின் மிக சுலபமான முதல் பாடத்தை படித்தீர்கள் - குழந்தைகள் 'பாபா' என்று கூறினார்கள். மேலும் தந்தை 'குழந்தைகளே' என்று கூறினார். இந்த ஒரு வார்த்தையின் பாடம் ஞானம் நிறைந்தவராக ஆக்கிவிடுகிறது.

சேவையில் நான் ஒரு கருவி என்ற உணர்வு தான் சேவையின் வெற்றிக்கான ஆதாரம். நிராகாரி, நிர்விகாரி மற்றும் நிர்அகங்காரி என்ற இந்த மூன்று விசேஷங்கள் கருவி என்ற உணர்வினால் இயல்பாகவே வந்து விடும். கருவி என்ற உணர்வு இல்லை என்றால், அனேக விதமான நான், என்னுடையது என்பவை சேவையை தொய்வாக்கிவிடும். எனவே நான் என்பதும் இல்லை, என்னுடையது என்பதும் இல்லை. நான் ஒரு கருவி என்ற இந்த ஒரு வார்த்தையை நினைவில் வைக்க வேண்டும். கருவி என்று ஆவதினால் தான் நிராகாரி, நிரகங்காரி மேலும் பணிவு நிறைந்த எண்ணமற்ற நிலையில் இருக்க முடியும். எப்படி கருவி என்று ஆவதினால் நிராகாரி, நிரகங்காரி, எண்ணமற்ற நிலை ஏற்படுகிறது. அது போலஷோன், நான் என்று வருவதினால் . . . வந்து விடுகிறது. இறுதியில் அதன் விளைவாக இந்த வாழ்க்கையில் உயிரோடு இருந்தும் இறந்து விடுகிறார்கள். எனவே நான் ஒரு கருவி என்ற இந்த முக்கியமான அறிவுரையை எப்பொழுதும் உங்கள் உடன் வைத்துக் கொள்ளுங்கள். கருவி என்று ஆவதினால் எந்தவொரு அகங்காரமும் உருவாவது இல்லை. கருத்து வேறுபாடு என்ற குழப்பதிலும் வர மாட்டீர்கள்.

எந்த அளவு நிராகாரி நிலையில் இருப்பீர்களோ அந்த அளவு பயமற்று இருப்பீர்கள். ஏனென்றால், பயம் உடல் உணர்வில் இருக்கிறது. எனவே பயமின்மை என்ற குணத்தை தாரணை செய்வதற்காக நிராகாரி ஆகுங்கள். எந்த அளவு நிராகாரி மற்றும் விலகிய நிலையில் இருப்பீர்களோ அந்த அளவு யோகாவில் பிந்து ரூப நிலையின் அனுபவம் செய்வீர்கள். மேலும் நடைமுறையில் அவ்யக்த நிலையில் இருப்பீர்கள். எப்படி ஸ்தூல உடலின் கை, கால்கள் - டைரக்ஷன் படி நடந்து கொண்டிருக்கின்றன, அதே போல் ஒரு நொடியில் உடலிலிருந்து நிராகாரி அதாவது தன்னுடைய உண்மையான நிராகாரி சொரூபத்தில் நிலைத்திருப்பதற்கான பயிற்சி செய்தீர்கள் என்றால் அகங்காரம் வராது. அகங்காரம் அலங்காரமற்றவராக ஆக்கிவிடுகிறது. யார் நிர்அகங்காரி மற்றும் நிராகாரி பிறகு அலங்காரி நிலையில் இருக்கிறார்களோ அவர்கள் அனைத்து ஆத்மாக்களுக்காகவும் நன்மை செய்பவர் ஆக முடியும். யார் அனைவருக்கும் நன்மை செய்பவர் ஆகிறாரோஅவர் தான் உலகின் இராஜ்ய அதிகாரி

ஆகிறார்.

எப்பொழுது உடலில் இருந்து கொண்டும், நிராகாரி நிலையில் இருப்பீர்களோ அந்த அளவு காட்சி அளிப்பவராக ஆவீர்கள். எப்படி அனேக ஜென்மம் தன்னுடைய தேகத்தின் சொரூபத்தின் நினைவு இயற்கையாக இருந்தது. அதே போலஷேன்னுடைய உண்மையான சொரூபத்தின் நினைவின் அனுபவமும் வெகு காலத்திற்கானது வேண்டும். எப்பொழுது இந்த முதல் பாடம் முடிவடைகிறதோ, ஆத்ம அபிமானி நிலை இருக்கிறதோ அப்பொழுது அனைத்து ஆத்மாக்களுக்கும் காட்சி அளிப்பதற்கு பொறுப்பாளர் ஆகிறீர்கள். ஒன்று நிராகாரி ஆத்ம உணர்வு மற்றும் ஆத்ம அபிமானி ஆவதற்கான லட்சியம் மேலும் இரண்டாவது நிர்விகாரி நிலை. அதில் மனதின் சக்தியையும் விகாரமற்ற நிலையில் உருவாக்க வேண்டும். எப்படி முழு நாளும் யோகி மற்றும் தூய்மை ஆவதற்கான முயற்சி செய்து கொண்டே இருக்கிறீர்கள், அதே போல் நிர்விகாரி மற்றும் நிராகார தன்மையின் இலக்கு எதிரில் இருக்கிறது. அப்பொழுது ஃபரிஷ்தா மற்றும் கர்மாதீத் நிலை உருவாகும். பிறகு எந்தவொரு தூய்மையின்மை அதாவது 5 தத்துவங்களின் ஈர்ப்பு ஈர்த்து விடாது. இப்பொழுது சம்பூர்ண தன்னுடைய சம்பூர்ண நிராகாரி, நிரகங்காரி நிலையில் நிலைத்து விடுங்கள் என்று கட்டளை இடுங்கள். என்னுடையது, உன்னுடையது, பெயர்-புகழின் அம்சம் கொஞ்சம் கூட இருக்க வேண்டாம். அம்சம் இருக்கிறது என்றால் வம்சம் வந்து விடும். எனவே எண்ணத்தில் கூட எந்தவொரு விகாரத்தின் அம்சம் இருக்க வேண்டாம். அப்பொழுது இந்த மூன்று நிலைகளும் வரும். பிறகு அந்த பிரபாவத்தினால் வாரிசாக மற்றும் பிரஜையாக யார் உருவாக வேண்டுமோ அவர் உடனடியாக உருவாகி விடுவார். ஏனென்றால் சேவை காண்பிக்கும்.

இப்பொழுது தன்னுடைய நிராகார வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்றால் எப்படி தேசமோ அப்படி தன்னுடைய வேஷத்தைப் போடவேண்டும். எனவே இப்பொழுது திரும்பிச் செல்ல வேண்டும். மேலும் அனைவரையும் அழைத்துச் செல்ல வேண்டும் என்ற விசேஷ முயற்சி செய்வது இருக்க வேண்டும். இந்த நினைவின் மூலம் இயல்பாகவே அனைத்து சம்மந்தங்கள், அனைத்து இயற்கையின் ஈர்ப்பிலிருந்து விலகியிருப்பவராக அதாவது சாட்சி ஆகிவிடுவார். சாட்சி ஆவதினால் சுலபமாகவே தந்தையின் துணைவனாக தந்தைக்குச் சமமானவராக ஆகிவிடுவார். இடையிடையே நேரம் எடுத்து இந்த தேக உணர்விலிருந்து விலகிய நிராகாரி ஆத்ம சொரூபத்தில் நிலைத்திருப்பதற்கான பயிற்சி செய்யுங்கள். எந்த காரியம் விரும்பினாலும் செய்யுங்கள் ஆனால் காரியம் செய்து கொண்டே நான் நிராகார ஆத்மா, இந்த உடலின் கர்ம இந்திரியங்களின் ஆதாரத்தில் காரியங்களைச் செய்வித்துக்

கொண்டிருக்கிறேன் என்ற பயிற்சி செய்யுங்கள். நிராகாரி நிலை செய்விப்பவரின் நிலை, கர்ம இந்திரியங்கள் செய்பவை. ஆத்மா செய்விப்பவர். எனவே நிராகாரி ஆத்ம நிலையில், நிராகார தந்தையின் நினைவு இயல்பாக வரும். முழு நாளும் எத்தனை தடவை நான் என்ற வார்த்தை கூறுகிறீர்களோ அப்பொழுது நான் நிராகார ஆத்மா உடலில் பிரவேசம் செய்திருக்கிறேன் என்று நினைவு செய்யுங்கள். எப்பொழுது நிராகார நிலை நினைவில் வருமோ, அகங்காரம் அற்றவராக இயல்பாக ஆகிவிடு வீர்கள். தேக உணர்வு அகன்று விடும். ஆத்மா நினைவில் வருவதினால் நிராகார நிலை உறுதியாகிவிடும். நிராகாரி, நிர்அகங்காரி மற்றும் நிர்விகாரி ஆகுக என்ற வரதானம் வரமளிக்கும் வள்ளல் மூலமாக கிடைத்து விட்டது, இப்பொழுது இந்த வரதானத்தை நடைமுறை ரூபத்தில் கொண்டு வாருங்கள். அதாவது தன்னை ஞானம் நிறைந்தவராக, நினைவு நிறைந்தவராக மற்றும் சாட்சாத்காரம் அளிப்பவராக ஆக்குங்கள். யார் எதிரில் வந்தாலும் அவருக்கு நெற்றி மூலம் நெற்றியின் மணி தென்பட வேண்டும். கண்கள் மூலமாக ஜுவாலை தென்பட வேண்டும். மேலும் வாய் மூலமாக வரதானங்களின் வார்த்தை தென்பட வேண்டும். அப்பொழுது தான் பிரத்யக்ஷதா (வெளிப்பாடு) ஆகும்.

வரதானம் :

வாய்மொழி மற்றும் மனசக்தி இரண்டினால் ஒரே நேரத்தில் சேவை செய்யக்கூடிய சுலபமாக வெற்றி அடைபவர் ஆகுக.

வாய்மொழியின் கூடவே எண்ணத்தின் சக்தி மூலமாக சேவை செய்வது இது தான் சக்திசாலியான இறுதி சேவை. எப்பொழுது மனதின் சேவை மற்றும் வாய்மொழியின் சேவை இரண்டின் இணைந்த ரூபம் இருக்குமோ அப்பொழுது சுலபமாக வெற்றி கிடைக்கும். இதன் மூலம் இரட்டை மடங்கு ரிசல்ட் கிடைக்கும். வாய்மொழியின் சேவை செய்பவர்களோ மிகக்குறைவானவர்கள் இருப்பார்கள். மற்றபடி மேற்பார்வை செய்பவர்கள், மற்ற காரியங்களை யார் செய்கிறார்களோ அவர்கள் மனசேவை செய்ய வேண்டும். அதன் மூலம் வாயுமண்டலம் யோகயுக்த்தாக (நிறைந்து) ஆகும். நான் சேவை செய்ய வேண்டும் என்று ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். பிறகு சூழ்நிலையும் சக்திசாலியாக ஆகிவிடும். மேலும் சேவையும் இரண்டு மடங்கு நடந்து விடும்.

சுலோகன் :

எப்பொழுதும் ஒரே ரசனை என்ற நிலையின் ஆசனத்தில் அமர்ந்திருந்தீர்கள் என்றால், ஆடாத

அசையாதவராக இருப்பீர்கள்.

ஓம்சாந்தி

" பரம் பூஜ்ய (உயர்ந்த பூஜைக்குரியவர்) ஆவதற்கான ஆதாரம் "

நீங்கள் அனைவரும் நாலாபுறங்களிலுமிருந்து மதுபன் மகான் தீர்த்த ஸ்தலத்தில் மேளாவை (சந்திப்பை) கொண்டாடுவதற்காக வந்து சேர்ந்திருக்கிறீர்கள். இதே மகான் தீர்த்த ஸ்தலத்தில் நடக்கும் மேளாக்களின் நினைவுச் சின்னமாக இப்பொழுது கூட தீர்த்த ஸ்தானங்களின் மேளா கொண்டாடிக் கொண்டே இருக்கிறார்கள். இதே நேரத்தின் (சங்கம யுகத்தின்) ஒவ்வொரு சிரேஷ்ட காரியத்தின் நினைவுச் சின்னம் சரித்திரங்களின் ரூபத்தில், பாடல் களின் ரூபத்தில் இப்பொழுதும் பார்க்கிறீர்கள் மற்றும் கேட்டும் இருக்கிறீர்கள். சைத்தன்ய சிரேஷ்ட ஆத்மாக்கள் தன்னுடைய சித்திரத்தை மற்றும் சரித்திரத்தை பார்க்கவும், கேட்கவும் செய்கிறார்கள். அந்த மாதிரி நேரத்தில் புத்தியில் எந்த சிரேஷ்ட எண்ணம் ஓடுகிறது? நானே தான் இருந்தேன், நானே தான் இப்பொழுது இருக்கிறேன். மேலும் ஒவ்வொரு கல்பத்திலும் நானே தான் மீண்டும் ஆவேன் என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா? இந்த 'மீண்டும் நடக்கிறது' என்பதின் நினைவு மற்றும் ஞானம் வேறு எந்த ஆத்மாவிற்கும், மகான் ஆத்மாவிற்கும், மத ஆத்மாவிற்கும் மற்றும் மதத் தந்தைகளிடமும் இல்லை. ஆனால் அனைத்து பிராமண ஆத்மாக்களாகிய உங்களுக்கு 5000 வருடங்களின் விஷயம் நேற்று நடந்த விஷயம் மாதிரி அந்த அளவு தெளிவான நினைவு இருக்கிறது மற்றும் தெளிவான ஞானம் இருக்கிறது. இந்த அளவு சகஜமாக மற்றும் தெளிவாக அனுபவம் செய்கிறீர்கள். வேறு யாராவது இருப்பார்களா என்று இல்லை, நானே தான் இருந்தேன், நானே தான் இருக்கிறேன். ஜட விக்கிரகங்களில் தன்னுடைய சைத்தன்ய சிரேஷ்ட வாழ்க்கையின் சாட்சாத்காரம் கிடைக்கிறதா? அல்லது இது மகாரதிகளின் விக்கிரகங்கள் என்று நினைக்கிறீர்களா அல்லது நம் அனைவரின் விக்கிரகங்கள் என்று நினைக்கிறீர்களா? பாரதத்தில் 33 கோடி தேவதைகளை நமஸ்காரம் செய்கிறார்கள். அதாவது சிரேஷ்ட பிராமணனாக இருந்து தேவதை களாகும் உங்களுடைய வம்சத்திலும் வம்சம், அவர்களுடைய வம்சத்தையும் சேர்த்து அனைவருக்கும் பூஜை இல்லை என்றாலும் மகிமையோ கண்டிப்பாக செய்கிறார்கள். அப்படியானால் யார் அவரே பூர்வீகமானவராக (மூதாதையராக) இருக்கிறாரோ அவருடைய பெயர் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கும் என்று யோசித்து பாருங்கள். மேலும் மூதாதையர்களுக்கு பூஜையும் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கும். 9 லட்சத்திற்கும் மகிமை இருக்கிறது. அதற்கும் மேலே 16 ஆயிரத்திற்கு மகிமை இருக்கிறது, பிறகு 108 க்கு அதன் பிறகு 8-ற்கு. அதற்கு மேலே ஜோடி மணிகளுக்கு. வரிசைக்கிரமமாக

இருக்கிறார்கள் இல்லையா? மகிமையோ அனைவருக்கும் இருக்கிறது. ஏனென்றால் யார் பாக்கியத்தை உருவாக்கும் தந்தையின் குழந்தையாக ஆகியிருக்கிறாரோ, இந்த பாக்கியத்தின் காரணமாக அவர்களுக்கு மகிமை மற்றும் பூஜை இரண்டும் நடக்கிறது. ஆனால் பூஜையில் இரண்டு விதமான பூஜை இருக்கிறது. ஒன்று அன்பின் விதி முறை நிறைந்த பூஜை மற்றும் இன்னொன்று நியமப் பிரகாரம் மட்டும் பூஜை செய்வது. இரண்டிலும் வித்தியாசம் இருக்கிறது இல்லையா? எனவே நான் எந்த மாதிரி பூஜைக்குரிய ஆத்மா என்று தங்களை கேளுங்கள். சில சில பக்தர்கள் தேவதை கோபப்பட்டு (தெய்வக் குற்றம்) விடக்கூடாது என்ற இந்த பயத்தினால் பூஜை செய்கிறார்கள் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். மேலும் சில பக்தர்கள் வெளிப்பகட்டிற்காகவும் பூஜை செய்கிறார்கள். மேலும் சில பக்தர்கள் நியமத்தையும் மற்றும் கடமையையும் கண்டிப்பாக செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். விருப்பம் இருந்தாலும் அல்லது இல்லை என்றாலும். ஆனால் செய்ய வேண்டும் என்று நினைப்பார்கள். அந்த மாதிரி கடமை என்று புரிந்து செய்வார்கள். நான்கு விதமான பக்தர்கள் இந்த மாதிரி ஏதாவது விதமாக ஆகிறார்கள். இங்கேயும் பாருங்கள் தேவ ஆத்மாக்கள் ஆகக்கூடியவர்கள், பிரம்மா குமார், குமாரி என்று கூறுபவர்கள் விதவிதமான வகையினராக இருக்கிறார்கள் இல்லையா? நம்பர் ஒன் பூஜைக்குரியவர் எப்பொழுதும் சகஜமாக அன்புடன் மற்றும் நினைவு மற்றும் சேவை மேலும் யோகி ஆத்மாவாக, தெய்வீக குணங்களைக் கடைபிடிக்கும் ஆத்மாவாக ஆகி நடந்து கொள்கிறார்கள். நான்கு பாடங்களின் விதி மற்றும் சித்தியை பிராப்தி செய்திருக்கிறார்கள். இரண்டாம் நம்பரின் பூஜைக்குரியவர்கள் விதிப்பூர்வமாக செய்பவராக இன்றி, நியமம் என்று புரிந்து செய்வார்கள். நான்கு பாடங்களையும் முழுமையாகச் செய்வார்கள். ஆனால் விதியை சித்தியை அடைந்த சொரூபமாகி செய்ய மாட்டார்கள். நியமம் என்று புரிந்து அப்படித் தான் நடந்து கொள்ள வேண்டும், செய்யத் தான் வேண்டும் என்ற இந்த லட்சியத்தின் மூலம் எவ்வளவு சட்டப்படி நடக்கிறார்களோ அந்த அளவு லாபத்தை பிராப்தி செய்து கொண்டே முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். அந்த இதயப்பூர்வமான அன்பு அனைத்தையும் இயல்பானதாக மற்றும் சகஜமானதாக ஆக்குகிறது, மேலும் நியமப்படி நடப்பவர்களுக்கு சில நேரம் சகஜமாகவும் சில நேரம் கடினமாகவும் அனுபவம் ஆகிறது. சில நேரம் கடுமையாக உழைக்க வேண்டியதாக இருக்கிறது. மேலும் சில நேரம் அன்பின் அனுபவம் ஆகிறது. நம்பர் ஒன் ஆக இருப்பவர்கள் அன்பில் ஐக்கியமாக இருப்பார்கள், நம்பர் இரண்டில் இருப்பவர்கள் அன்பில் இருப்பார்கள். நம்பர் மூன்றில் இருப்பவர்கள் பெரும்பான்மையான நேரம் நான்கு பாடங்களையும் உள்ளப்பூர்வமாக அல்லாது, ஆனால் வெளிப்பகட்டிற்காகச் செய்வார்கள். தந்தையின் நினைவிலும் (யோகாவிலும்) பெயர் பெற வேண்டும் என்ற உணர்வோடு அமருவார்கள். அந்த மாதிரி வெளிப்பகட்டிற்காக சேவையும் அதிகம் செய்வார்கள். எப்படி நேரமோ அப்படி அற்ப காலத்தின் ரூபத்தையும் செய்து விடுவார்கள். ஆனால் புத்தி மிகவும்

கூர்மையானது. மேலும் இதயம் காலியானதாக இருக்கும். நம்பர் நான்கில் இருப்பவர்கள் யாராவது ஏதாவது சொல்லி விடக்கூடாது என்ற பயத்தினால் மேலும் இவரோகடைசி நம்பரில் இருப்பவர் அல்லது இவர் முன்னேறிச் செல்ல முடியாது என்று யாராவது அந்த பார்வையோடு பார்த்து விடக்கூடாது என்ற பயத்தில் செய்வார்கள். பிராமணனாகவோஆகி விட்டார், மேலும் சூத்திர வாழ்க்கையையும் விட்டு விட்டு வந்து விட்டார். இரண்டு பக்கங்களிலிருந்தும் விடுபட்டவராக ஆகிவிடக்கூடாது. சூத்திர வாழ்க்கையும் விருப்பம் இல்லை மேலும் பிராமண வாழ்க்கையில் விதிப்பூர்வமாக நடப்பதற்குத் தைரியம் இல்லை. எனவே நிர்பந்தத்தில் வந்து விடுகிறார்கள். அந்த மாதிரி கட்டாயத்தில் மற்றும் பயத்துடன் இருந்து கொண்டே இருக்கிறார்கள். அந்த மாதிரியானவர்கள் சில நேரம் தன்னுடைய சிரேஷ்ட வாழ்க்கையின் அனுபவமும் செய்கிறார்கள். எனவே இந்த வாழ்க்கையை விடவும் முடிவதில்லை. அந்த மாதிரி யானவர்களை நான்காம் நம்பரில் உள்ள பூஜைக்குரிய ஆத்மா என்று கூறுவோம். அந்த மாதிரியானவர்களின் பூஜை சில நேரம் மற்றும் பயத்தின் காரணமாகவும் கட்டாயத்தில் பக்தனாகி கடைப்பிடிப்பார்கள். இந்த விதமாக நடந்து கொண்டே இருக்கும். மேலும் வெளிப்பகட்டாக உள்ள பூஜையும் உள்ளப்பூர்வமாக செய்யப்பட மாட்டாது. ஆனால் வெளிப்பகட்டிற்காக நடக்கும், இதே விதமாக நடக்கும். அந்த மாதிரி நான்கு விதமான பூஜைக்குரியவர்களை பார்த்தீர்கள் தான் இல்லையா. எந்த மாதிரி இப்பொழுது நீங்கள் ஆவீர்களோ அதே போலவேசத்யுகம், திரேதாயுகத்தில் இராயல் குடும்பத்தில் மற்றும் பிரஜையில் அதே வரிசை எண்ணின் பிரகாரம் ஆவீர்கள். மேலும் துவாபர், கலியுகத்தில் அந்த மாதிரியே பக்த மாலை உருவாகும். இப்பொழுது நான் யார் என்று உங்களை நீங்களே கேளுங்கள். மேலும் நான்கிலுமே சில நேரம் இங்கு, சில நேரம் அங்கு என்று சுற்றி வருகிறீர்களா? இருந்தும் பாக்கியத்தை உருவாக்குபவரின் குழந்தையாக ஆகியிருக்கிறீர்கள், பூஜைக்குரிய வராகவோ அவசியம் ஆவீர்கள். பெயர் பெற்றவர் என்றால் சிரேஷ்ட பூஜைக்குரியவர், 16000 வரை வரிசைக்கிரமமாக ஆகிவிடுவார்கள். மற்றபடி 9 லட்சம் கடைசி நேரம் வரை அதாவது கலியுகத்தின் இறுதி நேரம் வரை கொஞ்ச பேர் பூஜைக்குரியவர்கள் ஆகிவிடுகிறார்கள். அனைவருக்கும் மகிமையோ இருக்கும் என்று புரிந்து கொண்டீர்கள். மகிமைக்கான ஆதாரம் பாக்கியத்தை உருவாக்கும் தந்தையின் குழந்தையாக ஆவது. மேலும் பூஜைக்கான ஆதாரம் நான்கு பாடங்களிலும் தூய்மை, சுத்தம், உண்மை மற்றும் தெளிவான நிலை. அந்த மாதிரியானவர்கள் மேல் பாப்தாதாவும் எப்பொழுதும் அன்பின் மலர்களால் பூஜை அதாவது சிரேஷ்டமானவர்கள் என்று நினைக்கிறார். பரிவாரத்தில் இருப்பவர்களும் சிரேஷ்டமானவர் என்று நினைப்பார்கள். மேலும் உலகமும் ஆஹா! ஆஹா! என்ற முரசை ஒத்து

மனதால் அவர்களுக்கு பூஜை செய்வார்கள். மேலும் பக்தர்களோ தன்னுடைய இஷ்ட தேவதை

என்று நினைத்து இதயத்தில் நிரப்பிக் கொள்வார்கள். எனவே நீங்கள் அந்த மாதிரி பூஜைக்குரியவராக ஆகியிருக்கிறீர்களா? எப்பொழுது நம்முடைய தந்தை பரமதந்தையோ, தந்தை மட்டும் இல்லை, ஆனால் பரம் அதாவது உயர்ந்தவராக இருக்கிறார் என்றால், அவர் உயர்ந்தவர்களாகத்தானே ஆக்குவார். பூஜைக்குரியவர் ஆவது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. ஆனால் உயர்ந்த பூஜைக்குரியவர் ஆக வேண்டும்.

பாப்தாதாவும் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். அன்பில் கடினத்தை அனுபவம் செய்யாமல் வந்து சேர்ந்து விடுகிறார்கள். இப்பொழுதோ ஓய்வு இல்லத்தில் வந்து விட்டீர்கள் இல்லையா? உடல், மனம் இரண்டிற்குமே ஓய்வு தான் இல்லையா? ஓய்வு என்றால் சோனா அதாவது தூங்குவது இல்லை. சோனா அதாவது தங்கம் ஆவதற்காக ரெஸ்டில் வந்திருக்கிறீர்கள். பாரஸ்புரியில் அதாவது தங்கத்திற்கு சமமான உயர்ந்த ஸ்தானத்தில் வந்திருக்கிறீர்கள் இல்லையா? இங்கே தொடர்பில் வருவதே தங்கம் மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுடன் மேலும் வாயுமண்டலமும் தங்கமாக ஆக்குவது. இங்கே உள்ள விஷயமே இரவு பகல் தங்கமாக ஆவதற்கானது. நல்லது.

அந்த மாதிரி நிரந்தரமாக உயர்ந்த பூஜைக்குரிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் விதி மூலமாக சிரேஷ்ட நிலையை அடையக்கூடிய, எப்பொழுதும் மகான் ஆகி மகான் ஆத்மாக்களை உருவாக்கக்கூடிய, தன்னை எப்பொழுதும் சகஜ மற்றும் இயல்பான யோகி, நிரந்தர யோகி, அன்பு நிறைந்த யோகி என்று அனுபவம் செய்யும் அந்த மாதிரி மிக உயர்ந்த ஆத்மாக்களுக்கு, நாலாபுறங்களிலுமுள்ள ஒளிவடிவமான உடலிருக்கும் நெருக்கமான குழந்தைகளுக்கு, அந்த மாதிரி உடலிருக்கும் ஒளிவடிவமான உடலிருக்கும் நேரெதிரில் அமர்ந்திருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தீதி மற்றும் தாதி அவர்களுடன் சந்திப்பு-

நீங்கள் அனைவரும் உயர்ந்த பூஜைக்குரியவர்கள் தான் இல்லையா. பூஜை நன்றாக நடந்து கொண்டிருக்கிறது தான் இல்லையா? பாப்தாதாவிற்கோ நெருக்கமான குழந்தைகள் மேல் பெருமிதம் இருக்கிறது. தந்தைக்கு பெருமிதம் இருக்கிறது. மேலும் குழந்தைகளில் இரகசியம் இருக்கிறது. எந்தக் குழந்தைகள் இரகசியம் அறிந்து நடந்து கொள்கிறார்களோ அந்தக் குழந்தையின் மேல் தந்தைக்கு எப்பொழுதுமே பெருமிதம் இருக்கிறது. இரகசியம் தெரிந்து நடந்து கொள்பவர்கள், யோகசொரூபமானவர்கள், குணம் நிறைந்தவர்கள் .அனைத்தையும்

சமநிலையில் வைப்பவர்கள். எப்பொழுதும் தந்தையின் ஆசீர்வாதத்தின் நிழலில் இருப்பவர்கள். ஆசீர்வாதத்தின் மழை எப்பொழுதும் பொழிந்து கொண்டிருக்கிறது. பிறந்தவுடனேயே இந்த ஆசீர்வாதத்தின் மழை தொடங்கி விட்டது. மேலும் இறுதி வரை இதே குடைநிழலின் கீழ் பொன் மலர்களின் மழை பொழிந்து கொண்டே இருக்கும். இதே நிழலின் கீழ் இருக்கிறீர்கள், வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் இறுதி வரை இருந்து கொண்டே இருப்பீர்கள். நிரந்தரமாக ஆசீர்வாதத்தின் பொன் மலர்களின் மழை ஒவ்வொரு அடியும் தந்தையுடன் இருக்கிறீர்கள் என்றால், ஆசீர்வாதம் உடன் இருக்கிறது (தாதியைப் பார்த்து) நீங்கள் இதே நிழலில் எப்பொழுதுமே இருந்திருக்கிறீர்கள், தொடக்கத்திலிருந்து களைப்பற்றவராக இருக்கிறீர்கள், களைப்பற்றவராக ஆகுக என்ற வரதானம் உங்களுக்கு இருக்கிறது. எனவே செய்து கொண்டும் செய்யாதது போல் இருக்கிறது, இதுவும் மிக நல்லது. இருந்தும் அவ்யக்தம் ஆகும் நேரத்தில் பொறுப்பு கிரீடத்தையோ தலையில் வைத்தார் இல்லையா? இவருக்கு (தீதிக்கு) சாகார பாபாவுடன் கற்றுக் கொடுத்தோம். மேலும் உங்களுக்கு அவ்யக்தம் ஆகும் நேரத்தில் ஒரு நொடியில் கற்றுக் கொடுத்தோம். இருவர்களுக்கும் அவரவர்களின் முறையில் கற்றுக் கொடுத்தோம். இதுவும் நாடகத்தில் பங்காக இருந்தது. நல்லது.

காலை 6.30 மணிக்கு விடைபெறும் நேரத்தில் கூறிய மகாவாக்கியங்கள் -

சங்கமயுகத்தின் அனைத்து வேளைகளும் குட் மார்னிங் தான். ஏனென்றால் சங்கமயுக முழுமையே அமிர்த வேளை. சிருஷ்டி சக்கரத்தின் கணக்குப்படி சங்கமயுகம் அமிர்தவேளையாக ஆனது இல்லையா? அதனால் சங்கம யுகத்தின் ஒவ்வொரு நேரமும் குட் மார்னிங்கே தான். பாப்தாதா வருவதும் குட் மார்னிங்கில், செல்வதும் குட் மார்னிங்கில்! ஏனென்றால், தந்தை வருகிறார் என்றால் இரவிலிருந்து அமிர்தவேளை ஆகிவிடுகிறது. அப்படி வருவதும் அமிர்தவேளையில் மேலும் எப்பொழுது செல்கிறார் என்றால் பகல் வந்து விடுகிறது. ஆனால் இருப்பது அமிர்தவேளையில் தான், பகல் வந்து விடுகிறது என்றால் சென்று விடுகிறார். மேலும் நீங்கள் காலை அதாவது சத்யுகத்தின் பகல் அதாவது பிரம்மாவின் பகலில் இராஜ்ஜியம் செய்கிறீர்கள். தந்தையோ அதிலிருந்து விலகிச் சென்று விடுவார் இல்லையா? அந்த மாதிரி பழைய உலகின் கணக்கின்படி எப்பொழுதுமே குட் மார்னிங். எப்பொழுதுமே நல்லது தான். எப்பொழுதும் நல்லதாக இருக்கும். எனவே நல்ல காலை என்று கூறுங்கள். சுப இரவு என்று கூறினாலும் சுப நாள் என்று கூறினாலும் அனைத்தும் சுபமே சுபம் தான். எனவே அனைவருக்கும் கலியுகத்தின் கணக்கின் படி குட் மார்னிங். மேலும் சங்கமயுகத்தின் படியும் குட் மார்னிங் என்றால் இரட்டை குட் மார்னிங். நல்லது.

அவ்யக்த மகாவாக்கியம் - நினைவை ஜுவாலா சொரூபம் (எரிமலை) ஆக்குங்கள் -

எப்பொழுது உங்களுடைய நினைவு ஜுவாலா சொரூபமாக இருக்குமோ அப்பொழுது தந்தைக்குச் சமமாக பாப் கடேஸ்வர் மற்றும் பாப் ஹர்னி அதாவது பாவத்தை அழிப்பவர் ஆக முடியும். அந்த மாதிரி நினைவு தான் உங்களுடைய தெய்வீக காட்சி அளிக்கும் மூர்த்தியை வெளிப்படுத்தும். இதற்காக எந்த நேரமும் சாதாரண நினைவு இருக்க வேண்டாம். எப்பொழுதும் ஜுவாலா சொரூப, சக்தி சொரூப நினைவில் இருங்கள். அன்பின் கூடவே சக்தி ரூபம் இணைந்திருக்கட்டும். தற்சமயம் குழு ரூபத்தின் ஜுவாலா சொரூபத்தின் அவசியம் இருக்கிறது. ஜுவாலா சொரூபத்தின் நினைவு தான் சக்திசாலியான வாயுமண்டலத்தை உருவாக்கும். மேலும் பலமற்ற ஆத்மாக்கள் சக்தி நிரம்பியவர் ஆவார்கள். அனைத்து தடைகளும் சுலபமாக முடிவடைந்து விடும். மேலும் பழைய உலகத்தின் விநாஷ ஜுவாலை சுடர் விடும். எப்படி சூரியன் உலகிற்கு வெளிச்சத்தை மற்றும் அனேக அழியும் பிராப்திகளின் அனுபவம் செய்விக்கிறது. அதே போல் குழந்தைகள் நீங்கள் தன்னுடைய மகான் தபஸ்வி ரூபம் மூலமாக பிராப்தியின் கிரணங்களின் அனுபவம் செய்வியுங்கள். இதற்காக முதலில் சேமிப்பு கணக்கை அதிகரியுங்கள். எப்படி சூரியனின் கிரணங்கள் நாலாபுறங்களிலும் பரவுகிறது, அதே போல் மாஸ்டர் சர்வ சக்திவான் நிலையில் நீங்கள் இருந்தீர்கள் என்றால், சக்திகள் மற்றும் விசேஷங்கள் என்ற கிரணங்கள் நாலாபுறங்களிலும் பரவுவதாக அனுபவம் செய்வீர்கள்.

ஜுவாலா ரூபம் ஆவதற்கான முக்கியமான மற்றும் சகஜ முயற்சி - இப்பொழுது திரும்பி வீடு செல்ல வேண்டும் மற்றும் அனைவரையும் உடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் எப்பொழுதும் இருக்கட்டும். இந்த நினைவின் மூலம் இயல்பாகவே அனைத்து சம்மந்தம், அனைத்து இயற்கையின் கவர்ச்சியிலிருந்து விலகிய அதாவது சாட்சியாக ஆகிவிடுவீர்கள். சாட்சி ஆவதினால் சுலபமாகவே தந்தையின் சாத்தி அதாவது துணைவன் மற்றும் தந்தைக்குச் சமமானவராக ஆகிவிடுவீர்கள். ஜுவாலா சொரூப நினைவு என்றால் லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் நிலையைப் புரிந்து கொண்டு இதே முயற்சியில் இருங்கள். விசேஷமாக ஞான சொரூபத்தின் அனுபவியாகி சக்திசாலியாகுங்கள். அதன் மூலம் சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களுடைய நல்ல உள்உணர்வு மற்றும் நன்மை செய்யும் உள்உணர்வு மேலும் சக்திசாலியான சூழ்நிலை மூலமாக அனேக துடித்துக் கொண்டிருக்கும், அலைந்து கொண்டிருக்கும், கூக்குரல் இடும் ஆத்மாக்களுக்கும் ஆனந்தம், அமைதி மற்றும் சக்தியின் அனுபவம் ஆக வேண்டும். எப்படி நெருப்பில் எந்தவொரு பொருளையும் போடுவதினால் அதனுடைய பெயர், ரூபம், குணம் அனைத்தும் மாறி விடுகிறது, அதே போல் எப்பொழுது

நீங்கள் தந்தையின் நினைவு என்ற அக்னியில் விழுந்திருக்கும் போது பரிவர்த்தனை ஆகிவிடுகிறீர்கள். மனிதனிலிருந்து பிராமணன் ஆகிவிடுகிறீர்கள், பிறகு பிராமணனனிலிருந்து பரிஷ்தாவாக பிறகு தேவதை ஆகிவிடுகிறீர்கள். எப்படி பச்சை மண்ணை அச்சில் ஊற்றி நெருப்பில் போடுகிறார்கள் என்றால் செங்கல் ஆகிவிகிறது, அதே போல் இதுவும் பரிவர்த்தனை ஆகிவிடுகிறது. எனவே இந்த நினைவைத் தான் ஜுவாலா ரூபம் என்று கூறுவது. சேவாதாரியாக இருக்கிறீர்கள், அன்பானவர்களாக இருக்கிறீர்கள். ஒரு பலம், ஒருவர் நம்பிக்கை உள்ளவராக இருக்கிறீர்கள். இவை அனைத்துமோ சரி தான். ஆனால் மாஸ்டர் சர்வ சக்திவானின் நிலை அதாவது லைட் மைட் ஹவுஸின் நிலையில் வந்து விடுகிறீர்கள் என்றால் அனைவரும் உங்கள் எதிரில் விட்டில் பூச்சிற்குச் சமமாக சுற்றி வரத் தொடங்குவார்கள். ஜுவாலா சொரூப நினைவிற்காக மனம் மற்றும் புத்தி இரண்டிற்கும் ஒன்றோ சக்திசாலியான பிரேக் வேண்டும், மேலும் வளைந்து கொடுப்பதற்கான சக்தியும் வேண்டும். இதன் காரணமாக புத்தியின் சக்தி மேலும் வேறு எந்த சக்தியும் வீணாகாமல் சேமிப்பாகிக் கொண்டே இருக்கும். எந்த அளவு சேமிப்பாகுமோ அந்த அளவே பகுத்தறியும் மற்றும் நிர்ணயம் செய்யும் சக்தி அதிகரிக்கும். இதற்காக இப்பொழுது எண்ணங்களின் விஸ்தாரத்தை முடிவு கட்டிக் கொண்டே இருங்கள் அதாவது சாரத்தில் கொண்டு வரும் சக்தியை தாரணை செய்யுங்கள். எந்தக் காரியம் செய்தாலும் மற்றும் பேசிக் கொண்டிருந்தாலும் இடையிடையே எண்ணங்களின் டிராஃபிக்கை நிறுத்துங்கள். ஒரு நிமிஷத்திற்காகக்கூட மனதின் எண்ணங்களை, உடல் மூலமாக நடந்து சென்று கொண்டிருந்தாலும், காரியம் செய்து கொண்டிருந்தாலும் இடையில் நிறுத்தி கூட இந்த பயிற்சியை செய்யுங்கள். அப்பொழுது தான் பிந்து ரூபத்தின் சக்திசாலியான நிலையில் நிலைத்திருக்க முடியும். எப்படி அவ்யக்த நிலையில் இருந்து காரியம் செய்வது சரளமாகிக் கொண்டே இருக்கிறதோ அதே போல் இந்த பிந்து ரூபத்தின் நிலையும் சகஜமாகிவிடும். எப்படி ஏதாவது கிருமியை அழிப்பதற்காக டாக்டர்கள் மின்சார ஒளிக்கிரணங்களைப் பாய்ச்சுவார்கள். அதே போல் நினைவின் சக்திசாலியான கிரணங்கள் ஒரு விநாடியில் அனேக பாவங்கள் என்ற கிருமிகளை பஸ்பம் செய்து விடுகிறது. பாவம் பஸ்பம் ஆகிவிட்டது என்றால், பிறகு தன்னை லேசாகவும் மற்றும் சக்திசாலியாகவும் அனுபவம் செய்வீர்கள். நிரந்தர சகஜயோகியாகவோ இருக்கிறீர்கள், ஆனால் இந்த நினைவின் நிலையை இடையிடையே சக்திசாலியாக ஆக்குவதற்காக மட்டும் கவனம் என்ற பலத்தை நிரப்பிக் கொண்டே இருங்கள். தூய்மையின் தாரணை எப்பொழுது சம்பூர்ண ரூபத்தில் இருக்குமோ அப்பொழுது உங்களுடைய சிரேஷ்ட எண்ணத்தின் சக்தி முழு ஈடுபாட்டின் அக்னியாக வெளிப்படும், அந்த அக்னியில் அனைத்து குப்பைகளும் பஸ்பம் ஆகிவிடும். பிறகு என்ன நினைப்பீர்களோ அதுவே நடக்கும், விஸ்தாரமான மார்க்கத்தின் சேவை தானாக நடந்து விடும். எப்படி தேவிகளின்

நினைவுச்சின்னத்தை ஜுவாலை மூலமாக அசுரர்களை பஸ்பம் செய்து விட்டார்கள் என்று காண்பிக்கிறார்கள். அசுரன் இல்லை, ஆனால் அசுர சக்திகளை அழித்து விட்டார்கள். அது இந்த நேரத்தின் நினைவுச் சின்னமாகும். இப்பொழுது ஜுவாலாமுகி ஆகி அசுர சம்ஸ்காரம், அசுர சுபாவம் அனைத்தையும் பஸ்பம் செய்யுங்கள். இயற்கை மற்றும் ஆத்மாக்களில் என்னென்ன மிக கீழ்தரமான குணங்கள் இருக்கின்றனவோ அவற்றை பஸ்பம் செய்பவராக ஆகுங்கள். இது மிகப்பெரிய வேலை, வேகமாகச் செய்தீர்கள் என்றால் தான் முழுமையடையும். எந்தவொரு கணக்காக இருந்தாலும் அது இந்த ஜென்மத்தின் உடையதோஅல்லது முந்தைய ஜென்மத்தின் உடையதோஅது முழு ஈடுபாட்டின் அக்னி சொரூப நிலை இன்றி பஸ்பம் ஆகாது. எப்பொழுதும் அக்னி சொரூப நிலை அதாவது ஜுவாலா ரூபத்தின் சக்திசாலியான நினைவு, விதை ரூபம், லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் நிலையில் பழைய கணக்கு வழக்குகள் பஸ்பம் ஆகிவிடும். மேலும் உங்களை நீங்களே டபுள் லைட் ஆக அனுபவம் செய்வீர்கள். சக்திசாலியான ஜுவாலா சொரூபத்தின் நினைவு எப்பொழுது நினைவின் தொடர்பு எப்பொழுதுமே இணைந்திருக்கிறதோ அப்பொழுது தான் இருக்கும். ஒருவேளை அடிக்கடி தொடர்பு துண்டிக்கப்படுகிறது என்றால் பிறகு அதை இணைப்பதில் நேரம் எடுக்கிறது, உழைப்பும் ஈடுபடுகிறது என்றால் சக்திசாலியான நிலைக்குப் பதிலாக பலஹீனமானவர் ஆகிவிடுகிறீர்கள். நினைவை சக்திசாலியாக ஆக்குவதற்குப் பதிலாக விஸ்தாரத்தில் சென்று கொண்டே சாரத்தின் நிலையின் பயிற்சி குறைய வேண்டாம், விஸ்தாரத்தில் சாரம் மறந்து விட வேண்டாம். சாப்பிடுங்கள் - குடியுங்கள், சேவை செய்யுங்கள் ஆனால் விலகியிருக்கும் நிலையை மறக்காதீர்கள் . சாதனை என்றால் சக்திசாலியான நினைவு. நிரந்தரமாக தந்தையுடன் இதயப்பூர்வமான சம்மந்தம். யோகாவில் அமர்ந்து விட்டேன் என்ற இதை மட்டும் சாதனை என்று கூற முடியாது. ஆனால் எப்படி உடலால் அமருகிறீர்களோ அதே போல் உள்ளம், மனம், புத்தி ஒரு தந்தையின் பக்கம் தந்தையுடனேயே அமர்ந்து விட வேண்டும். அந்த மாதிரியான ஒருமித்த நிலை தான். ஜுவாலையை சுடர்விட்டு எரியச் செய்யும். நினைவு யாத்திரை சகஜமாகவும் இருக்கட்டும். மேலும் சக்திசாலியாகவும் இருக்கட்டும். சக்திசாலியான நினைவு ஒரு நேரத்தில் இரட்டை அனுபவம் செய்விக்கும். ஒரு பக்கம் நினைவு அக்னியாகி பஸ்பம் செய்யும் காரியம் செய்கிறது, பரிவர்த்தனை செய்யும் காரியம் செய்கிறது மற்றும் இன்னொரு பக்கம் குஷி மற்றும் லேசான தன்மையின் அனுபவம் செய்விக்கிறது. அந்த மாதிரி விதிப்பூர்வமான நினைவைத் தான் யதார்த்த மற்றும் சக்திசாலியான நினைவு என்று கூறுவது.

வரதானம் –

அன்பின் லி்ஃப்ட் (மின் தூக்கி) மூலமாக பறக்கும் கலையை அனுபவம் செய்யக்கூடிய

அழியாத அன்பிற்குரியவர் ஆகுக.

கடும் உழைப்பிலிருந்து விடுபடுவதற்காக தந்தையின் அன்பிற்குரியவர் ஆகுங்கள். இந்த அழியாத அன்பு தான் அழியாத லி்ப்ட் ஆகி பறக்கும் கலையின் அனுபவம் செய்விக்கிறது. ஆனால் ஒருவேளை அன்பில் அலட்சியம் இருக்கிறது என்றால் தந்தையிடமிருந்து கரண்ட் கிடைப்பதில்லை. மேலும் லி்ப்ட் வேலை செய்வதில்லை. எப்படி மின்சாரம் தடை படுவதினால், தொடர்பு அறுந்து விடுவதினால் லி்ப்ட் மூலமாக சுகத்தின் அனுபவம் செய்ய முடியாது, அதே போல் அன்பு குறைவாக இருக்கிறது என்றால் கடும் உழைப்பு செய்ய வேண்டிய அனுபவம் ஆகும், எனவே அழியாத அன்பானவர், அன்பிற்குரியவர் ஆகுங்கள்.

சுலோகன்:

சுப எண்ணம் மற்றும் திவ்ய புத்தியின் இயந்திரம் மூலமாக அதிவேகத்தில் மேலே பறந்து கொண்டே இருங்கள்.

ஓம்சாந்தி

02.05.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" மாயாவை காரணம் ஆக்குவதற்கு பதிலாக மாஸ்டர் படைப்பவர், சக்திசாலியானவர் ஆகுங்கள் "

இன்று பாப்தாதா இந்த முழு சபையிலும் யார் ஞானம் மற்றும் யோகாவில் சொரூபமாகி மாஸ்டர் படைப்பவரின் நிலையில் எப்பொழுதும் நிலைத்திருக்கிறார்களோ அந்த ஆத்மாக்களை விசேஷமாகப் பார்த்துக் கொண்டிருந்தோம். அனைவருமே தன்னை ஞானி மற்றும் யோகி என்றோ கூறுகிறார்கள். ஆனால் ஞான சொரூப தந்தைக்குச் சமமான ஆத்மா, யோக சொரூப தந்தைக்குச் சமமான ஆத்மா, இதில் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள். தந்தைக்குச் சமமாக இருக்கிறார் என்றால் மாஸ்டர் படைப்பவரின் பதவியில் எப்பொழுதும் நிலைத்திருப்பது. இந்த மாஸ்டர் படைப்பவரின் சகஜ ஆசனத்தில் அமர்ந்திருக்கும் சக்திசாலியான ஆத்மாவின் எதிரில் அனைத்து படைப்பும் தாசியின் ரூபத்தில், சேவையில் சகயோகி ஆகிவிடுகிறது. மாஸ்டர் படைப்பவர் தன்னுடைய சுத்தமான எண்ணங்கள் என்ற கட்டளையினால் வாயுமண்டலத்தை என்னவாக ஆக்க விரும்புகிறாரோ அதை ஒரு நொடியில் அவர் ஆக்க முடியும். எப்படி வைப்ரேஷனை பரப்ப விரும்புகிறாரோ அந்த மாதிரி பரப்ப முடியும். எந்த சக்தியை ஆவஹானம் செய்தாலும் அந்த சக்தி சகயோகி ஆகிவிடுகிறது. எந்த ஆத்மாவுக்கு கிடைக்காதது என்னவெல்லாம் இருக்கிறதோ, அதைத் தெரிந்து அனைத்து பிராப்திகளையும் மாஸ்டர் வள்ளலாகி அந்த ஆத்மாக்களுக்கு கொடுக்க முடியும். அந்த மாதிரி சக்திசாலியான மாஸ்டர் படைப்பவர் நிரந்தரமாக எந்த அளவு சகஜமாக ஆசனத்தில் அமர்ந்திருப்பவராக ஆகியிருக்கிறார் என்ற இதை பார்த்துக் கொண்டிருந்தோம். வேறு என்ன பார்த்தோம்? அனைவருமோ வரிசைக்கிரமமாகத் தான் இருக்கிறார்கள். ஆனால் யார் தன்னை மாஸ்டர் படைப்பவர் என்று கூறிக்கொள்கிறாரோ, அவர் தன்னுடைய படைப்பாகிய, எண்ணத்தின் சக்தியின் ஒரு வீணான எண்ணத்தினால் பயந்து விடுகிறார், மிரண்டு விடுகிறார் என்று அந்த மாதிரியும் பார்த்தோம். நினைவின் அழுத்தம் (பிரஷர்) குறைந்து விடுகிறது. எனவே ஊக்கம், உற்சாகத்தின் துடிப்பு மிகவும் மெதுவாகி விடுகிறது. மனம் உடைந்து போவதின் வியர்வை வெளியாகிறது. அந்த மாதிரி ஆகிறது தான் இல்லையா! என்ன செய்வது? எப்படி செய்வது? என்று இந்த விஷயத்தில் நொந்து போய் விடுகிறார்கள். தவறு ஒரு விநாடிக்கானது. தன்னுடைய மாஸ்டர் படைப்பவரின் பதவியிலிருந்து கீழே வந்து விடுகிறார்கள். எங்கு பதவி முடிவடைந்து விடுகிறது மற்றும் நினைவு மறந்த நிலை ஆகிறது

என்றால் அதே விநாடி மாயாவின் சேனை தாக்குதல் செய்வதற்காக வந்து விடுகிறது. யார் ஆவஹானம் செய்கிறார்? தானே கீழே வந்து விடுகிறார், பதவியின் ஆசனத்தை விட்டு விடுகிறார் என்றால் காலியான இடத்தை மாயா தன்னுடையதாக ஆக்கிவிடுகிறது. எனவே என்னை பழி சொல்லாதீர்கள், ஆனால் வர வழைக்கிறீர்கள் என்றால் நான் வந்து சேர்ந்து விடுகிறேன் என்று மாயா கூறுகிறது. புரிந்ததா! நல்லது - இன்றோ சந்திப்பதற்கான நாள், பிறகு என்னென்ன செய்கிறார்கள் ?என்று கூறுவோம்.

அனைத்து மாஸ்டர் படைப்பவர், சகஜ ஆசனத்தில் அமர்ந்திருப்பவர், எப்பொழுதும் குழந்தையாக இருப்பவரிலிருந்து எஜமானன் ஆகுபவன் என்ற நினைவு சொரூபத்திருப்பவர், எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக ஞான சொரூப சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

குமாரிகளுடன் சந்திப்பு –

குமாரிகள் தன்னுடைய முடிவை செய்து விட்டீர்களா? ஏனென்றால் குமாரி வாழ்க்கை தான் முடிவெடுப்பதற்கான காலமாக இருக்கிறது. முடிவெடுக்கும் நேரத்தில் தந்தையிடம் வந்து சேர்ந்து விட்டீர்கள் என்றால் நீங்கள் எவ்வளவு பாக்கியம் நிறைந்தவர்கள்! ஒருவேளை வாழ்க்கையில் இன்னும் கொஞ்சம் காலம் கடந்து சென்று விட்டிருந்தது என்றால் கூண்டுக் கிளி ஆகியிருந்திருப்பீர்கள். கூண்டுக் கிளி ஆக வேண்டுமா? அல்லது சுதந்திர பறவையாக ஆக வேண்டுமா? என்னவாக ஆக வேண்டும்? குமாரியோ சுதந்திரப் பறவை. குமாரிகள் வேலை செய்வதற்கான என்ன அவசியம் இருக்கிறது. வங்கியில் எதற்காக சேமிப்பு செய்ய வேண்டும்? குடும்பத்தின் தந்தையிடம் இருந்தால் கூட இரண்டு பிடி சாதம் கிடைத்து விடும், ஆன்மீகத் தந்தையிடமிருந்தீர்கள் என்றால் ஒரு குறையும் இருக்காது, பிறகு ஏன் வேலை செய்கிறீர்கள்? சென்டரில் இருப்பதற்கு பயமாக இருக்கிறதா என்ன? ஒருவேளை பற்றுதல் பாசம் இருக்கிறது என்றாலும் துக்க உணர்வுகள் வர முடியும். பொதுவாகவே குமாரிகள் வீட்டில் இருக்க முடியாது. நான் தந்தையின் இதய சிம்மாசனதாரி என்ற இந்த போதையிலேயேஇருங்கள். சதா கிரீடம் அணிந்தவர், திலகம் அணிந்தவர் என்ற இந்த நினைவில் இருங்கள். ஒருவேளை யாருக்காவது அமர்வதற்காக மிக நல்ல ஆசனம் கிடைத்து விடுகிறது என்றால் அதை எப்படி விடுவார்? ஆக வேண்டும் என்றால் சிரேஷ்டமானவராகத் தான் ஆக வேண்டும், ஆம் என்றால் ஆம். இறக்க வேண்டும் என்றால் ஒரு நொடியில் இறக்க வேண்டும். இந்த இறப்பு தான் மிக இனிமையானது. ஒருவேளை இலட்சியம் உறுதியாக இருக்கிறது என்றால் யாரும் அசைக்க முடியாது. இலட்சியம் காயாக இருக்கிறது என்றால் அனேக சாக்குபோக்குகள், அனேக விஷயங்கள்

வரும். அதன் காரணமாகத் தடை ஏற்படும். எனவே எப்பொழுது திட எண்ணம் வையுங்கள்.

அதர்குமாரர்களின் குரூப்புடன் சந்திப்பு -

அனைத்து விதமான கடின உழைப்பிலிருந்து உங்களை தந்தை விடுவித்து விட்டார் இல்லையா? பக்தியின் உழைப்பிலிருந்து விடுபட்டு விட்டீர்கள். குடும்ப வாழ்க்கையின் உழைப்பிலிருந்து விடுபட்டு விட்டீர்கள். குடும்ப வாழ்க்கையில் டிரஸ்டி ஆகிவிட்டீர்கள் என்றால் கடின உழைப்பு முடிவடைந்து விட்டது இல்லையா! மேலும் பக்தியின் பலன் கிடைத்து விட்டது என்றால் பக்தியில் அலைவது அதாவது கடின உழைப்பு அகன்று விட்டது இல்லையா? பக்தியின் பலன் என்ற பழ ரசத்தை அருந்துபவன் நான் என்று நினைக்கிறீர்களா? பொதுவாக பக்தியின் பலன் ஞானம் என்று கூறுகிறார்கள், ஆனால் உங்களுக்கு பக்தியின் பலனாக ஞானத்தை அளிக்கும் வள்ளல் கிடைத்து விட்டார். அந்த மாதிரி பக்தியின் பலனும் கிடைத்தது. மேலும் குடும்பஸ்தனின் என்னென்ன துக்கம், அசாந்தியின், பிரச்சனைகள் இருக்கின்றனவோ அவைகளும் அகன்று விட்டன, இரண்டிலிருந்தும் விடுபட்டுவிட்டீர்கள். ஜீவன் பந்தனத்திலிருந்து ஜீவன்முக்த் ஆத்மாக்களாக ஆகிவிட்டீர்கள். எப்பொழுது யாராவது பந்தனத்திலிருந்து விடுபட்டு விடுகிறார் என்றால் குஷியில் நடனமாடுவார். பந்தனத்திலிருந்து விடுபட்ட ஆத்மாக்கள் நீங்களும் எப்பொழுதும் குஷியில் நடனமாடிக் கொண்டே இருங்கள். பாடலைப் பாடுங்கள் மற்றும் குஷியில் நடனமாடுங்கள். அவ்வளவு தான்! இதுவோ சுலபமாக செய்ய முடியும் காரியம் தான் இல்லையா! நான் ஜீவன் முக்த் ஆத்மா என்று எப்பொழுதும் நினைவில் வையுங்கள். அனைத்து பந்தனங்களும் முடிவடைந்து விட்டன, கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விட்டீர்கள், அன்பாக இருக்கும் நிலையில் வந்து விட்டீர்கள். எனவே எப்பொழுதும் இலேசாக ஆகி பறந்து கொண்டே இருங்கள். பூஜாரியிலிருந்து பூஜைக்குரியவர், துக்கமானவரிலிருந்து சுகமானவர், முள்ளிலிருந்து மலர் ஆகிவிட்டீர்கள். எவ்வளவு வித்தியாசம் ஆகிவிட்டது! இப்பொழுது பழைய கலியுக உலகத்தின் எந்தவொரு சம்ஸ்காரமும் உங்களிடம் இருக்க வேண்டாம். ஒருவேளை பழைய உலகத்தின் ஏதாவது பழைய சம்ஸ்காரம் இருந்து விட்டது என்றால் அது தன் பக்கம் இழுத்து விடும். எனவே எப்பொழுதும் புதிய வாழ்க்கை, புதிய சம்ஸ்காரம் இருக்கட்டும். சிரேஷ்ட வாழ்க்கை இருக்கிறது என்றால் சிரேஷ்ட சம்ஸ்காரம் வேண்டும், சிரேஷ்ட சம்ஸ்காரமே தனக்கு நன்மை மற்றும் உலகிற்கு நன்மை செய்வது. அந்த மாதிரி சம்ஸ்காரம் நிரம்பி விட்டதா? தன்னுடைய நன்மை மற்றும் உலக நன்மையைத் தவிர வேறு ஏதாவது சம்ஸ்காரம் இருக்கிறது என்றால், அது இந்த வாழ்க்கையில் தடை ஏற்படுத்தும். எனவே பழைய சம்ஸ்காரம் அனைத்தையும் முடிக்க வேண்டும். நான் ஒரு ஆன்மீக ரோஜா மலர் என்ற இந்த நினைவு எப்பொழுதும்

இருக்கட்டும். ஆன்மீக ரோஜாமலர் என்றால் எப்பொழுதும் ஆன்மீக நறுமணம் பரப்புபவர். எப்படி ரோஜாமலர் மணமும் கொடுக்கும், அதனுடைய வர்ணம் ரூபமும் நல்லதாக இருக்கும். நறுமணமும் மிக நல்ல முறையில் தன் பக்கம் கவர்ந்திழுக்கவும் செய்யும். அந்த மாதிரி நீங்களும் தந்தையின் பூந்தோட்டத்தில் இருக்கும் ஆன்மீக ரோஜா மலர். ரோஜா மலரை எப்பொழுதும் பூஜையில் அர்ப்பணம் செய்வார்கள். ஆன்மீக ரோஜாமலரும் தந்தையின் முன்பு அர்ப்பணம் ஆவார்கள். யக்ஞ சேவாதாரி ஆவதும் கூட அர்ப்பணம் ஆவது தான். அர்ப்பணம் ஆவது என்றால் ஒரு ஸ்தானத்தில் இருப்பது என்று அப்படி அர்த்தம் அல்ல. எங்கே இருந்தாலும் ஆனால் ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். தன்னுடையது என்பது கொஞ்சம் கூட கலந்து விட வேண்டாம். தன்னை அந்த மாதிரி பாக்கியம் நிறைந்த நறுமணம் கமழும் ஆன்மீக ரோஜாஎன்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா. நான் அல்லாவின் பூந்தோட்டத்தின் ஆன்மீக ரோஜா மலர் என்று எப்பொழுதும் நினைவில் இருங்கள், இந்த போதை எப்பொழுதுமே இருக்கட்டும். போதையில் இருங்கள், மேலும் தந்தையின் மகிமையின் பாடலை பாடிக் கொண்டே இருங்கள். இந்த ஈஸ்வரிய போதையிலிருந்து என்னென்ன பேசுவீர்களோ அதன் காரணமாக உங்களுடைய பாக்கியம் உருவாகும்.

எப்பொழுதும் தன்னை வெற்றி அடையும் பாண்டவன் என்று நினைத்து நடந்து கொள்ளுங்கள். பாண்டவர்களின் வெற்றி ஒவ்வொரு கல்பத்திலும் மிகவும் பிரசித்தியானது. ஐவராக இருந்த போதிலும் வெற்றி அடைந்தார்கள். வெற்றி அடைந்ததற்கான காரணம் துணைவன் தந்தை உடன் இருந்தார் இல்லையா! எப்படி தந்தை நிரந்தரமாக வெற்றி அடைபவர் அதே போல் தந்தைக்குச் சமமாக ஆகுபவர்களும் எப்பொழுதும் வெற்றி அடைபவர் ஆகிறார்கள். நான் எப்பொழுதும் வெற்றி அடையும் இரத்தினம் ஆவேன் என்றால் இந்த விஷயம் மிகுந்த குஷியையும் போதையையும் உருவாக்கும். எப்பொழுது பாண்டவர்களின் கதையை கேட்கிறீர்களோ அப்பொழுது உங்களுக்கு என்ன அனுபவம் ஆகிறது? இது என்னுடைய வாழ்க்கை கதை, ஒரு அர்ச்சுனனுக்கு கூறினார் என்று கூறப்படுகிறது, உலகின் கணக்குப்படி ஐவர் இருந்தார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் எப்பொழுதும் வெற்றி அடைந்தார்கள். இதே நினைவு எப்பொழுதுமே பசுமையாக இருக்கட்டும். ஏதோநேற்று நடந்த விஷயம் மாதிரி மிகவும் தெளிவாக நினைவில் இருக்கட்டும். அனைவருமே வீட்டில் அமர்ந்து கொண்டே பாக்கியத்தை அடைந்து விட்டீர்கள் தான் இல்லையா? வீட்டில் அமர்ந்திருக்கும் போதேஅந்த மாதிரி உயர்ந்ததிலும் உயர்ந்த பாக்கியம் கிடைத்திருக்கிறது. அது இறுதி வரை மகிமை செய்யப்படும். தந்தையின் வீட்டிற்கு வந்திருக் கிறீர்கள், தன்னுடைய வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள், கொண்டாடினீர்கள், சாப்பிட்டீர்கள், விளையாடினீர்கள் . . . பொதுவாக

எப்பொழுது களைப்படைந்து விடுகிறார்கள் என்றால் ஓய்வில் சென்று விடுவார்கள் இங்கேயும் வியாபாரம் செய்து விட்டு, வேலை செய்து விட்டு களைப்படைந்து வருகிறீர்கள் மேலும் இங்கே வந்தவுடனேயே தாமரை மலர் ஆகிவிடுகிறீர்கள். தந்தையைத் தவிர வேறு யாரும் தென்படுவதில்லை, ஓய்வு கிடைத்து விடுகிறது. ஒரு தந்தையை சந்திக்க வேண்டும், அவர் கூறும் விஷயங்களைக் கேட்க வேண்டும், அவரை நினைவு செய்ய வேண்டும், இது தான் நான் செய்ய வேண்டிய வேலை. அவ்வளவு தான்! அப்படியானால் களைப்பு அகன்றது, புத்துணர்வு பெற்று விட்டீர்கள் இல்லையா? யாராவது இரண்டு மணி நேரத்திற்காகவாவது வந்தாலும் புத்துணர்வு பெற்று விடுகிறார். ஏனென்றால் இந்த ஸ்தானமே புத்துணர்வு அடைவதற்கான ஸ்தானம். இங்கே வருவது என்றாலே புத்துணர்வு பெறுவது. நல்லது.

விடைபெறும் நேரத்தில்:

ஒவ்வொரு குழந்தையும் ஒருவர் இன்னொருவரை விட அதிக பிரியமானவர். அனைவர்களிடமும் அவரவர்களுடைய விசேஷங்கள் இருக்கின்றன. கடைசி நம்பரில் இருந்தாலும் கூட ஆனால் அவரும் தந்தையின் குழந்தை தானே! எப்படிப்பட்ட குழந்தையாக இருந்தாலும் தியாகம் மற்றும் பாக்கியத்தையோ அடைந்து விட்டார் இல்லையா! எனவே நீங்கள் அனைவருமே நான் தந்தையின் பிரியமானவன் என்று புரிந்து கொள்ளுங்கள். வரிசைக்கிரமமாக இருந்தாலும் அன்பு நினைவுகளோ அனைவருக்கும் கிடைக்கிறது. அனைவருக்கும் பாப்தாதா மிக அன்புடன் உள்ளப்பூர்வமான சிநேகத்துடன் அன்பு நினைவுகள் கொடுக்கிறார். சிநேகம் மற்றும் அன்பு அனைவருக்கும் ஒரே மாதிரியானது. அனைவரும் கண்டெடுக்கப்பட்ட அன்பான தந்தையின் புஜங்கள் ஆவீர்கள். எனவே தன்னுடைய புஜங்களோ அவசியம் பிரியமாக இருக்கும் இல்லையா? தன்னுடைய புஜங்கள் எப்பொழுதாவது பிரியமற்றதாக இருக்குமா என்ன? கடைசி நம்பரில் இருப்பவர் கூட கோடியில் சிலரானவர் இல்லையா? எனவே கோடியில் சிலர் என்றால் பிரியமானவர் ஆகிவிட்டார் இல்லையா? நல்லது. ஓம் சாந்தி.

அவ்யக்த மகாவாக்கியம் திருப்திமணியாகி எப்பொழுதும் திருப்தியாக இருங்கள் மேலும் அனைவரையும் திருப்தி படுத்துங்கள் –

இந்த முழு வருடத்திலும் ஒவ்வொரு குழந்தையும் யாரை சந்தித்தாலும் அவருக்கு திருப்தியின் சகயோகம் கொடுக்க வேண்டும் என்று பாப்தாதா விரும்புகிறார். சுயம் அவரும் திருப்தியாக

இருக்க வேண்டும், மேலும் மற்றவர்களையும் திருப்திப்படுத்த வேண்டும். இந்த சீசனின் சுவமானம் அதாவது சுயமரியாதை திருப்திமணி, எனவே எப்பொழுதும் திருப்தியாக இருக்க வேண்டும் மேலும் திருப்திப்படுத்த வேண்டும் - இந்த சுவமானத்தின் சீட்டில் எப்பொழுதும் ஒருமித்து அமர்ந்திருக்க வேண்டும். இன்றைய காலத்தில் டென்ஷன் அதாவது மனஅழுத்தம் மற்றும் பிரச்சனைகள் அதிகம் இருக்கின்றன, இந்தக் காரணத்தினால் திருப்தியின்மை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அந்த மாதிரி நேரத்தில் திருப்திமணிகள் நீங்கள் அனைவரும் தன்னுடைய திருப்தியின் பிரகாசம் மூலம் மற்றவர்களையும் திருப்தியாக இருப்பவராக ஆக்குங்கள். முதலில் தன் மீது தான் திருப்தியாக இருங்கள், பிறகு சேவையில் திருப்தியாக இருங்கள். பிறகு சம்மந்தத்தில் திருப்தியாக இருங்கள். அப்பொழுது தான் திருப்திமணி என்று கூறுவோம். குழந்தைகளை நிரந்தர உண்மையான சேவாதாரி ஆகுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார், ஆனால் பெயர் சேவையாக இருக்கிறது, மேலும் அவரே டிஸ்டர்ப் (நிலை குலைந்து போகுபவர்) ஆக இருக்கிறார், மற்றவர்களையும் டிஸ்டர்ப் செய்கிறார் என்றால் அந்த மாதிரியான சேவையை செய்யாமல் இருப்பது நல்லது. ஏனென்றால் சேவையின் விசேஷ குணம் திருப்தி. தன் மீதோதொடர்பில் வருபவர் மீதோதிருப்தி இல்லை என்றால் அந்த சேவை தனக்கும் பலனை பிராப்தி செய்விக்காது. மேலும் மற்றவருக்கும் செய்விக்காது. எனவே முதலில் அவர் தன்னை திருப்தி மணியாக ஆக்கி பிறகு சேவையில் வருகிறார் என்றால் அது நல்லது. இல்லை என்றால் வெளியில் தெரியாத சுமை ஏறுகிறது. மேலும் அந்த சுமை பறக்கும் கலையில் தடை ரூபம் ஆகிவிடுகிறது. எப்பொழுதும் தடையற்றவராக எப்பொழுதும் தடையை அழிப்பவராக மேலும் எப்பொழுதும் திருப்தியாக இருப்பது, மேலும் அனைவரையும் திருப்தியானவராக ஆக்குவது என்ற சான்றிதழைத் தான் சேவாதாரிகள் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். இந்த சான்றிதழ் பெறுவது என்றால் சிம்மாசனதாரி ஆவது. எப்பொழுதும் திருப்தியாக இருந்து அனைவரையும் திருப்தி படுத்த வேண்டும் என்ற இந்த லட்சியத்தை வையுங்கள். எந்த ஆத்மாவிற்கு அனைத்து பிராப்திகளின் அனுபவம் ஆகுமோ அவர் எப்பொழுதும் திருப்தியாக இருப்பார். அவருடைய முகத்தில் எப்பொழுதும் மகிழ்ச்சியின் அடையாளம் தென்படும். சேவாதாரி எப்பொழுது தன் மீதும் மேலும் மற்றவர்களின் மீதும் திருப்தியாக இருக்கிறாரோ அப்பொழுது சேவையின் சகயோகத்தின் ஊக்கம், உற்சாகம் இயல்பாக இருக்கும். சொல்லவும், செய்விக்கவும் வேண்டியதிருக்காது. திருப்தி சுலபமாகவே ஊக்கம், உற்சாகத்தில் கொண்டு வருகிறது சேவாதாரிக்கு விசேஷமாக திருப்தியாக இருக்க வேண்டும் மற்றும் திருப்தி படுத்த வேண்டும் என்ற இந்த லட்சியம் தான் இருக்க வேண்டும். எந்த அளவு தன்னை அனைத்து பிராப்திகளினால் நிரம்பியவர் என்று அனுபவம் செய்வீர்களோ அந்த அளவு திருப்தியாக இருப்பீர்கள். ஒருவேளை கொஞ்சமாவது குறைவின் உணருதல் ஏற்படுகிறது என்றால், எங்கு குறை

இருக்குமோ அங்கு அதிருப்தி இருக்கும். நம்முடைய இராஜ்யமோ இல்லை தான். எனவே கொஞ்சம் கடும் உழைப்பு செய்ய வேண்டியதிருக்கிறது. ஆனால் இங்கு பிரச்சனையோ விளையாட்டாக ஆகிவிட்டது, தைரியம் வைப்பதினால் தேவையான நேரத்தில் சகயோகம் கிடைத்து விடுகிறது. எனவே தன்னுடைய திருப்தியின் கூடவே தன்னுடைய உயர்ந்த நிலை மூலமாக அனைவருக்கும் திருப்தியின் சகயோகம் கொடுங்கள். செய்விப்பவர், செய்வித்துக் கொண்டிருக்கிறார், நான் ஒரு கருவியாக ஆகி மட்டும் செய்து கொண்டிருக்கிறேன் என்ற இந்த நினைவிருப்பது தான் சேவாதாரியின் விசேஷம் ஆகும். இதன் மூலம் சேவையில் மற்றும் சுயமுயற்சி செய்வதில் எப்பொழுதும் திருப்தியாக இருப்பீர்கள். மேலும் யாருக்கு பொறுப்பாளர் ஆவீர்களோ அவர்களிடமும் கூட திருப்தி இருக்கும். எப்பொழுதும் திருப்தியாக இருப்பது மேலும் மற்றவர்களை திருப்தியாக வைத்துக் கொள்வது இது தான் விசேஷம். பிராமணன் என்றால் அறிவாளி, அவர் எப்பொழுதும் தானும் திருப்தியாக இருப்பார். மேலும் மற்றவர்களையும் திருப்தியாக வைத்துக் கொள்வார். ஒருவேளை மற்றவர்கள் அதிருப்தி படுத்துவதினால் அதிருப்தியாக இருக்கிறார் என்றால் சங்கமயுக பிராமண வாழ்க்கையின் சுகத்தை பெற முடியாது. சக்தி சொரூபமாகி மற்றவர்களின் வாயுமண்டலத்திலிருந்து தன்னை விலக்கிக் கொள்வது, அதாவது தன்னை பாதுகாத்துக் கொள்வது என்ற இது தான் இந்த லட்சியத்தை பிராப்தி செய்வதற்கான வழி. யார் உள்ளப்பூர்வமாக சேவை செய்கிறார்கள் மற்றும் நினைவு செய்கிறார்களோ அவர்களுக்கு உழைப்பு குறைவாகவும், மேலும் திருப்தி அதிகமாகவும் இருக்கும். மேலும் உள்ளத்தின் அன்பினால் நினைவு செய்வதில்லை, ஆனால் ஞானத்தின் ஆதாரத்தினால் மட்டும் புத்தியால் நினைவு செய்கிறார்கள் மற்றும் சேவை செய்கிறார்கள் என்றால் அவர்களுக்கு அதிக உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கும், திருப்தி குறைவாக இருக்கும். வெற்றி கிடைத்து விட்டாலும் கூட உள்ளத்தின் திருப்தி குறைவாக இருக்கும். நல்லதாகத் தான் நடந்தது, ஆனால் இருந்தாலும், இருந்தாலும் . . . என்று கூறிக் கொண்டே இருப்பார்கள். மேலும் உள்ளப்பூர்வமானவர், எப்பொழுதும் திருப்தியின் பாடலைப் பாடிக். கொண்டே இருப்பார். ஒருவேளை திருப்தியான ஆத்மாவாக இல்லை என்றால், உடலின் பசி உள்ளவராக இருந்தாலும், மனதின் பசி இருந்தாலும் கூட எவ்வளவு தான் கிடைத்தாலும் திருப்தியான ஆத்மாவாக இல்லாத காரணத்தினால் எப்பொழுதுமே அதிருப்தியாக இருப்பார். இராயல் ஆத்மாக்கள் எப்பொழுதும் சிறிதளவு கிடைத்தாலும் கூட நிரம்பியிருப்பார்கள். எங்கு நிரம்பியிருக்கிறதோ அங்கு திருப்தியிருக்கும். எந்த சேவை திருப்தியில்லாதவராக ஆக்குகிறதோ அது சேவையே இல்லை. சேவையின் அர்த்தமே வெண்ணெய் கொடுக்கக்கூடிய சேவை. ஒருவேளை சேவையில் திருப்தியின்மை இருக்கிறது என்றால் சேவையை விட்டு விடுங்கள், ஆனால் திருப்தியை விடாதீர்கள். எப்பொழுதும் எல்லைக்குட்பட்ட விருப்பங்களிலிருந்து விலகி, நிரம்பி யிருந்தீர்கள் என்றால் சமமாக ஆகிவிடுவீர்கள்.

சங்கமயுகத்தின் விசேஷ வரதானம் திருப்தியாக இருப்பது. இந்த திருப்தியின் விதை அனைத்து பிராப்திகள். திருப்தியின்மையின் விதை ஸ்தூலமான, சூட்சுமமான பிராப்தியின்மை. பிராமணர்கள் உங்களைப் பொருத்தளவில் இல்லை என்ற ஒரு பொருள் கூட பிராமணர்களின் பொக்கிஷத்தில் மேலும் பிராமணர்களின் வாழ்க்கையில் இல்லை. அப்படியென்றால் பிறகு திருப்தியின்மை ஏன் இருக்கிறது? எப்பொழுது வரமளிக்கும் வள்ளல், வள்ளலின் களஞ்சியம் நிரம்பிருக்கிறது, இந்த அளவு பெரிய பிராப்தி இருக்கிறது, பிறகு திருப்தியின்மை ஏன்? யார் திருப்தி மணிகளாக இருக்கிறார்களோ அவர் மனதால், உள்ளத்தால், அனைவர் மேலும், தந்தை மீதும், நாடகத்தின் மீதும் எப்பொழுதும் திருப்தியாக இருப்பார். அவருடைய மனம் மற்றும் உடலில் எப்பொழுதும் மகிழ்ச்சியின் அலை தென்படும். ஏதாவது சூழ்நிலை வந்து விட்டாலும், கணக்கு வழக்கை முடிக்கும் ஏதோஒரு ஆத்மா மோதுவதற்கு வருகிறார் என்றாலும், உடலின் கர்மத்தின் விளைவுகளை அனுபவிப்பது எதிரில் வந்து கொண்டிருந்தாலும் எல்லைக்குட்பட்ட ஆசைகளிலிருந்து விடுபட்ட ஆத்மா திருப்தியின் காரணமாக மகிழ்ச்சியின் ஜொலிப்பில் மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரமாகத் தென்படுவார். திருப்தியான ஆத்மாக்கள் எப்பொழுதும் சுயநலம் அற்றவராக மேலும் எப்பொழுதும் யார் மீதும் பழி சுமத்தாதவர்களாக இருப்பார்கள். மற்ற யார் மீதும் பழி சுமத்த மாட்டார்கள். பாக்கியத்தை உருவாக்குபவர் மேலும் நாடகத்தின் மீதும் மற்றவர்களின் மீதும், என்னுடைய உடலே அப்படித் தான் என்று உடலின் கணக்கு வழக்கு மேலும் அப்படி குறை கூற மாட்டார். அந்த மாதிரி எப்பொழுதும் சுயநலமற்றவராக குறை கூறாத உள்உணர்வு - பார்வை உள்ளவராக இருப்பார். சங்கமயுகத்தின் விசேஷம் திருப்தி, இது தான் பிராமண வாழ்க்கையின் விசேஷ பிராப்தி ஆகும். திருப்தி மற்றும் மகிழ்ச்சி இல்லை என்றால் பிராமணன் ஆனதின் இலாபம் இல்லை. எனவே திருப்தியாக இருங்கள். மேலும் அனைவரையும் திருப்தி படுத்துங்கள். இதில் தான் உண்மையான சுகம் இருக்கிறது, இது தான் உண்மையான சேவை.

வரதானம்:

தெய்வீக புத்தியின் வரதானம் மூலமாக தன்னுடைய பதிவேட்டை கறையற்றதாக வைக்கக்கூடிய கர்மங்களின் விளைவுகளைத் தெரிந்தவர் ஆகுக.

பிராமண ஜென்மம் எடுத்தவுடனேயே ஒவ்வொரு குழந்தைக்கும் தெய்வீக புத்தியின் வரதானம் கிடைத்திருக்கிறது. இந்த தெய்வீக புத்தி மேல் எந்தவொரு பிரச்சனையின், தொடர்பின் மற்றும் மனம் சொல்லும் வழியின் பிரபாவம் ஏற்பட வேண்டாம். அப்பொழுது தான் பதிவேடு

கறையற்றதாக இருக்க முடியும். ஆனால் ஒருவேளை தேவையான நேரத்தில் தெய்வீக புத்தி வேலை செய்யவில்லை என்றால் பதிவேட்டில் கறைபடிந்து விடுகிறது, எனவே கர்மங்களின் லீலை மிக ஆழமானது என்று கூறப்படுகிறது. உலகத்தினரோ ஒவ்வொரு அடியிலும் கர்மங்களின் விளைவுகளை அதிகரிக்கிறார்கள், ஆனால் கர்மங்களின் விளைவுகளை தெரிந்த நீங்கள் ஒருபொழுதும் கர்ம விளைவுகளை அதிகரிக்க முடியாது. நீங்களோ ஆஹா! என்னுடைய சிரேஷ்ட கர்மமே! என்று கூறுவீர்கள்.

சுலோகன் :

தூய்மையின் ஆழமான தாரணையினால் தான் அதீந்திரி சுகத்தின் அனுபவம் ஆகும்.

ஓம்சாந்தி

04.05.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" எப்பொழுதும் ஒரு வழி, ஒரே பாதையில் செல்வதினால் ஒரே சீரான நிலை "

இன்று வதனத்தில் பாப்தாதா அனைத்து குழந்தைகளைப் பற்றி ஆன்மீக உரையாடல் செய்து கொண்டே புன்முறுவலித்துக் கொண்டிருந்தார்கள். எந்த விஷயத்தின் மேல் புன்முறுவலிட்டுக் கொண்டிருந்தார்கள்? அனைத்து குழந்தைகளும் முக்தி, ஜீவன்முக்தியின் ஆஸ்தியை ஒரு நொடியில் பிராப்தி செய்ய முடியும் என்று உலகில் சவால் விடுகிறார்கள். இந்த சவால் விடுகிறீர்கள் தான் இல்லையா? அதே போல் அனுபவத்தினால் பாருங்கள். தெய்வீக புத்தி ஒவ்வொரு பிராமணனுக்கும் பிறந்த நாளில் பரிசாக கிடைத்திருக்கிறது, பிராமணன் என்ற பெயர் சூட்டப்பட்டது. மேலும் தெய்வீக புத்தியின் இறை பரிசு பாப்தாதா மூலமாகக் கிடைத்தது. அந்த தெய்வீக புத்தியின் ஆதாரத்தினால் யோசியுங்கள் - ஞானமும் ஒரு நொடிக்கானது. படைப்பவர் மற்றும் படைப்பு, தந்தை மற்றும் ஆஸ்தி இதைத் தெரிந்து கொள்வது. யோகாவும் ஒரு நொடிக்கானது - நான் தந்தையின் குழந்தை, தந்தை என்னுடையவர். தெய்வீக குணங்கள் நிறைந்தவராக ஆவதும் ஒரு நொடிக்கான விஷயம், ஏனென்றால் எப்படிப்பட்ட ஜென்மமோ, எப்படிப்பட்ட குலமோ அப்படியே தாரணையும் அதாவது, வாழ்க்கை வாழும் முறையும் இயல்பாக மற்றும் சுலபமாக ஆகிவிடுகிறது. ஈஸ்வரிய குலம் என்றால் குணம் அதாவது தாரணைகளும் ஈஸ்வரியமாக இருக்கும் இல்லையா! பிராமண ஜென்மம் உயர்ந்ததிலும் உயர்ந்த ஜென்மம் என்றால் தாரணையும் உயர்ந்ததாக இருக்கும் இல்லையா! அதனால் தாரணையும் ஒரு நொடிக்கான விஷயம் ஆகும். எப்படி தந்தையோ அப்படி குழந்தைகள். மேலும் சேவையும் ஒரு நொடிக்கான விஷயம். அனுபவி ஆகி பொக்கிஷங்களின் அதிகாரி ஆகி தந்தையின் அறிமுகம் கொடுக்க வேண்டும். எது தன்னிடம் இருக்கிறதோ அதை மற்றவர்களுக்கு கொடுப்பது ஒரு நொடிக்கான மற்றும் சுலபமான விஷயம். எனவே ஒரு நொடிக்கான விஷயத்தில் இவ்வளவு காலம் இருந்து கொண்டே, இரண்டு மாதத்து பிராமணனாக இருந்தாலும் அல்லது நீண்ட காலத்து பிராமணனாக இருந்தாலும், பிராமணன் என்றால் ஒரு நொடியில் ஆஸ்தியின் அதிகாரி, ஒரு நொடியின் அதிகாரி பிறகு ஏன் அடிமை ஆகி விடுகிறார் என்பதை பார்த்துக் கொண்டிருந்தோம். தன்னுடைய அதிகார நிலை என்ற இருக்கையில் அமரத் தெரியாதா என்ன? சௌகரியமான இருக்கையை விட்டு விட்டு குழப்பத்தில் அசௌகரியத்தில் ஏன் வருகிறீர்கள்? இருக்கையை ஏன் விட்டு விடுகிறீர்கள்? பிறகு அதில் அமருவதற்காக அடிக்கடி கஷ்டப்படுகிறீர்கள்.

இருக்கையிலிருந்து இறங்கினீர்கள் மற்றும் அனைத்து சக்திகளின் பிராப்தி சென்று விட்டது. உயர்ந்த இருக்கை அதாவது நிலையில் (ஸ்திதி) நிலைத்திருப்பதினால் அதிகாரத்தன்மையின் அதிகாரம் இருக்கிறது. எப்பொழுது இருக்கையை விட்டு விடுகிறீர்கள் என்றால் அதிகாரம் எங்கிருந்து வரும்? இருக்கையிலிருந்து இறங்கி தன்னுடைய சக்திகளுக்கு கட்டளை இடுகிறீர்கள். எனவே அவை உங்களுடைய கட்டளையை ஏற்பதில்லை. பிறகு நாஸ்டர் சர்வ சக்திவான், ஆனால் சக்திகள் காரியம் செய்வதில்லை என்று யோசிக்கிறீர்கள். வேலைக்காரனின் கட்டளையை வேலைக்காரன் ஏற்றுக் கொள்வாரா அல்லது எஜமானனின் கட்டளையை வேலைக்காரன் ஏற்றுக் கொள்வாரா? மேலும் பின்பு முகம் என்னவாக ஆகிவிடுகிறது? எப்படி பலஹீனமான உடல் உள்ளவரின் முகம் வெளிறிப்போய் விடுகிறது. ஏனென்றால் இரத்தத்தின் சக்தி இல்லை, அதே போல் பலஹீனமான ஆத்மா சோர்வடைந்தவர் ஆகிவிடுகிறது. ஞானத்தையும் கேட்பார், சேவையும் செய்வார் ஆனால் சோர்வடைந்த ரூபத்தில் செய்வார். குஷியின் சக்தி, அனைத்து பிராப்திகளின் சக்தி முடிவடைந்து விடுகிறது. தாசன் (வேலைக்காரன்) எப்பொழுதும் உதாசாகத்தான் (சோர்வாகத்தான்) இருப்பார். தாச ஆத்மாவின் வேறு என்ன சிரிப்பூட்டும் விஷயம் இருக்கிறது? சின்னஞ்சிறு விஷயத்தில் குழப்பம் ஆகிவிட்டேன் என்று கூறுவர். எப்படி கண் பார்வை குறைந்து விடுகிறது இல்லையா! பிறகு ஒரு பொருளுக்கு பதிலாக இரண்டு இரண்டாக, மூன்று மூன்றாக பொருட்கள் தென்படும். பிறகு இது சரியா அல்லது அது சரியா என்று அதிலேயே குழப்பம் அடைந்து விடுவார்கள். அதே மாதிரி பலஹீனமான ஆத்மாக்கள் ஒரு பாதைக்குப் பதிலாக மற்ற பாதைகளையும் பார்க்கிறார்கள். ஒரு ஸ்ரீமத்தின் கூடவே மற்ற வழிகளும் அவருக்குத் தென்படும். பிறகு இதைச் செய்வதா அல்லது அதைச் செய்வதா, இது யதார்த்தமானதா அல்லது அது யதார்த்தமானதா என்று யோசிக்கிறார்கள்! எப்பொழுது இருப்பதே ஒரே பாதை, ஒரே சிரேஷ்ட வழி என்றால் இதைச் செய்வதா, என்ன செய்வது என்ற இந்த கேள்வியே இல்லை. ஏன் குழப்பத்தில் வர மாட்டார்கள். அவர்களே விஷயத்தை இரண்டாக்கி குழப்பத்தில் வந்து விடுகிறார்கள். இந்த விசித்திர நடத்தையைப் பார்த்து பாப்தாதா புன்முறுவலித்துக் கொண்டிருந்தார். இருக்கையில் அமர்ந்திருந்தீர்கள் என்றால் ஒரே சீராக இருப்பீர்கள் என்று பாப்தாதா கூறுகிறார். ஆனால் குறும்பு செய்யும் குழந்தைகளுக்குச் சமமாக அடிக்கடி சுற்றி வரும் பழக்கம் உள்ளவர்கள் மாயாவின் குழப்பம் வந்து விட்டது என்று கூறுகிறார்கள். குழப்பம் அடைவதற்கான எந்த ஆதாரமே இல்லை. ஆனால் வீணான பலஹீனமான எண்ணங்களை ஆதாரமாக எடுத்து விடுகிறார்கள். எப்பொழுது இருப்பதே வீணான மற்றம் பலஹீனமான ஆதாரம் என்றால் பிறகு முடிவு என்னவாக இருக்கும். மாட்டிக் கொள்வார் அல்லது சிக்கிக் கொண்டு கீழே விழுந்து விடுவார். பிறகு பாபா நான் உன்னுடையவன், நீங்கள் சக்தி கொடுங்கள் என்று கதறுவார்கள். இருக்கையில் அமர்ந்திருந்தீர்கள் என்றால் ஞான சூரியனின் சக்திகளின் கிரணங்கள்

உங்களுடைய இருக்கையில் பாதுகாப்பு குடைநிழலாக இயல்பாகவும், நிரந்தரமாகவும் பிராப்தி ஆகும். இருக்கையிலிருந்து கீழே இறங்கி வீணான மற்றும் பலஹீனமான எண்ணங்களின் சுவரை எழுப்பி விடுகிறார்கள். வீணான எண்ணம் ஒன்று வருவதில்லை. ஒரு நொடியில் ஒன்றிலிருந்து அனேக எண்ணங்கள் உருவாகி விடுகின்றன. மேலும் அதன் மூலம் அனேக செங்கற்களின் சுவர் உருவாகிவிடுகிறது. எனவே ஞான சூரியனின் சக்திகளின் கிரணங்கள் சென்றடைய முடியவதில்லை. மேலும் பிறகு உதவி கிடைப்பதில்லை, சக்தி வருவதில்லை என்று கூறுகிறார்கள். குஷி வருவதில்லை அல்லது நினைவு நிலைத்திருப்பதில்லை என்று கூறுகிறார்கள். எப்படி வர முடியும்? இந்த மாதிரி பழையவர்கள் மற்றும் புதியவர்கள் இந்த மாதிரி விளையாடுவதை பார்த்தும் பாப்தாதாவும் புன்முறுவலித்துக் கொண்டே இருந்தார்கள். ஒரு நொடிக்கான விஷயத்தை ஏன் இவ்வளவு கடினமானதாக ஆக்கினார்கள்? ஒரு பாதை, ஒரு வழியை விட்டு விட்டு மனம் சொல்லும் வழியையும், மற்றவர்கள் சொல்லும் வழியையும் ஏன் கலக்குகிறீர்கள்? தன்னுடைய பலஹீனத்தினால் உருவாக்கப்பட்ட பாதை, அதாவது இந்த மாதிரியோ இருக்கத் தான் செய்யும், இந்த மாதிரியோ நடக்கத் தான் செய்யும் போன்ற இந்த பாதைகளை தானே உருவாக்கி பிறகு, தானே உள்ளே நுழைந்து வெளியில் வரத் தெரியாத விளையாட்டில் வந்து விடுகிறார்கள். சென்றடைய வேண்டிய இலட்சியத்திலிருந்து தூரமாகி விடுகிறார்கள். அந்த மாதிரி ஏன் செய்கிறீர்கள்? அல்லது செய்வதில்லை ஆனால் அப்படி ஆகிவிடுகிறது என்று யோசிக்கிறீர்கள். அப்படி ஏன் ஆகவும் செய்கிறது? நோயும் ஏன் வருகிறது? பத்தியத்தை கடைபிடிக்காமல் மீறுவதினால் மற்றும் பலஹீனத்தினால் வருகிறது. அல்லது நோய் வந்து விடுகிறது என்று கூறுவீர்களா? பலஹீனமானவராக ஆகாதீர்கள், மரியாதைகளின் பத்தியத்திலிருந்து மற்றும் மரியாதைகளின் கோட்டிலிருந்து வெளியில் வராதீர்கள். இதுவரையிலும் இந்த விளையாட்டை விளையாட வேண்டுமா? உலக நன்மை செய்யும் காரியத்தின் பொறுப்பாளர்கள், இவ்வளவு பெரிய பதவி வகிப்பவர்கள் மேலும் இந்த குழந்தைகளின் விளையாட்டை விளையாடுகிறார்கள், இதுவும் எதுவரையில்? உலகத்தினர் அமைதித் தூதுவர்கள் இப்பொழுதே வந்து விட வேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தேவன் என் மேல் அமைதியின் ஆசீர்வாதம் மற்றும் கிருபை செய்வதற்காக வந்து விட வேண்டும். மிக சப்தமாக கத்தி கத்தி மணிகள் அடிக்கிறார்கள். சில நேரம் மோர்சிங்கும் வாசிக்கிறார்கள், முரசும் அடிக்கிறார்கள். வாருங்கள், வாருங்கள் என்று அழைக்கிறார்கள். அந்த மாதிரி தேவ ஆத்மாக்கள் ஒருவேளை தன்னுடைய குழந்தைப் பருவத்து விளையாட்டிலேயே இருந்தார்கள் என்றால் அவர்களுடைய கூக்கூரலை எப்படி கேட்பார்கள்? எனவே அவர்களுடைய கூக்குரலை கேளுங்கள். மேலும் உபகாரம் செய்யுங்கள். புரிந்ததா என்ன செய்ய வேண்டும் என்று! நல்லது - தந்தையும் நேரத்தின் கவனம் வைக்கிறார். நீங்கள் வைப்பதில்லை.

அந்த மாதிரி எப்பொழுதும் சிரேஷ்ட ஞானம் நிறைந்தவர்களுக்கு எப்பொழுதும் ஒரு வழி, ஒரு பாதையில் செல்லக்கூடியவர்களுக்கு, ஒரே சீரான நிலையில் நிலைத்திருப்பவர்களுக்கு, எப்பொழுதும் ஒரு நொடியின் அதிகாரத்தை நினைவில் வைத்து சக்திசாலியான ஆத்மாவாக இருக்கக்கூடிய, வீணான எண்ணங்களின் விளையாட்டுகளுக்கு முடிவுகட்டி உலக நன்மை காரியத்தின் சிரேஷ்ட சேவாதாரி, அந்த மாதிரி மகான் ஆத்மாக்களாக இருப்பவரிலிருந்து தேவ ஆத்மாக்களாக ஆகுபவர்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

குமாரிகளுடன் சந்திப்பு –

அனைத்து குமாரிகளும் தன்னை சிவ சக்திகள் என்று நினைக்கிறீர்களா? சக்திகள் எப்பொழுதும் எங்கே இருப்பார்கள்? சிவனுடன் இருக்கிறீர்கள் இல்லையா? யார், யாருடன் இருக்கிறாரோ அவருடைய பாதிப்பு அவர் மேல் அவசியம் ஏற்படும் இல்லையா? எனவே எது தந்தையின் குணமோ, எது தந்தையின் கடமையோ அதுவே உங்களுடையதும் ஆனது இல்லையா! தந்தையின் கடமை, சேவை என்றால் நீங்கள் அனைவரும் சேவாதாரிகள் இல்லையா? சேவை செய்கிறீர்களா அல்லது செய்ய வேண்டுமா? தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் என்ற இந்த லட்சியத்தை எப்பொழுதும் வையுங்கள். ஒவ்வொரு விஷயத்திலும் இது தந்தை செய்யும் காரியமா மற்றும் தந்தையின் எண்ணமா, தந்தையின் வார்த்தைகளா என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை அப்படி இருக்கிறது என்றால் செய்யுங்கள். இல்லை என்றால் பரிவர்த்தனை செய்து விடுங்கள். ஏனென்றால் சாதாரண காரியம் அரைக் கல்பம் செய்தீர்கள். இப்பொழுதோ தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும். நீங்கள் அனைவரும் தந்தைக்குச் சமமான உலக சேவாதாரிகள் தான் இல்லையா! எல்லைக்குட்பட்ட சேவாதாரிகள் இல்லை. நல்ல தைரியம் வைத்திருக்கிறீர்கள். தைரியம் என்ற ஊக்கத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள். ஊக்கம், உற்சாகம் தான் எப்பொழுதும் முன்னேற்றிக் கொண்டே இருக்கும்.

எப்பொழுதும் ஊக்கம், உற்சாகத்தில் இருப்பவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் நம்பர் ஒன் ஆக இருப்பார்கள். நினைவு செய்வதிலும் நம்பர் ஒன், ஞானம், தாரணை, சேவை அனைத்திலும் நம்பர் ஒன். அந்த மாதிரி நீங்கள் இருக்கிறீர்களா? நம்பர் ஒன் ஊக்கம், உற்சாகம் உள்ளவர்கள் வீட்டில் எப்படி இருப்பார்கள்? பந்தனமற்றவர்களாக இருப்பார்கள் இல்லையா! நீங்கள் அனைவரும் யார்? கூண்டுப் பறவையா அல்லது சுதந்திரப் பறவையா? படிப்பின் கூண்டு இருக்கிறதா? தாய் தந்தையின் கூண்டு இருக்கிறதா? அந்த மாதிரி கூண்டுகளில் அடைபட்டு இருப்பவர்களை நம்பர் ஒன் என்று எப்படி கூறுவோம்? இப்பொழுது பந்தனமற்றவர்களாக

ஆகிவிடுங்கள். யார் சக்திசாஆத்மாக்களாக இருப்பார்களோ அவர்கள் எதிரில் யாரும் எதையும் செய்ய முடியாது. எப்படி மிக வேகமாக நெருப்பு எரிந்து கொண்டிருக்கிறது என்றால் அதன் எதிரில் யாரும் வர மாட்டார்கள். தூரமாக ஓடி விடுவார்கள். நீங்களும் எந்த பந்தனம் போடுபவர்களும் எதிரில் வரவே முடியாத அளவிற்கு யோகஅக்னியை அந்த மாதிரி எரிய விடுங்கள். அந்த மாதிரி முழு ஈடுபாட்டின் அக்னியை வேகமாக கொளுந்து விட்டு எரிய விடுங்கள். ஒருவேளை இதுவரையிலும் பந்தனம் இருக்கிறது என்றால் ஈடுபாடு இருக்கிறது ஆனால் அக்னியாக ஆகவில்லை. ஈடுபாடு இருக்கிறது அதனால் இங்கு வரை வந்து சேர்ந்திருக்கிறீர்கள். ஆனால் ஈடுபாடு அக்னி ஆகிவிட்டது என்றால் பந்தனமற்றவர் ஆகிவிடுவீர்கள். ஈடுபாடும் முழுமையாக சக்திசாலியாக இருக்கட்டும். சக்திகள் மைதானத்தில் வாருங்கள். வந்திருப்பது இவ்வளவு பெரிய குரூப் என்றால் அவசியம் அதிசயம் செய்வார்கள் இல்லையா! இத்தனை சேவைக் கரங்கள் உருவாகிவிட்டது என்றால் ஆஹா! ஆஹா! என்று ஆகிவிடும். நல்லது.

அவ்யக்த மகாவாக்கியம் :மனதைக் கட்டுப்படுத்தி ஒருமுகப்படுத்தும் சக்தியை அதிகரியுங்கள் –

மனதின் ஒருமுகப்பட்ட நிலை தான் ஒரே சீரான மன நிலையின் அனுபவம் செய்விக்கும். ஒருமுகப்பட்ட சக்தி மூலமாக அவ்யக்த ஃபரிஷ்தா நிலையின் அனுபவத்தை சுலபமாக செய்ய முடியும். ஒருமுகப்படுத்தும் சக்தி, எஜமான நிலையின் சக்தி சுலபமாக தடையற்றவர் ஆக்கிவிடும். ஒருமித்த நிலை என்றால் மனதை எங்கே விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ, எவ்வளவு நேரம் விரும்புகிறீர்களோ அவ்வளவு நேரம் ஒருமித்த நிலையில் வைத்து விடுங்கள். மனம் உங்களுடைய வசத்தில் இருக்க வேண்டும். உடல் ரூபத்தில் ஃபரிஷ்தா ஸ்திதியின் அனுபவம் செய்வதற்காக மனதின் ஒருமித்த நிலை மேல் கவனம் கொடுங்கள். கட்டளைப்படி மனதை நடத்துங்கள். எஜமானன் என்ற நிலையின் இருக்கையில், விதவிதமான சிரேஷ்ட நிலைகளின் இருக்கையில் அமர்ந்திருங்கள். மனதில் எப்பொழுதாவது ஏதாவது பலஹீனமான எண்ணம் உருவாகிறது என்றால் அதை அங்கேயே அழித்து சக்திசாலி ஆகுங்கள். எண்ணம் என்ற அஸ்திவாரத்தை உறுதியாக்குங்கள் அப்பொழுது தான் அவ்யக்த (உடலுக்கு அப்பாற்பட்ட) ஈர்ப்பு வரும். மனதின் ஒருமித்த நிலைக்காக ஒவ்வொரு விநாடியும் நாடகம் என்ற தண்டவாளத்தில் சென்று கொண்டே இருங்கள். எந்த முறையில், எப்படி நாடகம் சென்று கொண்டிருக்கிறதோ அதன் கூடவே மனதின் நிலையும் சென்று கொண்டே இருக்கட்டும். கொஞ்சம் கூட ஆட வேண்டாம். மனம்

அதாவது எண்ணத்தின் சக்தியை நிறுத்துவதற்கும் மேலும் வளைப்பதற்கும் பலம் இருக்க வேண்டும். இதன் காரணமாக புத்தியின் சக்தி வீணாகச் செல்லாது. சக்தி சேமிப்பாகிவிடும். எந்த அளவு மனம், புத்தியின் சக்தி சேமிப்பாகுமோ அந்த அளவு பகுத்தறியும் மற்றும் நிர்ணயம் செய்யும் சக்தி அதிகரிக்கும். மனதை கட்டுபட்டுவதற்காக மனதை அர்ப்பணம் செய்து முழுமையாக சமர்ப்பணம் ஆகிவிடுங்கள். பிறகு மனது தனது அனுசாரம் எண்ணத்தை எழுப்ப முடியாது. யார் மனதையும் தந்தைக்கு கொடுத்து விட்டார்களோ அவர்கள் சுலபமாகவே மன்மனாபவ ஆகிவிடுவார்கள். மன்மனாபவ ஆவதினால் சுலபமாகவே பற்றுதலை வென்றவர் ஆகிவிடுவார். மனதை சமர்ப்பணம் செய்வது என்றால் வீணான எண்ணங்கள், தீய எண்ணங்களை சமர்ப்பணம் செய்வது. எப்பொழுது மனதில் ஏதாவது எண்ணம் எழுகிறது என்றால் அதில் உண்மை மற்றும் தெளிவு இருக்கட்டும். மனதில் எந்தவொரு பாவத்தின், சுபாவத்தின், பழைய சம்ஸ்காரங்களின் குப்பை இருக்க வேண்டாம். யார் அந்த மாதிரி உண்மையாக இருப்பாரோ அவர் அனைவருக்கும் பிரியமானவராக இருப்பார். அந்த மாதிரி உண்மையானவர் மேல் தந்தையும் திருப்தியாக இருப்பார். எப்பொழுது எப்படிப்பட்ட மனநிலையை உருவாக்க விரும்புகிறீர்களோ அப்படிப்பட்ட மனநிலையை உருவாக்க மன பயிற்சி கொடுக்க வேண்டும். ஒரு நொடியில் சப்தத்தில் வர வேண்டும், ஒரு நொடியில் சப்தத்திலிருந்து விலகிச் சென்று விட வேண்டும். ஒரு நொடியில் காரியம் செய்வதற்காக உடல் உணர்வில் வர வேண்டும். பிறகு ஒரு நொடியில் அசரீரி ஆகி விட வேண்டும். எப்பொழுது இந்தப் பயிற்சி உறுதியாகி விடுமோ அப்பொழுது ஒவ்வொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள முடியும். நேரத்திற்கு தகுந்தாற்போல் எண்ணங்களை சாரத்தில் கொண்டு வரும் சக்தியை கடைபிடியுங்கள். எண்ணங்களின் விஸ்தாரம் என்ற படுக்கையை சுருட்டி கொண்டே செல்லுங்கள். அப்பொழுது மற்றவர்களின் எண்ணங்களையும் அறிந்துகொள்ள முடியும். கண்களின் சமிக்ஞை மூலமும் யாருடைய மனதின் உணர்வுகளையும் தெரிந்து கொள்வீர்கள். எப்படி பாப்தாதாவின் எதிரில் வருகிறீர்கள் என்றால் அவரிடம் எதையும் கூறாவிட்டாலும் கூட உங்களின் அனைவரின் மனதின் எண்ணம், மனதின் பாவனையை தெரிந்து கொள்கிறார். அதே போலவேகுழந்தைகள் நீங்களும் இந்தக் கடைசி பாடத்தை படிக்க வேண்டும். மனதை எங்கு ஈடுபடுத்த விரும்புகிறீர்களோ, அது அங்கு ஈடுபட்டிருக்க வேண்டும். மேலும் வேறு எங்கும் ஈடுபட வேண்டாம். மனதின் எண்ணத்திலும் கூட மாயாவிடம் தோல்வி இருக்க வேண்டாம், அந்த மாதிரி நிலையை உருவாக்குவதற்காக முன்பாகவே சுத்தமான எண்ணங்களில் மனதை பிஸியாக வைத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை மனம் சுத்த எண்ணங்களினால் நிரம்பி இருக்கிறது என்றால் வீணான எண்ணம் வர முடியாது. தோல்வி ஏற்பட முடியாது. சுத்தமான மற்றும் ஒருமுகப்பட்ட எண்ணங்களின் சக்தி மூலம் எப்படிப்பட்ட வாயுமண்டலத்தையும் மாற்ற முடியும். எப்படி சிலர் தன்னுடைய வீட்டை அலங்கரிப்பதற்காக தன்னடைய குழந்தை

பருவத்திலிருந்து தன்னுடைய விதவிதமான ரூபங்களின் நினைவு சின்னங்களை வைப்பார்கள். அதே போல் நீங்கள் உங்களுடைய மனம் என்ற கோயிலில் தன்னுடைய சம்பூர்ண சொரூபத்தின் மூர்த்தியை, எதிர்காலத்தின் அனேக ஜென்மங்களின் மூர்த்தியை தெளிவான ரூபத்தில் எதிரில் வையுங்கள். பிறகு வேறு எந்தப் பக்கமும் எண்ணம் செல்லாது. இயல்பாகவே ஒருமுகப்பட்ட நிலை ஆகிவிடும். எப்படி எப்பொழுது ஏதாவது அந்த மாதிரியான நாளாக இருக்கிறது என்றால் நடைமுறையில் சென்று கொண்டிருக்கும் வாகனங்களின் ஓட்டத்தையும் நிறுத்தி மூன்று நிமிடங்கள் அமைதியின் பயிற்சி செய்விக்கிறார்கள். அனைத்து நடந்து கொண்டிருக்கும் காரியத்தையும் நிறுத்தி விடுவார்கள். அதே போல் நீங்களும் ஏதாவது காரியம் செய்கிறீர்கள் அல்லது பேசுகிறீர்கள் என்றால் இடையிடையே இந்த எண்ணங்களின் ஓட்டத்தை நிறுத்துவதற்காகப் பயிற்சி செய்யுங்கள். ஒரு நிமிடத்திற்காகக் கூட மனதின் எண்ணங்களை, உடல் மூலமாக நடந்து கொண்டிருக்கும் காரியத்தின் இடையே நிறுத்தியும் இந்தப் பயிற்சி செய்தீர்கள் என்றால் எண்ணம் சக்திசாலி ஆகி விடும்.

யார் தன்னுடைய எண்ணங்களின் குழப்பம் மற்றும் தண்டனைகளிலிருந்து விடுபட்டு இருக்கிறாரோ அவர் தான் மதிப்புடன் தேர்ச்சி அடைகிறார். தர்மராஜின் தண்டனைகளின் விஷயமோபின்னால் வருவது. சில குழந்தைகள் தன்னுடைய தவறினால் தனக்குத் தானே தண்டனை கொடுக்கிறார்கள், வீணான எண்ணங்களை உருவாக்கி அதில் குழப்பம் அடைந்து விடுகிறார்கள், பிறகு அழைக்கிறார்கள், குழப்பம் அடைகிறார்கள். இப்பொழுது இதிருந்தும் விலகியிருப்பதற்கான உறுதிமொழி செய்யுங்கள். முழுமையானவர் ஆவதில் வீணான எண்ணங்களின் புயல் தடை போடுகிறது என்பது பெரும்பான்மையோரின் புகார் ஆகும். இந்தப் புகார் எப்பொழுது நீங்கள் தினசரி அமிர்தவேளையில் முழு நாள் நடவடிக்கைகளுக்காக நேரம் ஒதுக்கி டைரியை எழுதுவீர்களோ அப்பொழுது தான் முடிவடையும். எப்பொழுது தனது மனதை ஒவ்வொரு நேரமும் முன்பாக ஒதுக்கப்பட்ட காரியத்தில் பிஸியாக வைத்துக் கொள்வீர்களோ அப்பொழுது இடையில் வீணான எண்ணத்திற்கான நேரமே இருக்காது. எனவே நேரத்தை முன்பதிவு செய்வதற்கான முறையைக் கற்றுக் கொள்ளுங்கள். எந்த அளவு தந்தையின் சமநிலையின் அருகில் வந்து கொண்டே இருப்பீர்களோ அந்த அளவு அனைத்து ஆத்மாக்களின் மனதின் எண்ணங்களை உங்களால் உணர்ந்து கொள்ள முடியும். இதில் தன்னுடைய எண்ணங்களில் கலப்படம் மட்டும் இருக்கக் கூடாது. எண்ணங்களின் மேல் கட்டுப்படுத்தும் சக்தி வேண்டும். எப்படி வெளிமுகமாக நடக்கும் காரிய விவகாரங்களைக் கட்டுப்படுத்துகிறீர்கள். அதே-போல் மனதின் எண்ணங்களின் காரிய நடவடிக்கைகளை கட்டுப்படுத்துங்கள். இதற்காக 1) நான் ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு விநாடியும், ஒவ்வொரு காரியம் செய்து கொண்டே மேடையில் இருக்கிறேன், 2) என்னுடைய

தற்சமயம் மற்றும் எதிர்காலத்தின் பதவி என்ன? என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள்.

தற்சமயம் நேரத்திற்கு ஏற்றாற்போல் இப்பொழுது மனதின் எண்ணங்களில் பெரிய வள்ளல் ஆகுங்கள். அப்பொழுது தான் மனதின் எண்ணங்களின் மேல் ஒரு நொடியில் வெற்றி அடைபவராக ஆக முடியும். யார் எவ்வளவு தான் குழப்பமான எண்ணம் உள்ளவராக இருந்தாலும் அதாவது ஒரு நொடிக்காகக் கூட அவருடைய மனம் ஒரு எண்ணத்தில் நிலைத்திருக்க முடியவில்லை, அந்த மாதிரி குழப்பமான எண்ணம் உள்ளவரையும் தன்னுடைய வெற்றியின் சக்தி மூலம் தற்காலிகமாகக் கூட அவரை அமைதியானவராக மற்றும் குழப்பமானவரை குழப்பம் அற்றவராக ஆக்கிவிடுங்கள். எப்பொழுது உங்களுடைய எண்ணங்களில் ஒருமித்த நிலை வருமோ அப்பொழுது எண்ணத்தின் மூலம் யாரையும் அழைக்க முடியும். யாருக்கும் எண்ணத்தின் மூலம் காரியம் செய்வதற்கான தூண்டுதல் கொடுக்க முடியும். எப்படி பொத்தானை அழுத்துவதினால் தொலைக்காட்சியில் அனைத்து காட்சிகளும் எதிரில் வந்து விடுகிறது. அதே போலவேீங்கள் யாருக்காக என்ன எண்ணம் வைப்பீர்களோ அதுவே அவருடைய புத்தியில் தெளிவான சித்திரமாக வரையப்பட்டு விடும். இதற்காக ஸ்ரீமத்தின் என்னென்ன கட்டளை கிடைத்திருக்கின்றனவோ அதுவே எண்ணங்களில் ஓடிக்கொண்டிருக்க வேண்டும். மேலும் வேறு எந்தக் கலப்படமும் இருக்கக் கூடாது. நீங்கள் சர்வ சக்திவானின் அரசாங்கத்தின் தூதுவர்கள், யாருடனாவது விவாதம் செய்து தன்னுடைய மனதை நிலைகுலைய வைக்காதீர்கள். எந்தவொரு விஷயத்திற்காக கூட தன்னுடைய முகத்தில் அல்லது மனதின் நிலையில் வித்தியாசத்தை கொண்டு வராதீர்கள். எப்பொழுதும் மந்திரத்தை நினைவில் வையுங்கள். எப்பொழுது ஏதாவது அந்த மாதிரி விஷயம் எதிரில் வருகிறது என்றால் தன்னுடைய ஆத்மீக பார்வையின் கண் மற்றும் மன்மனாபவ என்ற மந்திரத்தை காரியத்தில் உபயோகத்தில் கொண்டு வந்தீர்கள் என்றால் அந்த விஷயம் முடிவடைந்து விடும்.

வரதானம் :

பாபா என்ற வார்த்தையின் வைர சாவி மூலமாக அனைத்து பொக்கிஷங்களை பிராப்தி செய்யக்கூடிய பரமாத்மாவின் அன்பிற்குரியவர் ஆகுக.

யார் பரமாத்மா அன்பிற்குரிய குழந்தைகளோ அவர்களுக்கு பாப்தாதா ஒரு வைரத்திற்கு

சமமான வார்த்தையின் மிக நல்ல பரிசு கொடுக்கிறார் - அந்த வார்த்தை ''பாபா''. இந்தச் சாவியை எப்பொழுதும் உங்கள் உடன் வைத்துக் கொண்டீர்கள் என்றால் அனைத்து பொக்கிஷங்களின் பிராப்தி ஆகிவிடும். இந்தச் சாவியின், சாவி கோர்ப்பு வளையம் - எப்பொழுதும் அனைத்து சம்மந்தங்களினால் நினைவு சொரூபமாக இருப்பது. கூடவே உறுதிமொழி என்ற வளையல் மற்றும் அனைத்து குணங்களின் அலங்காரத்தினால் அலங்கரிக்கப்பட்டு இருங்கள் அப்பொழுது தான் உலகின் எதிரில் ஃபரிஷ்தா ரூபம் மற்றும் தேவ ரூபம் வெளிப்படும்.

சுலோகன்:

கடந்ததை கடந்ததாக்கி பாப்தாதாவின் அருகில் இருந்தீர்கள் என்றால் மதிப்புடன் தேர்ச்சி அடைபவர் ஆகிவிடுவீர்கள்.

ஓம்சாந்தி

07.05.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## " பிராமணர்களின் உலகம் - துக்கமற்ற உலகம் "

இன்று துக்கமற்ற உலகத்தின் மகாராஜா தன்னுடைய மாஸ்டர் துக்கமற்ற உலகத்தின் மகாராஜாக்களை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். இது சங்கமயுகத்தின் மகாராஜாக்களின் சபை. இதே இராஜபதவி மூலம் எதிர்கால பிராப்தியை அடைகிறார்கள். அனைத்து குழந்தைகளும் எந்தவிதமான துக்கமற்ற மகாராஜாவாக ஆகியிருக்கிறாரா என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். பிராமணர்களின் உலகம் துக்கமற்ற உலகம். சங்கமயுகத்தின் பிராமண உலகத்தின் அதிகாரி ஆத்மா என்றால் துக்கமற்ற உலகத்தின் மகாராஜா. எண்ணத்தில் கூட துக்கத்தின் அலைகள் இருக்க வேண்டாம் - அந்த மாதிரி ஆகியிருக்கிறீர்களா? துக்கமற்ற உலகத்தின் மகாராஜா எப்பொழுதும் சுகத்தின் படுக்கையில் இருப்பதாக, சுகம் நிறைந்த உலகத்தில் இருப்பதாக தன்னை அனுபவம் செய்கிறீர்களா? பிராமணர்களின் உலகம் மற்றும் பிராமண வாழ்க்கையில் துக்கத்தின் பெயர் அடையாளம் இல்லை. ஏனென்றால் பிராமணர்களின் களஞ்சியத்தில் இல்லை என்று எந்த ஒரு பொருளும் இல்லை. பிராப்தியின்மை துக்கத்தின் காரணமாக இருக்கிறது, பிராப்தி சுகத்திற்கான வழி. அம்மாதிரி அனைத்து பிராப்தி சொரூபமானவர் அதாவது சுகசொரூபமானவர். அந்த மாதிரி நிரந்தரமான சுகசொரூபமானவராக ஆகியிருக்கிறீர்களா? சுகத்திற்கான சாதனம் விசேஷமாக சம்மந்தம் மற்றும் செல்வம். அழியாத சுகத்தின் சம்மந்தம் கிடைத்திருக்கிறது தான் இல்லையா - யோசியுங்கள். சம்மந்தத்திலும் ஏதாவது ஒரு சம்மந்தத்தின் குறை இருக்கிறது என்றாலும் துக்க உணர்வுகள் வரும். பிராமண உலகத்தில் அனைத்து சம்மந்தங்களும் தந்தையுடன் அழியாததாக இருக்கிறது. ஏதாவது ஒரு சம்மந்தத்தின் குறையும் இருக்கிறதா என்ன? அனைத்து சம்மந்தங்கள் அழியாதது என்றால், துக்க உணர்வு எப்படி வரும்? செல்வத்திலும் அனைத்து பொக்கிஷங்கள் மற்றும் அனைத்து செல்வத்தில் சிரேஷ்டமான பொக்கிஷம் ஞானச் செல்வம், அதன் மூலம் அனைத்து செல்வங்களின் பிராப்தி இயல்பாகவே ஆகிவிடும். செல்வம் சம்மந்தம் அனைத்தும் பிராப்தியாக இருக்கிறது என்றால், துக்கமற்ற உலகம் இருக்கிறது. நிரந்தரமான சுகமான உலகத்தின் குழந்தையாக இருப்பவரிலிருந்து எஜமானன் ஆகுபவர் அதாவது நீங்கள் மகாராஜாக்கள். மகாராஜாவாக ஆகியிருக்கிறீர்களா? அல்லது இப்பொழுது தான் ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? குழந்தைகளின் துக்கமான உணர்வுகளின் விஷயங்களைக் கேட்டு மற்றும் பார்த்து பாப்தாதா என்ன யோசிக்கிறார்? சுகக்கடலின் குழந்தைகள், துக்கமற்ற

உலகத்தின் மகாராஜாவாக இருப்பவரிடம் துக்க உணர்வுகள் எங்கிருந்து வந்தன? நிச்சயம் சுகமான உலகத்தின் எல்லையைத் தாண்டி வெளியில் சென்று விடுகிறார்கள். ஏதாவது செயற்கையான கவர்ச்சி மற்றும் போலியானரூபங்களின் பின்னால் கவரப்பட்டு விடுகிறார்கள். எப்படி சென்ற கல்பத்தின் நினைவு கதைகளில் - சீதை கவர்ச்சிக்கப்பட்டார் (பொன்மானிடம்), மேலும் மரியாதை கோட்டிற்கு அதாவது சுகமான உலகத்தின் எல்லையைக் கடந்து சென்றார் என்றால், எங்கே சென்றடைந்தார்? சோகவனத்தில். எல்லைக்கு உள்ளே இருக்கிறார் என்றால், காட்டிலும் மங்களம் இருக்கிறது, தியாகத்திலும் பாக்கியம் இருக்கிறது. ஒரு பைசா இல்லாத மகாராஜா. வறுமையான வாழ்க்கையிலும் இளவரசனின் வாழ்க்கை. அந்த மாதிரி அனுபவம் இருக்கிறது இல்லையா! உலகிலிருந்து விலகி மதுபன்னில் வருகிறீர்கள் என்றால் என்ன அனுபவம் செய்கிறீர்கள்? ஒரு சின்ன இடத்தில் தான் இருக்கிறீர்கள், ஆனால் வந்து சேர்ந்ததுமே சத்யுக சொர்க்கத்தையும் விட சிரேஷ்ட உலகத்தில் வந்து சேர்ந்து விட்டோம் என்று கூறுகிறீர்கள். எனவே காட்டில் மங்களம் அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா? காய்ந்த மலைகளை வைரம் மாதிரியான சிரேஷ்ட சுகத்தின் உலகத்தை அனுபவம் செய்கிறீர்கள். உலகமே மாறிவிட்டது அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா? அது போலவே பிராமண ஆத்மாக்கள் எங்கே இருந்தாலும் துக்கத்தின் வாயுமண்டலத்தின் நடுவிலும் தாமரை மலருக்கு சமமாக இருக்கிறார்கள். துக்கத்திலிருந்து விலகிய துக்கமற்ற உலகத்தின் மகாராஜாவாக இருக்கிறீர்கள். உடலின் நோயின் காரணமான துக்க உணர்வு அல்லது மனதில் வீணான குழப்பத்தின் துக்க உணர்வு அல்லது அழியும் செல்வத்தின் பிராப்தியின்மையின் மற்றும் குறையின் துக்க உணர்வு, தன்னுடைய பலஹீனமான சம்ஸ்காரம், சுபாவம் அல்லது மற்றவர்களின் பலஹீனமான சுபாவம், சம்ஸ்காரத்தின் துக்க உணர்வு, வாயுமண்டலம் மற்றும் வைப்ரேஷனின் ஆதாரத்தின் துக்க உணர்வு, சம்மந்தம், தொடர்பின் ஆதாரத்தில் வரும் துக்க உணர்வு தன் பக்கம் இழுத்து விடுவதில்லையே? விலகியிருக்கிறீர்கள் தான் இல்லையா? உலகம் மாறிவிட்டது என்றால் சம்ஸ்காரமும் மாறிவிட்டது. சுபாவம் மாறிவிட்டது. எனவே சுகம் நிறைந்த உலகத்தைச் சேர்ந்தவராக ஆகிவிட்டீர் கள். பார்க்கப்போனால் ஒன்றும் இல்லாதவர் ஆகிவிட்டீர்கள். அதாவது இந்த தேகம் என்ற வீடும் தன்னுடையது அல்ல. ஒன்றும் இல்லாதவர் ஆகிவிட்டீர்கள் இல்லையா? ஆனால் தந்தையின் அனைத்து பொக்கிஷங்களின் எஜமானனாகவும் தான் ஆகிவிட்டீர்கள். சுயராஜ்ய அதிகாரியாகவும் ஆகிவிட்டீர்கள். அந்த மாதிரி போதை குஷி இருக்கிறதா? இதைத் தான் துக்கமற்ற உலகத்தின் மகாராஜா என்று கூறுவது. அம்மாதிரி அனைத்து மகாராஜாக்கள் அமர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? இராஜ்யத்தின் நிலைமை நன்கு நடந்து கொண்டிருக்கிறதா? அனைத்து இராஜ்ய நடவடிக்கைகளும் உங்களுடைய கட்டளைப்படி நடந்து கொண்டிருக்கின்றனவா? மகாராஜா உங்களை யாராவது ஏமாற்றுவதோ இல்லையே? அனைத்து இராஜ்ய காரியங்கள்

செய்பவர்கள் சரி ஐயா, வந்தேன் ஐயா, என்று கூறுபவர்கள் தான் இல்லையா? தன்னுடைய சபையைக் கூட்டுகிறீர்களா? இராஜாக்களின் சபையோ கூடும். அனைத்து இராஜ சபையில் இருப்பவர்கள் யதார்த்த காரியம் செய்து கொண்டிருக்கிறீர்களா? பொக்கிஷங்களின் களஞ்சியம் நிரம்பியிருக்கிறதா? எப்பொழுதும் பெரும் வள்ளலாகி தானம் செய்து கொண்டே இருக்கும் அளவிற்கு களஞ்சியம் நிரம்பியிருக்கிறதா? இருந்தும் குறைவற்ற களஞ்சியமாக இருக்க வேண்டும். சோதனைசெய்கிறீர்களா? பிரம்மா குமாராகவோ ஆகி விட்டேன், யோகியாகவும் ஆகியே விட்டேன் என்ற இந்த அலட்சியத்தின் போதையில் சோதனைசெய்வதை மறந்து விடுவதில்லையே? எப்பொழுதும் தன்னுடைய இராஜ்ய நடவடிக்கைகளை சோதனை செய்யுங்கள். புரிந்ததா? சோதனைசெய்ய தெரியும் தான் இல்லையா? பெரும்பான்மையான பழைய அனுபவிகளின் கூட்டம் தான் இது இல்லையா? அனுபவி என்றால் அதிகாரம் உள்ளவர். எந்த அதிகாரம்? சுயராஜ்யத்தின் அதிகாரம். நீங்கள் அந்த மாதிரி அதிகாரம் உள்ளவர்கள் தான் இல்லையா? இப்பொழுதோ நான் சரியான மகாராஜாவா என்று சோதனை செய்விப்பதற்காக, சான்றிதழ் பெறுவதற்காக வந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? நான் எந்த மாதிரியான இராஜா - பெயரளவிலான இராஜாவா அல்லது காரியம் செய்யும் இராஜாவா என்று சான்றிதழ் பெற்றுச் செல்வீர்கள் இல்லையா? இவை அனைத்தையும் கண்ணாடி மாளிகையில் நீங்களே பார்த்து விடுவீர்கள். நல்லது.

எப்பொழுதும் சுகமான உலகத்தில் இருக்கக்கூடிய, துக்கமற்ற உலகத்தின் மகாராஜாக்களுக்கு, நிரந்தர இராஜ்ஜிய அதிகாரி சக்திசாலியான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனைத்து துக்கங்களிலிருந்தும் விடுபட்டு, சுகம் கொடுக்கும் வள்ளல் தந்தையின் அன்பிற்குரிய, அந்த மாதிரி அனுபவத்தின் அதிகாரம் உள்ள சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

### தாதிகளுடன் சந்திப்பு

அனைத்து தந்தைக்குச் சமமான குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். சமமான ஆத்மாக்கள் எப்பொழுதும் மிகப் பிரியமானவர்களாக இருப்பார்கள். அம்மாதிரி சமமான ஆத்மாக்களின் சபை இது. சமமான குழந்தைகளை எப்பொழுதும் பாப்தாதா துணைவர்களாகப் பார்க்கிறார். உலகைச் சுற்றி வலம் வருகிறோம் என்றாலும் உடன் இருக்கிறார்கள். மேலும் குழந்தைகளின் மேற்பார்வை செய்வதற்காக செல்கிறோம் என்றாலும் உடன் இருக்கிறார்கள். எப்பொழுதும் கூடவே இருக்கிறார்கள், எனவே சமமான ஆத்மாக்கள் நிரந்தரமான யோகிகளாகவேஇருக்கிறார்கள். யோகா செய்பவர்கள் அல்ல, ஆனால் அன்பில்

ஐக்கியமாகியே இருக்கிறார்கள். பிரிந்தே இருப்பதில்லை என்றால், நினைவு என்ன செய்ய வேண்டியதிருக்கிறது, இயல்பான நினைவு இருக்கவே இருக்கிறது. உடன் துணையாக சதா இருக்கிறார்கள் என்றால், நினைவும் இயல்பாகவே இருக்கும். அம்மாதிரி சமமான ஆத்மாக்களின் நிலை உடன் இருப்பதற்கானது. நினைவில் மூழ்கியிருப்பதற்கானது. அம்மாதிரி எப்பொழுதும் ஒவ்வொரு அடியிலும் குழந்தைகள் முன்னுக்கு இருக்கிறார்கள். தந்தை பின்னால் இருக்கிறார். ஒவ்வொரு காரியத்திலும் எப்பொழுதும் முன்னுக்கு இருக்கிறார்கள். குழந்தைகள் முன்னுக்கு இருக்கிறார்கள், மேலும் தந்தை சக்தி மட்டும் என்ன, எப்பொழுதும் துணையின் அனுபவம் செய்விக்கிறார். எப்படி தந்தை மற்றவர்களுக்கு சக்தி கொடுக்கிறார், அதே போன்று சமமான குழந்தைகளும் சக்தி கொடுப்பவர்கள் ஆகிவிட்டார்கள். இது அந்த மாதிரியான சபை தான் இல்லையா? இது விசேஷ மணிகளின், விசேஷ மாலை. மாலை தானாகவே தயாராகிக் கொண்டிருக்கிறது இல்லையா? தயார் செய்ய வேண்டியதாக இருப்பதில்லை. ஆனால் தயாராகிக் கொண்டிருக்கிறது. ஒருவேளை வரிசை எண்ணை எடுக்கிறோம் அல்லது கொடுக்கிறோம் என்றால் கேள்வி எழும், ஆனால் இயல்பாகவே வரிசைக்கிரமமாக அவரவர்களின் இடத்தில் பொருந்திவிடுகிறர்கள். நல்லது.

குமாரர்களுக்காக அவ்யக்த பாப்தாதாவின் இனிமையான மகாவாக்கியம்:

இது இறை இளைஞர்களின் குரூப் உலகியல் முறைப்படி அந்த இளைஞர் குரூப் அவரவர்களின் புத்தியின் அனுசாரம் காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுயை காரியம் நஷ்டம் ஏற்படுத்துவது. உங்களுடைய காரியம் ஸ்தாபனை காரியத்தில் எப்பொழுதும் சகயோகி ஆவது. எப்பொழுதாவது ஏதாவது ஒரு காரணம் மற்றும் தடை வருகிறது என்றால், அதனுடைய நிவாரணத்தை சகஜமாக செய்ய முடியுமா? குமாரர்கள் குரூப்பின் மேல் பாப்தாதாவிற்கு எப்பொழுதும் நம்பிக்கை இருக்கிறது. இத்தனை இளைஞர்கள் தைரியம் மற்றும் ஊக்கத்தால் நிரந்தர வெற்றி அடைபவர் ஆகிவிட்டார்கள் என்றால், வெற்றிக் கொடியை கையில் எடுத்து உலகில் சுற்றி வர வேண்டும். எப்பொழுதும் பறக்கும் கலையில் சென்று கொண்டிருக்கிறீர்களா? யாராவது நிற்கும் கலையில் இருப்பவர்களோ இல்லையே? இளைஞர்கள் குரூப் என்றால் எப்பொழுதும் சக்திசாலியான சேவை செய்பவர்கள். இளைஞர்கள் என்ன விரும்புகிறார்களோ அதை செய்ய முடியும். அந்த இளைஞர்கள் விநாஷம் செய்பவர்கள். மேலும் நீங்கள் ஸ்தாபனை செய்பவர்கள். அவர்கள் அமைதியின்மையை ஏற்படுத்துபவர்கள், மேலும் நீங்கள் அமைதி சொரூபமானவர்கள், அமைதியை பரப்புபவர்கள். குமாரர்களுக்காகவோ மிகுந்த ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம். நீங்கள் அந்த மாதிரி ஒருபொழுதும் குழப்பத்தில் வராத உறுதியான குமாராக இருக்க வேண்டும். இங்கே பெயர்

பெற்றவராக ஆகிவிட்டு பிறகு அங்கே பழைய உலகத்தில் சென்று விடுவது என்று அப்படி இருக்க வேண்டாம். அனேக குமாரர்கள் முதலில் மிகுந்த ஊக்கம் உற்சாகத்தோடு சேவை செய்கிறார்கள், பிறகு சிறிதளவு மோதல் ஏற்பட்டால் கூட பழைய உலகத்தில் சென்று விடுகிறார்கள். விட்டு விட்ட பொருளை மீண்டும் சென்று எடுத்தோம் என்றால் நன்றாக இருக்குமா என்ன? நீங்கள் அனைவரும் பழைய உலகத்தை விட்டு விட்டீர்கள் தான் இல்லையா? ஒருவேளை ஏதாவது ஒரு கயிறு கட்டப்பட்டு இருக்கிறது என்றால், ஆடிக் கொண்டே இருப்பார். எனவே தன்னை எப்பொழுதும் இறை இளைஞர் குரூப் என்று புரிந்து கொள்ளுங்கள். இவ்வளவு அனைத்து குமாரர்களும் புத்துணர்வு பெற்று, பொக்கிஷங்களால் நிரம்பிச் செல்கிறார்கள் என்றால், பார்ப்பவர்கள் இவர் தேவாத்மா ஆகி வந்து விட்டார் என்று கூறுவார்கள். அந்த மாதிரி ஏதாவது அதிசயமான திட்டத்தை உருவாக்குங்கள். இளைஞர்களைப் பார்த்து அரசாங்கமும் பயப்படுகிறது. அரசாங்கத்திற்கும் வழிகாட்டுவதற்கு பொறுப்பாளர்களாக நீங்கள் ஆவீர்கள். குமாரர்கள் எப்பொழுதுமே சக்திசாலியான திட்டங்களை உருவாக்க வேண்டும். ஆனால் நினைவு மற்றும் சேவையின் சமநிலை எப்பொழுதும் இருக்க வேண்டும். நல்லது.

எப்பொழுதும் தடையற்று இருப்பதற்கான குட் மார்னிங் இருக்கும்பொழுது, பிறகு தடையற்றவர்களாக எப்போதும் இருப்பீர்கள் இல்லையா? எப்பொழுது சத்யுகத்தின் குட்மார்னிங் இருக்குமோ பிறகு தடையற்றவர்களாக இருப்பீர்கள். இப்பொழுது தடையற்றவராக ஆவதற்கான குட்மார்னிங். நல்ல நாள் என்று கூறுகிறார்கள் இல்லையா. நல்ல காலை என்று கூறியவுடனேயே நல்ல காலை, நல்ல பகல் மற்றும் நல்ல இரவு. அம்மாதிரி எப்பொழுதும் தடையற்றவர் என்றால் நல்லது, எனவே தடையற்றவர் ஆகுக என்பதற்கான குட்மார்னிங். நல்லது.

குமாரிகளுக்காக அவ்யக்த பாப்தாதாவின் மகாவாக்கியம்:

குமாரி வாழ்க்கை என்றால் சுதந்திரமான வாழ்க்கை, இந்த சுதந்திரத்தினால் என்ன கிடைக்கிறது. மேலும் சிரேஷ்ட பாக்கியம் உருவாக்குபவரிடமிருந்து என்ன கிடைக்கிறது என்பது எப்பொழுதும் நினைவில் இருக்கிறதா? அல்லது நானோகல்லூரியில் படிக்கும் பெண் என்று நினைக்கிறீர்களா? எப்பொழுதும் எப்படி தந்தையோ அந்த மாதிரி நான் என்ற நினைவை வையுங்கள். தந்தை என்னவாக இருக்கிறார்? சேவாதாரி. நீங்கள் அனைவரும் சேவை செய்கிறீர்கள் இல்லையா? அனைத்து குமாரிகளும் தந்தையின் மாலையின் மணிகளாக இருக்கிறீர்களா? உறுதியாகவா? வேறு யாருடைய கழுத்தின் மாலையாகவோஆக மாட்டீர்கள்

இல்லையா? யார் தந்தையின் கழுத்தின் மாலையாக ஆகிவிட்டாரோ அவர் மற்றவர்களின் கழுத்தின் மாலையாக ஆக முடியாது. என்ன நினைக்கிறீர்கள்? வேறு எங்கும் கனவில் கூட போகமுடியாது. அந்த மாதிரி உறுதியானவர் களா? ஒரு தந்தையின் குழந்தையாக ஆனீர்கள் மற்றும் அனைத்து பொக்கிஷங்களின் அதிகாரி ஆகிவிட்டீர்கள். அனைத்து அதிகாரத்தை விட்டு விட்டு இரண்டு பைசாவிற்கு பின்னால் செல்வீர்களா என்ன? அந்த இரண்டு பைசா கூட எப்பொழுது இரண்டு அடி கொடுக்கிறார்களோ அப்பொழுது தான் கிடைக்கிறது. முதலில் துக்கத்தின், அமைதியின்மையின் சாட்டை அடி கிடைக்கிறது. பிறகு இரண்டு ரொட்டி சாப்பிடுகிறீர்கள். அந்த மாதிரி வாழ்க்கை விருப்பம் இல்லை தான் இல்லையா? பொதுவாக குமாரி வாழ்க்கை பாக்கியம் நிறைந்தது. இப்பொழுது இன்னும் இரட்டை பாக்கியம் நிறைந்தவராக ஆகிவிட்டீர்கள். இப்பொழுது அனைவரும் நடைமுறையில் பரீட்சை எழுதுவீர்கள் தான் இல்லையா? அந்த காகிதத்தில் எழுதும் பரீட்சை இல்லை. நிரந்தரமான சிவசக்தி, இணைந்திருக்கிறோம் என்ற இந்த நினைவை எப்பொழுதும் வையுங்கள். குமாரிகளுக்கு எங்காவது செல்லத் தான் வேண்டியதாக இருக்கிறது. ஒருவேளை அந்த மாதிரி ஏதாவது உயர்ந்த வீடு கிடைத்து விட்டது என்றால் வேறு என்ன வேண்டும். குமாரிகள் நல்ல வரன், நிரம்பிய வீடு கிடைக்க வேண்டும் என்று நினைப்பார்கள். இது எவ்வளவு நிரம்பிய வீடு இங்கு இல்லை என்பதே இல்லை. அந்த மாதிரி பாக்கியமோ அனைவருக்கும் கிடைக்க வேண்டும். ஆஹா என்னுடைய பாக்கியமே ஆஹா! என்ற இதே பாடலைப் பாடுங்கள். எப்படி நிலவொளி அனைவருக்கும் பிடித்திருக்கிறது. அதே போல் ஞானத்தின் ஒளி கொடுப்பவராக ஆகுங்கள். ஞானச் சந்திரனுக்கு சமமானவர் ஆகுங்கள். எப்படி தன்னுடைய பாக்கிய நட்சத்திரத்தை மின்ன வைத்தீர்கள். அதே போல் எப்பொழுதும் மற்றவர்களின் பாக்கியத்தின் நட்சத்திரத்தை மின்ன வையுங்கள். பிறகு அனைவரும் உங்களுக்கு அடிக்கடி ஆசீர்வாதங்கள் கொடுப்பார்கள்.

அனைத்து குமாரிகளும் ஸ்காலர்ஷிப் பெறுவீர்கள் இல்லையா? ஸ்காலர்ஷிப் பெறுவது என்றால் வெற்றி மாலையில் வருவது. வெற்றி மாலையில் வந்து விடும் அளவிற்கு அந்த அளவு தீவிர முயற்சி இருக்க வேண்டும். இந்த அளவு பாலனையை பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கான பிரதிபலனையோகொடுப்பீர்கள் இல்லையா? பாலனையின் பிரதிபலன் தந்தைக்குச் சமமாக ஆவது, ஸ்காலர்ஷிப் பெறுவது. எனவே நான் வெற்றி அடைபவள் ஆகி வெற்றி மாலையின் மணியாக ஆகப்போகிறவள் என்ற இந்த திட எண்ணத்தை எப்பொழுதும் வையுங்கள். நீங்கள் அனைவரும் இந்த வாழ்க்கையில் திருப்தியாக இருக்கிறீர்களா? எப்பொழுதாவது அந்த சாப்பிடுவது, குடிப்பது, ஊர் சுற்றுவது என்ற வாழ்க்கை நினைவு வருவதில்லையே? மற்றவர்களைப் பார்த்து நானும் இதை கொஞ்சம் சுவைத்துத் தான்

பார்ப்போமோ என்ற எண்ணமோ மனதில் வருவதில்லையே? அந்த வாழ்க்கை கீழே விழுவதற்கான வாழ்க்கை, இந்த வாழ்க்கை மேலே முன்னேறிச் செல்வதற்கான வாழ்க்கை. ஏறுவதிலிருந்து இறங்கும் பக்கத்தில் யார் செல்வார்? எப்பொழுதும் எவரெடியாக இருங்கள். தன்னுடைய முறையில் எப்பொழுதும் எப்பொழுதும் தயாராக இருங்கள். ஏதாவது படிப்பின் ஆர்வத்தின் காரணமாகவும் பந்தனம் இருக்க வேண்டாம். எந்த இடத்தில் குமாரிகளின் குழு இருக்கிறதோ, அங்கு சேவை கண்டிப்பாக வளர்ச்சி அடையும், எங்கு சுத்த ஆத்மாக்கள் இருக்கிறார்களோ, அங்கு எப்பொழுதுமே சுப காரியம் நடக்கும். நீங்கள் அனைவரும் உங்களுக்குள் சம்ஸ்காரம் ஒத்துப்போக வைக்கும் பாடத்தில் பாஸ் ஆகியிருக்கிறீர்கள் இல்லையா? எந்தவொரு பிரச்சனையும் இல்லை, வேறு எங்கேயும் பார்வையும், உள்உணர்வும் செல்வதில்லை. ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை. . . விசேஷமாக குமாரிகளுக்கு இந்த விஷயத்தில் சான்றிதழ் பெற வேண்டும். எப்படி பெயர் பாலபிரம்மச்சாரினி என்றிருக்கிறது. . . அந்த மாதிரி எண்ணமும் தூய்மையானதாக இருக்க வேண்டும். இதைத் தான் ஸ்காலர்ஷிப் பெறுவது என்று கூறுவது. மேலும் வலதுகரமாக இருக்கிறீர்கள், எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை, அந்த மாதிரி சிவ சக்திகள் நீங்கள். இதையே எப்பொழுதும் நினைவில் வைத்தீர்கள் என்றால் எந்த விதமான மாயாவின் தாக்குதலும் இருக்காது. நல்லது.

விடைபெறும் நேரத்தில்:

சத்குருவின் கிருபை, உங்களுக்கு ஆஸ்தி ஆகிவிட்டது. எனவே கிருபை செய்யுங்கள் என்ற இந்த எண்ணம் வைப்பதற்குக் கூட அவசியம் இல்லை. நீங்களோ விருட்சபதியின் குழந்தைகள், எனவே பிரஹஸ்பதியின் தசை, குருவின் கிருபை அனைத்தும் இயல்பாகவே பிராப்தி ஆகியிருக்கிறது. கேட்பதற்கு அவசியமே இல்லை. கேட்பதிலிருந்து விடுபட்டு விட்டீர்கள். எண்ணத்தை வைப்பதிலிருந்தும் விடுவித்து விட்டார். இப்பொழுது யாசிப்பதற்காக ஏதாவது இருக்கிறதா என்ன? தந்தையினுடைய தலையின் கிரீடமாக ஆகிவிட்டீர்கள். அவர் வேண்டுமென்று கேட்பாரா என்ன? அம்மாதிரி விருட்சபதி நாளுக்காக, பிரஹஸ்பதி தசைக்காக எப்பொழுதுமே குழந்தைகளுக்கு வாழ்த்துக்களின் கூடவே அன்பு நினைவுகள். ஓம் சாந்தி.

வரதானம்:

உலகியல் உள்உணர்வு, திருஷ்டியை பரிவர்த்தனை செய்து ஆன்மீகத்தின் அனுபவம்

செய்யக்கூடிய ஞான சொரூப ஆத்மா ஆகுக.

உலகியல் சம்மந்தங்களில் இருந்து கொண்டே எல்லைக்குட்பட்ட சம்மந்தத்தை பார்க்காமல் ஆத்மாவைப் பாருங்கள். ஆத்மாவைப் பார்ப்பதினால் குஷி ஏற்படும் அல்லது இரக்கம் வரும். இந்த ஆத்மா பாவம் மற்றதின் வசமாகியிருக்கிறார், அஞ்ஞானத்தில் இருக்கிறார், ஒன்றும் தெரியாதவர், நான் ஞானம் நிறைந்த ஆத்மாவாக இருக்கிறேன் என்றால், அந்த ஒன்றும் தெரியாத ஆத்மா மீது இரக்கம் காட்டி, என்னுடைய சுப பாவனை மூலம் மாற்றிக் காண்பிப்பேன். தன்னுடைய உள்உணர்வு மற்றும் பார்வையை மாற்றுவது தான் ஆன்மீக வாழ்க்கை. எந்தக் காரியத்தை அஞ்ஞானி ஆத்மாக்கள் செய்கிறார்களோ அதை ஞான சொரூப ஆத்மா செய்ய முடியாது. உங்களுடைய தொடர்பின் பிரபாவம் அவர்கள் மீது ஏற்பட வேண்டும்.

சுலோகன் :

தன்னுடைய சிரேஷ்ட கர்மத்தின் மூலம் உலகத் தந்தையின் பெயரை புகழடையச் செய்வது தான் நன்மை செய்பவர் ஆவது.

ஓம்சாந்தி

09.05.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

"பிராமண வாழ்க்கையின் அலங்காரம் –

நினைவு, உள் உணர்வு மற்றும் பார்வையில் தூய்மை"

இன்று பாப்தாதா அனைத்து பிராமண குழந்தைகளின் சிரேஷ்ட கர்மத்தின் ரேகையை பார்த்துக் கொண்டிருந்தார். அந்த கர்மத்தின் ரேகை மூலமாகத் தான் தற்காலத்திற்கும், எதிர்காலத்திற்குமான அதிர்ஷ்டரேகை போடப்பட்டுக் கொண்டிருக்கிறது. அனைத்து பிராமணர்களின் கர்மத்தின் ரேகையை, கர்மத்தின் கதையை மற்றும் கர்மத்தின் கணக்கை பார்த்துக் கொண்டிருந்தோம். அந்த மாதிரி பாக்கியத்தை உருவாக்கும் தந்தையின், கர்மங்களின் ஆழமான விளைவுகளைத் தெரிந்த தந்தையின் நேரடியாக ஆஸ்திக்கு உரிய குழந்தைகள் நீங்கள். கூடவே எப்பொழுது நீங்கள் பாக்கியத்தை உருவாக்குபவரின் குழந்தையாக இருக்கிறீர்களோ எந்த அளவு பாக்கியத்தை உருவாக்க விரும்புகிறீர்களோ, எந்த அளவு அனைத்து பிராப்திகளின் சொரூபம் ஆக விரும்புகிறீர்களோ அதற்கு ஒவ்வொருவருக்கும் முழுமையான உரிமை இருக்கிறது என்று பாக்கியத்தை உருவாக்கும் தந்தை பொன்னான வாய்ப்பினை அனைத்து குழந்தைகளுக்கும் கொடுத்திருக்கிறார். உரிமையைக் கொடுப்பதில் வரிசைக்கிரமம் இல்லை, சுதந்திரம் இருக்கிறது அதாவது சம்பூர்ண சுதந்திரம். மேலும் கூடவே நாடகத்தின் அனுசாரம் வரதான நேரத்தின் சகயோகமும் இருக்கிறது. அதுவும் அனைவருக்கும் சமமாக இருக்கிறது. இருந்தும் இந்த அளவு பொன்னான வாய்ப்பு கிடைத்தும் எல்லைக்கப்பாற்பட்ட பிராப்தியையும், எல்லைக்குட்பட்ட வரிசைக்கிரமம் என்பதில் கொண்டு வந்து விடுகிறார்கள். தந்தையும் எல்லைக்கப்பாற்பட்டவர், ஆஸ்தியும் எல்லைக்கப்பாற்பட்டது, உரிமையும் எல்லைக்கப்பாற்பட்டது. ஆனால் பெறுபவர்கள் வரிசைக்கிரமமாக ஆகிவிடுகிறார்கள். ஏன் அந்த மாதிரி ஆகிறது ? அதற்கு இரண்டு காரணம் உண்டு. ஒன்று புத்தி தூய்மையாக இல்லை, தெளிவாக இல்லை. இரண்டாவது - ஒவ்வொரு அடியிலும் எச்சரிக்கை இல்லை அதாவது கவனம் நிறைந்தவராக இல்லை. இந்த இரண்டு காரணங்களினால் வரிசைக்கிரமமாக ஆகிவிடுகிறார்கள். முக்கியமான விஷயம் தூய்மைக்கானது. இதைத் தான் முதல் விகாரத்தின் மீது (காமத்தின் மேல்) வெற்றி அடைவது என்று கூறுவது. எப்பொழுது பிராமண வாழ்க்கையை நடைமுறையில் கடைபிடிக்கிறீர்கள் என்றால், பிராமண வாழ்க்கையின் முக்கியமான ஆதாரம் என்று சொன்னாலும் சரி, புதுமை, ஆன்மீகம்,

வாழ்க்கையின் அலங்காரம் என்று சொன்னாலும் சரி அது தூய்மையே!. பிராமண வாழ்க்கையில் இருக்கும் சவாலே காமத்தின் மீது வெற்றி அடைவது! இந்த அசம்பவத்தை சம்பவமாக்கிக் காண்பிப்பது தான் சிரேஷ்ட ஞானம் மற்றும் சிரேஷ்ட ஞானத்தை அளிப்பவரின் அடையாளம். எப்படி வெளியுலகத்தில் பெயரளவில் இருக்கும் பிராமணர்களின் அடையாளமாக உச்சங்குடுமி மற்றும் பூணூல் இருக்கிறதோ. அதே போல் உண்மையான பிராமணர்களின் அடையாளம் தூய்மை மற்றும் மரியாதைகள் (ஸ்ரீமத்) ஜென்மத்தின் மற்றும் வாழ்க்கையின் அடையாளமாக என்ன இருக்கிறதோ அதை நிரந்தரமாக வாழ்க்கையில் நிலைத்திருக்கச் செய்ய வேண்டியதாக இருக்கிறது தான் இல்லையா? தூய்மைக்கு ஆதாரமான முதல் ஞானத்துளி 'நினைவின் தூய்மை'. நான் ஆத்மா மட்டும் அல்ல, ஆனால் நான் சுத்தமான தூய்மையான ஆத்மா. ஆத்மா என்ற வார்த்தையையோ அனைவரும் கூறுகிறார்கள். ஆனால் பிராமண ஆத்மா, நான் சுத்த தூய்மையான ஆத்மா என்று தான் எப்பொழுதும் கூறுவார். நான் சிரேஷ்ட ஆத்மா, பூஜைக்குரிய ஆத்மா, விசேஷ ஆத்மா என்ற இந்த நினைவுகள் தான் தூய்மையின் ஆதாரம். அப்படியானால் முதல் ஆதாரத்தை உறுதியானதாக ஆக்கியிருக்கிறீர்களா? இந்தப் பதவி எப்பொழுதும் நினைவில் இருக்கிறதா? எப்படி பதவியோஅப்படி செய்யும் காரியம் இயல்பாக இருக்கும். முதலில் நினைவின் தூய்மை வேண்டும். அதற்கு பிறகு உள்உணர்வு மற்றும் பார்வை. எப்பொழுதும் நினைவில் தூய்மை அதாவது நான் பூஜைக்குரிய ஆத்மா என்றால், பூஜைக்குரிய ஆத்மாவின் விசேஷ மகிமையாக என்ன இருக்கிறது? சம்பூர்ண நிர்விகாரி, சர்வ குண சம்பன்னம், 16 கலைகள் நிரம்பியவர் இவைகள் தான் பூஜைக்குரிய ஆத்மாவின் தகுதிகள். அவர் இயல்பாகவே தன்னை மற்றும் அனைவரையும் எந்தப் பார்வையோடு பார்ப்பார்? ஆன்மீகக் குடும்பத்திலும், உலகீய குடும்பத்திலும் மற்றும் உலகியல் நினைவில் இருக்கும் ஆத்மாக்கள் இவர்கள் அனைவரின் பரம்பூஜைக்குரிய ஆத்மா மற்றும் பூஜைக்குரியவர்களாக இவர்களை ஆக்க வேண்டும் என்ற இந்த பார்வை மட்டுமே இருக்க வேண்டும். பூஜைக்குரிய ஆத்மாக்கள் அதாவது ஆன்மீக குடும்பத்தின் ஆத்மாக்களின் மீது ஒருவேளை ஏதாவது தூய்மையில்லாத பார்வை செல்கிறது என்றால், இது நினைவின் அஸ்திவாரம் பலஹீனமாக இருக்கிறது என்பதாகும். மேலும் இது மிக மிக மிக பெரிய பாவம். எந்தவொரு பூஜைக்குரிய ஆத்மா மீதும் தூய்மையற்ற அதாவது உடல் மீதும் பார்வை அதாவது இந்த சேவாதாரி மிக நல்லவர், இந்த ஆசிரியர் மிக நல்லவர் என்ற பார்வை செல்கிறது. ஆனால் நல்லது என்ன? உயர்ந்த நினைவு மற்றும் உயர்ந்த பார்வை தான் நல்ல நிலை. ஒருவேளை அந்த உயர்ந்த நிலை நடைமுறையில் இல்லை என்றால், வேறு எந்த நல்லது இருக்கிறது? அழகான மாயாவின் ரூபம். இது சேவை அல்ல, சகயோகம் அல்ல. ஆனால் தன்னை மற்றும் மற்றவர்களை தந்தையிடமிருந்து பிரிப்பதற்கான ஆதாரம் ஆகும். இந்த விஷயத்தை அடிக்கடி கவனத்தில் வையுங்கள்.

தந்தை மூலமாக பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆசிரியர் மற்றும் சேவையின் சகயோகியாக ஆகியிருக்கும் ஆத்மாக்கள், அவர்கள் சகோதரியாக இருந்தாலும் அல்லது சகோதரனாக இருந்தாலும், ஆனால் சேவாதாரி ஆத்மாக்களின் சேவை செய்வதற்கான முக்கிய லட்சணம், தியாகம் மற்றும் தபஸ்யா. இந்த லட்சணத்தின் ஆதாரத்தில் எப்பொழுதும் தியாகி மற்றும் தபஸ்வியின் திருஷ்டியால் பார்க்க வேண்டுமேயன்றி, தேகத்தின் பார்வையோடு பார்க்காதீர்கள். சிரேஷ்ட ஈஸ்வர்ய குடும்பம் என்றால், எப்பொழுதும் சிரேஷ்ட பார்வையில் பாருங்கள். ஏனென்றால் இந்த மகா பாவம் ஒருபொழுதும் பிராப்தி சொரூபத்தின் அனுபவம் செய்விக்க விடாது. எப்பொழுதுமே ஏதாவது ஒரு காரியத்தில், எண்ணத்தில், உறவு நெருக்கத்தில் குறை மற்றும் பாதிப்பு என்ற இந்த ஏற்றம் மற்றும் இறக்கத்திலேயே சென்று கொண்டிருப்பார். ஒருபொழுதும் மிகச் சரியான நிலையை அனுபவம் செய்ய முடியாது. எனவே பூஜைக்குரிய ஆத்மாவாக ஆவதற்குப் பதிலாக பாவ ஆத்மாவாக ஆகிவிடவில்லையே என்று நினைத்துப் பாருங்கள். இந்த ஒரு விகாரத்தின் மூலம் மற்ற அனைத்து விகாரங்களும் இயல்பாகவே உருவாகிவிடுகின்றன. விருப்பம் நிறைவேறாத காரணத்தினால் முதலில் கோபம் வரும். எனவே இந்த விஷயத்தை லேசாக எடுத்துக் கொள்ளாதீர்கள், இதில் அலட்சியமானவராக ஆகாதீர்கள். வெளிமுகமாக நல்ல சம்மந்தம், சேவையின் சம்மந்தம் என்ற இந்த இராயல் ரூபத்தின் பாவத்தை அதிகரிக்காதீர்கள். ஒருவேளை இந்த பாவ காரியத்திற்குக் காரணமானவர் வேறு யாராக இருந்தாலும் கூட மற்றவர்களை காரணமாக்கி தன்னை அலட்சியமானவராக ஆக்காதீர்கள். 'நான் தான் காரணம்' என்ற இந்த எச்சரிக்கையை எதுவரை வைக்கவில்லையோ அதுவரை மகாபாவத்திலிருந்து விடுபட முடியாது. எந்த விதமான, மனதின் எண்ணங்களில், வார்த்தைகளில் மற்றும் உறவு தொடர்பில் விசேஷமாக ஈர்ப்பு இருக்கிறது என்றால் இது பற்றுதலின் அடையாளம். வேறு எதுவும் செய்யவில்லை. பேசிக்கொண்டு மட்டும் இருக்கிறோம் என்ற இதுவும் பற்றுதலின், ஈர்ப்பின் சதவிகிதம் தான். சேவையின் சகயோகியின் பக்கமும் விசேஷமான ஈர்ப்பு இருக்கிறது என்றால், இதுவும் பற்றுதல் தான். மேலும் எப்பொழுது ஏதாவது சமிக்ஜை கிடைக்கிறது என்றால், அந்த சமிக்ஜை மூலம் அதை அழித்து விட வேண்டும். ஒருவேளை பிடிவாதம் செய்கிறீர்கள் மற்றும் நிரூபணம் செய்கிறீர்கள், தெளிவுபடுத்துவதற்கு முயற்சி செய்கிறீர்கள் என்றால் தன்னுடைய பாவ கர்மத்தை தெளிவுபடுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். விஷயத்தைத் தெளிவு படுத்தவில்லை, பாவத்தின் ரேகையை இன்னும் நீளமாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, இருப்பதோ உலக பரிவர்த்தனை (மாற்றம்) காரியத்தில் என்றால், தன்னை மாற்றம் செய்வது என்பது தான் புத்திசாலித்தனமாக செய்யும் காரியம். ஒருவேளை ஒன்றும் இல்லை என்றால், இல்லை என்று ஆக்கிவிடுங்கள். ஏனென்றால் சுயத்தை மாற்றம்

செய்து, செய்து விஷயத்தை பெயர் அடையாளம் இல்லாமல் அழித்து விடுங்கள். இது ஏன், அப்படி ஏன், இதுவோ (எல்லோரிலும்) நடந்து கொண்டு தான் இருக்கிறது என்று நினைப்பது வாயுமண்டலம் என்ற அக்னியில் எண்ணெய் விடுவது போலாகும். நெருப்பை அதிகமாக எரிய வைப்பது. விஷயத்தை வளர்ப்பது. எனவே முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இருக்கிறதா அல்லது இல்லையா என்ற இந்த விவாதத்தில் செல்லாதீர்கள். ஆனால் எண்ணம், வார்த்தை மற்றும் தொடர்பில் மாற்றத்தைக் கொண்டு வாருங்கள். இந்த பாவத்திலிருந்து பாதுகாப்பாக ஆவதற்கு இது தான் விதி. புரிந்ததா? பிராமண பரிவாரத்தில் இந்த சம்ஸ்காரம் பெயர், அடையாளம் ரூபத்தில் கூட இருக்க வேண்டாம். நல்லது. பின்பு கோபம் மகா பூதம் என்றால், என்ன என்பதைப் பற்றிக் கூறுவோம்.

இது தான் விசேஷ கவனம் கொடுப்பதற்கான விஷயம். யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ நீங்கள் விசேஷ பலத்தை நிரப்புவதற்காக வந்திருக்கிறீர்கள். பலஹீனமான சம்ஸ்காரத்தை நிரந்தரமாக அழிப்பதற்காக வந்திருக்கிறீர்கள். எனவே பலஹீனமான சம்ஸ்காரத்தின் முடிவு விழாவைக் கொண்டாடிச் செல்லுங்கள். இந்த விழாவை கொண்டாடுவீர்கள் தான் இல்லையா? வந்திருப்பதோ விசேஷமான பழையவர்களின் குரூப். எப்பொழுது நீங்கள் விழாவை கொண்டாடுவீர்களோ அப்பொழுது புதியவர்களும் ஊக்கம் உற்சாகத்தில் வருவார்கள். ஒவ்வொரு வருடமும் இந்த விழாவைக் கொண்டாட வேண்டும் என்று அப்படியில்லை. ஒரு தடவைக்கான இந்த விழா பிறகு நிறைவு விழா இருக்கும். நிரந்தரமான முடிவு விழாவைக் கொண்டாடுவீர்கள் இல்லையா? இதில் மாதர்களும் வந்து விடுகிறார்கள், அதர் குமாரர்களும் வந்து விடுகிறார்கள். பாண்டவர்கள் மட்டும் கொண்டாடுவார்கள் என்று அப்படியில்லை, குமாரிகளும் கொண்டாடுவார்கள், ஆசிரியர்களும் கொண்டாடுவார்கள். அதர் குமாரிகளும் கொண்டாடுவார்கள். அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து இந்த விழாவை கொண்டாடுங்கள். சரி தானே! குமாரிகள், சக்திகள் தான் இல்லையா? எனவே சக்தி ரூபத்தின் விழாவை கொண்டாடுவீர்கள் இல்லையா? நல்லது.

எப்பொழுதும் தனக்காக நற்சிந்தனை வைத்திருக்கும், எப்பொழுதும் சுயபரிவர்த்தனை காரியத்தில் முதலில் நான் என்ற இந்த பாடத்தில் நம்பர் ஒன் ஆக வரக்கூடிய, எப்பொழுதும் எண்ணம், சொல் மற்றும் தொடர்பில் அனைவருக்காகவும் எல்லைக்கப்பாற்பட்ட நினைவு சொரூபம், எப்பொழுதும் தூய்மை மற்றும் கவனமாக இருக்கக்கூடிய தூய்மையான பூஜைக்குரிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

எப்பொழுதும் தன்னை ஒவ்வொரு அடியிலும் சாட்சியாக இருப்பதாக மற்றும் எப்பொழுதும் தந்தையின் துணைவனாக இருப்பதாக அனுபவம் செய்கிறீர்களா? யார் எப்பொழுதுமே சாட்சியாக இருப்பாரோ அவர் எப்பொழுதுமே காரியம் செய்து கொண்டே, ஒவ்வொரு அடியை எடுத்து வைப்பதில் கர்ம பந்தனத்திலிருந்து விலகியவராக மற்றும் தந்தைக்குப் பிரியமானவராக இருப்பார். அந்த மாதிரி சாட்சியாக இருக்கும் நிலையை தனக்குள் அனுபவம் செய்கிறீர்களா? எந்தவொரு கர்ம இந்திரியமும் தன்னுடைய பந்தனத்தில் கட்டிப்போடக்கூடாது. இதைத் தான் சாட்சியாக இருப்பது என்று கூறுவது. அந்த மாதிரி சாட்சியாக இருக்கிறீர்களா? எந்தவொரு காரியமும் தன்னை பந்தனத்தில் கட்டிப்போடுகிறது என்றால் அவரை சாட்சியாக இருக்கிறார் என்று கூறமாட்டோம். விலகியிருப்பவராக இல்லை, ஆனால் மாட்டிக் கொள்பவர் என்று தான் கூறுவோம். ஒருபொழுதும் கண்ணும் ஏமாற்றம் கொடுக்க வேண்டாம். உடல் சம்மந்தத்தில் வருவது என்றால் கண்ணின் ஏமாற்றம் அடைவது. எனவே எந்தவொரு கர்ம இந்திரியமும் ஏமாற்றம் கொடுக்க வேண்டாம். சாட்சியாக இருக்க வேண்டும், மேலும் எப்பொழுதும் தந்தையின் துணைவனாக இருக்க வேண்டும். ஒவ்வொரு விஷயத்திலும் தந்தை நினைவு வர வேண்டும். மகான் ஆத்மாக்களும் நினைவில் வர வேண்டாம், பொறுப்பிருக்கும் ஆத்மாக்களும் நினைவில் வர வேண்டாம். ஆனால் பாபாவின் நினைவு மட்டும் தான் வர வேண்டும். ஏதாவது விஷயம் வருகிறது என்றால் முதலில் தந்தை நினைவில் வருகிறாரா அல்லது பொறுப்பிருக்கும் ஆத்மா நினைவில் வருகிறாரா? எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை. ஆத்மாக்கள் சகயோகிகள் ஆனால் துணைவர்கள் இல்லை. துணைவனோ தந்தை தான்! சகயோகியைதன்னுடைய துணை என்று நினைப்பது தவறு. எனவே எப்பொழுதுமே சேவை செய்வதில் துணைவன் ஆனால் சேவையில் உங்களுடைய துணைவன் தந்தை. பொறுப்பிலிருப்பவர்கள் சகயோகம் கொடுப்பார்கள். அந்த மாதிரி எப்பொழுதும் நினைவு சொரூபமானவராக இருப்பீர்களா? எந்தவொரு தேகதாரியையும் துணைவனாக ஆக்கினீர்கள் என்றால் பறக்கும் கலையின் அனுபவம் ஆக முடியாது. எனவே ஒவ்வொரு விஷயத்திலும் பாபா, பாபா என்கிற நினைவில் இருக்க வேண்டும். குமார் டபுள் லைட், சம்ஸ்காரம் சுபாவத்தின் சுமையும் இல்லை. வீணான எண்ணத்தின் சுமையும் இல்லை. இதைத் தான் லேசான நிலை என்று கூறுவது. எவ்வளவு லேசாக இருப்பீர்களோ அந்த அளவு சுலபமாக பறக்கும் கலையின் அனுபவம் செய்வீர்கள். ஒருவேளை சிறிதளவாவது கடின உழைப்பு செய்ய வேண்டியது இருக்கிறது என்றால் அவசியம் ஏதோசுமை இருக்கிறது. எனவே பாபா - பாபாவின் ஆதாரத்தைப் பெற்று பறந்து கொண்டே இருங்கள். இது தான் அழியாத ஆதாரம்.

ஆன்மீக இளைஞர்களின் குரூப் அமைதியை பறப்பும் மற்றும் நன்மை செய்யும் குரூப். எப்பொழுதும் உலகத்தில் அமைதியின் ஸ்தாபனை காரியத்தில் பொறுப்பாளர்கள். உலகத்தினர் அமைதியின்மையை பரப்புபவர்கள், மேலும் நீங்கள் அமைதியை பரப்புபவர்கள். அந்த மாதிரி நீங்கள் தன்னை நினைக்கிறீர்களா? இளைஞர் குரூப் மீது அரசியல் வாதிகளுக்கும் எதிர்பார்ப்பு இருக்கிறது மேலும் பாப்தாதாவிற்கும் எதிர்பார்ப்பு இருக்கிறது. நீங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுபவர்கள் தான் இல்லையா? குழந்தைகள் எப்பொழுதும் தந்தையின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுபவர்களாக இருப்பார்கள். எனவே வெற்றியின் நட்சத்திரம் ஆகி, நாங்கள் வெற்றி இரத்தினங்கள் என்ற செய்தியை அரசாங்கம் வரை சென்றடையச் செய்ய வேண்டும். இப்பொழுது எந்த குரூப் எங்கே வெற்றிக் கொடியைப் பறக்க விடுகிறார்கள் என்று பார்க்கலாம். ஒருபொழுதும் தன்னுடைய சக்திகளை துஷ்பிரயோகம் செய்யாதீர்கள். நம் மீது மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது என்று எப்பொழுதும் நினைவில் வையுங்கள். ஒருவர் பலஹீனம் ஆனவர் ஆகிறார் என்றால் ஒருவரின் பின்னால் ஒருவரின் சம்மந்தம் இருக்கிறது. நாம் பொறுப்பாளர் என்ற இந்த நினைவு எப்பொழுதும் இருக்கட்டும். என்ன காரியம் நீங்கள் செய்வீர்களோ உங்களைப் பார்த்து அனைவரும் செய்வார்கள். எனவே ஒருபொழுதும் சாதாரண காரியம் இல்லை, எப்பொழுதும் சிரேஷ்ட காரியம் செய்பவர், எப்பொழுதும் உறுதியாக இருப்பவர்கள். நல்லது.

### விடைபெறும் நேரத்தில் பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்காக காலை வணக்கம் கூறினார்

அனைத்து நாலாபுறமும் உள்ள சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு மற்றும் விசேஷ ஆத்மாக்களுக்கு, மதுபன் வரதான பூமியில் பாப்தாதா நேரெதிரில் பார்த்துக் கொண்டே அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். மேலும் அனைவருக்கும் காலை வணக்கம் கூறுகிறார். குட் மார்னிங் என்றால் முழு நாளும் அந்த மாதிரியே நல்லதாக மற்றும் சிரேஷ்டமாக இருக்கட்டும். முழு நாளும் அன்பு நினைவின் பாலனையில் இருக்க வேண்டும். இந்த அன்பு நினைவு தான் சிரேஷ்ட பாலனை. இதே பாலனையில் எப்பொழுதும் இருங்கள். மேலும் இதே ஈஸ்வரிய நினைவு மற்றும் அன்பை அனைத்து ஆத்மாக்களுக்கும் கொடுத்து அவர்களுக்கும் சிரேஷ்ட பாலனை செய்யுங்கள். அன்பு நினைவு பாலனையின் ஊஞ்சல். அந்த ஊஞ்சலில் பாலனை நடக்கிறது. மேலும் குட் மார்னிங்கை சக்திசாலியான அமிர்தம் என்று கூறினாலும் அல்லது மருந்து என்று கூறினாலும் அல்லது சிரேஷ்ட போஜனம் என்று கூறினாலும், என்னவாக கூறினாலும் அந்த மாதிரி சக்திசாலியாக ஆக்கக்கூடிய குட் மார்னிங். மேலும் பாலனையின் அன்பு நினைவு ஊஞ்சலாகும். இதே ஊஞ்சலில் எப்பொழுதும் இருங்கள், மேலும் இதே சக்தியில் எப்பொழுதும் இருங்கள். அந்த மாதிரி எப்பொழுதும் இதே சொரூபத்தில் இருப்பதற்காக அனைத்து

குழந்தைகளுக்கும் குட் மார்னிங். நல்லது.

வரதானம் :

முன் பின் யோசித்து புரிந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்யக்கூடிய ஞானம் நிறைந்த ஆத்மா மூன்று காலங்களையும் தெரிந்தவர் ஆகுக.

எந்தக் குழந்தைகள் மூன்று காலங்களையும் தெரிந்தவர்களோ அதாவது மூன்று காலங்களின் ஞானத்தை புத்தியில் வைத்து முன் பின் யோசித்து புரிந்து காரியங்களைச் செய்கிறார்களோ அவர்களுக்கு ஒவ்வொரு காரியத்திலும் வெற்றி கிடைக்கிறது. /நான் மிகவும் பிஸியாக இருந்தேன், எனவே என்ன வேலை எதிரில் வந்ததோ அதைச் செய்யத் தொடங்கி விட்டேன் என்று அப்படி இருக்க வேண்டாம். எந்தவொரு காரியம் செய்வதற்கு முன்பும் முதலில் மூன்று காலங்களை யோசிக்க வேண்டும் என்ற பழக்கம் இருக்க வேண்டும். மூன்று காலங்களையும் தெரிந்த நிலையில் நிலைத்திருந்து காரியம் செய்தீர்கள் என்றால், எந்தவொரு காரியமும் வீணானதாகவும் சாதாரணமானதாகவும் இருக்காது.

சுலோகன் :

தன்னுடைய திருப்தியான மற்றும் குஷி நிறைந்த வாழ்க்கை மூலம் சேவை செய்தீர்கள் என்றால் தான் உண்மையான சேவாதாரி என்று கூறுவோம்.

ஓம்சாந்தி

## " ஹே இளைஞர்களே உலக மாற்ற காரியத்தின் பொறுப்பாளர் ஆகுங்கள் "

இன்று பாப்தாதா ஹன்ஸ் (அன்னப்பறவை) ஆசனத்தில் அமர்ந்திருக்கும் புனித அன்னப்பறவைகளின் சபையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு சிரேஷ்ட ஆத்மாவும் புனித அன்னப்பறவை. எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை, இதே அன்பில் மூழ்கியிருக்கும் ஆத்மாக்கள் - இந்த நிலை தான் அன்னப்பறவையின் ஆசனம். அந்த மாதிரி புனித அன்னப்பறவைகளைப் பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகிறார். ஒவ்வொரு புனித அன்னப்பறவையும் ஞான சொரூப ஆத்மா, யோகசொரூப ஆத்மா, உலகிற்கு நன்மை செய்பவர். ஒவ்வொருவரின் இதயத்தில் திலாராம் (இதயத்திலேயே வீற்றிருக்கும்) தந்தையின் நினைவு நிரம்பியிருக்கிறது. ஒவ்வொருவரும் தன்னுடைய நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை உருவாக்கும் ஈடுபாட்டிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த மாதிரி சிரேஷ்ட சபையை முழுக் கல்பத்திலும் சங்கமயுகத்தைத் தவிர ஒருபொழுதும் பார்க்க முடியாது. ஒரே பரிவாரம், ஒரே ஈடுபாடு, ஒரே லட்சியம், அந்த மாதிரி பின்பு எப்பொழுதாவது பார்ப்பீர்களா? பாப்தாதாவிற்கும் குழந்தைகள் மீது பெருமிதம் இருக்கிறது. இவ்வளவு பெரிய பரிவாரம் மற்றும் சபை மேலும் ஒவ்வொருவரும் சிரேஷ்ட தந்தையின் குழந்தைகள் ஆன காரணத்தினால் தந்தையின் ஆஸ்திக்கு உரியவராக இருக்கிறார்கள். எனவே இத்தனை அனைத்து அதிகாரி குழந்தைகளை பார்த்து தந்தைக்கும் குஷி ஏற்படுகிறது. இந்த ஒவ்வொரு குழந்தையும் குலத்தின் தீபம். உலக மாற்றம் செய்வதில் பொறுப்பாக இருக்கும் ஆத்மாக்கள். ஒவ்வொரு மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரம் உலகிற்கு வெளிச்சம் கொடுப்பவர்கள். ஒவ்வொருவரின் பாக்கியத்தின் அழியாத ரேகை நெற்றியில் தென்படுகிறது. அந்த மாதிரி உலகில் ஒரு வழி, ஒரு இராஜ்யம், ஒரு தர்மத்தை ஸ்தாபனை செய்ய வேண்டும் என்ற திடமான எண்ணம் உள்ள சிரேஷ்ட சபை இது. பாப்தாதா இளைஞர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். குமாராக இருந்தாலும், குமாரியாக இருந்தாலும் ஆனால் ஒவ்வொருவரின் மனதில் நாம் அனைவரும் நம்முடைய உலகம் மற்றும் தேசத்தையும் சுகம், சாந்திக்காக அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்கள் அதாவது நம்முடைய சகோதரசகோதரிகளை சுகம் மற்றும் சாந்தியின் அதிகார உரிமையைப் பெற வைப்போம் என்ற ஊக்கம், உற்சாகம் இருக்கிறது. நம்முடைய உலகத்தை மீண்டும் சுகம், சாந்தி நிறைந்த உலகமாக ஆக்குவோம். இதே திட எண்ணம் தான் இருக்கிறது இல்லையா? இவ்வளவு பெரிய சபை என்ன தான் செய்ய

முடியாது! ஒன்று நீங்கள் சிரேஷ்ட ஆத்மாக்கள், பவித்ர ஆத்மாக்கள், எனவே பவித்திரத்தின் சக்தி இருக்கிறது. இரண்டாவது மாஸ்டர் சர்வ சக்திவானாக இருக்கும் காரணத்தினால் அனைத்து சக்திகளும் உங்களுடன் இருக்கிறது. குழுவின் சக்தி, கூடவே மூன்று காலங்களையும் தெரிந்தவராக ஆன காரணத்தினால் நான் அனேக தடவை உலக மாற்றம் செய்பவராக ஆகியிருக்கிறேன் என்று தெரிந்திருக்கிறீர்கள். எனவே ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றி அடைபவராக ஆன காரணத்தினால் இப்பொழுதும் உலக மாற்ற காரியத்தில் வெற்றி நிச்சயம் இருக்கிறது. ஆகுமா அல்லது ஆகாதா என்ற இந்த கேள்வியே இல்லை. நிச்சயபுத்தி உடையவர் வெற்றி அடைவார். அந்த மாதிரி சுகமான உலகம் இப்பொழுது கண்டிப்பாக வந்து விடும் என்று அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா? உலகத்தின் எஜமானர்களுக்கு உலகத்தின் இராஜ்யம் நிச்சயமாக பிராப்தி ஆகியிருக்கிறது. இளைஞர்களின் வர்க்கம் என்ன செய்வீர்கள்? தன்னுடைய தேசத்தின் மற்றும் உலகத்தின் அரசியல் தலைவர்களுக்கு, எந்த விஷயத்தில் இந்த மாதிரி ஆக வேண்டும் என்று நீங்கள் கனவு கண்டு கொண்டிருக்கிறீர்களோ அந்த வேண்டும் என்ற விருப்பத்தை நாங்கள் நிறைவேற்றிக் காண்பிப்போம் என்ற இந்த குஷியான செய்தியைக் கூறுங்கள். தேசத்திலிருந்து ஒரு இல்லாமையை மட்டும் அல்ல, இரண்டு இல்லாமையையும் அகற்றிக் காண்பிப்போம், ஏனென்றால் இல்லாமை அதிகமானதற்கான, காரணம் சரித்திரத்தின் (ஒழுக்கம்) இல்லாமை தான். எப்பொழுது சரித்திரத்தின் இல்லாமை, துக்கம், அமைதியின்மையின் ஏழ்மை அகன்று விடுகிறதோ. அப்பொழுது இயல்பாகவே அனைத்து ஆத்மாக்களும் செல்வந்தர்கள் என்ன, இராஜ்ய அதிகாரிகளாகவே ஆகிவிடுவார்கள். இதே நல்ல எதிர்பார்ப்புக்களை உலகில் பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்களுக்கு நிறைவேற்றிக் காண்பியுங்கள். நம்முடைய தேசத்தை சிரேஷ்டம் ஆக்கிக் காண்பிப்போம், அந்த மாதிரி அனைத்தும் நிறைந்ததாக ஆக்குவோம். அந்த உலகத்தில் பிராப்தியின்மை (கிடைக்காதது) என்று எதுவும் இருக்காது. மேலும் பிராப்தியின்மைக்கான காரணமான எவ்வித பிரச்சனைகளும் இருக்காது. இந்த திட எண்ணத்தை அனைவருக்கும் கூற மட்டும் செய்யாதீர்கள். ஆனால் மாறியதின் ஒரு உதாரணமாகிக் காண்பியுங்கள். ஏனென்றால் அனைத்து பக்கங்களிலிருந்தும் நம்பிக்கை ஊட்டக்கூடிய கோஷங்களை அனைவரும் மிகவும் கேட்டிருக்கிறார்கள். அந்த அளவு கேட்டிருக்கிறார்கள். அதைக் கேட்டு நம்பிக்கையே அகன்று விட்டது. அந்த மாதிரி கூறுபவர்கள், அதிகம் பார்த்து பார்த்து சத்தியத்தையும் ஏமாற்றுதல் என்று புரிந்து கொள்கிறார்கள். எனவே சொல்வது மட்டும் வேண்டாம், வாய் பேச வேண்டாம். ஆனால் உங்களுடைய வாழ்க்கையின் சிரேஷ்ட நிலை பேசட்டும். ஒவ்வொரு புனித அன்னப்பறவை உங்களுடைய தூய்மையின் ஜொலிப்பு நடத்தை மூலம் தென்பட வேண்டும். உங்கள் அனைவரின் உயர்ந்த நினைவின் சக்திசாலியான நிலை நம்பிக்கை இழந்த ஆத்மாக்களிலும்

நம்பிக்கையின் சக்தியை உருவாக்க வேண்டும். இளைஞர்கள் வர்க்கம் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா?

இன்றைய தலைவர்கள் இளைஞர்கள் அழிவுக் காரியம் செய்யும் காரணத்தினால் இளைஞர் வர்க்கத்தைக் கண்டு பயப்படுகிறார்கள். நீங்கள் அனைவரும் உலகிற்கு நன்மை செய்பவர்கள், இதே தேசத்தின் இளைஞர் வர்க்கத்தைச் சேர்ந்த நாங்கள் நம்முடைய பாரத தேசத்தை உலகத்திலேயே மிக சிரேஷ்டமான சொர்க்கத்தின் ஸ்தானமாக ஆக்கி உலகிற்கு பாரதம் தான் பழமையான அழியாத அனைத்தும் நிறைந்த மிக சிரேஷ்டமான தேசம் என்று செய்து காண்பிப்போம். பாரதம் உலகிற்காக ஆன்மீகப் பிரகாசம் கொடுக்கும் கலங்கரை விளக்கம். ஏனென்றால் இந்த சிரேஷ்ட காரியத்தை செய்விப்பவர் யார்? அதைத் தெரிந்து கொண்டார்கள் என்றால், பிறகு ஏதாவது கேள்வி எழுவதற்கான விஷயமே இருக்காது. தன்னுடைய வாழ்க்கை மூலம், காரியங்கள் மூலம் தந்தையின் அறிமுகத்தை செய்வியுங்கள். இந்த அளவு தைரியம் இருக்கிறது தான் இல்லையா? குமாரிகள் என்ன நினைக்கிறீர்கள்? எப்பொழுது துர்காவின் பூஜை செய்கிறார்களோ அப்பொழுது பூஜை செய்யும் தன்னை பாக்கியவான் என்று நினைக்கிறார்கள். இங்கு எத்தனை துர்க்கைகள் இருக்கிறார்கள்? ஒவ்வொரு சிவசக்தியும் அதிசயக் காரியம் செய்து காண்பிப்பவர்கள் தான் இல்லையா? எந்த சக்திகளை ஒவ்வொரு வீட்டிலும் பூஜை செய்கிறார்களோ அது நீங்களே தான் இல்லையா? எனவே ஹே சிவசக்திகளே! தன்னுடைய பக்தர்களுக்கு பலனை கொடுங்களேன். பாவம் அவர்கள் பழங்களை (உங்கள் மேல்) சாத்தி சாத்தி களைப்படைந்து விட்டார்கள். அவர்கள் அந்த அளவு பழத்தை சாத்தியிருக்கிறார்கள். அதற்கான பிரதிபலனையோ அவர்களுக்குக் கொடுப்பீர்கள் தான் இல்லையா? பக்தர்கள் மேல் இரக்கம் வரவில்லையா? பாண்டவர்களுக்கும் பூஜை நடந்து கொண்டிருக்கிறது. இன்றைய நாட்களில் ஒன்று மகாவீர் அனுமானுக்கு மிகுந்த பூஜை நடக்கிறது மற்றும் இன்னொன்று விக்ன வினாஷக் கணேஷருக்கு பூஜை நடக்கிறது. அனைவரும் சக்தி பெற வேண்டும் என்ற ஆசையோடு தான் பக்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி பக்த ஆத்மாக்களுக்கு அனைத்து சக்திகளின் பலனைக் கொடுங்கள். நிரந்தரமாக தடைகளைக் கடந்து வருவதற்கான சுலபமான வழியைக் கூறுங்கள். அனைத்து கூக்கூரல்களிலிருந்து விடுவித்து பிராப்தி சொரூபமானவர் ஆக்குங்கள். அந்த மாதிரி சேவையை இளைஞர்கள் வர்க்கம் செய்து காண்பியுங்கள். புரிந்ததா? நல்லது!

எப்பொழுதும் தன்னுடைய சிரேஷ்ட வாழ்க்கை மூலமாக அனேகர்களின் வாழ்க்கையை உருவாக்கக்கூடிய, அனைத்து பாரதவாசிகளின் சிரேஷ்ட, சுகம் நிறைந்த உலகம் வர வேண்டும்

என்ற நல்ல விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய, ஒவ்வொரு வீட்டிலும் சிரேஷ்ட சரித்திரத்தின் (ஒழுக்கம்) தீபத்தை ஏற்றக்கூடிய, எப்பொழுதும் பிராப்தி இல்லாத ஆத்மாக்களுக்கு, பிராப்தி செய்விக்கக் கூடிய அந்த மாதிரி உறுதியான எண்ணம் வைத்திருக்கும் நிச்சயம் வெற்றி அடையும் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம். குமாரர்கள் மீது பாப்தாதாவிற்கு எப்பொழுதும் நம்பிக்கை இருக்கிறது. குமாரர்கள் உலகை மாற்றம் செய்ய முடியும். ஒருவேளை அனைத்து குமாரர்களும் ஒரு திடமான எண்ணம் வைத்திருப்பவர்களாக ஆகி முன்னேறிச் செல்கிறார்கள் என்றால், மிகுந்த அதிசயக் காரியம் செய்ய முடியும். நீங்கள் அதிசயம் செய்யக்கூடிய குமார் தான் இல்லையா? பார்த்துக் கொள்ளுங்கள் பாப்தாதாவிடம் தானியிங்கி புகைப்படம் பிடிக்கப்பட்டு விடுகிறது. திட எண்ணம் உள்ள குமார் தான் இல்லையா? குமாரர்களில் உடல் சக்தியும் அதிகம் இருக்கிறது. எனவே இரட்டைக் காரியம் செய்ய முடியும். ஸ்தாபனையின் காரியத்தில் மிக நல்ல சகயோகி ஆக முடியும். குமாரர்கள் புத்தியில் என்னுடைய பாபா, மேலும் என்னுடைய சேவை, வேறு எந்த விஷயமும் இல்லை என்ற ஒரே விஷயம் தான் இருக்கிறது தான் இல்லையா? யாருடைய புத்தியில் எப்பொழுதும் பாபா மற்றும் சேவை இருக்கிறதோ அவர் சுலபமாகவே மாயாவை வென்றவர் ஆகிவிடுகிறார். குமாரர்களுக்கு ஒரு விஷயத்தில் மட்டும் கவனம் வைக்க வேண்டும் - எப்பொழுதும் தன்னை பிஸியாக வைத்துக் கொள்ள வேண்டும் ஒரு வேலையுமின்றி காலியாக இருக்கக்கூடாது. உடல் மற்றும் புத்தி இரண்டின் மூலமாக பிஸியாக இருங்கள். பிஸினஸ்மேனாக ஆகாமல் பிஸி மேன் ஆக ஆகுங்கள். எப்படி ஒரு நாளில் செய்ய வேண்டிய காரியத்தின் கால அட்டவணையைத் தயாரிக்கிறீர்கள். அதேபோன்று புத்திக்கும் கால அட்டவணையைத் தயாரியுங்கள். இப்பொழுது இதை யோசிக்க வேண்டும், இதை செய்ய வேண்டும் என்று கால அட்டவணையை நிச்சயம் செய்தீர்கள் என்றால் அதன் பிரகாரம் பிஸி ஆகிவிடுவீர்கள். பிஸியாக இருப்பவர்களை மாயா எந்த ரூபத்திலும் தாக்க முடியாது. புத்தியை பிஸியாக வைத்துக் கொள்வதற்கான வழியை எப்பொழுதும் கடைபிடியுங்கள். எப்படி உடலை பிஸியாக வைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் இருக்கின்றனவோ. அதே போல் புத்தி மூலமாக எப்பொழுதும் நினைவில், போதையில் பிஸியாக இருங்கள். அந்த மாதிரி கால அட்டவணையைத் தயாரிக்கத் தெரியுமா? நிரந்தரமாக நியமத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். எப்படி மற்ற நியமங்கள் உருவாகியிருக்கின்றன, அதே போல் இதைக் கண்டிப்பாக செய்ய வேண்டும் என்ற நியமத்தையும் உருவாக்குங்கள். இதே திட நிச்சயத்தினால் என்ன அதிசயம் செய்ய விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும். குமாரர்கள் பாப்தாதாவின் காரியத்தின் நட்சத்திரங்கள். சேவைக்கு பொறுப்பானவர்களாகவோ குமார் ஆகிறார் இல்லையா? அங்கு இங்கு செல்லும் சேவையையும் குமாரர்கள் செய்கிறார்கள். என்ன சேவை நடந்தாலும் அதில்

குமாரர்களுக்கு விசேஷ பங்கு இருக்கிறது. அந்த மாதிரி விசேஷ பங்கை ஏற்றுச் செய்யும் விசேஷ ஆத்மாக்கள் இதே போதையைவைத்துக் கொள்ளுங்கள், இதே குஷியில் இருங்கள். குமார் குரூப் என்ன செய்து காண்பிக்கிறார்கள் என்று பார்க்கலாம். ஏதாவது செய்து காண்பிக்க வேண்டும். சொல்வது மட்டும் இருக்க வேண்டாம். நீங்கள் சேவைக்கான ஊக்கம், உற்சாகம் வைத்திருப்பவர்கள். நிச்சயபுத்தி வைத்திருப்பவர்கள், உறுதியானவர்கள், ஆடக்கூடியவர்கள் அல்ல. அது போலவேஉறுதியான ஆத்மாக்கள் நீங்கள், மற்றவர்களையும் உறுதியானவராக ஆக்கிக் காண்பியுங்கள்.

மகாதானியாகி தானம் செய்து கொண்டே இருங்கள். எப்பொழுது தன்னுடைய களஞ்சியம் நிறைந்திருக்கிறது என்றால் அனேகர்களுக்கு தானம் கொடுக்க வேண்டும். எப்பொழுதும் சேவையை முன்னேற்றம் அடையச்செய்து கொண்டே இருங்கள். இன்று வாய்ப்பு கிடைத்தது என்பதினால் செய்து விட்டோம் அல்லது எப்பொழுது வாய்ப்பு கிடைக்குமோ அப்பொழுது செய்து விடலாம் என்று அப்படி இருக்க வேண்டாம். யாரிடம் பொக்கிஷம் இருக்குமோ அவர் எங்கிருந்தாவது ஏழைகளை தேடிக் கண்டுபிடித்தும் தண்டோரா அடித்தும் கூட அவசியம் தானம் செய்வார். ஏனென்றால், தானம் செய்வதினால் புண்ணியம் கிடைக்கிறது என்று அவருக்குத் தெரியும். அந்த தானமோ அழியக்கூடியது. மேலும் சுயநலமானதாகக் கூட இருக்கலாம். நீங்கள் அனைவருமோ அழியாத பொக்கிஷத்தின் மகாதானி. எனவே சேவையை அதிகரியுங்கள். உங்களுக்குள் பந்தயம் வைத்துக் கொள்ளுங்கள். மகாதானி ஆகுங்கள். நிச்சயத்துடன் செய்யுங்கள், நிலம் கட்டாந்தரை ஆனது என்று அந்த மாதிரி யோசிக்காதீர்கள். இப்பொழுது காலம் மாறி விட்டது, காலத்தின் கூடவே நிலமும் மாறுகிறது. முன்பிருந்த நிலத்தில் என்ன ரிசல்ட் இருந்ததோ அது இப்பொழுது இல்லை. காலம் வாயுமண்டலத்தை மாற்றிக் கொண்டிருக்கிறது. ஆத்மாக்களின் ஆசையும் மாறுகிறது. அனைத்து தேவைகளையும் அனுபவம் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது நேரம் இருக்கிறது, நேரத்திற்கு ஏற்றாற் போல் நிரந்தரமான மகாதானி ஆகுங்கள். வாய்மொழி மூலம் இல்லை என்றால் மன சக்தி மூலம், மன சக்தி மூலம் இல்லை என்றால் செய்யும் காரியங்கள் மூலம், காரியம் மூலம் ஏதாவது ஆத்மாவை பரிவர்த்தனை செய்வது காரியம் மூலம் செய்யும் சேவை. தொடர்பு மூலமாகவும் எந்தவொரு ஆத்மாவையும் பரிவர்த்தனை செய்ய முடியும். அந்த மாதிரி சேவாதாரி ஆகுங்கள். தினசரி மனதால், வாய்மொழியால், செயல்கள் மூலமாக என்ன சேவை செய்தேன், எத்தனை பேருக்கு சேவை செய்தேன் என்ற ரிசல்ட்டை எடுங்கள். எந்த ஊக்கம் உற்சாகத்தோடு சேவை செய்தேன். இந்த தினசரி ரிசல்ட்டை நீங்களே எடுங்கள். தான் மற்றும் சேவை இரண்டின் வேகத்தை இன்னும் அதிகப்படுத்துங்கள். இப்பொழுது ஏதாவது புதுமை செய்யுங்கள். சென்டர் திறப்பது, கீதா பாடசாலை திறப்பது, மேளா வைப்பது இவையோபழைய

விஷயம் ஆகிவிட்டது, புதியதாக ஏதாவது செய்யுங்கள். தன்னில் மற்றும் சேவையில் ஏதாவது புதுமையை அவசியம் கொண்டு வர வேண்டும் என்ற லட்சியத்தை வையுங்கள். இல்லை என்றால் சில நேரம் களைப்படைந்து விடுவீர்கள், சில நேரம் ஆர்வமற்றவர்கள் ஆகிவிடுவீர்கள். புதுமை இருக்கிறது என்றால் எப்பொழுதும் ஊக்கம், உற்சாகத்தில் இருப்பீர்கள். நல்லது.

மாதர்களுடன் சந்திப்பு –

மாதர்களுக்காக பாப்தாதா விசேஷமாக சகஜமார்க்கத்தின் பரிசைக் கொண்டு வந்திருக்கிறார். சகஜமார்க்கத்தின் பரிசு அனைவருக்கும் கிடைத்திருக்கிறது. சகஜ பிராப்தியாக என்ன ஆகிறதோ அது தான் பரிசு. எனவே முக்கியமாக பாப்தாதா சகஜமார்க்கத்தின் பரிசை கொண்டு வந்திருக்கிறார் என்ற இந்த போதைதான் இருக்க வேண்டும். அனைத்தையும் விட சகஜமானது 'என்னுடைய பாபா' என்று கூறுங்கள் போதும். என்னுடைய பாபா என்று கூறுவதினால், அனுபவம் செய்வதினால் அனைத்து பிராப்திகளும் ஆகிவிடும். எங்களுக்காக தந்தை பிரத்யேகமாக வந்திருக்கிறார் என்று மாதர்களுக்கு விசேஷ குஷி இருக்க வேண்டும். மேலும் யாரெல்லாம் நீங்கள் வந்திருக்கிறீர்களோ உங்களை ஆண்களை விட முன்னுக்கு வைத்திருக்கிறோம். தர்ம தந்தைகள், தர்மத்தை ஸ்தாபனை செய்து விட்டு சென்று விட்டார்கள். மாதர்களை யாருமே பெயர் பெற்றவர்களாக ஆக்கவில்லை. மேலும் தந்தை 'முதலில் மாதர்கள்' என்ற முறையை ஸ்தாபனை செய்தார். எனவே மாதர்கள் தேடிக் கண்டெடுக்கப்பட்டவர்கள் ஆகிவிட்டார்கள் இல்லையா? எவ்வளவு அன்போடு தந்தை உங்களைத் தேடிக் கண்டெடுத்து தன்னுடையவராக ஆக்கியிருக்கிறார். நீங்களோ விலாசமின்றி தேடினீர்கள். எனவே தேடியதாக ஆகவில்லை. தந்தையைப் பாருங்கள் ஒவ்வொரு மூலையிலிருந்தும் தேடிக் கண்டுபிடித்து எடுத்து விட்டார். அனேக மரங்களின் கிளைகளாக இருந்தீர்கள். இப்பொழுது ஒரு மரத்தினுடையவர்களாக ஆகிவிட்டீர்கள். ஒரே ஒரு சந்தன மரமாக ஆகிவிட்டது. உலகத்தினரோ இரண்டு மூன்று மாதர்கள் கூட ஒன்றாகச் சேர்ந்து இருக்க முடியாது என்று கூறுகிறார்கள். மேலும் இப்பொழுது மாதர்கள் முழு உலகத்தில் ஒற்றுமையை ஸ்தாபனை செய்வதற்குப் பொறுப்பாளராக இருக்கிறார்கள். இருக்க முடியாது என்று அவர்கள் கூறுகிறார்கள். மேலும் தந்தை மாதர்கள் தான் இருக்க முடியும் என்று கூறுகிறார். அந்த மாதிரி மாதர்களுக்கு விசேஷ பதவி இருக்கிறது. எனவே ஆஹா என்னுடைய சிரேஷ்ட பாக்கியமே ஆஹா என்று அளவற்ற குஷியில் ஆடுங்கள், பாடுங்கள். ஒருபொழுதும் துக்க அலைகள் மனதில் வர வேண்டாம். நீங்கள் அனைவரும், துக்கமான உலகத்தை விட்டு விட்டீர்கள் தான் இல்லையா? நான் சங்கமயுகத்தைச் சேர்ந்தவன்,

எப்பொழுதும் சுகதாமம், சாந்திதாமம் நோக்கி முன்னேறிச் சென்று கொண்டே இருக்க வேண்டும். மாதர்களைப் பார்த்து பாப்தாதாவிற்கு நம்பிக்கையற்றவர்களாக இருந்தவர்கள், நம்பிக்கையுடையவர்களாக ஆகிவிட்டார்கள் என்ற பெருமிதம் இருக்கிறது. உலகிற்கு நன்மை செய்பவர்களாக ஆகிவிட்டார்கள். இப்பொழுது உலகம் எங்களுக்கு நன்மை செய்யும் மாதர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று உங்கள் பக்கம் பார்க்கிறார்கள். எனவே இப்பொழுது ஜகத்தின் மாதர்களாக ஆகி ஜகத்திற்கு நன்மை செய்யுங்கள். உலகியல் குடும்பப் பொறுப்பை ஏற்று செய்பவராக மட்டும் இல்லாமல் உலகின் அனைத்து ஆத்மாக்களின் பொறுப்பை ஏற்று செய்பவர்கள் நீங்கள். ஏதாவது காரணமாக நீங்கள் எங்கே இருந்தாலும் ஆனால் உங்களுடைய நினைவில் உலக சேவை இருக்க வேண்டும். எப்படி லட்சியம் இருக்குமோ அப்படி லட்சணம் இயல்பாகவே வந்து விடுகிறது. லட்சியம் எல்லைக்கப்பாற்பட்டதாக இருக்கிறது என்றால், லட்சணமும் எல்லைக்கப் பாற்பட்டதாக வந்து விடும். இல்லையென்றால் எல்லைக்குட்பட்டதிலேயே மாட்டிக் கொண்டே இருப்பீர்கள். எப்பொழுதும் நான் தந்தையினுடையவள், எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் இருப்பவள், இதே நினைவிலிருந்து அனைத்து ஆத்மாக்களுக்காக நல்ல எண்ணங்கள் மூலமாக சேவை செய்து கொண்டே இருங்கள். இரண்டுமே சேர்ந்தே இருக்கட்டும். வாய் மூலமாக யாருக்காவது நன்றாகப் புரிய வையுங்கள். ஆனால் எதுவரை சுபபாவனையின் பலத்தை அந்த ஆத்மாவிற்கு கொடுக்கவில்லையோ அதுவரை பலன் கிடைக்காது. எண்ணம் மற்றும் வாய்மொழி இரண்டும் சேர்ந்தே சேவை செய்ய வேண்டும். செய்தி கொடுப்பது வரை மட்டும் உங்களுடைய சேவை இருக்க வேண்டாம். இல்லை என்றால் சரி, சரி என்று கூறிவிட்டு மட்டும் சென்று விடுவார்கள். மனசக்தி மூலம் செய்யும் சேவை சேர்ந்தே இருக்கிறது என்றால் அம்பு பாய்ந்து விடும். மாதர்களுக்கு சேவையின் மைதானத்தில் வர வேண்டும். ஒவ்வொரு மாதாவும் ஒவ்வொரு சேவை நிலையத்தை பொறுப்பேற்று நடத்த வேண்டும். ஒருவேளை நேரம் இல்லை என்றால், உங்களுக்குள் இரண்டு மூன்று பேர் அடங்கிய குழுவை உருவாக்குங்கள். வீட்டின் பந்தனம் இருக்கிறது, குழந்தைகள் இருக்கிறார்கள் என்ற அந்த நிலை வேண்டாம். சமூக சேவகர்களாக இருக்கும் மாதர்களுக்கும் குழந்தைகள் இருக்கிறார்கள் தான் இல்லையா? அவர்களும் கற்றுக் கொண்டு விடுகிறார்கள். எனவே இப்பொழுது தன்னைத் தானே சேவைக் கரமாக ஆக்குங்கள். மேலும் சேவையை அதிகரியுங்கள். யாரை யாவது உருவாக்கி அவருக்கு ஸ்தானம் கொடுத்து முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். சக்திகள் இப்பொழுது மைதானத்தில் வாருங்கள். தந்தையிடமிருந்து என்ன பாலனை பெற்றிருக்கிறீர்களோ அதற்கான பலனைக் கொடுங்கள். எந்த அளவு சேவையை அதிகரிப்பீர்களோ அந்த அளவு உங்களுக்கும் அதன் பலன் கிடைக்கும், தற்சமயமும் சக்திசாலியாக இருப்பீர்கள், மேலும் எதிர்காலமோ கண்டிப்பாக உருவாகத்தான் செய்யும். எந்த அளவு சேவை செய்வீர்களோ அந்த அளவு தடையவற்றவராக இருப்பீர்கள்.

மேலும் குஷியும் இருக்கும். நல்லது.

குமாரிகளுடன் சந்திப்பு –

குமாரிகள் தங்களுடைய சிரேஷ்ட பாக்கியத்தை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? எப்பொழுதாவது தன்னுடைய சிரேஷ்ட பாக்கியத்தை மறப்பது இல்லையே? எப்பொழுதும் பாக்கியத்தை நினைவில் வைத்துக் கொண்டே முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். சங்கமயுகத்தில் குமாரிகளுக்கு விசேஷமாக லி்ஃப்ட்டின் கி்ஃப்ட் கிடைக்கிறது. ஏனென்றால் குமாரி வாழ்க்கை கவலையிலிருந்து விடுபட்ட வாழ்க்கை. குடும்பத்தை நடத்துவதற்கான, வேலை என்ற கூடையை சுமப்பதற்கான எந்தக் கவலையும் இல்லை. குமாரி என்றால் சுதந்திரமானவர். சுதந்திரமாக இருப்பது அனைவருக்கும் பிரியமானது, அஞ்ஞான காலத்திலும் நான் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று தான் அனைவரின் லட்சியம் இருக்கிறது. சுதந்திரமாக இருப்பதின் வரதானம் உங்கள் அனைவருக்கும் பிராப்தியாகி இருக்கிறது. சுதந்திரமாக இருப்பதற்கான வரம் பெற்றவர்கள் அனைவருக்குமே இதே வரத்தை தான் அளிப்பீர்கள் இல்லையா. யாரையாவது குழப்பத்தில் மாட்ட வைப்பவர்கள் இல்லை. எப்பொழுது குழப்பத்திலிருந்து விடுபட்டு இருக்கிறீர்கள், சுதந்திரமாக இருக்கிறீர்கள் என்றால் சேவை செய்வீர்கள் இல்லையா? ஏதோஒரு காரணத்திற்காக இந்த வெளியுலக படிப்பு நடந்து கொண்டிருக்கிறது. அதைச் செய்து கொண்டும் சேவையின் நினைவு எப்பொழுதுமே இருக்கட்டும். படிப்பை படிக்கும் காலத்திலும். தந்தையின் குழந்தையாக எந்த ஆத்மாவை ஆக்கலாம் என்ற இந்த லட்சியம் எப்பொழுதுமே இருக்கட்டும். படிப்பை படித்துக் கொண்டே எந்த ஆத்மா தகுதியானவர் என்று பகுத்தறிந்து கொண்டே இருங்கள். அப்பொழுது அங்கேயும் சேவை நடந்து விடும். குமாரிகள் அவசியம் சொற்பொழிவு நிகழ்த்துவதற்கு கற்றுக் கொள்ள வேண்டும். அனைத்து படிப்பை படித்துக் கொண்டே தயார் ஆகிக் கொண்டே இருங்கள். படிப்பு முடிந்தவுடனேயே சேவையில் ஈடுபட்டு விடுங்கள். நல்லது.

வரதானம் :

உள்ளத்தின் அன்பு மற்றும் சம்மந்தத்தின் ஆதாரத்தினால் அருகாமையை அனுபவம் செய்யக்கூடிய நிரந்தர யோகி ஆகுக.

பிராமண ஆத்மாக்களில் சிலர் உள்ளத்தின் அன்பு, சம்மந்தத்தினால் நினைவு செய்கிறார்கள், மேலும் சிலர் புத்தி அதாவது ஞானத்தின் ஆதாரத்தில் சம்மந்தத்தை அனுபவம் செய்வதற்காக

அடிக்கடி முயற்சி செய்கிறார்கள். எங்கு உள்ளத்தின் அன்பு மற்றும் சம்மந்தம் மிகப் பிரியமானதாக அதாவது அருகாமையில் இருக்கிறது என்றால், அங்கு நினைவு மறப்பது கடினம். எப்படி உடலில் ஒவ்வொரு நரம்பிலும் இரத்தம் நிரம்பியிருக்கிறது, அதே போல் ஆத்மாவில் அனைத்து நேரமும் நினைவு நிரம்பியிருக்கிறது. இதைத் தான் உள்ளத்தின் அன்பு நிரம்பிய நிரந்தர நினைவு என்று கூறுவது.

சுலோகன்:

சுயநலமற்ற மற்றும் தீய எண்ணமற்ற நிலை மூலம் சேவை செய்யுங்கள் அப்பொழுது வெற்றி கிடைக்கும்.

ஓம்சாந்தி

## "பறக்கும் கலையில் செல்வதற்கான விதி மற்றும் புண்ணிய ஆத்மாக்களின் அடையாளங்கள்"

இன்று தோட்டத்து சொந்தக்காரர் தந்தை தன்னுடைய ஆன்மீக பூந்தோட்டத்தில் நறுமணம் நிறைந்த மலர்களை மற்றும் நாளைய நன்மைக்காக விசேஷமாக பொறுப்பாளர் ஆகியிருக்கும் தைரியம் - உற்சாகம் நிறைந்த மொட்டுக்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். நாளைய எதிர்காலத்தின் ஓவியங்களான சின்னஞ் சிறு குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். (இன்று பாப்தாதாவின் எதிரில் சின்னஞ்சிறு குழந்தைகளின் குரூப் அமர்ந்திருக்கிறது). இந்த சின்னஞ்சிறு குழந்தைகளை பூமியின் மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். இதே அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் உலகிற்கு புதிய ஒளி கொடுப்பதற்கு பொறுப்பாளர் ஆவார்கள். இந்த சிறிய பெரிய குழந்தைகளைப் பார்த்து பாப்தாதாவிற்கு ஸ்தாபனை காலத்தின் தொடக்க காட்சிகள் நினைவு வருகிறது. அந்த சின்னஞ்சிறு குழந்தைகள் உலகிற்கு நன்மை செய்யும் காரியத்தின் ஊக்கம் உற்சாகத்தில், அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், விஞ்ஞானி ஆத்மாக்கள் விருப்பம் வைத்திருக்கிறார்கள் ஆனால் செய்ய முடிவதில்லை அந்தக் காரியத்தை சிறியவர்கள் நாங்கள் செய்து காண்பிப்போம் மேலும் நாங்கள் மிகப்பெரிய காரியம் செய்து காண்பிப்போம் என்ற திட எண்ணம் வைப்பவர்கள் உருவானார்கள். மேலும் இன்று அந்த சின்னச் சின்ன குழந்தைகளின் எண்ணத்தை நடைமுறை ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த குறைவான குழந்தைகளே இன்று சிவசக்தி பாண்டவ சேனை ரூபத்தில் காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அனைவரும் யக்ஞ சரித்திரத்தையோ தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? இன்று அதே எரிந்து கொண்டிருக்கும் தீபங்கள் மூலமாக நீங்கள் அனைவரும் தீபமாலையாகி தந்தையின் கழுத்தின் மாலை ஆகி விட்டீர்கள். இப்பொழுதும் சிறிய சிறிய குழந்தைகளைப் பார்த்து ஒவ்வொரு குழந்தையிலும் உலகின் நாளைய அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள் என்ற சித்திரம் தென்படுகிறது. அனைத்து குழந்தைகளும் தன்னை என்னவென்று நினைக்கிறீர்கள்? நீங்கள் அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் தான் இல்லையா.! இன்றைய நாளோ குழந்தைகளுக்கான நாள், பெரியவர்களோ கேலரியில் அமர்ந்து

பார்ப்பவர்கள். பாப்தாதாவும் குழந்தைகளைப் பார்த்து விசேஷமாக மகிழ்ச்சியடைகிறார். ஒவ்வொரு குழந்தையும் அனேக ஆத்மாக்களுக்கு தந்தையின் அறிமுகம் கொடுத்து தந்தையின் ஆஸ்திக்கு உரியவர்களாக ஆக்குபவர்கள் தான் இல்லையா! பொதுவாக குழந்தைகளை மஹாத்மா என்று கூறுவோம். உண்மையிலும் உண்மையான மஹான் ஆத்மாக்கள் அதாவது சிரேஷ்ட தூய்மையான ஆத்மாக்கள் நீங்கள் அனைவரும் இல்லையா! அந்த மாதிரி மஹான் ஆத்மாக்கள் எப்பொழுதும் தன்னுடைய ஒரே ஒரு திட எண்ணத்தில் இருக்கிறீர்களா? எப்பொழுதும் ஒரு தந்தை மேலும் ஒருவரின் ஸ்ரீமத்படி தான் நடக்க வேண்டும் என்ற இந்த உறுதியான நிச்சயத்தை செய்திருக்கிறீர்கள் இல்லையா? உங்கள், உங்கள் இடங்களுக்கு சென்ற பிறகு வேறு யாருடைய தொடர்பிலேயோ வரப்போகிறவர்கள் இல்லை தானே? உங்கள் அனைவரின் புகைப்படம் பிடிக்கப்பட்டு விட்டது. எனவே எப்பொழுதும் தன்னுடைய சிரேஷ்ட வாழ்க்கையை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நாம் ஒவ்வொரு குழந்தையும் உலகின் அனைத்து ஆத்மாக்களின் சிரேஷ்ட பரிவர்த்தனைக்கு பொறுப்பாளர்கள் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இவ்வளவு பெரிய பொறுப்பை எடுப்பதற்கு தைரியம் இருக்கிறதா? அனைத்து குழந்தைகளும் அமிர்தவேளையில் தொடங்கி தங்களுடைய பொறுப்பை ஏற்றுச் செய்பவர்களா? யாரெல்லாம் ஏதாவது விஷயத்தில் பலஹீனமாக இருக்கிறீர்கள் என்றால் அதை இப்பொழுதே சரி செய்து விடுங்கள். இப்பொழுது உங்கள் அனைவரின் மேல் அனைவரின் பார்வை இருக்கிறது. எனவே அமிர்தவேளையில் தொடங்கி இரவு வரை சகஜயோகி, சிரேஷ்டயோகி வேறு என்னவெல்லாம் சிரேஷ்ட வாழ்க்கைக்காக தினசரி செய்ய வேண்டிய காரியங்கள் இருக்கின்றனவோ, அதன்படி அனைவரும் மிகச்சரியாக நடந்து கொள்ள வேண்டும் - இந்த கவனத்தை இப்பொழுதிருந்தே திட எண்ண ரூபத்தில் வைக்க வேண்டும். அனைவருக்கும் யோகியின் இலட்சணங்கள் தெரியுமா? ஒவ்வொரு குழந்தையும் பாப்தாதாவின் ஒவ்வொரு விஷயத்திலும் சரி ஐயா என்று பதில் கூறிக் கொண்டே இருக்க வேண்டும். யோகி ஆத்மாக்களின் அமருவது, நடத்தை, திருஷ்டி என்னவாக இருக்கும் என்ற இந்த அனைத்தையும் தெரிந்திருக்கிறீர்களா? இந்த மாதிரியே நடந்து கொள்கிறீர்களா? அல்லது கொஞ்சம், கொஞ்சம் விளையாட்டுத்தனம் உள்ளதா? நீங்கள் அனைவரும் யோகி ஆத்மாக்கள் தான் இல்லையா? உலகத்தினர் என்ன செய்கிறார்களோ அதை குழந்தைகள் நீங்கள் செய்ய முடியாது. மஹான் ஆத்மாக்கள் நீங்கள் அந்த மாதிரி அமைதி சொரூபமாக இருங்கள், எவ்வளவு தான் பெரிய மனிதர்களாக இருந்தாலும் ஆனால் அமைதி சொரூப ஆத்மாக்கள் உங்களைப் பார்த்து அமைதியை அனுபவம் செய்ய வேண்டும். மேலும் இவர்கள் சாதாரண குழந்தைகள் இல்லை ஆனால் அனைவரும்

தெய்வீகக் குழந்தைகள் என்பது தான் தென்பட வேண்டும். வித்தியாசமானவர்கள் மற்றும் விசேஷ ஆத்மாக்கள் என்று தென்பட வேண்டும். நீங்கள் அந்த மாதிரி நடந்து கொள்கிறீர்களா? இப்பொழுதிலிருந்தே இதையும் பரிவர்த்தனை செய்ய வேண்டும். இன்று விசேஷமாக அனைத்து குழந்தைகளை சந்திப்பதற்காகத் தான் பாப்தாதா வந்திருக்கிறார். புரிந்ததா?

குழந்தைகளுடன் பெரியவர்களும் வந்திருக்கிறார்கள். வந்திருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா விசேஷ நினைவு கொடுக்கிறார். கூடவே தற்சமயத்திற்கேற்றபடி பாப்தாதா அனைத்துக் குழந்தைகளையும் பறக்கும் கலையில் கொண்டு செல்கிறார் என்பதை அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள். பறக்கும் கலைக்கான சிரேஷ்ட சாதனத்தை தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? ஒரு வார்த்தையின் பரிவர்த்தனை மூலம் எப்பொழுதும் பறக்கும் கலையின் அனுபவம் செய்ய முடியும். அந்த ஒரு வார்த்தை எது? "அனைத்தும் உன்னுடையது" என்பது மட்டும் தான். "என்னுடைய" என்ற வார்த்தையை மாற்றி உன்னுடையது என்று ஆக்கி விட்டீர்கள். உன்னுடைய என்ற வார்த்தை தான் நான் உன்னுடையவன் என்று ஆக்கி விடுகிறது. மேலும் இதே ஒரு வார்த்தை நிரந்தரமாக டபுள் லைட் ஆக்கி விடுகிறது. நான் உன்னுடையவன் என்றால் ஆத்மா லைட் (ஒளி). மேலும் எப்பொழுது எல்லாம் உன்னுடையது என்றாலும் லைட் (லேசானவர்) ஆகிவிட்டீர்கள் இல்லையா? "உன்னுடைய" என்ற ஒரே ஒரு வார்த்தை மட்டும். டபுள் லைட் ஆகி விடுவதினால் சகஜமாக பறக்கும் கலை உள்ளவராக ஆகி விடுகிறார்கள். "என்னுடையது" என்று சொல்வதின் நீண்ட காலப் பயிற்சி இருக்கிறது. என்னுடைய என்ற இந்த வார்த்தை தான் அனேக விதமான சுழற்சியில் கொண்டு வந்தது. இப்பொழுது இந்த ஒரு வார்த்தையை மாற்றம் செய்து விடுங்கள். என்னுடையதிலிருந்து உன்னுடையது ஆகிவிட்டது. இந்த மாற்றம் கடினம் இல்லை அல்லவா? எனவே எப்பொழுதும் இந்த ஒரு வார்த்தையின் சொரூபத்தில் நிலைத்து இருங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? எப்பொழுதும் ஒரே ஈடுபாட்டில் மூழ்கியிருக்கக் கூடிய சிரேஷ்ட ஆத்மாக்கள் தற்சமயமும் சிரேஷ்ட வாழ்க்கையை அனுபவம் செய்கிறார்கள் மேலும் எதிர்காலத்தையும் அழியாத சிரேஷ்டமாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே எப்பொழுதும் இந்த ஒரு வார்த்தையை நினைவில் வையுங்கள். புரிந்ததா? இதே ஆதாரத்தில் எந்தளவு முன்னேற விரும்புகிறீர்களோ அந்த அளவு முன்னேற முடியும். மேலும் எந்தளவு பொக்கிஷத்தை தன்னிடம் சேமிப்பு செய்ய விரும்புகிறீர்களோ அந்தளவு சேமிப்பு செய்ய முடியும். பொதுவாக உலகியல் வாழ்க்கையில் கூட யாரெல்லாம் பெயர்

பெற்ற நல்ல குலத்தை சேர்ந்த ஆத்மாக்களாக இருப்பார்களோ, அவர்கள் எப்பொழுதும் தன்னுடைய வாழ்க்கைக்காக தானம், தர்மம் செய்யும் இலட்சியத்தை வைத்திருப்பார்கள். நீங்கள் அனைவரும் மிகப்பெரிய சிரேஷ்ட குலத்தைச் சேர்ந்தவர்கள். சிரேஷ்ட குலத்தைச் சேர்ந்த பிராமண ஆத்மாக்கள் என்றால் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பிய ஆத்மாக்கள், அவர்களுடைய இலட்சியமும் என்னவாக இருக்கிறது? எப்பொழுதும் மஹாதானி (பெரும் வள்ளல்) ஆகுங்கள். எப்பொழுதும் புண்ணிய ஆத்மா ஆகுங்கள். ஒருபொழுதும் எண்ணத்தில் கூட ஏதாவது விகார வசமாக எண்ணத்தை வைத்தார் என்றால் அதை என்னவென்று கூறுவது? பாவம் என்றா அல்லது புண்ணியம் என்றா? பாவம் என்று கூறுவோம் இல்லையா? தனக்காகவும் எப்பொழுதும் புண்ணியம் செய்பவராக ஆகுங்கள். எண்ணத்திலும் புண்ணிய ஆத்மா, வார்த்தைகளிலும் புண்ணிய ஆத்மா, மேலும் காரியத்திலும் புண்ணிய ஆத்மா. எப்பொழுது புண்ணிய ஆத்மா ஆகிவிட்டீர்கள் என்றால் பாவத்தின் பெயர், அடையாளம் இருக்க முடியாது. எனவே அனைத்து பிராமண ஆத்மாக்கள் நாம் நிரந்தர புண்ணிய ஆத்மாக்கள் என்ற நினைவை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். எந்த ஆத்மாவிற்காகவும் எப்பொழுதும் உயர்ந்த பாவனை மற்றும் உயர்ந்த விருப்பங்கள் வைப்பது, அனைத்தையும் விட பெரிய புண்ணியம். எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும், விரோதி ஆத்மாவாக இருந்தாலும் ஆனால் விரோதி ஆத்மாவையும் உயர்ந்த பாவனையின் புண்ணியத்தின் மூலதனம் மூலம் அந்த ஆத்மாவையும் பரிவர்த்தனை செய்து விடுவது தான் புண்ணிய ஆத்மாவின் புண்ணியம் ஆகும். புண்ணியம் என்றாலே எந்த ஆத்மாவிற்கு எந்தப் பொருளின் பிராப்தி இல்லையோ அதை பிராப்தி செய்விப்பது தான் புண்ணியம். எப்பொழுது யாரவாது விரோதி ஆத்மா உங்கள் எதிரில் வருகிறார் என்றால் புண்ணிய ஆத்மா அந்த ஆத்மாவை, சகித்துக் கொள்ளும் சக்தியால் வஞ்சிக்கப்பட்ட ஆத்மா என்ற அந்தப் பார்வையிலேயே பார்ப்பார். மேலும் தன்னுடைய புண்ணியத்தின் மூலதனம் மூலம், சுபபாவனை மூலம், உயர்ந்த எண்ணம் மூலம் அந்த ஆத்மாவிற்கு சகித்துக் கொள்ளும் சக்தி பிராப்தி செய்விக்கும் சகயோகி ஆத்மாவாக ஆவார். அவருக்கு இதுவே புண்ணிய காரியம் ஆகிவிடுகிறது. புண்ணிய ஆத்மா எப்பொழுதும் தன்னை வள்ளலின் குழந்தை கொடுப்பவர் என்று நினைப்பார். எந்த ஆத்மா மூலமும் அற்பகால பிராப்தி அடைவதற்கான விருப்பத்திலிருந்து விலகி இருப்பார். இந்த ஆத்மா ஏதாவது கொடுத்தால் நானும் கொடுப்பேன் அல்லது இவரும் ஏதாவது செய்தால் நானும் செய்வேன் என்று அந்த மாதிரி எல்லைக்குட்பட்ட விருப்பம் வைக்க மாட்டார். வள்ளலின் குழந்தையாகி அனைவருக்காகவும் அன்பு, சகயோகம், சக்தி கொடுக்க கூடிய புண்ணிய ஆத்மாவாக இருப்பார். புண்ணிய ஆத்மா ஒருபொழுதும் தான் செய்த புண்ணியத்திற்கு பதிலாக

பாராட்டுக்கள் பெற வேண்டும் என்ற விருப்பம் வைப்பதில்லை. ஏனென்றால் இந்த எல்லைக்குட்பட்ட பாராட்டுதலை ஏற்றுக்கொள்வது நிரந்தரமான பிராப்தியிலிருந்து வஞ்சிக்கப்படுவது என்று புண்ணிய ஆத்மா தெரிந்திருக்கிறார். எனவே அவர் கொடுப்பதில் எப்பொழுதும் கடலுக்கு சமமாக நிரம்பி இருப்பார். புண்ணிய ஆத்மா எப்பொழுதும் தன்னுடைய ஒவ்வொரு வார்த்தை மூலம் மற்றவர்களை குஷியில், தந்தையின் அன்பில், அதீந்திரிய சுகத்தில், ஆன்மீக ஆனந்தம் நிறைந்த வாழ்க்கையின் அனுபவம் செய்விப்பார். அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் குஷியின் டானிக்காக இருக்கும். புண்ணிய ஆத்மாவின் ஒவ்வொரு காரியமும் ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் சகயோகம் பிராப்தி செய்விப்பதாக இருக்கும். மேலும் ஒவ்வொரு ஆத்மாவும் இந்த புண்ணிய ஆத்மா செய்யும் காரியத்தைப் பார்த்து எப்பொழுதும் மேலே பறப்பதற்கான சகயோகம் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்று அனுபவம் செய்வார். புண்ணிய ஆத்மாவின் இலட்சணம் என்ன என்று புரிந்ததா? எனவே அந்த மாதிரி நிரந்தரமான புண்ணிய ஆத்மா ஆகுங்கள் அதாவது உயர்ந்த பிராமண வாழ்க்கையின் பிரத்யக்ஷ சொரூபம் ஆகுங்கள். தூய்மையான இல்லற மார்க்கத்தின் புண்ணிய ஆத்மா ஆகுங்கள். அப்பொழுது தான் அந்த மாதிரியான புண்ணிய ஆத்மாக்களின் பிரபாவத்தினால் பாவத்தின் பெயர் அடையாளம் முடிவடைந்து விடும். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணம் மூலம் புண்ணியம் செய்யும் புண்ணிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஒரு வார்த்தையின் பரிவர்த்தனை மூலம் பறக்கு கலையில் செல்லக்கூடிய, எப்பொழுதும் வள்ளலின் குழந்தையாகி அனைவருக்கும் கொடுக்கக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

குமாரர்களுக்காக அவ்யக்த பாப்தாதாவின் இனிமையான மஹாவாக்கியங்கள் அனைத்து குமாரர்களும் முதல் நம்பரில் வருபவர்கள் தான் இல்லையா? முதல் நம்பர் ஒன்று இருக்குமா அல்லது இத்தனை இருக்குமா? நல்லது. முதல் டிவிஷனில் வருபவர்களா? முதலில் வருபவர்களின் விசேஷம் என்னவாக இருக்கும் என்று அதைத் தெரிந்திருக்கிறீர்களா? முதலில் வருபவர்கள் எப்பொழுதும் தந்தைக்கு சமமாக இருப்பார்கள். சமநிலை தான் நெருக்கத்தைக் கொண்டு வரும். நெருக்கம் என்றால் சமமாக ஆகுபவர்கள் தான் முதல் டிவிஷனில் வரமுடியும். அப்படியானால் தந்தைக்கு சமமாக எப்பொழுது ஆவீர்கள்? எப்பொழுது வெற்றி மாலையில் வருபவர்களின் வரிசை

எண் வெளியாகிவிட்டது என்றால் பிறகு என்ன செய்வீர்கள்? எப்பொழுது வெளியாகும் என்ற தேதி இல்லை. ஆனால் இப்பொழுது தான் அந்த நேரம். இதில் கடினம் இருக்கிறதா என்ன? குமாரர்களுக்கு என்ன கடினம் இருக்கிறது? இரண்டு பிடி சாதம் சாப்பிட வேண்டும் மேலும் தந்தையின் சேவையில் ஈடுபட வேண்டும், இது தான் வேலை இல்லையா? இரண்டு பிடி சாதம் சாப்பிட வேண்டும் என்ற காரணத்திற்காக ஏதாவது வேலை செய்கிறீர்கள். அப்படி செய்கிறீர்களா அல்லது பற்றுதலோடோ செய்யவில்லை தான் இல்லையா? நிமித்தம் என்று சொல்வதினால் ஒன்றும் ஆவதில்லை, குமாரர்கள் என்று சொல்வதினால் செய்வதில்லை, சுதந்திரமானவர்கள். எனவே தந்தைக்கு சமமாக ஆக வேண்டும் என்ற இலட்சியத்தை எப்பொழுதும் வைத்துக் கொள்ளுங்கள். எப்படி தந்தை லைட் ஆக இருக்கிறார் அதே போல் நீங்கள் டபுள் லைட். மற்றவர்களை பார்க்கிறீர்கள் என்றால் பலஹீனமாகி விடுகிறீர்கள். தந்தையைப் பாருங்கள், தந்தையைப் பின்பற்றி நடங்கள். இதைத் தான் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தன்னை எப்பொழுதும் தந்தையின் பாதுகாப்பு குடைநிழலுக்குள் வைத்துக் கொள்ளுங்கள். பாதுகாப்பு குடைநிழலுக்குள் இருப்பவர் மாயாவை வென்றவராக ஆகியே விடுகிறார். ஒருவேளை குடைநிழலுக்குள் இருப்பதில்லை, சில நேரம் வெளியிலும், சில நேரம் உள்ளேயும் இருக்கிறார் என்றால் தோல்வி ஏற்பட்டுவிடுகிறது. குடைநிழலுக்குள் இருப்பவருக்கு கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்காது. இயல்பாகவே அனைத்து சக்திகளின் கிரணங்கள் அவரை மாயாவை வென்றவர் ஆக்கி விடுகிறது. ஒரு தந்தை அனைத்து உறவுகளினால் என்னுடையவர் என்ற இந்த நினைவு சக்திசாலியான ஆத்மா ஆக்கி விடுகிறது.

குமார் இப்பொழுது அந்த மாதிரி தனது வாழ்க்கையின் வரைபடத்தை தயார் செய்து காண்பியுங்கள். அதைப் பார்த்து அனைவரும் தடையற்ற ஆத்மாக்கள் இருக்கிறார்கள் என்றால் இங்கே இருக்கிறார்கள் என்று கூற வேண்டும். அனைவரும், விக்னவிநாஷக் (தடைகளை அழிப்பவர்) ஆகுங்கள். நீங்கள் குழப்பத்தில் வருபவர்கள் அல்ல. ஆனால் வாயுமண்டலத்தை மாற்றம் செய்பவர்கள். சக்திசாலியான வாயுமண்டலத்தை உருவாக்குபவர் ஆகுங்கள். எப்பொழுதும் வெற்றிக் கொடியை பறக்க விட்டுக் கொண்டே இருங்கள். அந்த மாதிரி விசேஷ வரைபடத்தை தயார் செய்யுங்கள். எங்கு ஒற்றுமை இருக்கிறதோ அங்கு சகஜமாக வெற்றி இருக்கிறது. ஆனால் கீழே தள்ளுவதில் ஒற்றுமையாக இருக்காதீர்கள். ஆனால் முன்னேற்றம் செய்வதில் வையுங்கள். எப்பொழுதும் பறக்கும் கலையில் செல்ல வேண்டும். மேலும் அனைவரையும் அழைத்துச்

செல்ல வேண்டும் என்ற இந்த இலட்சியம் இருக்கட்டும். குமார் என்றால் எப்பொழுதும் கட்டளைப்படி நடப்பவர், உண்மையானவர். ஒவ்வொரு அடியிலும் தந்தையைப் பின்பற்றி நடப்பவர். எது தந்தையின் குணமோ அது குழந்தைகளினுடையது, எது தந்தையின் காரியமோ அது குழந்தைகளினுடையது, எது தந்தையின் சம்ஸ்காரமோ அது குழந்தைகளினுடையது. இதைத் தான் தந்தையை பின்பற்றி நடப்பது என்று கூறுவது. தந்தை என்ன செய்தாரோ அதைத் தான் மீண்டும் செய்ய வேண்டும், காப்பி செய்ய வேண்டும். இந்த காப்பி செய்வதினால் முழு மதிப்பெண்கள் கிடைத்து விடும். வெளி உலகில் காப்பி செய்வதினால் மதிப்பெண் குறைந்து விடும் மேலும் இங்கு முழு மதிப்பெண் கிடைத்து விடுகிறது. எனவே என்னவெல்லாம் மனதில் எண்ணம் வைக்கிறீர்களோ அதை, இது தந்தைக்கு சமமானதா என்று முதலில் சோதனைசெய்யுங்கள். ஒருவேளை இல்லையென்றால் அதை மாற்றி விடுங்கள். ஒருவேளை சமமாக இருக்கிறது என்றால் நடைமுறையில் கொண்டு வாருங்கள். எவ்வளவு சுலபமான வழி. எதை தந்தை செய்தாரோ அதை நீங்கள் செய்யுங்கள். அந்த மாதிரி எப்பொழுதும் தந்தையைப் பின்பற்றி நடப்பவர் தான் எப்பொழுதும் மாஸ்டர் சர்வசக்திவான் நிலையில் நிலைத்திருக்கிறார். தந்தையின் ஆஸ்தியே அனைத்து சக்திகள் மற்றும் அனைத்து குணங்கள் தான். தந்தையின் வாரிசு என்றால் அனைத்து சக்திகள் மற்றும் அனைத்து குணங்களின் அதிகாரி. அதிகாரியிடமிருந்து எப்படி அதிகாரம் அவரை விட்டுச் செல்ல முடியும்? ஒருவேளை அலட்சியமானவராக ஆனீர்கள் என்றால் மாயா திருடி விடும். மாயாவிற்கும் மிக நல்ல வாடிக்கையாளர்களாக பிராமணன் தான் தென்படுகிறார். எனவே அதுவும் வாய்ப்பை எடுத்துக் கொள்கிறது. அரைக் கல்பம் அதனுடைய துணைவர்களாக இருந்திருக்கிறீர்கள். எனவே அது தன்னுடைய துணைவர்களை அப்படியே விட்டுவிடுமா என்ன? மாயாவின் வேலை வருவது, மேலும் உங்களுடைய வேலை அதன் மேல் வெற்றியடைவது, பயப்படக்கூடாது. வேட்டைக்காரன் எதிரில் வேட்டையாட வேண்டியது வருகிறது என்றால் பயப்படுவார்களா என்ன? மாயா வருகிறது என்றால் வெற்றி அடையுங்கள் பயப்படாதீர்கள். நல்லது.

டீச்சர்களுடன் சந்திப்பு - நீங்கள் பொறுப்பிருக்கும்

சேவாதாரிகள்! பொறுப்பாளர் என்று கூறுவதினால், யார் பொறுப்பாளர் ஆக்கியிருக்கிறார் என்று சகஜமாகவே நினைவு வந்து விடுகிறது. எப்பொழுதெல்லாம் சேவாதாரி என்ற வார்த்தை கூறுகிறீர்கள் என்றால் அந்த வார்த்தைக்கு முன் பொறுப்பு அல்லது கருவி

என்று அவசியம் கூறுங்கள். இன்னொன்று கருவி என்று நினைப்பதினால் இயல்பாகவே பணிவு வந்து விடும். மேலும் யார் எவ்வளவு பணிவானராக இருப்பாரோ அந்த அளவு பலனளிப்பவராக இருப்பார். பணிவானவர் ஆவது என்றால் பலன் சொரூபம் ஆவது. நீங்கள் அனைவரும் பொறுப்பு சேவாதாரிகள், தன்னை ஒரு கருவி என்று புரிந்து நடந்து கொள்கிறீர்கள்? கருவி என்று புரிந்து கொள்பவர் எப்பொழுதும் இலேசானவராகவும் எப்பொழுதும் வெற்றியடைபவராக இருப்பார். எந்தளவு இலேசாக இருப்பீர்களோ அந்தளவு வெற்றி அவசியம் இருக்கும். சில நேரம் சேவை குறைவாக இருக்கிறது, சில நேரம் அதிகமாக இருக்கிறது என்றால் சுமையாகவோ அனுபவம் ஆகவில்லையே? என்னவாகும், எப்படியாகும் என்று சுமையாகவோ ஆவதில்லையே? செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார், நான் ஒரு கருவாகி மட்டும் காரியம் செய்து கொண்டிருக்கிறேன் என்பது தான் சேவாதாரியின் விசேஷம். எப்பொழுதும் தன்னுடைய முயற்சியின் மீது மற்றும் சேவையின் மீது திருப்தியாக இருங்கள் அப்பொழுது தான் யாருக்கு பொறுப்பாளர் ஆகுகிறீர்களோ அவர்களிலும் திருப்தி இருக்கும். எப்பொழுதும் திருப்தியாக இருப்பது, மேலும் மற்றவர்களை திருப்தியாக வைத்துக் கொள்வது இது தான் விசேஷம்.

தற்சமயத்தின் கணக்கின் பிரகாரம் சேவாதாரிகள் செய்ய வேண்டிய சேவை எது? அனைவரையும் சுமையற்று இருப்பவர்களாக ஆக்கும் சேவை. பறக்கும் கலையில் கொண்டு செல்வதற்கான சேவை. எப்பொழுது சுமையற்றவர்களாக இருப்பார்களோ அப்பொழுது தான் பறக்கும் கலையில் கொண்டு செல்ல முடியும். அனைத்து விதமான சுமையிலிருந்து தன்னையும் இலேசாக ஆக்குபவர் மேலும் அனைவரின் சுமையையும் இலேசாக ஆக்குபவர் எந்த ஆத்மாக்களுக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்களோ அவர்களை இலட்சியம் வரை சென்றடையவோ செய்ய வேண்டும் இல்லையா? தங்கிப்போகவோ, மாட்டிக் கொள்ளவோ வைக்கக்கூடாது. ஆனால் சுமையற்றவராகி, சுமையற்றவர் ஆக்க வேண்டும். சுமையற்றவர்கள் ஆனீர்கள் என்றால் இலக்கை தானாகவே சென்றடைந்து விடுவீர்கள். சேவாதாரிகள் செய்ய வேண்டிய தற்சமயத்து சேவை இது தான். பறந்து கொண்டே இருங்கள், பறக்க வைத்துக் கொண்டே இருங்கள். உங்கள் அனைவருக்கும் சேவையின் லாட்டரி கிடைத்திருக்கிறது, இந்த லாட்டரியை எப்பொழுதும் காரியத்தில் ஈடுபடுத்திக் கொண்டே இருங்கள். ஒவ்வொரு விநாடியும், மூச்சிற்கு மூச்சு சேவை நடந்து கொண்டே இருக்கட்டும். இதிலேயே எப்பொழுதும் பிஸியாக இருங்கள். நல்லது.

வரதானம் :

சுக சொரூபமாகி முழு உலகத்தில் சுகத்தின் கிரணங்களை பரப்பக்கூடிய மாஸ்டர் ஞான சூரியன் ஆகுக.

எப்படி தந்தை ஞானக் கடலாக, சுகக்கடலாக இருக்கிறார், அதே போல் நீங்களும் ஞான சொரூபம், சுக சொரூபம் ஆகுங்கள். ஒவ்வொரு குணத்தின் வர்ணனை மட்டும் செய்ய வேண்டாம் ஆனால் அதன் அனுபவம் இருக்கட்டும். நீங்கள் எப்பொழுது சுக சொரூபத்தின் அனுபவி ஆவீர்களோ அப்பொழுது சுகசொரூப ஆத்மா உங்கள் மூலமாக சுகத்தின் கிரணங்கள் உலகில் பரவும். எப்படி சூரியனின் கிரணங்கள் நாலாபுறங்களிலும் செல்கிறது அதேபோல் எப்பொழுது உங்களுடைய ஞானம், சுகம், ஆனந்தத்தின் கிரணங்கள் அனைத்து ஆத்மாக்கள் வரை சென்றடைகிறதோ அப்பொழுது தான் மாஸ்டர் ஞான சூரியன் என்று கூறுவோம்.

சுலோகன்:-

யார் தன்னுடைய வார்த்தை, எண்ணம் மற்றும் காரியம் மூலம் தெய்வீகத்தை அனுபவம் செய்விக்கிறாரோ அவர் தான் தெய்வீக ஜென்மம் எடுத்த பிராமணன் ஆவார்.

ஓம்சாந்தி

17.05.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" சங்கமயுகம் - மகிழ்ச்சி நிறைந்த காட்சிகளுக்கான யுகம் "

இன்று பாப்தாதா தன்னுடைய சிறிய மற்றும் பெரிய கவலையில்லா மகாராஜாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சங்கமயுகத்தில் தான் இத்தனை மகாராஜாக்களின் மிகப்பெரிய சபை கூடுகிறது. வேறு எந்த யுகத்திலும் இத்தனை மகாராஜாக்களின் சபை கூடுவதில்லை. இந்த நேரத்தில் மட்டும் தான் கவலையில்லா மகாராஜாக்களின் சபை என்று கூறினாலும் அல்லது சுயராஜ்ய சபை என்று கூறினாலும் அதை நீங்கள் அனைவரும் பார்க்கிறீர்கள். உங்களில் சிறியவர்கள், பெரியவர்கள் நாம் அனைவரும் இந்த உடலின் எஜமானன், சுத்தமான ஆத்மா என்று இதைத் தான் தெரிந்திருக்கிறீர்கள். மேலும் ஏற்றுக் கொண்டு நடந்து கொண்டும் இருக்கிறீர்கள். ஆத்மா யாராக ஆனது? எஜமானன், சுயராஜ்ய அதிகாரி. மிகப் பெரிய சிறிய குழந்தைகளும் நான் மகாராஜா என்று நினைக்கிறார். அப்படியானால் மகாராஜாக்களின் சபை மற்றும் சுயராஜ்ய சபை எவ்வளவு பெரியதாக ஆனது. மேலும் மகாராஜாக்களின் மகாராஜா மற்றும் இராஜாக்களின் இராஜா ஆகக்கூடிய - தற்சமயத்து இராஜாவிலிருந்து எதிர்காலத்து இராஜா ஆகுபவர், அந்த மாதிரி இராஜாக்களைப் பார்த்து மற்றும் அனைத்து கவலையில்லா மகாராஜாக்களைப் பார்த்து எந்த அளவு மகிழ்ச்சி அடைவோம். முழுக்கல்பத்திலும் தன்னுடைய குழந்தைகளாக லட்சக்கணக்கான மகாராஜா குழந்தைகள் இருக்கும் தந்தை யாராவது இருக்க முடியுமா? யாரிடம் வேண்டும் என்றாலும் கேளுங்கள். அவர் என்ன கூறுவார்? சின்னஞ்சிறு குழந்தையும் நான் லட்சுமி நாராயணன் ஆவேன் என்று தான் கூறுவார், அனைத்து குழந்தைகளும் அந்த மாதிரி நினைக்கிறீர்கள் இல்லையா? அந்த மாதிரி தந்தைக்கு, அந்த மாதிரி இராஜ குழந்தைகளின் மேல் எந்த அளவு பெருமிதம் இருக்கும். நானும் இராஜ குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று உங்கள் அனைவருக்கும் ஈஸ்வரிய பெருமிதம் இருக்கிறது. நீங்கள் இராஜ வம்சியா? அந்த மாதிரி இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்துக் கொண்டிருந்தார். தந்தையின் எத்தனை பாக்கியம் நிறைந்த குழந்தைகள். ஒவ்வொரு குழந்தையும் பாக்கியம் நிறைந்தவர். கூடவே காலத்தின் சகயோகமும் இருக்கிறது ஏனென்றால் இந்த சங்கமயுகம் எந்த அளவு சிறிய யுகமோ அந்த அளவு விசேஷங்களினால் நிரம்பிய யுகம். சங்கமயுகத்தில் என்ன பிராப்திகள் இருக்கின்றனவோ அது வேறு எந்த யுகத்திலும் இருக்க முடியாது. சங்கமயுகமே மகிழ்ச்சியான காட்சிகளின் யுகம். மகிழ்ச்சியே மகிழ்ச்சி தான் இல்லையா! அருந்துகிறீர்கள் என்றாலும், தந்தையுடன் மகிழ்ச்சியாக

அருந்துங்கள். காரியம் செய்கிறீர்கள் என்றாலும் செய்விப்பவர் தந்தையுடன், செய்யும் நான் ஒரு கருவி என்று புரிந்து செய்யுங்கள். தூங்கினீர்கள் என்றாலும் நினைவின் மடியில் தூங்குங்கள். எழுந்தீர்கள் என்றாலும் பகவானுடன் ஆன்மீக உரையாடல் செய்யுங்கள். முழு நாள் நிகழ்வுகளில் தந்தை மற்றும் நீங்கள் சேர்ந்தே இருக்கிறீர்கள். மேலும் தந்தை இருக்கிறார் என்றால் பாவம் இருக்காது. பிறகு என்னவாகும்? மகிழ்ச்சியே மகிழ்ச்சி தான் இருக்கும் இல்லையா? அனைத்து குழந்தைகளும் மகிழ்ச்சியில் இருக்கிறார்கள் என்பதை பாப்தாதாவும் பார்த்துக் கொண்டிருந்தார். இந்த சின்னஞ்சிறு ஜென்மம் எடுத்திருப்பதே மகிழ்ச்சியாக இருப்பதற்காகத் தான். சாப்பிடுங்கள், அருந்துங்கள், நினைவின் மகிழ்ச்சியில் இருங்கள். இந்த ஆன்மீக ஜென்மத்தின் தர்மம் அதாவது தாரணை 'மகிழ்ச்சியின் இருப்பது'. தெய்வீக காரியம், சேவையில் மகிழ்ச்சியில் இருப்பது. ஜென்மத்தின் இலட்சியமே மகிழ்ச்சியில் இருப்பது. மேலும் முழு உலகத்தை அனைத்து மகிழ்ச்சிகள் நிறைந்த உலகமாக ஆக்குவது. அதிகாலையில் தொடங்கி இரவு வரை மகிழ்ச்சிகள் நிறைந்த காட்சிகளின் நடுவில் இருக்கிறீர்கள் இல்லையா? கவலையில்லா மகாராஜா ஆகி இரவு பகலையும் கழிக்கிறீர்கள் இல்லையா? அம்மாதிரி இன்று சூட்சும வதனத்தில் என்ன பார்த்தோம் என்று கேட்டீர்களா? கவலையில்லா மகாராஜாக்களின் சபை. ஒவ்வொரு மகாராஜாவும் தன்னுடைய நினைவின் மகிழ்ச்சியில் தந்தையின் இதயசிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் நினைவு நிறைந்த திலகமிட்டவர்களாக இருந்தார்கள். நல்லது. இன்றோ சந்திப்பதற்கான நாள், எனவே தன்னுடைய மகாராஜாக்களை சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். நல்லது.

எப்பொழுதும் கவலையில்லா மகாராஜா, மகிழ்ச்சிகள் நிறைந்த வாழ்க்கையில் மகிழ்ச்சியான காட்சிகளைப் பார்க்கக்கூடிய, எப்பொழுதும் பாக்கியவான் தந்தையுடன் இருக்கக்கூடிய, அந்த மாதிரி சுயராஜ்ய அதிகாரி, இதய சிம்மாசனதாரி, பலகோடி மடங்கு பாக்கியம் நிறைந்த குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

சின்னக் குழந்தைகளுடன் சந்திப்பு - அனைத்து குழந்தைகளும் தன்னை மகான் ஆத்மாக்கள் என்று புரிந்து கொண்டு படித்துக் கொண்டும், விளையாடிக் கொண்டும், நடந்து கொண்டும் இருக்கிறீர்களா? நாங்கள் மகாத்மாக்கள், உயர்ந்ததிலும் உயர்ந்த பகவானின் குழந்தைகள் என்ற இந்த குஷியை போதையுடனிருங்கள். பகவானைப் பார்த்திருக்கிறீர்களா? எங்கே இருக்கிறார்? என்னையும் பகவானோடு சந்திக்க வையுங்கள் என்று யாராவது கூறினார் என்றால் அவரை சந்திக்க வைக்க முடியுமா? நீங்கள் அனைவரும் பகவானின் குழந்தைகள் என்றால் ஒருபொழுதும் சண்டையிடுவது இல்லையே? குழப்பம் செய்கிறீர்களா? பகவானின்

குழந்தைகளோ யோகிகளாக இருப்பார்கள். பிறகு நீங்கள் ஏன் குழப்பம் செய்கிறீர்கள்? எப்பொழுதும் தன்னை மகான் ஆத்மா, யோகி ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள். என்னவாக ஆவீர்கள்? லட்சுமி - நாராயணன் இரண்டுமாக ஒரே நேரத்தில் ஆவீர்களா? அல்லது சில நேரம் லட்சுமி ஆவீர்கள், சில நேரம் நாராயணன் ஆவீர்களா? லட்சுமி ஆவது விருப்பமா? நல்லது. எப்பொழுதும் நாராயணன் ஆக விரும்புகிறீர்கள் என்றால், எப்பொழுதும் அமைதியான யோகி வாழ்க்கையில் இருக்க வேண்டும். மேலும் தினசரி காலை எழுந்து அவசியம் தந்தைக்கு குட் மார்னிங் சொல்ல வேண்டும். மிகத் தாமதமாக எழுந்து மேலும் விரைவில் தயாராகி சென்று விடுவது என்று அப்படி இருக்க வேண்டாம். மூன்று நிமிடங்களாவது நினைவில் அமர்ந்து அவசியம் குட் மார்னிங் சொல்லுங்கள், பேசுங்கள், பிறகு தயார் ஆகுங்கள். இந்த விரதத்தை ஒருபொழுதும் மறக்காதீர்கள். ஒருவேளைகுட் மார்னிங் சொல்லவில்லை என்றால் உணவு அருந்த மாட்டீர்கள். உணவு நினைவில் இருக்கிறது என்றால் முதலில் குட் மார்னிங் சொல்ல வேண்டும் என்ற நினைவு இருக்கும். குட் மார்னிங் சொல்லி விட்டு பிறகு உணவு அருந்துங்கள். ஞானத்தின் படிப்பை நினைவு செய்யுங்கள், நல்ல குணங்களைக் கடைப்பிடித்தீர்கள் என்றால், உலகில் நீங்கள் ஆன்மீக ரோஜாமலராகி நறுமணத்தைப் பரப்புவீர்கள். ரோஜாமலர் எப்பொழுதும் மலர்ந்திருக்கும், மேலும் எப்பொழுதும் நறுமணம் வீசும். எனவே நீங்கள் அந்த மாதிரியே நறுமணம் நிறைந்த மலர் தான் இல்லையா? எப்பொழுதும் குஷியாக இருக்கிறீர்களா? அல்லது எப்பொழுதாவது கொஞ்சம் துக்கமும் இருக்கிறதா? எப்பொழுதாவது ஏதாவது ஒரு பொருள் கிடைக்கவில்லை என்றால் அப்பொழுது துக்கம் இருக்கலாம் அல்லது அம்மா, அப்பா ஏதாவது கூறினார்கள் என்றால், துக்கம் ஏற்படுவதாக இருக்கலாம். அம்மா, அப்பா ஏதாவது கூறும் அளவிற்கு அந்த மாதிரி எந்தக் காரியமும் செய்யாதீர்கள். ஃபரிஷ்தாக்கள் சென்று கொண்டிருப்பது போலநடந்து கொள்ளுங்கள். ஃபரிஷ்தாக்கள் சப்தம் செய்ய மாட்டார்கள். மனிதனாக இருப்பவர் சப்தம் செய்வார். நீங்கள் பிராமணனாக இருந்து பிறகு ஃபரிஷ்தா ஆகுபவர்கள். எனவே சப்தம் செய்யாதீர்கள். யாருக்குமே தெரியாத அளவிற்கு அந்த மாதிரி நடந்து கொள்ளுங்கள். ஆதாவது ஃபரிஷ்தா ஆகி சாப்பிடுங்கள், அருந்துங்கள், விளையாடுங்கள். அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா மிகுந்த வாழ்த்துக்கள் வழங்குகிறார். மிக நல்ல குழந்தைகள், மேலும் எப்பொழுதும் நல்லவர்களாகவே இருங்கள். நல்லது.

பெண் குழந்தைகளுடன் சந்திப்பு - குமாரி வாழ்க்கையின் மகிமையாக என்ன இருக்கிறது? குமாரிகள் பூஜை செய்யப்படுகிறார்கள், ஏன்? தூய்மையான ஆத்மாக்கள். அந்த மாதிரி நீங்கள் அனைவரும் தூய்மையான ஆத்மாக்கள். தூய்மையான நினைவின் மூலம் மற்றவர்களையும் தூய்மையாக ஆக்கும் சேவையில் இருப்பவர்கள் தான் இல்லையா? சிறியவர்களாக இருந்தாலும், பெரியவர்களாக இருந்தாலும், தந்தையின் அறிமுகத்தையோ அனைவருக்கும்

கொடுக்க முடியும் தான் இல்லையா? சிறியவர்களும் மிக நன்றாக சொற்பொழிவு நிகழ்த்துகிறார்கள். அனைவரையும் விட மிகச் சிறிய குமாரியை பெரிய மேடையில் சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக பாப்தாதா கூறினார் என்றால், அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறீர்களா? சங்கோஜப்பட மாட்டீர்களே? பயப்பட மாட்டீர்களே? எப்பொழுதும் தன்னை உலகிலுள்ள அனைத்து ஆத்மாக்களுக்கும் நன்மை செய்யக்கூடிய விஷ்வ கல்யாணகாரி ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் உலகிலுள்ள சாதாரண குமாரிகள் இல்லை. ஆனால் சிரேஷ்ட குமாரிகள். சிரேஷ்ட குமாரி, சிரேஷ்ட காரியம் செய்வார் இல்லையா? அனைத்தையும் விட சிரேஷ்டத்திலும் சிரேஷ்ட காரியம் தந்தையின் அறிமுகம் கொடுத்து, தந்தையின் குழந்தையாக ஆக்குவது. உலகத்தினர் அலைந்து கொண்டிருக்கிறார்கள், தேடிக் கொண்டிருக்கிறார்கள், மேலும் நீங்கள் தெரிந்து கொண்டீர்கள், அடைந்து விட்டீர்கள். நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள், பாக்கியம் நிறைந்தவர்கள். பகவானின் குழந்தையாக ஆகிவிட்டீர்கள், இதைவிட பெரிய பாக்கியம், ஒன்றும் இல்லை. எனவே எப்பொழுதும் நான் பாக்கியம் நிறைந்த ஆத்மா என்ற இந்தக் குஷியிலேயே இருங்கள். ஒருவேளை இந்தக் குஷி இல்லாமல் ஆகிவிட்டது என்றால், பிறகு சில நேரம் அழுவீர்கள், சில நேரம் குழப்பம் செய்வீர்கள். எப்பொழுதும் உங்களுக்குள் அன்போடு இருங்கள், மேலும் வீட்டிருக்கும் தாய் தந்தையின் சொற்படி நடப்பவர்களாக இருங்கள். எப்பொழுதும் பரலோகத்து தந்தையின் நினைவில் இருங்கள். அப்பொழுது தான் சிரேஷ்ட குமாரிகள் ஆக முடியும். தன்னை எப்பொழுதுமே சிரேஷ்ட குமாரி, பூஜைக்குரிய குமாரி என்று புரிந்து கொள்ளுங்கள். கோயில்களில் எந்த சக்திகளுக்கு பூஜை நடக்கிறதோ அது நீங்கள் தான் இல்லையா? ஒவ்வொரு குமாரியும் மிகப் பெரிய காரியம் செய்ய முடியும். உலகத்தை மாற்றம் செய்யும் காரியத்திற்கு பொறுப்பாளர் ஆக முடியும். உலக மாற்றத்தின் காரியத்தை பாப்தாதா குழந்தைகளுக்குக் கொடுத்திருக்கிறார். எனவே எப்பொழுதும் தந்தை மற்றும் சேவையின் நினைவில் இருங்கள். உலக மாற்றம் செய்யும் சேவைக்கு முன்பு தன்னுடைய மாற்றம் செய்யுங்கள். முன்பு என்ன வாழ்க்கையாக இருந்ததோ அதை முற்றிலும் மாற்றி, நான் சிரேஷ்ட ஆத்மா, தூய்மையான ஆத்மா, மகான் ஆத்மா, பாக்கியம் நிறைந்த ஆத்மா என்ற இதே நினைவில் இருங்கள். இந்த நினைவை பள்ளி அல்லது கல்லூரியில் சென்று மறந்து விடுவதில்லையே. மற்றவர்களின் தொடர்பின் பாதிப்போ ஏற்படுவதில்லையே. எப்பொழுதாவது சாப்பிடும் பொருட்களின் பக்கம் மனம் ஈர்க்கப்படுவதோ இல்லையே. கொஞ்சம் பிஸ்கட் சாப்பிடலாம் அல்லது ஐஸ்கிரீம் சாப்பிடலாமா என்று ஆசையோ எழுவதில்லையே? நீங்கள் எப்பொழுதும் பாபாவின் நினைவில் இருந்து சமைக்கப்பட்ட பிரம்மா போஜனம் அருந்துபவர்கள். அந்த மாதிரி உறுதியானவர்கள் தான் இல்லையா? பார்த்துக் கொள்ளுங்கள், அங்கே உங்களிடத்திற்குச் சென்ற பிறகு மற்றவர்களின் தொடர்பின்

பாதிப்பில் வந்து விடாதீர்கள். குமாரிகள் எந்த அளவு பாக்கியத்தை உருவாக்க விரும்புகிறார்களோ அந்த அளவு உருவாக்க முடியும். சிறு வயது பருவத்திலிருந்தே சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் இருங்கள். படிப்பையும் படியுங்கள். மேலும் கற்பிக்கவும் கற்றுக் கொள்ளுங்கள். சிறு வயது பருவத்தில் புத்திசாலிகளாக, திறமை நிறைந்தவர்களாக ஆகிவிட்டீர்கள் என்றால், பெரியவர்களாகி நாலாபுறங்களிலும் சேவை செய்வதற்குப் பொறுப்பாளர் ஆகிவிடுவீர்கள். ஸ்தாபனையின் நேரத்தில் கூட சிறு சிறு குழந்தைகளாக இருந்தார்கள், அவர்கள் இப்பொழுது எத்தனை சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அவர்களையும் விட திறமை நிறைந்தவர்களாக ஆக வேண்டும். நாளைய எதிர்காலம் நீங்கள். நாளை பாரதம் சொர்க்கம் ஆகிவிடும் என்றால், நீங்கள் நாளைய எதிர்காலம். யார் உங்களைப் பார்த்தாலும் இவர் சாதாரணமானவர் இல்லை. விசேஷ குமாரி என்று அனுபவம் செய்ய வேண்டும்.

அந்த படிப்பைப் படித்து கொண்டும், மனதின் ஈடுபாடு ஞானத்தின் படிப்பில் மேல் இருக்க வேண்டும். படித்து முடித்த பிறகு என்ன லட்சியம் இருக்கிறது? சிரேஷ்ட ஆத்மாவாகி சிரேஷ்ட காரியம் செய்வதற்கான லட்சியம் இருக்கிறது. வேலை செய்வது என்ற கூடையைத் தூக்கும் லட்சியம் இல்லை தான் இல்லையா? ஒருவேளை வேலை செய்துதானாக வேண்டும் என்று ஏதாவது காரணம் இருக்கிறது என்றால், அது வேறு விஷயம். தாய் தந்தையிடம் வருமானத்திற்கான வேறு எந்த சாதனமும் இல்லை என்றால் அது நிர்பந்தமானது. ஆனால் தன்னுடைய நிகழ் காலம் மற்றும் எதிர்காலத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். தனக்கு உதவக்கூடியதாக எது வரும்? ஞானத்தின் படிப்பு தான் 21 ஜென்மங்களுக்கு உதவுவதாக வரும். எனவே ஏதாவது காரணத்தினால் உலகீய காரியம் செய்ய வேண்டியதாக இருந்தாலும் மனதின் ஈடுபாடு தந்தை மற்றும் சேவையில் இருக்க வேண்டும். அந்த மாதிரி அனைவரும் வலது கரமாக ஆகுங்கள். இடது கரமாக அல்ல. ஒருவேளை இத்தனை அனைவரும் வலது கரமாக ஆகிவிட்டார்கள் என்றால் விநாஷம் உடனே ஏற்பட்டு விடும். இத்தனை சக்திகள் வெற்றிக் கொடியை எடுத்துக் கொண்டு வந்து விட்டார்கள் என்றால், இராவண இராஜ்யத்தின் நேரம் முடிவடைந்து விடும். எப்பொழுது பிரம்மா குமாரி ஆக வேண்டும் என்றால் இந்த வெளியுலக பட்டங்களை வைத்து என்ன செய்வீர்கள்? இதுவோ ஒரு காரணத்திற்காக பொது அறிவு மூலம் புத்தி விசாலமானதாக ஆக வேண்டும் என்பதற்காக இந்தப் படிப்பு படிக்கப்படுகிறது. மனதின் ஈடுபாடோடு இல்லாமல், இந்த வருடம் இந்தப் பட்டத்தைப் பெறலாம், பிறகு அடுத்த வருடம் இந்தப் பட்டத்தை பெறலாம் என்று அப்படி இருக்க வேண்டாம். அப்படி செய்து செய்து காலன் வந்து விடுவான். எனவே யார் பொறுப்பில் இருக்கிறாரோ அவரிடமிருந்து இன்னும் படிக்க வேண்டுமா அல்லது படிக்க வேண்டாமா என்று

அறிவுரை பெற்றுக் கொண்டே இருங்கள். சிலர் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் தன்னுடைய தற்சமயத்தையும் எதிர்காலத்தையும் விட்டு விடுகிறார்கள், ஏமாற்றம் அடைந்து விடுகிறார்கள். தன்னுடைய வாழ்க்கையின் முடிவை சுயம் தானே செய்ய வேண்டும். தாய், தந்தையர் கூற வேண்டும் என்ற அப்படி வேண்டாம். நீங்களே நீதிபதி ஆகுங்கள். நீங்கள் சிவசக்திகள், உங்களை யாரும் பந்தனத்தில் கட்டிப்போட முடியாது. செம்மறி ஆடுகளை பந்தனத்தில் கட்டிப்போட முடியும். சக்திகளை முடியாது. சக்திகள் சிங்கத்தில் அமர்ந்திருப்பவர்களாக காண்பிப்பார்கள். சிங்கம் திறந்த வெளியில் இருக்கும். பந்தனத்தில் இருக்காது. பந்தனத்தில் இல்லை என்றால், எப்பொழுதும் தந்தையின் வலது கரமாக இருக்கிறீர்கள் என்ற இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நல்லது.

டீச்சர்களுடன் சந்திப்பு:

நான் பொறுப்பிலிருக்கும் சேவாதாரி என்ற இதே நினைவு எப்பொழுதும் இருக்கிறது தான் இல்லையா? செய்விப்பவர் கருவியாக்கி செய்வித்துக் கொண்டிருக்கிறார். எனவே செய்விப்பவர் பொறுப்பாளர் ஆகிறார் இல்லையா? கருவியாக ஆகுபவர்கள் எப்பொழுதும் சுமையற்று இருப்பவர்கள். டைரக்ஷன் கிடைத்தது, காரியம் செய்தார், மேலும் எப்பொழுதும் சுமையற்று இருக்கிறார். அந்த மாதிரி இருக்கிறீர்களா அல்லது எப்பொழுதாவது சேவையின் சுமை அனுபவம் ஆகிறதா? ஏனென்றால் ஒருவேளை சுமை இருக்கிறது என்றால் வெற்றி ஏற்படாது. சுமை என்று புரிந்து கொள்வதினால் எந்தவொரு காரியமும் யதார்த்தமாக இருக்காது. ஸ்தூலத்திலும் எப்பொழுது ஏதாவது ஒரு காரியத்தின் சுமை ஏற்படுகிறது என்றால், எதையாவது உடைப்பார்கள், எதையாவது நொறுக்குவார்கள். ஏதாவது மனத்தாங்கல் ஏற்படும், நிலை குலைந்து போவார். காரியத்திலும் வெற்றி இருக்காது. அதே போல் இந்த ஆன்மீக காரியத்தையும் சுமை என்று புரிந்து செய்தீர்கள் என்றால், யதார்த்தமாக இருக்காது. வெற்றி ஏற்பட முடியாது. பிறகு சுமை அதிகரித்துக் கொண்டே இருக்கும். எனவே சங்கமயுகத்தின் சிரேஷ்ட பாக்கியமாக சுமையற்றவராகி பறப்பதற்காக என்ன இருக்கிறதோ அதைப் பெற முடியாது. பிறகு சங்கமயுகத்தின் பிராமணன் ஆகி என்ன செய்தீர்கள். எனவே எப்பொழுதும் சுமையற்றவராகி கருவி என்று புரிந்து கொண்டு ஒவ்வொரு காரியத்தையும் செய்ய வேண்டும். இவரைத் தான் வெற்றி நிறைந்தவர் என்று கூறுவது. எப்படி இன்றைய உலகத்தில் காலுக்கு கீழே சக்கரத்தை கட்டிக் கொண்டு ஓடு கிறார்கள், அவர்கள் எவ்வளவு லேசாக சுமையற்றவராக இருக்கிறார்கள். அவர்கள் செல்லும் வேகம் அதிகமானதாக ஆகிவிடும். எனவே எப்பொழுது தந்தை நடத்திக் கொண்டிருக்கிறார் என்றால், ஸ்ரீமத் என்ற சக்கரங்கள் மாட்டப்பட்டு விட்டது இல்லையா? ஸ்ரீமத் என்ற சக்கரங்கள் மாட்டப்படுவதினால் இயல்பாகவே முயற்சி செய்வதின்

வேகம் அதிகமாகிவிடும். எப்பொழுதும் அந்த மாதிரி சேவாதாரி ஆகி, நடந்து கொள்ளுங்கள். சிறிதளவும் சுமையை உணராதீர்கள். செய்விப்பவர் எப்பொழுது தந்தை என்றால், சுமை ஏன் இருக்கிறது? இதே நினைவின் மூலம் எப்பொழுதும் பறக்கும் கலையில் சென்று கொண்டே இருங்கள். எப்பொழுதும் பறந்து கொண்டே இருங்கள், அவ்வளவு தான்! இவரைத் தான் நம்பர் ஒன் தகுதியான சேவாதாரி என்று கூறுவது. எப்பொழுதும் பாபா, பாபா, பாபா அவ்வளவு தான்! ஒவ்வொரு விநாடியும் இந்த இடைவிடாத இசை ஒத்துக் கொண்டே இருக்கட்டும். பாபா மற்றும் நான்' அவ்வளவு தான்! என்று இந்த மாதிரி எப்பொழுதும் மூழ்கி யிருந்தீர்கள் என்றால், மூன்றாமவர் இடையில் வர முடியாது. எங்கு எப்பொழுதும் ஒருவர் இன்னொருவரோடு நிரம்பி இருக்கிறார்கள், இருவரும் திருப்தியாக இருக்கிறார்கள் என்றால் இடையில் யாரும் வர முடியாது. இதைத் தான் சிரேஷ்ட சேவாதாரி என்று கூறுவது. நீங்கள் அந்த மாதிரி இருக்கிறீர்களா? வேறு எதையும் பார்க்காதீர்கள், எதையும் கேட்காதீர்கள். கேட்பதினாலும் பிரபாவம் ஏற்படுகிறது. பாபா மற்றும் நான் அவ்வளவு தான் என்றிருந்து எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள். கடுமையான உழைப்பையோ அதிகம் செய்திருக்கிறீர்கள். இப்பொழுது மகிழ்ச்சியாக இருப்பதற்கான நேரம். உங்களிடம் ஒரு பாடல் இருக்கிறது தானே? மகிழ்ச்சியே மகிழ்ச்சி தான். . . . எழும்புங்கள், செல்லுங்கள், சேவை செய்யுங்கள், தூங்குங்கள் அனைத்தையும் மகிழ்ச்சியாகச் செய்யுங்கள். ஆடுங்கள், பாடுங்கள், குஷியில் இருங்கள். சேவையையும் மிகுந்த குஷியோடு ஆடிக்கொண்டே செய்யுங்கள். விழுந்து கொண்டும், ஏறிக்கொண்டும் அந்த மாதிரி செய்யாதீர்கள். சங்கமயுகத்தில் அனைத்து சம்மந்தங்களின் மகிழ்ச்சி இருக்கிறது. எனவே மிகவும் மகிழ்ச்சியாக இருங்கள். எப்பொழுதும் மகிழ்ச்சிகளின் காட்சிகளிலேயே இருங்கள். நல்லது.

வரதானம் :

கர்மங்களின் ஆழமான விளைவுகளைத் தெரிந்தவராகி தர்மராஜ்புரியின் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பாக இருக்கும், பாவங்களை வென்றவர் ஆகுக.

தண்டனைகளின் அனுபவத்தைத் தான் தர்மராஜ்புரி என்று கூறுகிறோம். மற்றபடி தர்மராஜ்புரி என்று தனியான இடம் ஒன்றும் இல்லை. இறுதி நேரத்தில் தன்னால் செய்யப்பட்ட பாவங்கள் பயமுறுத்தும் எமதூதன் ரூபத்தில் எதிரில் வரும். அந்த நேரம் வேதனை அடையும் மற்றும் வைராக்கியத்திற்கான நேரமாக இருக்கும். சின்னச் சின்ன பாவங்கள் கூட பூதம் மாதிரி அனுபவம் ஆகும். வேதனை அடைவதின் ஐயோஐயோஎன்ற அலறல் இருக்கும். எனவே அந்த

தண்டனைகளை அடைவதிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக கர்மங்களின் ஆழமான விளைவுகளைத் தெரிந்தவராகி, எப்பொழுதும் சிரேஷ்ட கர்மம் செய்யுங்கள். மேலும் பாவத்தை வென்றவர் ஆகுங்கள்.

சுலோகன் :

யார் உடல், மனம், பணம், செல்வத்தினால் தந்தை மீது முழுமையான பலி ஆகிறாரோஅவர் தான் கழுத்தின் மாலை ஆகிறார்.

ஓம்சாந்தி

19.05.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" சாட்சியாக பார்ப்பவராக ஆவது எப்படி? "

இன்று பாப்தாதா இந்த பழைய உலகத்தின், பழைய இராஜ்ஜியத்தின் உலகத்தின், முற்றிலும் இற்றுப்போன உலகத்தின் செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்தார். என்னுடைய குழந்தைகளுக்கு இந்த பழைய உலகத்தில் எவ்வளவு சகித்துக் கொள்ள வேண்டியதிருக்கிறது என்பதை பார்த்துக் கொண்டிருந்தோம். ஆத்மாக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சிக்குரிய காலம்; ஆனால் உடலால் சகித்துக் கொள்ளவும் வேண்டியதாக இருக்கிறது. நம்முடைய இராஜ்ஜியத்தில் இயற்கையின் ஐந்து தத்துவங்களும் எப்பொழுதும் கட்டளைப்படி நடக்கும் சேவாதாரிகளாக இருப்பார்கள். ஆனால் நம்முடைய இராஜ்ஜியத்தை ஸ்தாபனை செய்வதற்காக பழையதைத் தான் புதியதாக ஆக்க வேண்டும். பழையதில் சேவாதாரியாக ஆகியே தீர வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது செய்யும் இந்த சேவை பல ஜென்மங்களுக்கு சேவை செய்வதிலிருந்து விடுவித்து விடுகிறது. இந்த சேவையின் பலன் சொரூபமாக இயற்கை மற்றும் சைத்தன்ய சேவாதாரிகள் உங்களுடைய நாலாபுறங்களிலும் சுற்றிக் கொண்டே இருப்பார்கள். எனவே நிரந்தரமான அனைத்து பிராப்தியின் எதிரில் இந்த சிறிதளவு சகித்துக் கொள்வது கூட சகித்துக் கொள்வதாக அனுபவம் ஆவதில்லை. சிரேஷ்ட சேவையின் போதைமற்றும் குஷியில் சகித்துக் கொள்வது கூட ஒரு சரித்திரத்தின் ரூபத்தில் மாறி விடுகிறது. பாகவதம் உங்கள் அனைவரின் சகித்துக் கொள்ளும் சரித்திரத்தின் நினைவு காவியம். எனவே சகித்துக் கொள்வது அல்ல; ஆனால் நினைவுச் சின்ன சரித்திரம் உருவாகிக் கொண்டிருக்கிறது. இதுவரையிலும் பகவானின் குழந்தைகள் தந்தையை சந்திக்க வேண்டும் என்ற அன்பில் என்ன என்ன செய்தார்கள் என்ற இதே மகிமையை, கோபி வல்லபரின் கோப கோபியர்கள் என்ன என்ன செய்தார்கள் என்ற மகிமையைக் கேட்கிறீர்கள். எனவே இது சகித்துக் கொள்வது அல்ல; ஆனால் சகித்துக் கொள்வது தான் சக்திசாலி ஆக்கிக் கொண்டிருக்கிறது. சகித்துக் கொள்ளும் சக்தி மூலம் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகிறீர்கள். சகித்துக் கொள்வதாக அனுபவம் ஆகிறதா அல்லது விளையாட்டாக அனுபவம் ஆகிறதா? மனமோஎப்பொழுதும் நடனமாடிக் கொண்டே இருக்கிறது தான் இல்லையா? மனதின் குஷி இந்த கொஞ்சம், கொஞ்சம் சகித்துக் கொள்வதையும் குஷியில் மாற்றி விடுகிறது. உடலும் உன்னுடையது, மனமும் உன்னுடையது என்றால் யாரிடம் உன்னுடையது என்று கூறினீர்களோ அவருக்குத் தெரியும். நீங்களோ விலகியிருப்பவராகவும் அன்பானவராகவும்

இருங்கள். எந்த நேரம் உடலின் கணக்கு வழக்கை முடிக்கும் பங்கை செய்கிறீர்களோ அந்த நேரம் பாபா நீங்கள் உண்டு, உங்கள் காரியம் உண்டு, உங்களுக்குத் தான் தெரியும் என்ற நிரந்தர நினைவில் மட்டும் இருக்க வேண்டும். நான் நோயுற்று இருக்கிறேன், என்னுடைய உடல் நோயுற்று இருக்கிறது என்று அந்த மாதிரி எண்ணம் இருக்க வேண்டாம். இது உங்களுடைய சொத்து, உங்களுக்குத் தான் தெரியும். நான் சாட்சியாக இருந்து உங்களுடைய சொத்திற்கு சேவை செய்து கொண்டிருக்கிறேன். இதைத் தான் சாட்சியாகப் பார்ப்பது என்று கூறுவது. டிரஸ்டி ஆக வேண்டும். அதே போலவேமனமும் உன்னுடையது. என்னுடையது இல்லவே இல்லை. எனது மனம் ஈடுபடுவதில்லை, எனக்கு யோகா வருவதில்லை, என்னுடைய புத்தி ஒருமித்து இருப்பதில்லை என்ற இந்த என்னுடைய என்ற வார்த்தை குழப்பத்தை உருவாக்குகிறது. என்னுடையது என்பது எங்கே இருக்கிறது? என்னுடையது என்பதை அகற்றுவது தான் அனைத்து பந்தனங்களிலிருந்து விடுபட்டவர் ஆவது. என்னுடைய பணம், என்னுடைய மனைவி, என்னுடைய கணவன், என்னுடைய குழந்தை ஞான மார்க்கத்தில் வருவதில்லை, அவருடைய புத்தியின் பூட்டை திறந்து விடுங்கள் என்று கூறுகிறார்கள். அவர்களைப் பற்றி மட்டும் ஏன் நினைக்கிறீர்கள்? என்னுடையவர்கள் என்ற உணர்வோடு ஏன் நினைக்கிறீர்கள்? இந்த மாதிரி ஒரு போதும், எந்தக் குழந்தையும் என்னுடைய ஊரின், தேசத்தின் ஆத்மாக்களின் பூட்டை திறங்கள் என்று கூறவில்லை. என்னுடைய மனைவியின், என்னுடைய குழந்தைகளின் என்ற இந்த என்னுடையவர்கள் என்ற உணர்வை எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் கொண்டு வருவதில்லை. எனவே எல்லைக்கப்பாற்பட்ட சுபபாவனையை ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் வைத்துக் கொண்டே அனைவரின் கூடவே அந்த ஆத்மாக்களையும் பாருங்கள். என்ன புரிந்து கொண்டீர்கள். உன்னுடையது உன்னுடையது ஆகிவிட்டது. எனக்கு எந்த சுமையும் இல்லை. பாப்தாதா விரும்பினால் எங்கே வேண்டுமானாலும் சேவைக்கு பொறுப்பாளர் ஆக்கட்டும். உடல் மூலம் சேவை செய்விக்கட்டும், மனம் மூலமாக மனசேவை செய்விக்கட்டும், எங்கே வேண்டுமானாலும் வைக்கட்டும், எந்த அறையில் வேண்டுமென்றாலும் வைக்கட்டும், சாதாரண கஞ்சி வேண்டுமென்றாலும் அருந்தக் கொடுக்கட்டும், அல்லது 36 வகை உணவை உண்ணக் கொடுக்கட்டும். ஆனால் எப்பொழுது என்னுடையது என்று எதுவும் இல்லையோ உன்னுடையதை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஏன் யோசிக்கிறீர்கள்? பகவான் தன்னுடைய குழந்தை களை எப்பொழுதும் உடலால், மனதால், பணத்தால், பொருளால் நன்றாக வைத்துக் கொள்வார். இது தந்தை அளிக்கும் உத்திரவாதம். பிறகு நீங்கள் ஏன் சுமையைத் தூக்குகிறீர்கள். அன்று கூட கூறினோம் இல்லையா - அனைத்தும் உன்னுடையது என்று கூறுபவர்களாக இருக்கிறீர்கள் என்றால் தந்தை என்ன அருந்தக் கொடுக்கிறாரோ அதைச் சாப்பிடுங்கள், குடியுங்கள் மற்றும் சந்தோஷமாக இருங்கள், நினைவு செய்யுங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியது இந்த வேலை மட்டும் தான். மற்ற அனைத்து வேலைகளையும் தந்தை அவரே செய்து விடுவார். ஒரே ஒரு வேலையையோசெய்ய முடியும் தான் இல்லையா? என்னுடையது என்று எப்பொழுது கூறுகிறீர்களோ அப்பொழுது மனம் சஞ்சலம் அடைகிறது. இது கடினமான விஷயம் என்று தான் யோசிக்கிறீர்கள் இல்லையா? கடினம் ஒன்றும் இல்லை ஆனால் அதை நீங்கள் கடினமாக்கி விடுகிறீர்கள். என்னுடையது என்ற உணர்வு கடினமாக்கி விடுகிறது; மேலும் உன்னுடையது என்ற உணர்வு சுலபமாக்கி விடுகிறது. உலக நன்மைக்கான பாவனை வைத்தீர்கள் என்றால் உலக நன்மைக்கான காரியம் விரைவிலேயே முடிவடைந்து விடும். மேலும் தன்னுடைய இராஜ்ஜியத்தில் சென்று விடுவீர்கள். அங்கே இந்த மாதிரி விசிறியை வீசிக் கொண்டிருக்க மாட்டீர்கள் (வெப்பம் அதிகமான காரணத்தினால் அனைவர் கையிலும் பல வண்ணங்களிலான விசிறி கொடுக்கப்பட்டிருந்தது). அங்கோ இயற்கை உங்களுக்கு விசிறும். ஒவ்வொரு வைரமும் அந்த அளவு ஒளி வீசும், அது இந்தக் காலத்து லைட்டை விட அதிசயமான லைட்டாக இருக்கும். எப்பொழுதும் உங்கள் மாளிகையில் ஒன்பது வண்ணங்களின் வைரத்தின் ஒளி பரவி இருக்கும். எவ்வளவு நல்ல லைட்டாக இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். ஒன்பது வண்ணங்கள் கலந்த ஒளி எவ்வளவு நன்றாக இருக்கும். மேலும் இங்கே பார்த்தீர்கள் என்றால், ஒரு வண்ண லைட் கூட அணைந்து, எரிந்து விளையாட்டு செய்து கொண்டிருக்கிறது. எனவே சேவை காரியத்தை நிறைவேற்றி முடிவு செய்யுங்கள். நீங்கள் சம்பன்னம் ஆனீர்கள் என்றால், அனைத்து சுகங்கள் நிறைந்த இராஜ்ஜியம் கண்டிப்பாக வந்தே விடும். புரிந்ததா?

இன்றோ அனைவரும் செல்வதற்கான நாள். பாப்தாதாவும் விரைவில் செய்தால் அப்பொழுது தான் நீங்களும் செல்வீர்கள். இப்பொழுதோ ட்ரெயின் கூட்டத்தில் செல்ல வேண்டியதாக இருக்கிறது, பிறகோ உங்களுடைய மாளிகையில் முன்னுக்கும், பின்னுக்கும் அனேக விமானங்கள் நின்று கொண்டிருக்கும். ஓட்டுனருக்காகவும் காத்திருக்க வேண்டாம். சிறு வயதுப் பருவத்திலேயே இயக்க முடியும். சின்னக் குழந்தையும் பொத்தானை அமுக்குவார்; உடனே பறந்தும் சென்று விடுவார். விபத்தோ ஏற்படாது. விமானங்களும் தயாராகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் நீங்கள் அனைவரும் எவரெடி ஆகிவிடுங்கள். சொர்க்கமோ தயாராகவே இருக்கிறது. விஷ்வ கர்மா கட்டளை இடுவார்; மேலும் மாளிகைகள், விமானங்கள் தயார். ஈஸ்வரிய மந்திர சக்தியின் பிராப்திகளின் நகரம். (அனைவரும் விசிறியை அசைத்துக் கொண்டிருந்தார்கள்). இதுவும் நல்ல காட்சி தான் புகைப்படம் எடுக்கப் போகிறார்கள். இந்த மாதிரி பல வண்ணங்கள் அடங்கிய விசிறியை வீசுபவர்கள் அடங்கிய சபையை வேறு எங்கும் பார்த்திருக்க மாட்டீர்கள். நல்லது.

எப்பொழுதும் உங்களுடையது உங்களுக்குத் தான் தெரியும் என்று திட எண்ணம் வைத்திருக்கும், எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட அனைத்து ஆத்மாக்களுக்காக சுபபாவனை வைத்திருக்கும், எப்பொழுதும் நினைவு மூலம் ஒவ்வொரு காரியத்தையும் நினைவுச் சின்னம் ஆக்கக்கூடிய, அந்த மாதிரி எவரெடி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

ட்ரெயினிங்கில் இருக்கும் குமாரிகளுடன் சந்திப்பு -

நீங்கள் அனைவரும் தன்னை தந்தையின் வலது கரம் என்று நினைக்கிறீர்கள் இல்லையா? நீங்கள் இடது கரமோஇல்லைதானே? வலது கரம் என்று ஒன்று கையைக் கூறுவார்கள் மற்றும் இன்னொன்று யார் சேவையில் எப்பொழுதும் சகயோகியாகஇருப்பாரோ அவரையும் வலது கரம் என்று கூறப்படும். எப்பொழுதும் சேவையில் சகயோகி ஆவதற்கான திட எண்ணத்தை வைத்து விட்டீர்கள் இல்லையா? அங்கே உங்கள் இடத்துக்கு சென்ற பிறகு மறந்து போய் விடாதே? ஒருவேளை ஏதாவது காரணமாக அல்லது காரணமின்றி சேவைக்காக வெளியில் செல்ல முடியாது என்றால் நான் சேவையில் துணைவன் ஆக வேண்டும் என்ற இந்த இலட்சியத்தை வைக்க வேண்டும். எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணத்திலும் சேவை நிரம்பி இருக்க வேண்டும். எங்கே இருந்தாலும் அங்கே எப்பொழுதும் தன்னை பூஜைக்குரிய மஹான் ஆத்மா என்று புரிந்து நடக்க வேண்டும். உங்களுடைய பார்வையும் யார் மேலேயும் செல்ல வேண்டாம், வேறு யாருடைய பார்வையும் உங்கள் மீது விழ வேண்டாம். அந்த மாதிரி பூஜைக்குரிய ஆத்மா என்று புரிந்து நடந்து கொள்ள வேண்டும். பூஜைக்குரிய ஆத்மா நான் என்ற நினைவில் இருக்கும் குமாரிகளின் மீது யாருடைய அந்த மாதிரி பார்வையும் செல்ல முடியாது. எப்பொழுதும் இந்த விஷயத்தில் தன்னை எச்சரிக்கையாக வைத்துக் கொள்ள வேண்டும். ஒருபொழுதும் தன்னை மதிப்பற்ற நினைவில் வைக்கக்கூடாது. பிரம்மா குமாரியாகவோ ஆகிவிட்டேன் . . . என்று ஒருபொழுதும் அப்படி அலட்சியமானவராக ஆகாதீர்கள். இப்பொழுதோ தாதி ஆகிவிட்டேன், தீதி ஆகிவிடடேன்..... என்றல்ல. இதுவோ சொல்வதற்காக அப்படி கூறுகிறோம். ஆனால் நீங்கள் சிரேஷ்ட ஆத்மா, பூஜைக்குரிய ஆத்மா, சக்தி ரூப ஆத்மா..... சக்தியின் மேல் யாருடைய பார்வையும் வர முடியாது. ஒருவேளை அந்த மாதிரி யாருடைய பார்வையாவது சென்றது என்றால், அவர் எருமை ஆகிவிட்டார் என்று காண்பிக்கிறார்கள். மேலும் எருமை கறுப்பாக இருக்கும் அதனால் எருமை ஆக்கி விட்டார் என்றால் கறுப்பான ஆத்மா ஆகிவிட்டார். மேலும் எருமை புத்தி என்றால் கல் புத்தி ஆகிவிடும். ஒருவேளை யாருடையவாவது தீய பார்வை செல்கிறது என்றால் அவர் கல்புத்தி, எருமை புத்தி உள்ளவராக ஆகிவிடுவார். ஏன் யாருடைய பார்வையாவது செல்ல வேண்டும். இதில்

குமாரிகளின் பலஹீனம் என்று தான் கூறுவோம். பாண்டவர்களுக்கு ஒருவித பலஹீனம், குமாரிகளுக்கு ஒரு வித பலஹீனம், எனவே தன்னை சோதனைசெய்யுங்கள். உங்கள் மீது யாருடைய பார்வையும் பட்டு விடக்கூடாதே என்று தாதி, தீதிகளுக்கும் பயம் இருக்கிறது. ஒருபொழுதும் யார் மீதும் பிரபாவம் அடையக்கூடாது, அந்த மாதிரி உறுதியானவர்கள் தான் நீங்கள் இல்லையா? இவர் மிக நல்ல சேவாதாரி, இவர் சேவையில் துணையாக இருந்து நல்ல உதவி செய்பவர், இவரோ அவ்வளவு சேவை செய்கிறார் என்று அந்த மாதிரி எண்ணமே இருக்கக்கூடாது. தந்தை செய்விக்கிறார். நான் இந்த அளவு சேவை செய்கிறேன் என்பதில்லை, தந்தை என் மூலமாக செய்விக்கிறார். எனவே நீங்களே பலஹீனமாக ஆகாதீர்கள்; மேலும் பலஹீனம் ஆவதற்கு மற்றவர்களுக்கு வாய்ப்பு கொடுக்காதீர்கள். இந்த விஷயத்தில் உங்களுக்கு எவர் மீதும் புகார் வரக்கூடாது. பாண்டவர்களும் மிக சாதுர்யமானவர்களாக இருப்பார்கள். ஏதாவது நல்ல நல்ல பொருட்களை கொண்டு வருவார்கள். சாப்பிடும் பொருட்கள், அணியும் பொருட்களை கொண்டு வருவார்கள், இதுவும் மாயா தான். அந்த நேரம் அவர்கள் மாயாவின் வசமாகி இருப்பார்கள். ஆனால் நீங்களோ மாயாவை பகுத்தறிபவர்கள் தான் இல்லையா? அந்தப் பொருளை, பொருள் என்று நினைக்காதீர்கள், அது பாம்பு. பாம்பு கண்டிப்பாகத் தீண்டும். எப்பொழுது இந்த அளவு கடுமையான பார்வை வைப்பீர்களோ அப்பொழுது தான் பாதுகாப்பாக இருப்பீர்கள். இல்லையென்றால், எவர் மீதாவது மாயா பிரவேசமாகி தன்னுடையவராக ஆக்குவதற்கு மிகுந்த முயற்சி செய்யும். எப்படி தொடக்க காலத்தில் சின்ன சின்ன குமாரிகளிடம் இவ்வளவு மிளகாய் சாப்பிட வேண்டும், இவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டியதாக இருக்கும், பயப்படக்கூடாது. பயந்தீர்கள் என்றால் மாயா வரும், பெரிய பெரிய ரூபத்தில் வரும் என்று பாப்தாதா கூறினார். ஆனால் பகுத்தறிபவர்கள் எப்பொழுதும் வெற்றி அடைபவர்களாக இருப்பார்கள். தோல்வி அடைய மாட்டார்கள். நீங்கள் அனைவருமே பகுத்தறியும் சக்தியை தாரணை செய்திருக்கிறீர்களா அல்லது செய்ய வேண்டுமா? பாருங்கள், இப்பொழுது உங்கள் அனைவரின் புகைப்படமும் பிடிக்கப்பட்டு விட்டது. உறுதியாக இருங்கள். குமாரிகள் ஒருவேளை இந்த விஷயத்தில் சக்திரூபம் ஆகிவிட்டார்கள் என்றால் ஆஹா! ஆஹா! என்று கைத்தட்டல்கள் கிடைக்கும். பாப்தாதாவும் வெற்றி மலர்களைத் தூவுவார். இப்பொழுது ரிஸல்ட்டை பார்ப்போம் அந்த மாதிரி ஆஞ்சனேயர் மாதிரி ஆக வேண்டும்.

தேவையான நேரத்தில் புரிந்து கொள்ளும் விவேகம் வந்து விடுவதும் அதிர்ஷ்டசாலியின் அடையாளம். தேவையான நேரத்தில் பழம் கொடுக்கும் மரத்தை மதிப்புள்ளது என்று கூறப்படும். உலகத்தில் என்ன தான் இருக்கிறது. கவலை மற்றும் துக்கத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. எனவே உறுதியான முடிவு எடுங்கள். ஏதாவது நல்ல கவர்ந்திழுக்கும்

பொருட்கள், ஏதாவது கவர்ந்திழுக்கும் நபர் எதிரில் வந்தாலும் கவரப்படாதீர்கள். எண்ணம், கனவில் கூட கடந்த காலத்து விஷயங்கள் நினைவிற்கு வரவேண்டாம். அது முந்தைய ஜென்மத்தின் விஷயமாகி விட்டது மாதிரி அதைப் பற்றி யோசிக்கவும் கூடாது.

பார்ட்டிகளுடன் சந்தித்துக் கொண்டே அமிர்தவேளை ஆகிவிட்டது -

பாருங்கள், பகலை இரவாக, இரவை பகலாக ஆக்கி விட்டீர்கள். இது தான் கோபகோபியர்களின் மகிமை. நீண்ட நடனம் செய்து, செய்து இரவிலிருந்து பகலாகி விட்டது - இது உங்கள் அனைவரின் மகிமை இல்லையா? நீங்கள் எப்பொழுதும் தந்தையின் அன்பில் மூழ்கியிருக்கும் அன்பிற்குரிய ஆத்மாக்கள் தான் இல்லையா? எந்தளவு குழந்தைகள் அன்பானவர்களோ அதைவிட பலமடங்கு தந்தை அன்பானவர். அந்த மாதிரி அனுபவம் ஆகிறது தான் இல்லையா? நினைக்க மட்டும் செய்யுங்கள் ஒரு விநாடியில் தந்தை ஆஜராகி விடுவார். நல்ல சேவாதாரி தான் இல்லையா? அனைவரையும் விட துரிதமாக செய்யும் சேவாதாரியாக தந்தை ஆனார் இல்லையா? மற்றவர்கள் வருவதில் நேரம் எடுத்துக் கொள்வர், எழுந்து, தயாராகி பிறகு நடந்து வந்து சேருவார். தந்தையோ எப்பொழுதும் எவரெடியாக இருக்கிறார். எப்பொழுது அழைத்தாலும் ஒரு விநாடிக்கும் குறைந்த நேரத்தில் வந்து சேர்ந்து விடுவார். அனைவரின் சேவைக்காக எப்பொழுதும் ஆஜராக இருக்கிறார், ஒருபொழுதும் தொந்தரவும் செய்வதில்லை. இப்பொழுது கூட பாருங்கள் எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தாரோ அவ்வளவு நேரம் அன்பில் மூழ்கியிருந்து அமர்ந்திருந்தாரா அல்லது களைப்படைந்து விட்டாரா? பாப்தாதா குழந்தைகளைப் பார்த்து, பார்த்து குஷியடைகிறார். அனைத்து குழந்தைகளையும் திருப்திபடுத்த வேண்டும் என்ற ஒப்பந்தத்தை தந்தை எடுத்திருக்கிறார் என்றால், ஒப்பந்தத்தை முழுமையாக செய்வார் இல்லையா? எப்பொழுதும் ஒவ்வொரு குழந்தையும் ஒருவர் இன்னொருவரை விடவும் பிரியமானவர். யாருமே பிரியமற்றவராக இருக்க முடியாது. குழந்தைகள் எப்படி பிரியமற்றவர்களாக இருக்க முடியும். அனைவரும் ஒருவர் இன்னொருவரை விட முன்னுக்கு இருக்கிறார்கள். அனைத்து குழந்தைகளும் ராஜா குழந்தைகள், பிரஜை குழந்தைகள் இல்லை.

உங்களுடைய ஜட விக்ரகங்களுக்காக பக்தர்கள் கண்விழித்திருக்கிறார்கள், எப்பொழுதாவது நீங்கள் செய்திருந்திருப்பீர்கள், அதனால் தானே பக்தர்கள் நீங்கள் செய்ததை அப்படியே செய்கிறார்கள். இந்த கண் விழித்திருப்பது இரட்டை வருமானம் செய்யும் கண் விழித்தல். தற்சமயமும் வருமானம் ஆனது; மேலும் தற்சமயத்தின் ஆதாரத்தில் எதிர்காலமும் சிரேஷ்டமானது. அம்மாதிரி நாம் நன்மை செய்யும் ஆத்மாக்கள், ஒவ்வொரு விஷயத்திலும்

நன்மை அடங்கியிருக்கிறது, தீமையோஏற்படவே முடியாது. ஏனென்றால், நன்மை செய்யும் தந்தையின் குழந்தைகள் ஆகிவிட்டீர்கள். வெளிமுகமாக தீமை ஏற்பட்ட காரியமாகத் தென்படலாம். உதாரணமாக விபத்து ஏற்பட்டது என்றால் நஷ்டம் ஆனது இல்லையா? மனிதர்களோ தீமை ஏற்பட்டு விட்டது என்று கூறுவார்கள். ஆனால் அந்த தீமையிலும் சங்கமயுக ஆத்மாக்களுக்காக நன்மை நிரம்பியிருக்கிறது. நஷ்டமும் ஈட்டியிலிருந்து முள் ஆகிவிடுகிறது. பெரிய நஷ்டத்திலிருந்து குறைந்த நஷ்டம் ஆகிவிடுகிறது. இதிலேயும் நன்மை இருக்கிறது என்று நினைத்து முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். அந்த மாதிரி நன்மை பயக்கும் ஆத்மா என்று தன்னைப் புரிந்து நடந்து கொள்ளுங்கள். தந்தை தனக்குச் சமமாக ஆக்கிவிட்டார். தந்தை நன்மை செய்பவர் என்றால் குழந்தைகளும் நன்மை செய்பவர்கள். குழந்தைகளை தந்தையோ தன்னையும் விட முன்னுக்கு வைக்கிறார். இரட்டை பூஜை உங்களுக்கு இருக்கிறது, இரட்டை இராஜ்யம் நீங்கள் செய்கிறீர்கள். இந்த அளவு போதைமற்றும் இந்த அளவு குஷி எப்பொழுதும் இருக்கட்டும். ஆஹா ! நான் சிரேஷ்ட ஆத்மா, ஆஹா ! நான் புண்ணிய ஆத்மா, ஆஹா! நான் சிவசக்தி என்ற இந்த நினைவிலேயே எப்பொழுதும் இருங்கள். நல்லது.

உங்கள் அனைவரின் வீடு மதுபன். பரம்தாமம் வீடு செல்வதற்காக மதுபன் வீட்டிலிருந்து தான் அனுமதி சீட்டு கிடைக்கும். பௌதீகமுறையில் மதுபன் வீடு; மேலும் உடலற்ற ஆத்மாக்களின் உலகம் பரம்தாமம். உங்களுடைய உண்மையான வீடு மதுபன் இங்கிருந்து எங்கு சென்று கொண்டிருக்கிறீர்களோ அது உங்களுடைய சேவா ஸ்தானம். அதை தன்னுடைய வீடு என்று நினைத்தீர்கள் என்றால், மாட்டிக் கொள்வீர்கள். சேவை நிலையம் என்று நினைத்தீர்கள் என்றால் விலகி இருப்பீர்கள்.எந்த ஆத்மாக்களுக்காக பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்களோ அவர்களுடன் இரத்த சம்பந்தத்தில் இல்லாமல் சேவை சம்பந்தத்தில் பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள். சேவையின் சம்பந்தம். எப்பொழுதும் நினைவு மற்றும் சேவையில் இருந்தீர்கள் என்றால் பற்றுதலை வென்றவராக சுலபமாகவே ஆகிவிடுவீர்கள். நல்லது.

விசேஷ சேவாதாரி என்றால் ஒவ்வொரு காரியத்திலும் விசேஷத்தைக் காண்பிப்பவர். அனைவருமே சேவாதாரி தான். ஆனால் விசேஷ சேவாதாரி விசேஷத்தைக் காண்பிப்பார். எப்பொழுது ஏதாவது சேவை செய்தாலும், திட்டம் உருவாக்கினாலும், சேவையில் என்ன விசேஷத்தை கொண்டு வந்தோம் என்ற இதைத் தான் யோசியுங்கள். விசேஷ சேவை செய்வதினால் விசேஷ ஆத்மாக்கள் பிரசித்தி ஆகிவிடுவார்கள். எனவே ஏதாவது அந்த மாதிரி விசேஷ காரியம் செய்து அதன் மூலம் இயல்பாகவே விசேஷ ஆத்மா ஆகி விட வேண்டும்

என்ற இலட்சியத்தை எப்பொழுதும் வையுங்கள். தந்தை மற்றும் பரிவாரத்தின் எதிரில் வந்து விட வேண்டும். எப்பொழுதும் ஏதாவது விசேஷத்தை காண்பிப்பவராக இருக்க வேண்டும். விசேஷம் தான் விலகியிருப்பவராகவும், அன்பானவராகவும் ஆக்குகிறது இல்லையா? எனவே ஒவ்வொரு காரியத்திலும் விசேஷத்தின் புதுமையைக் காண்பியுங்கள். உண்மையான சேவாதாரி, தன்னுடைய சக்திகளின் சகயோகத்தினால் அனைவரையும் முன்னேற்றம் அடையச் செய்து கொண்டே இருங்கள். இந்த சேவையிலேயே எப்பொழுதும் முழுமையாக ஈடுபட்டிருங்கள். நல்லது. ஓம் சாந்தி.

வரதானம் :

தியாகம் மற்றும் தபஸ்யாவின் சகயோகத்தினால் சேவையில் வெற்றி அடையக்கூடிய நிரந்தர தபஸ்வி மூர்த்தி ஆகுக.

சேவாதாரி என்றால் தியாகம் மற்றும் தபஸ்வி மூர்த்தி. தியாகம் மற்றும் தபஸ்யா இரண்டின் சகயோகத்தினால் சேவையில் எப்பொழுதும் வெற்றி கிடைக்கிறது. தபஸ்யா என்றாலே ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமில்லை, இந்த நிரந்தர தபஸ்யா செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால், உங்களுடைய சேவை ஸ்தானம் தபஸ்யா குண்டம் ஆகிவிடும். விட்டில் பூச்சிகள் தானாகவே வருகிற மாதிரி தபஸ்யா குண்டத்தை உருவாக்குங்கள். மனசக்தி மூலம் செய்யும் சேவையினால் சக்திசாஆத்மாக்கள் பிரத்யக்ஷம் ஆவார்கள். இப்பொழுது மனசக்தி மூலம் நிலத்தை பரிவர்த்தனை செய்யுங்கள். வளர்ச்சி அடைவதற்கான விதி இது தான்.

சுலோகன் :

பணிவு மற்றும் தைரியத்தின் சக்தி மூலம் கோபஅக்னியை சாந்தமாக்கி விடுங்கள்.

ஓம்சாந்தி

23.05.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## விட்டீர்கள் என்றால் விடுபடும்

இன்று பாப்தாதா ஸ்தாபனை காரியத்தின் தொடக்கத்தில் பொறுப்பாளர்களாக ஆன சகயோகி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்து சகயோகி குழந்தைகளின் பாக்கியத்தை பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார். ஸ்தாபனையின் வரைபடத்தை பார்த்துக் கொண்டிருந்தோம். தொடக்க காலத்தில் இந்த சிரேஷ்ட பிராமணர்களின் உலகத்தின் சரித்திரம் மற்றும் பூகோளத்தை பார்த்துக் கொண்டிருந்தோம். எந்த எந்த சிரேஷ்ட ஆத்மாக்கள், எந்த நேரம், எந்த ஸ்தானத்தில் மேலும் எந்த விதிப்பூர்வமாக சகயோகி ஆனார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அதில் என்ன பார்த்தோம்? மூன்று விதமான சகயோகி குழந்தைகளைப் பார்த்தோம். ஒன்று பாப்தாதாவின் ஆன்மீகக் காரியத்தை பார்த்து, பாப்தாதாவின் மோஹனரூபம், ஆன்மீக செயல்களை பார்த்து, யோசிக்கும் கஷ்டத்தையும் செய்யவில்லை, பார்க்க மட்டும் செய்தார்கள் மேலும் பார்த்ததினால் சென்ற கல்பத்தின் நினைவின் சம்ஸ்காரம் பிரத்யக்ஷம் ஆகிவிட்டது. ஒரு நொடியில் உள்ளத்திலிருந்து அதே என்னுடைய பாபா என்பது வெளியானது. அந்த மாதிரி எந்தக் கஷ்டமும் இன்றி சகஜமாக தந்தையின் அன்பில் மூழ்கியிருக்கும் சகயோகி ஆகிவிட்டார்கள். ஒரு வார பாடம் படிக்கும் முயற்சியையும் செய்யவில்லை. ஆனால் ஈஸ்வரிய அன்பின் சக்தி மூலம் தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பு ஆகிவிட்டது. ஒரே ஒரு வார்த்தையில் வாழ்க்கைத் துணைவன் ஆகிவிட்டார். குழந்தைகள் நீங்கள் தான் என்னுடையவர் என்று கூறினார்கள், தந்தை நீங்கள் தான் என்னுடையவர்கள் என்று கூறினார். முயற்சி என்ற கேள்வியே இல்லை. அந்த மாதிரி ஒரு நொடியில் முடிவு எடுத்தவர்கள் எந்தக் கடினமும் இன்றி அன்பில் மூழ்கி விட்டார்கள். இரண்டாவது, பொறுப்பாளராகியிருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்களின் தியாகம், தபஸ்யா மற்றும் சேவையின் முன் உதாரணத்தைப் பார்த்து முடிவு எடுத்தவர்கள். முதல் குரூப் தந்தையைப் பார்த்தார்கள். இரண்டாவது குரூப் ஞான கங்கைகளின் உதாரணத்தை பார்த்தார்கள். புத்தி பலம் மூலம் சகஜமாக தந்தையை தெரிந்து கொண்டார்கள். மேலும் சகயோகி ஆனார்கள். இருந்தும் இரண்டாவது குரூப்பும் குழந்தைகள் மூலமாக தந்தையின் சாகார சம்பந்தத்தில் வந்தார்கள். நிராகாரமானவரையும் (உடலற்றவரையும்) சாகாரத்தில் (உடலில்) அனைத்து சம்பந்தங்களில் அடைந்தார்கள், எனவே சாகார ரூபத்தில் சாகாரம் மூலமாக அனைத்து அனுபவம் செய்த காரணத்தினால் சாகார பாலனையின் லி∴ப்ட்டின் கி∴ப்ட் (பரிசு) கிடைத்தது. இந்த பாக்கியம்

கோடியில் சிலர், அந்த சிலரிலும் சிலருக்கு கிடைத்தது. அந்த மாதிரி லிஃப்ட்டின் கிஃப்ட்டை பெறக்கூடிய ஸ்தாபனை காரியத்தில், சேவையின் சேத்திரத்தில் பொறுப்பாளராகியிருக்கும் தொடக்கத்து ஆத்மாக்கள், அந்த மாதிரி குரூப்பை அழைப்பு கொடுத்து அழைத்திருக்கிறோம். பார்க்கப்போனால் இன்னும் பொறுப்பாளராகியிருக்கும் குழந்தைகள் இருக்கிறார்கள். ஆனால் விசேஷமாக குறைவானவர்களைத் தான் அழைத்திருக்கிறோம். ஏன் அழைத்திருக்கிறோம் என்று தெரிந்திருக்கிறீர்களா? இடை இடையே அஸ்திவாரம் சோதனைசெய்யப்படும். ஒருவேளை அஸ்திவாரம் கொஞ்சம் பலஹீனமாக இருந்தாலும் அஸ்திவாரத்தின் பிரபாவம் அனைத்தின் மீதும் ஏற்படும். சேவை சேத்திரத்தில் உங்கள் மாதிரியான இரத்தினங்கள் அஸ்திவாரம். முதல் குரூப் யக்ஞத்தின் ஸ்தாபனையின் அஸ்திவாரம் ஆனார்கள். சேவைக்கு பொறுப்பாளர் ஆனார்கள். ஆனால் சேவையின் பிரத்யக்ஷ பலன் முதலில் உங்கள் மாதிரியான குரூப். அந்த மாதிரி சேவையின் பிரத்யக்ஷ பலன் ரூபத்தில் மேலும் அழகு பெட்டகத்தின் முதலில் அழகுப் பொருளாக சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள் ஆனீர்கள். தன்னுடைய இந்த அளவு மகத்துவத்தை தெரிந்திருக்கிறீர்களா? புதிய இலைகளின் பளபளப்பு, சுறுசுறுப்பு, ஊக்கம் உற்சாகத்தின் விஸ்தாரத்தில் சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள் மறைந்தோ விடவில்லையே! உண்மையில் பாப்தாதாவும் குழந்தைகளை தன்னை விட முன்னுக்கு வைக்கிறார், ஆனால் சுயம் தான் பின்னால் இருப்பதில்லை. சில குழந்தைகள் புத்திசாலித்தனமாக பின்னால் இருப்பவர்களுக்கு நாங்கள் வாய்ப்பு கொடுக்கிறோம் என்று பதில் கூறுகிறார்கள். வாய்ப்பை பரவாயில்லை நன்றாக கொடுங்கள் ஆனால் பொறுப்பாளராகவோ இருங்களேன். இந்த அளவு எனக்கு பொறுப்பு இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? முயற்சி செய்வதில் நாம் என்ன அடி எடுத்து வைப்போமோநம்மைப் பார்த்து மற்றவர்களும் அந்த மாதிரி ஊக்கம், உற்சாகத்தின் அடி எடுத்து வைப்பார்கள். இந்த நினைவு எப்பொழுதும் இருக்கிறதா? புதியவர்கள், இருக்கின்றனர் ஆனால் பழையவர்களின் மதிப்பு அவர்களுடையது. பழைய இலைகளிலிருந்து எத்தனை மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா! பழைய பொருட்களுக்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது! பழைய பொருட்கள் விசேஷ நினைவு சின்னம் ஆகி விடுகின்றன. பழைய பொருட்களுக்கு விசேஷ கண்காட்சியகம் உருவாக்கப்படுகிறது. பழையவர்களின் மதிப்பைத் தெரிந்து கொண்டே அதே மதிப்பிற்கேற்றபடி அடி எடுத்து வைக்கிறீர்களா? இந்த சாகார பாலனை ஒன்றும் சாதாரண பாலனை கிடையாது? இந்த விலை மதிப்பில்லா பாலனைக்கு நன்றி செலுத்துவது என்றால் விலைமதிக்க முடியாதவர் ஆக வேண்டும் மற்றும் ஆக்க வேண்டும். விசேஷ பாலனைக்கு கை மாறாக, வாழ்க்கையின் ஒவ்வொரு அடியிலும் விசேஷம் நிரம்பி இருக்க வேண்டும். அந்த மாதிரி நன்றி செலுத்திக் கொண்டிருக்கிறீர்களா? முழுக்கல்பத்தில் ஒரு தடவை இந்த பாலனை கிடைக்கிறது மேலும் அதற்கு உரியவர்கள் விசேஷ ஆத்மாக்கள் நீங்கள். அந்த மாதிரி தன்னுடைய உரிமையின் பாக்கியத்தை

தெரிந்திருக்கிறீர்களா? இன்று அந்த மாதிரி பாக்கியம் நிறைந்த குழந்தைகளை சந்திக்க வந்திருக்கிறோம். ஏன் அழைத்தோம் என்று புரிந்து கொண்டீர்களா? ரிஸல்ட்டையோ பார்ப்போம் இல்லையா!

இந்த முழு குரூப்பும் பிரம்மா பாபாவின் ஒவ்வொரு அடியை பின்பற்றி நடப்பவர்கள் இல்லையா! ஏனென்றால் இந்த ஸ்தூல கண்களால் பார்த்திருக்கிறீர்கள். திவ்ய கண்களால் மட்டும் பார்க்கவில்லை. கண்களால் பார்த்த விஷயத்தை, பின்பற்றி நடப்பது சுலபமாக இருக்கும் இல்லையா? நீங்கள் அந்த மாதிரி சகஜ முயற்சி செய்வதின் பாக்கியத்திற்கு உரிய ஆத்மாக்கள். நீங்கள் யார் என்று புரிந்து கொண்டீர்களா? நான் யார் என்று தெரிந்து கொண்டீர்களா? நான் யார் என்ற கேள்விக்கான பதில் உறுதியாக நினைவில் இருக்கிறது இல்லையா? மறந்தோ விடுவது இல்லையே! இந்த குரூப்பைப் பார்த்து பாப்தாதா சூட்சுமவதனத்தில் அவர்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தார்கள். என்ன ஆன்மீக உரையாடல் செய்திருந்திருப்பார்கள் என்று தெரிந்திருக்கிறீர்களா? இவர்கள் தன்னுடைய பாக்கியத்தின் மதிப்பை எவ்வளவு தெரிந்திருக்கிறார்கள்? மேலும் எந்தளவு இந்த பாக்கியத்தின் நினைவு சொரூபத்தில் இருக்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தோம். நினைவு சொரூபத்தில் இருப்பவர் சக்திசாலியான சொரூபம் ஆகிறார். அப்படியானால் எவ்வளவு சக்தி சொரூபம் ஆகியிருக்கிறீர்கள் என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தோம். நினைவு மறந்த நிலை மற்றும் நினைவு என்ற ஏணியில் இறங்குகிறார்களா மற்றும் ஏறுகிறார்களா அல்லது எப்பொழுதும் நினைவு சொரூபம் மூலமாக பறக்கும் கலையில் சென்று கொண்டிருக்கிறார்களா? பழையவர்கள், பழைய விதிப்படி நடந்து கொண்டிருப்பவர்களாகவோ இல்லையே! பறக்கும் கலைக்கு பதிலாக இதுவரையிலும் படி ஏறிக் கொண்டும் இறங்கிக் கொண்டும் இருக்கிறார்களா? குழந்தைகளின் இந்த அனைத்து விதியை பார்த்துக் கொண்டிருந்தோம். பிரம்மா பாபா குழந்தைகளின் மேல் உள்ள அன்பின் காரணமாக, எப்பொழுதும் ஒவ்வொரு அடியிலும் சகஜ மற்றும் சிரேஷ்ட பிராப்திக்கான ஆதாரமாக தந்தை எனக்கு சமமாக "விட்டீர்கள் என்றால் விடுபடும்" என்ற ஒரு விஷயத்தை எப்பொழுதும் வாழ்க்கையில் பிரம்மா பாபாவின் தாயித்தின் ரூபத்தில் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார். தன்னுடைய உடலின் நினைவை மறந்து ஆத்ம அபிமானி ஆவதிலும், சம்பந்தத்தின் பற்றுதலிலிருந்து விலகி பற்றுதலை வென்றவர் ஆவதிலும், ஆன்மீக சேவைக் களத்தில் வெற்றி அடைவதிலும், தொடர்பில் வரும்பொழுது சுபாவம், சம்ஸ்காரமாக ஆனாலும் இந்த அனைத்து விஷயங்களிலும் விட்டீர்கள் என்றால் விடுபடுவீர்கள். இந்த என்னுடைய என்ற கை இந்தக் கிளைகளை பிடித்து, கிளைகளில் அமர்ந்திருக்கும் பறவை ஆக்கிவிடுகிறது இந்த என்னுடைய என்ற கைகளை விட்டீர்கள்

என்றால் என்னவாகி விடுவீர்கள்? பறக்கும் பறவை ஆகிவிடுவீர்கள். விடப்போவதோஇல்லை, ஆகப்போவதோஇதுதான் - இப்படி இருக்கக் கூடாது. ஆனால் ஆதாரமானவர்கள், சிரேஷ்ட ஆத்மாக்கள் "ஆகிவிட்டோம்" என்ற விழாவைக் கொண்டாடுங்கள். யோசித்துக் கொண்டிருக்கிறோம், திட்டத்தை உருவாக்குவோம் என்று அப்படி இருக்க வேண்டாம். எந்த விழாவைக் கொண்டாடுவீர்கள் என்று யோசித்து விட்டீர்களா? ஒவ்வொரு குரூப்பும் நிகழ்ச்சிகள் செய்கிறீர்கள் இல்லையா? நீங்கள் என்ன விழாவைக் கொண்டாடுவீர்கள்?

நீங்களோ பிரம்மா பாபாவை பின்பற்றி நடக்கும் பிரம்மா உடன் இருந்த குழந்தைகள் தான் இல்லையா? ஈஸ்வரிய பரிவாரத்தின் வயது முதிர்ந்த ஆத்மாக்கள் நீங்கள். உங்கள் அனைவரின் இவர்கள் தான் தொடக்க காலத்து உதாரண சொரூபமானவர்கள், முழு பரிவாரத்திற்காகவும், தந்தையின் அனைத்து ஆசைகளை நிறைவேற்றும் தீபங்கள் என்று பாப்தாதா மற்றும் பரிவாரத்தின் பார்வை எப்பொழுதும் இருக்கிறது. எனவே எந்த விழாவைக் கொண்டாடுவீர்கள்? தந்தைக்கு சமமாக ஆகிவிட்டோம், ஜீவன்முக்த் ஆத்மாக்கள் ஆகிவிட்டோம், பற்றுதலை வென்ற நினைவு சொரூபமானவரிலிருந்து சக்தி சொரூபம் ஆகிவிட்டோம், நினைத்தோம் மற்றும் ஆகிவிட்டோம் என்று அந்த மாதிரி சக்திசாலியான விழாவைக் கொண்டாடுங்கள். தயார் தான் இல்லையா? அல்லது செய்யவோ வேண்டும் என்று யோசிக்கிறீர்களா? வேண்டும் என்று இல்லாமல் ஆனால் தந்தையின் அனைத்து விருப்பங்களை நிறைவேற்றக் கூடிய நான் தொடக்க காலத்தின் ஒரு முன்மாதிரி. அந்த மாதிரி நிச்சய புத்தியுடைய வெற்றி இரத்தினம் என்று வெற்றி விழாக் கொண்டாடுங்கள். எதற்காக அழைத்தோம் என்று புரிந்து கொண்டீர்களா? தெளிவாகி விட்டது இல்லையா? இவர்கள் அனைவருக்கும் கிரீடம் அணிவியுங்கள். பொறுப்பின் கிரீடம் அணிவிப்பு விழாவை இவர்கள் மூலம் கொண்டாடுங்கள். எனவே தான் வந்திருக்கிறீர்கள் இல்லையா? ஒன்றும் பதில் பேசுவது இல்லை. வயதானவர்கள் ஆகி விட்டீர்கள். பிரம்மா பாபாவை என்னவாகப் பார்த்தீர்கள்? இந்த நேரம் வயதானவர் மேலும் அடுத்த நேரம் சின்னக்குழந்தை. பார்த்தீர்கள் இல்லையா? தந்தையைப் பின்பற்றி நடங்கள், சரி என்று கூறுவதில் குழந்தையாகி விடுங்கள் மேலும் சேவையில் வயதானவர். சின்னக் குழந்தைகளின் சுறுசுறுப்பை பார்த்தீர்கள் இல்லையா! எவ்வளவு மகிழ்ச்சியோடு சரி ஐயா, சரி ஐயா என்று கூறினார்கள்.

விசேஷ அழைப்பின் பேரில் விசேஷ ஆத்மாக்கள் வந்திருக்கிறார்கள், இப்பொழுது விசேஷ சேவை பொறுப்பிற்காக மீண்டும் விழா கொண்டாடுங்கள். இடை இடையில் கிரீடத்தை இறக்கி வைத்து விடுகிறீர்கள். இப்பொழுது கழட்டவே முடியாத மாதிரி இறுக்கமாக்கி விட்டுச்

செல்லுங்கள். விழாவின் ரிஸல்ட்டாக என்ன ஆனது என்று பின்பு கூறுவோம். நல்லது.

எப்பொழுதும் அனைத்து ஆத்மாக்களுக்கு, ஊக்கம், உற்சாகம் ஊட்டக்கூடிய, எப்பொழுதும் முயற்சி செய்வதின் அடி மூலம் மற்றவர்களை தீவிர முயற்சியாளர் ஆக்கக் கூடிய, வீணானதை ஒரு நொடியில் விட்டீர்கள் என்றால் விடுபடும் என்று ஆக்கக் கூடிய, எப்பொழுதும் பிரம்மா பாபாவை பின்பற்றி நடக்கக் கூடிய, அந்த மாதிரி சேவையின் ஆதி இரத்தினங்களுக்கு, பாலனை பெறுவதற்கான பாக்கியம் நிறைந்த விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

சேவாதாரிகளுடன் சந்திப்பு -

சேவாதாரிகளோ எப்பொழுதும் பறந்து கொண்டே இருக்க வேண்டும் - ஏனென்றால் யக்ஞ சேவைக்கான பலம் மிக அதிகம். எனவே சேவாதாரிகள் பலம் நிறைந்தவர்கள் ஆகி விட்டீர்கள் இல்லையா? யக்ஞ சேவைக்கு எவ்வளவு மஹிமை இருக்கிறது. ஒருவேளை யக்ஞ சேவையை உண்மையான உள்ளத்தோடு செய்கிறார்கள் என்றால் ஒரு விநாடிக்கு கூட மிகுந்த பலன் இருக்கிறது. நீங்கள் எத்தனை நாட்கள் சேவையில் இருந்தீர்கள்? எனவே பலன்களின் களஞ்சியம் ஒன்றாக சேர்ந்து விட்டது. 21 தலைமுறையினர் சாப்பிட்டுக் கொண்டே இருக்கும் அளவிற்கு பலன் சேமிப்பாகி விட்டது. சேவாதாரி அங்கு உங்களிடத்திற்கு சென்ற பிறகு மாயாவின் வசமாகி விடாதீர்கள். எப்பொழுதும் சேவையில் பிஸியாக இருங்கள் மனதால் சுத்த சங்கல்பத்தின் சேவை மற்றும் தொடர்பில் வருபவர்கள், உறவினர்களுக்கு பேச்சின் மூலம் பாபாவின் அறிமுகம் கொடுப்பதற்கான சேவை. எப்போதுமே சேவையில் பிஸியாக இருப்பது. சேவையின் பங்கு அழியாதது. இங்கே இருந்தாலும் சரி அல்லது எங்கே சென்றாலும் சரி சேவாதாரியோடு எப்பொழுதுமே சேவை இருக்கும். நீங்கள் நிரந்தரமான சேவாதாரி. சேவையில் பிஸியாக இருந்தீர்கள் என்றால் மாயா வராது. எப்பொழுது காலியான இடம் இருக்கிறது என்றால் மற்றவர்கள் வருவார்கள். கொசுவும் வரும், மூட்டைப் பூச்சியும் வரும். எனவே எப்பொழுதும் பிஸியாக இருந்தீர்கள் என்றால் மாயா வரவே வராது. கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்காது. மாயா நமஸ்காரம் செய்து சென்று விடும். அந்த மாதிரி பலசாலியாகி சென்று கொண்டிருக்கிறீர்கள். அங்கே சென்ற பிறகு இன்று கோபம் வந்து விட்டது, இன்று பேராசை, மோஹம் வந்து விட்டது.... என்று கூறாதீர்கள். மாயா பரீட்சிக்கும். இவர்கள் உறுதிமொழி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று இப்பொழுது அதுவும் கேட்டுக்கொண்டிருக்கிறது. எங்கு தந்தை இருக்கிறாரோ அங்கு மாயா என்ன செய்யும்? எப்பொழுதும் தந்தை உங்களுடன் கூடவே இருக்கிறாரா அல்லது அவரை விட்டு பிரிந்து

இருக்கிறீர்களா? குமாரர்கள் தனியாக இருக்கிறேன் என்றோ நினைக்கவில்லையே? என்ன என்று கேட்பதற்கு யாருமே இல்லை, பேசுவதற்கு யாருமே இல்லை ... நோயுற்றோம் என்றால் என்ன செய்வோம்? என்ற எண்ணமோ வரவில்லையே? மற்ற உடன் இருப்பவர்களின் நினைவோ வராதே? துணையாக இன்னொருவரை கொண்டு வந்தீர்கள் என்றால் அவர் சொல்வதை கேட்கவும் வேண்டும், சாப்பிட உணவும் கொடுக்க வேண்டும், முழுமையாக கவனித்துக் கொள்ளவும் வேண்டும். அந்த மாதிரி சுமையை தூக்குவதற்கு அவசியமோஎன்ன இருக்கிறது? எப்பொழுதும் சுமையற்று லேசாக இருங்கள். எப்பொழுதும் ஜோடி ரூபத்தில் இருக்கிறீர்கள், இன்னொரு ஜோடியை வைத்து என்ன செய்வீர்கள்? எப்பொழுதாவது மனதில் எண்ணம் வருகிறதா? நோயுற்ற நேரத்தில் வருகிறதா? எந்த சம்பந்தத்தின் நினைவு வருகிறதோ அதே சம்பந்தத்துடன் தந்தையை நினைவு செய்யுங்கள். பிறகு நோயுற்றிருந்தாலும் தூங்கிக் கொண்டே மிக நல்ல உணவை, மற்றவர்கள் சமைத்து விட்டு சென்ற மாதிரி தயார் செய்து விடுவீர்கள். எனவே எப்பொழுதும் கூடவே இருங்கள், நான் தனியாகவே இல்லை, இணைந்து இருக்கிறேன். நீங்களும் தந்தையும் இணைந்து இருக்கிறீர்கள், யாரும் பிரிக்க முடியாது, இந்த சவாலை விடுங்கள், நீங்கள் சவால் விடுபவர்களேயன்றி பயப்படுபவர்கள் அல்ல. நல்லது.

கேள்வி –

சங்கமயுக பிராமண வாழ்க்கையின் இலட்சியம் என்ன? அந்த இலட்சியத்தை அடைவதற்கான விதி என்ன?

பதில்:

சங்கமயுக பிராமண வாழ்க்கையின் இலட்சியம் எப்பொழுதும் திருப்தியாக இருப்பது மேலும் மற்றவர்களை திருப்தி படுத்துவது. பிராமணன் என்றால் ஞானம் நிறைந்தவர், தானும் திருப்தியாக இருப்பார், மேலும் மற்றவர்களையும் திருப்தியாக வைத்துக் கொள்வார். ஒருவேளை மற்றவர்கள் அதிருப்தி படுத்துவதினால் அதிருப்தி ஆகிறார் என்றால் பிராமண வாழ்க்கையின் சுகத்தைப் பெற முடியாது. இந்த இலட்சியத்தை பிராப்தி செய்வதற்கான சாதனம் சக்தி சொரூபமாகி மற்றவர்களின் வாயுமண்டலத்திலிருந்து தன்னை விலக்கி வைத்துக் கொள்வது என்றால் தன்னை பாதுகாத்துக் கொள்வது. மற்றவர்களின் அதிருப்தியின் காரணமாக தன்னை அதிருப்தி ஆக்கிக் கொள்ள கூடாது. மற்றவர்கள் எந்த விதத்திலும் அதிருப்தி ஆக்குவதற்கு காரணம் ஆனார்கள் என்றால் தன்னை விலக்கிக் கொண்டு

முன்னேறிச் சென்று கொண்டே இருக்க வேண்டும், நிற்கக் கூடாது.

கேள்வி :

எந்த சம்ஸ்காரத்தை தன்னுடைய இயற்கையான சம்ஸ்காரம் ஆக்கி விட்டீர்கள் என்றால் பறக்கும் கலையில் பறந்து கொண்டே இருப்பீர்கள்?

பதில்:

ஒவ்வொரு விஷயத்திலும் நான் முன்னேற வேண்டும் என்பதை தன்னுடைய இயற்கையான சம்ஸ்காரமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் முன்னேறுகிறார்களோ அல்லது இல்லையோ. அவர்களுக்குப் பின்னால் தன்னை கீழே கொண்டு வரக்கூடாது. பரந்த மனதின் காரணமாக சகயோகம் கொடுப்பது வேறு விஷயம். ஆனால் மற்றவர்களின் காரணமாக தான் கீழே வந்து விடுவது சரியில்லை. வீணானதை கேட்காதீர்கள், பார்க்காதீர்கள். சேவையின் பாவனையோடு விலகியிருந்து பாருங்கள். மற்றவர்களின் காரணமாக தன்னுடைய நேரத்தையும், குஷியையும் இழக்காதீர்கள் பிறகு எப்பொழுதும் பறக்கும் கலையில் சென்று கொண்டே இருப்பீர்கள்.

வரதானம் :

எப்பொழுதும் சந்திப்பின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே நான் தான் அது என்ற வரம் பெற்ற தந்தைக்கு சமமானவர் ஆகுக.

எப்படி எஜமானர்கள் உங்களுடைய கட்டளையை ஏற்று பாப்தாதா சந்திப்பதற்காக வருகிறார், வந்தேன் ஐயா என்ற பாடத்தை படித்து ஆஜராகி விடுகிறார். அதே போல் நீங்களும் செய்யுங்கள். அமிர்தவேளையில் தொடங்கி நாள் முடியும் வரை தாரணை மற்றும் காரியம் செய்வதில் தந்தைக்கு சமமாக ஆனீர்கள் என்றால் எப்பொழுதும் சந்திப்பின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருப்பீர்கள். இந்த சந்திப்பு என்ற ஊஞ்சலில் இருப்பதினால் இயற்கை மற்றும் மாயா இரண்டுமே உங்களுடைய ஊஞ்சலை ஆட்டக் கூடிய வேலைக்காரர்கள் ஆகி விடுவார்கள். அனைத்து பொக்கிஷங்களும் உங்களுடைய இந்த சிரேஷ்ட ஊஞ்சலின் அலங்காரமாகிவிடும்.

சுலோகன் :

எப்பொழுதும் பிரம்மா பாபாவின் கரங்களுக்குள் அடங்கி இருந்தீர்கள் என்றால் பாதுகாப்பின் அனுபவம் செய்வீர்கள்.

ஓம்சாந்தி

25.05.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" பிரம்மா பாபாவிற்கு குழந்தைகளிடமிருந்து ஒரு விருப்பம் "

இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளுடைய சேவையின், நினைவின் மற்றும் தந்தைக்குச் சமமாக ஆவதின் சார்ட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். பாப்தாதா மூலமாக என்னென்ன பொக்கிஷங்கள் கிடைத்திருக்கின்றன, தந்தையை நிராகார மற்றும் ஆகார ரூபத்திலிருந்து சாகாரத்தில் அழைத்திருக்கிறீர்கள், மேலும் பாப்தாதாவும் குழந்தைகளின் அன்பில், குழந்தைகள் அழைத்ததினால் வந்திருக்கிறார், சந்திப்பு செய்தார், இப்பொழுது அதன் பலன் சொரூபமாக அனைத்து குழந்தைகளும் எந்தவிதமான பழமாக ஆகியிருக்கிறார்கள் – பிரத்யக்ஷ பழமாக ஆகியிருக்கிறார்களா? பருவ காலத்து பழமாக ஆகியிருக்கிறார்களா? பார்ப்பதற்கு அழகான ரூபமுடைய பழமாக ஆகியிருக்கிறார்களா மற்றும் நல்ல ரூபம் மற்றும் நல்ல சாறு நிறைந்த பழமாக ஆகியிருக்கிறார்களா? நேரடி பாலனையின் அர்த்தம் மரத்திலேயே பழுத்த பழமாக ஆகியிருக்கிறீர்களா அல்லது பழுக்காத பழங்களை ஏதாவது ஓரிரு விசேஷம் என்ற மசாலாவின் ஆதாரத்தில் தன்னை பார்ப்பதற்கு மிக வண்ணம், ரூபம் உடைய வராக கொண்டு வந்திருக்கிறீர்களா அல்லது இது வரையிலும் பழுக்காத பழமாகவே இருக்கிறீர்களா? என்று குழந்தைகளின் இந்த சார்ட்டை பார்த்துக் கொண்டிருந்தோம். சங்கமயுகத்தின் விசேஷத்தின் பிரகாரம், பிரத்யக்ஷ பழம் கிடைக்கும் நேரத்திற்கு ஏற்றாற்போல், ஒவ்வொரு பாடத்திலும், ஒவ்வொரு அடியிலும், காரியத்தில் பிரத்யக்ஷ பலன் கொடுக்கக்கூடிய, பிரத்யக்ஷ பழத்தை அருந்தக்கூடிய தந்தையின் பாலனையால் பழுத்த வண்ணம், ரூபம், சாறு மூன்றினால் நிரம்பிய விலைமதிக்க முடியாத பழமாக இருக்க வேண்டும். இப்பொழுது உங்களை நீங்களே நான் யார் என்று கேளுங்கள். எப்பொழுதும் தந்தையுடன் இருப்பதின் வண்ணம், எப்பொழுதும் பிரம்மா பாபாவிற்குச் சமமாக தந்தையை வெளிப்படுத்தும் ரூபம், எப்பொழுதும் அனைத்து பிராப்திகளின் சாறு அந்த மாதிரி தந்தைக்குச் சமமாக ஆகியிருக்கிறேனா? இன்றைய நாட்களில் பிரம்மா பாபா பிராமண குழந்தைகளின் சமமான சம்பன்ன நிலையை விசேஷமாக பார்த்துக் கொண்டிருக்கிறார். முழு நேரமும் ஒவ்வொரு விசேஷ குழந்தையின் சித்திரம் மற்றும் சரித்திரம் இரண்டையும் எதிரில் வைத்து எந்த அளவு சம்பன்னம் ஆகியிருக்கிறார் என்று பார்த்துக் கொண்டே இருக்கிறார். மாலையின் மணியாக யார் இருக்கிறார், மேலும் எத்தனை பேர் தன்னுடைய வரிசை எண்ணில் வந்து சேர்ந்து விட்டார்கள் என்ற அந்த கணக்கின் படி ரிசல்ட்டைப் பார்த்து விசேஷமாக பிரம்மா பாபா கூறினார் - பிராமண ஆத்மா

என்றால், ஒவ்வொரு காரியத்திலும் பாப்தாதாவை பிரத்யக்ஷம் செய்பவர். காரியம் என்ற எழுதுகோள் மூலமாக ஒவ்வொரு ஆத்மாவின் இதயத்தில், புத்தியில் தந்தையின் சித்திரத்தை அல்லது சொரூபத்தை வரையக்கூடிய ஆன்மீக ஓவியராக ஆகியிருக்கிறீர்கள் இல்லையா? இப்பொழுது பிரம்மா பாபாவிற்கு இந்த சீசனின் ரிசல்ட்டில் குழந்தைகளிடம் ஒரு விருப்பம் இருக்கிறது. என்ன விருப்பமாக இருக்கும்? ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய காரியங்கள் என்ற கண்ணாடி மூலமாக தந்தையின் சாட்சாத்காரம் செய்விக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு அடியிலும் தந்தையைப் பின்பற்றி நடந்து தந்தைக்குச் சமமாக அவ்யக்த ஃபரிஷ்தா ஆகி கர்மயோகியின் பங்கை செய்ய வேண்டும் என்ற இந்த ஆசை தான் தந்தைக்கு இருக்கிறது. இந்த விருப்பத்தை நிறைவேற்றுவது கடினமா அல்லது சுலபமா? பிரம்மா பாபாவோ எப்பொழுதுமே தொடக்கத்திலிருந்தே 'உடனடி தானம் மகாபுண்ணியம்' என்ற இதே சம்ஸ்காரத்தை சாகார ரூபத்தில் கொண்டு வந்தவராக இருந்தார் இல்லையா! செய்யலாம், யோசிக்கலாம், திட்டத்தை உருவாக்குவோம் என்ற இந்த சம்ஸ்காரத்தை எப்பொழுதாவது பிரம்மா பாபாவிடம் நடைமுறை ரூபத்தில் பார்த்தீர்களா? உடனே செய்வதற்கான மகாமந்திரம் ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தில் பார்த்தீர்கள் இல்லையா? அதே சம்ஸ்காரத்தின் பிரகாரம் குழந்தைகளிடமிருந்தும் என்ன விருப்பத்தை வைப்பார். சமமாக ஆக வேண்டும்என்ற விருப்பம் வைப்பார் இல்லையா? அனைவரையும் விட முதலில் பாப்தாதா மதுபன்னைச் சேர்ந்தவர்களை முன்னுக்கு வைக்கிறார். நீங்கள் இருப்பதும் முன்னுக்குத் தான் இல்லையா? அனைவரும் மிக நல்ல ஒரு உதாரணத்தை எங்கு பார்க்கிறார்கள்? மிகப்பெரிய ஷோகேஸ் மதுபன் தான் இல்லையா. பாரதம் மற்றும் வெளிநாட்டிலிருந்து அனைவரும் அனுபவம் செய்வதற்காக மதுபன்னில் வருகிறார்கள் இல்லையா? அந்த மாதிரி மதுபன் அனைத்தையும் விட பெரிய காட்சி பெட்டகம். அந்த மாதிரி காட்சி பெட்டகத்தில் வைக்கப்படும் காட்சிப் பொருள் எவ்வளவு விலை மதிக்க முடியாததாக இருக்கும். பாப்தாதாவை சந்திப்பதற்காக மட்டும் வருவதில்லை ஆனால் பரிவாரத்தின் பிரத்யக்ஷ ரூபத்தை பார்ப்பதற்காகவும் வருகிறார்கள். அந்த ரூபத்தை காண்பிப்பவர்கள் யார்? பரிவாரத்தின் பிரத்யக்ஷ சாம்பிள், கர்மயோகியின் பிரத்யக்ஷ சாம்பிள், களைப்பற்ற சேவாதாரியின் பிரத்யக்ஷ சேம்பிள் வரதான பூமியின் வரதானி சொரூபத்தின் பிரத்யக்ஷ சாம்பிள் யார்? மதுபன் நிவாசிகள் தான் இல்லையா?

பாகவதத்தின் வாழ்க்கைக் கதையை கேட்பதற்கு மிகுந்த மகத்துவம் இருக்கிறது. முழு பாகவதத்திற்கு இந்த அளவு இருப்பதில்லை. அந்த மாதிரி சரித்திர பூமியில் வாழ்வது மதுபன் நிவாசிகள் தான் இல்லையா. தன்னுடைய மகத்துவத்தையோ நினைவு வைக்கிறீர்கள் தான் இல்லையா? மதுபன் நிவாசிகளுக்கு நினைவு சொரூபம் ஆவதில் கடினம் இருக்கிறதா அல்லது

சுலபமா? மதுபன்னே பிரஜைகள் மற்றும் இராஜாக்கள் இரண்டு ஆத்மாக்களுக்கும் வரதானம் கொடுப்பது.

இன்றைய நாட்களிலோ பிரஜை ஆத்மாக்களும் தன்னுடைய வரதானத்தின் உரிமையை எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். எப்பொழுது பிரஜைகளும் வரதானம் பெற்றுக் கொள்கிறார்கள் என்றால் வரதான பூமியில் இருக்கக்கூடியவர்கள் எவ்வளவு வரதானங்களினால் நிரம்பிய ஆத்மாக்களாக இருப்பார்கள்? இப்பொழுதைய நேரத்திற்கு தகுந்தாற்போல் அனைத்து விதமான பிரஜைகள் தங்களுடைய அதிகாரத்தை பெறுவதற்காக நாலா புறங்களிலிருந்து வரத் தொடங்கி விட்டார்கள். நாலாபுறங்களிலும் சகயோகி மற்றும் தொடர்பில் வரும் ஆத்மாக்கள் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். பிரஜைகளின் சீசன் தொடங்கிவிட்டது. இராஜாக்களோ தயார் தான் இல்லையா! அல்லது இராஜாக்களின் கொடை எப்பொழுதாவது கிழிந்து விடுகிறது அல்லது இருப்பதே இல்லையா? இதய சிம்மாசனதாரி தான் கிரீடம் அணிந்தவராக ஆக முடியும். இதய சிம்மாசனதாரியாக இல்லை என்றால் கிரீடமும் பொருந்தாது. எனவே சின்ன சின்ன விஷயங்களில் நிலை குலைந்து போவார்கள். இந்த நிலை குலைந்து போவது இதய சிம்மாசனத்தில் அதாவது தன்னுடைய ஆசனத்தில் அமராமல் இருப்பதற்கான அடையாளம். ஆசனத்தில் அமர்ந்திருக்கும் ஆத்மாவை நபர்கள் என்ன ஆனால் இயற்கையும் நிலை குலைந்து போகச் செய்ய முடியாது. மாயாவின் பெயர் அடையாளமே இருக்காது. நீங்கள் அந்த மாதிரி ஆசனத்தில் அமர்ந்திருக்கும் கிரீடம் அணிந்திருக்கும் வரதானி ஆத்மாக்கள் தான் இல்லையா? புரிந்ததா? மதுபன்னின் பிராமணர்களின் வாழ்க்கைக்குள மகத்துவம் இருக்கிறது. நல்லது. இன்றோ மதுபன்நிவாசிகளுக்கு சந்திப்பதற்கான வாய்ப்பு மற்ற அனைவரும் கேளரியில் அமர்ந்திருக்கிறார்கள். கேளரியும் நல்லதாக கிடைத்தது தான் இல்லையா.?

ஆதி இரத்தினங்கள், ஆதி நிலையில் வந்து விட்டீர்கள் இல்லையா? மத்தியம் மறந்து விட்டது தான் இல்லையா? கிளைகள் ஆகியவை அனைத்தும் விடுபட்டு விட்டன இல்லையா? ஆதி இரத்தினங்கள் அனைவரும் பறக்கும் பறவையாகி சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? பொன் மானின் பின்னாலேயும் செல்லாதீர்கள். எந்தவிதமான கவர்ச்சியின் வசமாகி கீழே வராதீர்கள். எப்படிப்பட்ட சூழ்நிலை புத்தி என்ற கால்களை அசைப்பதற்காக வந்தாலும் ஆனால் நீங்கள் ஆடாத அசையாதவர்கள், பற்றுதலை வென்று மற்றும் பணிவாக இருங்கள், அப்பொழுது தான் பறக்கும் பறவை ஆகி பறக்க முடியும், மேலும் பறக்க வைத்துக் கொண்டே இருப்பீர்கள். எப்பொழுதும் விலகி இருப்பவர் மற்றும் தந்தைக்குப் பிரியமானவர். ஒரு

பொழுதும் எந்தவொரு நபரின் மேலும் ஏதாவது எல்லைக்குட்பட்ட பிராப்தியின் அன்பிற்குரியவராக ஆகாதீர்கள். ஞானம் நிறைந்த ஆத்மாக்களின் எதிரில் இந்த எல்லைக்குட்பட்ட பிராப்திகள் தான் பொன் மானின் ரூபத்தில் வருகின்றன. எனவே ஆதி இரத்தினங்கள், ஆதி பிதாவிற்குச் சமமாக எப்பொழுதும் நிராகாரி, நிர்விகாரி, நிர்அகங்காரியாக இருக்க வேண்டும். புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி ஒவ்வொரு காரியத்தில் தந்தையின் பிரத்யக்ஷ சொரூபத்தை காண்பிக்கக்கூடிய, புண்ணிய ஆத்மாக்களுக்கு, ஒவ்வொரு காரியத்தில் பிரம்மா பாபாவை பின்பற்றி நடப்பவர்களுக்கு, உலகின் எதிரில் ஓவியர் ஆகி, தந்தையின் சித்திரத்தை காண்பிக்கக்கூடிய - அந்த மாதிரி பிரம்மா பாபாவிற்கு சமமான சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

அனைத்து மகாரதிகள் சேவைக்காக என்னென்ன திட்டங்களை உருவாக்கியிருக்கிறீர்கள், அதிலேயும் விசேஷமாக இளைஞர்களுக்காக உருவாக்கியிருக்கிறீர்கள் இல்லையா? இளைஞர்கள் வர்க்கத்தின் சேவை செய்வதற்கு முன்பாக எப்பொழுது இளைஞர்களின் வர்க்கம் அரசாங்கத்தின் எதிரில் பிரத்யக்ஷம் ஆக வேண்டும் என்ற எண்ணத்தை வைத்து முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், மைதானத்திற்கு வருவதற்கு முன்பு பேசுவது குறைவு, செய்வது அதிகம் என்ற இந்த ஒரு விஷயத்தின் மேல் எப்பொழுதும் கவனம் இருக்க வேண்டும். வாய் மூலமாக சொல்ல வேண்டியதில்லை ஆனால் காண்பிக்க வேண்டும். மேடையில் காரியத்தின் சொற்பொழிவைசெய்ய வேண்டும். வாயினால் பேசும் சொற்பொழிவையோ தலைவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்றால் கற்றுக்கொள்ளுங்கள். ஆனால் ஆன்மீக இளைஞர்களின் வர்க்கம் வாயினால் சொற்பொழிவு நிகழ்த்துபவர்கள் மட்டும் இல்லை - ஆனால் அவர்களுடைய கண்கள், நெற்றி, அவருடைய காரியம் சொற்பொழிவு நிகழ்த்துவதற்கு பொறுப்பாளர் ஆகிவிடட்டும். காரியத்தின் சொற்பொழிவைவேறு யாரும் செய்ய முடியாது. வாயினால் செய்யும் சொற்பொழிவைஅனேகர்கள் செய்ய முடியும். செய்யும் காரியம் தந்தையை வெளிப்படுத்த முடியும். செய்யும் காரியம் ஆன்மீகத்தை நிரூபிக்க முடியும். இன்னொரு விஷயம் இளைஞர்களின் வர்க்கம் நிரந்தர வெற்றி அடைவதற்காக தங்களிடம் ஒரு ஆன்மீக தாயத்தை வைத்துக் கொள்ள வேண்டும். அது எது? மரியாதை கொடுப்பது தான் மரியாதையைப் பெறுவது. இந்த மரியாதை கொடுப்பதின் பதிவேடு வெற்றியின் அழியாத பதிவேடாக ஆகிவிடும். இளைஞர்களின் வர்க்கத்திற்காக எப்பொழுதும் வாயில் 'முதலில் நீங்கள்' என்ற வெற்றிக்கான மந்திரம் இருக்கட்டும். இந்த மகாமந்திரம்

மனதில் மிக உறுதியாக இருக்கட்டும். வாய் மட்டும் 'முதலில் நீங்கள்' என்று கூறுகிறது மற்றும் மனதில் 'முதலில் நான்' என்று அப்படி இருக்க வேண்டாம். அந்த மாதிரி சிலர் சாதுர்யமானவர்களும் இருக்கிறார்கள், அவர்கள் வாய் மூலம் முதலில் நீங்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் மனதில், முதலில் நான் என்ற பாவனை இருக்கிறது. முதலில் நான் என்பதை யதார்த்த ரூபத்தில் அழித்து மற்றவர்களை முன்னேற்றம் அடைய வைப்பது என்றால், தான் முன்னேறுவது என்று புரிந்து கொண்டு இந்த மகாமந்திரத்தை கடைபிடித்துக் கொண்டே வெற்றியை அடைந்து கொண்டே இருப்பார்கள். புரிந்ததா? இந்த மந்திரம் மற்றும் தாயத்து எப்பொழுதும் உடன் இருக்கிறது என்றால் பிரத்யக்ஷத்தின் முரசு ஒலித்து விடும்.

திட்டங்களோ மிக நன்றாக இருக்கின்றன/ ஆனால் பிளைன் (தெளிவான) புத்தி உடையவராகி பிளானை (திட்டத்தை) நடைமுறையில் கொண்டு வாருங்கள். சேவை நன்றாக செய்யுங்கள். ஆனால் ஞானத்தை அவசியம் பிரத்யக்ஷம் செய்யுங்கள். உலகத்திலும் சாந்தி, சாந்தி என்று மட்டும் அனைவரும் கூறிக் கொண்டு இருக்கிறார்கள். அசாந்தியில் சாந்தியை கலந்து விடுகிறார்கள். அமைதி வேண்டும் என்று வெளிமுகமாகவோ அனைவரும் கோஷம் இடுகிறார்கள். அமைதியற்றவர்களும் அமைதியின் கோஷத்தைத் தான் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அமைதியோவேண்டும். ஆனால் எப்பொழுது தன்னுடைய மேடையில் நிகழ்ச்சிகள் செய்கிறீர்கள் என்றால். தன்னுடைய அதிகாரத்துடன் பேசுங்கள். வாயுமண்டலத்தைப் பார்த்து பேசாதீர்கள். அதையேநீண்ட காலம் செய்தீர்கள், மேலும் அந்த நேரத்திற்கு ஏற்றபடி அது சரியாக இருந்தது. ஆனால் இப்பொழுது பூமி எப்பொழுது உருவாகி விட்டது என்றால். ஞானத்தின் விதை போடுங்கள். சொற்பொழிவின் தலைப்பும் அந்த மாதிரி இருக்க வேண்டும். உலகத்தினர் ஆர்வம் காண்பிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக நீங்கள் தலைப்பை மாற்றிவிடுகிறீர்கள். ஆனால் ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் வரட்டும். எத்தனை மேளாக்கள், எத்தனை மகாநாடுகள், எத்தனை கலந்துரையாடல்கள் ஆகியவை செய்திருக்கிறீர்கள். இத்தனை வருடங்களோ மக்களின் ஆதாரத்தில் தலைப்பை உருவாக்கினீர்கள். குப்த வேஷத்தில் இன்னும் எவ்வளவு காலம் தான் இருப்பீர்கள். இப்பொழுதோ பிரத்யக்ஷம் ஆகிவிடுங்கள். நேரத்திற்கு தகுந்தாற்போல் இதற்கு முன்பு என்ன நடந்ததோ அது நடந்தது தான். ஆனால் இப்பொழுது தன்னுடைய மேடையில் பரமாத்மா குண்டைப் போடுங்கள். இவர்கள் என்ன கூறுகிறார்கள் என்று அவர்களுடைய புத்தி சுற்றட்டும். இல்லை என்றால் மிக நல்ல விஷயம் பேசினார்கள் என்று மட்டும் கூறுகிறார்கள். அதனால் நல்லது, நல்லதாகவே இருந்து விட்டது. மேலும் கூறப்பட்டது, கூறப்பட்டதாகவே இருந்து விடுகிறது. ஏதாவது புதிதாக உண்டாக்குங்களேன். ஒவ்வொருவருக்கும் அவருடைய உரிமை இருக்கிறது. நல்ல பாய்ன்ட்டுக்களையும் பேசுங்கள், மேலும் அதிகாரத்துடன் மற்றும் அன்புடன்

பேசினீர்கள் என்றால். யாரும் ஒன்றும் செய்ய முடியாது. பொதுவாக பல இடங்களில் நல்லதாக ஏற்றுக் கொள்கிறார்கள். தன்னுடைய விஷயங்களை தெளிவு படுத்துவதில் மிகவும் சக்தி நிறைந்தவர்கள் என்று நினைப்பார்கள். ஆனால் எந்த முறையில் பேச வேண்டும் அதையும் பார்க்க வேண்டும். ஆனால் அதிகாரம் மட்டுமின்றி, அன்பு மற்றும் அதிகாரம் இரண்டும் சேர்ந்தே இருக்க வேண்டும். அம்பும் எய்யுங்கள், கூடவே தேய்த்தும் விடுங்கள் என்று எப்பொழுதும் பாப்தாதா கூறுகிறார். மரியாதையையும் நல்ல முறையில் கொடுங்கள், ஆனால் தன்னுடைய சத்தியத்தையும் நிரூபியுங்கள். பகவான் கூறியது என்று கூறுகிறீர்கள் இல்லையா? தன்னுடையது என்றோ கூறுவதில்லை தானே! படங்களைப் பார்த்தும் பிரச்சனை செய்கிறார்கள் என்றால். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? படங்களையோ அகற்றிவிடுவதில்லை தானே? சாகார ரூபத்திலோ யாருடைய எதிரிலாவது முற்றிலும் அதிகாரத்தோடு சொல்வதின் பிரபாவமாக என்ன வெளியானது. எப்பொழுதாவது சண்டை ஏற்பட்டதா? இந்த முறையை சொற்பொழிவு செய்வதிலும் கற்றுக் கொள்ளுங்களேன். ஞானத்தின் முறையில் எப்படி பேசுவது என்பதைப் படித்திருக்கிறீர்கள் இல்லையா? இப்பொழுது மீண்டும் இந்த படிப்பை செய்யுங்கள். உலகத்தின் கணக்குப்படி தன்னை மாற்றியிருக்கிறீர்கள், பாஷையையும் மாற்றியிருக்கிறீர்கள் இல்லையா! எனவே உலகத்தின் ரூபத்தில் எப்பொழுது மாற்றம் செய்ய முடியும் என்றால். யதார்த்த ரூபத்தில் என்ன செய்ய முடியாது. எது வரை இந்த மாதிரியே நடக்கும்? இவர்கள் என்ன கூறுகிறார்களோ அது மிக நன்றாக இருக்கிறது என்று இந்த விஷயத்திலோ குஷி அடைகிறார்கள். கடைசியில் 'இது தான் யதார்த்த ஞானம்' என்று உலகத்தில் பிரசித்தி ஆக வேண்டும். இதனால் தான் கதி, சத்கதி கிடைக்கும். இந்த ஞானம் இன்றி கதி, சத்கதி கிடைக்காது. இப்பொழுதோ பாருங்கள், யோகாபயிற்சி முகாம் செய்து செல்கிறார்கள். வெளியில் சென்ற பிறகு மீண்டும் அதே போவரமாத்மா எங்கும் நிறைந்தவர் என்று கூறுவார்கள். இங்கிருக்கும் போதேயோகாமிக நன்றாகச் செய்தேன் என்று கூறுவார்கள், அஸ்திவாரம் மாறுவதில்லை. உங்களுடைய சக்தியின் பிரபாவத்தினால் பரிவர்த்தனை ஆகிவிடுகிறார்கள். ஆனால் அவர்களே சக்திசாலி ஆவதில்லை. என்ன நடந்ததோ அதுவும் அவசியம் தான்! இருந்தது. எந்த பூமி கட்டாந்தரையாக ஆகிவிட்டதோ அந்த பூமியில் ஏர் உழுது தகுதியான பூமியாக ஆக்குவதில் இந்த முறை தான் யதார்த்தமாக இருந்தது. ஆனால் இறுதியிலோ சக்திகள் தன்னுடைய சக்தி ரூபத்திலும் வருவார்கள் இல்லையா? அன்பின் ரூபத்தில் வாருங்கள், ஆனால் இவர்கள் சக்திகள் இவர்களுடைய ஒவ்வொரு வார்த்தையும் இதயத்தை பரிவர்த்தனை செய்யக்கூடியது, புத்தி மாறி விட வேண்டும் 'இல்லை' என்பது 'ஆம்' என்பதில் வந்து விட வேண்டும். இந்த ரூபமும் பிரத்யக்ஷம் ஆகும் இல்லையா. இப்பொழுது அதை பிரத்யக்ஷம் செய்யுங்கள் அதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். வருகிறார்கள், குஷியடைந்து செல்கிறார்கள். அதுவோ யாருக்கு இந்தளவு சௌகரியம், இந்தளவு அன்பு, உபசரிப்பு

கிடைக்கிறது என்றால் அவசியம் திருப்தி அடைந்து செல்வார்கள். ஆனால் சக்தி ரூபம் ஆகிச் செல்வதில்லை. பிரம்மா பாபா அனைத்து பட விளக்கக் கண்காட்சியில் கேள்வி பதில் படத்தையும் மாட்டுங்கள் என்று கூறுவார்? அதில் எந்த விஷயம் இருந்தது? அம்பிற்கு சமமான விஷயங்கள் இருந்தது இல்லையா? படிவத்தை நிரப்பித் தர கூறுவார். இது சரியா அல்லது தவறா? ஆம் மற்றும் இல்லை என்று எழுதுங்கள். படிவத்தை நிரப்பி வாங்குவார் இல்லையா? எனவே என்ன திட்டங்களாக இருந்தது? ஒன்று அப்படியே நிரப்பி வாங்குவது. அவசரத்தில் சரி, தவறு என்று எழுதிவிட்டார். ஆனால் புரிய வைத்து நிரப்புங்கள். பிறகு அதன் அனுசாரம் யதார்த்தமாக படிவத்தை நிரப்புவார்கள். கண்டிப்பாக நிரூபிக்கவோ வேண்டும் அதற்கான திட்டத்தை நீங்கள் உங்களுக்குள் உருவாக்குங்கள். அதில் அன்பும் இருக்க வேண்டும், அதிகாரமும் இருக்க வேண்டும். மரியாதையும் இருக்க வேண்டும் மேலும் சத்தியமும் வெளிப்பட வேண்டும். அப்படியே யாரையாவது இழிவு படுத்துவோமா என்ன? அவைகளும் எங்களுடைய கிளை நிலையங்கள், எங்களிலிருந்து உருவானவை தான் என்ற இந்த லட்சியத்தோடு புரிய வையுங்கள். அவர்களுக்கு மரியாதை கொடுப்பதோ நம்முடைய கடமை. சிறியவர்களுக்கு அன்பு கொடுப்பதோ நம்முடைய பாரம்பரியம். நல்லது.

வரதானம் :

இரக்க உணர்வை தாரணை செய்து அனைத்து பிரச்சனைகளையும் முடிவு செய்யக்கூடிய மாஸ்டர் வள்ளல் ஆகுக.

எந்த ஆத்மாக்களின் தொடர்பில் வருகிறீர்களோ, அவர்கள் எப்படிப்பட்ட சம்ஸ்காரம் உள்ளவர்களாக இருந்தாலும், எதிர்ப்பு செய்பவராக இருந்தாலும், சுபாவத்தோடு மோதுபவராக இருந்தாலும், கோபப்படுபவராக இருந்தாலும், எவ்வளவு தான் விரோதியாகஇருந்தாலும், உங்களுடைய இரக்க பாவனை அவருடைய அனேக ஜென்மங்களின் கடுமையான கணக்கு வழக்கை ஒரு நொடியில் முடித்து விடும். நீங்கள் உங்களுடைய அனாதி, ஆதி வள்ளல் தன்மையின் சம்ஸ்காரத்தை வெளிப்படுத்தி மட்டும் இரக்க உணர்வை தாரணை செய்து விட்டீர்கள் என்றால். பிராமண குடும்பத்தின் அனைத்து பிரச்சனைகளும் முடிவடைந்து விடும்.

சுலோகன் :

தன்னுடைய இரக்க மனமுடைய சொரூபம் மற்றும் திருஷ்டி மூலம் ஒவ்வொரு ஆத்மாவையும் பரிவர்த்தனை (மாற்றம்) செய்வது தான் புண்ணிய ஆத்மா ஆவது.

01.06.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## '' புதிய ஞானத்தை மற்றும் ஞானம் அளிக்கும் வள்ளலை அதிகார உரிமையுடன் பிரத்யக்ஷம் செய்யுங்கள் அப்பொழுது பிரத்யக்ஷதாவின் முரசு ஒலிக்கும்''

(வருடாந்திர மீட்டிங்கில் பாப்தாதாவின் வருகை)

அனைத்து கிரீடம் அணிந்த மற்றும் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் விசேஷ ஆத்மாக்களின் சபை தான் இது இல்லையா? நீங்கள் அனைவரும் தன்னை கிரீடம் அணிந்த மற்றும் சிம்மாசனதாரியாக நினைக்கிறீர்கள் தான் இல்லையா? நீங்கள் அனைவரும் எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் பொறுப்பின் கிரீடம் அணிந்தவர்கள் தான் இல்லையா? எல்லைக்கப்பாற்பட்ட கிரீடம் என்றால் எல்லைக்கப்பாற்பட்ட நினைவு சொரூபத்தில் நிலைத்திருப்பது! எல்லைக்கப்பாற்பட்ட பொறுப்பின் கிரீடத்தை அணிந்திருப்பவர். ஒவ்வொரு எல்லைக்கப்பாற்பட்ட கிரீடம் அணிந்த குழந்தைகளின் ஒளி மற்றும் சக்தியின் கிரணங்கள் எல்லைக்கப்பாற்பட்டு பரவியிருக்கிறது. எல்லைக்குட்பட்டதிலிருந்து விலகி எல்லைக்கப்பாற்பட்ட மகாராஜா ஆகிவிட்டீர்கள் தான் இல்லையா? தேகத்தின் எல்லைக்குட்பட்ட நினைவிலிருந்தும் விலகிவிட்டீர்கள் என்றால், தேகத்தையும் சேர்த்து அனைத்து எல்லைக்குட்பட்டதிலிருந்து விலகிவிட்டீர்கள். விசேஷமாக சேவையே எல்லைக்குட்பட்டதிலிருந்து எல்லைக்கப் பாற்பட்டதில் கொண்டு செல்வது. பிரம்மா பாபா அவ்யக்தமாக ஏன் ஆனார்? எல்லைக்குட்பட்டதிலிருந்து விடுவிடுத்து எல்லைக்கப்பாற்பட்டதில் அழைத்துச் செல்வதற்காகத் தான் ஆனார். பிரம்மா பாபா மேல் இருக்கும் அன்பின் பிரத்யக்ஷ சொரூபம் ஃபாலோபிரம்மா பாபா. பிரம்மா பாபா தன்னுடைய வலது கரமான குழந்தைகளுக்கு, தன்னுடைய விசேஷ புஜங்களுக்கு அவ்யக்த வதனத்திலிருந்து, எல்லைக்கப்பாற்பட்ட சேவை ஸ்தானத்திலிருந்து தன்னுடைய கையோடு கை கோர்த்துக் கொள்வதற்காக இரு கரங்களையும் விரித்து அழைத்துக் கொண்டிருக்கிறார். பிரம்மா பாபாவிற்கு குழந்தைகள் மேல் அன்பு இருக்கிறது. எனவே குழந்தைகளே எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் வந்து விடுங்கள் என்று பிரம்மா பாபா அழைக்கிறார். இந்த ஓசையைக் கேட்கிறீர்களா? குழந்தைகள், தனக்குச் சமமாக எல்லைக்கப்பாற்பட்ட கிரீடம் அணிந்தவராகி நாலாபுறங்களிலும் பிரத்யக்ஷதாவின் ஒளி மற்றும் சக்தியை அந்த மாதிரி பரப்ப வேண்டும். அதன் காரணமாக அனைத்து ஆத்மாக்களுக்கும் நம்பிக்கையற்ற

நிலையிலிருந்து நம்பிக்கையின் கிரணங்கள் தென்பட வேண்டும் என்று இந்த ஒரே ஒரு எண்ணம் தான் பிரம்மா பாபாவிடம் எப்பொழுதும் இருக்கிறது. அனைவரின் விரல் அந்த விசேஷ ஸ்தானத்தை நோக்கி இருக்கட்டும். ஆகாயத்தையும் தாண்டி விரலைக் காண்பித்துத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கு இந்த பூமியில், வரதான பூமியில் பூமியின் நட்சத்திரங்கள் பிரத்யக்ஷம் ஆகிவிட்டார்கள் என்று அவர்களுக்கு அனுபவம் ஆக வேண்டும். இந்த சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திர மண்டலம் இங்கே அனுபவம் ஆக வேண்டும். எப்படி அறிவியலைச் சேர்ந்தவர்கள், அறிவியலின் ஆதாரத்தினால் ஆகாயத்தின் நட்சத்திர மண்டலத்தின் அனுபவம் செய்விக்கிறார்கள். அதே மாதிரி இந்த பூமியின் சைத்தன்ய நட்சத்திர மண்டலம் தூரத்தில் இருப்பவர் களுக்கும் அனுபவம் ஆகட்டும். இந்த நல்ல விருப்பத்தை நிறைவேற்றுபவர்கள் நீங்கள் அனைத்து பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள் அந்த மாதிரி எல்லைக்கப்பாற்ட்ட திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்கள் இல்லையா? திட்டங்களையோ தங்களுடைய சக்திக்கேற்றபடி உருவாக்கியிருக்கிறீர்கள். நேரத்திற்குத் தகுந்தாற் போல் இப்பொழுது பாப்தாதா குழந்தைகளிடமிருந்து இன்னும் செய்யாமலிருக்கும் எந்த சேவையை விரும்புகிறார்?

பாப்தாதா இன்று ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தனர். என்ன ஆன்மீக உரையாடல் நடந்தது? தந்தை கூறினார்: பொறுப்பாளர் ஆகியிருக்கும் என்னுடைய சிரேஷ்ட குழந்தைகள், கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் என்று கூறினாலும், நெருக்கமான குழந்தைகள் என்று கூறினாலும் அல்லது எப்பொழுதும் தந்தையின் கூடவே இருக்கும் குழந்தைகள் என்று கூறினாலும் - அந்த மாதிரி குழந்தைகள் சேவையின் திட்டங்களை உருவாக்குவதற்காக வரதான பூமியில் ஒன்றாகக் கூடியிருக்கிறார்கள். அதற்கு பிரம்மா பாபா கூறினார் - மீட்டிங்கில் என்னென்ன திட்டங்கள் உருவாகியிருக்கின்றனவோ அவை மிக நல்ல திட்டங்கள். ஆனால் முக்கியமான ஒரு சேவை இன்னும் செய்யாமல் இருக்கிறது. ஏனென்றால் நீங்கள் எவ்வளவு பெரிய அதிகாரம் உள்ளவர்கள், மேலும் எத்தனை விதமான அதிகாரம் உள்ளவர்கள், ஞானத்தின் அதிகாரம், யோகபலத்தின் அதிகாரம், சிரேஷ்ட தாரணை சொரூபத்தின் அதிகாரம், நேரடியாக தந்தையின் வாரிசு என்ற அதிகாரம், உலகத்தை மாற்றம் செய்வதற்கு பொறுப்பாளர் ஆனதின் அதிகாரம். அந்த மாதிரி எத்தனை அதிகாரங்கள் இருக்கின்றன. எப்படி ஒரு சாஸ்திரத்தின் அதிகாரம் உள்ளவர், கொஞ்சம் கொஞ்சம் தியாகம் செய்து தூய்மை ஆனதின் அதிகாரம் உள்ளவர்கள், அவர்கள் ஒரு அதிகாரம் மட்டும் உள்ளவர்கள், அதுவும் சத்தியமான அதிகாரம் இல்லை, மகான் ஆத்மாக்களாக என்னவோ இருக்கிறார்கள், ஆனால் பரமாத்மா தந்தையின் சம்மந்தத்தின் யதார்த்த ஞானத்தின் அதிகாரம் இல்லை - அந்த மாதிரி ஒரு அதிகாரம் உள்ளவர்கள் கூட உலகில் அனைத்து ஆத்மாக்களையும் தன் பக்கம் கவர்ந்திழுத்து

பொய்யை சத்தியம் என்று நிரூபித்து நடந்தே வந்து கொண்டிருக்கிறார்கள். எத்தனை காலமாக தன்னுடைய அதிகாரத்தைக் காண்பித்தே வந்திருக்கிறார்கள். எவ்வளவு உறுதியுடன், அற்பகால பிராப்தியின் ஜொலிப்புடன் தன்னுடைய பிரபாவத்தை ஏற்படுத்திருக்கிறார்கள். எனவே யார் அனைத்து அதிகாரமுள்ள சிரேஷ்ட ஆத்மாக்களோ அவர்கள் என்ன செய்ய வேண்டும்? இன்னும் என்ன செய்ய வேண்டியதிருக்கிறது என்பதை தெரிந்திருக்கிறீர்களா? முடிவு ஏற்படுவதற்கு இன்னும் எவ்வளவு காலம் இருக்கிறது என்று யோசிக்கிறீர்களா? 1984 வரையிலா அல்லது 2000-ம் ஆண்டு வரையிலா? எதுவரை இருக்கிறது என்று உத்தேசமாக யோசிக்கிறீர்களா? 2000-மாவது ஆண்டு முடிவடையுமா அல்லது அதற்கு முன்பாகவே நடந்து விடுமா? தன்னுடைய தயாரான நிலையின் கணக்கு படி என்ன நினைக்கிறீர்கள்? எந்த விஷயம் இன்னும் செய்யாமல் மிச்சம் இருக்கிறது? புது உலகத்திற்கான நிலத்தையோ உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் புது உலகத்திற்கான ஆதாரம் இந்த புதிய ஞானம். முதல் மகிமையாக என்ன வருகிறது? ஞானக் கடல் என்று கூறுகிறீர்கள் இல்லையா? அப்படி முதல் மகிமையாக இருக்கும் ஞானத்தை, புதிய ஞானத்தை உலகினரின் முன்பு பிரத்யக்ஷம் செய்திருக்கிறீர்களா? எதுவரையிலும் 'இது புதிய ஞானம்' என்பதே பிரத்யக்ஷம் ஆகவில்லையோ அது வரை ஞானம் அளிக்கும் வள்ளல் எப்படி பிரத்யக்ஷம் ஆவார்? இந்த புதிய ஞானத்தின் மூலம் தான் அது நடந்தேறும். ஆத்மாக்கள் என்ன கூறுகிறார்கள், மேலும் பரமாத்மா என்ன கூறுகிறார் என்ற இந்த வித்தியாசம் எதுவரை மனிதர்களின் புத்தியில் வரவில்லையோ அதுவரை எந்தவொரு சின்ன மரக்குச்சியின் ஆதாரத்தை பிடித்திருக்கிறார்களோ அதை எப்படி விடுவார்கள். மேலும் ஒருவரின் ஆதாரத்தை எப்படி எடுத்துக் கொள்வார்கள். இப்பொழுதோ சின்ன சின்ன மரக்குச்சிகளின் ஆதாரத்தில் சென்று கொண்டிருக்கிறார்கள், அதுவே தான் தன்னுடைய ஆதாரமென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். எதுவரையிலும் அவர்களுக்கு ஞானம் மூலமாக ஞானமளிக்கும் வள்ளலின் ஆதாரம் அனுபவம் ஆகவில்லையோ அதுவரை இந்த எல்லைக்குட்பட்ட பந்தனங்களிலிருந்து விடுபட முடியாது. இதுவரையிலும் பூமியை தயார் செய்வதற்கான, வாயுமண்டலத்தை மாற்றுவதற்கான சேவை நடந்திருக்கிறது. நல்ல காரியம் தான், பரிவாரத்தின் அன்பு இருக்கிறது, இந்த அன்பின் குணம் வாயுமண்டலத்தை மாற்றம் செய்வதற்கு காரணம் ஆனது. நிலம் என்னவோ உருவாகி விட்டது, மேலும் உருவாகிக் கொண்டே இருக்கும். ஆனால் அஸ்திவாரமாக, புதுமையாக விதையாக என்ன இருக்கிறதோ அது புதிய ஞானம். சுயநலமற்ற அன்பு, ஆன்மீக அன்பு இதையோஅனுபவம் செய்கிறார்கள். ஆனால் இப்பொழுது அன்பின் கூடவே ஞானத்தின் அதிகாரம் உள்ள ஆத்மாக்கள், சத்திய ஞானத்தின் அதிகாரம் இது என்பது இன்னும் பிரத்யக்ஷம் ஆகவில்லை. யாரெல்லாம் வருகிறார்களோ அவர்கள் இது புதிய ஞானம், புதிய விஷயம் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

இதுவரை எதை (உலகில்) யாருமே கூறவில்லையோ அது இங்கு கூறப்படுகிறது. இங்கு சொல்பவர் அதிகாரம் நிறைந்தவர் என்று வர்ணனை செய்ய வேண்டும். தூய்மை இருக்கிறது, அமைதி இருக்கிறது, அன்பு இருக்கிறது. சுத்தம் இருக்கிறது ஆக இந்த அனைத்து விஷயங்களும் அஸ்திவாரம், அந்த அஸ்திவாரத்தின் ஆதாரத்தில் நிலம் பரிவர்த்தனை ஆனது. இதுவும் நான்கு ஸ்தம்பங்கள். முதலில் எது யாருடைய புத்தியிலும் பதியவில்லையோ அது இப்பொழுது இந்த நான்கு ஸ்தம்பங்களின் ஆதாரம் மூலமாக புத்தியை ஈர்க்கிறது. இந்த பரிவர்த்தனையோ ஆகி விட்டது, ஆனால் இப்பொழுது முக்கியமான விஷயமாக என்ன இருக்கிறதோ அதாவது இது புதிய ஞானம் என்ற இந்த செய்தி அனைவருக்கும் பரவ வேண்டும். இன்று வரை எந்த விஷயங்களை அனைவருமே 'ஆம்' என்று கூறி வந்தனரோ, அந்த விஷயங்களுக்காக பி.கு-களின் அனைத்து சக்திகளின் அதிகாரம் 'இல்லை' என்று நிரூபித்து கூறுகிறது. எதை அவர்கள் இல்லை என்று கூறி வந்தார்களோ அதை நீங்கள் ஆம் என்று கூறுகிறீர்கள். எனவே ஆம் மற்றும் இல்லை என்று இரவு பகலுக்கான வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. எனவே நீங்கள் இந்த மிகப்பெரிய (மகான்) வித்தியாசத்தை நிரூபிக்கும் மகான் ஆத்மாக்கள் என்ற இந்த பெயரை இப்பொழுது வெளிப்படுத்துங்கள் அப்பொழுது தான் வெற்றி முழக்கம் ஒலிக்கும். ஆத்மாவின் ஞானம் யதார்த்த ரூபத்தில் இல்லை என்பதும் இருக்கிறது, ஆனால் இருந்தும் மக்கள் கேட்டுவிட்டு, ஆம் அங்கேயும் இதே தான் கூறுகிறார்கள் என்று அதையும் இதையும் கலந்து விடுகிறார்கள். ஆனால் முழு உலகமும் ஒரு பக்கம் மேலும் பி.கு இன்னொரு பக்கம் என்ற இந்த செய்தியை மிக சப்தமாக பரப்ப வேண்டும். இவர்கள் புதிய ஞானத்தை சொல்லும் அதிகாரம் உள்ளவர்கள். இந்த அதிகாரம் பிரசித்தியாக வேண்டும். இதன் மூலமாகத் தான் சக்திசாயான ஆத்மாக்கள் முன்னுக்கு வருவார்கள், அவர்களே உங்களுக்காக தண்டோரா அடிப்பார்கள். நீங்கள் தண்டோரா அடிக்க வேண்டியதாக இருக்காது. ஆனால் அந்த மாதிரி ஆத்மாக்கள் புதிய விஷயத்தைத் தெரிந்து திருப்தியாகி புதிய ஊக்கத்தில் வந்து தண்டோரா அடிப்பார்கள். தர்ம யுத்தமும் இப்பொழுது இன்னும் நடக்க வேண்டியது இருக்கிறது இல்லையா? இப்பொழுது குருமார்களின் ஆசனத்தை எங்கே அசைத்திருக்கிறோம். இப்பொழுதோ கிளைகள் ஆகியவை மிகவும் சௌகரியமாக தங்களுடைய விஷயங்களிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். விதை எப்பொழுது பிரத்யக்ஷ ரூபத்தில் வரும், விதை எப்பொழுது மேலே வருகிறது என்று தெரியுமா? எப்பொழுது சிறிய மற்றும் பெரிய கிளைகள் முற்றிலும் காய்ந்து இலைகள் இல்லாத காய்ந்த கிளைகளாக இருந்து விடுகிறதோ அப்பொழுது விதை மேலே பிரத்யக்ஷம் (வெளிப்பாடு) ஆகும். அப்படியானால் அதற்கான திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்களா? எப்பொழுது தன்னுடைய நிலையில் வருகிறார்கள் என்றால் தன்னுடைய உண்மையான ஞானத்தின் பிரத்யக்ஷமோ ஆக வேண்டும் இல்லையா? ஒருவேளை வரதான பூமியில் வந்தும் அமைதி மிக நன்றாக இருக்கிறது, அன்பு

மிக நன்றாக இருக்கிறது என்று மட்டும் கூறுகிறார்கள் என்றால், இந்த கொஞ்சம் கொஞ்சத்தை மட்டும் பையை நிரப்பிச் சென்று விடுகிறார்கள் என்றால், வரதான பூமியில் வந்து விசேஷமாக என்ன எடுத்துச் சென்ர்கள். புதிய ஞானத்தையும் நிரூபிக்க வேண்டும் இல்லையா. இதே புதிய ஞானத்தின் அதிகாரம் மூலமாகத் தான் அனைத்து சக்திகளின் அதிகாரம் நிறைந்தவர் நிரூபணம் ஆவார். கொடுப்பவர் யார். அன்பு மற்றும் அமைதி கிடைப்பதினால் இவர்களை உருவாக்குபவர் யாரோ ஒரு சிரேஷ்டமானவர் என்று இந்த அளவோ அவசியம் புரிந்து கொள்கிறார்கள். ஆனால் சுயம் பகவான் இவர்களை உருவாக்குபவர் என்று வெகு சிலர் தான் புரிந்து கொள்கிறார்கள். எனவே இன்னும் என்ன செய்ய வேண்டியது இருக்கிறது என்று புரிந்து கொண்டீர்களா? இப்பொழுது புதிய உலகத்திற்கான புதிய ஞானத்தை உலகில் நாலாபுறங்களிலும் பரப்புங்கள். புரிந்ததா? கோடியில் சிலர் உருவாகட்டும், ஆனால் நாலாபுறங்களிலும் மேலும் செய்தித்தாள்களிலும் பிரம்மா குமாரிகள் உலகில் இல்லாத புதிய ஞானத்தை சொல்கிறார்கள் என்று செய்தி பரவ வேண்டும். என்ன ஞானம் சொல்கிறார்கள், அதற்கான ஆதாரம் என்னவென்று நம்புகிறார்கள், அது எப்படி நிரூபணம் செய்கிறார்கள் என்ற இவை அனைத்தும் எப்பொழுது செய்தித்தாள்களில் வருகிறதோ அப்பொழுது ஞானம் கொடுக்கும் வள்ளலின் முரசு ஒலித்தது என்று புரிந்து கொள்ளுங்கள். புரிந்ததா? ஞானத்தின் பிரபாவத்தில் பிரபாவம் அடைந்தவர் ஆக வேண்டும். ஞானத்தின் பிரபாவசாலி மற்றும் அன்பின் பிரபாவசாலியில் என்ன வித்தியாசம் இருக்கிறது? பிராமணர்களிலும் இரண்டு பாகத்தை பார்த்திருக்கிறீர்கள் இல்லையா. பிராமணனாகவோ ஆகியிருக்கிறார் ஆனால் சிலர் அன்பின் ஆதாரத்தில், மேலும் சிலர் ஞானம் மற்றும் அன்பு இரண்டின் ஆதாரத்தில் ஆகியிருக்கிறார்கள். இருவரிலும் நிலையில் வித்தியாசம் இருக்கிறது இல்லையா. யார் அன்பையும், ஞானத்தின் ஆதாரத்தில் புரிந்து கொள்கிறாரோ அவர் தடையற்று இந்த வாழ்க்கையில் நடந்து கொள்வார். யார் அன்பின் ஆதாரத்தில் மட்டும் இருக்கிறார்களோ அவர் சக்திசாலியான ஆத்மாவாக இருக்க மாட்டார். ஞானத்தின் பலம் அவசியம் வேண்டும். யாருக்கு படிப்பின் மீது அன்பு இருக்கிறதோ, முரளியின் மேல் அன்பு இருக்கிறதோ மேலும் யாருக்கு பரிவாரத்தின் மேல் மட்டும் அன்பு இருக்கிறதோ, இவர்களுக்குள் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. பிராமண வாழ்க்கை பிடித்திருக்கிறது, தூய்மையாக இருப்பது பிடித்திருக்கிறது என்ற இதன் ஆதாரத்தில் வருபவர்கள், மேலும் ஞானத்தின் சக்தியின் ஆதாரத்தில் வருபவர்களில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. ஞானத்தின் போதை ஆன்மீகமான எதன் ஆதாரத்தில் இல்லாத போதைபார்க்கப் போனால் அன்பும் ஒரு சக்தி தான், ஆனால் அன்பின் சக்தி உள்ளவர், ஆதாரமின்றி இருக்க முடியாது. அவசியம் ஏதாவது ஆதாரம் வேண்டும். சிந்தனை சக்தி, ஞானத்தின் சக்தி உள்ளவரிடத்தில் இருக்கும். எந்த அளவு சிந்திக்கும் சக்தி இருக்குமோ அந்த அளவு புத்தியை ஒருநிலைப்படுத்தும் சக்தி இயல்பாகவே

வரும். மேலும் எங்கு புத்தியின் ஒருநிலைப்பாடு இருக்கிறதோ அங்கு பகுத்தறிவதின் மற்றும் நிர்ணயம் செய்வதின் சக்தி இயல்பாக வரும். எங்கு ஞானத்தின் அஸ்திவாரம் இருக்காதோ அங்கு பகுத்தறியும் சக்தி, நிர்ணயம் செய்யும் சக்தி பலஹீனமாக இருக்கும். ஏனென்றால் ஒருமித்த நிலை இல்லை. நல்லது.

பாப்தாதாவோ அனைத்தையும் கேட்டுக் கொண்டே இருக்கிறார். சிரிப்பும் வருகிறது, மேலும் அன்பில்

பயாகவும் ஆகிவிடுகிறார். குழந்தைகளின் தைரியத்தைப் பார்த்து குஷியும் அடைகிறார். பிரம்மா பாபாவின் மனதில் இந்தக் குழந்தைகள் தனக்குச் சமமாக எல்லைக்கப்பாற்பட்ட அதிபதி ஆகிவிட வேண்டும் என்ற எண்ணம் அதிகம் வருகிறது. குழந்தைகளுக்காக காத்துக் கொண்டிருக்கிறார் இல்லையா? மேலும் இரவு பகலாக குழந்தைகளின் சேவையிலேயே மூழ்கியிருக்கிறார். சூட்சும வதனத்திலோ இரவு பகல் கிடையாது. ஆனால் இந்த ஸ்தூல உலகத்தில் இருக்கிறது தான் இல்லையா. ஒவ்வொரு குழந்தையையும் விசேஷ ஆத்மா, சம்பூர்ண ஆத்மா, சம்பன்ன ஆத்மா, சமமான ஆத்மாவாகப் பார்க்க விரும்புகிறார். தந்தை சிவபாபா, தைரியமாக இருங்கள் என்று பிரம்மாவிற்கு கூறுகிறார். ஆனால் பிரம்மாவிற்கு ஊக்கம் அதிகம் இருக்கும் இல்லையா, எனவே குழந்தைகள் என் கையோடு கை கோர்த்து எனக்குச் சமமாக ஆகிவிட வேண்டும் என்ற இந்த விஷயத்தைத் தான் தந்தையோடு ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருக்கிறார். பிரம்மா பாபாவின் சாகார வாழ்க்கையில் தொடக்கத்திலிருந்து என்ன விசேஷத்தைப் பார்த்திருக்கிறீர்கள். பின்பு எப்பொழுதாவது என்றில்லை ஆனால் இப்பொழுது செய்ய வேண்டும். பின்பு எப்பொழுதாவது என்ற வார்த்தையை கேட்பதற்கும் மற்றும் கூறுவதற்குமான சம்ஸ்காரமே இருந்ததில்லை. ஒருவேளை ஏதாவது குழந்தை ஒரு மணி நேரத்திற்கு பிறகு செய்வேன் என்று கூறுகிறார் என்றால், ஒரு மணி நேரம் கழித்து செய்ய விட்டாரா? யாராவது ரயில் புறப்படுவதற்கு இன்னும் ஐந்து பத்து நிமிடங்கள் தான் இருக்கிறது. நாங்கள் எப்படி போய்ச் சேருவோம் என்றால் போகாமல் நிற்க வைத்தாரா? வண்டி நின்று விடும், ஆனால் குழந்தைகள் சென்றடைந்து விடுவார்கள். ஓடிக் கொண்டிருக்கும் ட்ரைன் நின்று விடும், ஆனால் குழந்தைகளை சென்றடையச் செய்தே விடுவார். இதை நடைமுறையில் பார்த்தீர்கள் இல்லையா? எனவே குழந்தைகளும் அந்த மாதிரியே எந்த விஷயத்திலும் சுயமாற்றம் செய்வதில் அல்லது உலக மாற்றம் செய்வதில் பின்பு எப்பொழுதாவது என்ற வார்த்தையை மாற்றி இப்பொழுது என்பது நடைமுறை வாழ்க்கையில் வந்து விட வேண்டும். பிரம்மா பாபாவிடம் இதே ஊக்கம் தான் எப்பொழுதும் இருக்கிறது. அப்படி தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும் தான் இல்லையா?

நல்லது.

(இரண்டு நான்கு சகோதர சகோதரிகள் பாப்தாதாவிடம் விடைபெற்றுச் செல்ல வந்தார்கள்)

அன்பிற்கான பலனோ கிடைத்து விட்டது இல்லையா? உண்மையான உள்ளத்தின் மீது தந்தை எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறார். தொடக்கத்திலிருந்து உண்மையான ஈடுபாட்டில் இருக்கக்கூடிய ஆத்மாக்கள் நீங்கள். எனவே தந்தையும் உண்மையானவர்களுக்கு எப்பொழுதும் அன்பிற்கான பலனை கொடுத்துக் கொண்டே இருக்கிறார். எப்பொழுதும் இதயத்தில் தந்தை தான் நிரம்பியிருக்கிறார். எனவே நல்ல தீவிர முயற்சியில் சென்று கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் கர்ம யோகி ஆத்மா தான் இல்லையா? காரியம் மற்றும் யோகா இணைந்திருக்கிறது தான் இல்லையா? நீங்கள் எப்பொழுதும் சமநிலை வைத்து தந்தையின் ஆசீர்வாதத்தைப் பெறக்கூடிய மேலும் எப்பொழுதும் ஆனந்தம் நிறைந்த வாழ்க்கையில் இருக்கக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்கள். தந்தை எப்பொழுதும் ஒவ்வொரு குழந்தையைப் பற்றி இவரும் வெற்றி மாலையின் மணி என்ற இந்த நல்விருப்பத்தைத் தான் வைக்கிறார். நல்லது.

வரதானம் :

பலஹீனமான எண்ணங்களின் வலையை அகற்றி, பிற அடிமைத்தன பந்தனத்திலிருந்து விடுபடக்கூடிய சுதந்திர ஆத்மா ஆகுக.

பிற அடிமைத்தன பந்தனம் தன்னுடைய மனதின் வீணான பலஹீனமான எண்ணங்களின் வலையாகும், இந்த வலை கேள்வியின் ரூபத்தில் இருக்கும். எப்பொழுது - என்ன ஆகும் என்று தெரியவில்லை, அந்த மாதிரியோ ஆகிவிடாதே என்ற கேள்வி எழுகிறது, என்றால் வலை உருவாகிவிடுகிறது. ஆனால் சங்கமயுக பிராமணர்களிடம் ஒரே ஒரு சக்திசாலியான எண்ணம் - என்ன ஆகுமோ அது நன்மையானது தான் ஆகும், சிரேஷ்டமானது தான் ஆகும் மற்றும் நல்லதிலும் நல்லது தான் நடக்கும் என்ற இந்த சக்திசாலியான எண்ணத்தின் மூலம் வலையை அகற்றி விட்டீர்கள் என்றால், பந்தனமற்ற சுதந்திர ஆத்மா ஆகிவிடுவீர்கள்.

சுலோகன் :

ஞானி மற்றும் யோகி சொரூப ஆத்மாவின் நடைமுறை  சொரூபம் பணிவு மற்றும் பயமற்ற நிலை.

ஓம்சாந்தி

30.07.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

"எங்கு உண்மையான அன்பு இருக்கிறதோ அங்கு துக்கத்தின் அலைகள் இல்லை"

(தீதி மன்மோகினி அவர்கள் தன்னுடைய உடலை தியாகம் செய்த வேளையில் பாப்தாதா கூறிய மகாவாக்கியங்கள்)

இன்று உறுதியான இராஜ்ய அதிகாரி, உறுதியான ஆடாத நிலையில் இருக்கக்கூடிய வெற்றிக் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்பொழுதிலிருந்தே உறுதியாக இருக்கும் சம்ஸ்காரத்தின் ஆதாரத்தில் உறுதியான இராஜ்யத்தின் பிராப்தி அடையும் முன்பு முயற்சி செய்து ஒவ்வொரு கல்பத்திலும் உறுதியானவராக ஆகியிருக்கிறீர்கள். வாழ்க்கை நாடகத்தின் ஒவ்வொரு காட்சியை நாடகச் சக்கரத்தில் சங்கமயுகம் என்ற உயர்ந்த ஸ்தானத்திலிருந்து எதையும் பார்த்தீர்கள் என்றால், இயல்பாகவே ஆடாத அசையாதவர்களாக இருப்பீர்கள். உயர்ந்த ஸ்தானத்திலிருந்து கீழே வருகிறீர்கள் என்றால், தான் குழப்பம் வருகிறது. அனைத்து பிராமண சிரேஷ்ட ஆத்மாக்கள் எப்பொழுதும் எங்கே இருக்கிறீர்கள்? சக்கரத்தில் சங்கமயுகம் உயர்ந்த யுகம். படத்தின் கணக்கின் படியும் சங்கமயுகத்தின் ஸ்தானம் உயர்ந்தது. மேலும் யுகங்களின் கணக்கின் படி சின்னஞ்சிறு யுகம். அதை பாய்ன்ட் அதாவது புள்ளி என்று தான் கூறுவோம். எனவே இதே உயர்ந்த பாய்ன்ட்டில், உயர்ந்த ஸ்தானத்தில், உயர்ந்த நிலையில், உயர்ந்த ஞானத்தில், உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் நினைவில், உயர்ந்ததிலும் உயர்ந்த சேவை நினைவு சொரூபமாக இருந்தீர்கள் என்றால், எப்பொழுதும் சக்திசாலியாக இருப்பீர்கள். எங்கு சக்திசாலியான நிலை இருக்கிறதோ அங்கு வீணானவை நிரந்தரமாக முடிவடைந்து விடும். ஒவ்வொரு பிராமணனும் வீணானதை முடிப்பதற்காகத் தான் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். வீணானதின் கணக்கு முடிவடைந்தது தான் இல்லையா அல்லது இப்பொழுது கூட ஏதாவது பழைய வீணான கணக்கு இருக்கிறதா? பிராமண ஜென்மம் எடுத்தவுடனேயே என்னுடைய உடல், மனம், பணம், செல்வம் அனைத்தும் உன்னுடையது என்று உறுதிமொழி எடுத்திருக்கிறீர்கள் என்றால் வீணான எண்ணம் முடிவடைந்தது விடும். ஏனென்றால், மனதை சக்திசாலியான தந்தைக்குக் கொடுத்து விட்டீர்கள்.

கடந்த இரண்டு, மூன்று நாட்களில் மனதை உன்னுடையது என்பதற்குப் பதிலாக என்னுடையது என்றாகவோ ஆக்கிவிடவில்லையே? டிரஸ்டிகளுக்கு எப்பொழுதும் மனதால் சக்திசாலியான

விஷயங்களை யோசியுங்கள் என்ற டைரக்ஷன் இருக்கிறது. அப்படியானால் வீணானவை இருப்பதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்ன? வீணான எண்ணம் ஓடியதா? அன்பை காண்பித்தோம் என்று நீங்கள் கூறுவீர்கள். பரிவாரத்தின் அன்பின் கயிறிலோஅனைவருமே கட்டப்பட்டிருக்கிறீர்கள், இதுவோ மிகவும் நல்லது. ஒருவேளை அன்பின் கண்ணீர் என்ற முத்துக்களை கீழே சிந்தினீர்கள் என்றால், அந்த முத்து விலைமதிக்க முடியாததாக இருந்தது. ஆனால் ஏன், என்ன என்ற எண்ணத்தின் காரணமாக கண்ணீர் வடித்தீர்கள் என்றால், அது வீணானதின் கணக்கில் சேமிப்பானது. அன்பின் முத்துக்களோ உங்களுடைய அன்பிற்குரிய தீதியின் கழுத்தில் மாலை ஆகி மின்னிக் கொண்டிருக்கிறது. அந்த மாதிரி உண்மையான அன்பின் மாலைகள் தீதியின் கழுத்தில் அதிகமாக விழுந்தன. ஆனால் ஒரு சதவிகிதமாவது குழுப்பத்தின் நிலையில் வந்து கண்ணீர் வடித்தீர்கள் என்றால், அந்த கண்ணீர் தீதியிடம் சென்றடையவில்லை, ஏன்? அவர் எப்பொழுதும் வெற்றியடைந்த, ஆடாத அசையாத ஆத்மாவாக இருந்தார், மேலும் இப்பொழுதும் இருக்கிறார். எனவே ஆடாத அசையாத ஆத்மாவிடம், குழப்பமானவரின் நினைவு சென்றடைய முடியாது. அது இங்கேயே இருந்து விடுகிறது. முத்து முத்தாகி மாலையில் மின்னுவதில்லை. எப்படி நினைவுள்ளவரோ, எப்படி பதவி உள்ள ஆத்மாவோ, அந்த மாதிரி பதவியில் நிலைத்திருக்கும் ஆத்மாவின் நினைவு ஆத்மாவை சென்றடைகிறது. அன்பு இருக்கிறது, இதுவோ மிக நல்ல உதாரணம். அன்பு இருக்கிறது என்றால் அன்பையும் அர்ப்பணம் செய்யுங்களேன். எங்கு உண்மையான சிரேஷ்ட அன்பு இருக்கிறதோ அங்கு துக்கத்தின் உணர்வலைகள் இல்லை. ஏனென்றால், துக்கமான உலகத்திலிருந்து விலகி விட்டீர்கள் தான் இல்லையா?

இனிமையான முறையீடுகளும் அதிகம் வந்து சேர்ந்தன. அனைவரிடமிருந்தும் எங்களுடைய இனிமையான தீதியை ஏன் அழைத்து விட்டீர்கள் என்ற புகார் இருந்தது. அதற்கு பாப்தாதா யார் அனைவருக்கும் இனிமை யானவராக இருப்பாரோ அவர் தந்தைக்கும் இனிமையானவராக இருப்பார் இல்லையா? ஒருவேளை தேவையே இனிமையானவர் தான் என்றால், வேறு யாரை அழைப்பது?. இனிமையிலும் இனிமையானவரைத் தான் அழைப்போம் இல்லையா? நீங்கள் அனைவருமே அட்வான்ஸ் பார்ட்டியின் விசேஷ ஆத்மாக்கள் இதுவரையிலும் ஏன் குப்தமாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள். மேலும் அடிக்கடி கேட்கிறீர்கள். எனவே அவர்களை வெளிப்படுத்த விரும்புகிறீர்கள் இல்லையா? நேரத்திற்குத் தகுந்தாற்போல் சில அட்வான்ஸ் பார்ட்டிகளின் ஆத்மாக்கள் சிரேஷ்ட ஆத்மாக்களை வரவழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி ஆதி பரிவர்த்தனையின் விசேஷ காரியத்திற்காக ஆதி காலத்தைச் சேர்ந்த ஆதி இரத்தின ஆத்மாக்கள் தேவையாக இருக்கின்றன. விசேஷ யோகி ஆத்மாக்கள் யார் தன்னுடைய யோக பலத்தை பிரயோகம் செய்ய முடியுமோ அவர்களும் தேவையாக

இருக்கிறார்கள். பாக்கியத்தை உருவாக்கும் தந்தையின் பாக்கியம் நிறைந்த ஆத்மாக்கள் தேவையாக இருக்கிறார்கள். பிரம்மாவையும் பாக்கியத்தை உருவாக்குபவர் என்று கூறப்படுகிறது. ஏன் அழைத்தோம் என்று புரிந்து கொண்டீர்களா? அல்லது இங்கு என்னவாகும், எப்படி ஆகும் என்பதையும் நினைக்கிறீர்களா? பிரம்மா பாபா அவ்யக்தம் ஆனார் என்றால், என்ன ஆனது? எப்படி ஆனது? என்பதைப் பார்த்தீர்கள் இல்லையா? தாதி தனியாக இருக்கிறார் என்று நினைக்கிறீர்களா? அவர் நினைப்பதில்லை, ஆனால் நீங்கள் நினைக்கிறீர்கள். அந்த மாதிரி தான் இல்லையா? (தாதியை காண்பித்து) உங்களிடம் தெய்வீக ஒற்றுமை இல்லையா, இருக்கிறது தான் இல்லையா? அப்படியானால் தெய்வீக ஒற்றுமையின் புஜங்கள் இல்லையா என்ன? தெய்வீக ஒற்றுமை இருக்கிறது தான் இல்லையா? எதற்காக இந்த குரூப்பை உருவாக்கினோம்? எப்பொழுதும் ஒருவர் இன்னொரு வருக்கு சகயோகியாகஆவதற்காகத் தான்! எப்பொழுது விரும்பினாலும் யாரை விரும்பினாலும் அனைவரும் சேவைக்காக உடனே வந்தேன் ஐயா, என்றிருப்பவர்கள். இந்த தாதிகளுக்கு அவர்களுக்குள் மிகுந்த உள்ளார்ந்த அன்பு இருக்கிறது, இது உங்களுக்குத் தெரியாது. எனவே இப்பொழுது என்னவாகும் என்று நினைக்கிறீர்கள். ஒரு தீதி நாங்கள் அனைத்து ஆதி இரத்தினங்களும் ஒற்றுமையாக ஒன்றாக இருக்கிறோம் என்று நிரூபித்துக் காண்பித்தார் இல்லையா? பிரம்மா பாபாவிற்குப் பிறகு சாகார ரூப்த்தில், நவரத்தினங்களின் பூஜைக்குரிய ஆத்மாக்கள் சேவையின் மேடையில் பிரத்யக்ஷம் ஆனார்கள் என்றால், நவரத்தினம் மற்றும் 8-ன் மாலை எப்பொழுதும் ஒருவர் இன்னொருவரின் சகயோகி இந்த 8 மணி மாலை யார்? யார் சேவையில் முதலில் நான் தான் அர்ச்சுனன் என்றிருக்கிறாரோ அவர் 8 மணி மாலையில் இருப்பவர். அப்படி சேவையின் மேடையில் அஷ்ட இரத்தினங்கள், நவரத்தினங்கள் தங்களுடைய பங்கை செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் பங்கை செய்வது தான் தன்னுடைய பங்கை மற்றும் வரிசை எண்ணை (வெளிப்படுத்துவது) பிரத்யக்ஷம் செய்வது. பாப்தாதா அந்த மாதிரி வரிசை எண் தருவதில்லை, ஆனால் அவர்கள் செய்யும் பங்கே அவர்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே அஷ்ட இரத்தினங்கள் அவர்களுக்குள் எப்பொழுதும் அன்பானவர்கள், மேலும் நிரந்தரமான சகயோகிகள், எனவே எப்பொழுதும் தொடக்கத்திலிருந்து சேவையின் சகயோகி ஆத்மாக்கள் எப்பொழுதும் சகயோகத்தின் பங்கை செய்து கொண்டே இருப்பார்கள். புரிந்ததா? வேறு என்ன கேள்வி இருக்கிறது? இந்தக் கேள்வி இருக்கிறது என்று ஏன் கூறவில்லை? கூறியிருந்தீர்கள் என்றால், தீதியின் யோகி ஆகிவிடுவீர்கள். நாடகத்தின் விசித்திரமான பங்கு, விசித்திரத்தின் சித்திரம் முன்பாக வரையப்படுவதில்லை. குழப்பத்திற்கான சோதனைதிடீரென்று இருக்கும். மேலும் இப்பொழுதும் இந்த விசேஷ ஆத்மாவின் பங்கு, இதுவரையிலும் எந்தெந்த ஆத்மாக்கள் சென்று விட்டனரோ அவர்களை விட வித்தியாசமானது, மேலும் அன்பானது. ஒவ்வொரு சேத்திரத்தில் இந்த சிரேஷ்ட ஆத்மாவின் துணையை, சகயோகத்தை அனுபவம் செய்து

கொண்டே இருப்பார்கள். பிரம்மா பாபாவிற்கு அவருக்கென்ற பங்கு இருக்கிறது, அவர் மாதிரியான பங்கு வேறு யாருக்கும் இருக்க முடியாது. ஆனால் இந்த ஆத்மாவின் விசேஷத் தன்மை சேவையில் ஊக்கம் உற்சாகம் கொடுப்பதில், யோகி, சகயோகி மற்றும் பிரயோகி ஆக்குவதில் இந்த ஆத்மாவின் பங்கு எப்பொழுதும் இருந்தது. எனவே இந்த ஆத்மாவின் இந்த விசேஷ சம்ஸ்காரம் அவ்வப்பொழுது உங்கள் அனைவருக்கும் சகயோகியாகஇருப்பதற்கான அனுபவத்தை செய்வித்துக் கொண்டே இருக்கும். இதுவும் ஒவ்வொரு ஆத்மாவின் அவரவர்களுடைய விசித்திரமான பங்காகும். நல்லது.

மதுபனில் வந்து அன்பின் சொரூபத்தைக் காண்பித்தீர்கள். அதற்காக இதையும் உலகின் சேவைக்காக அந்த பங்கை செய்தீர்கள். நீங்கள் அனைவரும் வந்திருப்பது, உலகில் அன்பின் அலைகள், அன்பின் நறுமணம், அன்பின் கிரணங்களைப் பரப்புவதற்காக வந்திருக்கிறீர்கள். எனவே நன்றாக வாருங்கள். தீதியின் தரப்பிலிருந்தும் பாப்தாதா அனைவருக்கும் அன்பின், சேவையின் சொரூபத்தின் வாழ்த்துக்களைக் கூறுகிறார். தீதியும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், டி.வி முன்பு அமர்ந்திருக்கிறார்கள். நீங்களும் வதனத்திற்குச் சென்றீர்கள் என்றால் தான் பார்க்க முடியும் இல்லையா. இதுவும் சேவையின் ஒரு முத்திரை.

இன்றைய சபையில், கமல் குழந்தையின் (தீதி அவர்களின் குடும்பத்து அண்ணி) நினைவு வந்தது, அவரும் நினைவு செய்து கொண்டிருக்கிறார். மேலும் யாரெல்லாம் அன்பிற்குரிய சிரேஷ்ட ஆத்மாவிற்காக தன்னுடைய சகயோகம் கொடுத்தார்களோ அந்த களைப்பற்ற குழந்தைகளுக்கு, அவர்கள் இங்கே அமர்ந்திருந்தாலும் அல்லது அமரவில்லை என்றாலும், ஆனால் அனைத்து குழந்தைகளும் சுபபாவனை, சுபவிருப்பங்கள், மற்றும் ஒரே ஆர்வத்துடன் என்ன அன்பைக் காண்பித்தார்களோ அது மிகவும் சிரேஷ்டமாக இருந்தது. இதற்காக விசேஷமாக தீதி தன் தரப்பிலிருந்து அந்த மாதிரி அன்பான சேவாதாரி பரிவாரத்திற்கு நினைவு மற்றும் நன்றி கூறுங்கள் என்று பாப்தாதாவிடம் கூறினார். அப்படி தீதியின் வேலையை இன்று பாப்தாதா செய்து கொண்டிருக்கிறார். இன்று பாப்தாதா செய்தி கொண்டு வருபவராகி, செய்தியைக் கூறிக் கொண்டிருக்கிறார். என்ன நடந்ததோ அது மிகுந்த இரகசியங்கள் நிரம்பிய நாடகமாக இருந்தது. உங்கள் அனைவருக்கும் தீதி பிரியமானவர், மேலும் தீதிக்கு சேவை பிரியமானது, எனவே சேவை தன் பக்கம் இழுத்து விட்டது. என்ன நடந்ததோ அது பரிவர்த்தனை என்ற திரையைத் திறப்பதற்காக மிகவும் நல்லதிலும் நல்லதாக ஆனது. பகவதியின் (டாக்டரின்) குறையும் இல்லை, பகவானின் குறையும் இல்லை. இதுவோ நாடகத்தின் இரகசியம், இதில் பகவதியும் எதுவும் செய்ய முடியாது, பகவானும் எதுவும் செய்ய

முடியாது. ஒருபொழுதும் அவரைப் பற்றி இவர் அந்த மாதிரி செய்தார், அந்த மாதிரி ஆப்பேரேஷன் செய்து விட்டார் என்று யோசிக்காதீர்கள். அவருக்கு இறுதி வரையிலும் அன்பு தாய் மீது இருந்தது, எனவே அவர் தன் தரப்பிலிருந்து எந்தக் குறையும் வைக்கவில்லை. நடந்ததோ நாடகத்தின் காட்சி. புரிந்ததா? எனவே வேறு எந்த விதமான சிந்தனைகளையும் செய்யாதீர்கள்.

இன்றோ கட்டளைப்படி நடப்பவராக மட்டும் ஆகி, தீதியின் தரப்பிலிருந்து செய்தி கொடுப்பவராகி வந்திருக்கிறோம். அனைத்து உறுதியான நிலையில் நிலைத்திருக்கக்கூடிய, உறுதியான இராஜ்ய அதிகாரி, நிச்சயபுத்தி உடைய கவலையற்ற வெற்றி அடையும் குழந்தைகளுக்கு, இன்று திரிமூர்த்தி அன்பு நினைவுகள் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், மேலும் நமஸ்காரம் ! நல்லது.

தெய்வீக ஒற்றுமை இங்கு வந்து விட வேண்டும் (மேடையில் பாப்தாதா அனைத்து தாதிகளையும் அழைத்தார், மேலும் மாலையின் ரூபத்தில் அமர வைத்தார்). மாலையோ உருவாகி விட்டது இல்லையா (தாதியிடம்) இப்பொழுது இவர் (ஜானகி தாதி) மேலும் இவர் (சந்திரமணி தாதி) உங்களுடைய விசேஷ சகயோகிகள் இந்த ரதத்திற்கு (குல்சார் சகோதரிக்கு) இரட்டை பங்கு இருக்கிறது. பாப்தாதாவின் பங்கு மற்றும் இந்த பங்கு. அப்படி இரட்டை பங்கு. அனைவரும் உங்களுடைய சகயோகிகள் தான். இவரை (நிர்மல் சாந்தா தாதியை) பருவ காலம் நன்றாக இருக்கும் போது மட்டும் அழையுங்கள். நீங்கள் அனைவரும் பறக்கும் பறவை தான் இல்லையா? எந்த சேவையின் பந்தனமும் இல்லை. சுதந்திரமான பறவை என்றால் கை தட்டப்பட்டது, உடனே பறந்து விட்டார். அந்த மாதிரி தான் இல்லையா? சுதந்திர பறவை, எந்தவொரு விசேஷ ஸ்தானம் மற்றும் விசேஷ சேவையின் பந்தனம் இல்லை. உலக சேவையின் பந்தனம், எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் பந்தனம், எனவே சுதந்திரமாக இருக்கிறீர்கள். எப்பொழுதெல்லாம் எங்கு அவசியம் இருக்கிறதோ அங்கு முதலில் நான். ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அவரவர்களுடைய பங்கு இருக்கிறது. தெய்வீக ஒற்றுமை பாலனை செய்பவர்கள், மேலும் மனோகர் பார்ட்டி சேவையின் சேத்திரத்தில் முன்னேறிச் சென்று கொண்டிருப்பவர்கள். இப்பொழுதும் சேவையின் கூடவே பாலனையின் விசேஷ அவசியம் இருக்கிறது. எப்படி தீதியை பாலனையின் கணக்கின்படி அனேக ஆத்மாக்கள் தாயின் சொரூபத்தில் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். பொதுவாக தாய் தந்தை ஒருவர், ஆனால் நடைமுறையில் பொறுப்பாளராகி, பங்கை செய்த காரணத்தினால் பாலனை கொடுப்பதின் விசேஷ பங்கை ஆற்றினார். அதே போலவேயோர் ஆதி ரத்தினமாக இருக்கிறாரோ அவர்களுக்கு

பாலனை கொடுப்பதில், தந்தையின் பாலனையைப் பெறுவதற்கு உரியவராக ஆக்குவதின் பாலனை கொடுக்க வேண்டும். தந்தையின் பாலனையைப் பெற வேண்டும். ஆனால் தந்தையின் பாலனையைப் பெறுவதற்கும் பாத்திரமானவராகவோ ஆக்க வேண்டும் இல்லையா? அந்த பாத்திரமாக்கும் சேவையை இந்த ஆத்மா (தீதி அவர்கள்) மிக நன்றாக நம்பர் ஒன்-ல் செய்தார்கள். நீங்கள் அனைவரும் நம்பர் ஒன் தான் இல்லையா? நீங்கள் இரண்டாவது எண்ணின் மாலையிலோ இல்லை தானே! முதல் மாலையில் இருக்கிறீர்கள் இல்லையா? அப்படி முதல் மாலையைச் சேர்ந்தவர்கள் அனைவரும் நம்பர் ஒன். நல்லது – பாண்டவர்களையும் அழையுங்கள்.

பாப்தாதாவின் எதிரில் அனைத்து முக்கியமான சகோதரர்கள் மேடையில் வந்தார்கள் – பாண்டவர்களும் ஆதிரத்தினங்கள் தான் இல்லையா? பாண்டவர்களும் மாலையில் இருக்கிறார்கள். சக்திகள் மட்டும் இருக்கிறார்கள் என்றல்ல, பாண்டவர்களும் இருக்கிறார்கள். எந்த மாலையில் உங்களை நீங்கள் பார்க்கிறீர்கள். அதை நீங்கள் ஒவ்வொருவருமே தெரிந்திருக்கிறீர்கள். மேலும் தந்தையும் தெரிந்திருக்கிறார். ஆனால் பாண்டவர்களும் இதே நினைவு மாலையில் இருக்கிறார்கள். யார் இருக்கிறார்? தான் இருப்பதாக யார் யார் நினைக்கிறீர்கள்? பாண்டவர் களன்றி எந்தவொரு காரியமும் வெற்றி அடைய முடியாது. எந்த அளவு சக்திகளிடம் சக்தி இருக்கிறதோ. அதே போல் பாண்டவர்களிடமும் விசால சக்தி இருக்கிறது. எனவே நான்கு புஜங்களின் ரூபத்தைக் காண்பித்திருக்கிறார்கள். இணைந்திருப்பது. இருவர்களுமே இணைந்த ரூபத்தில் இந்த சேவையின் காரியத்தில் வெற்றி அடைகிறார்கள். இந்த தாதிகள் தான் அஷ்ட தேவதைகள் அல்லது இவர்கள் தான் ஒன்பது இரத்தினங்கள் என்று நினைக்காதீர்கள். ஆனால் பாண்டவர்களிலும் இருக்கிறார்கள். புரிந்ததா? அந்த அளவு பொறுப்பு என்ற கிரீடம் எப்பொழுதுமே தலையில் இருக்க வேண்டும். எப்பொழுதுமே கிரீடம் இருக்கிறது தான் இல்லையா. அனைவரும் ஒருவர் இன்னொருவருக்கு சகயோகி ஆக வேண்டும். இவர்கள் அனைவரும் தந்தையின் புஜங்கள் மற்றும் நடைமுறையில் பொறுப்பாளர் ஆகியிருக்கும் தாதியின் சகயோகி ஆத்மாக்கள். 'எப்பொழுதும் நாங்கள் ஒருவர்' என்ற இந்த கோஷம் தான் வெற்றிக்கான வழி. சம்ஸ்காரம் ஒத்துப்போவது என்ற நடனம் செய்பவர் எப்பொழுதுமே ஒவ்வொரு ஜென்மத்திலோ சிரேஷ்ட ஆத்மாக்களின் சபையில் நடனம் ஆடிக் கொண்டே இருப்பார். இங்கே இணைந்து நடனம் ஆடுவது என்றால் எதிர்காலத்தில் எந்த வாழ்க்கைப் பங்கை செய்வீர்கள். எப்பொழுதும் சிரேஷ்ட ஆத்மாக்களின் நண்பர்களாக ஆவீர்கள், உறவினர்கள் ஆவீர்கள். மிக அருகாமையான உறவினன், ஆனால் உறவினன் மற்றும் நண்பன் என்ற இரண்டு சொரூபத்தில் உடலின் இருப்பவர்கள். நண்பனுக்கு நண்பனாகவும், உறவினனுக்கு உறவினனாகவும் இருக்கிறீர்கள். அப்படி நீங்கள் பொறுப்பில் இருப்பவர்கள்.

இது தான் தீதியினுடைய ஆன்மீக உரையாடலாக இருந்தது. எனவே அனைத்து பாண்டவர்கள் மற்றும் சக்திகள் ஒரு தந்தையின் ஸ்ரீமத் என்ற பூச்செண்டில் மலர்களாக ஆகுங்கள். உங்கள் அனைவருக்கும் தீதி மேல் விசேஷ அன்பு இருக்கிறது தான் இல்லையா? நல்லது.

இன்றோ அப்படியே சந்திப்பு செய்வதற்காக வந்தோம். எனவே இப்பொழுது விடைபெறுகிறோம் (தாதி அவர்கள் பாப்தாதாவின் எதிரில் போக் வைத்தார்கள், அதற்கு பாபா கூறினார்) இன்று காரியமாக சந்திக்க வந்திருக்கிறோம் எனவே எதையும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். முதலில் குழந்தைகள் ஏற்றுக் கொள்கிறார்கள் பிறகு தந்தை. பின்போ எப்பொழுதும் சந்தித்துக் கொண்டே இருப்போம், அருந்திக் கொண்டே இருப்போம், உபசரித்துக் கொண்டே இருப்போம். இன்றோ தீதியின் செய்தியாளராகி வந்திருக்கிறோம், செய்தி கொண்டு வருபவர், செய்தியை கொடுத்து விட்டு சென்று விடுகிறார். தாதியுடன் கைகுலுக்கி விட்டு வாருங்கள் என்று தீதி கூறினார்.

(பாப்தாதா தாதி அவர்களுக்கு கை கொடுத்தார், பிறகு வதனத்திற்கு பறந்து சென்று விட்டார்).

வரதானம் :

சுயராஜ்ய அதிகாரி ஆகி, கர்ம இந்திரியங்களை தன்னுடைய கட்டளைப்படி நடத்துவிக்கக்கூடிய அழியாத ஆசனத்தில் அமர்ந்திருப்பவரிலிருந்து இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர் ஆகுக.

நான் அழியாத ஆசனத்தில் அமர்ந்திருக்கும் ஆத்மா அதாவது சுயராஜ்ஜிய அதிகாரி இராஜா ஆவேன். எப்படி இராஜா எப்பொழுது ஆசனத்தில் அமருகிறாரோ அப்பொழுது அனைத்து வேலை செய்பவர்கள் கட்டளைப்படி நடந்து கொள்கிறார்கள். அந்த மாதிரி ஆசனத்தில் அமர்ந்திருப்பவர் ஆவதினால் இந்த கர்ம இந்திரியங்கள் இயல்பாகவே கட்டளைப்படி நடக்கும். யார் அழியாத ஆசனத்தில் அமர்ந்திருப்பவராக இருப்பாரோ அவருக்காக தந்தையின் இதய சிம்மாசனமோ இருக்கவே இருக்கிறது. ஏனென்றால், ஆத்மா என்று புரிந்து கொள்வதினால் தந்தையின் நினைவு வருகிறது, பிறகு தேகமும் இல்லை, தேகத்தின் சம்மந்தமும் இல்லை, பதார்த்தங்களும் இல்லை, ஒரு தந்தை தான் உலகம், எனவே அழியாத ஆசனத்தில் அமர்ந்திருப்பவர் இயல்பாகவே இதய சிம்மாசனதாரி ஆகிறார்.

சுலோகன்:

நிர்ணயம் செய்வது, பகுத்தறிவது மற்றும் கிரகிக்கும் சக்தியை  தாரணை செய்வது தான் புனித அன்னப்பறவை ஆவது.

ஓம்சாந்தி

10.11.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

"முக்கியமான சகோதரசகோதரிகளின் மீட்டிங் சமயத்தில் அவ்யக்த பாப்தாதாவால் கூறப்பட்ட இனிமையான விலைமதிக்க முடியாத மகாவாக்கியங்கள்"

இன்று அனைத்து சக்திகளின் கடலான தந்தை சக்தி சேனையை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரின் நெற்றியின் மத்தியில் திரிசூலம் அதாவது திரிமூர்த்தி நினைவின் தெளிவான அடையாளம் தென்படுகிறது. சக்தியின் அடையாளமாக திரிசூலத்தைக் காண்பிக்கிறார்கள். எனவே நீங்கள் ஒவ்வொருவரும் திரிசூலம் வைத்திருக்கும் சக்தி சேனை தான் இல்லையா? பாப்-தாதா மற்றும் நீங்கள்! இந்த திரிமூர்த்தி எப்பொழுதும் தெளிவான ரூபத்தில் இருக்கிறதா அல்லது சில நேரம் உள்ளடங்கி மற்றும் சில நேரம் வெளிப்பட்டுக் கொண்டும் இருக்கிறதா? பாப்தாதாவுடன் நானும் சிரேஷ்ட சக்திசாலி ஆத்மா என்ற இந்த நினைவும் இருக்கிறதா? இதே திரிமூர்த்தி நினைவின் மூலம் சக்தியில் சிவன் தென்படுவார். சில கோயில்களில் பாப்தாதாவின் இணைந்த நினைவுச் சின்னமான சிவலிங்கத்தின் கூடவே அந்த லிங்கத்தில் மனித உருவமும் காண்பிக்கிறார்கள். இது பாப்தாதாவின் இணைந்த நினைவுச் சின்னம். கூடவே சக்தியையும் காண்பிக்கிறார்கள். இந்த திரிமூர்த்தி நினைவு சொரூப நிலை மூலம் சுலபமாகவே காட்சி அளிக்கும் மூர்த்தி ஆகிவிடுவீர்கள். இப்பொழுது சேவாதாரி யாக, சொற்பொழிவு நிகழ்த்துபவராக, மாஸ்டர் ஆசிரியரக ஆகியிருக்கிறீர்கள். இப்பொழுது சாட்சாத் மூர்த்தி ஆக வேண்டும். சகஜயோகி ஆகியிருக்கிறீர்கள். ஆனால் சிரேஷ்ட யோகி ஆக வேண்டும். தபஸ்வி ஆகியிருக்கிறீர்கள், இன்னும் மகா தபஸ்வி ஆக வேண்டும்.

இன்றைய நாட்களில் சேவை என்று கூறினாலும், தபஸ்யா என்று கூறினாலும் படிப்பு என்று கூறினாலும், முயற்சி செய்வது என்று கூறினாலும், தூய்மையின் எல்லை என்று கூறினாலும், எந்த அலையில் சென்று கொண்டிருக்கிறது என்பதை தெரிந்திருக்கிறீர்களா? சகஜயோகியின் 'சகஜ' வார்த்தையின் அலையில் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் இறுதி நேரத்திற்கு ஏற்றபடி தற்சமயம் மனித ஆத்மாக்களுக்கு வாய்மொழி மூலம் அல்ல ஆனால் சிரேஷ்ட வைப்ரேஷன், சிரேஷ்ட வாயுமண்டலம் மூலம் சுலபமாக சாட்சாத்காரம் ஆகிவிட வேண்டும் என்ற இதன் அவசியம் இருக்கிறது. அனுபவமும் சாட்சாத்காரத்திற்குச் சமமானது. பேசுபவர்களோ அதிகமாக இருக்கிறார்கள். யாருக்கு நீங்கள் கூறுகிறீர்களோ அவர்களும்

மற்றவர்களுக்குக் கூறுவதில் குறைந்தவர்கள் அல்ல. ஆனால் சாட்சாத்காரம் செய்விப்பதில் குறை இருக்கிறது. அதை செய்விக்க முடியாதா? இது தான் விசேஷம், இது தான் புதுமை, இது தான் சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களின் சித்தி அதாவது வெற்றி. இதே விசேஷத்தை மேடையில் கொண்டு வாருங்கள். இதே விசேஷத்தின் ஆதாரத்தில் அனைவரும் நாங்கள் பார்த்தோம், நாங்கள் அடைந்தோம் என்று வர்ணனை செய்வார்கள். நாங்கள் கேட்க மட்டும் இல்லை ஆனால் சாட்சாத் தந்தையின் அனுபவம் செய்தோம். இந்த சகோதரன் அல்லது இந்த சகோதரி பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்ற இந்த அனுபவம் இல்லை, ஆனால் இவர்கள் மூலமாகவே ஏதோஒரு ஆன்மீக சக்தி பேசிக் கொண்டிருந்தது. எப்படி தொடக்கத்தில் பிரம்மாவிற்கு விசேஷ சக்தியின் சாட்சாத்காரம் ஆனது என்றால் அவர் என்ன கூறினார். யார் இவர், இது என்ன என்று கூறினார். அதே மாதிரி கேட்பவர்களுக்கு இவர் யாராக இருந்தார் என்று அனுபவம் ஆக வேண்டும். பேசும் ஞான பாய்ன்ட்டுகளை மட்டும் கேட்க வேண்டாம், ஆனால் நெற்றியின் மத்தியில் ஒளிப் புள்ளி தென்பட வேண்டும். இந்த புதுமை தான் அனைவரின் தெரிந்து கொள்வதின் கண்ணை திறக்கும். இப்பொழுது தெரிந்து கொள்வதின் கண் திறக்கவில்லை, இப்பொழுதோ உங்களையும் மற்றவர்களின் வரிசையில் கொண்டு வருகிறார்கள். எப்படி பிற இயக்கங்கள் இருக்கின்றனவோ அதே போல் இவர்களும் இருக்கிறார்கள். எப்படி அவர்கள் கூறுகிறார்களோ அதே போல் இவர்களும் கூறுகிறார்கள். இவர்களும் செய்கிறார்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் யாரை நான் அழைத்துக் கொண்டிருந்தேனோ, யாருக்காக நான் காத்துக் கொண்டிருந்தேனோ அவர் இவரே தான்! என்று இந்த அனுபவத்தின் அவசியம் இப்பொழுது இருக்கிறது. இதற்கான வழி ஒரு வார்த்தையை மட்டும் மாற்றம் செய்யுங்கள். சகஜயோகியின் அலையை மாற்றம் செய்யுங்கள். சகஜம் என்ற வார்த்தையை இல்லறத்தில் உபயோகிக்காதீர்கள். ஆனால் அனைத்து சித்தி சொரூபம் ஆவதில் உபயோகப் படுத்துங்கள். சிரேஷ்ட யோகியின் அலை, மகா தபஸ்வியின் அலை, காட்சி அளிப்பவர் ஆவதின் அலை, ஆன்மீகத்தின் அலை இப்பொழுது இவற்றின் அவசியம் இருக்கிறது. இப்பொழுது இந்த பந்தயத்தை செய்யுங்கள். எத்தனை பேர்களுக்கு செய்தி கொடுத்தீர்கள் என்ற இதுவோ ஏழு நாட்கள் பாடம் கொடுப்பவர்கள் செய்ய வேண்டிய வேலை. அவர்களும் இந்த செய்தியைக் கொடுக்க முடியும். ஆனால் இப்பொழுது எத்தனை பேர்களுக்கு எத்தனை செய்வித்தோம் என்ற இந்த பந்தயம் செய்யுங்கள். அனுபவம் செய்விக்க வேண்டும், அனுபவி ஆக்க வேண்டும். இந்த அலை இப்பொழுது நாலா புறங்களிலும் இருக்க வேண்டும். புரிந்ததா?

84-வது வருடம் வந்து கொண்டிருக்கிறது. 84 மணிகள் அணிந்து கொண்டிருக்கும் சக்தி பிரபலமானவர். அனைத்து தேவிகளுக்கும் மகிமை இருக்கிறது. 84-வது வருடத்து மணியை அடிப்பீர்கள் தான் இல்லையா? அப்பொழுது தான் 84 மணியின் வர்ணனை ஏற்படும். இப்பொழுது

தொடக்கத்தில் இருந்தது போனாட்சி அளிக்கும் அலையை பரப்புங்கள். நீங்கள் சாட்சாத் தந்தை ஆகிவிட்டீர்கள் என்றால், சாட்சாத்காரம் தானாகவே ஆகிவிடும். இப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் அனுபவம் செய்கிறார்கள், ஆனால் இப்பொழுது நாலாபுறங்களிலும் இந்த அலையைப் பரப்புங்கள். எப்படி மேளா நடத்துகிறீர்கள் என்றால், அலையைப் பரப்புகிறீர்கள் தான் இல்லையா? அதிகமான மேளா நடத்தியிருக்கிறீர்கள். நிகழ்ச்சிகளும் அதிகமாக செய்திருக்கிறீர்கள். இப்பொழுது சந்திப்பு விழாவை கொண்டாடுங்கள். புது வருடத்திற்காக புதிய திட்டத்தை உருவாக்குவதற்காக வந்திருக்கிறார்கள். அனைத்தையும் விட முதல் திட்டமாக தன்னை அனைத்து பலஹீனங்களிலிருந்து விடுபட்டவராக ஆக்குங்கள். அப்பொழுது தான் சாட்சாத்காரம் ஆகும். ஒருவேளை இந்த மீட்டிங்கில் இந்த திட்டம் நடைமுறையில் வந்து விட்டது என்றால், சேவை உங்களின் காலடியில் வந்து வணங்கும். இப்பொழுது பாப்தாதாவின் இந்த ஆசையை நிறைவேற்ற வேண்டும். ஆசை இப்பொழுது நிறைவேறவில்லை. மீட்டிங் நடந்து விடுகிறது. பாப்தாதாவிடம் அனைவரின் சார்ட் இருக்கிறது தான் இல்லையா? மரியாதை வைத்திருக்கும் காரணத்தினால் மட்டும் பாப்தாதா அதைப் பற்றி கூறுவதில்லை. நல்லது - இன்றோ சந்திப்பதற்காக வந்திருக்கிறோம், சார்ட்டைப் பற்றி கூறுவதற்காக வரவில்லை. (தாதியைப் பார்த்து) உங்களுடைய தோழி (தீதி) எங்கே இருக்கிறார்? கர்பத்தில் இருக்கிறாரா? (அப்போது தீதி சரீரத்தை விட்டிருந்தார்) இருப்பதோர் கர்பத்தில் தான், ஆனால் இப்பொழுதும் சேவைக்காக சுற்றி வந்து கொண்டிக்கிறார். எப்பொழுது பிரம்மா பாபாவுடன் சாகார சொரூபத்தில் ஜகத் அம்பாவிற்குப் பிறகு துணையாக இருந்தார். அதே போல் இப்பொழுதும் அவ்யக்த பிரம்மாவுடன் இருக்கிறார். சேவையில் உடன் இருப்பவரின் பங்கை செய்து கொண்டிருக்கிறார். கர்ம இந்திரியங்களின் பந்தனம் இருக்கிறது. ஆனால் விசேஷமாக சேவையின் பந்தனம் இருக்கிறது. எப்படி யக்ஞத்தின் ஸ்தாபனையின் காரியங்களை முதலில் விசேஷ ரூபத்தில் ஜகத்தம்பா கவனித்தார். ஜகத்தம்பாவிற்குப் பிறகு விசேஷமாக பொறுப்பிலிருக்கும் ரூபத்தில் இதே ஆத்மா (தீதியின்) பொறுப்பில் இருந்தது. துணைக்கு மற்றவர்களும் இருந்தார்கள். ஆனால் விசேஷமாக மேடையில் மற்றும் சாகார பிரம்மாவுடன் தன்னுடைய பங்கை செய்து கொண்டிருந்தார். இப்பொழுதும் பிரம்மா பாபா மற்றும் தீதியின் இடையே ஆன்மீக உரையாடல், மனோரஞ்சனம் (மன மகிழ்ச்சி) மற்றும் சேவையின் விதவிதமான பங்கு நடந்து கொண்டிருக்கிறது. புது உலக ஸ்தாபனையிலும் விசேஷமாக பிரம்மா பாபாவுடன் சேர்ந்து நெருக்கமான ஆத்மாக்களுக்கும் இப்பொழுது மிக அதிமான முக்கியமான பங்கு நடந்து கொண்டிருக்கிறது. எப்படி தீதி உடலில் இருக்கும் போது சேவையின் திட்டத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்கான ஊக்கம் உற்சாகம் கொடுப்பதற்கான விசேஷ சம்ஸ்காரம் அவரிடம் இருந்தது. அதே போல் இப்பொழுதும் அதே சம்ஸ்காரம் புது உலக ஸ்தாபனை காரியம் செய்வதற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும்

குரூப்பிற்கு இன்னும் அதிவேகம் கொடுப்பதற்கான பங்கு நடந்து கொண்டிருக்கிறது. தீதியினுடைய விசேஷமான வார்த்தைகள் நினைவில் இருக்கிறதா? ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வருவதற்காக அவர் கூறிய விசேஷமான வார்த்தை என்னவாக இருந்தது? இன்னும் ஏதாவது புதியதாகச் செய்யுங்கள் என்ற இந்த வார்த்தை தான் எப்பொழுதுமே இருந்தது. இப்பொழுது என்ன நடந்து கொண்டிருக்கிறது? புதுமையாக என்ன கொண்டு வந்து கொண்டிருக்கிறீர்கள் என்று அடிக்கடி கேட்பார். அதே போலஷேஅவ்யக்த பிரம்மா பாபாவுடன் அடிக்கடி இதே வார்த்தைகளால் ஆன்மீக உரையாடல் செய்கிறார். அட்வான்ஸ் பார்ட்டியிலும் ஊக்கம் உற்சாகம் கொண்டு வருகிறார். இதுவரை என்னென்ன செய்திருக்கிறீர்கள்? என்ன நடந்து கொண்டிருக்கிறது? அதே சம்ஸ்காரத்தை நடைமுறையில் கொண்டு வந்து கொண்டிருக்கிறார். யாரையுமே உட்கார விடுவதில்லை தான் இல்லையா? அட்வான்ஸ் பார்ட்டி யையும் இப்பொழுது மேடையில் கொண்டு வருவதற்கான அம்பை நிரப்பிக் கொண்டிருக்கிறார். கட்டுப்படுத்துபவரின் சம்ஸ்காரம் இருந்தது தான் இல்லையா? இப்பொழுது அட்வான்ஸ் பார்ட்டியின் கன்ட்ரோலராக இருக்கிறார். இப்பொழுதும் சேவையின் சம்ஸ்காரம் வெளிப்படும் ரூபத்தில் இருக்கிறது. புரிந்ததா? இப்பொழுது தீதி எங்கே இருக்கிறார். இப்பொழுதோ உலகைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார். எப்பொழுது சீட்டை எடுத்துக் கொள்வாரோ அப்பொழுது கூறுவோம். இப்பொழுது உங்களுக்கு சகயோகம் கொடுப்பதற்காக அவரும் மிகப் பெரிய திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். இப்பொழுது கால தாமதம் ஆகாது. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் சிரேஷ்ட யோகி, எப்பொழுதும் மகான் தபஸ்வி மூர்த்தி, சாட்சாத் தந்தைக்குச் சமமானவராகி சாட்சாத்காரத்தை செய்விக்கும் உலகின் நாலாபுறங்களிலும் 'நாங்கள் அடைந்தோம், நாங்கள் பார்த்தோம்' என்ற இந்த பிராப்தியின் அலையைப் பரப்பக்கூடிய, அந்த மாதிரி மகான் தபஸ்வி மூர்த்திகளுக்கு, பாரதம் மற்றும் வெளிநாட்டின் அனைத்து அன்பிற்குரிய சேவையில் மூழ்கியிருக்கும் அனைத்து குழந்தை களுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

மீட்டிங்கில் வந்திருப்பவர்களுடன் சந்திப்பு - மீட்டிங்கோ முடிவடைந்தோ விட்டது. உலகை தந்தையின் அருகில் கொண்டு வருவதற்காக மீட்டிங் நடக்கிறது. செய்தி கொடுப்பதற்காக மட்டும் அல்ல. அருகாமையில் கொண்டு வருவதற்காக தொடர்பின் வண்ணத்தை பூசுகிறீர்கள் தான் இல்லையா? எந்த அளவு தந்தையின் அருகில் வருகிறார்களோ அந்த அளவு தொடர்பின் பிரபாவம் ஏற்படுகிறது. எங்கே கேட்க வேண்டியதாக இருக்கிறதோ அங்கே ஏதாவது கொஞ்சம் கேட்க வேண்டியதாக இருக்கும் - சிலவற்றை கொஞ்சம் மறக்க வேண்டியதாக இருக்கும்,

ஆனால் யார் அருகில் வந்து விடுகிறார்களோ அவர்கள் தந்தையின் அருகாமையில் இருக்கும் காரணத்தினால் ஆன்மீக வண்ணத்தில் மூழ்கியிருக்கிறார்கள். எனவே இப்பொழுது என்ன சேவை இருக்கிறது? அருகாமையில் கொண்டு வர வேண்டும். செய்தியையோ கூறி விட்டீர்கள். செய்தியாளராகி செய்தி கொடுக்கும் பங்கையோ செய்துவிட்டீர்கள். ஆனால் இப்பொழுது என்ன ஆக வேண்டும்? சக்திகளை எப்பொழுதும் எந்த ரூபத்தில் நினைவு செய்கிறார்கள்? நீங்கள் அனைவரும் சக்தி சேனை தான் இல்லையா? சக்திகளை எப்பொழுதும் தாயின் ரூபத்தில் நினைவு செய்வார்கள், பாலனை பெறுவதற்கான எண்ணத்துடன் நினைவு செய்கிறார்கள். செய்தியையும் மிக அதிகமானவர்களுக்குக் கூறியிருக்கிறீர்கள். இப்பொழுது இன்னும் மற்றவர்களுக்கும் கொடுப்பதற்காக தயாராகி விட்டீர்கள். இப்பொழுது பாலனை செய்பவர்கள் வேண்டும். யார் விசேஷமாக பொறுப்பாளராக இருக்கிறாரோ அவர்கள் இப்பொழுது செய்ய வேண்டிய காரியம் யாதெனில், ஒவ்வொரு விநாடியும் தந்தையின் பாலனையில் இருக்க வேண்டும். மேலும் அனைவருக்கும் தந்தையின் பாலனையை கொடுக்க பிறருக்கு வேண்டும். எப்படி சின்னக் குழந்தைகள் எப்பொழுதும் பாலனையில் இருப்பதினால் எவ்வளவு குஷியாக இருக்கிறார்கள். என்ன ஆனாலும் சரி, ஆனால் பாலனையின் கீழே இருக்கும் காரணத்தினால் எவ்வளவு குஷியாக இருக்கிறார்கள். அதே போல் நீங்கள் அனைவரும் அனைத்து ஆத்மாக்களுக்கும் பிரபு பாலனையின் உள்ளே இருப்பதற்கான அனுபவத்தை செய்வியுங்கள். நாங்கள் பிரபுவின் பாலனையில் இருந்து கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவர் எனக்கு பிரபுவின் பாலனையின் திருஷ்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார், அவ்வகையில் இப்பொழுது பாலனையின் அவசியம் இருக்கிறது. நீங்கள் பாலனை செய்பவர்களா அல்லது செய்தி கூறுபவரா? செய்தி கூறுபவர் என்று தன்னைத் தானே கூறிக் கொள்பவர்கள், மிக அதிகமாக இருக்கிறார்கள். செய்தி சொல்பவராக ஆவது மிகவும் பொதுவானது. ஆனால் இப்பொழுது யார் வந்தாலும் அவர் நான் இப்பொழுது ஈஸ்வரிய பாலனையில் வந்து விட்டேன் என்று அனுபவம் செய்ய வேண்டும். இதைத் தான் சம்மந்தத்தில் கொண்டு வருவது என்று கூறுவது.

நீங்கள் அனைவரும் நெருக்கமானவர்கள் தான் இல்லையா? அனன்யம் என்றால், அன்னியர்கள் எதைச் செய்ய முடியாதோ அதைச் செய்து காண்பிப்பவர்கள். எதை அனைவரும் செய்கிறார்களோ அதையே செய்தீர்கள் என்றால் பெரிய விஷயம் ஒன்றுமில்லை. பாலனை என்பதின் அர்த்தம் அவர்களை சக்திசாலி ஆக்குவது, அவர்களின் எண்ணங்களை, சக்திகளை வெளிக்கொணர்வது, ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வருவது. ஒவ்வொரு விஷயத்திலும் சக்தி ரூபம் ஆக்குவது. இதே ரூபத்தின் பாலனை இப்பொழுது அதிகமாகத் தேவையாக இருக்கிறது. இருந்து கொண்டிருக்கிறோம், ஆனால் சக்திசாஆத்மாக்கள் ஆகி நடந்து கொள்வது

என்பது இப்பொழுது அவசியமாக இருக்கிறது. புதியவர்கள் யாராவது வந்தாலும் அவர் அவசியம் ஈஸ்வரிய சக்தியை அனுபவம் செய்ய வேண்டும். உங்களுடைய வாய்மொழி சக்தியின் அனுபவமோ ஆகிக் கொண்டு தான் இருக்கிறது. ஆனால் இங்கு ஈஸ்வரிய சக்தி இருக்கிறது என்பதை அனுபவம் செய்வியுங்கள். மேடையில் வருகிறீர்கள் என்றால், சொற்பொழிவு நிகழ்த்த வேண்டும் என்பது நினைவிருக்கிறது. ஆனால் இது அதிகமாக நினைவில் இருக்க வேண்டும், ஒரு காரணமாக சொற்பொழிவு நிகழ்த்துகிறீர்கள், ஈஸ்வரிய சக்தியின் உணர்வை ஏற்படுத்த வேண்டும். உங்களுடைய பேச்சில் ஈஸ்வரிய சக்தியின் உணர்வு வர வேண்டும். இதைத் தான் வித்தியாசமான நிலை என்று கூறுவது. சொற்பொழிவை மிக நன்றாக செய்தீர்கள் என்றால் உங்களை பேச்சாளர் ரூபத்தில் பார்த்தார்கள் இல்லையா? ஆனால் இவர்கள் ஈஸ்வரிய ஆன்மீக ஆத்மாக்கள் என்ற இந்த ரூபத்தில் பார்க்க வேண்டும். இந்த உணர்வை ஏற்படுத்த வேண்டும். இந்த உணர்வு தான் ஈஸ்வரிய விதையைப் போட்டு விடுகிறது. பிறகு அந்த விதை அகல முடியாது. யாருக்காவது ஒரு விநாடியாவது இந்த அனுபவம் ஆகிவிடுகிறது என்றால், அவர் இறுதி வரை கஷ்டப்பட வேண்டியதாக இருக்காது. ஈஸ்வரிய உணர்வை யார் வந்தவுடனேயே அனுபவம் செய்து விட்டாரோ அவர் நடந்து கொள்வது, சேவை செய்வது வேறாக இருக்கும். யார் கேட்டு மட்டும் பிரபாவம் அடைந்து விடுகிறாரோ அவர் நடந்து கொள்வது வேறாக இருக்கும். யார் அன்பின் காரணமாக மட்டும் நடந்து கொண்டிருக்கிறார்களோ அவர்கள் நடந்து கொள்வது வேறாக இருக்கும். விதவிதமான வகையினர் இல்லையா? எனவே இப்பொழுது முதலில் தன்னை ஈஸ்வரிய பாலனையில் இருப்பதாக அனுபவம் செய்யுங்கள். அப்பொழுது தான் மற்றவர்களுக்கு அனுபவம் ஆகும். சேவை செய்து கொண்டிருக்கிறோம், ஆனால் சேவையும் பாலனை தான். ஈஸ்வரிய பாலனையில் இருக்கிறோம். சேவை சக்திசாலி ஆக்குகிறது என்றால் இதுவும் ஈஸ்வரிய பாலனை தான் இல்லையா? ஆனால் இது வெளிப்படும் ரூபத்தில் இருக்க வேண்டும். இந்த உறுதியான எண்ணத்தை வைக்க வேண்டும். அனன்யமானவர் என்றால் தந்தைக்குச் சமமான உதாரணமானவர் நல்லது

வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் கொடுத்துக் கொண்டே கூறிய மகாவாக்கியங்கள் -

அனைத்து வெளிநாட்டுக் குழந்தைகளுக்கும் அவர்களது அன்பின் பிரதிபலனாக விசேஷமாக பல கோடி மடங்கு அன்பு நினைவுகளைபாப்தாதா கொடுக்கிறார். யாரெல்லாம் கடிதம் மற்றும் செய்தியை எழுதினார்களோ அதற்குப் பதிலாக அனைத்து குழந்தைகளுக்கும் முயற்சி செய்வதை தீவிரம் ஆக்கியதற்காக வாழ்த்துக்கள்! மேலும் கூடவே முயற்சி செய்து

கொண்டிருக்கும் போதேஒருவேளை ஏதாவது பக்கத்து காட்சிகள் வந்து விட்டது என்றால், அதில் பயப்படுவதற்கான எந்த விஷயமும் இல்லை. என்னவெல்லாம் பக்கத்து காட்சிகள் வருகின்றனவோ அவற்றை நினைவு மற்றும் குஷியோடு கடந்து சென்று கொண்டே இருங்கள். வெற்றியோ அனைவரின் பிறப்புரிமை. பக்கத்து காட்சிகளை கடந்து சென்றிருந்தீர்கள், மேலும் லட்சியத்தை அடைந்தீர்கள். எனவே ஏதாவது பெரிய விஷயத்தை சிறியதாக ஆக்குவதற்காக நீங்களே மிகப்பெரிய மேடையில் நிலைத்திருந்து விட்டீர்கள் என்றால், பெரிய விஷயமும் தானாக சிறியதாக ஆகிவிடும். கீழான நிலையில் இருந்து மேலும் மேலே உள்ள ஒன்றை பார்க்கிறீர்கள் என்றால், அது பெரியதாகத் தென்படுகிறது. எனவே உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து எந்தவொரு பெரியதையும் பார்த்தீர்கள் என்றால் சிறியதாக அனுபவம் ஆகும். எப்பொழுதெல்லாம் ஏதாவது பிரச்சனை வருகிறது அல்லது ஏதாவது விதமான தடை வருகிறது என்றால், தன்னுடைய சிரேஷ்ட ஸ்திதியில், உயர்ந்ததிலும் உயர்ந்த நிலையில் நிலைத்து விடுங்கள். தந்தையுடன் அமர்ந்து விட்டீர்கள் என்றால் தந்தையின் தொடர்பின் பிரபாவம் சுலபமாக ஏற்பட்டு விடும். துணையும் கிடைத்து விடும். மேலும் உயர்ந்த நிலையின் காரணமாக அனைத்து விஷயங்களும் மிகச் சிறியதாக அனுபவம் ஆகும், எனவே பயப்படாதீர்கள். மனமுடைந்து போகாதீர்கள். ஆனால் எப்பொழுதும் குஷி என்ற ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருந்தீர்கள் என்றால், எப்பொழுதுமே வெற்றி உங்கள் எதிரில் வரும். வெற்றி கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்று யோசிக்கவும் வேண்டியதாக இருக்காது. ஆனால் வெற்றி தானாகவே உங்கள் எதிரில் வரும். இயற்கை வெற்றியின் மாலையை அதுவே உங்களுக்கு அணிவிக்கும். பிரச்சனை மாறி வெற்றியின் மாலையாகி விடும். எனவே நீங்கள் மிகவும் தைரியமுள்ளவர்கள், ஊக்கமுள்ளவர்கள், உற்சாகத்தில் இருப்பவர்கள், இது இடையிடையே கொஞ்சம் இருந்தாலும் அதை நீங்கள் யோசிக்காதீர்கள். காலம் கடந்து சென்றது, பிரச்சனை கடந்து சென்று விட்டது. பின்பு அதை யோசிப்பது வீணானதாக ஆகிவிடுகிறது. எனவே எப்படி காலம் கடந்து சென்றதோ அதே போல் தன்னுடைய புத்தியிலிருந்தும் கடந்ததைக் கடந்ததாக ஆக்குங்கள். யார் கடந்ததை கடந்ததாக ஆக்குகிறாரோ அவர் எப்பொழுதுமே கவலையின்றி இருப்பார். எப்பொழுதுமே ஊக்கம் உற்சாகத்தில் இருப்பார். எனவே பாப்தாதா விசேஷமாக அந்த மாதிரி ஊக்கம் உற்சாகத்தில் இருக்கக்கூடிய, தைரியம் உள்ள குழந்தைகளை விசேஷமாக அமிர்தவேளையில் நினைவு செய்கிறார். மேலும் விசேஷ சக்தி கொடுக்கிறார், அதே நேரம் தன்னை பாத்திரம் என்று புரிந்து அந்த சக்தியை பெற்றீர்கள் என்றால், மிகவும் நல்ல அனுபவம் ஆகும்.

அமிர்தவேளையில் சோம்பல் வந்து விடுகிறது -

குஷியின் பாய்ன்ட்டை (ஞானத்துளியை) குறைவாக சிந்தனை செய்கிறீர்கள். ஒருவேளை முழு நாளும் சிந்தனை ஓடிக் கொண்டே இருக்கிறது என்றால் அமிர்தவேளையிலும் அதே சிந்தனை செய்த கஜானா எதிரில் வருவதினால் குஷி இருக்கும், சோம்பல் வராது. ஆனால் முழு நாளும் சிந்தனை குறைவாக இருக்கிறது, அந்த நேரம் சிந்தனை செய்வதற்கு முயற்சி செய்கிறீர்கள் என்றால் சிந்தனை ஆவதில்லை, ஏனென்றால், புத்தி புத்துணர்வுடன் இருப்பதில்லை. பிறகு சிந்தனையும் இருப்பதில்லை, அனுபவமும் ஆவதில்லை, பின்பு சோம்பல் வந்துவிடுகிறது. அமிர்தவேளையை சக்திசாலியாக ஆக்குவதற்காக முழுநாளுக்கான என்னென்ன ஸ்ரீமத் கிடைத்திருக்கிறதோ அதன்படி நடப்பதும் அவசியம் ஆகும். எனவே முழு நாளும் சிந்தனை செய்து கொண்டே இருங்கள். ஞான இரத்தினங்களோடு விளையாடிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் மிகுந்த குஷிக்கான விஷயம் நினைவு வருவதினால் தூக்கம் சென்று விடும். மேலும் குஷியில் பிராப்தியின் சுரங்கம் திறந்து விட்டது என்று அனுபவம் செய்வீர்கள். மேலும் எங்கு பிராப்தி இருக்கிறதோ அங்கு தூக்கம் வராது. மேலும் களைப்பு ஏற்படாது, சோம்பல் வராது. பிராப்தியின் அனுபவத்தில் இருங்கள். இது முழு நாளின் சிந்தனை செய்ததின் ஆதாரத்தில் இருக்கிறது. நல்லது.

யாரெல்லாம் அன்பு நினைவின் செய்தியை அனுப்பியிருக்கிறார்களோ அவர்களுக்கு நேரெதிரிலேயோ சந்திக்கத் தான் வேண்டும். ஆனால் இப்பொழுது யாரெல்லாம் தூரமான இடத்தில் அமர்ந்திருந்தாலும் பாப்தாதாவை நேரெதிரில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் நேரெதிரில் பார்த்துக் கொண்டே பேசிக் கொண்டிருக்கிறோம். இப்பொழுதும் நேரெதிரில் இருக்கிறீர்கள். பின்பும் நேரெதிரில் இருப்பீர்கள். அனைவருக்கும் அவர்களுடைய பெயரையும் சேர்த்து, செய்திக்கான பதிலையும் சேர்த்து அன்பு நினைவுகள் கொடுக்கிறோம். எப்பொழுதும் தீவிரமான ஊக்கம், தீவிரமான முயற்சியில் இருக்க வேண்டும். மேலும் மற்றவர்களுக்கும் தீவிர முயற்சியின் வைப்ரேஷனை கொடுத்துக் கொண்டே வாயுமண்டலத்தையே தீவிர முயற்சி செய்வதற்கானதாக ஆக்க வேண்டும். முயற்சி செய்வது அல்ல, 'தீவிர முயற்சி செய்வது'. நடந்து செல்பவர் அல்ல, பறந்து செல்பவர். நடந்து செல்வதற்கான காலம் முடிவடைந்தது. இப்பொழுது பறந்து செல்லுங்கள் மேலும் மற்றவர்களையும் பறக்க வைத்துக் கொண்டே இருங்கள். நல்லது.

வரதானம் :

பாக்கியத்தின் புதுப்புது நினைவுகள் மூலமாக முயற்சி செய்வதில் இரமணீகரத்தை அனுபவம் செய்யக்கூடிய மன ஆரோக்கியமானவர் ஆகுக.

பிராமண வாழ்க்கையில் கடைசி ஜென்மமாக ஆன காரணத்தினால் உடலால் எவ்வளவு தான் பலஹீனமானவராக அல்லது நோயுற்றவராக இருந்தாலும், மனம் அனைவருக்கும் ஆரோக்கியமாக இருக்கிறது. நீங்கள் ஊக்கம் உற்சாகத்தில் பறப்பவர்கள். சக்திசாலியான மனதின் அடையாளம் - ஒரு நொடியில் எங்கே விரும்புகிறாரோ அங்கே சென்றடைந்து விடுவார். இதற்காக எப்பொழுதும் தன்னுடைய பாக்கியத்தின் பாடலை பாடிக் கொண்டே பறந்து கொண்டே இருங்கள். அமிர்தவேளையில் இருந்து பாக்கியத்தின் புதுப்புது விஷயங்களை நினைவில் கொண்டு வாருங்கள். சில நேரம் ஏதாவது பிராப்தியை எதிரில் வையுங்கள், சில நேரம் வேறு ஏதாவது பிராப்தியை எதிரில் வைத்தீர்கள் என்றால் முயற்சி செய்வதில் இரமணீகரம் வந்து விடும். ஆர்வமற்ற நிலை இருக்காது, புதுமையை அனுபவம் செய்வீர்கள்.

சுலோகன் :

முன் பின் யோசித்து புரிந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்தீர்கள் என்றால், வெற்றி கிடைத்துக் கொண்டே இருக்கும்.

ஓம்சாந்தி

01.12.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" சுகம், சாந்தி மற்றும் தூய்மையின் மூன்று அதிகாரங்கள் "

இன்று பாப்தாதா மிகவும் அன்பிற்குரிய மற்றும் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையும் மிக அன்புடன் சந்திப்பை செய்வதற்காக தன்னுடைய வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டார்கள். இந்த பூமியை தன்னுடைய வீடு, வள்ளலின் வாசல் என்று கூறுவது. இந்த மகிமை இந்த இனிமையான இல்லத்திற்கு இருக்கிறது. இனிமையான இல்லத்தில் இனிமையான குழந்தைகளை மிகவும் இனிமையான தந்தை சந்தித்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியிலும் விசேஷமாக இன்று அதிகாரத்தின் மூன்று ரேகைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் மூன்று ரேகைகளோ இடப்பட்டு இருக்கிறது. ஏனென்றால் அனைவருமே குழந்தைகள் தான். குழந்தையான காரணத்தினால் அனைவருமே அதிகாரிகள். ஆனால் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள். சில குழந்தைகளின் எதிர்காலம், சுகத்தின் அதிகாரத்தின் ரேகை மிகத் தெளிவானதாக ஆழமானதாக இருக்கிறது. எவ்வளவு தான் பிரச்சனைகள் வந்தாலும், துக்கத்தை ஏற்படுத்தும் சூழ்நிலை வந்தாலும் ஆனால் நீங்கள் துக்கம் என்ற வார்த்தை என்றால் என்னவென்று தெரியாதவர்கள். துக்கமான சூழ்நிலையை தன்னுடைய சுகக்கடடலிமிருந்து பிராப்தியான அதிகாரம் மூலமாக துக்கத்தின் சூழ்நிலையிலும் 'ஆஹா இனிமையான நாடகமே, ஆஹா ஒவ்வொரு நடிகனின் பங்கு! என்ற இந்த ஞானத்தின் ஒளி மூலமாக, அதிகாரத்தின் குஷி மூலமாக துக்கத்தை சுகத்தில் பரிவர்த்தனை செய்து விடுகிறீர்கள். அதிகாரம் மூலம் துக்கத்தின் இருளை பரிவர்த்தனை செய்து மாஸ்டர் சுகம் கொடுப்பவர் ஆகி, நீங்கள் சுகத்தின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டு தான் இருக்கிறீர்கள். ஆனால் மற்றவர்களுக்கும் சுகத்தின் பிராப்திகளைக் கொடுப்பதற்குப் பொறுப்பாளர் ஆகிறீர்கள். அந்த மாதிரி சுகத்தின் அதிகாரத்தின் ரேகை தெளிவாக மற்றும் ஆழமாக இருக்கிறது, அதை யாரும் அழிக்க முடியாது. அழிப்பவர் மாறி விடுவார். ஆனால் அது மாறாது. மாஸ்டர் சுக வள்ளலிடமிருந்து சுகத்தின் அஞ்சலியை பெற்றுக் கொள்ளட்டும். அந்த மாதிரி ரேகை உள்ளவர்களையும் பார்த்தோம். அவரைத் தான் நம்பர் ஒன் அதிர்ஷ்டம் நிறைந்தவர் என்று கூறுவோம். 'முதன்மையின் அடையாளம் வெற்றி அடைவது' என்று

ஏற்கனவே கூறியிருந்தோம்.

இன்னொரு ரேகை சாந்தி. நீங்கள் அனைவரும் சாந்தியை தன்னுடைய இயற்கையான குணம் என்று நினைக்கிறீர்கள் இல்லையா? இதை அனைவருக்கும் கூறுகிறீர்கள் இல்லையா? தர்மத்தைப் பொறுத்தளவில் என்ன வர்ணிக்கப்பட்டிருக்கிறது. 'உயிரே சென்றாலும் தர்மத்தை விடாதீர்கள்' தலையே போனாலும் தர்மம் போகக்கூடாது. எனவே சுகம், சாந்தியின் ஆஸ்தியின் அதிகாரி ஒருபொழுதும் சாந்தியை விட முடியாது. அந்த மாதிரி அமைதியற்றவரை அமைதியானவராக ஆக்கக்கூடிய, எப்பொழுதும் அமைதியின் கிரணங்களை தன் மூலம் மற்றவர்களுக்கு வழங்கக்கூடிய, என்ன ஆனாலும் சரி, ஆனால் சாந்தியின் தர்மத்தை, சாந்தியின் அதிகாரத்தை விட முடியாது. இவரைத் தான் இரண்டாவது அதிகாரத்தின் ரேகையில் நம்பர் ஒன் என்று கூறுவது. மூன்றாவது தூய்மையின் அதிகாரத்தின் ரேகை. அனைத்து குழந்தைகளும் தூய்மையான ஆத்மாக்கள் தான், ஆனாலும் நம்பர் ஒன் அதிகாரத்தின் அதிர்ஷ்டமுள்ள குழந்தை யார்? அவருடைய நடத்தை, முகம் மூலம் தூய்மையின் ஆளுமை (பெர்சனாலிட்டி) மற்றும் ராயல் தன்மை அனுபவம் ஆக வேண்டும். உலக வாழ்க்கையில் உலகத்தினரிடம் ஆளுமை மற்றும் ராயல் தன்மை தென்படுகிறது, ஆனால் அதிகாரத்தின் அதிர்ஷ்டமுள்ள குழந்தைகளின் தூய்மையின் ஆன்மீகத்தின் ஆளுமை மற்றும் ராயல் தன்மை தென்படும். இவரைத் தான் நம்பர் ஒன் தூய்மையின் அதிர்ஷ்டரேகை உள்ளவர் என்று கூறுவது.

இன்று அனைத்து குழந்தைகளின் இந்த அதிகாரத்தின் ரேகைகளை பார்த்துக் கொண்டிருந்தோம். நீங்கள் அனைவரும் தன்னுடைய மூன்று ரேகைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? மூன்று அதிகாரத்தையும் பிராப்தி செய்து விட்டேனா என்று சோதனைசெய்யுங்கள். முழுமையான அதிகாரத்தை பெற்று விட்டேனா அல்லது சதவிகிதத்தில் பெற்றிருக்கிறேனா? ஒருவேளை சங்கமயுகத்திலும் சதவிகிதத்தில் இருந்தீர்கள் என்றால், முழுக் கல்பமும் சதவிகிதத்திலேயே இருந்து விடுவீர்கள். பூஜைக்குரிய பதவியிலும் சதவிகிதம் தான் இருக்கும், முழுமையான பூஜை நடக்காது. மேலும் பிராப்தியிலும் சதவிகிதம் இருந்து விடும். நல்லது.

இன்று பெரும்பான்மையோர் புதியவர்களாக வந்திருக்கும் பழைய குழந்தைகள் வந்திருக்கிறார்கள். புதிய குழந்தைகள் என்று கூறினாலும் அல்லது ஒவ்வொரு கல்பத்தின்

அதிகாரி குழந்தைகள் என்று கூறினாலும், தன்னுடைய அதிகாரத்தைப் பெறுவதற்காக மீண்டும் தங்களது சொந்த இடத்திற்கு வந்து சேர்ந்து விட்டார்கள். அனைவரையும் விட மிக அதிகமான குஷி யாருக்கு இருக்கிறது? எனக்கு இருக்கிறது என்று ஒவ்வொருவரும் நினைப்பார்கள். அந்த மாதிரி நினைக்கிறீர்களா அல்லது சிலருக்கு குறைவாகவும், சிலருக்கு அதிகமாகவும் இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? அதிகாரி குழந்தைகளுக்கு விசேஷமாக சந்திப்பதற்கான அதிகாரத்தை கொடுப்பதற்காக பாப்தாதாவிற்கும் வரத்தான் வேண்டியதாக இருக்கிறது.

தந்தைக்கு குழந்தைகள் மீது அன்பு அதிகமாக இருக்கிறதா அல்லது குழந்தைகளுக்கு தந்தை மீது அன்பு அதிகமாக இருக்கிறதா? இடைவிடாத அன்பு யாருடையது? பாப்தாதாவோ குழந்தைகளை தன்னையும் விட முன்னுக்கு வைக்கிறார். முதலில் குழந்தைகள். ஒருவேளை குழந்தைகள் நினைவு செய்யவில்லை மற்றும் அன்பு வைக்கவில்லை என்றால், தந்தையும் அதற்கான பலனை யாருக்குக் கொடுப்பார்! எனவே குழந்தைகள் முன்னுக்கு இருக்கிறார்கள். தந்தை பின்னால் இருக்கிறார். எப்பொழுதுமே குழந்தைகளை முன்னுக்கு வைக்க வேண்டியதாக இருக்கிறது. தந்தை பின்னால் இருக்கிறார். எனவே அந்த மாதிரி குழந்தைகளைப் பார்த்து பார்த்து பாப்தாதாவும், மகிழ்ச்சி அடைகிறார். இடைவிடாத அன்பில் மூழ்கியிருக்கும் குழந்தைகளும் இருக்கிறார்கள். அந்த மாதிரி குழந்தைகளுக்கும் மாலை இருக்கிறது. பாரதத்திலும், வெளிநாட்டிலும் இரண்டு இடங்களிலும் அந்த மாதிரி குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு தந்தையைத் தவிர, சேவையைத் தவிர வேறு எந்த விஷயமும் நினைவில் இருப்பதில்லை.

ஜகதீஷ் சகோதரருடன் சந்திப்பு

நீங்கள் அந்த மாதிரி குழந்தைகளைப் பார்த்திருக்கிறீர்கள் இல்லையா? பல இடங்களில் நன்றாக சுற்றி வந்திருக்கிறீர்கள் இல்லையா? சாகார பாபாவால் கொடுக்கப்பட்ட விசேஷ வரதானத்தை நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறீர்கள். வெற்றியின் பிறப்புரிமையை அனுபவம் செய்தீர்கள் இல்லையா? அனைத்து வெற்றியில் விசேஷ வெற்றியின் அடையாளம் எது? சிரேஷ்ட வெற்றி என்றால் அதில் பாப்தாதா தென்பட வேண்டும். உங்களில் தந்தை தென்பட வேண்டும். இது தான் சிரேஷ்ட வெற்றி. இது தான் பிரத்யக்ஷம் ஆவதற்கான வழி. யாரெல்லாம் சேவைக்காக பல இடங்களில் சுற்றி

வருகிறார்களோ அவர்கள் விசேஷமாக தந்தைக்குச் சமமான அனுபவம் செய்விக்க வேண்டும். இது தான் வெற்றியின் அடையாளம். மேலும் வரும் நாட்களிலும் அதிகத்திலும் அதிகம் இதே செய்தி தான் நாலாபுறங்களிலும் பரவிக் கொண்டே இருக்கும். தைரியமுள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவியும் கண்டிப்பாக இருக்கிறது. செய்விப்பவர் செய்வித்து விடுகிறார். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் முழுமையான அதிர்ஷ்டம் நிறைந்த, முழுமையான அதிகாரத்தைப் பெறக்கூடிய அதிகாரிகளுக்கு, எப்பொழுதும் தந்தை மற்றும் உங்களின் இணைந்த ரூபத்தில் இருக்கக்கூடிய, அன்பின் கடலில் எப்பொழுதும் மூழ்கியிருக்கும், அதிர்ஷ்டமான மற்றும் அன்பான குழந்தைகளுக்கு, பாக்கியத்தை உருவாக்குபவர், வரமளிக்கும் வள்ளலின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

(ஜகதீஷ் சகோதரர் பாப்தாதாவிடம் வெளிநாட்டு யாத்திரையின் செய்தியை கூறினார், மேலும் பெயரையும் சேர்த்து அனைத்து சகோதர சகோதரிகளின் அன்பு நினைவுகளைக் கொடுத்தார்).

அனைவரின் அன்பின் செய்தி பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து கொண்டே தான் இருக்கிறது. மேலும் இப்பொழுதும் வந்து சேர்ந்து விட்டது. அனைத்து வெளிநாட்டில் நாலாபுறங்களிலும் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு விசேஷமாக ஒரு விஷயத்திற்கான வாழ்த்துக்களை பாப்தாதா கொடுக்கிறார். அது எந்த விஷயத்தினுடையது? சம்ஸ்காரம், பாஷை, வாழ்க்கை வாழும் கலாச்சாரம். அனைத்தையும் பரிவர்த்தனை செய்வதில் பெரும்பான்மையோர் மிகத் தீவிரமாக முயற்சி செய்பவர்கள் உருவாகியிருக்கிறார்கள். புது உலகத்தில் வந்து விட்டது மாதிரி செய்கிறார்கள். அந்த மாதிரி புதிய பழக்க வழக்கம், புதிய சம்மந்தம் இருந்தும் தன்னை சென்ற கல்பத்தைச் சேர்ந்த பழைய அதிகாரி ஆத்மா என்று நினைத்து நடந்து கொண்டிருக்கிறார்கள். எனவே தன்னை பரிவர்த்தனை செய்வதின் விசேஷத்திற்காக விசேஷமான வாழ்த்துக்கள்! அவர்கள் பாப்தாதாவை எவ்வளவு அன்போடு நினைவு செய்கிறார்கள். அதுவும் பாப்தாதாவிடம் எப்பொழுதுமே வந்து சேர்கிறது. தன்னை மறந்து தந்தையைத் தான் எப்பொழுதும் ஒவ்வொரு விஷயத்திலும் நினைவு செய்கிறார்கள், இந்த விசேஷ பரிவர்த்தனை (மாற்றம்) இருக்கிறது. மேலும் இதே அன்பின் ஆதாரத்தில் நடந்து கொண்டிருக்கிறார்கள். இந்த

அன்பு தான் பாலனை செய்து கொண்டிருக்கிறது. சூட்சும அன்பின் பாலனை தான் முன்னேற்றிக் கொண்டிருக்கிறது. நல்லது.

யாரெல்லாம் அன்பு நினைவுகள் அனுப்பியிருக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் அன்பின் கடல் தந்தையும் அன்பு என்ற பையை முழுமையாக நிரப்பி அன்பு நினைவுகள் கொடுக்கிறார். பாரதவாசி குழந்தை களும் குறைந்தவர்கள் அல்ல. பாரதத்தின் பாக்கியத்தையோ வெளிநாட்டினர் பாடிப் பாடி குஷி அடைகிறார்கள். பாரதத்தைச் சேர்ந்தவர்கள் விழித்தார்கள். அதனால் தான் வெளிநாட்டினரையும் எழுப்பினார்கள். எழுப்பியவர் களோ பாரதத்தைச் சேர்ந்தவர்கள் தான். ஒருவேளை வெளிநாட்டிலும். இந்த அனைவர்களும் (பாரதவாசிகள்) இல்லாமல் இருந்திருந்தார்கள் என்றால் இத்தனை சென்டர்கள் வெளிநாட்டில் எப்படி வந்திருக்க முடியும்? இதற்கான பொறுப்பாளர்கள் நாலாபுறங்களிலும், அனைத்து பக்கங்களிலும் பரவி இருக்கிறார்கள். சென்டரையும் எவ்வளவு காலத்திற்குள் திறக்கிறார்கள். பிறந்தார்கள், கொஞ்சம் பெரியவர்கள் ஆனார்கள், பிறகு சென்டர் திறந்தார்கள். அதுவும் தன்னுடைய கால்களிலேயே நின்று கொண்டு திறக்கிறார்கள். வேறு எந்த ஆதாரத்திலும் அல்ல. அழைப்பு கிடைக்க வேண்டும் என்ற இந்த ஆதாரமும் இல்லை. ஸ்தூலம் மற்றும் சூட்சுமம் இரண்டையும் ஈடுபடுத்தி, தைரியத்துடன் வைத்து சென்டர் திறந்து விடுகிறார்கள். மற்றபடி அவர்களின் பாலனை செய்வது உங்கள் அனைவரின் பொறுப்பு. தைரியம் வைப்பதில் பின்னடைவதில்லை. உதவி கொடுப்பது தந்தையின் கூடவே உங்கள் அனைவரின் கடமை ஆகும்.

ஆழமான ஞானத்தைக் கேட்டு குஷி அடைந்து விட்டீர்கள். யோகா மற்றும் அன்பின் ஆதாரத்தில் சென்று கொண்டிருந்தீர்கள், ஆனால் இப்பொழுது ஞானத்தின் ஆழத்தைத் தெரிந்து கொண்டீர்கள். இது இன்னும் இவர்களின் சேவைக்கு பொறுப்பாளர் ஆக்கும். மனம் தயாராக வேண்டும் அதற்காக ஞானத்தின் ஆழம் வேண்டும். ஞானம் மற்றும் தந்தை இந்த இரண்டின் உணர்வை ஏற்படுத்துவது என்ற இந்த ரிசல்ட் நன்றாக இருக்கிறது. இங்கிருந்து யாராவது சென்றார்கள் என்றால் அவர்கள் எவ்வளவு குஷி அடைந்து விடுகிறார்கள். ஏதோ ஆகாயத்திலிருந்து நட்சத்திரம் கீழே வந்து விட்டது மாதிரி அனுபவம் செய்கிறார்கள். நல்லது.

தாதி அவர்கள் மற்றும் ஜானகி தாதியுடன் சந்திப்பு -

உங்கள் இருவரிலும் மூன்றாவது மூர்த்தி (தீதி) நிரம்பியிருக்கிறார். தந்தைக்குச் சமமாகவோ இருக்கவே இருக்கிறீர்கள். ஆக வேண்டும் என்பதல்ல, இருக்கவே இருக்கிறீர்கள். அந்த மாதிரி அனுபவம் ஆகிறதா? எப்படி தந்தை பிரம்மாவின் ஆதாரத்தை எடுத்து சேவை செய்கிறார் அதே போல் நீங்களும் தந்தையின் மாத்தியம் ஆவீர்கள். தற்சமயம் தந்தை மாத்தியம் மூலமாக செய்விப்பவர் தன்னுடைய காரியத்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் விசேஷமான மாத்தியம். பிரம்மாவின் ஒளி வடிவமான உடல் மூலமாக மேலும் உங்களுடைய பௌதீகஉடல் மூலமாக காரியத்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார். பல கோடி மடங்கை விட அதிகமாக பாப்தாதா ஒவ்வொரு விநாடியும் நினைவு செய்கிறார் மற்றும் அன்பு கொடுக்கிறார். நீங்கள் அலங்காரம். விசேஷமாக தந்தையின் மற்றும் மதுபன்னின் அலங்காரம் நீங்கள். ஒவ்வொரு நேரமும் பார்த்து பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். நல்லது.

மதத் தலைவர்களின் சேவை செய்வதற்கான திட்டம் -

தர்ம தலைவர்களுக்காக விசேஷமாக அந்த ரூபம் தேவையாக இருக்கிறது. ஏனென்றால் மதங்களின் விஷயங்களிலோ அவர்களும் புத்திசாலிகள். அன்போடு கேட்கவும் செய்கிறார்கள். ஆனால் நடைமுறையில் கொண்டு வருவதில் தனக்குள் குறையை அனுபவம் செய்கிறார்கள். இன்று என்ன கூறியிருந்தோமோ அந்த சாட்சாத்காரம் ஏற்பட வேண்டும். என் எதிரில் இவர்கள் ஏதோ சாதாரண ரூபம் அல்ல என்று அனுபவம் செய்ய வேண்டும். அப்பொழுது தலை வணங்குவார்கள். அனுபவத்திற்கு பின்பு தலைவணங்கிவிடுவார்கள். வாய்மொழியினால் அல்ல. நீங்களும் மிக நல்ல காரியம் செய்கிறீர்கள், உங்களுக்கும் ஆசீர்வாதம் கிடைத்துக் கொண்டே இருக்கட்டும் என்று அதையும் கூறுவார்கள். இதைக் கூறி குஷி படுத்தி விடுவார்கள். ஆனால் இவர்கள் ஏதோ விசேஷமானவர்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும். யாரிடம் என்ன பலஹீனம் இருக்கிறதோ அதன் ஆதாரத்தில் அவர் மீது அம்பு எய்வது தான் வெற்றி அடைவது! சாஸ்திரங்களிலும் எப்பொழுது தேவதைகளுக்கு அவர்களுடைய பலஹீனம் தெரிய வந்ததோ அப்பொழுது தான் வெற்றி அடைந்தார்கள் என்ற வர்ணனையும் இருக்கிறது. இதுவும் ஆன்மீகமான விஷயம். அந்த மாதிரி தர்மத் தலைவர்களும் வருவார்கள். ஆனால் அந்த மாதிரி ஏதாவது புதுமையை எப்போது பார்க்கிறார்களோ அப்பொழுது தான் வருவார்கள். இப்பொழுது ஞானம் நன்றாக இருக்கிறது என்று மட்டும் கூறுகிறார்கள்.

நீங்களும் சரி தான், நாங்களும் சரி தான் என்று கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் வாயிலிருந்து இது ஒரே ஒரு வழி தான் என்பது வெளியாக வேண்டும். அனேக வழிகள் இருக்கின்றன, அதில் உங்களுடையதும் ஒரு வழி என்ற எண்ணம் மாறி விட வேண்டும். இங்கிருந்து தான் முக்தி மற்றும் ஜீவன்முக்தி கிடைக்க முடியும் என்ற உணர்வு ஏற்படும் பொழுது தான் தலைவணங்குவார்கள். எனவே இப்பொழுது ஏதாவது புதுமை இருக்க வேண்டும்.

குடும்ப வாழ்க்கையில் மிகவும் லயித்துப் போய் விட்டீர்கள், ஆனால் எப்படி மற்றவர்களிடம் குடும்ப வாழ்க்கையிலும் இருக்க வேண்டும்? இல்லறத்தில் இருந்து கொண்டே விலகிய நிலையிலும் இருக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள். இந்த பாடத்தையே தினசரி உங்களுக்கு கற்பியுங்கள். இல்லறமோ வளரத்தான் வேண்டும். ஆனால் அதில் இருந்து கொண்டே விலகியிருக்க வேண்டும் என்பது அவசியமாக இருக்கிறது. இதில் கொஞ்சம் கவனம், மேலும் இந்த விஷயத்தை அடிக்கோடிட வேண்டும். ஒவ்வொருவரும் அவரவர்களின் சேவையில் பிஸியாகி விட்டீர்கள். ஆனால் எல்லைக்கப்பாற்பட்ட உலகத்தின் போதை இருக்க வேண்டும். இவை அனைத்தையும் கவனித்துக் கொண்டே புத்தி எல்லைக்கப்பாற்பட்ட சேவையில் பிஸியாக இருப்பதற்காக ஃப்ரீயாக இருக்க வேண்டும். உடல், மனம், பணம், செல்வம், புத்தி அனைத்தும் தன்னுடைய படைப்பின் மீது அதாவது தன்னுடைய குழந்தைகள் மீது மிக அதிகமாக ஈடுபட்டிருக்கிறது. எப்படி பிரம்மா பாபாவைப் பார்த்தீர்கள்? அனைத்து காரியங்களையும் செய்வித்துக் கொண்டே தன்னை எப்பொழுதும் ஃப்ரீயாக வைத்தார். ஒருபொழுதும் தான் பிஸியாக இருப்பதின் அடையாளம் அவருடைய முகத்தில் வரவில்லை. பிராமண பரிவாரத்தின் பொறுப்பு இருந்த போதிலும் புத்தியில் என்ன இருந்தது? எல்லைக்கப்பாற்பட்ட உணர்வு. சக்தி கொடுக்க வேண்டும், பாலனை செய்ய வேண்டும். ஆத்மாக்களை எழுப்ப வேண்டும். இதே கவனம் தான் இருந்தது. எனவே அந்த நிலை இப்பொழுது இருக்க வேண்டும். அதன் குறை இருக்கிறது. ஒவ்வொருவரும் தந்தைக்குச் சமமாக லைட் ஹவுஸ் ஆக வேண்டும். அந்த மாதிரியான சூழ்நிலையை நெருக்கமான குழந்தைகள் ஒன்றாகச் சேர்ந்து உருவாக்க வேண்டும். எங்கு சென்றாலும் அவர்களுக்கு லைட், சக்தி, ஊக்கம், உற்சாகம் கிடைக்க வேண்டும். எந்தக் காரியத்தை சாதாரண ஆத்மாக்கள் செய்கிறார்களோ அதைச் செய்யாதீர்கள். சாகார பாபாவின் பேச்சு, எண்ணம், பார்வை, உள்உணர்வு வேறுபட்டதாக இருந்தது இல்லையா? சாதாரணமாக இல்லை. எனவே அந்த மாதிரியான நிலையை உருவாக்குங்கள். இதற்காகத் தான் சேவை நின்று

கொண்டிருக்கிறது. செலவு அதிகம், உழைப்பு அதிகம் ஆனால் எத்தனை பேர் உருவாகிறார்கள்?

இப்பொழுது நேரத்திற்குத் தகுந்தாற்போல் அட்வான்ஸ் பார்ட்டியைச் சேர்ந்தவர்கள். தீவிரம் காட்டுகிறார்கள் என்றால் சாகார உலகத்தில் இருப்பவர்களிடமோ இன்னும் அதிவேகம் இருக்க வேண்டும். அனைத்தும் திடீரென்று நடக்கும், தேதி கூறப்பட மாட்டாது. அவசியம் சோதனை வரும். உங்கள் அனைவரின் எண்ணங்களை சோதிப்பவர்களும் வருவார்கள். சோதிப்பதற்காக வருவார்கள். எந்த அளவு பிரத்யக்ஷம் ஆகுமோ அந்த அளவு இந்த அனைத்து சோதனைகளும் வரும். இந்த யோகா மற்றும் அந்த யோகா இந்த ஞானம் மற்றும் அந்த ஞானத்தில் என்ன வித்தியாசம் இருக்கிறது என்பதை நடைமுறையில் வாழ்க்கையில் சோதனைசெய்வார்கள். நீங்கள் சொல்லும் விஷயத்தின் மீது அல்ல. அதற்காக முன்பாகவே நீங்கள் அந்த அளவு தயார் நிலையில் இருக்க வேண்டும். 84-ம் ஆண்டு ஏதாவது நடக்கத் தான் செய்யும். சோதனைவரும், செய்தியை பரப்புவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு இது தான் வழி. எப்படி தொடக்கத்தில் நடந்து சென்று கொண்டிருக்கிறீர்கள், ஆனால் உங்களுடைய மனநிலை அந்த மாதிரி இருக்க வேண்டும், அதனால் ஏதோ ஒளி சென்று கொண்டிருக்கிறது என்று மற்றவர்கள் நினைக்க வேண்டும் என்ற இந்த பயிற்சியை செய்தீர்கள். அவர்களுக்கு உடலில் தென்படக் கூடாது. எப்பொழுது முதன்முதலில் நண்பர்கள், உறவினர்களிடம் சென்றீர்கள் என்றால் உங்களுக்கு என்ன சோதனை இருந்தது. அவர்கள் உடலைப் பார்த்தார்களா, ஒளியைப் பார்த்தார்களா? மகளைப் பார்க்கக் கூடாது, ஆனால் தேவியாகப் பார்க்க வேண்டும். இந்தப் பரீட்சை உங்களுக்கு கொடுக்கப்பட்டது தான் இல்லையா. ஒருவேளை உறவின் ரூபத்தில் பார்த்தார்கள், மகள், மகள் என்று கூறினார் என்றால் தோல்வி அடைந்தீர்கள். எனவே அந்த மாதிரி பயிற்சி வேண்டும். மிக மோசமானநேரமோ வந்து கொண்டு இருக்கிறது, ஆனால் உங்களுடைய நிலை மற்றவர்கள் உங்களைப் பார்த்து அவர்களுக்கு எப்பொழுதும் உங்களுடைய ஒளியின் ரூபம் தான் தென்பட வேண்டும். அந்த மாதிரி உங்களுடைய நிலை இருக்க வேண்டும். இதில் தான் உங்களுடைய பாதுகாப்பு இருக்கிறது. உள்ளே வந்து அவர்கள் ஒளியின் கோட்டையைப் பார்க்கட்டும். நம்முடைய ஈஸ்வரிய சேவையில் ஈடுபடக்கூடிய செல்வமும் அப்படியே ஏன் கைவிட்டுச் செல்ல வேண்டும், அவர்களுக்கு அலமாரி தென்படக்கூடாது. ஆனால் ஒளியின் கோட்டையைப் பார்க்கட்டும். இந்த அளவு பயிற்சி வேண்டும். சக்தி ரூபத்தின் பொலிவைஅதிகரிக்க வேண்டும். சாதாரணமாகத் தென்படக்கூடாது. இந்த இலட்சியம்

இருக்க வேண்டும். அனேக விதமான தாக்குதல் இருக்கும் - அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களும் தாக்குவார்கள், தீய பார்வை உள்ளவர்களும் தாக்குவார்கள், இயற்கையின் சேதங்களும் தாக்கும், நோய்களின் தாக்குதல் இருக்கும். ஆனால் இவை அனைத்திலிருந்தும் பாதுகாப்பாக ஆவதற்கான வழி - அனன்யம் ஆக வேண்டும் அதாவது எதை அன்னியர்கள் யாரும் செய்ய முடியாதோ அதைச் செய்ய வேண்டும். நான் அனன்யமானவன் என்ற இந்த நினைவை மட்டும் வைத்தீர்கள் என்றால், அன்பானவராகவும் மேலும் விலகியிருப்பவராகவும் இருப்பீர்கள். நல்லது.

84-ம் ஆண்டின் மகாநாட்டின் வெற்றிக்காக பாப்தாதாவின் மகாவாக்கியங்கள் -

எந்த அளவு முடியுமோ அந்த அளவு அமைதியின் சூழ்நிலை இருக்கட்டும், இது ஈஸ்வரிய ஞானம், இது ஈஸ்வரனின் ஸ்தானம் என்று இந்த அனுபவம் செய்து செல்லட்டும். முழுமையாக அனுபவம் செய்விப்பதற்கான லட்சியம் இருக்க வேண்டும். அந்த மாதிரி சூழ்நிலை இருக்க வேண்டும். வார்த்தை ஜாலங்களில் செல்லாமல் பேசிக் கொண்டே அனுபவம் செய்வித்துக் கொண்டே இருங்கள். இது ஈஸ்வரிய மார்க்கம் என்று அனைவரின் வாயிலிருந்து வெளியாக வேண்டும் என்ற இந்த இலட்சியத்தை வையுங்கள். ஈஸ்வரன் வந்து விட்டார். இதுவோ மிகவும் நல்லது, இதையோ கூறுகிறார்கள். ஆனால் ஈஸ்வரன் படிப்பித்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் கூற வேண்டும். ஞானம் நன்றாக இருக்கிறது, ஆனால் ஞானத்தை கொடுப்பவர் யார்? என்ற அதை அனுபவம் செய்ய வேண்டும். இப்பொழுது அந்த அஸ்திவாரத்தை போடுங்கள். எப்பொழுது விதை மேலே வந்து விடுகிறதோ அப்பொழுது முடிவு ஏற்படும். விதை மேலே வரவில்லை என்றால் மரத்தில் எப்படி மாற்றம் ஏற்படும். எப்பொழுது இந்த ஸ்தானத்திற்கு தன்னுடைய ஆர்வத்தோடு வருகிறார்கள் என்றால், இந்த ஸ்தானத்தின் விசேஷம் என்ன இருக்கிறது அதை அவர்கள் பார்க்கட்டும் மற்றும் அனுபவம் செய்யட்டும். நீங்கள் அவர்களுடைய கண்ணோட்டத்தைப் பார்த்து தன்னுடைய கண்ணோட்டத்தை மாற்றாதீர்கள். ஆனால் உங்களுடைய கண்ணோட்டத்தை பார்த்து அவர்கள் தங்களுடைய கண்ணோட்டத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். அந்த மாதிரி திட்டத்தை உருவாக்குங்கள். எப்பொழுது சொற்பொழிவு செய்ய வேண்டும் என்ற லட்சியம் இருக்கிறது என்றால் அதற்கான பாய்ன்ட்டுகளின் பக்கம் கவனம் செல்லும். ஆனால் தந்தையை வெளிப்படுத்த வேண்டும் என்ற லட்சியம் இருக்கிறது என்றால் தந்தை தான் தென்படுவார். எப்படி லட்சியம் இருக்குமோ அந்த மாதிரியே ரிசல்ட் வெளியாகும். நல்லது.

வரதானம் :

கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தைத் தெரிந்து மாயாவை வென்றவர் ஆகக்கூடிய மாஸ்டர் மூன்று காலங்களையும் தெரிந்தவர் ஆகுக.

எந்தக் குழந்தைகள் மூன்று காலங்களையும் தெரிந்திருக்கிறார்களோ அவர்கள் ஒருபொழுதும் மாயாவிடம் தோல்வி அடைய முடியாது. ஏனென்றால் தற்சமயம் என்னவாக இருக்கிறது, மேலும் எதிர்காலத்தில் என்ன நடக்க போகிறது என்ற இந்த இரண்டுமே மூன்று காலங்களை தெரிந்த ஆத்மாவின் புத்தியில் தெளிவாக இருக்கும். என்னவாக இருக்கிறேன், மேலும் என்ன ஆகப்போகிறேன், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் இரண்டின் போதைஅவர்களுக்கு இருக்கும். அந்த போதையின் குஷியில் பறந்து கொண்டே இருப்பார்கள். எனவே அவர்களுடைய கால்கள் பூமியிலிருந்து மேலே இருக்கும். அவர்கள் உடல், உடலின் சம்மந்தம், உடலின் பழைய பதார்த்தங்களின் ஈர்ப்பில் வருவதில்லை.

சுலோகன் :

யாரிடம் சரளத்தன்மையின் குணம் இருக்கிறதோ அவருக்கு கூட்டத்தில்

ஓம்சாந்தி

03.12.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" சங்கமயுக பிராமணர்களின் சிரேஷ்ட பாக்கியம் "

இன்று இரத்தின வியாபாரி தந்தை தன்னுடைய வியாபாரம் செய்யும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்து குழந்தைகளும் ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். யாருடன் ஒப்பந்தம் செய்தீர்கள்? மேலும் யாரெல்லாம் செய்தார்கள்? உலகின் கணக்குப்படியோ மிகவும் கள்ளம் கபடமற்ற குழந்தைகள் ஆனால் கள்ளம் கபடமற்ற குழந்தைகள் சாதுர்யமான விவேகம் நிறைந்த தந்தையைத் தெரிந்து கொண்டார்கள். அப்படியானால் வெகுளியாக ஆனார்களா அல்லது சாதுர்யமானவர்களாக ஆனார்களா? உலகத்தினர் யார் தன்னை அனேக விஷயங்களில் சாமர்த்தியமானவர்கள் என்று நினைக்கிறார்களோ அவர்கள் மனதில் உங்கள் அனைவரையும் வெகுளியானவர்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால் நீங்களோ அவர்களை வெகுளியானவர்கள் என்று கூறுகிறீர்கள். ஏனென்றால், சாதுர்யமான - விவேகமான தந்தையை தெரிந்து கொள்வதற்கான புத்திசாலித்தனம், சாதுர்யம் அவர்களிடம் இல்லை. நீங்கள் மூலத்தைத் தெரிந்து கொண்டீர்கள் மேலும் அவர்கள் விஸ்தாரத்தில் சென்று கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அனைவரும் ஒருவரில் பல கோடி மடங்கு அடைந்தீர்கள். மேலும் அவர்கள் கோடிகளை எண்ணிக் கொண்டே இருந்து விடுகிறார்கள். தெரிந்து கொள்வதற்கான கண், எதை சிரேஷ்டஞானத்தின் கண் என்று கூறுகிறோம், அது ஒவ்வொரு கல்பத்திலும் யாருக்கு பிராப்தி ஆகிறது? வெகுளியான ஆத்மாக்கள் உங்களுக்கு ஆகிறது. அவர்கள் என்ன மற்றும் ஏன், அப்படி மற்றும் இப்படியின் விஸ்தாரத்தில் தேடிக்கொண்டே இருந்து விடுகிறார்கள். மேலும் நீங்கள் அனைவரும் 'அவர் தான் எங்களுடைய தந்தை', என்னுடைய பாபா என்று கூறி இரத்தின வியாபாரியுடன் ஒப்பந்தம் செய்து விட்டீர்கள். ஞானக்கடல் என்று கூறினாலும், இரத்தின வியாபாரி என்று கூறினாலும், அவர் இரத்தினங்களைத் தட்டில் நிரப்பி நிரப்பி கொடுத்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் அந்த இரத்தினங்களுடன் விளையாடுகிறீர்கள். அந்த இரத்தினங்களினால் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள், இரத்தினங்களில் ஊஞ்சல் ஆடுகிறீர்கள், இரத்தினமே இரத்தினம் தான், எத்தனை இரத்தினங்கள் கிடைத்திருக்கின்றன என்று கணக்குப் போடமுடியுமா? அமிர்தவேளையில் கண் திறந்தவுடனேயே தந்தையுடன் சந்திப்பு செய்து கொண்டே இரத்தினங்களோடு விளையாடுகிறீர்கள் இல்லையா? முழு நாளும் என்ன வியாபாரம் செய்கிறீர்கள்? இரத்தினங்களின் வியாபாரம் செய்கிறீர்கள் இல்லையா? புத்தியில் ஞான இரத்தினங்களின் பாய்ன்ட்டுகளை எண்ணுகிறீர்கள் தான் இல்லையா? அந்த மாதிரி நீங்கள் இரத்தினங்களின் வியாபாரி இரத்தினங்களின் சுரங்கங்களின் எஜமானர்கள். எந்த அளவு காரியத்தில் ஈடுபடுத்துவீர்களோ அந்த அளவு அதிகரித்துக் கொண்டே இருக்கும். ஒப்பந்தம் செய்வது என்றால் அனைத்தும் நிறைந்தவர் ஆவது. ஒப்பந்தம்

செய்யத் தெரியுமா? ஒப்பந்தம் செய்து விட்டீர்களா அல்லது இப்பொழுது செய்ய வேண்டுமா? ஒப்பந்தம் செய்பவர்கள் வரிசைக்கிரமமாக இருக்கிறார்களா அல்லது அனைவருமே நம்பர் ஒன்னா? அனைவரின் லட்சியமோ நம்பர் ஒன் தான். ஆனால் நம்பர் ஒன் எப்பொழுதும் இரத்தினங்களில் அந்த அளவு பிஸியாக இருப்பார். அவரால் வேறு எந்த விஷயங்களைப் பார்ப்பதற்கும், கேட்பதற்கும் மேலும் யோசிப்பதற்கும் நேரமே இருக்காது. மாயாவும் பிஸியாக இருப்பதைப் பார்த்து திரும்பிச் சென்று விடும். மாயாவை அடிக்கடி விரட்டுவதற்கான கடின முயற்சி செய்ய வேண்டியதாக இருக்காது. அந்த மாதிரி இன்று பாப்தாதா ஒரு பக்கம் மிகப்பெரிய பெயர் பெற்ற அறிவு நிறைந்தவர்கள் என்று கூறப்படும் குழந்தைகளை அவர்கள் என்னென்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்துக்கொண்டிருந்தோம். அவர்களிடம் அனேக விஷயங்களைத் தெரிந்து கொண்டுள்ளார்கள். ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ளவில்லை. அதற்கு மாறாக பிராமணக் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம். இருவர்களின் வேற்றுமையைப் பார்த்து பாப்தாதாவும் ஒரு பாடலைப் பாடிக் கொண்டிருந்தார். நீங்களும் அந்தப் பாடலைப் பாடுகிறீர்கள். அந்தப் பாடல் பிரம்மா பாபாவிற்கும் மிகவும் பிரியமானது, பாப்தாதா குழந்தைகளுக்காக பாடிக் கொண்டிருந்தார்கள், அதை இன்று பிரம்மா பாபாவும் மிகவும் மகிழ்ச்சியில் பாடிக் கொண்டிருந்தார் - எவ்வளவு வெகுளியான, எவ்வளவு அன்பான இனிமையிலும் இனிமையான குழந்தைகளே! எப்படி தந்தைக்காக நீங்கள் பாடுகிறீர்கள் இல்லையா, அவ்வாறே தந்தையும் குழந்தைகளுக்காக இதே பாடலைப்பாடுகிறார். இதே நினைவு சொரூபத்தில் யாருடைய பிரியமானவர்கள், யாருடைய இனிமையானவர்கள், யார் குழந்தைகளுக்காக பாடல் பாடுகிறார் என்ற இந்த நினைவு எப்பொழுதும் பணிவானவராக ஆக்கி, சுய அபிமானத்தின் போதையில் நிலைத்திருக்கச் செய்து விடுகிறது. இந்த போதையில் எந்த நஷ்டமும் இல்லை. அந்த அளவு போதை இருக்கிறதா? அரைக்கல்பம் நீங்கள் பகவானின் பாடலைப் பாடினீர்கள். மேலும் இப்பொழுது பகவான் பாடலைப் பாடிக்கொண்டிருக்கிறார். இரண்டு பக்கங்களின் குழந்தைகளைப் பார்த்து இரக்கம் மற்றும் அன்பு இரண்டும் வந்து கொண்டிருந்தன.

பிரம்மா பாபாவிற்கு இன்று பாரதத்தின் மற்றும் வெளிநாட்டின் ஒன்றும் அறியாத குழந்தைகளின் நினைவு விசேஷமாக வந்து கொண்டிருந்தது. உலகத்தினரோ அவர்களை வி.ஐ.பி என்று கூறுகிறார்கள். ஆனால் தந்தை அந்தக் குழந்தைகளை வி.ஐ.பி அதாவது வெரி இன்னொசன்ட் பெர்சன் அதாவது மிகவும் ஒன்றும் தெரியாதவர் என்ற இந்த ரூபத்தில் பார்த்துக் கொண்டிருந்தார். நீங்கள் தெரிந்தவர்கள் அவர்கள் ஒன்றும் அறியாதவர்கள், ஆனால் இப்பொழுது அவர்களுக்கும் ஆறுதல் கொடுங்கள். ஆறுதல் கொடுக்கத் தெரியுமா? உங்களுடைய வரிசையில் அவர்களுடைய எண் இப்பொழுது பின்னுக்கு இருக்கிறதா அல்லது முன்னால் இருக்கிறதா? என்ன நினைக்கிறீர்கள் (அமைதியின் யோகயிற்சி செய்வித்தார்).

அந்த மாதிரி விசேஷமாக அமைதியின் சக்தியை அந்த ஆத்மாக்களுக்குக் கொடுங்கள். அவர்களுக்கு

ஏதாவது ஆதரவு ஏதாவது புதிய வழி கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் எழுகிறது இப்பொழுது அந்த விருப்பம் உருவாகிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது வழி காண்பிப்பது உங்கள் அனைவருடைய காரியம் ஆகும். வழி காண்பிப்பதற்கு 'ஒற்றுமை மற்றும் திடத்தன்மை' என்ற இரண்டு வழிகள் இருக்கின்றன. உங்கள் குழுவின் சுபபாவனை அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு பாவனையின் பலனைக் கொடுப்பதற்குக் காரணமாக ஆகும். அனைவரின் நல்ல எண்ணங்கள் அந்த ஆத்மாக்களிலும் நல்ல காரியம் செய்வதற்கான எண்ணத்தை உருவாக்கும். (சுவாகா-அர்ப்பணம்) இதே விதியை இப்பொழுதிலிருந்து கடைபிடியுங்கள். இருந்தும் பெரிய காரியத்தின் வெற்றி, எப்பொழுது அனைவரின் நல்ல எண்ணங்களின் ஆகுதி போடப்படுமோ அப்பொழுது தான் ஆகும். புரிந்ததா? பாப்தாதாவோ அனைவருக்காகவும் எந்தவொரு குழந்தையும் வஞ்சிக்கப்பட்டு இருந்து விடக்கூடாது என்று தான் கூறுகிறார். நீங்கள் அனைவருமோ அனைத்தும் நிரம்பியவர்களாக ஆகிவிட்டீர்கள் இல்லையா. நல்லது.

அந்த மாதிரி சிரேஷ்ட கொடுக்கல், வாங்கல் செய்யக்கூடிய சிரேஷ்ட வியாபாரி குழந்தைகளுக்கு, எப்பொழுதும் இரத்தினங்களினால் வளர்ந்து கொண்டு மேலும் விளையாடக்கூடிய மாஸ்டர் இரத்தின வியாபாரி தந்தையின் மிக அன்பிற்குரிய எப்பொழுதும் சகயோகி, கண்டெடுக்கப்பட்ட, தெரிந்து கொள்ளும் கண் உள்ள, நிரந்தர சேவாதாரி, எப்பொழுதும் என்னுடைய பாபா என்ற பாடலைப் பாடக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

## பார்ட்டிகளுடன் சந்திப்பு

மதராசில் (தமிழ் நாடு) வசிப்பவர்களுடன் சந்திப்பு - அனைவரும் ஊக்கம் உற்சாகத்தில் இருக்கிறீர்கள் இல்லையா? அனைவரின் மனதில் தந்தையை எப்படி வெளிப்படுத்துவது என்ற ஒரே ஊக்கம் உற்சாகம் இருக்கிறது. இப்பொழுதோ மேடையையும் தயார் செய்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? பிரத்யக்ஷத்தின் கொடியை பறக்கவிடுவதற்காக மேடையை தயார் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஸ்தூல கொடியையோமற்றவர்களும் பறக்க விடுகிறார்கள், நீங்கள் அனைவரும் எந்தக் கொடியை பறக்க விடுவீர்கள்? துணியினாலான கொடியை பறக்க விடுவீர்களா, என்ன செய்வீர்கள்? அதுவோ ஒரு காரணத்திற்காக செய்கிறீர்கள். ஆனால் உண்மையான எந்தக் கொடியை பறக்க விடுவீர்கள்? தந்தையைப் பிரத்யக்ஷம் செய்யும் கொடியை. தந்தை வந்திருக்கிறார் என்ற இந்த செய்தியை பறப்புவதற்கான கொடியைப் பறக்க விடுவீர்கள். இதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? அனைத்து வஞ்சிக்கப்பட்டிருக்கும் ஆத்மாக்களுக்கு ஒளி கிடைத்து விட வேண்டும். பாதை கிடைத்து விட வேண்டும். இதே முயற்சியைத் தான் அனைவரும் செய்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் வரும் காலத்திலும் செய்யுங்கள். இப்பொழுதிலிருந்து இந்த அலையை பரப்பினீர்கள் என்றால் தான் அந்த நேரம் நாலாபுறங்களிலும் இந்த அலையை பரப்ப முடியும். அந்த மாதிரி ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் இல்லையா? இதுவரையிலும் எங்கேயுமே நடக்காததை நாங்கள்

செய்து காண்பிப்போம் என்ற இதை எப்பொழுதும் யோசியுங்கள். ஏதாவது புதியதாக செய்ய வேண்டும். அனைத்து ஆத்மாக்களுக்கும் அறிமுகம் கிடைக்க வேண்டும் மேலும் அவர்கள் தந்தை வந்து விட்டார் என்று புரிந்து கொள்ள வேண்டும், வர்ணனை செய்ய வேண்டும், அனுபவம் செய்ய வேண்டும். இது தான் புதிய விஷயம். நல்லது.

அழைக்கப்பட்ட சகோதரசகோதரிகளின் குரூப்புடன் சந்திப்பு -

நீங்கள் அனைவரும் தன்னை விசேஷ ஆத்மாக்கள் என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா? விசேஷ ஆத்மாக்களாக இருக்கிறீர்களா அல்லது இனி தான் ஆக வேண்டுமா? நீங்கள் செய்வோம், பார்ப்போம், யோசிப்போம் என்று அந்த மாதிரி போம், போம் என்ற மொழி பேசுபவர்களாக இல்லை தான் இல்லையா! நம் அனைவரின் மகத்துவம் எவ்வளவு என்று தன்னுடைய மகத்துவத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். எந்த அளவு தந்தை குழந்தைகளின் மகத்துவத்தை தெரிந்திருக்கிறாரோ அந்த அளவு குழந்தைகள் தங்களுடைய மகத்துவத்தை எப்பொழுதும் நினைவு செய்வதில்லை. தெரிந்திருக்கிறார்கள், ஆனால் நினைவு செய்வதில்லை. ஒருவேளை நினைவு இருக்கிறது என்றால், எப்பொழுதுமே சக்திசாலியானவர் ஆகி, மற்றவர்களையும் சக்திசாயானவர்களாக ஆவதற்கு ஊக்கம் உற்சாகத்தை அதிகப்படுத்துவதற்காக பொறுப்பாளர் ஆகிறார். அந்த மாதிரி நீங்கள் பொறுப்பாளர்கள் தானே? கடந்ததை கடந்ததாக ஆக்கிவிட்டீர்களா? கடந்ததை மறந்து விட்டீர்கள் மேலும் நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை நிரந்தரமாக ஊக்கம் உற்சாகம் உள்ளதாக ஆக்கிவிட்டீர்கள். நடைமுறையில் இருந்து கொண்டே சாதாரண வாழ்க்கை வாழ்பவராக தன்னை அனுபவம் செய்கிறீர்கள், ஆனால் நீங்கள் சாதாரணமானவர்கள் இல்லை. எப்பொழுதுமே சிரேஷ்டமானவர்கள். காரிய விவகாரம் செய்தீர்கள், படிப்பை படித்தீர்கள், குடும்பத்தைக் கவனித்தீர்கள். இவை ஒன்றும் விசேஷம் இல்லை. இதுவும் சாதாரண நிலை தான். இதையோகடைசி நம்பரில் இருப்பவரும் செய்கிறார். எனவே எதை கடைசி நம்பரில் இருப்பவர் செய்கிறாரோ அதை ஆதி இரத்தினமும் செய்கிறார் என்றால், என்ன விசேஷம். ஆதி இரத்தினம் என்றால், ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தில் மற்றவர்களை விட விசேஷம் இருக்க வேண்டும். உலகத்தினரை ஒப்பிடும் பொழுது வித்தியாசமானவராக ஆகிவிட்டீர்கள், ஆனால் ஆன்மீகக் குடும்பத்திலும் யார் சாதாரண முயற்சி செய்பவர்களாக இருக்கிறார்களோ அவர்களையும் விட விசேஷம் இருக்க வேண்டும். உலகத்தின் கணக்குப்படி கடைசி நம்பரில் இருப்பவரும் விசேஷமானவர் தான்! ஆனால் ஈஸ்வரிய பரிவாரத்தில் நீங்கள் ஆதி இரத்தினம், விசேஷமானவர்கள்! அந்தக் கணக்கின் பிரகாரம் தன்னைப் பாருங்கள். பெரியவர்கள் எப்பொழுதும் சிறியவர்களுக்கு மிக நல்ல சுலபமான அறிவுரை கூறுபவர்களாக, வழி காண்பிப்பவர்களாக இருப்பார்கள். அந்த மாதிரி நீங்கள் வாய்மூலம் சொல்பவர்கள் அல்ல, ஆனால் செய்து காண்பிப்பவர்கள். எனவே உங்களுடைய ஒவ்வொரு அடியும், ஒவ்வொரு காரியமும் ஈஸ்வரிய குடும்பத்தின் ஆத்மாக்களுக்கு விசேஷமாகத் தென்பட வேண்டும். இது தான் விசேஷ ஆத்மாக்களின் கடமை இல்லையா? விசேஷ ஆத்மாக்கள் உங்களை யார் பார்த்தாலும் அவர்களுக்கு தந்தையின் நினைவு வந்து விட வேண்டும். எப்படி இங்கேயும் மதுபனில் பார்த்தீர்கள் என்றால்,

இப்பொழுது கூட சாகார ரூபத்தில் தீதி மற்றும் தாதியை பார்க்கிறீர்கள் என்றால், அவர்களுடைய காரியத்தில் விசேஷமாக என்ன நிரம்பியிருப்பதாகத் தென்படுகிறது? தந்தை தென்படுகிறார் தான் இல்லையா? இவர்களும் சாகார ஆத்மாக்கள் தான் இல்லையா? இவர்கள் பிரம்மா மாதிரி விசேஷ பாத்திரம் ஏற்று செய்பவர்களோ இல்லை, நிராகார சிவ தந்தை மாதிரியும் இல்லை, பிரம்மா மாதிரியும் இல்லை. பிராமணன். அந்த மாதிரி அவர்களும் பிராமணன், நீங்களும் பிராமணன். எனவே எப்படி அவர்கள் விசேஷமாக பொறுப்பில் இருக்கும் ஆத்மாக்கள், எப்படி பொறுப்பில் இருப்பவராக ஆனார். பொறுப்பைப் புரிந்து கொள்கிறீர்கள் தான் இல்லையா? பொறுப்பு தான் உங்களை விசேஷ ஆத்மாவாக ஆக்கியது. அந்த மாதிரியே தன்னையும் அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா. நீங்களும் பொறுப்பாளர்கள் தான் இல்லையா? அல்லது தீதி, தாதி மட்டும் தான் பொறுப்பாளர்களா? சேவை சேத்திரத்திலோ நீங்கள் தான் பொறுப்பாளர் இல்லையா? உலகில் நாலாபுறங்களிலும் அனைத்து விசேஷ ஆத்மாக்களையும் பாப்தாதா பொறுப்பாளர் ஆக்கியிருக்கிறார். சிலர் ஒரு இடத்திலும், வேறு சிலர் வேறு இடத்திலும் இருக்கிறார்கள். இந்த அளவு பொறுப்பு எப்பொழுதுமே நினைவில் இருக்க வேண்டும். எப்படி தீதி, தாதியை பொறுப்பில் இருப்பவர்களாகப் பார்க்கிறீர்கள். அதே போலவே உங்களிடமிருந்து அனைவருக்கும் அனுபவம் ஆக வேண்டும். இவர் ஆதி இரத்தினம், இவர்களிடமிருந்து எனக்கு விசேஷமான ஊக்கம் உற்சாகத்தின் பிரேரணை கிடைக்கிறது. அவர்கள் தங்களை தீதி, தாதி என்று கூறிக் கொள்வதில்லை தான் இல்லையா, நான் கூறுவதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றும் கூறுவதில்லை ஆனால் செய்யும் காரியம் இயல்பாகவே கவர்ந்திழுக்கும். அதே போலவேங்கள் அனைவரின் விசேஷ காரியம் அனைவரையும் ஈர்க்கட்டும். உங்களுக்கு அந்த அளவு பொறுப்பு உள்ளது. நீங்கள் தொய்வானவர்களாகவோ இல்லை தானே! என்ன செய்வது, எப்படி செய்வது? என்ற இரண்டு பொறுப்புக்கள் இருக்கின்றன. அந்த மாதிரி கூறுபவர்களோ இல்லை தான் இல்லையா? விட்டீர்கள் உடனே விட்டும் போயிற்று. இவ்வளவு எல்லைக்கப்பாற்பட்ட பொறுப்பு இருந்த போதும் தந்தையைப் பாருங்களேன். ஸ்தூல பொறுப்புக்களையும் பார்த்திருக்கிறீர்கள் தான் இல்லையா? சிவபாபாவின் விஷயத்தை ஒரு பக்கம் வையுங்கள், ஆனால் பிரம்மா பாபாவையோ உடலில் இருக்கும் போது பார்த்திருக்கிறீர்கள் இல்லையா? பிரம்மா பாபாவிற்கு இருந்த பொறுப்பு மாதிரி ஸ்தூலத்தில் யாருக்கும் கிடையாது. நீங்கள் கூறுவீர்கள், என்ன செய்வது? உலக சூழலில் இருக்கிறோம் என்று நீங்கள் யோசிக்கிறீர்கள். வைப்ரேஷன் மிகவும் மோசமாஇருக்கிறது. கொக்குகள் எச்சம் போட்டுக்கொண்டே இருக்கிறது. நாலாபுறங்களிலும் அசுர சம்பிரதாயம், ஆனால் பிரம்மா பாபா அசுர சம்பிரதாயத்திற்கு மத்தியத்திலும் விலகியிருப்பவராக அன்பானவராக ஆகிக் காண்பித்தார் இல்லையா? எனவே தந்தையைப் பின்பற்றி நடங்கள். இப்பொழுது என்ன செய்வீர்கள்? இங்கிருந்து சென்றீர்கள் என்றால், அங்குள்ள அனைவரும், எங்களுடைய ஊக்கம் உற்சாகத்தை அதிகரிக்கக்கூடிய ஸ்தம்பம் வந்து விட்டார் என்று அனுபவம் செய்ய வேண்டும். புரிந்ததா? அந்த மாதிரி நீங்கள் தந்தையின் நம்பிக்கை நட்சத்திரங்கள், சிறு சிறு விஷயங்கள் எதையும் மனதில் வைத்துக் கொள்ளாதீர்கள். பெரியவர்களின் இதயம் பரந்த உள்ளமாக, பெரிய இதயமாக இருக்கும். சிறிய இதயம் இருக்காது. எப்படி பிரம்மா பாபா அனைவரின் பலஹீனங்களையும் உள்ளடக்கி சிரேஷ்டமானவர்களாக ஆக்கிவிட்டார், அதே போன்று நீங்களும் அதற்கு பொறுப்பாளர்கள்.

ஒருபொழுதும் இவர்கள் அந்த மாதிரி செய்து கொண்டே இருக்கிறார்கள், இவரோ சொல்வதைக் கேட்பதே இல்லை என்று யோசிக்காதீர்கள். கேட்காதவர்களையும் கேட்பவர்களாக ஆக்குவது உங்களுடைய வேலை, அவர்கள் சிறியவர்கள், ஆனால் நீங்கள் பெரியவர்கள். பெரியவர்கள் மாற வேண்டும், சிறியவர்களோ குறும்புக்காரர்களாகத் தான் இருப்பார்கள். எனவே அவர்களுடைய பலஹீனங்களை பார்க்காதீர்கள், பெரியவர்களாகி பலஹீனங்களைப் உள்ளடக்குபவர்களாக, தந்தைக்குச் சமமானவராக ஆக்குபவர்களாக ஆக்குங்கள். இந்த அளவு பொறுப்பு உங்கள் அனைவருக்கும் இருக்கிறது. இந்த பொறுப்பை மீண்டும் நினைவூட்டுவதற்காக உங்களை அழைத்தோம். புரிந்ததா? நீங்கள் கடலின் குழந்தைகள் தான் இல்லையா! கடல் என்ன செய்கிறது? அனைத்தையும் உள்ளடக்கி விடுகிறது. அனைத்தையும் உள்ளடக்கி புத்துணர்வு அடையச் செய்து விடும். எனவே நீங்களும் அனைவரின் விஷயத்தை உள்ளடக்கி புத்துணர்வு உள்ளவர்களாக ஆக்குபவர்கள். யார் வந்தாலும் அவர் இந்த விசேஷ ஆத்மாவின் தொடர்பின் மூலம் விசேஷமான பிரபாவம் ஏற்பட்டு விட்டது என்று அனுபவம் செய்ய வேண்டும். சகயோகம் கிடைத்து விட்டது, நீங்களும் 'சகயோகம் கொடுங்கள், சகயோகம் கொடுங்கள்' என்று கூறுபவர்களாக இல்லை தான் இல்லையா? நீங்கள் சகயோகம் கொடுப்பவர்கள், எப்பொழுது தொடக்கத்திலிருந்தே சகயோகியாக ஆகியிருக்கிறீர்கள் என்றால், இறுதிவரை சகயோகம் கொடுக்கும் துணைவனாக ஆவீர்கள் இல்லையா. இத்தனை பேர் சகயோகம் கொடுக்கிறார்கள் என்றால், சிறியவர்கள் பறக்கும் நிலையில் சென்று விடுவார்கள். எந்த ஸ்தானத்திற்கு நீங்கள் சென்றாலும் அந்த ஸ்தானம் பறக்கும் ஸ்தானம் ஆகிவிடும் இல்லையா? நீங்கள் பறக்கும் கட்டில் ஆகிச் செல்லுங்கள். யார் எதிரில் அமர்ந்திருந்தாலும் தொடர்பில் வந்தாலும் அவர்பன் பறந்து விட வேண்டும். பாப்தாதாவிற்கு குஷி இருக்கிறது. எந்த குஷி இருக்கிறது? எத்தனை துணைவர்கள் இருக்கிறார்கள். எப்பொழுது சமமானவர்களைப் பார்க்கிறோம் என்றால், சமமான குழந்தைகளைப் பார்த்து தந்தைக்கு குஷி ஏற்படுகிறது. இப்பொழுது இங்கே குறைந்தவர்கள் தான் வந்திருக்கிறார்கள், இன்னும் இருக்கிறார் கள், யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ அவர்களைப் பார்த்து தந்தை குஷி அடைகிறார். இப்பொழுதோ பறக்கும் கட்டில் ஆகி அனைவரையும் பறக்க வையுங்கள். என்னுடைய சகோதரன் இந்த அளவு கடுமையான உழைப்பு செய்கிறார் என்று இரக்கம் வருகிறது தான் இல்லையா? சகயோகம் கொடுங்கள் மற்றும் பறக்க வையுங்கள். இது தான் விசேஷ ஆத்மாக்களின் சேவை. வந்திருக்கும் புதிய ஆத்மாக்களுக்கு புரிய வைப்பது. கோர்ஸ் எடுப்பது, மேளா செய்வது என்ற இவை அனைத்தையும் செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள். மேளாவிலும் விசேஷ ஆத்மாக்கள் உங்களுடைய விசேஷத்தை பார்க்கட்டும். நீங்கள் நிற்க வேண்டும் மேலும் அனைவருக்கும் ஊக்கம் வர வேண்டும். அவ்வளவு தான்! காரியம் செய்பவர்கள் விசேஷமாக ஊக்கம் உற்சாகத்தின் சகயோகத்தைத் தான் விரும்புகிறார்கள். காரியம் செய்யும் உங்களுடைய சிறிய சகோதரன் சகோதரிகள் அதிகம் வந்து விட்டார்கள். பெரியவர்கள் நீங்கள் செய்யக்கூடிய வேலை. அவர்களுக்கு அன்பு நிறைந்த திருஷ்டி கொடுப்பது, ஊக்கம் உற்சாகத்தின் கை கொடுப்பது. உங்களைப் பார்த்து தந்தையின் நினைவு வந்து விட வேண்டும். அனைவரின் வாயிலிருந்து. இவரோதந்தையின் சொரூபமாக இருக்கிறார் என்று வெளியாக வேண்டும். எப்படி இவர்கள் இருவரைப் பார்த்து (தீதி, தாதி) இவர்கள் தந்தை சொரூபமாக இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். ஏனென்றால், சேவையில்

நடைமுறையில் காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த மாதிரியே திடமான எண்ணத்தின் விழாவை அவசியம் கொண்டாடுங்கள். என்ன புரிந்ததா? உங்களுக்கே புயல்கள் வருவதில்லை தான் இல்லையா? நீங்கள் புயல்களைக் கடந்து செல்பவர்கள். புயல்களில் சிக்கிக் கொள்பவர்கள் அல்ல. நீங்கள் உதாரணமானவர்கள். உங்களைப் பார்த்து இவர்கள் மாதிரியே நடந்து கொள்ள வேண்டும், இந்த மாதிரி தான் இருக்கும் என்று அனைவரும் நினைக்கிறார்கள். எனவே அந்த அளவு கவனம் இருக்க வேண்டும். நல்லது.

வரதானம் :

தடையற்ற நிலை மூலமாக வாயுமண்டலத்தை சக்திசாலியானதாக ஆக்கக்கூடிய மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகுக.

உங்களுடைய சேவை முதலில் தன்னை தடையற்றவராக ஆக்குவது. பிறகு மற்றவர்களை தடையற்றவர்களாக ஆக்குவது. ஒருவேளை நீங்களே தடைகளின் வசமாகிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் இறுதியில் தடையற்றவராக இருக்க முடியாது. எனவே நீண்ட காலத்திற்கான தடையற்ற நிலையை உருவாக்குங்கள். பலஹீனமான ஆத்மாக்களுக்கும் தந்தை மூலமாக பிராப்தி ஆகியிருக்கும் சக்தியை கொடுத்து சக்திசாலியாக ஆக்குங்கள். நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற இந்த நிலையை அனுபவம் செய்யுங்கள். அப்பொழுது தான் வாயுமண்டலம் சக்திசாலியானதாக ஆகும்.

சுலோகன் :

யார் ராயல் தந்தையின் ராயல் குழந்தைகளோ அவர்களுடைய ஒவ்வொரு நடத்தை மூலம் ராயல் தன்மை தென்படும்.

ஓம்சாந்தி

05.12.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" சங்கமயுகம் - தந்தை குழந்தைகளின் சந்திப்பிற்கான யுகம் "

இன்று அனைவரும் சந்திப்பைக் (மேளா) கொண்டாடுவதற்காக வந்து சேர்ந்து விட்டீர்கள். இதுவே தந்தை மற்றும் குழந்தைகளின் இனிமையான சந்திப்பதற்கான மேளா. இந்த சந்திப்பு மேளாவிற்காக அனேக ஆத்மாக்கள், அனேக விதமாக முயற்சி செய்தும் முடிவற்றது, அசம்பவம் மற்றும் கடினம் என்று கூறி காத்திருப்பதிலேயே இருந்து விட்டார்கள். எப்பொழுதாவது நடந்து விடும் என்ற இதே நம்பிக்கையில் இருந்து வந்தார்கள். மேலும் இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி அன்னிய ஆத்மாக்களும் இருக்கிறார்கள், அவர்கள் எப்பொழுது நடக்கும், எப்பொழுது வருவார், எப்பொழுது சந்திப்பார் என்று அந்த மாதிரி பிரிந்திருப்பதின் பாடலைப் பாடிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் அனைவருமே எப்பொழுது என்று கூறுபவர்கள். மேலும் நீங்கள் அனைவரும் இப்பொழுது என்று கூறுபவர்கள். அவர்கள் பிரிந்திருப்பவர்கள் மேலும் நீங்கள் சகஜயோகிகள். ஒரு நொடியில் சந்திப்பை அனுபவம் செய்பவர்கள். இப்பொழுது கூட யாராவது உங்களிடம் தந்தையோடு எப்பொழுது சந்திப்பது, மேலும் எவ்வளவு நேரத்தில் நடக்க முடியும் என்று கேட்டார்கள் என்றால் நீங்கள் என்ன கூறுவீர்கள்? தந்தையை சந்திப்பது குழந்தைகளைப் பொருத்தளவில் ஒருபொழுதும் கடினமாக இருக்க முடியாது என்று ஊக்கம் உற்சாகத்தோடு கூறுவீர்கள். சகஜமான மற்றும் நிரந்தரமான சந்திப்பு. சங்கமயுகம் இருப்பதே தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பதற்கான யுகம். நிரந்தரமாக சந்திப்பில் இருக்கிறீர்கள் இல்லையா! இருப்பதே விழா அதாவது சந்திப்பு. எனவே மிகவும் பெருமிதத்தோடு சந்திக்க வேண்டும் நீங்கள் என்று கூறுகிறீர்கள். ஆனால் நாங்களோ எப்பொழுதுமே அவருடன் அதாவது தந்தையுடன் சாப்பிடுகிறோம், அருந்துகிறோம், நடக்கிறோம், விளையாடுகிறோம் மேலும் அவருடன் வளர்ந்து கொண்டிருக்கிறோம் என்று மிகுந்த பெருமிதத்துடன் கூறுவீர்கள். அந்த அளவு பெருமிதம் இருக்கிறதா? அவர்கள் பரமாத்மா தந்தையோடு அன்பு எப்படி ஏற்படுகிறது? மனம் எப்படி ஈடுபடுகிறது? என்று கேட்கிறார்கள். மேலும் உங்களுடைய இதயத்திலிருந்து, மனம் எப்படி ஈடுபடுகிறது என்பது ஒரு புறம் ! ஆனால் மனதே அவருடையதாக ஆகிவிட்டது என்ற வார்த்தை தான் வெளியாகிறது. உங்களுடைய மனமா என்ன? அதை எப்படி ஈடுபடுத்துவது என்பதற்கு! மனதை தந்தையிடம் கொடுத்து விட்டீர்கள் என்றால் யாருடையதாக ஆயிற்று. தந்தையினுடையதா அல்லது உங்களினுடையதா? எப்பொழுது

மனதே தந்தையினுடையது என்றால், பிறகு எப்படி ஈடுபடுத்துவது என்ற கேள்வியே எழ முடியாது. எப்படி அன்பு செய்வது என்ற இந்தக் கேள்வியும் எழ முடியாது. ஏனென்றால், எப்பொழுதுமே அன்பில் மூழ்கியே இருக்கிறோம். அன்பு சொரூபம் ஆகிவிட்டோம். மாஸ்டர் அன்புக் கடல் ஆகிவிட்டோம் என்றால் அன்பு செய்ய வேண்டியதாக இருக்காது, அன்பின் சொரூபம் ஆகிவிட்டோம். முழு நாளும் என்ன அனுபவம் செய்கிறீர்கள். அன்பின் அலைகள் இயல்பாகவே அடித்துக் கொண்டிருக்கிறது தான் இல்லையா? எந்தளவு ஞான சூரியனின் கிரணங்கள் மற்றும் ஒளி விழுகிறதோ அந்த அளவு அன்பின் அலைகள் கொந்தளிக்கிறது. அமிர்தவேளையில் ஞான சூரியனின் ஞான முரளி என்ன காரியம் செய்கிறது? அதிகமாக அலைகள் வீசுகிறது தான் இல்லையா. நீங்கள் அனைவருமே, எப்படி ஞானத்தின் அலைகள், அன்பின் அலைகள், சுகத்தின் அலைகள், சாந்தி மற்றும் சக்தியின் அலைகள் வீசுகின்றன என்பதின் அனுபவிகள் தான் இல்லையா? மேலும் அதே அலைகளில் மூழ்கிவிடுகிறீர்கள். இந்த ஆன்மீக ஆஸ்தியின் பிராப்தியை அடைந்து விட்டீர்கள் இல்லையா! இது தான் பிராமண வாழ்க்கை. அலைகளில் மூழ்கி மூழ்கி கடலுக்குச் சமமானவர் ஆகிவிட்டீர்கள். அந்த மாதிரி சந்திப்பை செய்து கொண்டே இருக்கிறீர்களா? அல்லது இப்பொழுது செய்வதற்காக வந்திருக்கிறீர்களா? பிராமணன் ஆகி ஒருவேளை கடலில் மூழ்கிய அனுபவம் செய்யவில்லை என்றால், பிராமண வாழ்க்கையின் விசேஷமாக என்ன இருந்தது? இந்த விசேஷத்தைத் தான் ஆஸ்தியின் பிராப்தி என்று கூறுவது. முழு உலகத்தின் பிராமணர்கள் இதே ஆன்மீக பிராப்தியின் அனுபவத்திற்கான சாதகப் பறவைகள்.

இப்பொழுது கூட அனைத்து சாதகப் பறவை குழந்தைகள் பாப்தாதாவின் எதிரில் இருக்கிறார்கள். பாப்தாதாவின் முன்பு எல்லைக்கப்பாற்பட்ட ஹால் இருக்கிறது. இந்த ஹாலும் அனைவருமே வர முடியாது. அனைத்து குழந்தைகளும் தொலைநோக்கு கண்ணாடி வைத்துக் கொண்டு அமர்ந்திருக்கிறார்கள். ஸ்தூலமாகவும் தூரத்து காட்சியை எதிரில் பார்ப்பதின் அனுபவத்தில் குழந்தைகளின் சகஜ, சிரேஷ்ட அனைத்து பிராப்திகளை பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகிறார். நீங்கள் அனைவரும் இந்தளவு மகிழ்ச்சி அடைகிறீர்களா அல்லது சில நேரம் மகிழ்ச்சியாகவும், சில நேரம் மாயாவின் கவர்ச்சியில் இருப்பவராகவும் ஆகிறீர்களா? மாயாவின் இரண்டு விதமான எண்ணங்களின் குழப்பத்தில் இருக்கவில்லையே? இரண்டு விதமான எண்ணங்களின் குழப்பம் புதைகுழி ஆக்கி விடும். இப்பொழுதோ புதைகுழியிலிருந்து விடுபட்டு இதயசிம்மாசனதாரி ஆகி விட்டீர்கள் இல்லையா? யோசித்துப் பாருங்கள், எங்கே புதைகுழி மேலும் எங்கே இதயசிம்மாசனம். உங்களுக்கு எது விருப்பம்? கதறுவதா அல்லது ஆசனத்தில் ஏறி அமருவதா? விருப்பமோ ஆசனம் தான், இருந்தும் புதைகுழியின் பக்கம் ஏன் சென்று விடுகிறீர்கள்? புதைகுழியின் அருகில் செல்வதினால் தூரத்திலிருந்தே புதைகுழி தன்

பக்கம் இழுத்து விடுகிறது.

நான் புதிய குழந்தை என்று புரிந்து கொண்டு வந்திருக்கிறீர்களா அல்லது நான் ஒவ்வொரு கல்பத்தின் அதிகாரி என்று புரிந்து வந்திருக்கிறீர்களா? புதியவர்கள் வந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அறிமுகத்திற்காக புதியவர்கள் என்று கூறப்படுகிறது. ஆனால் தெரிந்து கொள்வதிலோபுதியவர்கள் இல்லை தான் இல்லையா? புதியவராக தெரிந்து கொள்வதற்காக வரவில்லை தான் இல்லையா? தெரிந்து கொள்வது என்ற மூன்றாவது கண் கிடைத்து விட்டதா அல்லது இப்பொழுது அதை அடைவதற்காக வந்திருக்கிறீர்களா?

அனைத்து வந்திருக்கும் குழந்தைகளுக்கு பிராமண ஜென்மம் என்ற பரிசு பிறந்த நாளில் கிடைத்திருக்கிறது அல்லது இங்கு பிறந்த நாளை கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்களா? பிறந்த நாள் பரிசாக தந்தையிடமிருந்து மூன்றாவது கண் கிடைத்திருக்கிறது. தந்தையைத் தெரிந்து கொள்வதற்கான கண் கிடைத்திருக்கிறது. ஜென்மம் எடுத்தவுடனே, கண் கிடைத்தவுடனே உங்கள் அனைவரின் வாயிலிருந்தும் எந்த வார்த்தை வெளியானது? பாபா! தெரிந்து கொண்டீர்கள், அதனால் தானே பாபா என்று கூறினீர்கள். அனைவருக்குமே பிறந்த நாள் பரிசு கிடைத்திருக்கிறதா அல்லது யாருக்காவது இன்னும் கிடைக்கவில்லையா. அனைவருக்கும் கிடைத்திருக்கிறது தான் இல்லையா? பரிசு எப்பொழுதும் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டியது. பாப்தாதாவிற்கும் அனைத்து குழந்தைகளும் ஒருவர் இன்னொருவரை விட பிரியமானவர்கள். நல்லது.

அந்த மாதிரி அனைத்து அதிகாரி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் கடலின் விதவிதமான அலைகளில் மிதக்கக்கூடிய அனுபவம் நிறைந்த குழந்தைகளுக்கு, எப்பொழுதும் இதயசிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் குழந்தைகளுக்கும், எப்பொழுதும் சந்திப்பு மேளாவை கொண்டாடக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, கூடவே பாரதம் மற்றும் வெளிநாட்டின் தொலைநோக்கி கண்ணாடி வைத்திருக்கும் குழந்தைகளுக்கு, உலகின் அறியாத குழந்தைகளுக்கும் பாப்தாதா அன்பு நினைவுகளை வழங்குகிறார். அனைத்து ஆத்மாக்களுக்கு அன்புக்கு ஏற்றாற்போல் அன்பு நிரம்பிய அன்பு நினைவுகள் மற்றும் வாரிசுகளுக்கு நமஸ்காரம்.

தாதி பிரகாஷ்மணி அவர்களுடன் சந்திப்பு :

தந்தையின் உடன் கூடவே இருக்கும் கலர் என்ற பிரபாவம் ஏற்பட்டு விட்டதா? தந்தைக்குச்

சமமானவர் ஆகிவிட்டீர்கள். உங்களில் எப்பொழுதும் என்ன தென்படுகிறது? தந்தை தென்படுகிறார். எனவே அவருடைய பிரபாவம் ஏற்பட்டு விட்டது தான் இல்லையா? யார் உங்களைப் பார்த்தாலும் அவருக்கு தந்தையின் நினைவு வருகிறது. ஏனென்றால், நீங்கள் அவருடைய அன்பில் மூழ்கியிருக்கிறீர்கள். மூழ்கியிருக்கும் நீங்கள் சமமானவர் ஆகிவிட்டீர்கள். எனவே விசேஷமாக அன்பு மற்றும் சகயோகத்தின் குடைநிழல் இருக்கிறது. உங்களுக்கு சிறப்பான பங்கு இருக்கிறது, மேலும் உங்களுக்கான பிரத்யேகமான குடைநிழல் வதனத்தில் உருவாக்கப் பட்டிருக்கிறது. எனவே தான் எப்பொழுதும் லேசாக இருக்கிறீர்கள். எப்பொழுதாவது சுமை அனுபவம் ஆகிறதா? எப்பொழுதும் குடைநிழலின் உள்ளே இருக்கிறீர்கள் இல்லையா? மிக நன்றாக நடந்து கொண்டிருக்கிறீர்கள். இதைப் பார்த்துப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார்.

### பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு

1) முழு உலகத்தில் நீங்கள் விசேஷ ஆத்மாக்கள், இந்த நினைவு எப்பொழுதும் இருக்கிறதா? விசேஷ ஆத்மாக்கள் ஒரு நொடி கூட, ஒரு எண்ணம், ஒரு வார்த்தை கூட சாதாரணமானதாக செய்ய முடியாது. அந்த மாதிரி இந்த நினைவு தான் எப்பொழுதும் சக்திசாலியாக ஆக்கக்கூடியது. சக்திசாலியான ஆத்மாக்கள், விசேஷ ஆத்மாக்கள் என்ற இந்த போதையும் குஷி எப்பொழுதும் இருக்கட்டும். சக்திசாலியானவர் என்றால் வீணானதை அழிப்பவர். எப்படி சூரியன் இருளையும், அசுத்தத்தையும் அழித்து விடுகிறது. அதே போல் சக்திசாலியான ஆத்மாக்கள் வீணானதை அழித்து விடுகிறார்கள். வீணானதின் கணக்கு முடிந்தது, சிரேஷ்ட எண்ணம், சிரேஷ்ட காரியம், சிரேஷ்ட வார்த்தைகள், தொடர்பு மற்றும் உறவின் கணக்கு எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டே இருக்க வேண்டும். அந்த மாதிரி அனுபவம் இருக்கிறதா? நாங்கள் தான் சக்திசாலியான ஆத்மாக்கள் என்ற இந்த நினைவு வந்தவுடனேயே வீணானவை அழிந்து விடுகிறது. நினைவு மறந்த நிலை ஆனது என்றால் வீணானது தொடங்கிவிடுகிறது. நினைவு மனநிலையை இயல்பாகவே உருவாக்குகிறது. எனவே நினைவு சொரூபமாகிவிடுங்கள். சொரூபம் என்பது ஒருபொழுதும் மறப்பதில்லை. உங்களுடைய சொரூபம் நினைவு சொரூபமாக இருப்பவரிலிருந்து சக்திசாலியான சொரூபம் ஆகுபவர். இந்தப் பயிற்சி மற்றும் இதே ஈடுபாட்டில் தான் இருக்க வேண்டும் அவ்வளவு தான். இதே ஆர்வத்தில் எப்பொழுதும் மூழ்கி இருப்பது தான் வாழ்க்கை.

ஒருபொழுதும் எந்தப் பிரச்சனையிலும், வாயுமண்டலத்திலும் ஊக்கம், உற்சாகம் குறைவாவதில்லை. எப்பொழுதுமே முன்னேறிச் செல்பவர்கள். ஏனென்றால், சங்கமயுகமே

ஊக்கம், உற்சாகத்தைப் பிராப்தி செய்விக்கும் யுகம். ஒருவேளை சங்கமயுகத்தில் ஊக்கம் உற்சாகம் இருப்பதில்லை என்றால், முழுக்கல்பத்தில் இருக்க முடியாது. இப்பொழுது இல்லை என்றால் ஒருபொழுதும் இருக்காது. பிராமண வாழ்க்கையே ஊக்கம் உற்சாகத்தின் வாழ்க்கை. என்ன கிடைத்திருக்கிறதோ அதை அனைவருக்கும் வழங்க வேண்டும், இந்த ஊக்கத்தை வழங்க வேண்டும். மேலும் உற்சாகம் எப்பொழுதும் குஷியின் அடையாளம். உற்சாகம் உள்ளவர் எப்பொழுதும் குஷியாக இருப்பார். என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டேன் என்பதின் உற்சாகம் இருக்கிறது.

எப்பொழுதும் ஆடாத அசையாத நிலையில் இருக்கக்கூடிய அங்கதனுக்கு சமமான சிரேஷ்ட ஆத்மாக்கள் என்ற இதே போதைமற்றும் குஷியில் இருங்கள். ஏனென்றால், எப்பொழுதும் ஒருவரின் ரசனையில் இருக்கக் கூடிய, ஒரே சீரான நிலையில் இருக்கக்கூடியவர்கள் உறுதியாக இருப்பார்கள். எங்கு ஒருவர் இருக்கிறாரோ அங்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. இருவர் இருக்கிறார்கள் என்றால், இரண்டு விதமான கருத்து வந்து விடுகிறது. ஒருவர் என்றால் எப்பொழுதும் விலகியிருப்பவராகவும் அன்பானவராகவும் இருப்பார். எனவே ஒருவருக்குப் பதிலாக இன்னொருவர் மேல் புத்தி எங்கேயும் செல்ல வேண்டாம். எப்பொழுது ஒருவரில் அனைத்தையும் பிராப்தி செய்ய முடியும் என்றால், இன்னொரு பக்கம் ஏன் செல்ல வேண்டும். எவ்வளவு சகஜமான மார்க்கம் வழி கிடைத்து விட்டது. ஒரே ஒரு புகலிடம், ஒருவரிலிருந்தே அனைத்து பிராப்திகளும் இருக்கிறது. வேறென்ன வேண்டும். அனைத்தும் கிடைத்து விட்டது, தந்தையை அடைய வேண்டும் என்ற என்ன விருப்பம் இருந்ததோ அது கிடைத்து விட்டது என்றால், இதே குஷியில் ஆடிக் கொண்டே இருங்கள். குஷியின் பாடலைப் பாடிக் கொண்டே இருங்கள். இருமையில் எந்த பிராப்தியும் இல்லை. எனவே ஒருவரிலேயே முழு உலகத்தையும் அனுபவம் செய்யுங்கள்.

தன்னை எப்பொழுதும் கதாநாயக பாத்திரம் ஏற்று செய்பவர் என்று புரிந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்யுங்கள். யார் கதாநாயக பாத்திரம் ஏற்று செய்பவராக இருப்பாரோ அவருக்கு எவ்வளவு குஷி இருக்கிறது! அதுவோ எல்லைக்குட்பட்ட பாத்திரம். உங்கள் அனைவரினுடையதோ எல்லைக்கப்பாற்பட்ட பாத்திரம். யாருடன் நான் என் பாத்திரத்தை செய்து கொண்டிருக்கிறேன், யாருடைய சகயோகி? எந்த சேவைக்கு பொறுப்பாளராக இருக்கிறேன்? என்ற இந்த நினைவு எப்பொழுதுமே இருக்கிறது என்றால், சதா மகிழ்ச்சி நிறைந்தவராக, நிரம்பியவராக, டபுள் லைட்டாக இருப்பார். ஒவ்வொரு அடியிலும் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். என்னவாக இருந்தேன், மேலும் என்னவாக

ஆகிவிட்டேன்! ஆஹா! நான் மற்றும் என்னுடைய பாக்கியம், என்ற இந்தப் பாடலைப் பாடிக் கொண்டே இருங்கள், மேலும் மற்றவர்களுக்கும் பாடக் கற்றுக் கொடுங்கள். 5000 வருடங்களுக்கான நீண்ட ரேகை போடப்பட்டு விட்டது என்றால், குஷியில் நடனமாடுங்கள். நல்லது.

2) நீங்கள் எப்பொழுதும் ஒரு தந்தையின் நினைவில் இருக்கும், ஒரே சீரான நிலையில் நிலைத்திருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்கள் தான் இல்லையா? எப்பொழுதுமே ஒரே ரசனையில் சீராக இருக்கும் ஆத்மாவா அல்லது ஏதாவது ஒரு ரசனை தன் பக்கம் இழுத்து விடுகிறதா? வேறு பிற ரசனை எதுவும் தன் பக்கம் இழுக்கவில்லை தான் இல்லையா? உங்கள் அனைவருக்குமே ஒரே ஒருவர் தான் இருக்கிறார். ஒருவரில் அனைத்தும் நிரம்பி இருக்கிறது. எப்பொழுது இருப்பதே ஒருவர் வேறு யாரும் இல்லை என்றால், எங்கே செல்வீர்கள்? ஏதோ மாமா, சித்தப்பா, பெரியப்பாவோ இல்லை தான் இல்லையா. நீங்கள் அனைவரும் என்ன உறுதிமொழி எடுத்துள்ளீர்கள்? எங்களுக்கு அனைத்துமே நீங்கள் தான் என்ற உறுதிமொழி செய்திருக்கிறீர்கள் தான் இல்லையா? குமாரிகள் உறுதியான உறுதிமொழி செய்தீர்களா? உறுதியான உறுதிமொழி செய்தீர்கள் மேலும் வரமாலை கழுத்தில் விழுந்தது. உறுதிமொழி செய்தீர்கள் மேலும் வரன் கிடைத்தார். வரனும் கிடைத்தது மேலும் வீடும் கிடைத்தது. அப்படி வரன் மற்றும் வீடு கிடைத்து விட்டது. குமாரிகளுக்காக பெற்றோர் என்ன யோசிக்க வேண்டியதாக இருக்கிறது? வரனும் வீடும் நல்லதாக அமைய வேண்டும். உங்களுக்கோ அந்த மாதிரி வரன் கிடைத்து விட்டார். அவருடைய மகிமையை முழு உலகமும் பாடுகிறது. வீடும் அப்படி கிடைத்திருக்கிறது அங்கு இல்லை என்ற பொருளே இல்லை. எனவே உறுதியான வரமாலையை அணிந்திருக்கிறீர்களா? அந்த மாதிரி குமாரிகளைத் தான் விவேகம் நிறைந்தவர் என்று கூறுவது. பொதுவாக குமாரிகளே விவேகம் நிறைந்தவர்கள் தான். குமாரிகளைப் பார்த்து பாப்தாதாவிற்கு குஷி ஏற்படுகிறது. ஏனென்றால் தப்பித்துக்கொண்டார்கள். யாராவது கீழே விழுவதிலிருந்து தப்பித்துக் கொண்டார் என்றால் குஷி ஏற்படும் இல்லையா? மாதர்கள் யார் விழுந்திருந்தார்களோ அவர்களுக்காக விழுந்தவர்களை காப்பாற்றிவிட்டோம் என்று கூறுவோம். ஆனால் குமாரிகளைப் பொருத்தவரை விழுவதிலிருந்து தப்பித்துக் கொண்டார்கள் என்று கூறுவோம். எனவே நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள். மாதர்களுக்கு அவர்களுக்கென்ற அதிர்ஷ்டம் து, குமாரிகளுக்கு அவர்களுக்கென்ற அதிர்ஷ்டம் உள்ளது. மாதர்களும் அதிர்ஷ்டசாலிகள் தான், ஏனென்றால், அவர்கள் கோபாலின் கோமாதாக்கள் (பசுக்கள்).

3) எப்பொழுதும் மாயாவை வென்றவர்களாக இருக்கிறீர்களா? யார் மாயாவை வென்றவராக இருப்பாரோ அவருக்கு நான் உலகிற்கு நன்மை செய்பவன் என்ற போதைஅவசியம் இருக்கும். அந்த மாதிரி போதை இருக்கிறதா? எல்லைக்கப்பாற்பட்ட சேவை என்றால் உலகின் சேவை. நான் எல்லைக்கப்பாற்பட்ட எஜமானனின் குழந்தைகள் என்ற இந்த நினைவு எப்பொழுதுமே இருக்கட்டும். என்னவாக மாறிவிட்டோம், என்ன கிடைத்துள்ளது என்பது நினைவில் இருக்கிறதா? இதே குஷியில் எப்பொழுதுமே முன்னேறிச் சென்று கொண்டு மட்டும் இருங்கள். முன்னேறிச் செல்பவர்களைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். எப்பொழுதுமே தந்தையின் நினைவின் மகிழ்ச்சியிலேயே இருங்கள். ஈஸ்வரிய மகிழ்ச்சி என்னவா ஆக்கிவிடுகிறது? முற்றிலும் தரையிலிருந்து ஆகாயத்தில் இருப்பவராக ஆக்கிவிடுகிறது. ஆகாயம் உயரே இருக்கிறது என்றால், கீழே எப்படி வருவீர்கள்? ஒருபொழுதும் புத்தி என்ற கால்கள் தரையில் இல்லை, மேலே இருக்கிறது. இவரைத் தான் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் உயர்ந்த குழந்தை என்று கூறுவது. இதே போதைஇருக்க வேண்டும். எப்பொழுதுமே ஆடாமல் அசையாமல் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பி இருங்கள். சற்றே மாயாவின் ஆட்டம் ஏற்படுகிறது என்றாலும் அனைத்து பொக்கிஷங்களை அனுபவம் செய்ய முடியாது. தந்தை மூலமாக எத்தனை பொக்கிஷங்கள் கிடைத்திருக்கின்றன, அந்த பொக்கிஷங்களை எப்பொழுதுமே நிலைத்திருக்கச் செய்வதற்கான வழி, எப்பொழுதும் ஆடாமல் அசையாமல் இருப்பது. ஆடாமல், அசையாமல் உறுதியாக இருப்பதினால் எப்பொழுதுமே குஷியின் அனுபவம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். அழியக்கூடிய பணம், செல்வத்தின் குஷியும் இருக்கிறது தான் இல்லையா? அழியக்கூடிய தலைவர் பதவியின் நாற்காலி கிடைக்கிறது, பெயர், மரியாதை கிடைக்கிறது என்றால், எவ்வளவு குஷி ஏற்படுகிறது! இதுவோ அழியாத குஷி, ஆனால் இந்தக் குஷியானது யார் ஆடாத அசையாதவராக இருக்கிறாரோ அவருக்கே கிடைக்கும். அனைத்து பிராமணர்களுக்கும் சுயராஜ்ஜியம் பிராப்தி ஆகிவிட்டது. முன்பு அடிமையாக இருந்தீர்கள், நான் அடிமை, நான் அடிமை... என்று பாடிக்கொண்டே இருந்தீர்கள். இப்பொழுது சுயராஜ்யம் உடையவர்களாக ஆகிவிட்டீர்கள். அடிமையிலிருந்து இராஜா ஆகிவிட்டீர்கள். எவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டு விட்டது. இரவு பகலுக்கான வித்தியாசம் தான் இல்லையா தந்தையை நினைவு செய்வது மேலும் அடிமையிலிருந்து இராஜா ஆவது! அந்த மாதிரி இராஜ்யம் முழுக் கல்பத்திலும் கிடைக்க முடியாது. இதே சுயராஜ்யம் மூலம் விஷ்வ ராஜ்ஜியம் கிடைக்கிறது. எனவே இப்பொழுது நான் சுயராஜ்ய அதிகாரி என்ற இந்த போதையிலேயேஎப்பொழுதும் இருங்கள். பிறகு இந்த கர்ம இந்திரியங்கள் தானாகவே சிரேஷ்ட வழிப்படி நடக்கும். எப்பொழுதுமே என்ன அடைய வேண்டியதாக இருந்ததோ அதை அடைந்து விட்டேன். . . . என்னவாக இருந்த நான் என்னவாக ஆகிவிட்டேன் என்ற இதே குஷியில் இருங்கள். எங்கே கிடந்தேன் மேலும் எங்கே வந்து சேர்ந்து விட்டேன். நல்லது.

வரதானம் :

இல்லறத்தில் இருந்து கொண்டே ஒரு தந்தையினுடன் இணைந்து இருக்கக்கூடிய உடலின் சம்மந்தங்களிலிருந்து விடுபட்டவர் ஆகுக.

ஒருவேளை இல்லறத்தில் தூய்மையான இல்லறத்தின் பங்கைச் செய்ய வேண்டும் என்றால், உடலின் சம்மந்தங்களிலிருந்து விடுபட்டவராக இருங்கள். நான் கணவன், இவர் மனைவி என்ற உணர்வு கனவிலும் வரக்கூடாது. ஆத்மா சகோதரன் - சகோதரன் என்றால் ஆண், பெண் எங்கிருந்து வந்தது. ஜோடியாகவோ நீங்களும் தந்தையும் தான் இருக்கிறீர்கள். இந்த உறவோ ஏதோஒரு காரணத்திற்காக சேவைக்காக இருக்கிறது, மற்றபடி இணைந்த ரூபத்தில் நீங்கள் மற்றும் தந்தை இருக்கிறீர்கள். அந்த மாதிரி புரிந்து நடந்து கொண்டீர்கள் என்றால் தான் தைரியம் உள்ள வெற்றி அடைந்த ஆத்மா என்று கூறுவோம்.

சுலோகன் :

எப்பொழுதும் திருப்தியாக மற்றும் எப்பொழுதும் குஷியாக இருப்பவர் தான் அதிர்ஷ்டம் நிறைந்தவர், தீவிரமாக முயற்சி செய்பவர்.

ஓம்சாந்தி

07.12.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" சிரேஷ்ட பதவியின் பிராப்திக்கான ஆதாரம் - 'முரளி' "

இன்று முரளிதரன் தந்தை தன்னுடைய முரளி மேல் அன்பு வைத்திருக்கும் குழந்தைகளுக்கு, முரளிதரன் தந்தை மேல் எந்தளவு அன்பு இருக்கிறது, மேலும் முரளி மேல் எவ்வளவு அன்பு இருக்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார். முரளிக்குப் பின்னால் எந்தளவு போதை ஏறியவர்களாக ஆகிவிடுகிறார்கள். தன்னுடைய உடலின் உணர்வுகளையும் மறந்து உடலற்றவராக ஆகி, உடலற்ற தந்தையிடமிருந்து கேட்கிறார்கள். கொஞ்சம் கூட தேகதாரிகளின் நினைவின் உணருதல் இருப்பதில்லை. இந்த விதி மூலம் மகிழ்ச்சி அடைந்தவராகி எப்படி குஷியில் நடனமாடுகிறார்கள். தன்னை பாக்கியத்தை உருவாக்கும் தந்தையின் எதிரில் பலகோடி மடங்கு பாக்கியவான் என்று புரிந்து ஆன்மீக போதையில் இருக்கிறார்கள். எப்படி இந்த ஆன்மீக போதைமுரளிதரனின் முரளியின் போதைஏறிவிடுகிறதோ, பிறகு தன்னை இந்த பூமியிலிருந்து மேலும் இந்த உடலிலிருந்து மேலே பறந்து கொண்டிருப்பதாக அனுபவம் செய்கிறார்கள். முரளியின் ஆலாபனையிலிருந்து அதாவது முரளியின் இசை மற்றும் இரகசியம் மூலம் முரளிதரன் தந்தையுடன் அனேக அனுபவங்களில் சென்று கொண்டே இருக்கிறார்கள். சில நேரம் மூலவதனத்திற்கும், சில நேரம் சூட்சும வனத்திலும் சென்று விடுகிறார்கள், சில நேரம் தன்னுடைய இராஜ்யத்தில் சென்று விடுகிறார்கள். சில நேரம் லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஆகி இந்த துக்கமான அமைதியற்ற உலகத்தின் ஆத்மாக்களுக்கு சுகம், சாந்தியின் கிரணங்களை கொடுத்துக் கொண்டே தினசரி மூன்று உலகங்களிலும் சுற்றி வருகிறார்கள். யாருடன் சுற்றி வருகிறார்கள்? முரளிதரன் தந்தையுடன். முரளி கேட்டு கேட்டு அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடுகிறார்கள். முரளிதரனின் முரளியின் இசையைக் கேட்டு அழியாத ஆசீர்வாதத்தின் மருந்து கிடைத்தவுடனேயே உடல், மனம் ஆரோக்கியமானதாக ஆகிவிடுகிறது. மகிழ்ச்சியில் மூழ்கிப்போய் கவலையற்ற மகாராஜா ஆகிவிடுகிறார்கள். துக்கமற்ற உலகத்தின் இராஜா ஆகிவிடுகிறார்கள். சுயராஜ்ய அதிகாரி ஆகிவிடுகிறார்கள். அந்த மாதிரி விதிப்பூர்வமான முரளி மேல் அன்பு வைத்திருக்கும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஒரே முரளி மூலமாக சிலர் இராஜாவாக, சிலர் பிரஜையாக ஆகிவிடுகிறார்கள். ஏனென்றால், விதி மூலமாக சித்தி (வெற்றி) ஏற்படுகிறது. யார் எந்தளவு விதிப்பூர்வமாக கேட்கிறாரோ அந்த அளவே சித்தி சொரூபம் ஆகிறார்.

ஒருவர் விதிப்பூர்வமாக கேட்பவர் அதாவது தனக்குள் நிரப்புபவர். இரண்டாமவர் நியமப்படி கேட்பவர், கொஞ்சம் நிரப்புபவர், கொஞ்சம் வர்ணனை செய்பவர். மூன்றாமவரின் விஷயத்தையோ கேட்காதீர்கள். யதார்த்தமாக விதிப்பூர்வமாக கேட்பவர்கள் மற்றும் நிரப்புபவர்கள், சொரூபம் ஆகிவிடுகிறார்கள். அவர்களுடைய ஒவ்வொரு காரியமும் முரளியின் சொரூபமாக இருக்கும். உங்களை நீங்களே நான் எந்த வரிசை எண்ணில் இருக்கிறேன் என்று கேளுங்கள். முதலிலா அல்லது இரண்டாவதிலா? முரளிதரன் தந்தை மேல் மரியாதை இருக்கிறது என்றால் முரளியின் ஒவ்வொரு வார்த்தை மேல் மரியாதை வைப்பது. ஒவ்வொரு மகாவாக்கியமும் 2500 ஆண்டுகளின் வருமானத்திற்கான ஆதாரம். பலகோடி மடங்கின் வருமானத்திற்கான ஆதாரம். அந்த கணக்குப்படி ஒரு வரதானம் தவறிவிட்டது என்றால், பலகோடி மடங்கின் வருமானம் தவறிவிட்டது. ஒரு வரதானம் பொக்கிஷங்களின் சுரங்கம் ஆக்கிவிடுகிறது. அந்த மாதிரி முரளியின் ஒவ்வொரு வார்த்தையையும் விதிப்பூர்வமாக கேட்டு மேலும் அதன் மூலம் பிராப்தியாகி இருக்கும் சித்தி சொரூபத்தின் கணக்கு வழக்கை தெரிந்திருப்பவர் சிரேஷ்ட நிலையை அடைந்து விடுகிறார்கள். எப்படி கர்மங்களின் விளைவு மிக ஆழமானதோ அதே போல் விதிப்பூர்வமாக முரளி கேட்பது மற்றும் நிரப்புவதின் பலன்களும் மிக சிரேஷ்டமானது. முரளி தான் பிராமண வாழ்க்கைக்கான மூச்சு. மூச்சு இல்லை, என்றால் வாழ்க்கை இல்லை. நீங்கள் அந்த மாதிரி அனுபவி ஆத்மாக்கள் தான் இல்லையா? எனவே இன்று இந்த மகத்துவம் நிறைந்து, விதிப்பூர்வமாக முரளி கேட்டேனா என்று தன்னைத் தானே தினசரி சோதனைசெய்யுங்கள். அமிர்தவேளையின் இந்த விதி முழு நாளும் ஒவ்வொரு காரியத்திலும் சித்தி சொரூபமாக (வெற்றி) இயல்பாக மற்றும் சகஜமாக ஆக்குகிறது. புரிந்ததா?

புதியவர்கள் வந்திருக்கிறீர்கள் இல்லையா? எனவே கடைசியில் வந்தும் வேகமாக செல்வதற்கான வழியை கூறிக் கொண்டிருக்கிறோம். இதன் மூலம் வேகமாக முன்னேறிச் சென்று விடுவீர்கள். நேரத்தின் தூரத்தை இந்த விதி மூலம் அதிவேகத்தில் சென்று அடைய முடியும். குழந்தைகளிடமிருந்து எந்தவொரு முறையீடுகளும் நிறைவேறாமல் தங்கிப்போய் விடக்கூடாது என்பதற்காக பாப்தாதா வழியைக் கூறுகிறார். ஏன் காலம் தாழ்த்தி நான் வந்திருக்கிறேன் அல்லது ஏன் காலதாமதமாக என்னை அழைத்தீர்கள்....ஆனால் முன்னேறிச் செல்ல முடியும். முன்னேறிச் செல்லுங்கள். சிரேஷ்ட விதி மூலம் சிரேஷ்ட வரிசை எண்ணைப் பெறுங்கள். பிறகு முறையீடுகளோ இருக்காது தான் இல்லையா? மிகவும் துல்லியமான வழியைக் கூறுகிறோம். அனைத்தும் தயாராக இருக்கும் நேரத்தில் வந்திருக்கிறீர்கள்.

தயாராகியிருக்கும் வெண்ணெயை அருந்தும் நேரத்தில் வந்திருக்கிறீர்கள். ஒரு உழைப்பிலிருந்தோ முதலிலேயே விடுபட்டு விட்டீர்கள். இப்பொழுது அருந்துங்கள் மற்றும் ஜீரணம் மட்டும் செய்யுங்கள். சுலபம் தான் இல்லையா? நல்லது.

அந்த மாதிரி அனைத்து விதி நிரம்பிய, அனைத்து சித்திகளையும் (வெற்றி) பிராப்தி செய்யக்கூடிய, முரளிதரனின் முரளியால் உடலின் உணர்வுகளை மறக்கக்கூடிய, குஷிகளின் ஊஞ்சலில் ஆடக்கூடிய, ஆன்மீக போதையில் யோகியாகஇருக்கக்கூடிய, முரளிதரன் மற்றும் முரளி மேல் மரியாதை வைக்கக்கூடிய, அந்த மாதிரி மாஸ்டர் முரளிதரன், முரளி மற்றும் முரளிதரன் சொரூப குழந்தைகளுக்கு பாப்தாதாவின் சாகார மற்றும் ஆகார இரண்டு குழந்தைகளுக்கும் அன்பு நிரம்பிய அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு -

1) நீங்கள் எப்பொழுதும் ஒரு தந்தையின் நினைவில் இருக்கும், ஒரே சீரான நிலையில் நிலைத்திருக்கக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்கள் தான் இல்லையா எப்பொழுதும் ஒருவரின் ரசனையில் இருக்கும் ஆத்மாவா அல்லது வேறு ஏதாவது ரசனை தன் பக்கம் இழுத்து விடுகிறதா? ஏதாவது அன்னிய ரசனை தன் பக்கம் இழுப்பதோ இல்லை தான் இல்லையா? உங்கள் அனைவருக்குமோ இருப்பதே ஒருவர் தான். அந்த ஒருவரில் அனைத்தும் நிரம்பியிருக்கிறது. எப்பொழுது இருப்பதே ஒருவர், வேறு யாரும் இல்லை என்றால் எங்கே செல்வீர்கள்? ஏதாவது சித்தப்பா, பெரியப்பா, மாமாவோஇல்லை தான் இல்லையா! நீங்கள் அனைவரும் என்ன உறுதிமொழி செய்திருக்கிறீர்கள்? அனைத்துமே நீங்கள் தான் என்று இந்த உறுதிமொழியைத் தான் செய்திருக்கிறீர்கள் தான் இல்லையா? குமாரிகள் திடமான உறுதிமொழி செய்திருக்கிறீர்களா? திடமான உறுதிமொழி செய்தீர்கள், மேலும் வரமாலை கழுத்தில் வந்து விழுந்தது. உறுதிமொழி செய்தீர்கள், மேலும் வரன் கிடைத்தது. வரனும் கிடைத்தது, மேலும் வீடும் கிடைத்தது. அப்படி வரனும், வீடும் கிடைத்து விட்டது. குமாரிகளைப் பொருத்தளவில் தாய் தந்தையருக்கு என்ன யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. வரன் மற்றும் வீடு நல்லதாக கிடைக்க வேண்டும். உங்களுக்கோ அந்த மாதிரியான வரன் கிடைத்து விட்டார். அவருடைய மகிமையை முழு உலகமும் செய்கிறது. வீடும் அப்படி கிடைத்திருக்கிறது, அங்கு அடையவில்லை என்று ஒரு பொருள் கூட இல்லை. எனவே உறுதியான வரமாலையை அணிந்தீர்களா? அந்த மாதிரி குமாரிகளைத் தான் புத்திசாலிகள் என்று கூறுவது. குமாரிகளோ புத்திசாலிகள் தான். குமாரிகளைப் பார்த்து பாப்தாதாவிற்கு குஷி ஏற்படுகிறது, ஏனென்றால் தப்பித்துக் கொண்டார்கள். யாராவது கீழே விழுவதிலிருந்து தப்பித்துக் கொண்டார் என்றால்

குஷி ஏற்படும் தான் இல்லையா? மாதர்கள் யார் கீழே விழுந்து விட்டார்களோ அவர்களைப்பற்றிப் பேசும் போது விழுந்து விட்டவர்களைக் காப்பாற்றிவிட்டோம் என்று கூறுவோம். ஆனால் குமாரிகளை பொருத்தளவில் விழுவதிலிருந்து காப்பாற்றி விட்டோம் என்று கூறுவோம். அந்த மாதிரி நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்! மாதர்களுக்கு அவர்களுடைய அதிர்ஷ்டம் இருக்கிறது, குமாரிகளுக்கென்று அவர்களுடைய அதிர்ஷ்டம் இருக்கிறது. மாதர்களும் அதிர்ஷ்டசாலிகள் தான். ஏனென்றால் இருந்தும் பசு பாலனை செய்யும் கோபான் பசுக்களாக ஆகிவிட்டார்கள்.

2) எப்பொழுதும் மாயாவை வென்றவர்களாக இருக்கிறீர்களா? யார் மாயாவை வென்றவராக இருப்பாரோ அவருக்கு நான் உலகிற்கு நன்மை செய்பவன் என்ற போதைஅவசியம் இருக்கும். அந்த மாதிரி போதை இருக்கிறதா? எல்லைக்கப்பாற்பட்ட சேவை என்றால் உலகின் சேவை. நான் எல்லைக்கப்பாற்பட்ட எஜமானனின் குழந்தை என்ற இந்த நினைவு எப்பொழுதுமே இருக்கட்டும். என்னவாக மாறிவிட்டோம், என்ன கிடைத்துள்ளது என்பது நினைவில் இருக்கிறதா? இதே குஷியில் எப்பொழுதுமே முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். முன்னேறிச் செல்பவர்களைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். எப்பொழுதுமே தந்தையின் நினைவின் மகிழ்ச்சியிலேயே இருங்கள். ஈஸ்வரிய மகிழ்ச்சி என்னவாக ஆக்கிவிடுகிறது? முற்றிலும் தரையிலிருந்து ஆகாயத்தில் இருப்பவராக ஆக்கிவிடுகிறது. ஆகாயம் உயரே இருக்கிறது என்றால், கீழே எப்படி வருவீர்கள்? ஒருபொழுதும் புத்தி என்ற கால்கள் தரையில் இல்லை, மேலே இருக்கிறது. இவரைத் தான் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் உயர்ந்த குழந்தை என்று கூறுவது. இதே போதைஇருக்க வேண்டும்.

எப்பொழுதுமே ஆடாமல் அசையாமல் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பி இருங்கள். சற்றே மாயாவின் ஆட்டம் ஏற்படுகிறது என்றாலும், அனைத்து பொக்கிஷங்களையும் அனுபவம் செய்ய முடியாது. தந்தை மூலமாக எத்தனை பொக்கிஷங்கள் கிடைத்திருக்கின்றன, அந்த பொக்கிஷங்களை எப்பொழுதுமே நிலைத்திருக்கச் செய்வதற்கான வழி, எப்பொழுதும் ஆடாமல் அசையாமல் இருப்பது. ஆடாமல், அசையாமல் உறுதியாக இருப்பதினால் எப்பொழுதுமே குஷியின் அனுபவம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். அழியக்கூடிய பணம், செல்வத்தின் குஷியும் இருக்கிறது தான் இல்லையா? அழியக்கூடிய தலைவர் பதவியின் நாற்காலி கிடைக்கிறது, பெயர், மரியாதை கிடைக்கிறது என்றால், எவ்வளவு குஷி ஏற்படுகிறது! இதுவோ அழியாத குஷி, ஆனால் இந்தக் குஷியானது யார் ஆடாது அசையாதவராக இருக்கிறாரோ அவருக்கே கிடைக்கும்.

அனைத்து பிராமணர்களுக்கும் சுயராஜ்ஜியம் பிராப்தி ஆகிவிட்டது. முன்பு அடிமையாக இருந்தீர்கள், நான் அடிமை, நான் அடிமை..... என்று பாடிக் கொண்டே இருந்தீர்கள். இப்பொழுது சுயராஜ்யம் உடையவர்களாக ஆகிவிட்டீர்கள். அடிமையிலிருந்து இராஜா ஆகிவிட்டீர்கள். எவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டு விட்டது. இரவு பகலுக்கான வித்தியாசம் தான் இல்லையா. தந்தையை நினைவு செய்வது மேலும் அடிமையிலிருந்து இராஜா ஆவது! அந்த மாதிரி இராஜ்யம் முழுக் கல்பத்திலும் கிடைக்க முடியாது. இதே சுயராஜ்யம் மூலம் விஷ்வ ராஜ்ஜியம் கிடைக்கிறது. எனவே இப்பொழுது நான் சுயராஜ்ய அதிகாரி என்ற இந்த போதையிலேயேப்பொழுதும் இருங்கள். பிறகு இந்த கர்ம இந்திரியங்கள் தானாகவே சிரேஷ்ட வழிப்படி நடக்கும். எப்பொழுதுமே என்ன அடைய வேண்டியதாக இருந்ததோ அதை அடைந்து விட்டேன்.... என்னவாக இருந்த நான் என்னவாக ஆகி விட்டேன் என்ற இதே குஷியில் இருங்கள். எங்கே கிடந்தேன், ஆனால் எங்கே வந்து சேர்ந்து விட்டேன்.

வரதானம் :

அமைதியின் சக்தி மூலமாக புது உலக ஸ்தாபனைக்கு பொறுப்பாளராக மாஸ்டர் சாந்தி தேவா ஆகுக.

அமைதியின் சக்தியை சேமிப்பதற்காக இந்த உடலிலிருந்து விலகி அசரீரி ஆகிவிடுங்கள். இந்த அமைதியின் சக்தி மிகுந்த மகான் சக்தி, இதன் மூலம் புது உலகின் ஸ்தாபனை ஆகிறது. யார் சப்தத்திலிருந்து விலகி அமைதியின் ரூபத்தில் நிலைத்திருப்பாரோ அவர் தான் ஸ்தாபனை காரியத்தை செய்ய முடியும். எனவே சாந்தி தேவன் அதாவது சாந்த சொரூபமாகி அசாந்த ஆத்மாக்களுக்கு சாந்தியின் கிரணங்களைக் கொடுங்கள். விசேஷமாக சாந்தியின் சக்தியை அதிகப்படுத்துங்கள். இது தான் மிகப் பெரிய மகாதானம். இது தான் அனைவராலும் விரும்பப்படும் மேலும் சக்திசாலியான ஒன்றாகும்.

சுலோகன் :

ஒவ்வொரு ஆத்மாவுக்காகவும் இயற்கைக்காகவும் சுபபாவனை வைப்பதே உலகிற்கு நன்மை செய்பவர் ஆவதாகும்.

கேள்வி –

முயற்சி செய்வதற்கான இறுதி லட்சியம் எது? அதற்கான என்ன விசேஷ கவனம் வைக்க வேண்டும்?

பதில் –

அவ்யக்த ஃபரிஷ்தாவாகி இருக்க வேண்டும் - இது தான் முயற்சி செய்வதின் இறுதி லட்சியம். இந்த லட்சியத்தை எதிரில் வைப்பதினால் ஒளி மண்டலத்தில் என்னுடைய உடல் ஒளி வடிவமானது என்று அனுபவம் செய்வீர்கள். எப்படி இந்த பௌதீகமானவை ஐந்து தத்துவங்களினால் ஆன மண்டலத்தில் இருக்கிறது. அதே மாதிரி உடலற்ற நிலை ஒளி பரவிய மண்டலத்தில் இருக்கிறது. ஒளியின் ரூபமோ இருக்கிறது, ஆனால் அக்கம் பக்கம் நாலாபுறங்களிலும் ஒளியே ஒளி தான். நான் ஆத்மா ஜோதி ரூபத்தில் இருக்கிறேன் என்ற இந்த லட்சியமோ இருக்கவே இருக்கிறது. ஆனால் என்னுடைய உடல் ரூபமும் ஒளி மண்டலத்தில் இருக்கிறது என்ற அனுபவம் செய்வது.

கேள்வி :

ஒவ்வொரு காரியம் செய்து கொண்டே விசேஷமாக எந்த நினைவை அதிகரித்தோம் என்றால், நிராகார நிலை சுலபமாக உருவாகிவிடும்?

பதில் –

ஒவ்வொரு காரியம் செய்து கொண்டே நான் ஃபரிஷ்தா இந்தக் காரியம் செய்வதற்காக இந்த பூமி மேல் என் கால்களை வைக்கிறேன், ஆனால் நான் அவ்யக்த உலகத்தைச் சேர்ந்தவன், நான் இந்தக் காரியம் செய்வதற்காக என்னுடைய உலகத்திலிருந்து இந்த பூமிக்கு வந்திருக்கிறேன். காரியங்கள் முடிவடைந்ததும், பிறகு நான் என்னுடைய உலகத்திற்கு வந்து விடுகிறேன். இந்த நினைவின் மூலம் சுலபமாகவே நிராகார நிலை உருவாகிவிடும்.

:

கேள்வி

சாகார சொரூபத்தின் போதையின் ஞான பாய்ன்டுகளின் கூடவே எந்த அனுபவத்தில் இருப்பதினால் சாட்சாத்கார மூர்த்தி ஆக முடியும்?

பதில்:

எப்படி நான் சிரேஷ்ட ஆத்மா, நான் பிராமணன், நான் சக்தி என்ற நினைவு இருக்கிறது. இந்த நினைவின் மூலம் போதையுற்றும் குஷியின் அனுபவம் ஆகிறது. ஆனால் எப்பொழுது அவ்யக்த சொரூபத்தில், ஒளியின் மண்டலத்தில் தன்னை அனுபவம் செய்வீர்களோ அப்பொழுது சாட்சாத்கார மூர்த்தி ஆவீர்கள். ஏனென்றால் சாட்சாத்காரம் ஒளியின்றி ஏற்படாது. அந்த மாதிரி உங்களுடைய ஒளி ரூபத்தின் பிரபாவத்தினால் தான் அவர்களுக்கு தெய்வீக சொரூபத்தின் சாட்சாத்காரம் கிடைக்கும்.

கேள்வி :

தற்காலத்திற்கு ஏற்றபடி உங்களுடைய எந்த சொரூபம் தேவையாக இருக்கிறது? இப்பொழுது எந்த பங்கு முடிவடைந்தது?

பதில் :

தற்சமயத்திற்கு ஏற்றாற்போல் உங்கள் அனைவரின் ஜுவாலாமுகி சொரூபம் தேவையாக இருக்கிறது. சாதாரண சொரூபம், சாதாரண பேச்சு தென்படக்கூடாது. இந்த தேவி எனக்காக என்ன ஆகாசவாணி சொல்லிக்கொண்டிருக்கிறார் என்று பிறர் அனுபவம் செய்ய வேண்டும். இப்பொழுது உங்கள் அனைவரின் கோபி நிலையின் பங்கு முடிவடைந்தது. எப்பொழுது நீங்கள் சக்தி ரூபத்தில் இருப்பீர்களோ அப்பொழுது உங்கள் மூலமாக இவர் ஏதோஒரு அவதாரம். இவர் சாதாரண மனிதர் இல்லை என்று அனைவருக்கும் அனுபவம் ஆகும். அவதாரம் வெளிப்பட்டார், மகாவாக்கியம் கூறினார்: மேலும் மறைந்து விட்டார். இப்பொழுதைய நிலை மற்றும் முயற்சியின் லட்சியம் இதுவாகத் தான் இருக்க வேண்டும்.

கேள்வி :

பொறுப்பாளர் ஆகியிருக்கும் முக்கிய சேவாதாரிகள், இராஜ்ஜிய பாக்கியத்தின் ஆசனத்தை

பெறக்கூடிய நெருக்கமாக இருக்கும் (அன்யோன்ய) இரத்தினங்களின் சேவை என்ன?

பதில்:

அவர்கள் லைட் ஹவுஸ் மாதிரி சுற்றி சுற்றி நாலாபுறங்களிலும் லைட் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். ஒருவர் அனேகர்களுக்கு லைட் கொடுப்பார். ஸ்தூல காரிய நடவடிக்கைகளிலிருந்து விலகிச் சென்று கொண்டே இருப்பார். சமிக்ஞை மூலம் கேட்டார், வழிகாட்டுதல் கொடுத்தார், பிறகு சூட்சும வதனத்திற்கு வந்து விட்டார். இப்பொழுது பொறுப்புக்கள் மற்றும் சேவையின் விஸ்தாரமோ நாலாபுறங்களிலும் இன்னும் அதிகரிக்கும். விதவிதமான சேவைகள் என்ன நடந்து கொண்டிருக்கின்றனவோ அவை இன்னும் அதிகரிக்கும்.

கேள்வி :

சக்கரவர்த்தி மகாராஜாவாக யார் ஆகிறார், அவர்களுடைய அடையாளங்களை கூறுங்கள்?

பதில்:

யாரெல்லாம் இப்பொழுது சுயதரிசன சக்கரதாரியோ அவர் தான் சக்கரவர்த்தி மகாராஜா ஆவார். யாரிடம் ஒளியின் சக்கரமும் இருக்கிறது மேலும் சேவையில் பிரகாசத்தைப் பரப்பக்கூடிய சக்கரமும் இருக்கிறது என்றால் தான் அவரை சக்கரதாரி என்று கூறுவோம். அந்த மாதிரியான சக்கரதாரி தான் சக்கரவர்த்தி ஆக முடியும். உங்களுடைய ஒளியின் ரூபம் மற்றும் ஒளியின் கிரீடம் அந்த மாதிரி பொதுவானதாக ஆகி விட வேண்டும் அது நடைமுறையில் இவர் ஒளிக் கிரீடம் அணிந்தவர் என்று அனைவருக்கும் தென்பட வேண்டும்.

கேள்வி :

எந்தப் பயிற்சி செய்வதினால் உடல் சம்மந்தப்பட்ட கணக்கு வழக்கு லேசாகிவிடும், உடலுக்கும் ஓய்வின் (தூக்கத்தின்) சத்துணவு கிடைத்து விடும்?

பதில்:

அவ்யக்த லைட் ரூபத்தில் நிலைத்திருப்பதற்கான, உடலிலிருந்து விலகியிருப்பதற்கான பயிற்சி இருக்கிறது என்றால் 2-4 நிமிடங்களின் அசரீரி நிலை மூலம் உடலுக்கு ஓய்வின் சத்துணவு கிடைத்து விடும். உடலோபழையதாக இருக்கும். கணக்கு வழக்கும் பழையதாக இருக்கும், ஆனால் லைட் சொரூபத்தின் நினைவை உறுதி செய்வதினால் கணக்கு வழக்கை முடிப்பதில் லைட் ரூபம் ஆகிவிடுவார். இதற்காக விசேஷமாக அமிர்தவேளையில் நான் அசரீரி மேலும் பரந்தாமவாசி, அவ்யக்த ரூபத்தில் அவதரித்து இருக்கிறேன் என்ற பயிற்சியை செய்யுங்கள்.

கேள்வி :

மாயாவை வென்றவர் ஆவதற்கான சுலபமான வழி என்ன?

பதில்:

மாயாவை வென்றவர் ஆவதற்காக தன்னுடைய தீயவைகள் மேல் கோபப்படுங்கள். எப்பொழுது கோபம் வருகிறதோ அப்பொழுது நீங்கள் (பிறர் மீது) கோபப்படாதீர்கள், தன்னுடைய தீயவைகளின் மீது கோபப்படுங்கள், தன்னுடைய பலஹீனங்கள் மீது கோபப்பட்டீர்கள் என்றால் சுலபமாக மாயாவை வென்றவர் ஆகிவிடுவீர்கள்.

கேள்வி:

கிராமத்தினரைப் பார்த்து பாப்தாதா விசேஷமாக ஏன் குஷி அடைகிறார்?

பதில்:

ஏனென்றால் கிராமத்தினர் மிகவும் வெகுளியாக இருப்பார்கள். தந்தையையும் போலாநாத் (வெகுளியானவர்) என்று கூறுகிறார்கள். எப்படி தந்தை போலாநாத் என்றால் அதே போலவே கிராமத்தினரும் வெகுளியானவர்கள். எனவே நான் விசேஷமாக போலாநாத்திற்கு பிரியமானவர் என்ற குஷி இருக்கட்டும். நல்லது.

ஓம்சாந்தி

12.12.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" ஒருமித்த நிலை மூலமாக அனைத்து சக்திகளின் பிராப்தி "

இன்று அனைவரும் சந்திக்க வேண்டும் என்ற ஒரே ஒரு சுத்த எண்ணத்தில் நிலைத்திருக்கிறீர்கள் இல்லையா? ஒரே நேரத்தில் ஒரே எண்ணத்தில் இருப்பது - என்ற இந்த ஒருமித்த நிலையின் சக்தி மிக உயர்ந்தது. இந்த குழுவின் ஒரு எண்ணத்தின் ஒருமித்த நிலையின் சக்தி என்ன செய்ய விரும்புகிறதோ அதைச் செய்ய முடியும். எங்கு ஒருமித்த நிலையின் சக்தி இருக்கிறதோ அங்கு அனைத்து சக்திகளும் உடன் இருக்கும். எனவே ஒருமித்த நிலை தான் சுலபமாக வெற்றி அடைவதற்கான சாவி. ஒரு சிரேஷ்ட ஆத்மாவின் ஒருமித்த நிலையின் சக்தி கூட அதிசயக் காரியம் செய்து காண்பிக்க முடியும் என்றால் எங்கு அனேக சிரேஷ்ட ஆத்மாக்களின் ஒருமித்த நிலையின் சக்தி குழுவின் ரூபத்தில் இருக்கிறது என்றால், அது என்ன தான் செய்ய முடியாது! எங்கு ஒருமித்த நிலை இருக்குமோ அங்கு உயர்ந்த நிலை மற்றும் தெளிவான நிலை இயல்பாகவே இருக்கும். ஏதாவது புதியதாக கண்டுபிடிப்பதற்காக ஒருமித்த நிலை மிக அவசியம். அது வெளி உலகத்தின் கண்டுபிடிப்பாக இருந்தாலும் சரி அல்லது ஆத்மீக கண்டுபிடிப்பாக இருந்தாலும் சரி, இந்த ஒருமித்த நிலை அவசியம் தேவை. ஒருமித்த நிலை என்றால், ஒரே ஒரு எண்ணத்தில் நிலைத்து விடுவது. ஒரே ஒரு ஈடுபாட்டில் மூழ்கிவிடுவது. ஒருமித்த நிலை அனேக பக்கங்கள் அலைய வைப்பதிலிருந்து சுலபமாகவே விடுவித்து விடுகிறது. எவ்வளவு நேரம் ஒருமித்த நிலையில் நிலைத்திருப்பீர்களோ அந்த நேரம் உடல் மற்றும் உடலின் உலகத்தை சுலபமாக மறந்திருக்கும் நிலை இருக்கும். ஏனென்றால், அந்த நேரத்தில் அவர் எந்த எண்ணத்தில் மூழ்கியிருக்கிறாரோ அதுவே அவருடைய உலகமாக இருக்கும். நீங்கள் அந்த மாதிரியான ஒருமித்த நிலையின் சக்தியின் அனுபவிகளா? ஒருமித்த நிலையின் சக்தி மூலம் எந்தவொரு ஆத்மாவிற்கும் ஒரு செய்தியை சென்றடையச் செய்ய முடியும். எந்தவொரு ஆத்மாவையும் வரவழைக்க முடியும். எந்தவொரு ஆத்மா பேசுவதை உங்களுடைய புத்தியால் கேட்டு பிடித்துக் கொள்ள முடியும். தூரத்தில் அமர்ந்து கொண்டே எந்தவொரு ஆத்மாவிற்கும் சகயோகம் கொடுக்க முடியும். அந்த ஒருமித்த நிலையை தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? ஒரு தந்தையைத் தவிர வேறு எந்த எண்ணமும் இருக்க வேண்டாம். ஒரு தந்தையில் முழு உலகத்தின் அனைத்து பிராப்திகளின் அனுபவம் இருக்கட்டும். ஒன்றே ஒன்று மட்டும் இருக்கட்டும். முயற்சி செய்வதின் மூலம் ஒருமித்த நிலையில் இருப்பவராக ஆவது வேறு நிலை ஆகும். ஆனால் ஒருமித்த நிலையில் நிலைத்து

விடுவது என்ற அந்த நிலை அந்தளவு சக்திசாலியானது. அந்த மாதிரி சிரேஷ்ட நிலையின் ஒரு எண்ணம் கூட தந்தைக்குச் சமமான மிகுந்த அனுபவம் செய்விக்கும். இப்பொழுது இந்த ஆன்மீக சக்தியை பிரயோகம் (நடைமுறையில் ஈடுபடுத்தி) செய்து பாருங்கள். இதில் ஏகாந்தத்தில் இருப்பது அவசியம் ஆகும். பயிற்சி இருப்பதினால் இறுதி நேரத்தில் நாலாபுறங்களிலும் குழப்பங்கள் இருந்த போதிலும் நீங்கள் அனைவரும் ஒருவரின் எல்லையில் மூழ்கிவிட்டீர்கள் என்றால், குழப்பத்தின் நடுவிலும் ஏகாந்தத்தை அனுபவம் செய்வீர்கள். ஆனால் அந்த மாதிரியான பயிற்சி நீண்ட காலமாக செய்ய வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது தான் நாலாபுறங்களிலும் அனேக விதமான குழப்பங்கள் இருந்த போதிலும் நீங்கள் உங்களை ஏகாந்தவாசியாக அனுபவம் செய்வீர்கள். தற்சமயம் அந்த மாதிரி குப்த சக்திகள் மூலமாக அனுபவம் நிறைந்தவராக ஆவது மிக அவசியம். நீங்கள் அனைவரும் இப்பொழுது கூட உங்களை மிகவும் பிஸியாக இருப்பதாக நினைக்கிறீர்கள். ஆனால் இப்பொழுது இருந்தும் மிகவும் ஃப்ரீயாக இருக்கிறீர்கள். வரும் நாட்களில் இன்னும் பிஸியாக ஆகிக் கொண்டே இருப்பீர்கள். எனவே அந்த மாதிரி பலவகையான சுயபயிற்சி, சுயத்தின் சாதனா இப்பொழுது செய்ய முடியும். நடைமுறை காரியங்கள் செய்து கொண்டே எவ்வளவு நேரம் கிடைக்கிறதோ அவ்வளவு நேரம் தனக்காகப் பயன்படுத்திக் கொண்டே இருங்கள். காலப்போக்கில் சூழ்நிலைக்கு ஏற்றபடி அவசர சிகிச்சைக்காக அதிகம் வருவார்கள். இப்பொழுதோ மிகவும் சௌகரியமாக மருந்து எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பிறகோஅவசர சிகிச்சைக்காக நேரம் மற்றும் சக்திகளை குறைந்த நேரத்தில் அதிகமான நபர்களை கவனிக்க வேண்டும். நீங்கள் மக்களிடம் நிரந்தர நோயற்றவராக ஆவதற்காக உலகத்தில் ஒரே ஒரு மருத்துவமனை தான் இருக்கிறது என்று சவால் விடுகிறீர்கள் என்றால், நாலாபுறங்களிலும் உள்ள நோயாளிகள் எங்கே செல்வார்கள்? அவசர சிகிச்சைக்காக வரிசையில் நிற்பார்கள். அந்த நேரம் என்ன செய்வீர்கள்? அமரர் ஆகுக! என்ற வரதானத்தையோ கொடுப்பீர்கள் இல்லையா? தனது பயிற்சி என்ற ஆக்சிஜன் மூலமாக தைரியத்தின் சுவாசத்தைக் கொடுக்க வேண்டியதாக இருக்கும். நம்பிக்கை இழந்த கேஸ் என்றால் நாலாபுறங்களிலும் மனமுடைந்து போனவர்களின் கேஸ்கள் அதிகம் வரும். அந்த மாதிரி நம்பிக்கை இழந்த ஆத்மாக்களுக்கு தைரியம் கொடுப்பது தான் சுவாசத்தை நிரப்புவது. எனவே உடனடியாக ஆக்சிஜன் கொடுக்க வேண்டியதாக இருக்கும். அந்த சுய பயிற்சியின் ஆதாரத்தில் அந்த மாதிரி ஆத்மாக்களை சக்திசாலி ஆக்க முடியும். எனவே நேரமின்மை என்ற இதைக் கூறாதீர்கள். நேரம் இருக்கிறது என்றால், அது இப்பொழுது தான் இருக்கிறது. பிறகு இருக்காது. எப்படி மனிதர்களிடம் நேரம் கிடைக்காது என்று கூறுகிறீர்கள். ஆனால் நேரத்தை இதற்காக ஒதுக்க வேண்டும் என்று அப்படி கூறுகிறீர்கள் இல்லையா? எனவே சுயபயிற்சி செய்வதற்காகவும் நேரம் கிடைத்தால் செய்வோம் என்று அப்படி இருக்கக்கூடாது. நேரத்தை இதற்காக ஒதுக்க வேண்டும்.

ஸ்தாபனையின் தொடக்க காலத்திலிருந்து ஒரு விசேஷ விதி இருந்து வருகிறது. அது எது? சிறு சிறு துளிகள் நிரம்பி குளமாகும். எனவே நேரத்திற்காகவும் இதே விதி தான். எப்பொழுது நேரம் கிடைத்தாலும் பயிற்சி செய்து செய்து அனைவரும் பயிற்சி சொரூப கடலில் ஆகிவிடுவார்கள். ஒரு விநாடி கிடைத்தாலும் அதையும் பயிற்சி செய்வதற்காக சேமித்துக் கொண்டே இருங்கள், ஒரு விநாடி ஒரு விநாடி என்று கூறி, எத்தனை ஆகி விடும். ஒன்றாகச் சேர்த்தீர்கள் என்றால் அரை மணி நேரமும் ஆகிவிடும். நடைமுறை காரியத்திலேயே பயிற்சி செய்பவராக ஆகிவிடுங்கள். எப்படி சாதகப் பறவைகள் ஒவ்வொரு மழைத்துளிக்காக தாகம் உள்ளதாக இருக்கும். அந்த மாதிரி சுயபயிற்சி செய்யும் சாதகப் பறவை ஒவ்வொரு விநாடியையும் பயிற்சி செய்வதில் ஈடுபடுத்தினார் என்றால் பயிற்சி சொரூபமாக ஆகியே விடுவார்.

சுயப்பயிற்சி செய்வதில் அலட்சியமானவராக ஆகாதீர்கள். ஏனென்றால், இறுதியில் விசேஷமாக சக்திகளின் பயிற்சியின் அவசியம் இருக்கிறது. அந்த நடைமுறை சோதனைகள் மூலமாகத் தான் வரிசை எண் கிடைக்கும். எனவே முதல் டிவிஷனில் வருவதற்காக சுயப்பயிற்சியை அதிவேகமாகச் செய்யுங்கள். அதிலேயும் ஒருமித்த நிலையின் சக்திக்கு விசேஷ பயிற்சி செய்து கொண்டே இருங்கள். குழப்பம் ஏற்படுகிறது மற்றும் நீங்கள் ஒருமித்த நிலை உள்ளவராக ஆகிவிடுங்கள். அமைதியான இடம் மற்றும் சூழ்நிலையில் ஒருமித்த நிலையில் இருப்பது என்பதோ சாதாரண விஷயம், ஆனால் நான்கு விதமான குழப்பங்களின் இடையில் ஒருவரின் முடிவில் மூழ்கிவிடுவது என்றால் ஏகாந்தவாசி ஆகிவிடுவது. ஏகாந்தவாசியாகி ஒருமித்த நிலையில் நிலைத்திருந்து விடுங்கள், இது தான் மகாரதிகள் செய்ய வேண்டிய மகான் முயற்சி. புதுப்புது குழந்தைகளைப் பொருத்தளவில் மிகவும் சுலபமான சாதனம். ஒரு விஷயத்தை மட்டும் நினைவு செய்யுங்கள், மேலும் ஒரு விஷயத்தை மட்டும் அனைவருக்கும் கூறுங்கள். ஒரு விஷயத்தை நினைவு செய்வது மற்றும் கூறுவதோ கடினம் இல்லை தான் இல்லையா? நிறைய விஷயங்கள் இருக்கின்றன என்றால் மறந்து விடுகின்றீர்கள், ஆனால் ஒரு விஷயத்தையோ மறக்க மாட்டீர்கள். ஒரே ஒருவரின் மகிமை செய்கிறீர்கள், ஒரே ஒருவரின் பாடல் பாடுகிறீர்கள், மேலும் அந்த ஒரே ஒருவரின் அறிமுகத்தைக் கொடுத்துக் கொண்டே இருங்கள். இது சுலபம் தான் இல்லையா அல்லது இதுவும் கடினமா? எங்கு ஒருவர் இருக்கிறாரோ அங்கு ஒருவரின் இரசனையில் இருக்கும் நிலை இயல்பாக உருவாகிவிடுகிறது. மேலும் வேண்டியதே என்ன? ஒருவரின் இரசனையில் இருப்பது தான் வேண்டும் இல்லையா. எனவே ஒரு வார்த்தையை நினைவில் வையுங்கள். ஒருவரின் பாடலைப் பாடுவது, ஒருவரை நினைவு செய்வது, எவ்வளவு சுலபம். புதுப்புது குழந்தைகளுக்காக சுலபமான குறுக்கு வழியைக் கூறுகிறோம். எனவே விரைவில்

சென்றடைந்து விடுவார்கள். இதைத் தான் விரும்புகிறீர்கள் இல்லையா? பின்னால் வந்திருக்கிறீர்கள், ஆனால் முன்னால் செல்ல வேண்டும் என்றால் இது தான் குறுக்கு வழி. இதன்படி நடந்தீர்கள் என்றால் முன்னுக்கு சென்றடைந்து விடுவீர்கள். மாதாக்களுக்கோ அனைத்து விஷயங்களிலும் சுலபம் வேண்டும் இல்லையா? ஏனென்றால் பல ஜென்மங்களாக மிகவும் களைப்படைந்திருக்கிறார்கள். எனவே சுலபமானது வேண்டியதாக இருக்கிறது. எவ்வளவு அலைந்திருக்கிறீர்கள். 63 ஜென்மங்களில் எவ்வளவு அலைந்திருக்கிறீர்கள். எனவே அலைந்து திரிந்த ஆத்மாக்களுக்கு சகஜமான மார்க்கம் தேவையாக இருக்கிறது. சகஜ மார்க்கத்தில் செல்வதினால் இலக்கை சென்றடைந்தே விடுவீர்கள். புரிந்ததா? நல்லது.

புதியவர்களும் அமர்ந்திருக்கிறார்கள் மற்றும் மகாரதிகளும் அமர்ந்திருக்கிறார்கள். இருவர்களும் எதிரில் இருக்கிறார்கள். அனைத்தையும் விட மிக அருகாமையில் இருப்பது குஜராத் தான் இல்லையா? அருகில் இருப்பதுடன் குஜராத் சகயோகியாகவும் இருக்கிறது. சகயோகம் கொடுப்பதில் குஜராத்தின் எண் இராஜஸ்தானை விட முன்னுக்கு இருக்கிறது. அபு இராஜஸ்தானில் இருக்கிறது. அந்த மாதிரி இராஜஸ்தான் அருகாமையில் இருக்கிறது இல்லையா? இராஜஸ்தானின் இராஜாக்களும் விழித்தெழுந்து விட்டார்கள் என்றால், அதிசயம் செய்வார்கள். இப்பொழுது குப்தமாக இருக்கிறார்கள், பின்பு பிரத்யக்ஷம் ஆகிவிடுவார்கள். குஜராத்தின் ஜென்மம் எப்படி ஏற்பட்டது என்று தெரியுமா? குஜராத்திற்கு முதலில் சகயோகம் கொடுக்கப்பட்டது. சகயோகத்தின் நீர் மூலம் விதை பெரிய மரமாக வளர்ந்தது. எனவே பழமும் சகயோகத்தினுடையது தான் வெளிப்படும். குஜராத்திற்கு நேரடியாக பாப்தாதாவின் எண்ணத்தின் சகயோகத்தின் தண்ணீர் கிடைத்திருக்கிறது. எனவே பழமும் சகயோகத்தினுடையது தான் வெளியாகும். புரிந்ததா! குஜராத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பாக்கியம் நிறைந்தவர்கள். குஜராத்தில் பாப்தாதா சென்டர் திறந்தார். குஜராத் திறக்கவில்லை, எனவே விரும்பாவிட்டாலும் சுலபமாகவே சகயோகத்தின் பழம் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. நீங்கள் கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்காது. எந்தவொரு காரியத்திலும் உங்களுக்கு கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்காது. பூமி சகயோகத்தின் பழம் கொடுப்பதற்கானது. நல்லது.

அனைத்து சுயபயிற்சி செய்யும் சாதகப் பறவைகளுக்கு, எப்பொழுதும் ஏகாந்தவாசி, ஒருமித்த நிலையில் இருக்கும் சக்திசாலியான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சுய பயிற்சியின் சக்திகள் மூலம் அனைவரையும் மனமுடைந்து போனவர்களிலிருந்து எப்பொழுதும் உள்ளத்தை குஷியாக வைத்துக் கொள்ளக்கூடிய, எப்பொழுதும் அனைத்து சக்திகளை

நடைமுறையில் ஈடுபடுத்துக்கூடிய அந்த மாதிரி சிரேஷ்ட சுயபயிற்சி செய்பவர், சுயராஜ்ஜிய அதிகாரி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, மகாவீரர்களுக்கு மேலும் புதுப்புது குழந்தைகளுக்கு, அனைவருக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

ஒருவர் வருகிறார், மேலும் ஒருவர் செல்கிறார். வருவது போவதின் மேளா. பாப்தாதாவோ அனைத்து குழந்தைகளைப் பார்த்து குஷியடைகிறார். புதியவர்களாக இருந்தாலும், பழையவர்களாக இருந்தாலும், மொழியைத் தெரிந்திருந்தாலும் அல்லது தெரியாவிட்டாலும், முரளியை புரிந்து கொள்கிறார்கள் அல்லது புரிந்து கொள்வதில்லை என்றாலும் ஆனால் அவரும் தந்தையின் குழந்தை தானே! இருந்தும் அன்புடன் வந்து சேர்ந்து விடுகிறார். தந்தை எந்த விஷயத்தின் பசியில் இருக்கிறார்? அன்பின். விவேகத்தின் பசியுள்ளவராக இல்லை. உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறதா என்று தந்தை அன்பைப் பார்க்கிறார். எந்தளவு வெகுளியாக இருக்கிறார்களோ அந்தளவே உண்மையான அன்பு இருக்கிறது, சாதுர்யமான அன்பு இல்லை, எனவே வெகுளியான குழந்தைகள் மிகவும் பிரியமானவர்கள். எப்படி ஞானம் நிறைந்தவர் என்ற பட்டம் இருக்கிறது. அதே போல் போலாநாத் என்ற பட்டமும் இருக்கிறது. இரண்டின் நினைவுச் சின்னமும் இருக்கின்றன. பாவனை நிறைந்த புதுப்புது குழந்தைகள் மிகவும் நல்லவர்கள். நல்லது.

பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு

1) எப்பொழுதும் தன்னை டபுள் லைட் ஃபரிஷ்தா என்று நினைக்கிறீர்களா? ஃபரிஷ்தா என்றால் டபுள் லைட். எந்த அளவு லேசான நிலை இருக்குமோ அந்த அளவு தன்னை ஃபரிஷ்தா என்று அனுபவம் செய்வார்கள். ஃபரிஷ்தா எப்பொழுதும் பிரகாஷமாக மின்னிக் கொண்டிருக்கும், மின்னிக் கொண்டிருக்கும் காரணத்தினால் அனைவரையும் தன் பக்கம் இயல்பாகவே ஈர்த்து விடும். அந்த மாதிரி ஃபரிஷ்தாக்களுக்கு உடல் மற்றும் உடலின் உலகத்துடன் எந்தவொரு ரிஷ்தா அதாவது உறவு இருப்பதில்லை. உடலில் இருப்பதே சேவைக்காகத் தானேயன்றி உறவின் ஆதாரத்தில் இல்லை. உடலின் உறவின் ஆதாரத்தில் இருப்பதில்லை, சேவையின் சம்மந்தத்தின் காரணமாக இருக்கிறார்கள். குடும்ப வாழ்க்கையில் உறவு என்று நினைத்து இருக்காமல், சேவை என்று புரிந்து இருக்க வேண்டும். வீடு அதே தான், பரிவாரமும் அதே தான், ஆனால் சேவையின் சம்மந்தத்தில் இருக்கிறீர்கள். கர்ம பந்தனத்தின் வசமாகி இருப்பதில்லை. சேவையின் சம்மந்தத்தில் என்ன, ஏன் என்பது இருக்காது. எப்படிப்பட்ட ஆத்மாக்களாக இருந்தாலும் சேவையின் சம்மந்தம் பிரியமானது. தேகம் இருக்கிறது என்றால், அங்கு விகாரம் இருக்கும். தேகத்தின் சம்மந்தத்தினால் விகாரம் வருகிறது. தேகத்தின் சம்மந்தம் இல்லை

என்றால் விகாரம் இருப்பதில்லை. எந்தவொரு ஆத்மாவையும் சேவையின் சம்மந்தத்தில் பார்த்தீர்கள் என்றால் விகாரங்கள் உருவாகுதல் இருக்காது. அந்த மாதிரி உறவினாராகி இருக்காமல் ஃபரிஷ்தாவாகி இருங்கள். எங்கு சேவை பாவனை இருக்கிறதோ அங்கு எப்பொழுதும் சுபபாவனை இருக்கும், வேறு எந்த உணர்வும் இருக்காது. இதைத் தான் மிகவும் விலகியிருந்து மற்றும் மிகவும் அன்பாக தாமரை மலருக்குச் சமமாக இருப்பவர் என்று கூறுவது. அனைத்து ஆத்மாக்களை விட உத்தமமான ஃபரிஷ்தா ஆனீர்கள் என்றால் தான் தேவதையாக ஆவீர்கள்.

2) அனைவரும் துக்கமில்லா ஊரின் மகாராஜாக்கள், துக்கத்திலிருந்து விடுபட்டு சுகமான உலகின் அனுபவி என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? முன்பு துக்கத்தின் உலகத்தின் அனுபவியாக இருந்தோம், இப்பொழுது துக்கத்தின் உலகத்திலிருந்து விடுபட்டு சுகத்தின் உலகத்தின் அனுபவி ஆகிவிட்டோம். இப்பொழுது சுகத்திற்கான ஒரு மந்திரம் கிடைப்பதினால் துக்கம் முடிவடைந்து விட்டது. சுகம் கொடுக்கும் வள்ளலின் சுகசொரூப ஆத்மாக்கள், சுகத்தின் கடல் தந்தையின் குழந்தைகள், இந்த மந்திரம் தான் கிடைத்திருக்கிறது இல்லையா? மனம் தந்தையின் பக்கம் ஈடுபட்டு விடுகிறது என்றால், துக்கம் எங்கிருந்து வர முடியும். எப்பொழுது மனதை தந்தையை தவிர வேறு எங்காவது ஈடுபடுத்துகிறீர்கள் என்றால், மனதில் துக்கம் ஏற்படுகிறது. மன்மனாபவ என்ற நிலை இருக்கிறது என்றால் துக்கம் இருக்க முடியாது. அப்படியானால் மனம், தந்தையிடம் இருக்கிறதா அல்லது வேறு எங்கேயாவது இருக்கிறதா? தவறான மார்க்கத்தில் செல்கிறார்கள் என்றால், துக்கம் ஏற்படுகிறது. எப்பொழுது நேர்வழி இருக்கிறது என்றால், தவறான வழியில் ஏன் செல்கிறீர்கள்? எந்த பாதையில் செல்வதற்கு தடை இருக்கிறது என்றால், அந்த பாதையில் யாராவது சென்றார்கள் என்றால், அரசாங்கமும் தண்டிக்கும் இல்லையா? பாதையை மூடிவிட்டார்கள் என்றால், ஏன் செல்கிறீர்கள்? உடலும் உங்களுடையது, மனதும் உங்களுடையது, பணம் செல்வமும் உங்களுடையது, என்னுடையது என்பது எதுவும் இல்லை என்றான பிறகு துக்கம் எங்கிருந்து வர முடியும்? உன்னுடையது என்றால், துக்கம் இல்லை, என்னுடையது என்றால் துக்கம் இருக்கும். உன்னுடையது, உன்னுடையது என்று சொல்சொல்உன்னுடையதாக ஆகிவிட்டது.

3) எப்பொழுதும் ஒரே பலம் மேலும் ஒரே ஒருவர் மீது நம்பிக்கை இதே நிலையில் இருக்கிறீர்களா? ஒருவர் மீது நம்பிக்கை என்றால், பலத்தின் பிராப்தி ஆவது! அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? நிச்சயபுத்தி உடையவர்கள் வெற்றி அடைவார்கள்! இதையே வேறு வார்த்தைகளில் ஒரே பலம், ஒருவரின் மீது உள்ள நம்பிக்கை என்று கூறப்படுகிறது.

நிச்சயபுத்தி உடையவருக்கு வெற்றி கிடைக்கவில்லை என்பது இருக்கவே முடியாது. தன் மனதினுள்ளேயே சிறிதளவு எண்ணத்தில் கூட இது நடக்குமா அல்லது நடக்காதா என்றிருக்கிறது என்றால் வெற்றி இருக்காது. தன் மீது, தந்தை மீது மேலும் நாடகத்தின் மீது முழுமையான நிச்சயம் இருக்கிறது என்றால், ஒருபொழுதும் வெற்றி கிடைக்கவில்லை என்பது இருக்க முடியாது. ஒருவேளை வெற்றி கிடைக்கவில்லை என்றால் அவசியம் ஏதாவது ஒரு பாய்ன்ட்டில் நிச்சயத்தின் குறை இருக்கிறது. எப்பொழுது தந்தை மீது நிச்சயம் இருக்கிறது என்றால் தன், மீதும் நிச்சயம் இருக்கிறது! நீங்கள் மாஸ்டர் இல்லையா? எப்பொழுது மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால் நாடகத்தின் ஒவ்வொரு விஷயத்தையும் நிச்சயபுத்தி உடையவராகி பார்ப்பார். அந்த மாதிரி நிச்சயபுத்தி உடைய குழந்தைகளின் மனதில் என்னுடைய வெற்றி கண்டிப்பாக இருக்கிறது என்ற ஊக்கம் இருக்கும். அந்த மாதிரி வெற்றி அடைபவர்கள் தான் வெற்றி மாலையின் மணி ஆகிறார்கள். வெற்றி அவர்களுடைய ஆஸ்தி. பிறப்பு உரிமையின் அதிகாரத்தில் இந்த ஆஸ்தி பிராப்தி ஆகிறது.

மாதர்களுடன் சந்திப்பு -

பாப்தாதாவோ மாதர்களை எப்பொழுதுமே நமஸ்காரம் செய்கிறார். ஏனென்றால் மாதர்கள் சேவையில் எப்பொழுதும் அடி முன்னுக்கு எடுத்து வைத்திருக்கிறார்கள். பாப்தாதா மாதர்களின் மகிமை பாடுகிறார். எவ்வளவு சிரேஷ்ட மாதர்களாக ஆகிவிட்டீர்கள். அதைப் பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகிறார். எப்பொழுதும் தன்னுடைய இந்த பாக்கியத்தை நினைவில் மட்டும் வைத்து குஷியாக இருங்கள். மனதில் குஷியின் பாடல் எப்பொழுதுமே ஒத்துக் கொண்டே இருக்கட்டும். மேலும் மாதர்களுக்கு வேறு வேலை தான் என்ன இருக்கிறது. பிராமணன் ஆகிவிட்டீர்கள் என்றால், பாடுவது மற்றும் ஆடுவது தான் உங்களுடைய வேலை. மனதால் ஆடுங்கள், மனதால் பாடலைப் பாடுங்கள். ஒவ்வொரு ஜகத் மாதாக்கள் ஒருவேளை ஒவ்வொரு ஆத்ம தீபத்தை ஏற்றினீர்கள் என்றால் எத்தனை தீபங்கள் எரிய ஆரம்பித்து விடும். ஜகத்தின் மாதாக்கள் ஜகத்தின் தீபங்களை எரிய வைத்துக் கொண்டு இருக்கிறீர்கள் இல்லையா? தீபங்கள் எரிந்து எரிந்து தீபாவளி ஆகிவிடும். நல்லது.

கேள்வி:

சேவை செய்வதற்கான சுலபமான வழி, அனைவரையும் ஆகர்ஷணம் (ஈர்த்தல்) செய்வதற்கான சுலபமான வழி மற்றும் முயற்சி எது?

பதில்:

மகிழ்ச்சி நிறைந்த முகம். யார் எப்பொழுதுமே மகிழ்ச்சி நிறைந்தவராக இருப்பாரோ அவர் இயல்பாகவே அனைவரையும் தன் பக்கம் ஈர்ப்பார். மேலும் சுலபமாகவே சேவைக்குப் பொறுப்பாளராகவும் ஆகிவிடுவார். மகிழ்ச்சி நிறைந்த முகம் குஷியின் அடையாளம். குஷி நிறைந்த முகத்தைப் பார்த்து என்ன அடைந்தீர்கள், என்ன கிடைத்தது என்று இயல்பாகவே கேட்பார்கள். எனவே எப்பொழுதும் குஷியில் இருங்கள். என்னவாக இருந்தீர்கள், என்னவாக ஆகிவிட்டீர்கள், இதன் மூலமாகவே சேவை நடந்து கொண்டே இருக்கும்.

கேள்வி:

திலகத்தின் அர்த்தம் என்ன? எந்த திலகத்தை இட்டுக் கொண்டால் எப்பொழுதும் போதை மற்றும் குஷியில் இருப்பார்கள்?

பதில்:

திலகத்திற்கான அர்த்தம் நினைவு சொரூபம். எனவே நான் ஆசனத்தில் அமர்ந்திருப்பவன் என்ற நினைவு எப்பொழுதுமே இருக்கட்டும். நான் அந்த மாதிரி கண்டெடுக்கப்பட்ட ஆத்மா பிரபுவின் இதயசிம்மாசனத்திற்கு உரியவன் ஆகிவிட்டேன். இந்த திலகத்தை இட்டுக் கொள்வதினால் எப்பொழுதும் குஷி மற்றும் போதையில் இருப்பீர்கள். பொதுவாக ஆசனம் மற்றும் பாக்கியம் என்று கூறுவார்கள். ஆசனத்தில் அமர்ந்திருப்பவராக ஆவதினால் பாக்கியம் கிடைக்கிறது. எனவே நிரந்தரமான சிரேஷ்ட ஆசனம் மற்றும் பாக்கியம் நிறைந்த ஆத்மா என்ற இதே போதை மற்றும் குஷியில் எப்பொழுதும் இருங்கள்.

வரதானம்:

நினைவு மற்றும் சேவை மூலமாக அனைத்து குழப்பங்களையும் முடிவுகட்டி, ஒளி மேல் விழுந்து பலியாகக்கூடிய உண்மையான விட்டில் பூச்சி ஆகுக.

எந்தக் குழந்தைகள் எப்பொழுதும் நினைவு மற்றும் சேவையில் பிஸியாக இருக்கிறார்களோ அவர்கள் அனைத்து குழப்பங்களிலிருந்து சுலபமாகவே விடுபட்டு விடுகிறார்கள். ஏதாவது குழப்பம் இருந்துவிட்டது என்றால் குழம்பிக் கொண்டே இருப்பார்கள். சில நேரம்

சம்மந்தங்களின் குழப்பம், சில நேரம் தன்னுடைய சுபாவம் சம்ஸ்காரத்தின் குழப்பம். அந்த மாதிரி அனைத்து வீணான குழப்பங்கள் எப்பொழுது முடிவடையும் என்றால், எப்பொழுது புத்தியில் ஜோதியைத் தவிர (சிவபாபாவைத் தவிர) வேறு எதுவுமே இல்லையோ அப்போது! ஜோதி மீது பலியாகுபவர்கள், ஜோதிக்குச் சமமானவர்கள் ஆகிவிடுகிறார்கள். அந்த மாதிரி விழுந்து பலியாகுபவர்கள் தான் உண்மையான விட்டில் பூச்சிகள்.

சுலோகன் :

யார் உண்மையான தங்கம் ஆகியிருக்கிறார்களோ அவர்களுடைய தொடர்பில் இரும்பு மாதிரியான ஆத்மாக்களும் தங்கம் ஆகிவிடுவார்கள்.

ஓம்சாந்தி

14.12.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" பிரபுவின் பரிவாரம் - அனைத்தையும் விட சிறந்த பரிவாரம் "

இன்று பாப்தாதா தன்னுடைய சிரேஷ்ட பிராமண பரிவாரத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார். பிராமண பரிவாரம் எவ்வளவு உயர்ந்ததிலும் உயர்ந்த பரிவாரம். அதை நீங்கள் அனைவரும் நல்ல விதமாக தெரிந்திருக்கிறீர்களா? பாப்தாதா முதன்முதலில் பரிவாரத்தின் (குடும்பம்) அன்பின் சம்மந்தத்தில் கொண்டுவந்தார். நீங்கள் சிரேஷ்ட ஆத்மாக்கள் என்ற இந்த ஞானம் மட்டும் சொல்லவில்லை. ஆனால் நீங்கள் குழந்தைகள் சிரேஷ்ட ஆத்மாக்கள் என்று கூறினார். அந்த மாதிரி தந்தை மற்றும் குழந்தைகளின் சம்மந்தத்தில் கொண்டு வந்தார். அந்த சம்மந்தத்தில் வருவதினால் உங்களுக்குள்ளும் தூய்மையான சகோதரன் – சகோதரியின் சம்மந்தத்தில் வந்தீர்கள். எங்கு பாப்தாதா, சகோதரன் - சகோதரியின் சம்மந்தம் ஏற்பட்டு விட்டது என்றால் என்னவாகிறது?. பிரபுவின் குடும்பம் ஆனது. ஒருபொழுதும் கனவில் கூட நடைமுறை ரூபத்தில் நேரடியாக பிரபுவின் பரிவாரத்தில் வாரிசாகி, ஆஸ்தியின் அதிகாரி ஆவோம் என்ற இந்த பாக்கியத்தை நினைத்திருந்தீர்களா? நடைமுறை ரூபத்தில் பிரபுவின் பாலனையைப் பெறுவேன் என்ற இது எண்ணத்தில் கூட இருந்ததில்லை. ஆனால் இப்பொழுது அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? இந்த அனைத்து அனுபவங்களையும் செய்வதற்கான பாக்கியமும் பிரபுவின் பரிவாரத்தினராக எப்பொழுதுஆனீர்களோ அப்பொழுது தான் பிராப்தி ஆனது. எந்த அளவு உயர்ந்த பரிவாரத்தின் அதிகார உரிமையுள்ள குழந்தைகளாக ஆகியிருக்கிறீர்கள்! எந்த அளவு தூய்மையான வளர்ப்பில் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள்! எந்த மாதிரி ஆன்மீக பிராப்திகளின் ஊஞ்சல் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த அனைத்தையும் அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா? பரிவாரம் மாறிவிட்டது. யுகம் மாறிவிட்டது. தர்மம் (தாரணை), காரியம் அனைத்தும் மாறிவிட்டது. யுகம் பரிவர்த்தனை ஆன காரணத்தினால் துக்கமான உலகத்திலிருந்து சுகமான உலகத்திற்கு வந்து விட்டீர்கள். சாதாரண ஆத்மாவிலிருந்து புருஷோத்தமர் ஆகிவிட்டீர்கள். 63 ஜென்மங்கள் சேற்றில் இருந்தீர்கள், இப்பொழுது சேற்றில் இருக்கும் தாமரை மலர் ஆகிவிட்டீர்கள். பிரபு பரிவாரத்தில் வருவது என்றால், பல பிறவிகளுக்கு அதிர்ஷ்டத்தின் ரேகை உயர்ந்ததாக ஆகிவிடுவது. பிரபு பரிவாரம், பரிவாரம் என்றால் தாக்குதலிருந்து விலகியவர் (பாதுகாப்பாக) ஆகிவிடுவது. ஒருபொழுதும் பிரபு குழந்தைகள் மேல் தாக்குதல் நடக்க முடியாது. பிரபு பரிவாரத்தினுடையவராக ஆனீர்கள், பிறகு நிரந்தரமாக அனைத்து பிராப்திகளின் களஞ்சியம்

நிரம்பி விடுகிறது.. அந்த மாதிரி மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகிவிட்டீர்கள், அதன் காரணமாக இயற்கையும் பிரபுவின் குழந்தைகள் உங்களின் வேலையாளாக சேவை செய்யும். இயற்கை பிரபு பரிவாரத்தை சேர்ந்த உங்களை சிரேஷ்டமானவர்கள் என்று புரிந்து, உங்கள் மீது பல பிறவிகளுக்கு விசிறியை வீசிக் கொண்டே இருக்கும். சிரேஷ்ட ஆத்மாக்களின் வரவேற்பில், மரியாதை காரணமாக விசிறி வீசுவார்கள் இல்லையா? இயற்கை நிரந்தரமாக மரியாதை கொடுத்துக் கொண்டே இருக்கும். பிரபு பரிவாரத்தின் மீது இப்பொழுது கூட அனைத்து ஆத்மாக்களின் மேல் அன்பு இருக்கிறது. அந்த அன்பின் ஆதாரத்தில் இது வரையிலும் மகிமை பாடிக் கொண்டும், பூஜை செய்து கொண்டும் இருக்கிறார்கள். பிரபு பரிவாரத்தின் சரித்திரங்களை எவ்வளவு பெரிய நினைவுச் சின்னமாக சாஸ்திரங்களையும், பாகவதத்தையும் இப்பொழுது கூட அன்புடன் கேட்கிறார்கள் மற்றும் சொல்லிக் கொண்டும் இருக்கிறார்கள். பிரபு பரிவாரத்தின் ஆசிரியர் மற்றும் இறைமாணவ வாழ்க்கையின் படிப்பின் நினைவுச் சின்ன சாஸ்திரம் கீதையை எவ்வளவு தூய்மையுடன் விதிப்பூர்வமாகக் கேட்கிறார்கள் மற்றும் சொல்கிறார்கள். பிரபு பரிவாரம் தந்தையின் இதய சிம்மாசனதாரி ஆக்குகிறார்கள், அந்த மாதிரியான ஆசனம் பிரபு குடும்பத்தினரைத் தவிர வேறு யாருக்கும் கிடைக்க முடியாது. இது தான் பிரவு குடும்பத்தின் விசேஷம். எத்தனை குழந்தைகள் இருந்தாலும் அத்தனை குழந்தைகளும் இதய சிம்மாசனதாரியாக ஆகிறார்கள். வேறு எந்த இராஜ குடும்பத்திலும் அனைத்து குழந்தைகளும் சிம்மாசனதாரி ஆவதில்லை. ஆனால் பிரபுவின் அனைத்து குழந்தைகளும் அதிகாரி குழந்தைகள். அனைவரையும் இராஜா ஆக்கிவிடுகிறார். ஜென்மம் எடுத்தவுடனேயே அனைத்து குழந்தை களுக்கும் சுயராஜ்யத்தின் திலகத்தை தந்தை இட்டு விடுகிறார். பிரஜா திலகம் இடுவதில்லை. இராஜ திலகம் இடுகிறார். மகிமையும் இராஜ திலகத்திற்கு தான் இருக்கிறது இல்லைய?. விசேஷமாக இராஜ திலகம் இடும் நாளைக் கொண்டாடுவார்கள். நீங்கள் அனைவருமே இராஜ திலகமிட்ட நாளைக் கொண்டாடி விட்டீர்களா அல்லது இப்பொழுது கொண்டாட வேண்டுமா? கொண்டாடி விட்டீர்கள் தான் இல்லையா? குஷியின் அடையாளமாக, பாக்கியத்தின் அடையாளமாக, கஷ்டம் விலகியதின் அடையாளமாக, திலகம் இருக்கிறது. எப்பொழுது ஏதாவது விசேஷ காரியத்திற்காக செல்கிறார்கள் என்றால் காரியம் வெற்றி அடைய வேண்டும் என்பதற்காக பரிவாரத்தில் உள்ளவர்கள் திலகம் இட்டு அனுப்புவார்கள். உங்கள் அனைவருக்கும் திலகம் இடப்பட்டு இருக்கிறது தான் இல்லையா? திலகமிட்டவராக சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவராக, உலக நன்மை காரியத்தின் பொறுப்பு என்ற கிரீடத்தை அணிந்தவராக ஆகிவிட்டீர்கள் இல்லையா? எதிர்காலத்தின் கிரீடம் மற்றும் திலகம் இதே ஜென்மத்தின் பிராப்தியின் பலன் ஆகும். விசேஷமாக பிராப்தி செய்வதற்கான நேரம் அல்லது பிராப்திகளின் சுரங்கத்தை அடைவதற்கான நேரம் இப்பொழுது தான். இப்பொழுது இல்லை என்றால், எதிர்காலத்து

பிராப்தியும் இல்லை. வள்ளலின் குழந்தைகளுக்கு, வரமளிப்பவரின் குழந்தைகளுக்கு இல்லை என்ற ஒரு பொருளே இல்லை என்ற மகிமை, இந்த வாழ்க்கையின் மகிமை தான். இருந்தும் எதிர்காலத்தில் இல்லை என்ற ஒன்றோ இருக்கத்தான் செய்யும். தந்தையின் சந்திப்போ இருக்காது இல்லையா. அனைத்து பிராப்திகள் நிரம்பிய வாழ்க்கை தான் ஈஸ்வரிய பரிவாரம். அந்த மாதிரி பரிவாரத்தில் வந்து சேர்ந்து விட்டீர்கள் இல்லையா? நான் அந்த மாதிரி உயர்ந்த பரிவாரத்தைச் சேர்ந்தவன் என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா? அவரை மகிமை செய்யத் தொடங்கினோம் என்றால் அனேக இரவுகள், பகல்கள் கடந்து சென்று விடும். பாருங்கள் பக்தர்களுக்கு கீர்த்தனை பாடிப்பாடி எவ்வளவு பகல் மற்றும் இரவு கடந்து விடுகிறது. இன்று வரையிலும் பாடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே நான் யார் என்ற அந்த போதைமற்றும் குஷி எப்பொழுதும் இருக்கிறதா? என்ற கேள்வி எப்பொழுதும் நினைவில் இருக்கிறதா? நினைவு மறந்த நிலை மற்றும் நினைவில் இருப்பது என்ற சுழற்சியில் வருவதில்லையே! சுழற்சியிலிருந்து விடுபட்டு விட்டீர்கள் தான் இல்லையா. சுயதரிசன சக்கரதாரி ஆவது என்றால் அனேக எல்லைக்குட்பட்ட சுழற்சிகளிலிருந்து விடுபடுவது! அந்த மாதிரி ஆகிவிட்டீர்கள் இல்லையா! நீங்கள் அனைவரும் சுயதரிசன சக்கரதாரி தான் இல்லையா! நீங்கள் மாஸ்டர் தான் இல்லையா! மாஸ்டர் அனைத்தையும் தெரிந்திருப்பார். தினசரி அமிர்தவேளையில் நான் யார் என்பதை நினைவில் வைத்தீர்கள் என்றால், நிரந்தரமாக சக்திசாலி ஆகி விடுவீர்கள். நல்லது.

பாப்தாதா எல்லைக்கப்பாற்பட்ட பரிவாரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். எல்லைக்கப்பாற்பட்ட தந்தை எல்லைக்கப்பாற்பட்ட பரிவாரத்திற்கு எல்லைக்கப்பாற்பட்ட அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார்.

எப்பொழுதும் சிரேஷ்ட பரிவாரத்தின் போதையில் இருக்கக்கூடிய, பிரபு பரிவாரத்தின் மகத்துவத்தைத் தெரிந்து, மகான் ஆகக்கூடிய அனைத்து பிராப்திகளின் களஞ்சியமான சிரேஷ்ட இராஜ பாக்கியத்தை அடையக்கூடிய பிரபுவின் இரத்தினங்களுக்கு அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

(கயானாவைச் சேர்ந்த அங்கிள் (முன்னாள் உதவி ஜனாதிபதி) மற்றும் ஆன்ட்டியுடன்). சேவை செய்யும் குழந்தைகளை பாப்தாதா சந்திப்பதின் கூடவே வரவேற்கவும் செய்கிறார். எந்த அளவு ஒவ்வொரு விநாடியும் நினைவு செய்து வந்திருக்கிறீர்களோ அதற்குப் பலனாக பாப்தாதா

கண்களின் இமைகளில் நிரம்பியிருக்கும் குழந்தைகளை வரவேற்றுக் கொண்டிருக்கிறார். ஒரு தந்தையின் மகிமையை பாடக்கூடிய குழந்தைகளைப் பார்த்து பாப்தாதாவும் குழந்தைகளின் விசேஷத்தை மகிமை பாடுகிறார். ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு நாளும் பாடல் பாடிக் கொண்டே இருக்கிறீர்கள் தான் இல்லையா! எப்பொழுது குழந்தைகள் பாடல் பாடுகிறார்கள் என்றால் தந்தை என்ன செய்கிறார்? எப்பொழுது யாராவது நன்றாகப் பாடுகிறார் என்றால் கேட்பவர்கள் என்ன செய்வார்கள்? விரும்பாவிட்டாலும் கூட நடனம் ஆடத் தொடங்குவார்கள். நடனம் ஆடத் தெரிந்தாலும் அல்லது தெரியாவிட்டாலும் ஆனால் அமர்ந்து கொண்டே நடனம் ஆடத் தொடங்கி விடுவார்கள். அந்த மாதிரி குழந்தைகள் அன்பு நிறைந்த பாடலைப் பாடுகிறார்கள் என்றால், பாப்தாதாவும் குஷியில் நடனம் ஆடுகிறார் தான் இல்லையா! எனவே சங்கரின் (நடராஜரின்) நடனம் மிகவும் பிரபலமானது. சேவையும் நடனம் ஆடுவது தான் இல்லையா! எந்த நேரம் சேவை செய்கிறீர்களோ அந்த நேரம் மனம் என்ன செய்கிறது? நடனம் ஆடுகிறது தான் இல்லையா. அப்படி சேவை செய்வதும் கூட நடனம் ஆடுவது தான்! நல்லது.

பாப்தாதா எப்பொழுதும் குழந்தைகளின் விசேஷங்களைப் பார்க்கிறார். பிறந்ததுமே விசேஷமாக மூன்று திலகங்கள் பாப்தாதாவிடமிருந்து கிடைத்து விடுகிறது. அவை யாவை? கிரீடம், ஆசனமோ இருக்கவே இருக்கிறது. ஆனால் மூன்று திலகங்கள் விசேஷமானவை. ஒன்று சுயராஜ்ஜியத்தின் திலகமோ கிடைத்தே இருக்கிறது. இரண்டாவது, பிறந்ததுமே சேவைக்குத் தகுதி என்ற திலகம் கிடைத்திருக்கிறது. மூன்றாவது, பிறந்ததுமே அனைத்து பரிவாரத்தினரின், பாப்தாதாவின் அன்பிற்குரியவர் மற்றும் சகயோகம் கொடுக்கும் தன்மையின் திலகம். மூன்று திலகங்களும் பிறந்ததுமே கிடைத்தன இல்லையா! நீங்கள் திரிமூர்த்தி திலகதாரிகள். தன்னை அந்த மாதிரி விசேஷ சேவாதாரி என்று நினைக்கிறீர்களா? அனேக ஆத்மாக்களுக்கு ஊக்கம், உற்சாகம் கொடுப்பதற்காக பொறுப்பாளர் ஆகும் சேவை நாடகத்தில் உங்களுக்குத் தான் கிடைத்திருக்கிறது. நல்லது. எந்த அளவு குழந்தைகள் தந்தையை நினைவு செய்கிறார்களோ அந்த அளவு தந்தையும் நினைவு செய்கிறார். அனைத்தையும் விட மிக அதிகமான இடைவிடாத அழியாத நினைவு தந்தையினுடையது. குழந்தைகள் மற்ற காரியத்தில் பிஸியாகி விடுகிறார்கள். ஆனால் தந்தைக்கோ வேலையே இது தான். அமிர்தவேளையிலிருந்து அனைவரையும் எழுப்பும் காரியத்தைத் தொடங்குகிறார். பாருங்கள் எத்தனை குழந்தைகளை எழுப்ப வேண்டியதாக இருக்கிறது. மேலும் ஒரு ஸ்தானத்திலும் இல்லை, பாரதம் மற்றும் வெளிநாடுகளில் உள்ள அனைத்து குழந்தைகளையும் எழுப்ப வேண்டியதாக இருக்கிறது. இருந்தும் முழு நாளும் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று குழந்தைகள் கேட்கிறார்கள்.

குழந்தைகளுக்கு பிறகு பக்தர்களுக்கு செய்கிறோம், பிறகு விஞ்ஞானிகளுக்கு பிரேரணை கொடுக்கிறோம். அனைத்து குழந்தைகளையும் மேற்பார்வையோ செய்யத் தான் வேண்டியதிருக்கிறது. அவர் ஞானியாக இருந்தாலும், அஞ்ஞானியாக இருந்தாலும் ஆனால் அனேக விதத்தில் சகயோகியாகவோ இருக்கிறார்கள் இல்லையா! அந்த மாதிரி குழந்தைகளின் எத்தனை விதமான சேவை இருக்கிறது. அனைவரையும் விட மிக அதிக பிஸியாக யார் இருக்கிறார்? ஆனால் உடலின் பந்தனம் இல்லை, இது தான் வித்தியாசம். இப்பொழுது கொஞ்ச காலத்திலேயே நீங்கள் அனைவரும் தந்தைக்குச் சமமானவர்களாக ஆகிவிடுவீர்கள். மூலவதனத்தில் இருப்பீர்கள். இந்த ஆசையும் அனைவருக்கும் நிறைவேறிவிடும். நல்லது.

மதுபன் நிவாசிகளுடன் சந்திப்பு -

மதுபன் நிவாசிகளின் மகிமையையோ தெரிந்தே இருக்கிறீர்கள். எது மதுபன்னின் மகிமையாக இருக்கிறதோ, அதுவே தான் மதுபன் நிவாசிகளின் மகிமையாக இருக்கிறது. ஒவ்வொரு நேரமும் ஸ்தூலமாக நெருக்கமாக இருப்பது என்பது எவ்வளவு பெரிய பாக்கியம். இதை விட வேறு என்ன இருக்க முடியும். தூர இடத்தில் அமர்ந்திருந்தாலும், உங்கள் வீட்டில் அமர்ந்திருந்தாலும் இதயத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். மதுபன் நிவாசிகள் கடின உழைப்பு செய்வதற்கு அவசியம் இல்லை. யோகா செய்வதற்கு அவசியம் இருக்கிறதா என்ன? யோகா எப்பொழுதுமே தந்தையுடன் இருக்கவே இருக்கிறது. ஏற்கனவே இணைந்திருக்கிறது என்றால் மீண்டும் இணைப்பதற்கு அவசியம் இல்லை. எனவே இயல்பான யோகி, நிரந்தர யோகி எப்படி இரயில் இஞ்சின் பொருத்தப்பட்டுள்ளது, பிறகு அனைத்து பெட்டிகளும் தண்டவாளத்தில் இயல்பாகவே சென்று கொண்டிருக்கும். அவற்றை இயக்க வேண்டியதாக இருக்காது. அதே போல் நீங்களும் மதுபனின் தண்டவாளத்தில் இருக்கிறீர்கள். இஞ்சின் பொருத்தப்பட்டு இருக்கிறது என்றால், இயல்பாக சென்று கொண்டே இருப்பீர்கள். மதுபன் நிவாசி என்றால் மாயாவை வென்றவர். மாயா வருவதற்கு முயற்சி செய்யும்! ஆனால் யார் தந்தையின் ஈர்ப்பில் இருக்கிறார்களோ அவர் எப்பொழுதுமே மாயாவை வென்றவராக இருப்பார். மாயாவின் முயற்சி தூரத்திலேயே அழிந்து விடும். சேவையோ நீங்கள் அனைவரும் மிக நன்றாகவே செய்கிறீர்கள். சேவை செய்வதற்கான ஒரு உதாரணம் நீங்கள். எங்காவது உலகில் நாலாபுறங்களிலும் சேவையில் கொஞ்சமாவது மேலே கீழே செல்கிறது என்றால், அனைவரும் மதுபன் நிவாசிகளை உதாரணமாக சொல்வார்கள். மதுபனில் எத்தனை பேர் மிகவும் அன்புடன் தன்னுடைய வீடு என்று புரிந்து களைப்பற்று சேவை செய்கிறார்கள். இதை அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள். எப்படி சேவையில் நீங்கள் அனைவரும் நம்பர் ஒன் ஆக இருக்கிறீர்கள், 100 மதிப்பெண்கள் பெற்றிருக்கிறீர்கள், அதே போல் அனைத்து பாடங்களிலும்

100 மதிப்பெண்கள் வேண்டும். நீங்கள் ஆரோக்கியம், செல்வம், சந்தோஷம் மூன்றுமே கிடைக்கிறது என்று பலகையில் எழுதிகிறீர்கள் இல்லையா? அதே போல் இதுவும் அனைத்து பாடங்களிலும் மதிப்பெண் தேவையாக இருக்கிறது. மதுபனைச் சேர்ந்தவர்கள் தான் மற்றவர்களை விட அதிகமாக தந்தையிடமிருந்து கேட்பவர்கள். முதன்முதலில் சுடச்சுட மதுபன் நிவாசிகள் தான் அருந்துகிறார்கள். மற்றவர்களோ ஒரு வாய்ப்பில் ஒரு தடவை விசேஷமாக பிரம்மா போஜனம் அருந்து கிறார்கள். நீங்களோ தினசரி அருந்துகிறீர்கள். சூட்சும உணவு, ஸ்தூல உணவு அனைத்தும் சுடச்சுட புத்தம் புதியதாக கிடைக்கிறது. நல்லது.

புதிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறீர்களா? வீட்டையோ நல்ல அன்புடன் அலங்கரித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு தடவையும் ஏதாவது புதியது சேர்க்கப்பட்டு விடுகிறது, இது தான் மதுபனின் விசேஷம். எப்படி ஸ்தூலத்தின் புதுமையைப் பார்க்கிறீர்கள், அதே போல் சைத்தன்யத்திலும் ஒவ்வொரு தடவையும் புதுமையைப் பார்த்து இந்த தடவை மதுபன்னில் விசேஷமாக இந்த பிராப்தியின் அலையைப் பார்த்தோம் என்று வர்ணனை செய்ய வேண்டும். பல வகையான அலைகள் இருக்கின்றன இல்லையா. சில நேரம் ஆனந்தத்தின் அலை இருக்கட்டும், சில நேரம் அன்பின், சில நேரம் ஞானத்தின் விசேஷங்களின் அலை இருக்கட்டும். . . ஒவ்வொருவருக்கும் இந்த அலை தான் தென்பட வேண்டும். எப்படி கடலின் அலை களில் யாராவது செல்கிறார் என்றால் நீந்தி ஆகவே தான் வேண்டும், இல்லை என்றால் மூழ்கி விடுவார். அப்படி இந்த அலைகள் தெளிவாகத் தென்படட்டும். இந்த மகாநாட்டில் விசேஷமாக என்ன செய்வீர்கள்? வி.ஐ.பி-க்கள் வருவார்கள், ஊடகத்துறையைச் சேர்ந்தவர்கள் வருவார்கள், கலந்துரையாடல் நடக்கும் இவை எல்லாமே இருக்கும். ஆனால் நீங்கள் அனைவரும் விசேஷமாக என்ன செய்வீர்கள்? எப்படி ஸ்தூல தில்வாடா கோயில் இருக்கிறது. அதனுடைய விசேஷம் என்ன? ஒவ்வொரு அறையின் வடிவமைப்பும் விதவிதமானது. ஒவ்வொரு அறைக்கும் அதனதன் விசேஷம் இருக்கிறது. எனவே இந்த கோயில் மற்ற அனைத்து கோவில்களையும் விட வித்தியாசமானது. மூர்த்திகளோ மற்ற கோயில்களிலும் இருக்கும். ஆனால் இந்த கோவிலில் எங்கே சென்றாலும் அங்கே விசேஷ காரிய வேலைப்பாடு இருக்கும். அதே போல் சைத்தன்ய தில்வாடா கோவிலும் ஒவ்வொரு மூர்த்திகளின் விசேஷம் அவரவர்களினுடையது தென்பட வேண்டும். யாரைப் பார்த்தாலும் ஒருவர் இன்னொருவரை விட நல்ல விசேஷமாகத் தென்பட வேண்டும். எப்படி இந்த கோவிலை உருவாக்கியவர்களின் அதிசய காரியம் என்று கூறுகிறார்கள். அதே போல் இங்கு ஒவ்வொருவரின் விசேஷத்தின் அதிசயத்தை வர்ணனை செய்ய வேண்டும். நீங்கள் இந்த விஷயத்தைப் பேசுவதற்காக மீட்டிங் கூட்டுங்கள். ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. உங்களால் செய்ய முடியும். எப்படி சத்யுகத்தில் தேவதைகள் ஆசிரியர்கள் மூலமாக கொஞ்சம்

கேட்பார்கள். ஆனால் நினைவு மிகவும் சக்திசாலியானதாக இருக்கும். நினைவு செய்வதற்கான கடும் முயற்சி செய்வது இருக்காது. எப்படி ஏற்கனவே கேட்டது தான் அதை மீண்டும் நினைவு படுத்திக் கொள்ள கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்ற அனுபவம் ஆகும். மதுபனைச் சேர்ந்தவர்களைப் பொருத்தளவில் அனைத்தும் நடந்தேறியே இருக்கிறது. சிறிதளவு சமிக்ஞையின் அவசியம் இருக்கிறது அவ்வளவு தான்! மிக நல்ல நல்ல எண்ணங்களையும் வைத்திருக்கிறீர்கள். ஆனால் அதில் திடத்தன்மையை அடிக்கடி கோடிட்டுக் காண்பியுங்கள். நல்லது.

வரதானம் :

திலாராம் தந்தையின் நினைவு மூலமாக மூன்று காலங்களையும் நல்லதாக ஆக்கக்கூடிய இச்சையிலிருந்து விடுபட்டவர் ஆகுக.

எந்தக் குழந்தைகளின் இதயத்தில், இதயத்தை கொள்ளை கொண்ட திலாராம் ஒரு தந்தையின் நினைவு இருக்கிறதோ அவர் எப்பொழுதும் ஆஹா, ஆஹா என்ற பாடலைப் பாடிக் கொண்டே இருப்பார். அவருடைய மனதில் கனவிலும் கூட 'ஐயோஎன்ற வார்த்தை வெளியாக முடியாது. ஏனென்றால், என்ன நடந்ததோ அதுவும் நல்லது, என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அதுவும் நல்லது, மேலும் என்ன நடக்க உள்ளதோ அதுவும் நல்லது. மூன்று காலங்களுமே நல்லதே, நல்லது தான். எங்கு அனைத்துமே நல்லதாக இருக்கிறது என்றால், அங்கு இச்சையும் உருவாக முடியாது. ஏனென்றால், எப்பொழுது அனைத்து பிராப்திகளும் இருக்கின்றனவோ அப்பொழுது தான் நல்லது என்று கூறுவோம். பிராப்தி சம்பன்னமானவராக ஆவது தான் இச்சையிலிருந்து விடுபட்டவர் ஆவது.

சுலோகன் :

ஆவேசம் மற்றும் அடக்குமுறையின் சம்ஸ்காரம் வெளிப்படவே முடியாத அளவிற்கு சம்ஸ்காரங்களை அந்த மாதிரி சீதளம் (குளிர்ந்த) ஆக்கிவிடுங்கள்.

ஓம்சாந்தி

19.12.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பரமாத்ம அன்பு - சுயநலமற்ற அன்பு

இன்று அன்பின் கடலாகிய தந்தை தம்முடைய அன்பான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். குழந்தைகள் அனைவருமே அன்பானவர்கள் தாம். பிறகும் கூட நம்பர் பிரகாரம் உள்ளனர். ஒன்று, அன்பு செலுத்துபவர்கள். இரண்டாவது, தொடர்ந்து அன்பிலேயே இருப்பவர்கள். மூன்றாவது, சதா அன்பு சொரூபமாகி, அன்பின் கடலில் மூழ்கி இருப்பவர்கள், அன்பில் மூழ்கிய (லவ்லீன்) குழந்தைகள் என அவர்களை அழைக்கின்றனர். லவ் மற்றும் லவ்லீன் இரண்டுக்குமிடையில் வேறுபாடு உள்ளது. தந்தையுடையவராக ஆவது என்றால் சிநேகி, லவ்லீன் ஆவது. முழுக் கல்பத்திலும் ஒரு போதும் யார் மூலமாகவும் இந்த ஈஸ்வரிய சிநேகம், பரமாத்ம அன்பு கிடைக்காது. பரமாத்ம அன்பு என்பது சுயநலமற்ற அன்பு. பரமாத்ம அன்பு இந்த சிரேஷ்ட ஜென்மத்திற்கான ஆதாரம். பரமாத்ம அன்பு என்பது பல பிறவிகள் தந்தையை அழைத்ததற்கான பிரத்தியட்ச பலனாகும். பரமாத்ம அன்பு புதிய வாழ்க்கைக்கான உயிர்தானமாகும். பரமாத்ம அன்பு இல்லையென்றால் வாழ்க்கை சாரமற்ற, சாறு இல்லாமல் காய்ந்து போனகரும்பு (சக்கை) போன்றதாகும். பரமாத்ம அன்பு தந்தைக்கு அருகில் கொண்டு வருவதற்கான சாதனமாகும். பரமாத்ம அன்பு சதா பாப்தாதாவின் கூடவே இருப்பதாக, அதாவது பரமாத்மாவின் துணையை அனுபவம் செய்விக்கிறது. பரமாத்ம அன்பு சுலபமாகவே மூன்று இலக்குகளைக் கடந்து செல்ல வைக்கிறது.

1. தேக உணர்வை மறக்கச் செய்கிறது. 2. தேகத்தின் அனைத்து சம்மந்தங்களையும் மறக்கச் செய்கிறது. 3. தேகத்தினுடைய, தேகத்தின் உலகத்தினுடைய அல்பகால பிராப்திகளின் கவர்ச்சிமயமான பொருள்களின் ஈர்ப்பானது சுலபமாக முடிந்து போகும். தியாகம் செய்ய வேண்டியது இருக்காது. ஆனால் சிரேஷ்டமான சர்வ பிராப்திகளின் பாக்கியம் தானாகவே தியாகம் செய்ய வைக்கிறது. ஆக, பிரபுவின் அன்பான குழந்தைகள் நீங்கள் தியாகம் செய்தீர்களா அல்லது பாக்கியத்தை அடைந்தீர்களா? எதைத் தியாகம் செய்தீர்கள்? அநேகம் துளைகள் உள்ள ஆடை, இற்றுப்போன பழைய கடைசி ஜென்மத்தின் தேகத்தின் தியாகம், இது தியாகமா? எதை வேறு வழியின்றித் தானும் (நிர்பந்தத்தில்) நடத்துகிறீர்களோ, அதற்கு பதிலாக ஃபரிஸ்தா சொரூப ஒளியில் எந்த ஒரு நோயும் இல்லை, எந்த ஒரு பழைய சம்ஸ்கார

சுபாவத்தின் அம்சமும் இல்லை, எந்த ஒரு தேகத்தின் உறவும் இல்லை, மனதின் எந்த ஒரு சஞ்சலமும் இல்லை, புத்தியின் அலைதல் என்ற எந்த ஒரு பழக்கமும் இல்லை -- அத்தகைய ஃபரிஸ்தா சொரூப, பிரகாசமய உடல் கிடைத்ததற்குப் பிறகு பழையதை விடுதல், விட்டதாக ஆகுமா? எதைப் பெற்றீர்கள், எதைக் கொடுத்தீர்கள்? தியாகமா அல்லது பாக்கியமா? இதே போல் தேகத்தின் சுயநல சம்மந்தம், சுகம்-சாந்தியின் நிம்மதியை அபகரிக்கிற, அழியக்கூடிய உறவினர், சகோதரனாகஇருப்பவர் திடீரென சுயநலவசமாகி, விரோதி ஆகி விடுகின்றனர். துக்கம் மற்றும் ஏமாற்றம் தருபவர்களாக ஆகி விடுகின்றனர். மோகத்தின் கயிறுகளில் கட்டி வைப்பவர்கள், இத்தகைய அநேக சம்மந்தங்களை விட்டு, ஒருவரிடம் அனைத்து சுகம் தரும் சம்மந்தங்களை அடைகிறீர்கள் என்றால், தியாகம் செய்தீர்களா என்ன? சதா உங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் சம்மந்தங்களை விட்டீர்கள். ஏனென்றால் ஆத்மாக்கள் அனைவருமே பெறுவதிலேயே இருப்பார்கள், கொடுப்பதில்லை. ஒரு தந்தை மட்டுமே வள்ளல் தன்மையின் அன்பைத் தருபவர், பெறுவதற்கான எந்த ஒரு விருப்பமும் அவருக்கு கிடையாது. எவ்வளவு தான் தர்மாத்மாக்கள், மகாத்மாக்கள், புண்ணியாத்மாக்களாக இருந்தாலும் சரி, குப்த தானியாக இருந்தாலும் சரி, பிறகும் கூட, பெறுகின்றனர், கொடுக்கும் வள்ளல்களாக இல்லை. சிநேகமும் கூட நல்லதைப் பெறக்கூடிய விருப்பம் உள்ளதாக இருக்கும். தந்தையோ நிறைவான கடலாக உள்ளார். ஆகவே அவர் வள்ளல், பரமாத்ம அன்பு தான் வள்ளல் தன்மையின் அன்பாகும். ஆகவே அவர்கள் கொடுப்பதில்லை, பெறுகின்றனர். அது போல் தான் அழியக்கூடிய பொருட்களை அனுபவிப்பது விஷபோகம், அதாவது விஷம் நிறைந்த போகம். எனது-எனது என்ற வலையில் சிக்க வைக்கும் அழியக்கூடிய பொருட்களை அனுபவித்து-அனுபவித்து என்னவாக ஆகி விட்டீர்கள்! கூண்டுப் பறவையாக ஆகி விட்டீர்கள் இல்லையா? அத்தகைய பொருள்கள் ஒன்றுமில்லாதவர்களாக உங்களை ஆக்கி விட்டுள்ளன. அவற்றிற்குப் பதிலாக சர்வ சிரேஷ்ட பொருள்களைக் கொடுப்பவர், பல கோடிக்கு அதிபதி ஆக்குபவர். ஆக, பல மடங்கு பெற்றுக்கொண்டு, ஒன்றுக்கும் உதவாததை விட்டுவிடுவது என்பது தியாகமா? பரமாத்ம அன்பு பாக்கியத்தைக் கொடுப்பதாகும். தியாகம் தானாகவே நடந்து விடுகிறது. அத்தகைய சகஜமான, சதா, நிரந்தர தியாகி தான் சிரேஷ்ட பாக்கியவான் ஆகிறார்.

அவ்வப்போது பாபாவின் முன்னிலையில் அநேக செல்லக் குழந்தைகள் தாம் சொல்கின்றனர், செல்ல அன்பைக் காட்டுகின்றனர், அதாவது நாங்கள் இவ்வளவு தியாகம் செய்தோம், இவ்வளவை விட்டு விட்டோம், பிறகும் கூட ஏன் இப்படி எனக் கேட்கின்றனர். பாப்தாதா புன்சிரித்தவாறே கேட்கிறார் -- எதை விட்டீர்கள், எதை அடைந்தீர்கள்? இதன் பட்டியலைக் கொண்டு வாருங்கள். எந்தப் பக்கம் அதிக பாரமாக உள்ளது -- விட்டதா, அடைந்ததா? இன்று

இல்லையென்றாலும் நாளை விடத்தான் வேண்டும் நிர்பந்தமாகவும் கூட விட வேண்டியதிருக்கும். முதலிலேயே புத்திசாலி ஆகி அடைந்த பின் விட்டால் என்னவாயிற்று? பாக்கியத்தின் வர்ணனைக்கு முன்னால் தியாகம் என்பது சோழியாகும், பாக்கியம் வைரமாகும். அது போல் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் தானே? அல்லது அதிக தியாகம் செய்து விட்டீர்களா? அதிகம் விட்டுவிட்டீர்களா? விடுபவர்களா, பெறுபவர்களா? ஒரு போதும் கனவிலும் கூட அது போல் சங்கல்பம் செய்தால் என்னவாகும்? தனது பாக்கியத்தின் ரேகை, நான் செய்தேன், நான் விட்டேன், அதனால் தனது ரேகையை அழிப்பதற்கு நிமித்தமாகி விடுகிறீர்கள். அதனால் கனவிலும் கூட ஒரு போதும் அத்தகைய சங்கல்பம் செய்ய வேண்டாம்.

பிரபுவின் அன்பு சதா சமர்ப்பண உணர்வைத் தானாகவே அனுபவம் செய்விக்கும். சமர்ப்பண உணர்வு தந்தைக்குச் சமமாக ஆக்கும். பரமாத்ம அன்பு தந்தையின் அனைத்துக் கஜானாக்களுக்கும் சாவி. ஏனென்றால் அன்பு அல்லது சிநேகம் அதிகாரி ஆத்மாவாக ஆக்குகிறது. அழியக்கூடிய சிநேகம், தேகத்தின் சிநேகம் இராஜ்ய பாக்கியத்தை இழக்கச் செய்கிறது. அநேக இராஜாக்கள் அழியக்கூடிய சிநேகத்தின் பின்னால் போய் இராஜ்ய பாக்கியத்தை இழந்தார்கள். அழியக்கூடிய சிநேகமும் கூட இராஜ்ய பாக்கியத்தைக் காட்டிலும் சிரேஷ்டமானதாக ஏற்கப் பட்டது. பரமாத்ம அன்பு, இழந்து விட்ட இராஜ்ய பாக்கியத்தை சதா காலத்திற்கும் அடைய வைக்கிறது. இரட்டை ராஜ்ய அதிகாரி ஆக்குகிறது. சுயராஜ்யம் மற்றும் உலக இராஜ்யத்தை அடைகின்றனர். அத்தகைய பரமாத்ம அன்பை அடையக்கூடிய விசேஷ ஆத்மாக்கள் நீங்கள். ஆக, அன்பு செய்பவர்கள் அல்ல, ஆனால் அன்பில் சதா மூழ்கியிருக்கும் லவ்லீன் ஆத்மாக்கள் ஆகுங்கள். அன்பில் மூழ்கியிருக்கும் சமமானவர்கள் -- அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா?

புதிது-புதிதாக வந்துள்ளனர் என்றால் புதியவர்கள் முன்னேறிச் செல்வதற்காக ஒரே ஒரு விஷயத்தின் கவனம் மட்டும் வையுங்கள். சதா பிரபுவின் அன்புக்காகத் தவித்துக் கொண்டிருப்பவர்களாக இல்லாமல் பிரபுவின் அன்பிற்கே பாத்திரமானவராக ஆகுங்கள். பாத்திரமாவது தான் நல்ல தகுதியுள்ளவராக ஆவதாகும். எளிது தானே? ஆக, இதுபோல் முன்னேறுங்கள். நல்லது.

அது போல் பாத்திரமாகி, நல்ல தகுதியுள்ளவராக ஆகும் குழந்தைகளுக்கு, பிரபுவின் அன்பிற்கு அதிகாரியான ஆத்மாக்களுக்கு, பிரபுவின் அன்பு மூலம் சர்வ சிரேஷ்ட பாக்கியத்தை அடையக்கூடிய பாக்கியவான் ஆத்மாக்களுக்கு, சதா சிநேகத்தின் கடலில் மூழ்கிய,

தந்தைக்குச் சமமான குழந்தைகளுக்கு, சர்வ பிராப்திகளின் பொக்கிஷம் நிறைந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே!

இப்போது சமயத்தின் பிரமாணம் சகாஷ் (ஒளி) கொடுக்கும் சேவை செய்யுங்கள் (அவ்யக்த மகாவாக்கியம்)

சமயத்தின் பிரமாணம் இப்போது நாலாபுறமும் சகாஷ் கொடுப்பதற்கான, அதிர்வலைகள் கொடுப்பதற்கான, மனதின் மூலம் வாயுமண்டலத்தை உருவாக்குவதற்கான காரியத்தைச் செய்ய வேண்டும். இப்போது இந்த சேவை தான் அவசியமாக உள்ளது, ஏனென்றால் சமயம் மிகவும் நாசுக்கானதாக (ஆபத்தான) வரப்போகிறது. ஆகவே தனது பறக்கும் கலை மூலம் ஃபரிஸ்தா ஆகி, நாலாபுறமும் சுற்றி வாருங்கள் மற்றும் யாருக்கு சாந்தி வேண்டும், குஷி வேண்டும், திருப்தி வேண்டும், ஃபரிஸ்தா ரூபத்தில் அவர்களுக்கு அனுபவம் செய்வியுங்கள். அவர்கள் அனுபவம் செய்ய வேண்டும், அதாவது இந்த ஃபரிஸ்தாக்கள் மூலமாக சாந்தி, சக்தி, குஷி கிடைத்துவிட்டது. அந்த்வாஹக், அதாவது கடைசி ஸ்திதி, சக்திசாலி ஸ்திதி தான் உங்களது கடைசி வாகனமாகும். தன்னுடைய இந்த ரூபத்தை முன்னால் இமர்ஜ் செய்து, ஃபரிஸ்தா ரூபத்தில் சுற்றி வாருங்கள், சகாஷ் கொடுங்கள். அப்போது பாடல் பாடுவார்கள் சக்திகள் வந்து விட்டனர் பிறகு சக்திகள் மூலமாக சர்வசக்திவான் தாமாகவே வெளிப்பட்டு விடுவார்.

எப்படி சாகார ரூபத்தைப் (பிரம்மா பாபாவை) பார்த்தீர்கள் -- இதுபோன்ற எத்தனை அலைகளின் சமயம் வந்தாலும் இரவும் பகலும் சகாஷ் (ஒளி மற்றும் சக்தியின் கிரணங்கள்) கொடுப்பதற்கு, பலமற்ற ஆத்மாக்களுக்குள் பலத்தை நிரப்புவதற்கான விசேஷ கவனம் இருந்தது. இரவு நேரங்களிலும் கூட சமயம் ஒதுக்கி ஆத்மாக்களுக்குள் சகாஷ் நிரப்புவதற்கான சேவை நடந்து வந்தது. ஆகவே இப்போது நீங்கள் அனைவருக்கும் லைட்-மைட் ஹவுஸ் ஆகி, இந்த சகாஷ் கொடுப்பதற்கான சேவையைக் குறிப்பாகச் செய்ய வேண்டும். இதனால் நாலாபுறமும் லைட் மைட்டின் பிரபாவம் பரவ வேண்டும். இந்த தேக உலகத்தில் எது நடந்து கொண்டிருந்தாலும் ஃபரிஸ்தாக்களாகிய நீங்கள் மேலிருந்து சாட்சி ஆகி அனைவரது பாகத்தையும் பார்த்தவாறு சகாஷ் கொடுத்துக்கொண்டே இருங்கள். ஏனென்றால், நீங்கள் அனைவரும் எல்லையற்ற உலக நன்மைக்காக நிமித்தமாகி இருக்கிறீர்கள். ஆகவே சாட்சியாக இருந்து அனைத்து விளையாட்டுகளையும் பார்த்தவாறு சகாஷ், அதாவது சகயோகம் கொடுப்பதற்கான சேவை

செய்யுங்கள். இருக்கையிலிருந்து கீழே இறங்கி சகாஷ் கொடுக்கக் கூடாது. உயர்ந்த ஸ்டேஜில் நிலைத்திருந்து சகாஷ் கொடுத்தால் எந்த விதமான சூழ்நிலையிலும் சூடாகுதலும் ஏற்படாது.

எப்படி பாபா அவ்யக்த வதனத்தில், ஓரிடத்தில் அமர்ந்தவாறு நாலாபுறத்திலும் உள்ள உலகின் குழந்தைகளுக்குப் பாலனை செய்து கொண்டிருக்கிறார். அது போல் குழந்தைகள் நீங்களும் கூட ஓரிடத்தில் அமர்ந்து கொண்டு பாபாவுக்குச் சமமாக எல்லையற்ற சேவை செய்யுங்கள். தந்தையைப் பின்பற்றுங்கள். எல்லையற்ற நிலையில் சகாஷ் கொடுங்கள். எல்லையற்ற சேவையில் தன்னை பிஸியாக வைத்திருப்பீர்களானால் எல்லையற்ற வைராக்கியம் தானாகவே வந்து விடும். இந்த சகாஷ் கொடுப்பதற்கான சேவையை நிரந்தரமாக உங்களால் செய்ய முடியும். இதில் ஆரோக்கியத்தின் விஷயம், சமயத்தின் விஷயம் அனைத்தும் எளிதாகி விடும். இரவும் பகலும் இந்த எல்லையற்ற சேவையில் உங்களால் ஈடுபட்டு இருக்க முடியும். எல்லையற்ற சகாஷ் கொடுப்பீர்களானால் அருகில் உள்ளவர்களும் தாமாகவே சகாஷ் பெற்றுக் கொண்டே இருப்பார்கள். இந்த எல்லையற்ற சகாஷ் கொடுப்பதால் வாயுமண்டலம் தானாகவே உருவாகும்.

பிராமணக் குழந்தைகள் நீங்கள் ஆதி ரத்தினங்கள், (கல்பவிருட்சத்தின்) விசேஷமான வேர்ப்பகுதியாக இருக்கிறீர்கள். அடிமரத்திலிருந்து அனைவர்க்கும் சகாஷ் சென்று சேர்கின்றது. ஆக, பலவீனமானவர்களுக்கு பலம் கொடுங்கள். தனது புருஷார்த்தத்தின் சமயத்தை மற்றவர்களுக்கு சகயோகம் கொடுப்பதில் ஈடுபடுத்துங்கள். மற்றவர்களுக்கு சகயோகம் கொடுப்பது என்றால், தனக்காக சேமிப்பதாகும். இப்போது அத்தகைய அலைகளைப் பரப்புங்கள் -- கொடுக்க வேண்டும், கொடுக்க வேண்டும், கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். சால்வேஷன் (துன்பத்திற்கான தீர்வு) பெறக் கூடாது, சால்வேஷன் கொடுக்க வேண்டும். கொடுப்பதில் பெறுவது அடங்கியுள்ளது. இப்போதிலிருந்தே சுயநன்மைக்கான உயர்ந்த திட்டத்தை உருவாக்கவில்லை என்றால் உலக சேவையில் சகாஷ் கிடைக்காது. ஆகவே இப்போது சகாஷ் மூலம் அனைவரின் புத்திகளையும் பரிவர்த்தன் செய்வதற்கான சேவை செய்யுங்கள். பிறகு பாருங்கள், வெற்றி உங்கள் முன்னால் தானே வளைந்து (வணங்கி) நிற்கும். மனம்-சொல்லின் சக்தி மூலம் விக்னங்களுக்குத் (தடை) திரை போட்டு விடுவீர்களானால் உள்ளுக்குள் நன்மையின் காட்சி காணப்படும்.

ஞானத்தின் சிந்தனையோடு கூடவே சுபபாவனை, சுபவிருப்பத்தின் சங்கல்பம், சகாஷ் கொடுப்பதற்கான அப்பியாசம், இந்த மனதின் மவுனத்திற்கான டிரா்ஃபிக் கன்ட்ரோல்

ஆகியவற்றிற்காக நாளின் இடையிடையே நேரத்தை நிர்ணயம் செய்யுங்கள். யாருக்காவது விடுப்பு (நேரம்) கிடைக்கா விட்டாலும் கூட, வாரத்தில் ஒரு நாள் கிடைத்தாலும் அதன் பிரமாணம் அவரவர் இருப்பிடத்தின் திட்டத்தை நிர்ணயம் செய்யுங்கள். ஆனால் விசேஷமாக ஏகாந்தவாசி மற்றும் கஜானாக்களின் சிக்கனத்திற்கான திட்டத்தை அவசியம் உருவாக்குங்கள். ஏனென்றால் இப்போது நாலாபுறமும் மனதின் துக்கம் மற்றும் அசாந்தி, மனதின் கவலைகள் மிகவும் தீவிரமாக அதிகரித்துக் கொண்டுள்ளன. பாப்தாதாவுக்கு உலகத்தின் ஆத்மாக்கள் மீது இரக்கம் வருகிறது. ஆக, எவ்வளவு தீவிர வேகத்தில் துக்கத்தின் அலை அதிகரித்துக் கொண்டிருக்கிறதோ, அவ்வளவு நீங்கள் சுகம் கொடுக்கும் வள்ளலின் குழந்தைகள் தங்களின் மனதின் சக்தி மூலம் மனசா சேவை மற்றும் சகாஷ் கொடுக்கும் சேவை மூலம், உள்ளுணர்வு மூலம் நாலாபுறமும் சுகத்தின் துளிகளை அனுபவம் செய்வியுங்கள். ஹே தேவ ஆத்மாக்களே, பூஜைக்குரிய ஆத்மாக்களே! உங்களது பக்தர்களுக்கு சகாஷ் கொடுங்கள்.

விஞ்ஞானிகளும் கூட யோசிக்கின்றனர், துக்கத்தை முடித்து விடுகிற மாதிரி அப்படி ஒரு கண்டுபிடிப்பை வெளிக்கொண்டுவர வேண்டும் என்று. சாதனம் சுகத்தோடு கூடவே துக்கமும் தருகிறது. துக்கம் இருக்கக்கூடாது, சுகம் மட்டுமே கிடைக்க வேண்டும் என யோசிக்கத் தான் செய்கின்றனர். ஆனால் சுயத்தின் ஆத்மாவில் அவிநாசி சுகத்தின் அனுபவம் இல்லையெனில், பிறருக்கு எப்படி கொடுக்க முடியும்? உங்கள் அனைவரிடமோ சுகத்தின், சாந்தியின், சுயநலமற்ற உண்மையான அன்பின் கையிருப்பு சேமிப்பாகி உள்ளது என்றால், அதனை தானமாகக் கொடுங்கள். தனிப்பட்ட முறையில் கவனம் வையுங்கள், நாம் நாலாபுறமும் சக்திசாலிநினைவின் அதிர்வலைகளைப் பரப்ப வேண்டும். எப்படி உயர்ந்த கோபுரம் உள்ளது, அது சகாஷ் கொடுக்கிறது, அதிலிருந்து ஒளி, சக்தியைப் பரவச் செய்கிறது, அது போல் உயர்ந்த ஸ்டேஜ் மீது அமர்ந்து, தினந்தோறும் குறைந்தது 4 மணி நேரமாவது இது போல் புரிந்து கொள்ளுங்கள், நான் உயர்ந்ததிலும் உயர்ந்த இருப்பிடத்தில் அமர்ந்து, உலகத்திற்கு லைட் மற்றும் மைட் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். பாப்தாதா குழந்தைகளிடம் இதை விரும்புகிறார், இப்போது அதிவேக சேவையை ஆரம்பிக்க வேண்டும். எது நடந்ததோ, அது நல்லதாகவே நடந்தது. இப்போது சமயத்தின் பிரமாணம் மற்றவர்களுக்கு அதிகம் பேசுவதற்கான வாய்ப்பைக் கொடுங்கள். இப்போது மற்றவர்களை மைக் ஆக்குங்கள். நீங்கள் மைட் (சக்திசாலி) ஆகி சகாஷ் கொடுங்கள். ஆக, உங்களுடைய சகாஷ் மற்றும் அவர்களின் பேச்சு, இவை இரட்டைக் காரியத்தைச் செய்யும்.

பார்ட்டிகளோடு --

கேள்வி:

மகா தபஸ்யா எது? அந்த தபஸ்யாவின் பலம் உலகத்தை மாற்ற முடியும்?

பதில் –

ஒரு பாபாவைத் தவிர வேறு யாரும் இல்லை -- இது தான் மகா தபஸ்யா. அத்தகைய ஸ்திதியில் நிலைத்திருப்பவர் மகா தபஸ்வி ஆகின்றனர். தபஸ்யாவின் பலம் சிரேஷ்ட பலம் எனப் பாடப் படுகின்றது. ஒரு பாபாவைத் தவிர வேறு யாரும் இல்லை -- யார் இந்தத் தபஸ்யாவில் இருக்கின்றனரோ, அவர்களிடம் பலம் அதிகம் உள்ளது. இந்தத் தபஸ்யாவின் பலம் உலகத்தை மாற்றி விடுகின்றது. ஹடயோகிகள் ஒரு கால் நின்று கொண்டு தபஸ்யா செய்கின்றனர். ஆனால் குழந்தைகள் நீங்கள் ஒற்றைக்காலில் அல்ல, ஒருவரின் நினைவில் இருக்கிறீர்கள் -- ஒரே ஒருவர் மட்டுமே! அப்படிப்பட்ட தபஸ்யா உலக மாற்றத்தைச் செய்து விடும். ஆக, அப்படிப்பட்ட விஷ்வ கல்யாண்காரியாக, அதாவது மகான் தபஸ்வி ஆகுங்கள். நல்லது.

வரதானம்:

சக்திசாலி சங்கல்பங்கள் மூலம் சேமிப்புக் கணக்கை அதிகரிக்கக் கூடிய புனித அன்னப்பறவை ஆகுக.

எப்படி அன்னப்பறவை, கல் மற்றும் இரத்தினத்தை வேறுபடுத்துகிறதோ, அது போல் நீங்கள் புனித அன்னப்பறவைகள், அதாவது சக்திசாலி மற்றும் வீணானதைக் கண்டறியக் கூடியவர்கள். எப்படி அன்னப்பறவை ஒரு போதும் கல்லை எடுத்துக் கொள்ளாதோ தனியாக வைத்து விடுகிறதோ, விட்டுவிடுகிறதோ, கிரகிப்பதில்லையோ, அது போல் புனித அன்னப்பறவைகளாகிய நீங்கள் வீணானதை விட்டு, சக்திசாலி சங்கல்பங்களை தாரணை செய்து கொண்டே இருங்கள். வீணானதையோ நீண்ட காலமாகக் கேட்டீர்கள், பேசினீர்கள், செய்தீர்கள், ஆனால் அதன் பலனாக அனைத்தையும் இழந்தீர்கள். இப்போது இழப்பவர்களாக இல்லாமல் சேமிப்புக் கணக்கை அதிகரிப்பவர்களாக இருங்கள்.

சுலோகன்:

தன்னை ஈஸ்வரிய மரியாதாக்களின் கங்கணத்தால் கட்டிக் கொள்வீர்களானால் அனைத்து பந்தனங்களும் முடிந்து போகும்.

ஓம்சாந்தி

21.12.1983 ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## உடனடி தானம் மகாபுண்ணியத்தின் இரகசியம்

இன்று விதாதா, (படைப்பவர்) வரதாதாவாகிய (வள்ளல்) தந்தை தனது நாலாபுறங்களிலும் உள்ள மிக அன்பான சேவாதாரி குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கின்றார். நாலாபுறங்களிலும் உள்ள சக்திசாலியான குழந்தைகள் தனது அன்பு என்ற விசேஷத்தின் மூலம் தூரத்தில் இருந்தாலும் நெருக்கத்தில் இருக்கின்றனர். அன்பான சம்பந்தத்தின் மூலம், புத்தியின் தெளிவு மற்றும் தூய்மையின் மூலம் நெருக்கத்தின், எதிரில் இருக்கும் அனுபவம் செய்து கொண்டிருக்கின்றனர். மூன்றாவது கண் அதாவது தெய்வீக நிலையின் மூலம் அவர்களது புத்திக் கண் என்ற டி.வி - இல் தூரத்தில் இருக்கும் காட்சி தெளிவாக அனுபவம் செய்து கொண்டிருக்கின்றனர். எவ்வாறு இந்த அழியக் கூடிய உலகின் அழியக் கூடிய சாதனமாகிய டி.வி யில் விசேஷ நிகழ்ச்சியின் போது அனைவரும் சுவிட்ச் ஆன் செய்து விடுகின்றனர்! அதே போன்று குழந்தைகளும் விசேஷ நேரத்தில் நினைவு என்ற சுவிட்ச் ஆன் செய்து அமர்ந்திருக்கிறீர்கள். தூர்தர்சன் (தொலைக்காட்சி) மூலம் தூரத்திலிருக்கும் காட்சியை நெருக்கத்தில் அனுபவம் செய்யும் அனைத்துக் குழந்தைகளையும் பார்த்து பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றார். ஒரே நேரத்தில் இரண்டு சபைகளை பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

இன்று விசேஷமாக வதனத்தில் பிரம்மா பாபா குழந்தைகளை நினைத்துக் கொண்டிருந்தார். ஏனெனில் அனைத்து குழந்தைகளும் எப்பொழுதிலிருந்து பிராமண வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ, அந்த பிராமணர்கள் நேரத்தின் அனுசாரமாக இலட்சியம் அதாவது சம்பூர்ண நிலைக்கு எந்த வேகத்தில் சென்று கொண்டிருக்கின்றனர்? என்ற ரிசல்ட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். அனைவரும் சென்று கொண்டு தான் இருக்கின்றனர், ஆனால் எந்த வேகத்தில்? ஆக என்ன பார்த்தார்! வேகத்தில் ஒரே மாதிரியான வேகம் இருக்க வேண்டும், அதாவது சதா தீவிர வேகம் இருக்க வேண்டும், இவ்வாறு வெகு சிலரைத் தான் பார்த்தார். வேகத்தைப் பார்த்து பிரம்மா பாபா குழந்தைகளிடத்தில் கேள்வி கேட்கிறார் - ஞானம் நிறைந்தவர்களாக இருந்தும் அதாவது மூன்று காலங்களை அறிந்தும், முயற்சி மற்றும் பலனை அறிந்தும், விதி மற்றும் வெற்றியை அறிந்தும் கூட சதா கால வேகத்தை ஏன்

உருவாக்க முடியவில்லை? என்ன பதில் கொடுத்திருப்பார்கள்? காரணத்தையும் அறிவீர்கள், நிவாரணத்திற்கான விதியையும் அறிவீர்கள், இருப்பினும் காரணத்தை நிவாரணமாக மாற்ற முடியவில்லை.

தந்தை புன்முறுவலுடன் பிரம்மா பாபாவிடம் கூறினார் - பல குழந்தைகளிடம் ஒரு மிகப் பழைய பழக்கம் பக்காவாக இருக்கிறது, அது எது? என்ன செய்கின்றனர்? தந்தை உடனடிப் பலன் அதாவது புதிய பழங்களை சாப்பிட கொடுக்கின்றார், ஆனால் பழக்கத்தில் உறுதியாக இருப்பதால் அந்த புதிய பழங்களை காய்ந்ததாக ஆக்கி சாப்பிடுகின்றனர். செய்து விடுவேன், நடந்து விடும், அவசியம் நடந்தே தீரும், முதல் நம்பரில் தான் வர வேண்டும், மாலையில் தான் வர வேண்டும் - இவ்வாறு சிந்தித்து சிந்தித்து, திட்டம் தீட்டி தீட்டி உடனடிப் பலனை பிற்கால பலனாக ஆக்கிவிடுகிறீர்கள். செய்வேன் என்றால் எதிர்கால பலன். சிந்தித்தீர்கள், செய்தீர்கள் என்றால் உடனடிப் பலன் அடைகிறீர்கள். சுயத்திற்காகவோ அல்லது சேவைக்காகவோ உடனடிப் பலன் அல்லது சேவைக்கான பலனை குறைவாக அடைகிறீர்கள். சக்தி எதில் கிடைக்கிறது? புதிய பழத்திலா? அல்லது காய்ந்த பழத்திலா? சாப்பிடலாம் என்று கூறி புதிய பழத்தை காய்ந்ததாக ஆக்கி விடுவது சிலருக்கு பழக்கமாக இருக்கிறது. அதே போன்று இங்கும் அவ்வாறு நடந்தால் பிறகு செய்வேன் என்று தவறாக யோசிக்கின்றனர். சிந்திக்க வேண்டும், கட்டளை கிடைத்ததும் செய்து விட வேண்டும் என்று இவ்வாறு செய்யாததால் கட்டளையையும் புதியதிலிருந்து காய்ந்ததாக ஆக்கிவிடுகின்றனர். பிறகு கட்டளைப் படி தான் செய்தேன், ஆனால் அந்த அளவிற்கு பலன் கிடைக்கவில்லை என்று நினைக்கின்றனர். ஏன்? நேரம் ஏற்படுவதால் காலத்திற்குத் தகுந்தாற்போன்று ரேகை மாறி விடுகிறது. எந்த ஒரு பாக்கிய ரேகையும் காலத்தைப் பொருத்து தான் கூறுகின்றனர் அல்லது உருவாக்குகின்றனர். இதன் காரணத்தினால் காலம் மாறும் போது வாயுமண்டலம், விருத்தி, (ஆழ்ந்த உணர்வு) வைபிரேசன் (அதிர்வலைகள்) போன்ற அனைத்தும் மாறி விடுகின்றன. அதனால் தான் உடனடி தானம் மகா புண்ணியம் என்று புகழ் பாடப்பட்டிருக்கிறது. கட்டளை கிடைத்ததும், அதே நேரத்தில் அதே உற்சாகத்தில் செய்து விட வேண்டும். இப்படிப்பட்ட சேவைக்குத் தான் உடனடிப் பலன் கிடைக்கிறது. இதை பிராப்தியாக அடைவதன் மூலம் அதாவது சாப்பிடுவதன் மூலம் சக்திசாலி ஆத்மாவாகி, தானாகவே தீவிர வேகத்தில் சென்று கொண்டே இருப்பீர்கள். அனைவரும் பழத்தை சாப்பிடுகிறீர்கள், ஆனால் எப்படிப்பட்ட பழத்தை சாப்பிடுகிறீர்கள்? என்பதை சோதனைசெய்யுங்கள்.

பிரம்மா பாபா அனைத்து குழந்தைகளுக்கும் புதிய பழத்தின் மூலம் சக்திசாலி ஆத்மாவாக

ஆக்கி சதா தீவிர வேகத்தில் செல்லக் கூடிய சங்கல்பத்தை கொடுக்கின்றார். பிரம்மா பாபாவின் இந்த சங்கல்பத்தை சதா நினைவில் வைத்துக் கொண்டு ஒவ்வொரு நேரத்திலும், ஒவ்வொரு செயலிலும் சிரேஷ்ட மற்றும் புதிய பழத்தைச் சாப்பிட்டுக் கொண்டே இருங்கள். ஆக ஒருபோதும் எந்த வகையான பலவீனம் அல்லது வியாதி வரவே முடியாது. பிரம்மா பாபா புன்முறுவல் செய்து கொண்டிருந்தார். தற்கால உலகீய மருத்துவர்களும் என்ன கருத்து கூறுகின்றனர்? அனைத்தையும் புதிதாக சாப்பிடுங்கள். வேக வைத்து, வறுத்து சாப்பிடாதீர்கள். ரூபத்தை மாற்றி சாப்பிடாதீர்கள். இவ்வாறு கூறுகின்றனர் அல்லவா! ஆக பிரம்மா பாபாவும் குழந்தைகளிடத்தில் கூறிக் கொண்டிருந்தார் - நேரத்தின் அனுசாரமாக எந்த ஸ்ரீமத், எந்த ரூபத்தில் கிடைத்தாலும், அதே நேரத்தில், அதே ரூபத்தில் நடைமுறையில் கொண்டு வந்தால் சதா பிரம்மா பாபாவிற்கு சமமாக உடனடி தானம் மகா புண்ணிய ஆத்மாவாகி நம்பர் ஒன்னில் வந்து விடுவீர்கள். பிரம்மா பாபா மற்றும் ஜெகதம்பா முதல் இராஜ்யத்திற்கு அதிகாரிகள், இரண்டு ஆத்மாக்களிடமும் என்ன விசேஷத்தைப் பார்த்தீர்கள்? சிந்தித்தார்கள், உடனே செய்தார்கள். இதை செய்து விட்டு பிறகு இதை செய்யலாம் என்று நினைக்கவில்லை. இந்த விசேஷம் தான் இருந்தது. ஆக தாய், தந்தையை பின்பற்றக் கூடிய மகா புண்ணிய ஆத்மா, புண்ணியத்தின் சிரேஷ்ட பழத்தை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள் மற்றும் சதா சக்திசாலியாக இருக்கிறீர்கள். கனவிலும், சங்கல்பத்திலும் கூட பலவீனம் கிடையாது. இவ்வாறு சதா தீவிர வேகத்தில் சென்று கொண்டிருக்கிறீர்கள், ஆனால் ஒரு சிலர் தான் அவ்வாறு இருக்கிறீர்கள்.

சாகார உலகைப் படைப்பவராக இருக்கின்ற காரணத்தினால், சாகார ரூபத்தில் பாலனை கொடுக்கும் பாகத்தை நடிக்கின்ற காரணத்தினால் பிரம்மா பாபாவிற்கு சாகார பாகத்தை நடிக்கும் குழந்தைகளின் மீது விசேஷ அன்பு இருக்கிறது. யார் மீது விசேஷமான அன்பு இருக்கிறதோ அவர்களது பலவீனம் தனது பலவீனமாகத் தோன்றும். பிரம்மா பாபாவிற்கு குழந்தைகளின் இந்த பலவீனத்தின் காரணத்தைப் பார்த்து அன்பு ஏற்படுகிறது, இப்போது சதா சக்திசாலி, சதா தீவிர முயற்சியில் சதா பறக்கும் கலையில் செல்பவர்களாக ஆகிவிட வேண்டும். மீண்டும் மீண்டும் செய்யும் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விட வேண்டும்.

பிரம்மா பாபாவின் கருத்துக்களைக் கேட்டீர்களா! பிரம்மா பாபாவின் கண்களில் குழந்தைகள் தான் கலந்திருக்கின்றனர். பிரம்மாவின் விசேஷ மொழியைஅறிவீர்களா? என்ன கூறுகின்றார்? எனது குழந்தைகளே, எனது குழந்தைகளே! என்று தான் அடிக்கடி கூறுகின்றார். தந்தை புன்முறுவல் செய்கின்றார். பிரம்மாவின் குழந்தைகளாகத் தான் இருக்கிறீர்கள், அதனால் தான்

தனது பட்டப் பெயரில் பிரம்மா குமார், பிரம்மா குமாரி என்று கூறுகிறீர்கள் அல்லவா! சிவகுமார், சிவகுமாரி என்று கூறுவது கிடையாது. பிரம்மாவின் கூடவே தான் செல்ல வேண்டும். வித விதமான பெயர், ரூபத்தில் அதிக காலம் பிரம்மா பாபாவின் கூடவே இருக்கிறீர்கள் அல்லவா! பிரம்மாவின் முகவம்சாவளிகளாக இருக்கிறீர்கள். தந்தை கூடவே இருக்கின்றார். இருப்பினும் சாகாரத்தில் பிரம்மாவிற்குத் தான் பாகம் இருக்கிறது. நல்லது, மற்ற உரையாடல்களைப் பற்றி பிறகு கூறுகிறோம்.

இந்த குரூப்பில் மூன்று புறங்களிலிருந்து விசேஷ நதிகள் வந்திருக்கின்றன. இரட்டை அயல்நாட்டினர்கள் இப்போது குப்தமான (மறைவான) கங்கைகளாக இருக்கின்றனர், ஏனெனில், இந்த முறை அவர்கள் இல்லை. இப்போது டில்லி, கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா, இந்த மூன்று நதிகளின் விசேஷ சந்திப்பாகும். மற்றபடி சிறிது சிறிதாக இருக்கின்றனர். யார் அவர்களுக்கான குறிப்பிட்ட முறையில் வந்திருக்கிறார்களோ அவர்கள் தங்களது உரிமையை எடுத்துக் கொள்ளவே செய்கின்றனர், ஆனால் இரட்டை அயல்நாட்டினரும் ஓடி ஓடி வந்து தங்களது உரிமையை முன் கூட்டியே எடுத்துக் கொள்வதற்கு வந்து சேர்ந்து விட்டனர். ஆக அவர்களும் பிரியமானவர்களாக இருப்பர் அல்லவா! இரட்டை அயல்நாட்டினர்களுக்கும் சிறிதளவில் வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது. மீண்டும் அவர்களுக்கான முறையில் சந்திப்பார்கள். ஒவ்வொரு வகையான குழந்தைகளும் பாப்தாதாவிற்கு பிரியமானவர்கள், ஏனெனில், ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு விசேஷம் இருக்கிறது. டில்லி சேவையின் விதைக்கான இடமாகும், மேலும் கர்நாடகம் மற்றும் மகாராஷ்டிரம் விருட்சத்தின் விஸ்தாரமாகும். விதை கீழே இருக்கும், விருட்சத்தின் விஸ்தாரம் அதிகமாக இருக்கும், ஆக டில்லி விதையாக ஆகியிருக்கிறது. கடைசியில் விதையாக இருக்கும் இடத்தில் தான் ஓசை ஏற்படும். ஆனால் இப்போது கர்நாடகம், மகாராஷ்டிரம் மற்றும் குஜராத் மூன்றின் விசேஷமும் பரவி (விஸ்தாரமாக) இருக்கிறது. பரவியிருக்கும் மரம் தான் அழகாக இருக்கும். கர்நாடகம் மற்றும் மகாராஷ்டிரத்தின் சேவையின் விஸ்தாரத்தினால் பிராமண மரம் அழகாக இருக்கிறது. மரம் அலங்காரத்துடன் இருக்கிறது அல்லவா! இந்த இரண்டு கேள்விகள் தான் கேட்கின்றனர் அல்லவா! ஒன்று செலவு பற்றி கேட்கின்றனர், மற்றொன்று பிராமணர்களின் எண்ணிக்கை பற்றி கேட்கின்றனர். ஆக மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகம் இரண்டும் எண்ணிக்கையின் கணக்கில் பிராமண குடும்பத்தின் அலங்காரமாக இருக்கின்றன. விதையின் விசேஷம் தனிப்பட்டது. விதையில்லையெனில் மரமும் உருவாகாது. ஆனால் இப்போது விதை சிறிது குப்தமாக (மறைவாக) இருக்கிறது. மரத்தின் விஸ்தாரம் அதிகமாக இருக்கிறது. ஒருவேளை நீங்கள் அனைவரும் கூட டில்லிக்கு செல்லவில்லையெனில் சேவைக்கான அஸ்திவாரம்

இருந்திருக்காது சேவைக்கான அழைப்பு முதலில் கிடைத்து ஆனால் டில்லியிலிருந்து தான் ஆரம்பமானது, ஆகையால் அதுவே சேவைக்கான இடமாக ஆயிற்று, மேலும் அதுவே இராஜ்யத்திற்கான இடமாகவும் ஆகும். அயல்நாட்டிற்கும் அதிக மகிமை இருக்கிறது. அயல்நாட்டிலிருந்தும் விசேஷமாக பிரத்யட்சதாவிற்கான முரசொலி நம்நாடு வரை வந்தடையும். அயல்நாடு இல்லையெனில் நமது நாட்டில் எப்படி பிரத்யட்சம் ஏற்படும்? ஆகையால் அயல்நாட்டிற்கும் மகத்துவம் இருக்கிறது. அயல்நாட்டினரின் ஓசையை கேட்டு பாரதவாசிகள் விழித்தெழுவார்கள். பிரத்யட்சதாவிற்கான ஓசை வெளிப்படும் இடமாக அயல்நாடு தான் உள்ளதல்லவா! ஆக இது அயல்நாட்டின் மகத்துவம். அயல்நாட்டில் இருந்தாலும் அவர்கள் நம்நாட்டைச் சார்ந்தவர்கள், ஆனால் நிமித்தமாக அயல்நாட்டில் இருக்கும் சிரேஷ்டமான ஆத்மாக்களின் ஆர்வம், உற்சாகத்தைப் பார்த்து நம் நாட்டைச் சார்ந்தவர்களிடத்திலும் ஆர்வம், உற்சாகம் மேலும் அதிகரிக்கிறது. இதுவும் அவர்களது சேவைக்கான குப்த பாகம் ஆகும். ஆக அனைவரது விசேஷமும் தனிப்பட்டதாக ஆகிவிடுகிறது அல்லவா! நல்லது.

சதா உடனடி தானம் செய்யும் புண்ணிய ஆத்மாக்களுக்கு, சிந்திப்பது மற்றும் செய்வதில் சதா தீவிர முயற்சியாளர்களுக்கு, ஒவ்வொரு சங்கல்பம், ஒவ்வொரு விநாடியும் சேவையின் பலனை அடையக்கூடியவர்களுக்கு, இவ்வாறு சதா சக்திசாலி தந்தை மற்றும் தாயை பின்பற்றக் கூடியவர்களுக்கு, சதா பிரம்மா பாபாவின் சங்கல்பத்தை சாகாரத்தில் கொண்டு வரக் கூடிய உள்நாடு, வெளிநாடு, நாலாபுறமும் உள்ள சக்திசாலியான குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

### சேவாதாரிகளிடம் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:

யார் சேவை செய்கிறார்களோ அவர்கள் பழங்களை (பலன்) சாப்பிடுவார்கள். பழங்கள் சாப்பிடுபவர்கள் சதா ஆரோக்கியமாக இருப்பார்கள். காய்ந்த பழங்களை சாப்பிடுபவர்கள் அல்ல, புது பழங்களை சாப்பிடக் கூடியவர்கள். சேவாதாரி என்றால் பாக்கியத்திற்கு அதிகாரிகள் (உரிமையுள்ள). எவ்வளவு பெரிய பாக்கியம்! நினைவுச் சின்னமாக இருக்கும் சிலைகளிடத்தில் சென்று பக்தர்கள் சேவை செய்கின்றனர். அந்த சேவையை மகா புண்ணியம் என்று நினைக்கின்றனர். மேலும் நீங்கள் எங்கு சேவை செய்கிறீர்கள்! சைத்தன்ய மகா தீர்த்த ஸ்தானத்தில். அவர்கள் தீர்த்த யாத்திரைகளுக்கு சென்று சுற்றி வந்து விட்டாலே மகான் ஆத்மா என்று கூறப்படுகின்றனர். நீங்கள் மகான் தீர்த்தத்தில் சேவை செய்து மகான் பாக்கியசாலி ஆகிவிட்டீர்கள். சேவைக்குத் தயாராக இருப்பவர்களிடத்தில் மாயை வரவே முடியாது.

சேவாதாரி என்றால் மனதிலும் சேவாதாரி, உடலினாலும் சேவையில் சுறு சுறுப்பாக இருக்கக் கூடியவர்கள். உடலின் கூடவே மனதும் சுறு சுறுப்பாக இருந்தால் மாயை வராது. உடலினால் ஸ்தூல சேவை செய்யுங்கள் மற்றும் மனதினால் சூழ்நிலையை, வாயுமண்டலத்தை சக்திசாலி ஆக்கக் கூடிய சேவை சேவை செய்யுங்கள். இரட்டை சேவை செய்யுங்கள், ஒன்று அல்ல. யார் இரட்டை சேவாதாரிகளாக இருப்பார்களோ அவர்களுக்கு பிராப்தியும் அந்த அளவிற்கு கிடைக்கும். மனதிற்கும் இலாபம், உடலுக்கும் இலாபம், செல்வமும் அளவற்றதாக கிடைத்தே தீரும். இந்த நேரத்திலும் உண்மையான சேவாதாரிகள் ஒருபோதும் பசியுடன் (பட்டினியாக) இருக்க முடியாது. இரண்டு ரொட்டி அவசியம் கிடைக்கும். ஆக அனைவரும் சேவைக்கான லாட்டரியில் தனது நம்பரை எடுத்துக் கொண்டீர்கள். எங்கு வேண்டுமென்றாலும் செல்லுங்கள், எப்போது வேண்டுமென்றாலும் செல்லுங்கள், இந்த குஷி சதா கூடவே இருக்க வேண்டும். ஏனெனில் தந்தை சதா கூடவே இருக்கின்றார். குஷியில் நடனமாடி, நடனமாடி சேவைக்கான நடிப்பு நடித்துக் கொண்டே செல்லுங்கள். நல்லது.

கேள்வி:

முழு கல்பத்திலும் இருக்கவே முடியாத எந்த ஒரு விசேஷம் சங்கமயுகத்தில் இருக்கிறது?

பதில்:

சங்கமயுகத்தில் தான் ஒவ்வொருவரும் எனது பாபா என்று கூறக் கூடிய அதிகாரம் (உரிமை) இருக்கிறது. ஒரே ஒருவரை அனைவரும் எனது பாபா என்று கூறுகிறீர்கள். என்னுடையவர் என்று கூறுகிறீர்கள் எனில், அதிகாரி ஆகிறீர்கள். சங்கமத்தில் தான் ஒவ்வொருவருக்கும் ஒரு தந்தையிடத்தில் என்னுடையவர் என்ற அனுபவம் ஏற்படுகிறது. எப்போது என்னுடைய பாபா என்று கூறினீர்களோ அப்போது ஆஸ்திக்கு உரிமையுள்ளளோராக ஆகிவிட்டீர்கள். அனைத்தும் என்னுடையதாக ஆகிவிட்டது. எல்லைக்குட்பட்ட என்னுடையது அல்ல, எல்லையற்ற என்னுடையது. ஆக எல்லையற்ற என்னுடையது என்பதற்கான குஷியில் இருங்கள்.

கேள்வி:

நெருங்கிய ஆத்மாவின் முக்கிய அடையாளம் என்னவாக இருக்கும்?

பதில்:

நெருங்கிய ஆத்மா என்றால் சதா தந்தைக்குச் சமம் ஒவ்வொரு சங்கல்பம், ஒவ்வொரு வார்த்தை மற்றும் ஒவ்வொரு காரியமும் செய்யக் கூடியவர்கள். யார் நெருக்கத்தில் இருக்கிறார்களோ அவர்கள் அவசியம் சமமாகவும் இருப்பார்கள். தூரத்தில் இருக்கும் ஆத்மாக்கள் சிறிது அஞ்சலி (பிராப்தி) அடையக் கூடியவர்களாக இருப்பார்கள். நெருக்கத்தில் இருக்கும் ஆத்மாக்கள் முழு அதிகாரம் அடையக் கூடியவர்களாக இருப்பார்கள். ஆக தந்தையின் சங்கல்பம், வார்த்தை எதுவோ, அதுவே உங்களுடையதாகும், இவர்கள் தான் நெருக்கமானவர்கள் என்று கூறப்படுகின்றனர்.

கேள்வி:

எந்த நினைவு சதா இருந்தால் ஒருபோதும் நேரத்தை வீணாக்கமாட்டீர்கள்?

பதில்:

இது சங்கமத்திற்கான நேரம், மிக உயர்ந்த லாட்டரி கிடைத்திருக்கிறது என்ற நினைவு சதா இருக்க வேண்டும். தந்தை நம்மை வைரம் போன்று தேவதைகளாக ஆக்கிக் கொண்டிருக்கின்றார், யாருக்கு இந்த நினைவு இருக்கிறதோ அவர்கள் ஒருபோதும் நேரத்தை வீணாக்கமாட்டார்கள். இந்த ஞானம் தான் வருமானத்திற்கு ஆதாரமாகும், ஆகையால் படிப்பை ஒருபோதும் தவற விடக் கூடாது.

கேள்வி:

ஆத்மாவிற்கு அனைத்தையும் விட மிகப் பிரியமான பொருள் எது? அன்பின் அடையாளம் என்ன?

பதில்:

ஆத்மாவிற்கு இந்த சரீரம் மிகவும் பிரியமானதாகும். சரீரத்தின் மீது அந்த அளவிற்கு அன்பு இருப்பதால் அதை விட விரும்புவதில்லை. பிழைத்துக் கொள்வதற்காக பல விதமான ஏற்பாடுகளை செய்கிறது. பாபா கூறுகின்றார் - குழந்தைகளே! இது தமோ பிரதான சீ சீ

சரீரமாகும். நீங்கள் இப்போது புதிய சரீரத்தை எடுக்க வேண்டும். ஆகையால் இந்த பழைய சரீரத்திலிருக்கும் பற்றுதலை நீக்கி விடுங்கள். இந்த சரீர உணர்வு இருக்கக் கூடாது, இதுவே இலட்சியமாகும்.

கேள்வி:

எந்த ஒரு திட்டத்தையும் நடைமுறையில் கொண்டு வருவதற்காக விசேஷமாக எந்த ஒரு சக்தி தேவை?

பதில்:

மாறக் கூடிய சக்தி. எதுவரை மாறக் கூடிய சக்தி இல்லையோ அதுவரை எடுத்த முடிவையும் நடைமுறையில் கொண்டு வர முடியாது. ஏனெனில் ஒவ்வொரு ஸ்தானத்திலும், ஒவ்வொரு நிலையிலும் அது சுயத்திற்காகவோ அல்லது சேவைக்காகவோ அவசியம் மாற்றம் கொண்டு வர வேண்டியிருக்கும்.

வரதானம்:

குழந்தை மற்றும் எஜமான் என்ற சமநிலையின் மூலம் முயற்சி மற்றும் சேவையில் சதா வெற்றிமூர்த்தி ஆகுக.

எல்லையற்ற தந்தை மற்றும் எல்லையற்ற ஆஸ்திக்கு குழந்தை மற்றும் எஜமானாக இருக்கிறேன் என்ற நஷாவுடன் சதா இருங்கள். ஆனால் ஏதாவது கருத்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது, திட்டம் பற்றி சிந்திக்க வேண்டியிருக்கிறது, காரியம் செய்ய வேண்டியிருக்கிறது எனில், எஜமான் ஆகி செய்யுங்கள், மேலும் அதிகபட்ச ஆத்மாக்களின் மூலம் அல்லது நிமித்தமாக இருக்கக் கூடிய ஆத்மாக்களின் மூலம் எந்த ஒரு விசயமும் முடிவாகி விடுகிறதோ அந்த நேரத்தில் குழந்தையாக ஆகிவிடுங்கள். எந்த நேரத்தில் ராய்பகாதூர் ஆக வேண்டும்? எந்த நேரத்தில் கருத்துக்களை கேட்கக் கூடியவர்களாக, (சாமானியர்) ஆக வேண்டும்? என்ற முறையை கற்றுக் கொண்டால் முயற்சி மற்றும் சேவை இரண்டிலும் வெற்றியாளர்களாக இருப்பீர்கள்.

சுலோகன்:

பொறுப்பானவர் மற்றும் பணிவுடையவர் ஆவதற்காக, மனம் மற்றும் புத்தியை பிரபுவிற்கு அர்பணித்து விடுங்கள்.

ஓம்சாந்தி

## பிச்சைக்காரராக ஆகாதீர்கள், சதா காலத்திற்குமான அதிகாரி ஆகுங்கள்

இன்று உலகைப் படைப்பவராகிய தந்தை உலகைச் சுற்றி வந்து கொண்டே தமது சந்திப்பின் இருப்பிடத்தை வந்தடைந்தார். உலகைச் சுற்றி வரும் போது எதைப் பார்த்தார்? வள்ளலின் குழந்தைகள் அனைத்து ஆத்மாக்களும் பிச்சைக்காரர் ரூபத்தில் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கின்றனர். சிலர் ராயல் பிச்சைக்காரர்கள், சிலர் சாதாரணப் பிச்சைக்காரர்கள். அனைவரின் வாயிலும் இதைக் கொடு, அதைக் கொடு என்ற வார்த்தைகளே கேட்டுக் கொண்டிருந்தது. சிலர் பணத்தின் பிச்சைக்காரர்கள், சிலர் சகயோகத்தின் பிச்சைக்ககாரர்கள், சிலர் சம்மந்தத்தின் பிச்சைக்காரர்கள், சிலர் கொஞ்ச சமயத்திற்கான சுகம்-நிம்மதியின் பிச்சைக்காரர்கள். சிலர் ஓய்வு அல்லது தூக்கத்தின் பிச்சைக்காரர்கள். சிலர் முக்தியின் பிச்சைக்காரர்கள். சிலர் தரிசனத்தின் பிச்சைக்காரர்கள், சிலர் மரணத்தின் பிச்சைக்காரர்கள், சிலர் பின்பற்றுவோர்களான பிச்சைக்காரர்கள். இது போல் அநேக விதமாக, தந்தையிடமிருந்து, மகான் ஆத்மாக்களிடமிருந்து, தேவ ஆத்மாக்களிடமிருந்து மற்றும் சாகார சம்மந்தத்தின் ஆத்மாக்களிடமிருந்து, இதைக் கொடுங்கள். அதைக் கொடுங்கள் என்று பிச்சை கேட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆக, பிச்சைக்காரர்களின் உலகத்தைப் பார்த்து விட்டு, சுயராஜ்ய அதிகாரிகளின் குழுவில் வந்து சேர்ந்துள்ளோம். அதிகாரி, இதைக் கொடு, அதைக் கொடு என்று சங்கல்பத்திலும் கூட பிச்சை கேட்க மாட்டார்கள். பிச்சைக்காரர்களின் வார்த்தை, கொடுங்கள். மற்றும் அதிகாரியின் வார்த்தை இவை அனைத்தும் எனது அதிகாரம். அத்தகைய அதிகாரி ஆத்மாக்களாக ஆகியிருக்கிறீர்கள் இல்லையா? வள்ளலாகிய தந்தை கேட்காமலே அனைத்து அவிநாசி பிராப்திகளின் அதிகாரத்தைத் தாமாகவே கொடுத்து விட்டார். நீங்கள் அனைவரும் ஒரு வார்த்தையின் சங்கல்பம் செய்தீர்கள் - என்னுடைய பாபா என்று. பாபாவும் ஒரே வார்த்தையில் சொன்னார், சர்வ கஜானாக்களின் உலகம் உன்னுடையது. ஒரே சங்கல்பம் அல்லது வார்த்தை அதிகாரி ஆக்குவதற்கு நிமித்தமாக ஆனது. என்னுடையது மற்றும் உன்னுடையது. இதே இரண்டு சொற்கள் குழப்பத்திலும் (சக்கரம்) சிக்க வைத்து விடுகின்றன மற்றும் இதே இரண்டு சொற்கள் அனைத்து அழியக்கூடிய துக்கமயமான குழப்பங்களிலிருந்து விடுவித்து, சர்வ பிராப்திகளின் அதிகாரியாகவும் ஆக்கி விடுகின்றன. அநேக சக்கரங்களில் இருந்து விடுவித்து ஒரு சுயதர்சனச் சக்கரத்தை எடுத்துக் கொண்டீர்கள், அதாவது சுயதரிசனச் சக்கரதாரி ஆகி விட்டீர்கள். எப்போது எந்த விதமான உடல்-மனம்-செல்வம்-மக்கள்,

சம்மந்தம்-தொடர்பு இவற்றின் சக்கரத்தில் சிக்கி விடுகிறீர்கள் என்றால், அதற்கான காரணம் சுயதரிசனச் சக்கரத்தை விட்டுவிடுகிறீர்கள். சுயதரிசனச் சக்கரத்தை சதா ஒரே விரலில் காட்டுகின்றனர். 5 விரல்கள் அல்லது 2 விரல்கள் அல்ல. ஒரு விரல் என்றால் ஒரே சங்கல்பம் - நான் பாபாவுடையவன், பாபா என்னுடையவர். இந்த ஒரு சங்கல்பம் என்ற ஒரு விரல் மீது சுயதரிசனச் சக்கரம் சுற்றுகிறது. ஒன்றை விட்டு அநேக சங்கல்பங்களில் செல்கிறீர்கள். அநேக சக்கரங்களில் சிக்கிக் கொள்கிறீர்கள். சுயதரிசனச் சக்கரதாரி என்றால் சுயத்தின் தரிசனம் செய்வது மற்றும் சதா காலத்திற்கும் மகிழ்ச்சியாக இருப்பது. சுயதரிசனம் இல்லை என்றால் மகிழ்ச்சிக்குப் பதிலாக கேள்வி கேட்பவராக ஆகி விடுகிறீர்கள். மகிழ்ச்சி நிறைந்த உள்ளம் என்றால் எந்த ஒரு கேள்வியும் கிடையாது. ஆக, சதா சுயதரிசனத்தின் மூலம் மகிழ்ச்சி, அதாவது சர்வ பிராப்திகளுக்கும் அதிகாரி. கனவில் கூட தந்தைக்கு முன்னிலையில் பிச்சைக்கார ரூபம் இருக்கக் கூடாது. இந்தக் காரியத்தைச் செய்யுங்கள், அல்லது செய்ய வையுங்கள். இந்த அனுபவம் செய்ய வையுங்கள், இந்த தடையைப் போக்கி விடுங்கள். மாஸ்டர் வள்ளலின் தர்பாரில் எந்த ஓர் அப்ராப்தியும் இருக்க முடியுமா? அவிநாசி சுயராஜ்யம், அந்த மாதிரி இராஜ்யத்தில் சர்வ கஜானாக்களின் களஞ்சியம் நிரம்பியிருக்கும். நிறைந்த களஞ்சியத்தில் குறை ஏதும் இருக்க முடியுமா? தானாகவே, நீங்கள் எதையும் கேட்காமலே அவிநாசியாக, அளவற்றதாகக் கொடுக்கும் வள்ளல் - அவருக்குச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? உங்கள் சங்கல்பத்தை விடவும், யோசிப்பதை விடவும் பல மடங்கு அதிகம் சுயம் பாபாவே கொடுக்கிறார். ஆகவே சங்கல்பத்தில் கூட இந்தப் பிச்சைக்காரத் தனம் இருக்கக் கூடாது. அப்போது தான் அதிகாரி எனச் சொல்லப்படுவீர்கள். அந்த மாதிரி அதிகாரி ஆகியிருக்கிறீர்களா? அனைத்தையுமே அடைந்து விட்டோம் - இந்தப் பாடலையே பாடுகிறீர்கள் இல்லையா? அல்லது இன்னும் இதை அடைய வேண்டும், அதை அடைய வேண்டும். இந்தப் புகார்ப் பாடலைப் பாடுகிறீர்களா? எங்கே நினைவு உள்ளதோ, அங்கே புகார் இருக்காது. எங்கே புகார் உள்ளதோ, அங்கே நினைவு இருக்காது. புரிந்ததா?

சில நேரம் இராஜ்ய அதிகாரியின் ஆடையை மாற்றி பிச்சை எடுக்கும் பிச்சைக்கார ஸ்திதியின் பழைய ஆடையை அணிந்து கொள்ளாமல் இருக்கிறீர்களா? சம்ஸ்காரங்கள் என்ற பெட்டியில் மறைத்து வைக்கவில்லையே? பெட்டியுடன் கூடவே ஸ்திதி என்ற ஆடையை எரித்து விட்டீர்களா? அல்லது தேவையான நேரத்தில் பயன்படுத்தலாம் என்று வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? சம்ஸ்காரத்திலும் அம்ச மாத்திரம் கூட இருக்கக் கூடாது. இல்லையென்றால் இருநிறம் கொண்டவராக ஆகி விடுவீர்கள். சில நேரம் பிச்சைக்காரர், சில நேரம் அதிகாரி - அதனால் சதா ஒரு சிரேஷ்ட நிறத்தில் இருங்கள். பஞ்சாப்காரர்களோ, வண்ணம் தீட்டுவதில் திறமைசாலிகள் இல்லையா? சரியாகப் படியாத வண்ணத்தைப்

பூசுகிறவர்கள் இல்லையே? மற்றும் இராஜஸ்தானைச் சேர்ந்தவர்கள் இராஜ்ய அதிகாரிகள் தானே? அடிமைத்தனத்தின் சம்ஸ்காரம் உள்ளவர்கள் இல்லை தானே? சதா இராஜ்ய அதிகாரி! மூன்றாவது இந்தூர் - சதா மாயாவின் பிரபாவத்திலிருந்து விடுபட்டு இருப்பவர்கள் - இன் டோர் - உள்ளே இருப்பவர்கள் என்றால் சதா பாபாவின் குடை நிழலுக்கு உள்ளே இருப்பவர்கள். அவர்களும் மாயாஜீத் ஆகி விட்டனர் இல்லையா? நாலாவது குரூப் - மகாராஷ்ட்ரா, அதாவது மகான் ஆத்மா. அனைத்திலும் மகான். சங்கல்பம், பேச்சு கர்மம் மூன்றிலும் மகா மகான்கள். மகான் ஆத்மாக்கள் என்றால் சம்பன்ன ஆத்மாக்கள். நாலாபுறத்தின் நான்கு நதிகள் சேர்ந்திருக்கின்றனர். ஆனால் அனைவருமே சர்வ பிராப்தி சொரூப அதிகாரிகள் இல்லையா? நால்வருக்கும் நடுவில் ஐந்தாவதாக இரட்டை வெளிநாட்டினர். ஐந்து நதிகளின் சந்திப்பு எங்கே உள்ளது? மதுபன் கரையில். நதிகள் மற்றும் கடலின் சங்கமம். நல்லது.

சதா சுயராஜ்ய அதிகாரி, சுயதரிசனச் சக்கரதாரி, சதா மகிழ்ச்சியுடன் இருப்பவர்கள், சர்வ கஜானாக்களாலும் நிரம்பிய மகான் ஆத்மாக்கள். பிச்சைக்காரத் தனத்தைக் கனவிலும் கூட இல்லாதவாறு முடித்து விடுபவர்கள், அத்தகைய வள்ளலின் பெரும் செல்வந்தரின் குழந்தைகளுக்கு அவிநாசி பாப்தாதாவின் அமர் பவ என்ற சதா சம்பன்ன சொரூபத்தின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

பார்ட்டிகளோடு அவ்யபக்த பாப்தாதாவின் உரையாடல்:

1)எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் நீங்கள், எங்கெங்கோ உள்ள கிளைகளை ஒரு விருட்சமாக ஆக்கியிருக்கிறீர்கள். இப்போது அனைவரும் தங்களை ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள் என உணர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? அனைவரும் ஒரே சந்தன மரமாக ஆகி விட்டீர்கள். முதலில் பல்வேறு மரக்கிளைகளாக இருந்தீர்கள். இப்போது சந்தன மரத்தின் கிளையாக ஆகி விட்டீர்கள். சந்தனம் மணம் தருகிறது. உண்மையான சந்தனத்திற்கு எவ்வளவு மதிப்பு உள்ளது! மற்றும் அனைவரும் எவ்வளவு அன்போடு சந்தனத்தை உடன் வைத்துக் கொள்கின்றனர்1 அது போல் சந்தனத்திற்கு சமமமாக மணம் தரக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களை பாபாவும் சதா உடன் வைத்துக் கொள்கிறார். ஒன்று, பாபா கூடவே வைத்துக் கொள்கிறார். இரண்டாவது, உலகத்தின் முன்னால் விலை மதிக்க முடியாத ரத்தினங்கள். இப்போது உலகத்திற்குத் தெரியாது. இன்னும் போகப் போகஎவ்வளவு உயர்ந்த பார்வையுடன் பார்ப்பார்கள்! எப்படி நட்சத்திரங்களை உயர்ந்த பார்வையுடன் பார்க்கின்றனர், அது போல் ஞான நட்சத்திரங்களாகிய உங்களைப் பார்ப்பார்கள். மதிப்பு மிக்கவர்களாக ஆகி விட்டீர்கள் இல்லையா? சந்தன மரத்தில் வந்து விட்டீர்கள், பகவானுக்குத் துணையாக ஆகி விட்டீர்கள். ஆக, சதா தன்னை தந்தையுடன்

கூடவே இருக்கக் கூடிய புகழ் பெற்ற ஆத்மாக்கள் என உணர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? இன்று வரை கூட ஜடச்சித்திரங்கள் மூலம் பாடப்படவும் பூஜிக்கப்படவும் செய்கிறீர்கள். முழுக் கல்பத்திலும் புகழ் பெற்றவர்களாக இருக்கிறீர்கள்.

வீட்டில் அமர்ந்தவாறே பத்மாபதம் (பல கோடி மடங்கு) பாக்கியவான் ஆகி விட்டீர்கள் இல்லையா? அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் வந்து விட்டது. நீங்கள் அதிர்ஷ்டத்தின் பின்னால் செல்லவில்லை. ஆனால் அதிர்ஷ்டம் உங்கள் வீட்டிற்கே வந்து சேர்ந்து விட்ட.து. இப்படிப்பட்ட அதிர்ஷ்டசாலி வேறு யாரும் இருக்க முடியுமா? வாழ்க்கையே சிரேஷ்டமானதாக ஆகி விட்டது. வாழ்க்கை என்பது ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரத்தினுடையதல்ல. வாழ்க்கை சதா காலத்திற்குமானது. யோகி ஆகவில்லை, ஆனால் யோகி வாழ்க்கை வாழ்பவராக ஆகி விட்டீர்கள். யோகி வாழ்க்கை என்றால் நிரந்தர யோகி யார் நிரந்தர யோகியாக இருக்கின்றனரோ, அவர்கள் உண்ணும் போது, அருந்தும் போது, நடந்து போகும் போதும் வரும் போதும் தந்தை மற்றும் நான் சிரேஷ்ட ஆத்மா என்ற இந்த ஸ்மிருதி மட்டுமே இருக்கும். தந்தை எப்படியோ, அபபடியே குழந்தைகளும், எப்படி பாபாவின் குணங்களோ, எது பாபாவின் காரியமோ, அது குழந்தை களினுடையதாக இருக்கும். இது தான் யோகி வாழ்க்கை எனச் சொல்லப்படும். அந்த மாதிரி ஈடுபாட்டில் சதா மூழ்கி இருக்கும் யோகிகள் தாம் சதா மகிழ்ச்சியாக இருக்க முடியும். மனதின் மகிழ்ச்சி உடலிலும் வரும். சர்வ பிராப்தி சொரூபமாகவே இருக்கிறீர்கள் என்றால், எங்கே சர்வ பிராப்திகள் நிறைந்துள்ளனவோ, அங்கே மகிழ்ச்சி இருக்கும் இல்லையா? துக்கத்தின் பெயர் அடையாளமே இருக்காது. சதா சுக ரூபம், அதாவது சதா மகிழ்ச்சி. ஒரு சிறிதும் துக்கமான உலகத்தின் கவர்ச்சி இருக்காது. துக்க உலகத்தில் புத்தி செல்கிறது என்றால் அது கவர்ச்சி. யார் சதா மகிழ்சிசியுடன் உள்ளனரோ, அவர்கள் துக்க உலகத்தின் பக்கம் கவரப்பட மாட்டார்கள். கவரப்படுகின்றனர் என்றால், மகிழ்ச்சி இல்லை. ஆக, சதா காலத்தின் மகிழ்ச்சி. ஆஸ்தியே சதா காலத்திற்குமானது. இதுவே விசேஷமாகும்.

சங்கமயுகம் என்பது வரதானங்களின் யுகம். வரதானங்களின் யுகத்தில் பாகத்தை நடிப்பவர்கள் சதா வரதானியாக இருப்பார்கள் இல்லையா? வரதானத்தில் முயற்சி செய்ய வேண்டியது இருக்காது. எங்கே முயற்சி அல்லது கடின உழைப்பு உள்ளதோ, அங்கே வரதானம் இருக்காது. உங்கள் அனைவருக்கும் ராஜ்ய பாக்கியம் வரதானமாகக் கிடைத்திருக்கிறதா, கடின உழைப்பால் கிடைத்ததா? வரங்களை வழங்கும் வள்ளலின் (வரதாதா) குழந்தைகளாக ஆனீர்கள், வரதானம் கிடைத்தது. அனைத்திலும் சிரேஷ்ட வரதானம் - அவிநாசி பவ. அவிநாசி

ஆகிவிட்டால் அவிநாசி ஆஸ்தி தானாகவே கிடைத்து விடும். அவிநாசி யுகத்தின் அவிநாசி ஆத்மாக்கள் நீங்கள். வரங்களை வழங்கும் வள்ளலே தந்தையாகி விட்டார், அவரே ஆசிரியர் ஆகி விட்டார், சத்குருவாகவும் ஆகி விட்டார் என்றால் வேறு என்ன பாக்கி உள்ளது? அது போன்ற ஸ்மிருதி சதா இருக்க வேண்டும். அவிநாசி என்றால் சதா ஏக்ரஸ் ஸ்திதியில் இருப்பவர்கள். சில நேரம் மேலே, சில நேரம் கீழே என்று இருக்காது. ஏனென்றால் தந்தையின் ஆஸ்தி கிடைத்தது, வரதானம் கிடைத்தது என்றால் கீழே ஏன் வர வேண்டும்? ஆக, சதா உயர்ந்த ஸ்திதியில் இருக்கக் கூடிய மகான் ஆத்மாக்கள் என்பதையே சதா நினைவில் வைக்க வேண்டும். பாபாவின் குழந்தை ஆகி விட்டீர்கள் என்றால் விசேஷ ஆத்மா ஆகி விட்டீர்கள். விசேஷ ஆத்மாவின் ஒவ்வொரு சங்கல்பம், ஒவ்வொரு வார்த்தை மற்றும் ஒவ்வொரு செயல் விசேஷமானதாக இருக்கும். மற்ற ஆத்மாக்களுக்கும் விசேஷமானவராக ஆவதற்கான பிரேரணை (தூண்டுதல்) கிடைக்கிற மாதிரியான அத்தகைய விசேஷ வார்த்தை, கர்மம் மற்றும் சங்கல்பம் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட விசேஷ ஆத்மாக்கள் நீங்கள். இருப்பது சாதாரண உலகத்தில், சாதாரண ரூபத்தில் என்றாலும் கூட அனைத்திலிருந்தும் விலகியவராக, மற்றும் பாபாவுக்கு அன்பானவராக இருக்கிறீர்கள். தாமரை மலருக்கு சமமாக.சேற்றில் மூழ்குபவராக இல்லை, மற்றவர்களைச் சேற்றிலிருந்து வெளியில் கொண்டு வருபவர்கள். அனுபவியாக இருப்பவர்கள் ஒரு போதும் சிக்கிக் கொள்கின்ற ஏமாற்றத்தை அடைய மாட்டார்கள். நல்லது.

2) சதா தன்னை நிச்சயபுத்தி உள்ள வெற்றிரத்தின ஆத்மா என உணர்ந்திருக்கிறீர்களா? சதா காலத்திற்கான நிச்சயபுத்தி, அதாவது சதா காலத்தின் வெற்றியாளர். எங்கே நிச்சயம் உள்ளதோ, அங்கே வெற்றி தானாகவே கிடைக்கும். வெற்றி கிடைக்கவில்லை என்றால், நிச்சயத்தில் எங்காவது குறை இருக்கிறது. தனது நிச்சயத்தில், பாபாவின் நிச்சயத்தில், ஞானத்தின் நிச்சயத்தில், எந்த ஒரு நிச்சயத்தில் குறை இருந்தாலும் வெற்றி இல்லை. நிச்சயத்தின் அடையாளம் வெற்றி. நீங்கள் அனுபவிகள் இல்லையா? நிச்சயபுத்தி உள்ளவர்களை மாயா ஒரு போதும் அசைக்க முடியாது. அவர்கள் மாயாவை அசைப்பவர்களாக இருப்பார்கள். தான் அசைந்து கொடுக்க மாட்டார்கள். நிச்சயத்தின் அஸ்திவாரம் உறுதியாக இருக்குமானால் தானும் ஆடாதவர்களாக இருப்பார்கள். எப்படி அஸ்திவாரமோ, அப்படி உறுதியானதாகக் கட்டடம் உருவாகும். நிச்சயத்தின் அஸ்திவாரம் அசையாததாக இருந்தால் கர்மம் என்ற கட்டடமும் அசையாததாக இருக்கும். மாயாவை நல்லபடியாக அறிந்து கொண்டு விட்டீர்கள் இல்லையா? மாயா ஏன் மற்றும் எப்போது வருகிறது? இது ஞானம் இல்லையா? இந்த ரீதியில் மாயா வருகிறது என்பது யாருக்காவது தெரியுமானால் அவர்கள் சதா பாதுகாப்பாக இருப்பார்கள் இல்லையா? இங்கிருந்து இந்த விதமாக விரோதி வருவான் என்றால் பாதுகாப்பிற்கான ஏற்பாடு செய்வார்கள் இல்லையா?

நீங்களும் புத்திசாலிகள் என்றால் மாயா ஏன் போராடவேண்டும்? மாயா தோற்றுப்போக வேண்டும். சதா வெற்றி ரத்தினங்கள், கல்ப-கல்பத்தின் வெற்றியாளர்கள். இந்த ஸ்மிருதியோடு சக்திசாலி ஆகி முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். பக்குவமடையாத இலைகளைப் பறவைகள் சாப்பிட்டு விடும். அதனால் பக்கா ஆகுங்கள். பக்கா ஆகி விட்டால் மாயா என்ற பறவை உண்ணாது. பாதுகாப்பாக இருப்பீர்கள்.

3) சதா சாந்திக்கடலின் குழந்தைகள் சாந்த சொரூப ஆத்மாக்களாக ஆகி விட்டீர்களா? நாம் உலகத்தில் சாந்தியை ஸ்தாபனை செய்யக்கூடிய ஆத்மாக்கள் என்ற நஷா இருக்கிறதா? சுயதர்மமும் சாந்தி மற்றும் கடமையும் உலக சாந்தி ஸ்தாபனை செய்வது தான். யார் சுயம் சாந்தி சொரூபமாக உள்ளனரோ, அவர்கள் தாம் உலகத்தில் சாந்தியை ஸ்தாபனை செய்ய முடியும். சாந்திக்கடல் பாபாவின் விசேஷ சகயோகி ஆத்மாக்கள். தந்தையின் காரியமும் இது தான் என்றால் குழந்தைகளின் காரியமும் இது தான். ஆக, சுயம் சதா சாந்த சொரூபமாக இருக்க வேண்டும். அசாந்தியின் பெயர் அடையாளம் எதுவும் இருக்கக் கூடாது. அசாந்தியின் உலகம் விடுபட்டது. இப்போது சாந்தியின் தேவி, சாந்தியின் தேவா ஆகி விட்டீர்கள். சாந்தி தேவா எனச் சொல்கின்றனர் இல்லையா? சாந்தியைத் தரும் சாந்தி தேவா மற்றும் சாந்தி தேவி ஆகி விட்டீர்கள். இதே காரியத்தில் சதா பிஸியாக இருப்பதால் தானாகவே மாயாஜீத் ஆகி விடுவீர்கள். எங்கே சாந்தி உள்ளதோ, அங்கே மாயா எப்படி வர முடியும்? சாந்தி என்றால் ஒளிக்கு முன்னால் இருள் இருக்க முடியாது. அசாந்தி ஓடி விட்டது, அரைக்கல்பத்திற்கு விடை கொடுத்து விடுங்கள். அந்த மாதிரி விடை கொடுப்பவர்கள் தானே நீங்கள்? நல்லது.

வரதானம் :

அமிர்தவேளையின் மகத்துவத்தை அறிந்து மகான் ஆகக்கூடிய விசேஷ சேவாதாரி ஆகுக.

சேவாதாரி என்றால் கண்கள் திறந்ததும் சதா பாபாவுக்கு சமமான ஸ்திதியை அனுபவம் செய்ய வேண்டும். யார் விசேஷ வரதானத்தின் சமயத்தை அறிந்துள்ளனரோ, மற்றும் வரதானங்களை அனுபவம் செய்கின்றனரோ, அவர்கள் தாம் விசேஷ சேவாதாரி ஆவார்கள். இந்த அனுபவம் இல்லையென்றால் சதாரண சேவாதாரி ஆகின்றனர், விசேஷ சேவாதாரி அல்ல. யாருக்கு அமிர்தவேளையின், சங்கல்பத்தின், சமயத்தின் மற்றும் சேவையின் மகத்துவம் உள்ளதோ, அது போல் அனைத்து மகத்துவங்களையும் அறிந்திருப்பவர்கள் மகான் ஆகின்றனர். மேலும் மற்றவர்களுக்கும் மகத்துவத்தைச் சொல்லி அவர்களையும் மகான் ஆக்குவார்கள்.

சுலோகன் :

வாழ்க்கையின் மகான் தன்மை என்பது சத்தியத்தின் சக்தியாகும். இதன் மூலம் அனைத்து ஆத்மாக்களும் தாமாகவே தலை வணங்குவார்கள்.

ஓம்சாந்தி

25.12.1983 ஓம்சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சங்கமயுகத்தின் நாட்கள் மிகவும் மகிழ்ச்சியைக் கொண்டாடக் கூடிய நாட்கள்

இன்று உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை, உயர்ந்ததிலும் உயர்ந்த குழந்தைகளுக்கு உயர்ந்த நாளுக்கான வாழ்த்துக்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். கிஸ்மிஸ் (உலர் திராட்சை) பழத்தை விட இனிமையாக இருக்கும் குழந்தைகளுக்கு கிறிஸ்துமஸ் - தின வாழ்த்துக்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். உயர்ந்ததிலும் உயர்ந்த நாள் சங்கமயுகத்தின் நாட்களாகும். தாழ்ந்த நாட்கள் அழிந்து விட்டன, குஷி, ஆர்வத்துடன் இருக்கக் கூடிய உற்சவத்தின் நாட்கள் சங்கயுகமாகும். அந்த நாளில் விருட்சபதி கல்ப விருட்சத்தின் கதையைக் கூறுகின்றார். இதே சங்கமயுகத்தின் உயர்ந்த நாளில் கல்ப விருட்சத்திற்கு அஸ்திவாரத்தில் ஜொலித்துக் கொண்டிருக்கும் சிரேஷ்ட பிராமண ஆத்மாக்கள் முழு மரத்தையும் ஜொலிப்படையச் செய்கின்றனர். அதிஷ்ட நட்சத்திரங்கள், அன்பான நட்சத்திரங்கள் மரத்தை அழகானதாக ஆக்கி விடுகின்றனர். விருட்சத்திற்கு அஸ்திவாரமாக இருப்பது சைத்தன்ய, ஜொலிக்கும் நட்சத்திரங்கள் ஆகும். விருட்சத்தில் ஜொலித்துக் கொண்டிருக்கும் வெள்ளை (ஒயிட்) மற்றும் ஒளியான (லைட்) பரிஸ்தாக்கள் விருட்சத்தையும் ஜொலிப்படையச் செய்கின்றனர். இதன் நினைவுச் சின்னமாகத் தான் இன்றைய நாளில் கிறிஸ்துமஸ் மரத்தை அலங்கரிக்கின்றனர். சங்கமத்தின் உயர்ந்த நாளில், உற்சாகத்தின் உற்சவ நாளில் இரவையும் பகலாக ஆக்கி விடுகிறீர்கள், இருளை ஒளியானதாக மாற்றி விடுகிறீர்கள். சங்கமத்தின் உயர்ந்த நாளில் பிராமண குடும்பத்தினர் சந்திப்பு செய்து ஆத்மாவிற்கு உணவு, பிரம்மா போஜனம் அன்பாக சாப்பிடுகிறீர்கள். அதனால் தான் நினைவுச் சின்னமாக குடும்பத்திலுள்ள அனைவரும் ஒன்று கூடி சாப்பிடுகின்றனர், குடிக்கின்றனர், கொண்டாடுகின்றனர். முழு கல்பத்திலும் மகிழ்ச்சியை கொண்டாடக் கூடிய நாள் அல்லது மகிழ்ச்சியாக இருக்கக் கூடிய யுகம் சங்கமயுகமாகும். இந்த சங்கமயுகத்தில் எவ்வளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு நிறைந்த மனதுடன் மகிழ்ச்சியைக் கொண்டாட முடியும். ஞான அமிர்தத்தின் போதைஅன்பில் மூழ்க வைத்து விடுகிறது. இந்த ஆன்மீக போதையின் அனுபவம் விசேஷமாக உயர்ந்த நாளன்று செய்கிறீர்கள். சங்கமயுகத்தின் பிரம்ம முகூர்த்தத்தில், அமிர்தவேளையில் உயர்ந்த பிறப்பிற்கான கண்களைத் திறந்ததும் என்ன கிடைக்கிறது? எவ்வளவு பரிசுகள் கிடைத்திருக்கிறது! கண்களைத் திறந்ததும் வயோதிக பாபாவை பார்க்கிறீர்கள். வெள்ளையான பாபாவை

. ! ?

பார்க்கிறீர்கள் வெள்ளையில் சிவப்பை பார்க்கிறீர்கள் அல்லவா யாரை பார்த்தீர்கள் அமைதியை ஏற்படுத்தும் பாபாவைப் பார்த்தீர்கள். எத்தனை பரிசுகளை கொடுத்திருக்கின்றார்? பல பிறவிகளுக்கு அந்த பரிசுகளினாலேயே வளரும் அளவிற்கு நிறைந்த பரிசுகளை கொடுத்திருக்கின்றார். எதையும் வாங்க வேண்டிய அவசியமிருக்காது. அனைத்தையும் விட மிகப் பெரிய பரிசு, வைரத்தை விட மிக மதிப்பு வாய்ந்த அன்பு என்ற கங்கனம், ஈஸ்வரிய மந்திரம் என்ற கங்கனம் கொடுத்திருக்கின்றார். இதன் மூலம் எது வேண்டுமோ, எப்போது வேண்டுமோ சங்கல்பத்தின் மூலம் ஆவாஹனம் (அழைத்தால்) செய்தால் கிடைத்து விடும். பிராமணர்களின் களஞ்சியத்தில் எந்த குறையும் கிடையாது. இப்படிப்பட்ட பரிசு கண்களைத் திறந்ததும் அனைத்து குழந்தைகளுக்கும் கிடைத்திருக்கிறது. அனைவருக்கும் கிடைத்திருக்கிறது அல்லவா! யாருக்கும் கிடைக்காமல் இருந்து விடவில்லை தானே! இது தான் உயர்ந்த நாளின் மகிமையாகும். முதலில் பிராமண ஆத்மாக்களின் நினைவுச் சின்னம். கடைசி தர்மம் வரை அடையாளம் இன்று வரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏனெனில் சிரேஷ்ட பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் முழு விருட்சத்திற்கும் அஸ்திவாரமாக இருக்கிறீர்கள். அனைத்து ஆத்மாக்களுக்கும் தாத்தா, கொள்ளுத் தாத்தாவாக நீங்கள் தான் இருக்கிறீர்கள் அல்லவா! இவைகள் உங்களது கிளைகளாகும். விருட்சத்திற்கு அஸ்திவாரம் உயர்ந்ததிலும் உயர்ந்த பிராமணர்களாகிய நீங்கள் தான். ஆகையால் ஒவ்வொரு தர்மத்தைச் சார்ந்த ஆத்மாக்கள் ஏதாவது ஒரு ரூபத்தில் ஆத்மாக்களாகிய உங்களை மற்றும் சங்கமயுகத்தின் உங்களது வழக்கங்களை இன்று வரை கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு பரம்பரையான பூஜைக்குரிய ஆத்மாக்களாக இருக்கிறீர்கள். பரம் ஆத்மாவை விட இரட்டை பூஜைக்குரியவர்கள் நீங்கள். இவ்வாறு தன்னை உயர்ந்ததிலும் உயர்ந்த, சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமானவன் என்று புரிந்து கொண்டு மகிழ்ச்சியாக நாளை கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள்தானே! கொண்டாடக் கூடிய நாட்கள் எவ்வளவு குறைவாக இருக்கிறது! கல்பத்தின் கணக்கை வைத்து ஒரே ஒரு உயர்ந்த நாளை அதிகமாகக் கொண்டாடுங்கள். மகிழ்ச்சியில் ஆடுங்கள். பிரம்மா போஜனம் சாப்பிடுங்கள் மற்றும் குஷியில் பாட்டு பாடுங்கள். வேறு ஏதாவது கவலை இருக்கிறதா என்ன? கவலையற்ற சக்கரவர்த்திகள் முழு நாளும் என்ன செய்வார்கள்? மகிழ்ச்சியுடன் கொண்டாடுவார்கள் அல்லவா! மன மகிழ்ச்சியை கொண்டாடுங்கள். எல்லைக்குட்பட்ட மகிழ்ச்சியை கொண்டாடாதீர்கள். எல்லையற்ற நாளுக்கான, எல்லையற்ற கவலையில்லாத மகிழ்ச்சியைக் கொண்டாடுங்கள். புரிந்ததா! பிராமண உலகிற்கு எதற்காக வந்திருக்கிறீர்கள்? மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்காக! நல்லது.

இன்று விசேஷமாக இரட்டை அயல்நாட்டு குழந்தைகளுக்கு மகிழ்ச்சியான நாள் உயர்ந்ததிலும் உயர்ந்த நாளை கொண்டாடுவதற்கான விசேஷமான வாழ்த்துக்கள்! விசேஷசந்திப்பிற்கான பரிசு கொடுப்பதற்காக பாப்தாதா வந்திருக்கின்றார். இப்போது மிகவும் குறைவானவர்கள் இருக்கிறீர்கள், இருப்பினும் இவ்வளவு தூரத்தில் அமர வேண்டியிருக்கிறது. எப்போது அதிகரிக்குமோ பிறகு தரிசனம் மட்டுமே இருக்கும். பிறகு சந்திப்பிற்கான வாய்ப்பு இருக்காது. தரிசனம் செய்வது மட்டுமே இருக்கும். திருஷ்டி தரிசனமாக மாறிவிடும். கடைசியில் திருஷ்டி மட்டுமே கிடைக்கும், பிறகு அதுவே பக்தியில் தரிசனம் என்ற வார்த்தையாக மாறிவிடும். இரட்டை அயல் நாட்டினருக்கு விசேஷமாக எந்த போதை இருக்கிறது? உயர்ந்த மதில் சுவர்கள், உயர்ந்த சமுத்திரம், உலக நாடுகளின் சுவர்கள் இருக்கின்றன என்ற ஒரு பாட்டும் இருக்கிறது அல்லவா! ஆக உயர்ந்த நாடுகளின் சுவர், தர்மத்தின் சுவர், ஞானத்தின் சுவர், கொள்கைகளின் சுவர், வழக்கங்களின் சுவர், அனைத்தையும் கடந்து வந்து விட்டீர்கள் அல்லவா! அனைத்து பாரதவாசிகளும் சந்திக்கவே செய்கின்றனர். பரதவாசிகளுக்கும் ஆஸ்தி கிடைத்திருக்கிறது, ஆனால் தேசத்தினர்களுக்கு தேசத்தில் கிடைத்திருக்கிறது. இந்த அளவிற்கு உயர்ந்த சுவர் களைக் கடக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. பக்தியின் சுவரை மட்டுமே கடந்தீர்கள். ஆனால் இரட்டை அயல்நாட்டுக் குழந்தைகள் பல வகையான உயர்ந்த சுவர்களை கடந்திருக்கின்றனர், ஆகையால் இரட்டை போதைஇருக்கிறது. பல வகையான முகமூடி அணிந்திருக்கும் உலகை கடந்திருக்கிறார்கள், ஆகையால் கடந்து வந்திருக்கும் குழந்தைகளுக்கு இரட்டை அன்பு நினைவுகள். உழைப்பு (முயற்சி) செய்திருக்கிறீர்கள் அல்லவா! ஆனால் தந்தையின் அன்பு உழைப்பை மறக்க வைத்து விட்டது. நல்லது.

சர்வ சிரேஷ்ட பூஜ்ய ஆத்மாக்களுக்கு, அனைவருக்கும் லைட், மைட் கொடுக்கக் கூடிய உயர்ந்ததிலும் உயர்ந்த குழந்தைகளுக்கு, மகிழ்ச்சியான உலகில் சதா ஆன்மீக மகிழ்ச்சியை கொண்டாடக் கூடியவர்களுக்கு, ஒவ்வொரு நாளும் உற்சவம் என்று புரிந்து கொண்டு உற்சாகத்தில் இருக்கக் கூடியவர்களுக்கு, எல்லையற்ற ஈஸ்வரிய பரிசு அடையக் கூடியவர்களுக்கு, இவ்வாறு கல்ப விருட்சத்தில் தானும் ஜொலித்து, பிறரையும் ஜொலிக்க வைக்கும் சிரேஷ்ட நட்சத்திரங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

அயல்நாட்டுக் குழந்தைகளிடம் தனிப்பட்ட சந்திப்பு:

அனைவரும் தன்னை செல்லமானவர் என்று நினைக்கிறீர்கள் தானே? எவ்வளவு அன்புடன் தந்தை எங்கிருந்தோ தேர்ந்தெடுத்து ஒரு பூங்கொத்தில் சேர்த்து விட்டார்! பூங்கொத்தில் வந்து

அனைவரும் ஆன்மீக ரோஜாவாகஆகிவிட்டீர்கள். ஆன்மீக ரோஜாஎன்றால் அழிவற்ற நறுமணம் கொடுக்கக் கூடியவர்கள். இவ்வாறு தன்னை அனுபவம் செய்கிறீர்களா? நான் தந்தைக்குப் பிரியமானவன் என்ற போதைஒவ்வொருவருக்கும் இருக்கிறது அல்லவா! தந்தைக்கு என் மீதிருக்கும் அன்பு போன்று வேறு யாருக்கும் கிடையாது என்று ஒவ்வொருவரும் கூறுவீர்கள். தந்தை போன்று அன்பு செலுத்துபவர்கள் வேறு யாரும் கிடையாது. அவ்வாறு குழந்தைகளும் கூறுவீர்கள், ஏனெனில் ஒவ்வொருவரின் விசேஷத்தின் ஆதாரத்தில் தந்தைக்கு அனைவரின் மீதும் விசேஷ அன்பு இருக்கிறது. வரிசைக்கிரமமாக இருந்தாலும் அனைவரும் விசேஷமாக, பிரியமானவர்களாக இருக்கிறீர்கள். குழந்தைகளின் மதிப்பை தந்தை மட்டுமே அறிவார் மற்றும் நீங்கள் அறிவீர்கள், வேறு யாரும் அறிந்து கொள்ள முடியாது. மற்றவர்கள் உங்களை சாதாரணமானவர்களாக நினைக்கலாம். ஆனால் கோடியில் சிலர், அந்த சிலரிலும் சிலராக நீங்கள் இருக்கிறீர்கள். உங்களைத் தான் தந்தை தன்னுடையவர்களாக ஆக்கிக் கொண்டார். தந்தையினுடையவர்களாக ஆனதும் அனைத்து பிராப்திகளும் கிடைத்து விட்டது. பொக்கிஷத்தின் சாவியை தந்தை உங்கள் அனைவருக்கும் கொடுத்து விட்டார். தன்னிடத்தில் வைத்துக் கொள்ளவில்லை. அனைவருக்கும் கொடுக்கும் அளவிற்கு சாவி இருக்கிறது. இந்த மாஸ்டர் சாவி அப்படிப்பட்டது அதாவது யார் எந்த பொக்கிஷத்திற்கு பயன்படுத்த விரும்புகிறீர்களோ பயன்படுத்துங்கள் மற்றும் பொக்கிஷத்தை பலனாக அடையுங்கள். கடினமாக உழைக்க வேண்டிய அவசியமில்லை. உண்மையில் லண்டன் இராஜ்ய ஸ்தானம் அல்லவா! பிரஜைகளாக ஆகக் கூடியவர்கள் கிடையாது. அனைவரும் சேவையில் முன்னேறக் கூடியவர்கள். எங்கு பிராப்தி இருக்கிறதோ அங்கு சேவையின்றி இருக்க முடியாது. சேவை குறைவு என்றால், பிராப்தியும் குறைவு. பிராப்தி சொரூபமாக இல்லாமல் சேவை செய்ய முடியாது. பாருங்கள், நீங்கள் தேசத்தை விட்டு அயல்நாட்டிற்கு சென்று விட்டாலும் தந்தை அயல்நாட்டிலும் தேடி கண்டுபிடித்து தன்னுடையவராக ஆக்கிக் கொண்டார். எவ்வளவு தான் ஓடினாலும் தந்தை கண்டுபிடித்து விட்டார் அல்லவா! நல்லது.

ஆஸ்திரேலியா குரூப்:

அனைவரும் மகாவீரர்கள் அல்லவா! மகாவீர் குரூப் என்றால் சதா காலத்திற்கும் மாயாவிற்கு விடை கொடுப்பவர்கள். இந்த விழாவைக் கொண்டாடி விட்டீர்களா? ஆஸ்திரேலியாவை சதா துணிச்சலானவர்களின் இடம் என்று பாப்தாதா கூறுகின்றார். ஆக ஆஸ்திரேலியாவில் வசிப்பவர்கள் சதா காலத்திற்கும் மாயாவிற்கு விடை கொடுக்கக் கூடியவர்கள். ஏனெனில், தந்தை கூடவே இருக்கின்றார். தந்தை துணையாக இருக்கும் போது மாயை வர முடியாது. சதா தந்தை துணையாக இருக்கிறார் எனில் விடை பெற்று சென்று விடும் அல்லவா! விடை

கொடுப்பவர்கள் சதா திருப்தி மணிகளாக இருப்பர். தானும் திருப்தியாக, சேவையிலும் திருப்தியாக, தொடர்பிலும் திருப்தியாக இருப்பர். அனைத்திலும் திருப்தியாக இருப்பர். இவ்வாறு திருப்தி மணிகளாக இருப்பவர்கள் சதா இதய சிம்மாசனதாரிகளாக இருப்பர். ஆக யார் சிம்மாசனதாரிகளாக இருப்பார்களோ அவர்கள் சதா குஷி மற்றும் போதையுடன் இருப்பர். பாப்தாதா திருப்தி மணிகள், மகாவீர், இதய சிம்மாசனதாரி குரூப்பை பார்த்துக் கொண்டிருக்கின்றார். அனைவரும் அனுபவி ஆத்மாக்களாக தென்பட்டுக் கொண்டிருக்கின்றனர். சேவாதாரிகளும் இருக்கின்றனர். எவ்வாறு சேவைக்கான விசேஷ பாகம் இலண்டனுக்கு இருக்கிறதோ, அவ்வாறு ஆஸ்திரேலியாவிற்கும் விசேஷ பாகம் இருக்கிறது. பாப்தாதா ஆஸ்திரேலியாவில் வசிப்பவர்களுக்கு சதா எவரெடி மற்றும் சேவையில் விருத்தியடையக் கூடியவர்கள் என்ற சான்றிதழைக் கொடுக்கின்றார். நல்லது.

## விடைபெறும் நேரத்தில்:

இப்போது நீங்கள் அனைவரும் விழித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் அனைவருக்காகவும் எங்கேயாவது கண் விழித்துக் கொண்டிருப்பார்கள். உங்களது பக்தர்கள் விழித்துக் கொண்டிருக்கின்றனர் எனில், நீங்கள் விழிப்பது என்ன பெரிய விசயம்! அனைத்தும் சங்கமத்திலிருந்து தான் ஆரம்பமாகின்றன. நீங்கள் ஞானத்தின் ஆதாரத்தில் செய்கிறீர்கள், அவர்கள் பக்தியின் ஆதாரத்தில் செய்கின்றனர். பக்தியின் அஸ்திவாரமும் சங்கமத்தில் தான் ஏற்படுகிறது. அது பாவனை, இது ஞானமாகும். அனைவரும் சேவைக்குச் சென்று கொண்டிருக்கிறீர்கள், வீட்டிற்கு செல்கிறீர்கள் - அல்ல. செல்கிறீர்கள் என்றால் சேவைக்கான ஆதாரத்தை எடுத்துக் கொண்டு மீண்டும் வர வேண்டும். வெறும் கையுடன் வரக் கூடாது. குறைந்தது பூங்கொத்து கொடுக்க வேண்டும். பூங்கொத்து கொடுங்கள் அல்லது பட்டன். ஒரு வருடத்தில் எத்தனை பேரை தயார் செய்தோம்? என்ற கேள்வியும் படிவத்தில் சேர்க்க வேண்டும். யார் காலியாக வருவார்களோ அவர்களுக்கு அடுத்த முறை சான்றிதழ் கொடுக்காதீர்கள். ஒரு ஆண்டில் ஒருவரையாவது உருவாக்கி கூடவே அழைத்து வாருங்கள். நல்லது.

## அவ்யக்த மகாவாக்கியம் –

விருத்தியின் மூலம் வாயுமண்டலத்தை சக்திசாலியாக ஆக்குங்கள். அனைத்தையும் விட தீவிர வேகத்தில் சேவை என்றால், விருத்தியின் (சக்தியான சிந்தனை உணர்வு) மூலம் வாயுமண்டலத்தை உருவாக்குவதாகும். விருத்தியானது மிக வேகமான ராக்கெட்டை விட

வேகமானது. விருத்தியின் மூலம் வாயுமண்டலத்தை மாற்ற முடியும். எங்கு விரும்பினாலும், எத்தனை ஆத்மாக்களுக்காக விரும்பினாலும், விருத்தியின் மூலம் இங்கு அமர்ந்து கொண்டே சென்றடைந்து விட முடியும். விருத்தியின் மூலம் திருஷ்டி மற்றும் சிருஷ்டியை மாற்றி விட முடியும். விருத்தியில் அனைவருக்காகவும் சுப பாவனை, சுப விருப்பம் இருந்தால் போதும். உலக நன்மை செய்வதற்காக உங்களது விருத்தி, திருஷ்டி மற்றும் ஸ்திதி சதா எல்லையற்று இருக்க வேண்டும். விருத்தியில் துளியளவும் எந்த ஆத்மாவிற்காகவும் எதிர்மறையான அல்லது வீண் பாவனை இருக்கக் கூடாது. எதிர்மறையான விசயங்களை மாற்றுவது தனிப்பட்ட விசயம். ஆனால் யார் சுயம் எதிர்மறையான விருத்தியுடன் இருக்கிறார்களோ அவர்களால் மற்றவர்களது எதிர்மறையை நேர்மறையாக மாற்ற முடியாது.

ஸ்தாபனையின் ஆரம்பத்தில் சாதனங்கள் குறைவாக இருந்தது, ஆனால் எல்லையற்ற வைராக்கிய விருத்திக்கான பட்டியில் இருந்தனர். 14 ஆண்டுகள் தபஸ்யா செய்தது, எல்லையற்ற வைராக்கிய விருத்திக்கான வாயுமண்டலாக இருந்தது. பாப்தாதா இப்போது அதிக சாதனங்களை கொடுத்திருக்கின்றார், சாதனங்களுக்கு எந்த குறையும் கிடையாது. ஆனால் அனைத்தும் இருந்தாலும் எல்லையற்ற வைராக்கியம் இருக்க வேண்டும். உங்களது வைராக்கிய விருத்திக்கான வாயுமண்டலமின்றி ஆத்மாக்கள் சுகம், அமைதி அடைய முடியாது, குழப்பத்திலிருந்து விடுபட முடியாது. ஆக அனைத்து அவசியமான சாதனங்களையும் பயன்படுத்துங்கள், ஆனால் எவ்வளவு முடியுமோ மனதில் வைராக்கிய விருத்தியுடன் பயன்படுத்துங்கள், சாதனங்களுக்கு வசமாகி பயன்படுத்தக் கூடாது. இப்போது சாதனைக்கான வாயுமண்டலத்தை நாலாபுறமும் உருவாக்குங்கள். நேரத்தின் நெருக்கத்தில் காரணத்தினால் இப்போது உண்மையான தபஸ்யா அல்லது சாதனை என்னவெனில், எல்லையற்ற வைராக்கியமாகும்.

நிகழ்காலத்தில் உலகில் ஒருபுறம் பிரஷ்டாச்சாரம், (தீச்செயல்) துன்புறுத்துதல் (அத்யாச்சாரம்) என்ற அக்னி, மற்றொரு புறம் குழந்தைகளாகிய உங்களது சக்திசாலியான யோகாஅதாவது ஈடுபாடு என்ற அக்னி எரிமலை போன்று இருப்பது அவசியமாகும். இந்த எரிமலை ரூபமானது பிரஷ்டாச்சாரம், அத்யாச்சாரத்தின் நெருப்பை சமாப்தி செய்து அனைத்து ஆத்மாக்களுக்கும் உதவி செய்யும். உங்களது ஈடுபாடு எரிமலை ரூபத்தில் இருக்க வேண்டும். அதாவது சக்திசாலி யோகாவாஇருக்க வேண்டும். விருத்தியில் அனைவருக்கும் நன்மைக்கான பாவனை இருக்க வேண்டும், ஆக இந்த ஈடுபாடு என்ற நெருப்பானது அந்த நெருப்பை சமாப்தி செய்து விடும், மேலும் ஆத்மாக்களுக்கு பரமாத்மாவின் செய்தியின், குளிர்ந்த சொரூபத்தின் அனுபவம்

செய்விக்கும். இதற்காக இப்போது திருஷ்டி, விருத்தியில் தூய்மை என்பதில் அதிக கவனம் செலுத்துங்கள். ஆனால் மூல அஸ்திவாரம், தனது எண்ணங்களை தூய்மையானதாக வைத்திருப்பது! ஞான சொரூபமானதாக ஆக்குங்கள், சக்தி சொரூபமாக ஆக்குங்கள். ஆக உங்களது வைபிரேசன் (அதிர்வலைகள்) மூலம், விருத்தி மூலம், சுப பாவனையின் மூலம் மற்றவர்களது மாயை எளிதாகவே ஓடி விடும். ஒருவேளை ஏன்? எதற்கு? என்பதில் சென்றீர்கள் எனில், உங்களது மாயையும் விலகாது, மற்றவர்களது மாயையும் விலகி விடாது.

இப்போது குழந்தைகளாகிய நீங்கள் இரண்டு வகையான காரியங்கள் செய்ய வேண்டும் – ஒன்று ஆத்மாக்களை தகுதியானவர்களாக மற்றும் யோகிகளாக ஆக்க வேண்டும், மற்றொன்று நிலத்தையும் தயார் செய்ய வேண்டும். இதற்கு விசேஷமாக வார்த்தைகளின் கூடவே விருத்தியை மேலும் தீவிர வேகத்தில் கொண்டு செல்ல வேண்டும். ஏனெனில், விருத்தியின் மூலம் வாயுமண்டலம் உருவாகும், மேலும் வாயுமண்டலத்தின் பாதிப்பு இயற்கையின் மீது ஏற்படும். அப்போது தான் தயார் ஆவார்கள். வார்த்தை மற்றும் விருத்தி இரண்டும் கூடவே சேவையில் ஈடுபட்டிருக்க வேண்டும். உங்களது வார்த்தைகள், செயல்கள் மற்றும் விருத்தியின் மூலம் இலேசான நிலையின் அனுபவம் ஏற்பட வேண்டும். நான் இலேசாகத் தான் இருக்கிறேன், ஆனால் மற்றவர்கள் என்னை புரிந்து கொள்வது கிடையாது, அறிந்து கொள்வது கிடையாது என்று இருந்து விடக் கூடாது, ஒருவேளை புரிந்து கொள்ளவில்லையெனில் நீங்கள் உங்களது மனோபலத்தின் மூலம் அவர் களுக்கும் புரிய வையுங்கள். 95 சதவிகிதம் அனைவருக்கும் பிடித்தமானவர்களாக ஆகுங்கள். உங்களது செயல்கள், விருத்தி அவர்களை மாற்ற வேண்டும். இதற்கு சகித்துக் கொள்ளும் சக்தி தாரணை செய்வது மிக அவசியமாகும். உங்களது விருத்தியில் சிரேஷ்ட பாவனை, சிரேஷ்ட விருப்பம் இருந்தால் ஒரு விநாடியின் சங்கல்பத்தின் மூலம், திருஷ்டியின் மூலம், தனது மன மகிழ்ச்சியின் மூலம் விநாடியில் மற்றவர்களுக்கு அதிகம் கொடுத்து விட முடியும். யார் வந்தாலும் அவர்களுக்கு பரிசு கொடுங்கள், வெறும் கையுடன் சென்றுவிடக் கூடாது.

ஒவ்வொரு மனிதனையும், விசயத்தையும் நேர்மறையான விருத்தியுடன் பாருங்கள், கேளுங்கள் அல்லது சிந்தியுங்கள், அப்போது ஒருபோதும் ஆவேசம் அல்லது கோபம் வராது. நீங்கள் மாஸ்டர் அன்புக் கடலாக இருக்கிறீர்கள் எனில், உங்களது கண், விருத்தி, திருஷ்டியில் சிறிதும் வேறு எந்த பாவனையும் வரவே முடியாது. ஆகையால் என்ன நடந்தாலும், முழு உலகமும் உங்கள் மீது கோபப்பட்டாலும், மாஸ்டர் அன்புக் கடலாகி உலகத்தை அலட்சியப்படுத்தி விடுங்கள். கவலையற்ற சக்கரவர்த்தி ஆகுங்கள், அப்போது தான் உங்களது

சிரேஷ்ட விருத்தியின் மூலம் சக்திசாலியான வாயுமண்டலம் உருவாகும். இன்றைய நாளில் விஞ்ஞான சாதனத்தின் மூலம் வீண் பொருட்களையும் மிக அழகான ரூபமாக மாற்றி விடுகின்றனர், ஆக உங்களது சிரேஷ்ட விருத்தி எதிர்மறை அதாவது வீணானவைகளை நேர்மறையானதாக மாற்றி விட வேண்டும். உங்களது மனம் மற்றும் புத்தி எதிர்மறையானதைத் தொடக்கூடாது, ஒரு விநாடியில் மாறி விட வேண்டும் என்ற அளவிற்கு ஆக்கிக் கொள்ளுங்கள்.

வரதானம்:

தினச்சரியத்தின் (தினசரி செயல்முறை) செட்டிங் மற்றும் தந்தையின் துணையின் மூலம் ஒவ்வொரு காரியத்தையும் மிகச் சரியாக செய்யக் கூடிய விஸ்வ கல்யாணகாரி ஆகுக.

உலகில் பெரிய மனிதர்களாக இருப்பவர்களுக்கு தினச்சரி நடைமுறை செட்டிங் இருக்கும். எந்த ஒரு காரியமும் மிகச் சரியாக செய்ய வேண்டுமென்றால், தினச்சரி செயல்களின் செட்டிங் இருக்க வேண்டும். செட்டிங் மூலம் நேரம், சக்தி அனைத்தும் பாதுகாக்கப்டுகிறது. ஒரு மனிதன் 10 காரியங்கள் கூட செய்ய முடியும். ஆக விஸ்வ கல்யாணகாரி பொறுப்பான ஆத்மாக்கள், ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியடைவதற்காக தினச்சரியத்தை செட் செய்யுங்கள், மேலும் சதா தந்தையுடன் இணைந்து இருங்கள். ஆயிரம் புஜங்கள் உடைய தந்தை உங்களுடன் இருக்கும் பொழுது ஒரு காரியத்திற்குப் பதிலாக ஆயிரம் காரியங்களை மிகச் சரியாக செய்ய முடியும்.

சுலோகன்:

அனைத்து ஆத்மாக்களுக்காகவும் தூய எண்ணங்கள் செய்வது தான் வரதானி மூர்த்தி ஆவதாகும்.

ஓம்சாந்தி

27.12.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## டபுள் லைட் ஸ்திதியின் மூலம் கடின முயற்சிக்கு முடிவு

இன்று தூரதேசத்தில் வசிக்கும் பாப்தாதா தூரதேச குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்துள்ளார். நீங்கள் அனைவரும் கூட தூரதேசத்தில் இருந்து வந்திருக்கிறீர்கள் என்றால் பாப்தாதாவும் தூரதேசத்திலிருந்து வந்துள்ளார். மிக தொலைவிலும் தொலைவானதேசமயம் மிக அருகிலும் அருகில் பாப்தாதாவின் தேசம் உள்ளது. அவ்வளவு தூரம், அதாவது இந்த சாகார உலகத்தின் எல்லையிலிருந்து வெகுதூரம். உலகமே வேறு. நீங்கள் அனைவரும் சாகார உலகில் இருந்து வந்திருக்கிறீர்கள். பாப்தாதா, சாகார உலகத்திற்கும் அப்பால் பரலோகத்திலிருந்து, சூட்சும உலகத்தின் வழியாக பிரம்மா பாபாவைக் கூடவே அழைத்து வந்துள்ளார். மேலும் சமீபமாகவும் உள்ளது -- ஒரு விநாடியில் சென்று சேர முடியும் இல்லையா? நீங்கள் வருவதற்கு எத்தனை மணி நேரம் பிடிக்கிறது மற்றும் எவ்வளவு முயற்சி செய்து சம்பாதித்த பணத்தைக் கொடுக்க வேண்டி உள்ளது! (பயணச் செலவுக்காக). அதைச் சேமிப்பதில் எவ்வளவு காலம் பிடித்தது! ஆனால் பாபாவின் வதனத்தில் இருந்து வருவதற்கும் போவதற்கும் செலவு கிடையாது. சிநேகம் என்ற சொத்து -- இதன் மூலம் ஒரு விநாடியில் சென்று சேர்ந்து விடுகிறீர்கள். எந்த ஒரு முயற்சியும் தேவைப்படுவதில்லை இல்லையா? பாப்தாதாவுக்குத் தெரியும், இராஜ்ய பாக்கியத்தை இழந்ததற்குப் பிறகு குழந்தைகள் அநேக ஜென்மங்களாக வித-விதமான, உடலுக்கான, மனதுக்கான, செல்வத்திற்கான முயற்சியைத்தான் செய்து கொண்டே இருக்கின்றனர். எங்கே உலகத்தின் மாலிக், கிரீட, சிம்மாசனதாரி, சர்வ பிராப்திகளின் கஜானாவுக்கு மாலிக்! இயற்கையும் கூட வேலையாள்! அத்தகைய இராஜ்ய அதிகாரி, இராஜ்ய பாக்கியத்தை அமைக்கக் கூடியவர்கள், இப்போது அடிமையாக ஆனதால் என்ன செய்து கொண்டுள்ளனர்? வேலை செய்து கொண்டிருக்கின்றனர்! ஆக, கடின முயற்சி ஆகிறது இல்லையா? எங்கே ராஜாக்கள் மற்றும் எங்கே சம்பாதித்துச் சாப்பிடும் அரசாங்க சேவகர் ஆகி விட்டவர்கள்! எத்தனைப் பிறவிகள் சரீரத்தை நடத்துவதற்காக, சரீர நிர்வாகத்திற்கான கர்மம், மனதை பாபா மீது ஈடுபடுத்துவதற்காக வித-விதமான சாதனைகள், அநேக விதமான பக்தி மற்றும் பணத்தைச் சேமிப்பதற்காக எத்தனை விதமான, பல்வேறு பிறவிகளில் பலவிதமான காரியங்களைச் செய்தனர்! அத்தகைய கிரீட-சிம்மாசனதாரி, சுகம்-அமைதியோடு வளரக்கூடியவர்கள் என்னென்ன செய்ய வேண்டியதாயிற்று! ஆக, குழந்தைகளின் கடின

உழைப்பைப் பார்த்து பாப்தாதா, முயற்சியிலிருந்து விடுவித்து சகஜயோகி ஆக்கி விட்டார். நொடியில் சுயராஜ்ய அதிகாரி ஆக்கிவிட்டார் இல்லையா? முயற்சியிலிருந்து விடுவித்து விட்டார் இல்லையா? இவர்கள் அனைவரும் யோசிக்கின்றனர், வேலையில் இருந்தோ விடுவிக்கவில்லை என்று. ஆனால் இப்போது எது செய்தாலும் தனக்காகச் செய்யவில்லை, ஈஸ்வரிய சேவைக்காகச் செய்கிறீர்கள். இப்போது என்னுடைய வேலை என்று புரிந்து கொண்டு செய்யவில்லை. டிரஸ்டி ஆகி செய்கிறீர்கள். அதனால் முயற்சி அன்பாக மாறி விட்டது. சந்திப்பைக் கொண்டாடும் அன்பில் கடின முயற்சி இல்லை.

இரண்டாவது விஷயம், செய்விப்பவர் பாபா. நிமித்தமாக இருந்து செய்பவர்கள் நீங்கள். சர்வசக்திவான் பாபாவின் சக்தியினால் அதாவது ஸ்மிருதியின் தொடர்பினால் இப்போது நிமித்த மாத்திரம் காரியம் செய்பவர்கள் நீங்கள். எப்படி ஒளியின் தொடர்பினால் பெரிய-பெரிய மெஷின்கள் இயங்குகின்றன. ஆக, ஆதாரமாக இருப்பது ஒளி. நீங்கள் அனைவரும் ஒவ்வொரு கர்மம் செய்தாலும் தொடர்பின் ஆதாரத்தில் தானும் டபுள் லைட் ஆகி சென்று கொண்டே இருக்கிறீர்கள் இல்லையா? எங்கே டபுள் லைட் ஸ்திதி உள்ளதோ, அங்கே முயற்சி மற்றும் கடினம் என்ற சொல் முடிந்து போகும். வேலையில் இருந்து விடுவிக்கவில்லை, ஆனால் முயற்சியில் இருந்து விடுவித்து விட்டார் இல்லையா? பாவனை மற்றும் பாவம் (உணர்வின் வெளிப்பாடு) மாறி விட்டது இல்லையா? டிரஸ்டி என்ற உணர்வு மற்றும் ஈஸ்வரிய சேவையின் பாவனையோ மாறி விட்டது இல்லையா? இப்போது என்னுடையது என்பது இருக்கிறதா? மூன்றடி நிலம் கிடைத்திருக்கிறது என்றால், அதை பாபாவின் வீடு என்று சொல்கிறீர்கள் இல்லையா? எனது வீடு என்றோ சொல்வதில்லை இல்லையா? தன்னுடைய வீட்டில் இருக்கவில்லை. தந்தையின் வீட்டில் இருக்கிறீர்கள். பாபாவின் கட்டளைப்படி காரியம் செய்கிறீர்கள். தனது விருப்பப்படி, தனது தேவைகளின் காரணத்தால் செய்வதில்லை. பாபாவின் கட்டளை எதுவோ, அதன் மீது நிச்சயம் மற்றும் விலகி இருந்து செய்கிறீர்கள். என்ன கிடைத்ததோ, அது பாபாவுடையது அல்லது சேவைக்காக. சரீரத்திற்காகவும் ஈடுபடுத்துகிறீர்கள் என்றாலும் கூட சரீரமும் கூடத் தன்னுடையதல்ல. அதையும் பாபாவுக்குக் கொடுத்தாயிற்று இல்லையா? உடல்-மனம்-செல்வம் அனைத்தையும் பாபாவுக்குக் கொடுத்து விட்டீர்கள் இல்லையா? அல்லது கொஞ்சத்தை ஒதுக்கி வைத்திருக்கிறீர்களா? அப்படி இல்லை தானே? ஆக, பாப்தாதா குழந்தைகளின் பல பிறவிகளின் முயற்சியைப் பார்த்து இப்போதிருந்து அநேக ஜென்மங்களுக்கு முயற்சியிலிருந்து விடுவித்து விட்டார். இது தான் தந்தை மற்றும் குழந்தைகளின் அன்புக்கு அடையாளம். எப்படி நீங்கள் அனைவரும் விசேஷமாகச் சந்திக்க வந்திருக்கிறீர்களோ, பாப்தாதாவும் விசேஷமாக சந்திப்பதற்கு வந்துள்ளார். பிரம்மா பாபாவையும் வதனத்திலிருந்து அழைத்து வந்துள்ளார். பிரம்மா பாபாவுக்கு அதிக அன்பு

உள்ளது. பாபாவுக்கு இருக்கவே செய்கிறது, ஆனால் பிரம்மா பாபாவுக்கு அதிக அன்பு உள்ளது. டபுள் வெளிநாட்டினர் மீது விசேஷ அன்பு ஏன்? பிரம்மா சொன்னார் -- வெளிநாட்டுக் குழந்தைகளை நீண்ட காலமாக அழைத்துள்ளார். எத்தனை வருடங்களாக குழந்தைகளை அழைத்துள்ளார்! அந்த அழைப்பினால் தான் பாபாவிடம் வந்து சேர்ந்துள்ளனர். அதிக காலம் யார் அழைக்கப்பட்டார்களோ, மேலும் அதிக காலத்தின் அழைப்புக்குப் பிறகு அந்தக் குழந்தைகள் வந்து சேர்ந்துள்ளனர் என்றால் நிச்சயமாக விசேஷ அன்பு இருக்கும் இல்லையா? ஆக, பிரம்மா பாபா மிகுந்த அன்போடு சாகார ரூபத்தில் வாரிசு ஆவதற்காக, உங்களனைவரையும் அழைத்துள்ளார். புரிந்ததா? கேட்டுக் கொண்டே இருக்கிறீர்கள் இல்லையா? எத்தனை வருடங்களுக்கு முன் உங்களுக்கு ஜென்மம் கொடுத்தார்? கர்ப்பத்திலோ வந்து விட்டிருந்தீர்கள். சாகார ரூபத்தில் பின்னால் பிறவி எடுத்தீர்கள். ஆகவே பிரம்மா பாபாவுக்கு விசேஷ அன்பு உள்ளது மற்றும் வருங்காலத்தின் அதிர்ஷ்டத்தை அறிந்து கொண்டும் சிநேகம் உள்ளது.

ஜானகி தாதியைப் பார்த்து பாபா சொன்னார் -- இப்போது இரட்டை வெளிநாட்டினர் எப்படி பாபாவைப் பார்த்து குஷியடைகின்றனர். அதே போல் உங்களைப் பார்த்தும் குஷியடைகின்றனர். ஏனென்றால் பாபாவிடம் பெற்ற பாலனையின் பிரத்யட்ச ரூபத்தை சாகாரத்தில் நிமித்த குழந்தைகளாகிய உங்கள் மூலமாகக் கற்றுக் கொள்கின்றனர். ஆகவே விசேஷமாக உங்கள் மீதும் அனைவருக்கும் அன்பு உள்ளது. தாதி அல்லது தீதி யாரெல்லாம் நிமித்த ஆத்மாக்கள் உள்ளனரோ, அவர்களின் விசேஷ தன்மையாக இது தான் காணப்படுகிறது -- அதாவது அவர்களில் பாபாவைப் பார்ப்பார்கள். பாபாவின் இந்தப் பாலனையைத் தான் விசேஷமாக அனுபவம் செய்கின்றனர். எப்போதெல்லாம் தீதி தாதியுடன் சந்திக்கிறீர்களோ, அப்போது என்ன பார்க்கிறீர்கள்? பாபா சாகார ஆதாரத்தில் சந்தித்துக் கொண்டிருக்கிறார். அது போல் அனுபவம் ஆகிறது இல்லையா? இது தான் விசேஷ ஆத்மாக்களின் பாலனை, இதனால் நீங்கள் மறைந்து விடுவீர்கள், (உங்கள் மூலமாக) பாபா தென் படுவார். ஏனென்றால் அவர்களின் ஒவ்வொரு சங்கல்பம், ஒவ்வொரு பேச்சிலும் பாபா-பாபா என்பது மட்டுமே இருக்கும். ஆகவே மற்றவர்களுக்கும் கூட அதே பாபா என்ற வார்த்தை தான் கேட்கிறது அல்லது காணப்படுகிறது. இன்று தீதியின் நினைவும் வந்து கொண்டிருக்கிறது. குப்த கங்கை ஆகி விட்டார் இல்லையா? அப்படியே மூன்று நதிகளில் ஒரு நதியை குப்தமாகவே காட்டுகின்றனர். இப்போது தீதியோ தாதியினுள் நிறைந்துள்ளார் இல்லையா? சூட்சும ரூபத்தில் அவரும் தம்மை வெளிப்படுத்திக் கொண்டுள்ளார், அதாவது கர்மபந்தன ஆத்மா இல்லை. சேவையின் சம்மந்தத்தில் தனது பாகத்தை நடிப்பதற்காகச் சென்றுள்ளார். கர்மபந்தனத்தில் உள்ள ஆத்மாக்கள் எங்கே உள்ளனரோ, அங்கே தான் காரியமாற்ற முடியும் மற்றும் கர்மாதீத் ஆத்மாக்கள் ஒரே

சமயத்தில் நாலாபுறமும் தங்களின் சேவையின் பாகத்தை நடிக்க முடியும். ஏனென்றால், கர்மாதீத், அதனால் தீதியும் உங்களனைவரோடு கூடவே இருக்கிறார். கர்மாதீத் ஆத்மாவுக்கு டபுள் பார்ட் நடிப்பதில் எந்த ஒரு கஷ்டமும் இல்லை. வேகம் மிகத் தீவிரமாக இருக்கும். ஒரு விநாடியில் விரும்புகிற இடத்திற்குச் சென்று சேர முடியும். விசேஷ ஆத்மாக்கள் தங்களின் விசேஷ பார்ட்டை சதா நடிக்கின்றனர். அதனால் தான் காற்றைப் போல் சென்று விட்டார் இல்லையா? அநாதி அவிநாசி திட்டம் உருவாக்கப்பட்டே இருந்தது போலத்தான். இதுவும் விசித்திர பார்ட்டாக இருந்தது. ஆரம்பத்திலிருந்தே தீதிக்கு விசித்திர டிரான்ஸினுடைய பார்ட் இருந்தது. கடைசியிலும் கூட விசித்திர ரூபத்தின் டிரான்ஸில் தான் டிரான்ஸ்ஃபர் ஆகி விட்டார். நல்லது.

இந்த தேசத்தின் மற்றும் வெளிநாட்டின் அனைத்து சாதகப் பறவைகளாகிய குழந்தைகளுக்கு கல்பத்தின் தேடிக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு, சதா பாபாவின் சிநேகத்தில் மூழ்கியிருக்கும் லவ்லீன் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

தனிப்பட்ட முறையில் குழுக்களுடன் உரையாடல் -- எங்கெங்கிருந்தோ பாப்தாதா தேர்ந்தெடுத்துத் தம்முடைய அல்லாவின் தோட்டத்தில் நட்டு வைத்துள்ளார். இந்தக் குஷி இருக்கிறது இல்லையா? இப்போது அனைவரும் ஆன்மிக ரோஜாவாகி விட்டீர்கள். சதா மற்றவர்களுக்கும் ஆன்மிக நறுமணத்தை அளிக்கக் கூடிய ஆன்மிக ரோஜாக்கள் நீங்கள். யாராவது உங்கள் அனைவரின் அருகில் வருகின்றனர், தொடர்பில் வருகின்றனர் என்றால், உங்களனைவரிடம் என்ன அனுபவம் செய்கின்றனர்? இவர்கள் ஆன்மிகமானவர்கள், அலௌகிகமானவர்கள் எனப் புரிந்து கொள்கின்றனர். லௌகிகத் தன்மை முடிந்து போகிறது. யார் உங்கள் பக்கமாகப் பார்த்தாலும் அவர்களுக்கு ஃபரிஸ்தா ரூபம் தான் காணப்பட வேண்டும். ஃபரிஸ்தாக்களாக ஆகி விட்டீர்கள் இல்லையா? சதா டபுல் லைட் ஸ்திதியில் நிலைத்திருக்கும் ஃபரிஸ்தாக்களாகக் காணப்படுவீர்கள். ஃபரிஸ்தாக்கள் எப்போதுமே உயரத்தில் இருப்பார்கள். ஃபரிஸ்தாக்களைச் சித்திர ரூபத்திலும் காட்டுகின்றனர் என்றால், இறக்கைகளைக் காட்டுவார்கள். எதற்காக? பறக்கும் பறவைகள் இல்லையா? ஆக, பறவைகள் எப்போதுமே உயரத்தில் பறந்து விடுகின்றன. ஆக, தந்தை கிடைத்து விட்டார், உயர்ந்த இருப்பிடம் கிடைத்தது, உயர்ந்த ஸ்திதி கிடைத்தது. வேறென்ன வேண்டும்?

(வெளிநாட்டுக் குழந்தைகளின் கடிதங்களுக்கு பதிலாக) அனைவரின் மனதின் அன்பு நிறைந்த அன்பு-நினைவுக் கடிதங்கள் மற்றும் நினைவு கிடைத்தது. குழந்தைகள் இனிமையிலும்

இனிமையான ஆன்மிக உரையாடலும் செய்கின்றனர் என்றால் அவ்வப்போது இனிமையிலும் இனிமையான புகார்களும் தெரிவிக்கின்றனர். எப்போது அழைப்பீர்கள், நாங்கள் வந்து சேர்வதற்கு ஏன் எங்களுக்கு உதவி செய்வதில்லை? இது போன்ற புகார்களும் கூட பாபாவுக்குப் பிடித்துள்ளன, ஏனென்றால் பாபாவுக்குச் சொல்லாமல் வேறு யாருக்குச் சொல்வார்கள்? ஆகவே பாப்தாதாவுக்குக் குழந்தைகளின் செல்ல அன்பு பிடித்துள்ளது. அதனால் பாபாவுக்கு அன்பானவர்கள், மற்றும் சதா பாபாவுக்கு அன்பானவர்களாக இருக்கும் காரணத்தால் பதிலுக்கு பாபாவிடமிருந்து சிநேகம் மற்றும் சகயோகம் கிடைக்கிறது. நல்லது.

விசேஷ மகாவாக்கியம் - ஆன்மிகத்தின் சக்தி மூலம் சம்பன்னமாகுங்கள்

சமயத்தின் அனுசாரம் இப்போது உலக ஆத்மாக்கள், உங்களை ஆன்மிகத்தின் சேம்பிளாகப் (உதாரணம்) பார்க்க விரும்புகின்றனர். ஆகவே ஆன்மிகத்தின் சக்தியினால் நிரம்பியவர் ஆகுங்கள். இதற்காக ஏகவிரதா பவ என்ற ஒரு சொல்லை கவனத்தில் வையுங்கள். மேலும் தனக்குத் தானே அடிக்கோடிட்டுக் கொண்டு சம்பூர்ண பவித்திரமாகுங்கள். எப்படி வெளிநாட்டினரின் சேவைகளில் ஆன்மிக திருஷ்டியினுடைய மற்றும் ஆன்மிக சக்தியினுடைய பிரபாவம் படுகின்றது, பாஷை புரியாமல் இருந்தாலும் கூட ஃபரிஸ்தா தன்மையின், தோற்றம் மற்றும் கண்களின் மூலம் ஆன்மிக திருஷ்டியின் முத்திரை பதிகின்றது. ஆகவே இப்போது ஆன்மிகத்தின் ஆழத்தில் சென்று தனது ஃபரிஸ்தா ரூபத்தை வெளிப்படுத்துங்கள். பேச்சு என்ன வேலையைச் செய்கின்றதோ, அதைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாக ஆன்மிகத்தின் சக்தி காரியமாற்ற முடியும். எப்படி பேச்சில் வருவதற்கான அப்பியாசம் ஆகி விட்டதோ, அது போல் ஆன்மிகத்தின் அப்பியாசத்தை அதிகப் படுத்துங்கள். அப்போது பேச்சில் வருவதற்கான சிந்தனை வராது.

யார் சம்பூர்ண சமர்ப்பணம் ஆகி விடுகின்றனரோ, அவர்களின் விருத்தி-திருஷ்டி சுத்தமாகி விடுகின்றது. அதில் ஆன்மிகத்தின் சக்தி வந்து விடுகின்றது. அவர்கள் சரீரத்தைப் பார்ப்பதில்லை. முதலில் திருஷ்டி பார்க்கிறது, அப்போது விருத்தி செல்கிறது. ஆன்மிக திருஷ்டி என்றால் தன்னையும் மற்றவர்களையும் கூட ஆத்மாவாகப் பார்ப்பது. சரீரத்தின் பக்கம் பார்த்தாலும் பார்க்காதிருங்கள். இப்போது அந்த மாதிரிப் பயிற்சி செய்ய வேண்டும். சமயத்தின் பிரமாணம் இப்போது ஒவ்வொருவரும் புதிய அழகைப் பார்க்க விரும்புகின்றனர். அதனால் ஒவ்வொரு கர்மத்திலும், ஒவ்வொரு சங்கல்பத்திலும், பேச்சிலும் ஆன்மிகத்தின் சக்தியை தாரணை செய்யுங்கள். ஆனால் எப்போது நீங்கள் தங்களையும் மற்றவர்களையும்,

,

யாருடைய சேவைக்கு நிமித்மாக இருக்கிறீர்களோ அவர்களையும் கூட பாப்தாதாவினால் நம்மிடம் ஒப்படைக்கப் பட்டவர்கள் என உணர்ந்து நடக்கிறீர்களோ, அப்போது தான் ஆன்மிகம் சதா நிலையாக இருக்கும். மனதில் என்ன சங்கல்பம் செய்கிறீர்களோ, அதையும் அந்த மாதிரிப் புரிந்து கொண்டு செய்யுங்கள், அதாவது இந்த மனமும் கூட ஓர் அடகுப் பொருள். இந்த அடகுப் பொருளைக் கையாடல் செய்யக் கூடாது. ஆக, தனது மனம் மற்றும் உடலை மற்றும் வேறு என்னவெல்லாம் நிமித்த ரூபத்தில் கிடைத்துள்ளனவோ, மாணவர்களாயினும் சரி, சென்டராயினும் சரி, அல்லது ஸ்தூலமான எந்த ஒரு பொருளாயினும் சரி, அவை அனைத்தும் அடகுப் பொருள்கள் மட்டுமே. அடகுப் பொருள் என உணர்வதால் அதன் மேல் பற்றில்லாதவராக இருப்பீர்கள். பற்றற்றவராக இருக்கும் போது தான் ஆன்மிகம் வரும். உங்களுடைய இந்த திவ்ய நேத்திரம் (பார்வை) எவ்வளவுக்கெவ்வளவு தெளிவாக, அதாவது ஆன்மிகத்தால் நிறைந்துள்ளதோ, அவ்வளவு இந்தக் கண்கள் மூலம் பாப்தாதா மற்றும் முழுப் படைப்பின் ஸ்தூல, சூட்சும, மூல, மூன்று உலகங்களின் சித்திரம் அந்த மாதிரி தெளிவாகக் காணப்படும், எப்படி புரெஜெக்டர் மூலமாகத் தெளிவாகப் பார்க்கிறீர்களோ, அது போலஇப்போது ஆன்மிகத்தால் நிரம்பியவராக ஆவதற்கான சமயமாகும். ஆன்மிகம் இல்லை என்றால் வித-விதமான மாயாவின் வண்ணங்களில் வந்து விடுவீர்கள். இப்போது பரீட்சைகளின் பேப்பரைக் கொடுப்பதற்குத் தயாராகுங்கள். அதாவது ஆன்மிகத்தின் சக்தியினால் நிரம்பியவராக ஆகுங்கள். அப்போது ஒவ்வொரு விதமான பேப்பரிலும் பாஸாக முடியும். இந்த சரீரம் ஈஸ்வரிய சேவைக்காக அடகு ரூபத்தில் கிடைத்துள்ளது. யாருடைய அடகுப் பொருளோ அவரது நினைவு அடகுப் பொருளைப் பார்த்ததும் வரும். ஆக, ஆன்மிகத் தந்தையினுடையது இந்த அடகுப் பொருள். அடகுப் பொருள் எனப் புரிந்து கொள்வதால் ஆன்மிகம் இருக்கும் மற்றும் ஆன்மிகத்தினால் சதா புத்தியில் அமைதி இருக்கும். களைப்பு இருக்காது. அடகுப் பொருளைக் கையாடல் செய்தால் ஆன்மிகத்திற்குப் பதிலாக சிக்கல் வந்து விடுவீர்கள். அமைதிக்குப் பதிலாக மனக்கலக்கத்தில் வந்து விடுவீர்கள். சதா மகிழ்ச்சியாக இருப்பது என்பது ஞானத்தின் குணமாகும். யார் சுயம் மகிழ்ச்சியாக உள்ளனரோ, அவர்கள் எப்படிப்பட்ட மனம் உள்ளவர்களையும் மகிழ்ச்சிப் படுத்துவார்கள். ஆனால் இதில் ஆன்மிகம் என்ற சொல்லை மட்டும் சேர்த்து விடுங்கள். மகிழ்ந்திருக்கும் சம்ஸ்காரமும் கூட ஒரு வரதானமாகும். அது சமயத்தில் மிகுந்த உதவி செய்யும். அனைத்து பலவீனங்களிலிருந்தும் விடுபடுவதற்கான யுக்தி -- சதா சிநேகி ஆகுங்கள். யாருடைய சிநேகியாக இருக்கிறீர்களோ, அந்த சிநேகியின் துணையினால் ஆன்மிகத்தின் வண்ணம் சுலபமாகப் படிந்து விடும்.

எப்படி வாயுமண்டலத்தில் ஏதேனும் பொருள் பரவி விடுகிறதென்றால் முழு வாயுமண்டலத்திலும் கொஞ்ச தூரம் வரை அதன் பிரபாவம் ஏற்பட்டு விடும். இதே ரீதியில்

இத்தனை சகஜயோகிகள் அல்லது சிரேஷ்ட ஆத்மாக்கள் அனைவரும் வாயுமண்டலத்தை அந்த மாதிரி ஆன்மிகமாக மாற்றி விடுங்கள், அதனால் அக்கம்பக்கமுள்ள வாயுமண்டலம் ஆன்மிகத்தின் காரணத்தால் ஆத்மாக்களைத் தன் பக்கம் கவர்ந்திழுக்கும். வாயுமண்டலத்திற்கான அஸ்திவாரம் விருத்தி ஆகும். ஆக, விருத்திகளை எது வரை ஆன்மிகத்தின் சக்தியினால் சம்பன்ன சக்திசாலி ஆக்கவில்லையோ, அது வரை சேவையில் நீங்கள் விரும்பும் விருத்தி ஏற்பட முடியாது. எப்படி எந்த ஒரு ஆத்மாவையும் பிடிக்க வேண்டுமானால், அவர் வெளியில் போகமுடியாதவாறு முற்றுகை இடுகின்றனர். அது போல் விருத்தி மூலம் ஆன்மிகத்தின் முற்றுகை இடுவதால் எந்த ஓர் ஆத்மாவும் ஆன்மிகக் கவர்ச்சியிலிருந்து வெளியில் செல்ல முடியாது. இப்போது அத்தகைய சேவை செய்யுங்கள். யாராவது எப்படிப்பட்ட அத்தாரிட்டி உள்ளவர்கள் வந்தாலும், உங்கள் குணங்களின் பர்சனாலிட்டி, சர்வ சக்திகளின் பர்சனாலிட்டியின் முன் தலைவணங்கி விடுவார்கள். தங்களின் பிரபாவத்தை அவர்களால் ஏற்படுத்த முடியாது. ஆன்மிகத்தின் சக்தியானது அவர்களுக்குள் இருக்கும் விருத்திகளை மாற்றி விடும். எப்படி மலர்களின் மணம் உள்ளடங்கி இருக்கிறது, தனியாக ஆவதில்லை. அது போல் உங்களுக்குள் ஆன்மிகத்தின் நறுமணம் உள்ளுக்குள் நிறைந்திருக்க வேண்டும். மணம் அப்படிப் பட்டது, அது தூரத்தில் இருப்பவர்களையும் கவர்ந்திழுக்கும். தூரத்திலிருந்தே யோசிப்பார்கள் -- இந்த நறுமணம் எங்கிருந்து வருகிறது? ஆக, உங்களுடைய ஆன்மிகம் உலகத்தைக் கவர்ந்திழுக்கும். ஆகவே ஞானத்துடன் கூடிய இரக்கத்தோடு கூடவே ஆன்மிகத்தின் நஷாவையும் தாரணை செய்யுங்கள். இப்போதைய சமயத்தின் பிரமாணம் ஆன்மிகத்தின் சக்தி மிகவும் அவசியமாக உள்ளது. ஆன்மிகம் இல்லாத காரணத்தால் தான் இந்தச் சண்டை-சச்சரவுகள் எல்லாம் நடைபெறுகின்றன. ஆகவே ஆன்மிக ரோஜாவாகி, ஆன்மிகத்தின் நறுமணத்தைப் பரவச் செய்யங்கள். இது தான் பிராமண வாழ்க்கையின் தொழிலாகும். நல்லது.

வரதானம் :

தனது சக்திசாலி ஸ்திதி மூலம் தானம் மற்றும் புண்ணியம் செய்யக் கூடிய பூஜைக்கும் மகிமைக்கும் தகுதி உள்ளவராக ஆகுக.

கடைசி சமயத்தில் எப்போது பலவீனமான ஆத்மாக்கள், சம்பூர்ண ஆத்மாக்களாகிய உங்கள் மூலமாகப் பிராப்தியின் அனுபவம் கொஞ்சமாவது செய்கிறார்களோ, அப்போது இதே கடைசி அனுபவத்தின் சம்ஸ்காரத்தை எடுத்துக் கொண்டு அரைக்கல்பத்திற்கு தங்களின் வீட்டில் ஓய்வாக இருந்து, பிறகு துவாபர யுகத்தில் பக்தராகி உங்களுக்குப் பூஜை மற்றும் மகிமை

செய்வார்கள். அதனால் கடைசி நேரத்தின் பலவீனமான ஆத்மாக்களுக்கு மகாதானி வரதானி ஆகி அனுபவத்தின் தானம் மற்றும் புண்ணியம் செய்யுங்கள். இந்த ஒரு விநாடியின் சக்திசாலி ஸ்திதி மூலம் செய்யப் பட்ட தானம் மற்றும் புண்ணியம் அரைக்கல்பத்திற்கு பூஜைக்குரிய மற்றும் மகிமைக்குரியவர்களாக உங்களை ஆக்கி விடும்.

சுலோகன்:

பரஸ்திதிகளில் (பிரச்சனை) பயப்படுவதற்குப் பதிலாக சாட்சியாகி விடுவீர்களானால் வெற்றியாளர் ஆவீர்கள்.

ஓம்சாந்தி

29.12.1983 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" சங்கமயுகம் - சகஜ பிராப்திக்கான யுகம் "

இன்று இரக்க மனமுடைய, பெரிய இதயமுள்ள தந்தை தன்னுடைய பெரிய இதயம் வைத்திருக்கும் இதயப்பூர்வமாக குஷியில் இருக்கும் குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். எப்படி பாப்தாதா எப்பொழுதுமே பரந்த உள்ளமுடையவர், எல்லைக்கப் பாற்பட்ட இதயம் வைத்திருப்பவர், எனவே அனைவரின் இதயத்தைப் பறிக்கும் திலாராம் என்று இருக்கிறார். அதே போலஞ்ேழந்தைகளும் எல்லைக்கப்பாற்பட்ட இதயம், பரந்த இதயம், கொடுக்கும் தன்மையுடைய இதயம் வைத்திருப்பவர்கள். எப்பொழுதும் இதயத்தின் குஷி மூலம் உலகை குஷிப் படுத்துகிறார்கள். நீங்கள் அந்த மாதிரி அதிர்ஷ்டம் நிறைந்த ஆத்மாக்கள். சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள் தான் உலகிற்கு ஆதாரமானவர்கள். நீங்கள் அனைவரும் விழித்தெழுந்த சுடர்விடும் ஜோதிகளாக ஆகிறீர்கள் என்றால், உலகத்தினரும் விழித்தெழுகிறார்கள். நீங்கள் தூங்குகிறீர்கள் என்றால் உலகமும் தூங்குகிறது. உங்கள் அனைவரின் ஏறும் கலை ஆகிறது என்றால், அனைத்து ஆத்மாக்களுக்கும் நன்மை ஏற்பட்டு விடுகிறது. அனைவருக்கும் சக்திக்கு ஏற்றபடி, நேரத்திற்கு ஏற்றபடி முக்தி மற்றும் ஜீவன்முக்தி பிராப்தி ஆகிறது. நீங்கள் உலகின் மேல் இராஜ்யம் செய்கிறீர்கள் என்றால், அனைத்து ஆத்மாக்களும் முக்தியின் நிலையில் இருக்கிறார்கள். உங்களுடைய இராஜ்யத்தின் காலத்தில் மூன்று உலகங்களிலும் துக்கம், அசாந்தியின் பெயர், அடையாளம் இருப்பதில்லை. அந்த மாதிரி அனைத்து ஆத்மாக்களையும் தந்தை மூலமாக சுகம், சாந்தியின் அஞ்சலியைப் பெற வைக்கிறீர்கள். அதே அஞ்சமூலமாக நீண்ட காலமாக முக்தி அடைய வேண்டும் என்ற விருப்பம் அனைவருடையதும் நிறைவேறி விடுகிறது. அந்த மாதிரி அனைத்து ஆத்மாக்களுக்கு, உலகிற்கு தேவையான சக்தியை பிராப்தியாக அடையச் செய்யும் நீங்கள் சுயபிராப்தி சொரூபமானவர் தான் இல்லையா? னென்றால் நேரடியாக அனைத்து பிராப்தி களையும் வழங்கும் வள்ளல், அனைத்து சக்திகளை கொடுப்பவர், ஒரு நொடியில் அனைத்து அதிகாரங்களையும் வரமாக வழங்கும் வள்ளல், சிரேஷ்ட பாக்கியத்தை உருவாக்குபவர், அழியாத தந்தையின் குழந்தைகளாக ஆகியிருக்கிறீர்கள். அந்த மாதிரி அதிகாரி ஆத்மாக் களுக்கு, தமது அதிகாரத்தை நினைவு செய்து, எப்பொழுதும் ஆன்மீக சிரேஷ்ட போதைமற்றும் குஷி இருக்கிறதா? எல்லைக்கப்பாற்பட்ட உள்ளம் உள்ளவர்கள். ஏதாவது எல்லைக்குட்பட்ட பிராப்தியின் பக்கம் தன் உள்ளம் ஈர்க்கப்படவில்லையே? எப்பொழுதும் சகஜ பிராப்தியின்

அனுபவியாளராக ஆகியிருக்கிறீர்களா அல்லது அதிகம் கடின உழைப்பு செய்த பிறகு சிறிதளவு பலனை அடைகிறீர்களா? தற்சமயம் பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை அருந்துவதற்கான பருவம் ஆகும். ஒரு சக்திசாலியான எண்ணம் மற்றும் காரியம் செய்தீர்கள் மற்றும் ஒரு விதை மூலமாக பல மடங்கு பழத்தை அடைந்தீர்கள். பருவ காலத்தின் பழம் என்றால் சகஜமாக பழத்தை (பலனை) பிராப்தி செய்கிறீர்களா? பழம் அனுபவம் ஆகிறதா? அல்லது பழம் உருவாவதற்கு முன்பாகவே மாயா என்ற பறவை பழத்தை சாப்பிட்டு முடித்து விடவில்லையே? அந்த அளவு கவனம் இருக்கிறதா அல்லது கடின உழைப்பு செய்து, யோகா செய்து, படிப்பையும் படித்து, சக்திக்கு ஏற்றாற்போல் சேவையும் செய்திருந்தும் எவ்வளவு பிராப்தி ஆக வேண்டுமோ அவ்வளவு ஆவ தில்லையா? இருக்க வேண்டியதோ எப்பொழுதுக்குமாக வேண்டும். ஏனென்றால் ஒன்றிற்கு பல கோடி மடங்கு என்றால் எண்ணிக்கை செய்ய முடியாத பலன் பிராப்தி ஆனது இல்லையா? இருந்தும் எப்பொழுதும் இருப்பதில்லை. எந்த அளவு வேண்டுமோ அந்த அளவு இருப்பதில்லை. அதற்கான காரணம்? எண்ணம், செயல் என்ற விதை சக்திசாலியாக இல்லை. சூழ்நிலை என்ற நிலம் சக்திசாலியாக இல்லை அல்லது நிலமும் விதையும் சரியாக இருக்கிறது, பழமும் உருவாகிறது, ஆனால் 'நான் செய்தேன்' என்ற இந்த எல்லைக்குட்பட்ட எண்ணம் மூலமாக பிஞ்சை பழமாக எண்ணி உண்டு விடுகிறீர்கள் மற்றும் மாயாவின் விதவிதமான பிரச்சனைகள், சூழ்நிலை, தீயசேர்க்கை, மற்றவர்கள் சொல்லும் வழி மேலும் மனம் சொல்லும் வழி, வீணான எண்ணம் என்ற பறவை பழத்தை அழித்து விடுகிறது, எனவே பழம் அதாவது பிராப்திகள் மூலம் கிடைக்கும் அனுபவங்களின் பொக்கிஷத்திலிருந்து வஞ்சிக்கப்பட்டவராகவே இருந்து விடுகிறார். அந்த மாதிரி வஞ்சிக்கப்பட்ட ஆத்மாக்களின் வாயிலிருந்து வெளியாகும் வார்த்தையே - தெரியவில்லை, ஏன் இப்படி ஆனது? என்பது தான் இருக்கும். அந்த மாதிரி நீங்கள் வீணாக கடின உழைப்பு செய்பவர்களோ இல்லை தான் இல்லையா? நீங்கள் சகஜயோகிகள் தான் இல்லையா? சகஜ பிராப்தியின் பருவகாலத்தில் ஏன் கடின உழைப்பு செய்கிறீர்கள். ஆஸ்தி இருக்கிறது, வரதானம் இருக்கிறது, சீசனும் (பருவ காலமும்) இருக்கிறது, பெரிய பரந்த உள்ளம் படைத்த வள்ளலும் இருக்கிறார். பரந்த மனமுடைய பாக்கியத்தை உருவாக்குபவரும் இருக்கிறார், இருந்தும் கடின உழைப்பு ஏன்? எப்பொழுதும் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் குழந்தைகளுக்கு கடின உழைப்பு இருக்க முடியாது. எண்ணத்தை வைத்தார் கள், உடன் வெற்றியும் கிடைத்தது. விதி என்ற பொத்தானை அழுத்தினீர்கள் மற்றும் சித்தி (வெற்றி) பிராப்தி ஆனது. அந்த மாதிரி நீங்கள் சித்தி சொரூபமானவர்கள் தான் இல்லையா அல்லது கடின உழைப்பு செய்து களைப்படைந்து விடுகிறீர்களா? கடின உழைப்பு செய்வதற்கான காரணம் சோம்பல் மற்றும் அலட்சியம். நினைவு சொரூபம் என்ற கோட்டைக்கு உள்ளே இருப்பதில்லை. மேலும் கோட்டைக்கு உள்ளே இருந்து கொண்டும் ஏதாவது சக்தியின்

பலஹீனம் என்ற வாசலை அல்லது ஜன்னலைத் திறந்து விடுகிறீர்கள். எனவே மாயாவிற்கு வாய்ப்பு கொடுத்து விடுகிறீர்கள். எந்த சக்தியின் குறை இருக்கிறது? அதாவது எந்த பாதை திறந்திருக்கிறது என்று சோதனைசெய்யுங்கள். எண்ணத்தில் கூட திடத்தன்மை இல்லை என்றால், கொஞ்சம் பாதை திறந்திருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். எனவே தான் நன்றாகத் தான் இருக்கிறோம், அனைத்து நியமங்களையும் கடைபிடிக்கிறோம், ஸ்ரீமத்படி நடந்து கொண்டிருக்கிறோம், ஆனால் குஷியுடனும், திடத்தன்மையுடனும் இல்லை. நியமப்படி செல்லத் தான் வேண்டும், பிராமண பரிவாரத்தின் சமுதாய மரியாதைக்கு வசமாகி, என்ன சொல்வார்கள், என்ன நினைப்பார்கள். இந்தக் கட்டாயத்தினால் மற்றும் பயத்தினால் நியமத்தை பாலனை செய்து கொண்டிருக்க வில்லையே? திடத் தன்மையின் அடையாளம் வெற்றி. எங்கு திடத்தன்மை இருக்கிறதோ அங்கு வெற்றி இல்லை என்பது இருக்கவே முடியாது. எது எண்ணத்தில் கூட இருந்திருக்க வில்லையோ அது பிராப்தி ஆகும். அதாவது எண்ணத்தை விட பிராப்தி அதிகமாக இருக்கும். தற்சமயம் சகஜமாக அனைத்து பிராப்திகளையும் அடையும் யுகம். எனவே எப்பொழுதும் சகஜயோகி ஆகுக என்பதின் அதிகாரியாக மற்றும் வரம் பெறுபவராக ஆகுங்கள். புரிந்ததா? மாஸ்டர் சர்வ சக்திவானாகியும் கடின உழைப்பு செய்தீர்கள் என்றால், மாஸ்டர் ஆகி என்ன செய்தீர்கள்? கடின உழைப்பிலிருந்து விடுவிக்கக்கூடிய, கடினத்தை சுலபமாக ஆக்கக்கூடிய தந்தை கிடைத்திருக்கிறார். இருந்தும் கடின உழைப்பு செய்ய வேண்டிய திருக்கிறதா? சுமையைத் தூக்கி விடுகிறீர்கள். எனவே கடின உழைப்பு செய்கிறீர்கள். சுமையை விட்டு விடுங்கள், லேசானவர் ஆகிவிட்டீர்கள் என்றால், ஃபரிஷ்தா ஆகி, பறந்து கொண்டே இருப்பீர்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் உள்ளத்தால் குஷியாக இருக்கும், எப்பொழுதும் சகஜமாக பலனை பிராப்தி செய்யும் சொரூபமான, எப்பொழுதும் வரம் அளிக்கும் வள்ளல் மூலம் வெற்றியை அடையக்கூடிய வரம் பெற்றிருக்கும், வாரிசு குழந்தைகளுக்கு திலாராம் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் சந்திப்பு

பஞ்சாப் மண்டலம் - நீங்கள் அனைவரும் சுயதரிசன சக்கரதாரியா? சுயதரிசன சக்கரம் சுற்றிக்கொண்டே இருக்கிறதா? எங்கு சுயதரிசன சக்கரம் இருக்கிறதோ அங்கு அனைத்து தடைகளிலிருந்தும் விடுபட்டு இருக்கிறீர்கள். ஏனென்றால், சுயதரிசன சக்கரம் மாயாவின் தடைகளை அழிக்கக்கூடியது. எங்கு சுயதரிசன சக்கரம் இருக்கிறதோ அங்கு மாயா இல்லை. தந்தையின் குழந்தை ஆனீர்கள் மற்றும் சுயத்தின் தரிசனம் ஆனது. தந்தையின் குழந்தை

ஆவது என்றால், சுயதரிசன சக்கரதாரி ஆவது. அந்த மாதிரி சுயதரிசன சக்கரதாரி தான் உலகிற்கு நன்மை செய்பவர். ஏனென்றால் தடைகளை அழிப்பவர். விக்ன விநாஷக் என்று கணேஷரை கூறுகிறார்கள். கணேஷருக்கு எவ்வளவு பூஜை நடக்கிறது!. எவ்வளவு அன்போடு பூஜை செய்கிறார்கள், எவ்வளவு அலங்கரிக்கிறார்கள், எவ்வளவு செலவு செய்கிறார்கள். அந்த மாதிரி நான் விக்ன விநாஷக் என்ற இந்த எண்ணமே தடை களை அழித்து விடுகிறது. ஏனென்றால், எண்ணம் தான் சொரூபத்தை உருவாக்குகிறது. தடை இருக்கிறது, தடை இருக்கிறது என்று கூறுவதினால் தடை சொரூபமாக ஆகிவிடுகிறார். பலஹீனமான எண்ணத்தினால் பலஹீனமான உலகத்தின் படைப்பு ஆகிவிடுகிறது. ஏனென்றால் ஒரு எண்ணம் பலஹீனமாக இருக்கிறது என்றால் அதற்கு பின்னால் அனேக பலஹீனமான எண்ணம் உருவாகி விடுகிறது. ஒரு ஏன் மற்றும் என்ன என்ற எண்ணம் அனேக ஏன், என்ன என்பதைக் கொண்டு வருகிறது. நான் மகாவீர், நான் சிரேஷ்ட ஆத்மா என்ற சக்திசாலியான எண்ணம் உருவானது என்றால் படைப்பும் அந்த மாதிரி சிரேஷ்டமாக இருக்கும். எப்படி எண்ணமோ அப்படி படைப்பு. இவை அனைத்தும் எண்ணத்தின் விளையாட்டு. ஒருவேளை குஷியான எண்ணத்தைப் படைத்தீர்கள் என்றால், அந்த நேரமே குஷிக்கான சூழ்நிலை அனுபவம் ஆகும். துக்கமான எண்ணத்தை படைத்தீர்கள் என்றால், குஷியின் சூழ்நிலையிலும் துக்கமான சூழ்நிலையாக அனுபவம் ஆகும். குஷியின் அனுபவம் ஆகாது. எனவே சூழ்நிலையை உருவாக்குவது, படைப்பைப் படைப்பது நம்முடைய கையில் இருக்கிறது. திடமான எண்ணத்தை வைத்தீர்கள் என்றால் தடை சூமந்திரம் ஆகிவிடும். ஒருவேளை இது நடக்குமா அல்லது நடக்காதா தெரியவில்லை என்று யோசிக்கிறீர்கள் என்றால், மந்திரமும் வேலை செய்யாது. எப்படி ஏதாவது டாக்டரிடம் செல்கிறீர்கள் என்றால், டாக்டரும் முதலில் உங்களுக்கு என் மேல் நம்பிக்கை இருக்கிறதா என்று கேட்பார். எவ்வளவு தான் மிக நல்ல மருந்தாக இருந்தாலும் ஒருவேளை நம்பிக்கை இல்லை என்றால், அந்த மருந்தின் பாதிப்பும் ஏற்படாது. அது அழியக்கூடிய விஷயம், இங்கிருப்பது அழியாத விஷயம். எனவே நீங்கள் நிரந்தரமான விக்ன விநாஷக் ஆத்மாக்கள், பூஜைக்குரிய ஆத்மாக்கள், இப்பொழுது கூட உங்களுக்கு எந்த ரூபத்தில் பூஜை நடந்து கொண்டிருக்கிறது? இந்தக் கடைசி ஜென்மம் விகார ஜென்மம் ஆன காரணத்தினால் இந்த ரூபத்தின் நினைவு சின்னத்தை வைப்பதில்லை. ஆனால் ஏதாவது ரூபத்தில் உங்களுடைய நினைவுச் சின்னம் இருக்கிறது. எனவே எப்பொழுதும் தன்னை மாஸ்டர் சர்வ சக்திவான், விக்ன விநாஷக், சிவனுடைய குழந்தை கணேஷர் என்று புரிந்து நடந்து கொள்ளுங்கள். 'தெரியவில்லை, தெரியவில்லை' என்று உங்களுடைய எண்ணத்தையே உருவாக்குகிறீர்கள் என்றால் இந்த பலஹீனமான எண்ணத்தின் காரணத்தினால் தான் மாட்டிக் கொள்கிறீர்கள். எனவே எப்பொழுதும் குஷி என்ற ஊஞ்சலில் ஆடக் கூடிய அனைத்து தடைகளையும் அழிப்பவர் ஆகுங்கள். அனைவரின் கடினங்களை சுலப

மானதாக ஆக்குபவர் ஆகுங்கள். இதற்காக திடமான எண்ணம் மற்றும் டபுள் லைட்டாக மட்டும் இருக்க வேண்டும். என்னுடையது எதுவும் இல்லை, அனைத்தும் தந்தை யினுடையது. எப்பொழுது சுமையை தன் மேல் வைக்கிறீர்களோ அப்பொழுது அனைத்து விதமான தடை வருகிறது. என்னுடையது இல்லை என்றால் தடையற்றவர். என்னுடையது இருக்கிறது என்றால் தடைகளின் வலை. அந்த மாதிரி நீங்கள் தடைகளை அழிக்கும் விக்ன விநாஷக். தந்தையின் காரியமும் இதுவே தான் இல்லையா? எது தந்தையின் காரியமோ அது குழந்தைகளின் காரியம். எந்தவொரு காரியத்தையும் குஷியோடு செய்கிறீர் கள் என்றால், அந்த நேரம் தடை இருக்காது. எனவே மிகவும் குஷியுடன் காரியத்தில் பிஸியாக இருங்கள். பிஸியாக இருந்தீர்கள் என்றால் மாயா வராது. நல்லது.

2) நான் எப்பொழுதும் மின்னிக் கொண்டிருக்கும் வெற்றி நட்சத்திரம் என்ற இந்த நினைவு இருக்கிறதா? இன்று வரையிலும் இந்த ஆகாயத்தின் நட்சத்திரங்களை அனைவரும் எவ்வளவு அன்போடு பார்க்கிறார்கள். ஏனென்றால், வெளிச்சம் கொடுக்கின்றன, மின்னிக் கொண்டிருக்கின்றன. எனவே மிகவும் பிரியமானதாக அனுபவம் ஆகிறது. நீங்களும் மின்னிக் கொண்டிருக்கும் வெற்றி நட்சத்திரங்கள், வெற்றியை அனைவரும் விரும்புவார்கள், சிலர் இந்தக் காரியம் வெற்றி அடைய வேண்டும் என்று கூறி பிரார்த்தனையும் செய்வார்கள். வெற்றியை அனைவரும் வேண்டும் என்பார்கள். மேலும் நீங்கள் வெற்றியின் நட்சத்திரமாக ஆகிவிட்டீர்கள். உங்களுடைய ஜட விக்கிரகங்கள் கூட இன்று வரையிலும் வெற்றி அடைவதற்கான வரதானத்தைக் கொடுக்கின்றன, என்றால் நீங்கள் எந்த அளவு மகான், எந்த அளவு உயர்ந்தவர்கள் என்ற போதைமற்றும் நிச்சயத்தில் இருங்கள். வெற்றிக்குப் பின்னால் ஓடக்கூடியவர்களாக இன்றி ஆனால் மாஸ்டர் சர்வ சக்திவான் அதாவது வெற்றி சொரூபமானவர். வெற்றி உங்கள் பின்னால் தானாக வரும்.

3) எப்பொழுதும் தன்னை தந்தையுடன் இருக்கும் நிரந்தரமாக சகயோகத்தை பெறும் ஆத்மா என்று நினைக்கிறீர்களா? எப்பொழுதும் துணையின் அனுபவம் செய்கிறீர்களா? எங்கு எப்பொழுதும் தந்தையின் துணை இருக்கிறதோ அங்கு சகஜமாக அனைத்து பிராப்திகளும் இருக்கின்றன. ஒருவேளை தந்தையின் துணை இல்லை என்றால், அனைத்து பிராப்திகளும் இல்லை. ஏனென்றால் தந்தை அனைத்து பிராப்திகளையும் வழங்கும் வள்ளல். எங்கு வள்ளல் உடன் இருக்கிறாரோ அங்கு பிராப்திகளும் உடன் இருக்கும். எப்பொழுதும் தந்தையின் துணை என்றால், அனைத்து பிராப்திகளின் அதிகாரி. அனைத்து பிராப்தி சொரூப ஆத்மா என்றால் நிரம்பிய ஆத்மாக்கள், எப்பொழுதும் உறுதியாக இருப்பார்கள். நிரம்பி இருக்கவில்லை என்றால்

ஆடிக் கொண்டே இருப்பார்கள். நிரம்பியது என்றால் உறுதியானவர். எப்பொழுது தந்தை துணையை கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்றால் பெறுபவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் இல்லையா? வள்ளல் கொடுக்கிறார் என்றால் முழுமையாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் கொஞ்சமாக அல்ல. பக்தர்கள் சிறிதளவு பெற்று குஷியடைந்து விடுகிறார்கள். ஆனால் ஞானி என்றால், முழுமையாக எடுத்துக் கொள்பவர்.

ஜெர்மனி குரூப்புடன் சந்திப்பு –

எப்பொழுதும் தன்னை தந்தையின் சமீப இரத்தினம் என்று நினைக்கிறீர்களா? எவ்வளவு தான் தூரத்தில் இருந்தாலும், இருக்கும் தேசம் தூரத்தில் இருந்தாலும் கூட உள்ளத்தால் மிக அருகில் இருக்கிறீர்கள். அந்த மாதிரி அனுபவம் ஆகிறது தான் இல்லையா? யார் எப்பொழுதும் நினைவில் இருக்கிறார்களோ, நினைவு அவர்களுக்கு சமீபத்தின் அனுபவம் செய்விக்கிறது. நீங்கள் சகஜயோகி தான் இல்லையா? எப்பொழுது பாபா என்று கூறுகிறீர்கள் என்றால் 'பாபா' என்ற வார்த்தையே சகஜயோகி ஆக்கி விடுகிறது. பாபா என்ற வார்த்தை மந்திர சக்தி நிறைந்த வார்த்தை மந்திர சக்தி ஒரு பொருளை கஷ்டப்படாமல் பெற வைக்கிறது. உங்கள் அனைவருக்கும் என்ன தேவையாக இருக்கிறதோ, சுகம் வேண்டும், அமைதி வேண்டும், சக்தி வேண்டும் அப்படி என்ன வெல்லாம் வேண்டியதாக இருக்கிறதோ 'பாபா' என்ற வார்த்தையை கூறினீர்கள் என்றால் அனைத்தும் கிடைத்து விடும். அந்த மாதிரி அனுபவம் இருக்கிறது தானே? பாப்தாதாவும் பிரிந்து சென்ற குழந்தைகள், யார் மீண்டும் வந்து சந்திக்கிறார்கள் என்றால், அந்த மாதிரி குழந்தைகளைப் பார்த்து பாப்தாதாவும் குஷி அடைகிறார். யாருடைய குஷி அதிகமாக இருக்கிறது? உங்களுக்கா அல்லது தந்தைக்கா? பாப்தாதா எப்பொழுதுமே ஒவ்வொரு குழந்தையின் விசேஷத்தை நினைவு செய்கிறார். நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்! தந்தை என்னை நினைவு செய்கிறார் என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா? நீங்கள் அனைவரும் அவரவர்களின் விசேஷத்தில் விசேஷ ஆத்மா. தூர தேசத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், வேறொரு மதத்தில் சென்ற பிறகும் தந்தையைத் தெரிந்து கொண்டீர்கள் என்ற இந்த விசேஷமோ உங்கள் அனைவரிடமும் இருக்கிறது. அந்த மாதிரி இந்த விசேஷ சம்ஸ்காரத்தினால் விசேஷ ஆத்மா ஆகிவிட்டீர்கள். நல்லது - ஓம் சாந்தி.

வரதானம் :

சேவையின் சேத்திரத்தில் சுய சேவை மற்றும் அனைவரின் சேவையில் சமநிலை வைக்கக்கூடிய மாயாவை வென்றவர் ஆகுக

அனைவரின் சேவையின் கூடவே முதலில் சுயசேவை அவசியமானது. இந்த சமநிலை எப்பொழுதும் சுயத்தில் மற்றும் சேவையில் முன்னேற்றத்தை பிராப்தி செய்விக்கிறது. எனவே சேவையின் சேத்திரத்தில் அங்கிங்கு ஓடி சேவை செய்து கொண்டே இரண்டு விஷயங்களின் சமநிலை வைத்தீர்கள் என்றால் மாயாவை வென்றவர் ஆகிவிடு வீர்கள். சமநிலை வைப்பதினால் அதிசயம் ஏற்படும். இல்லையென்றால் சேவை களத்தில் வெளிமுகமாக இருக்கும் காரணத்தினால் அதிசயம் நடப்பதற்குப் பதிலாக தன்னுடைய மற்றும் மற்றவர்களின் பாவ, சுபாவத்தின் மோதல் வந்து விடுகிறது. சேவையின் ஓட்டத்தில் மாயா புத்தியை அங்கிங்கு ஓட வைத்து விடுகிறது.

சுலோகன்:

தன்னுடைய விசேஷங்களின் விதைக்கு சர்வ சக்திகள் என்ற நீர் பாய்ச்சி பலன் (பழம்) கொடுப்பதாக ஆக்குங்கள்.

ஓம்சாந்தி

## ஸ்ரீமத் என்ற கை சதா கை மீது வைத்திருந்தால் முழு யுகமும் கை மீது கை கொடுத்து நடந்து கொண்டே இருப்பீர்கள்.

இன்று கடற்கரையில் அதாவது மதுபன் என்ற கடற்கரையில் இனிய சந்திப்பு செய்வதற்காக நாயகன் தனது ஆன்மீக நாயகிகளை சந்திப்பதற்காக வந்திருக்கின்றார். எவ்வளவு வெகு தூரத்திலிருந்து சந்திப்பதற்காக வந்திருக்கிறீர்கள்! ஏன்? இப்படிப்பட்ட அதிசயமான நாயகனை முழு கல்பத்திலும் அடைய முடியாது. ஒரே ஒரு நாயகன், ஆனால் நாயகிகள் எத்தனை பேர்? ஒரு நாயகனுக்கு பல நாயகிகள் இருக்கின்றனர். ஆக இன்று விசேஷமாக நாயகிகளின் கூட்டத்திற்கு வந்திருக்கின்றார். கூட்டமாக கொண்டாடுவார்களே தவிர சொற்பொழிவு செய்யமாட்டார்கள். ஆக இன்று சொற்பொழிவு செய்ய வரவில்லை. சந்திப்பு மற்றும் கொண்டாட வந்திருக்கிறோம். குறிப்பாக இரட்டை அயல்நாட்டு குழந்தைகள் இன்றைய நாள் கொண்டாடுவதற்காக வந்திருக்கின்றனர். புது ஆண்டு கொண்டாட வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்திருக்கின்றனர். பாப்தாதாவும் புது ஆண்டில் அன்பு மற்றும் சகயோகம் நிறைந்த வாழ்த்துக்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். சங்கமயுகம் புது யுகமாகும். எதிர்கால சத்யுகம் இந்த நிகழ்கால புது யுகத்தின் புது வாழ்க்கையின் பிராப்தியாகும். பிராமணர்களுக்கு புது யுகம், சிரேஷ்ட யுகம் இதுவாகும். எப்போது பிராமணர்களாக ஆனீர்களோ புதுயுகம், புது உலகம், புது நாள், புது இரவு ஆரம்பமாகி விட்டது. இதே புது யுகத்தின் புது வாழ்க்கையின் ஒவ்வொரு அடியும் பல மடங்கு மதிப்பு வாய்ந்த தாகும். வைரத்திற்கு சமமானது. புது பகல் பொழுது வந்தது, புது இரவு வந்தது என்ற பாட்டை சத்யுகத்தில் பாடமாட்டீர்கள். இது தற்போதைய விசயமாகும். பாப்தாதா ஆரம்பத்திலிருந்து எந்த பாட்டின் மூலம் குழந்தைகளை எழுப்பினார்? அந்த பாட்டு நினைவிருக்கிறதா? விழித்தெழுங்கள் நாயகிகளே விழித்தெழுங்கள். ஏன் விழிப்படைய வேண்டும்? புது யுகம் வந்திருக்கிறது. குழந்தைப் பருவத்தின் பாட்டு இது தானே! இப்போது புதுப் புது பாட்டை உருவாக்கி விட்டீர்கள். ஆதியில் தந்தை இந்த பாட்டைத் தான் கூறி வந்தார். ஆக புது யுகம் எப்போது ஏற்பட்டது? இப்போது. பழையவற்றிற்கு முன்பு புதிதாக தோன்றுகிறது அல்லவா! பழைய உலகம், பழைய வாழ்க்கை மாறி விட்டது. புது வாழ்க்கையில் வந்து விட்டீர்கள் அல்லவா! மயக்கத்தில் இருந்தோம். நான் யார் என்ற விழிப்புணர்வு இருந்ததா? ஆக மயக்க

நிலை அல்லவா! மயக்க நிலையிலிருந்து விழிப்புணர்வில் வந்து விட்டீர்கள். புது வாழ்க்கையின் அனுபவம் செய்திருக்கிறீர்கள் அல்லவா! கண்கள் திறந்ததும் புது சம்பந்தம், புது உலகை பார்த்தீர்கள் அல்லவா! ஆக புது யுகம், புது யுகத்தில் புது ஆண்டிற் கான வாழ்த்துக்கள்.

லௌகீக உலகிலும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் (ஹேப்பி நியூ இயர்) என்று கூறுவர். உண்மையில் எப்போதும் சந்தோசமாக இருப்பது கிடையாது. ஆனால் ஹேப்பி நியூ இயர் என்று கூறுவர். இப்போது நீங்கள் அனைவரும் உண்மையான முறையில் ஹேப்பி நியூ இயர் என்று மட்டுமே கூறிவிடாமல் ஹேப்பி நியூ யுகம் என்றும் கூறுவீர்கள். முழு யுகமும் குஷிக்கான யுகமாகும்.ஹேப்பி நியூ இயர் என்று கூறி வாழ்த்துக்கள் கூறும் போது என்ன செய்வர்? கை குலுக்குவது தான் அயல்நாட்டின் முந்தைய வழக்கமாகும். பாப்தாதா எப்படி கை குலுக்குவார்? ஸ்தூல கைகள் ஒரு விநாடிக்காக குலுக்குகின்றனர். ஆனால் பாப்தாதா முழு யுகமும் கை குலுக்குவது என்றால் ஒரே ஒரு சிரேஷ்ட வழி என்ற கை கொடுத்து கை மீது கை கொடுத்து, கடைசியில் கூடவே அழைத்தும் செல்கின்றார். ஸ்ரீமத் என்ற கை சதா உங்கள் அனைவரின் கூடவே இருக்கிறது, ஆகையால் முழு யுகமும் கை மீது கை கொடுத்து நடக்கிறீர்கள். கையோடு கை கோர்த்து நடப்பது என்பது அன்பின் அடையாளமாகவும் இருக்கிறது மற்றும் சகயோகத்தின் அடையாள மாகவும் இருக்கிறது. சில நேரங்களில் யாராவது நடந்து நடந்து களைப்படைந்து விட்டால் மற்றொருவர் அவரது கையைப் பிடித்துக் கொண்டு அழைத்துச் செல்வர் அல்லவா! ஆன்மீக நாயகன் ஒருபோதும் நாயகிகளின் கைகளை விடமாட்டார். கை மற்றும் துணை சதா இருக்கும் என்பது கடைசி வரையிலான உறுதிமொழியாகும். அனைத்து நாயகிகளும் கைகளை நன்றாக பிடித்துக் கொண்டீர்கள் தானே! தளரவில்லை அல்லவா! விட்டு விடக் கூடியவர்கள் இல்லை தானே! விடுவது பிறகு பிடித்துக் கொள்வது என்பவர்கள் கைகளை உயர்த்துங்கள். சில நேரங்களில் விடுவது, சில நேரங்களில் பிடித்துக் கொள்வது - இவ்வாறு யாராவது இருக்கிறீர்களா? இது இவர்களது விசேஷம் ஆகும், மறைக்க முடியாது. தெளிவாகப் பேசக் கூடியவர்கள், அதனால் தான் பாதி தடைகள் தெளிவாகக் கூறுவதன் மூலம் அழிந்து விடுகின்றன. ஆனால் பக்குவமற்ற வியாபாரம் எவ்வளவு காலம் செய்வீர்கள்? பழைய ஆண்டின் பழைய வழக்கம், சடங்குகளை அழிக்க வேண்டும் அல்லவா! அல்லது புது ஆண்டிலும் இதே சடங்கு, வழக்கம் இருக்குமா? இது வரை என்ன நடந்ததோ அதற்கு முற்றுப்புள்ளி என்ற புள்ளி வைத்து, சதா கூடவே இருப்பது மற்றும் கைகளை பிடித்திருக்கும் நினைவிற்கான புள்ளி இப்போதிலிருந்தே வைத்துக் கொள்ளுங்கள். விசேஷ நாள் அல்லது குஷிக்கான நாட்களில் சுமங்கலி, பாக்கியம் மற்றும் வாழ்த்தின் அடையாளமாக பிந்து அதாவது திலகம் வைத்துக் கொள்வர். நீங்களும் விசேஷமாக பட்டி நாளன்று நினைவிற்கான திலகம் வைத்துக் கொள்கிறீர்கள் அல்லவா! ஏன் வைத்துக் கொள்கிறீர்கள்?

பட்டி நாளன்று குறிப்பாக திலகம் ஏன் வைத்துக் கொள்கிறீர்கள்? திட சங்கல்பத்தின் அடையாளமாக திலகம் வைத்துக் கொள்கிறீர்கள் – இன்று நாள் முழுவதும் சகஜயோகி மற்றும் சிரேஷ்ட யோகியின் சொரூபத்தில் இருப்பேன். இன்றும் சிறிது பக்குவமற்று இருந்தாலும், திட சங்கல்பத்தின் மூலம் முற்றுப்புள்ளி என்ற திலகம் (பிந்து) வைத்துக் கொள்ளுங்கள், மற்றொன்று சக்தி சொரூபத்திற்கான திலகம் வைத்துக் கொள்ளுங்கள். திலகம் வைக்க முடிகிறதா? பாண்டவர்களுக்கு திலகம் வைத்துக் கொள்ள முடிகிறதா? சரி, சக்திகளுக்கு திலகம் வைத்துக் கொள்ள வருகிறதா? அழிவற்ற திலகம். இன்று காலையிலும் அனைவரும் என்ன உறுதிமொழி செய்தீர்கள்? விழா கொண்டாட வேண்டும் அல்லவா? (திருமண விழா கொண்டாட வேண்டும்), இப்போது திருமணம் நடக்கவில்லையா என்ன? குழந்தைகளைப் பெற்றெடுக்கவில்லையா? திருமணம் ஆகிவிட்டது, ஆனால் திருமண நாளைக் கொண்டாட வந்திருக்கிறீர்கள். யாருக்கு திருமணம் நடைபெறவில்லை, அவர்கள் கை உயர்த்துங்கள். என்ன தான் சேட்டை செய்தாலும், நாயகன் விட்டு விடமாட்டார். ஏனெனில் விட்டு விட்டு எங்கு செல்வார்கள் என்பதை அறிவார். இன்றைய நாட்களில் விட்டு விட்டு ஹிப்பியாக ஆவது அயல்நாட்டின் வழக்கமாக ஆகிவிட்டது. ஹிப்பி ஆக வேண்டுமா என்ன? எப்போதும் ஹிப்பியாக ஆக வேண்டுமா? அல்லது ஹாப்பியாக ஆக வேண்டுமா? பார்க்கவே முடியாத நிலை ஏற்பட்டு விடும். நீங்கள் அனைவரும் இராஜ்ய அதிகாரிகள் ஆவீர்கள், ஆகையால் அவ்வபொழுது குறும்பு செய்பவர்களாக ஆகிவிடுகிறீர்கள் என்பதை பாப்தாதா அறிவார். ஆனால் கூடவே அழைத்துச் செல்வேன் என்று வாக்குறுதி செய்த பாப்தாதா அதை விடவே மாட்டார். ஆகையால் கூட சென்றே ஆக வேண்டும். நல்லது.

புது ஆண்டில் என்ன புதுமை செய்வீர்கள்? ஏதாவது புது விசயம் செய்வீர்கள் அல்லவா! ஏதாவது திட்டம் வைத்திருக்கிறீர்களா? நிமித்தமான சகோதரிகள் ஏதாவது புது திட்டம் உருவாக்கியிருக்கிறீர்களா? கீதையின் பகவானை நாட்டில் வெளிப்படுத்துவீர்கள். அயல்நாட்டில் என்ன செய்வீர்கள்? செய்வதற்கு எது பாக்கி இருக்கிறதோ, அந்த விசயத்தை நடைமுறையில் கொண்டு வர வேண்டும். இது மிகவும் நல்ல விசயமாகும். நேரத்திற்குத் தகுந்தாற் போன்று அனைத்து விசயங்களும் நடைமுறையில் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. இந்த விசயத்தின் மூலம் பாரதத்தில் முரசு ஒலிக்கப்படவே செய்யும். தர்மத் தலைவர்கள் விழிப்படைவார்கள், குழப்பங்களும் ஏற்படும். சிறிது விழிப்படைந்து, மிக நன்றாக இருக்கிறது என்று கூறி பிறகு தூங்கி விட்டார்களோ, எவ்வாறு தூக்கத்திலிருந்து எழுந்திருக்கவில்லை எனில் அவர்கள் மீது குளிர்ந்த தண்ணீரை ஊற்றுவது போல் இதுவும் அவ்வாறு ஆகிவிடுகிறது. ஆக பாரதவாசிகள் மீதும் விசேஷமாக குளிர்ந்த தண்ணீர் தெளிக்கும் போது விழிப்படைவார்கள். நல்லது, இந்த ஆண்டு என்ன புதுமை செய்வீர்கள்?

லௌகீகஉலகில் எந்த இடத்தில் எந்த அளவிற்கு குழப்பம் ஏற்படுகிறதோ, அதே குழப்பமான இடத்தில் சதா குஷிக்கான அசைக்க முடியாத நிலை என்ற கொடி பறக்க வையுங்கள். அரசாங்கம் குழப்பத்தில் இருக்கும், ஆனால் பிரபுவின் குப்தமான இரத்தினங்கள் சதா முழுமையான, சதா அசைக்க முடியாத நிலை என்ற கொடியை விசேஷமாக பறக்க வைப்பர். அரசாங்கத்தின் கவனமும் ஈர்க்கப்பட்டு விடும் - குப்தமான வேடத்தில் இந்த தேசத்திற்கு வந்திருக்கும் விசித்திர ஆத்மாக்களாகிய இவர்கள் யார்? இவர்கள் முழு தேசத்திலிருந்தும் தனிப்பட்டவர்களாக மற்றும் பிரியமானவர்களாக இருக்கின்றனர். யார் தன்னை செல்வத்தில் பலவீனமானவராக (ஏழை) நினைக்கிறார்களோ அவர்களை அழிவற்ற செல்வத்தினால் நிரப்பி, நான் அனைத்திலும் நிறைந்தவன், நான் சதா பல மடங்கு பாக்கியவான் என்ற அனுபவம் செய்விக்க வேண்டும். செல்வத்தின் ஏழ்மைத்தன்மையின் துக்கம் மறந்து விட வேண்டும், இப்படிப்பட்ட அலையைப் பரப்புங்கள். யார் வந்தாலும் நான் அளவற்ற பொக்கிஷங்களினால் நிறைந்து விட்டேன், வேறு ஏதாவது செல்வம் இருக்கிறதா? என்ற அனுபவம் செய்ய வேண்டும். மேலும் இதே செல்வத்தின் மூலம் இந்த பௌதீக செல்வமும் தானாகவே நெருக்கத்தில் வந்து விடும். துக்கம் கொடுக்காது. நல்லது, அயல்நாட்டில் புது ஆண்டின் புதுமையாக என்ன செய்வீர்கள்? சென்டர்கள் திறக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன, மேலும் திறக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். இப்போது இந்த ஆண்டு அயல்நாட்டில் விசேஷமாக தனித்திறம் (குவாலிட்டி) வாய்ந்த சேவை விசேஷ ரூபத்தில் செய்ய வேண்டும். உங்கள் அனைவரிடத்திலும் விசேஷ தனித்திறன் இருக்கவே செய்கிறது, ஆனால் தனித்திறன் வாய்ந்த நீங்கள் அனைவரும் ஸ்தாபனைக்கான காரியத்தில் உதவியாளர்களாக ஆகிவிடும் அளவிற்கு விசேஷமான தனித்திறன் வாய்ந்த ஆத்மாக்களை உருவாக்குங்கள். அயல்நாட்டில் நாலாபுறங்களிலிருந்தும் ஒரு குழுவை உருவாக்கி அவர்கள் பாரதவாசிகளுக்கு சேவை செய்வதற்கு நிமித்த மானவர்களாக ஆகி விட வேண்டும். புகழ் பெற்றவர்கள் ஓசையைப் பரப்பும் குழு தனியானது, ஆனால் இவர்கள் சம்பந்தத்தில் உள்ளவர்கள், தொடர்பில் உள்ளவர்கள். மேலும் இந்த குழு தனித்திறன் உடையவர்களாக இருக்க வேண்டும், அவர்கள் நெருங்கிய சம்பந்தமுடையவர்களாக இருக்க வேண்டும், குறிப்பாக வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வந்த அனுபவிகளாக இருக்க வேண்டும். அவர்களது அனுபவத்தின் மூலம் மேலும் அதிகமான விசேஷ தனித்திறன் வாய்ந்த ஆத்மாக்கள், வாரிசு குவாலிட்டி ஆத்மாக் கள் வெளிப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அவர்கள் சேவைக்கு நிமித்தமாக இருக்கும் குழு, இவர்கள் வாரிசு குவாலிட்டி சேவாதாரி குழு. பிரபலமானவர்களாகவும் இருக்க வேண்டும் மற்றும் வாரிசும் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட குழு அயல்நாட்டில் தயாராகி விட்டால் உள்நாட்டு சேவையில் ஈடுபட வேண்டும். அரசியல் தலைவர்கள், தர்ம தலைவர்கள்

போன்ற அனைத்து ஆத்மாக்களுக்கும் தனது அனுபவ சக்தியின் மூலம் அனுபவம் செய்யக் கூடிய ஆசையை உருவாக்கி விட வேண்டும். ஆக இவ்வாறு சேவையில் ஈடுபடும் வாரிசு சேவாதாரி குவாலிட்டி குழுவை தயார் செய்யுங்கள். புரிந்ததா!

அயல்நாட்டில் நாலாபுறங்களிலும் ஓசை பரப்பும் சாதனம் எளிதாக இருக்கிறது. ஆகையால் அயல்நாட்டில் ஓசை பரவிக் கொண்டு இருக்கிறது மற்றும் பரவிக் கொண்டே இருக்கும். ஆனால் பாரதத்தில் ஓசை பரப்புவதற்கான சாதனம் அந்த அளவிற்கு எளிதல்ல. பாரதவாசிகளை விழிப்படையச் செய்வதற்கு தனிப்பட்ட சேவை செய்ய வேண்டும். அதுவும் மிக எளிய அனுபவத்தின் ஓசைக்கான சேவையாக இருக்க வேண்டும். பாரதவாசிகள் விசேஷமான மாற்றத்தின் அனுபவத்தின் மூலம் மாற்றம் கொண்டு வருவர். இவ்வாறு விசேஷ அனுபவிகள், அவர்களது அனுபவத்தில் சக்திசாலியான மாற்றத்தின் விசயங்கள் இருக்க வேண்டும் – இப்படிப்பட்ட கதையைக் கேட்டு பாரதவாசிகள் அதிகம் ஈர்க்கப் படுவார்கள். பாரதத்தில் கதைகள் கேட்கக் கூடிய வழக்கம் இருக்கிறது. அயல்நாட்டினர் என்ன செய்ய வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டீர்களா? இவ்வளவு நிமித்த சகோதரிகள் வந்திருக்கிறீர்கள், ஆக இப்படிப்பட்ட குழு தயார் செய்து அழைத்து வர வேண்டும். நல்லது.

புது ஆண்டின் விசேஷ பரிசாக பாப்தாதா வரதானத்தின் மாலை கொடுத்துக் கொண்டிருக்கின்றார். விழா கொண்டாடும் பொழுது மாலை அணிவிப்பார்கள். பாப்தாதா அனைத்து நாயகிகளுக்கும் வரதானம் என்ற மாலையை பரிசாக கொடுத்துக் கொண்டிருக் கின்றார். திருப்தியிடம் சதா திருப்தியாக இருங்கள் மற்றும் திருப்தி படுத்துங்கள். ஒவ்வொரு சங்கல்பத்திலும் விசேஷதா இருக்க வேண்டும், ஒவ்வொரு வார்த்தை மற்றும் செயலில் விசேஷதா இருக்க வேண்டும். இவ்வாறு விசேஷம் நிறைந்தவர்களாக சதா இருங்கள். சதா சரள சுபாவம், சரள வார்த்தைகள், சரளதன்மை நிறைந்த செயல்களாக இருக்க வேண்டும். இவ்வாறு சரள சொரூபத்துடன் இருங்கள். சதா குஷியாக இருங்கள், குµயின் பொக்கிஷத்தைப் பகிர்ந்து கொடுங்கள். குµயின் அலைகளை அனைவரிடத்திலும் பரப்புங்கள். இவ்வாறு சதா குµயின் புன்முறுவல் முகத்தில் ஜொலித்துக் கொண்டே இருக்க வேண்டும். இவ்வாறு சிரித்த முகத்துடன் இருங்கள். சதா நினைவில் இருங்கள். விருத்தி அடையுங்கள். இப்படிப்பட்ட வரதானத்தின் மாலை சதா கூடவே வைத்துக் கொள்ளுங்கள். இது தான் புது ஆண்டின் பரிசாகும். நல்லது.

இவ்வாறு சதா வரதானியாக, சதா கை மற்றும் துணையுடன் இருக்கும் அமர, சிரேஷ்ட

ஆத்மாக்களுக்கு, ஒவ்வொரு சங்கல்பத்திலும் புதுமை என்ற விசேஷத்தை வாழ்க்கையில் கொண்டு வரக் கூடியவர்களுக்கு, இப்படிப்பட்ட விசேஷ ஆத்மாக்களுக்கு புது யுகத்தின், புது ஆண்டின் அழிவற்ற அன்பு நினைவுகள். பறக்கும் கலைக்கான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தனிப்பட்ட சந்திப்பு:

சதா தன்னை புண்ணிய ஆத்மா என்று நினைக்கிறீர்களா? தந்தையின் அறிமுகம் கொடுத்து தந்தையினுடையவர்களாக ஆக்குவது தான் அனைத்தையும் விட மிகப் பெரிய புண்ணியமாகும். இப்படிப்பட்ட சிரேஷ்ட காரியம் செய்யக் கூடிய ஆத்மாக்களாக இருக்கிறீர்கள். ஏனெனில் இப்போதைய புண்ணிய ஆத்மாக்கள் சதா காலத்திற்கும் பூஜ்ய ஆத்மாக்களாக ஆகிவிடுகின்றனர். புண்ணிய ஆத்மா தான் பூஜ்ய ஆத்மாவாக ஆகிறது. அல்ப கால புண்ணியமும் பலனைக் கொடுக்கிறது, அது அல்ப காலத்திற்கானது. இது அழிவற்ற புண்ணியம். ஏனெனில் அழிவற்ற தந்தையினுடையவர்களாக ஆக்குகிறீர்கள். இதற்கான பலனும் அழிவற்றதாக கிடைக்கிறது. பல பிறவிகளுக்கு பூஜ்ய ஆத்மாவாக ஆகிவிடுவீர்கள். ஆக சதா புண்ணிய ஆத்மா என்று புரிந்து கொண்டு ஒவ்வொரு காரியமும் புண்ணியமானதாகச் செய்து கொண்டேயிருங்கள். பாவத்தின் கணக்கு முடிந்து விட வேண்டும். பழைய பாவ கணக்கும் முடிந்து விட வேண்டும், ஏனெனில் புண்ணியம் செய்து செய்து புண்ணியத்தின் பக்கம் உயர்ந்து விடும், பாவம் கீழே சென்று விடும். புண்ணியம் செய்து கொண்டே இருந்தால் புண்ணியத்தின் இருப்பு அதிகமாகி விடும், மேலும் பாவம் கீழே சென்று விடும், அதாவது முடிந்து விடும். ஒவ்வொரு சங்கல்பமும் புண்ணியமானதாக இருந்ததா? ஒவ்வொரு வார்த்தையும் புண்ணிய வார்த்தையாக இருந்ததா? என்பதை மட்டும் சோதனைசெய்யுங்கள். வீண் வார்த்தைகளும் கூடாது. வீணானவைகளின் மூலம் பாவங்கள் அழியாது, மேலும் புண்ணியத்தின் பலனும் கிடைக்காது. ஆகையால் ஒவ்வொரு காரியமும், ஒவ்வொரு வார்த்தை, ஒவ்வொரு சங்கல்பமும் புண்ணியமானதாக இருக்க வேண்டும். இவ்வாறு சதா சிரேஷ்ட புண்ணிய காரியம் செய்யக் கூடிய புண்ணிய ஆத்மாவாக இருக்கிறேன் என்பதை சதா நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். சங்கமயுக பிராமணர்களின் வேலையே என்னது? புண்ணியம் செய்வதாகும். மேலும் எவ்வளவு புண்ணிய காரியம் செய்கிறீர்களோ அவ்வளவு குஷியும் இருக்கும். நடக்கும் போதும், காரியங்கள் செய்யும் போதும் யாருக்காவது செய்தி கொடுக்கிறீர்கள் எனில், அதற்கான குஷி எவ்வளவு காலம் இருக்கிறது! ஆக புண்ணிய காரியம் குஷிக்கான பொக்கிஷத்தை சதா அதிகப்படுத்துகிறது. பாவ காரியங்கள் குஷியை அழித்து விடுகிறது. ஒருவேளை சில நேரங்களில் குஷி குறைகிறது எனில் பெரிய பாவமில்லை,

ஏதாவது துளியளவு சிறிய பாவம் அவசியம் செய்திருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். தேக அபிமானத்தில் வருவதும் பாவம் அல்லவா! ஏனெனில் தந்தையின் நினைவு இல்லை. ஆக பாவம் தான் ஏற்படும் அல்லவா! ஆகையால் சதா புண்ணிய ஆத்மா ஆகுங்கள். நல்லது.

இரவு 12 மணிக்குப் பிறகு அனைத்து குழந்தைகளுக்கும் வாழ்த்துக்கள்

நாலாபுறங்களிலும் உள்ள அன்பான, செல்லமான, சதா சேவாதாரி குழந்தைகளுக்கு சதா புது ஆர்வம், புது உற்சாகம் நிறைந்த வாழ்க்கைக்கான புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். சங்கமயுகம் புதுயுகமாகும், இதில் ஒவ்வொரு நிமிடமும் புதுமை, ஒவ்வொரு சங்கல்பமும் புதியதிலும் புதிய ஆர்வம், உற்சாகம் கொடுக்கிறது. இப்படிப்பட்ட யுகத்தில் புத்தாண்டிற்கான வாழ்த்துக்கள் பாப்தாதா சதா கொடுக்கவே செய்கின்றார், இருப்பினும் விசேஷமான நாட்களில் விசேஷ நினைவுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார் - சதா புதுமையான சேவையில் சுயத்தின் பொருட்டு திட்டம் உருவாக்கி நடைமுறையில் கொண்டு வாருங்கள், மேலும் மற்றவர்களுக்கும் தனது புது வாழ்க்கையின் மூலம் தூண்டுதல் கொடுத்துக் கொண்டே இருங்கள். இலண்டனில் வசிப்பவர்கள் அல்லது அயல்நாட்டில் வசிப்பவர்கள் அனைவரின் அன்பு நினைவுகள் மற்றும் ஹேப்பி நியூ இயர் வாழ்த்து மடல் அடைந்தோம், அதிக கடிதங்களையும் அடைந்தோம், சிறிய மற்றும் பெரிய பரிசுகளையும் அடைந்தோம் இப்படிப்பட்ட புது யுகத்தில் சிரேஷ்ட காரியங்களை செய்யக் கூடிய மற்றும் புது யுகம் படைக்கக் கூடிய குழந்தைகளுக்கு விசேஷமாக வரதானங்கள் சகிதமாக புத்தாண்டிற்கான வாழ்த்துக்களை பாப்தாதா வழங்கிக் கொண்டிருக்கின்றார். அனைவரும் மிக அன்பாக மற்றும் நல்ல முயற்சியுடன் சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள், மேலும் சதா சேவையில் பிசியாக இருந்து மற்றவர்களுக்கும் சேவையின் மூலம் தந்தையின் ஆஸ்திக்கு அதிகாரிகளாக ஆக்குகிறீர்கள். நல்லது. உள்நாடு மற்றும் அயல்நாட்டு குழந்தைகள் அனைவருக்கும் மீண்டும் சுப வாழ்த்துக்களுடன் அன்பு நினைவுகள்.

வரதானம்:

மீதமிருக்கும் தனது உடல், மனம், பொருளை ஈஸ்வரிய காரியத்தில் பயன்படுத்தி சேமிப்பு செய்யக் கூடிய சதா சகயோகி ஆகுக.

கோவர்தன மலையைத் தூக்குவதில் ஒவ்வொருவரும் ஒரு விரல் கொடுத்ததாக நினைவுச் சின்னத்தில் காண்பித்திருக்கின்றனர். இது உங்களது உதவியின் அடையாளமாகும். சித்திரத்தில் தந்தையின் துணையாகவும் காண்பிக்கின்றனர், சேவையும் காண்பிக்கின்றனர். இப்போது குழந்தைகளாகிய நீங்கள் பாப்தாதாவிற்கு உதவியாளர்களாக ஆகியிருக்கிறீர்கள், அதனால் தான் நினைவுச்சின்னம் உருவாக்கப்பட்டிருக்கிறது. பக்தியில் உடல், மனம், பொருள் போன்று எதுவெல்லாம் பயன்படுத்தினார்களோ அதில் 99 சதவிகிதம் இழந்து விட்டீர்கள். பாக்கி 1 சதவிகிதம் மீதமுள்ளது, அதை இப்போது உண்மையான உள்ளத்துடன் ஈஸ்வரிய காரியத்தில் பயன்படுத்தும்போது மீண்டும் பல மடங்கு சேமிப்பு ஆகிவிடும்.

சுலோகன்:

பணிவுடன் இருப்பவர்களுக்கு தானாகவே அனைவரிடமிருந்தும் மரியாதை கிடைக்கும்.

ஓம்சாந்தி